உ

சிவமயம்

கமலமாமுனிவர் அருளிச்செய்த

சாமுத்திரிகா லக்ஷணம் என்னும்

ஹஸ்த இரேகை சாஸ்திரம்

மூலமும்

ம-ள-ள-ஸ்ரீ, கணிதநூற்புலவர்

மார்க்கலிங்க சோதிடரவர்களால்

எழுதிய உரையும்

த. துரைசாமி முதலியார் அவர்கள்

அச்சிட்டு விற்றுவந்ததை

ஷை யாரிடம் சகல சுதந்திரமும்பெற்று

காவேரிப்பாக்கம்

K. M. தெய்வசிகாமணி சோதிடரவர்களால்

நூதன விருத்தியுரையும் எழுதப்பட்டு, விஷ்ணுபூஜா யந்திரமும்,

சுப்பிரமணியர் பூஜாயந்திரமும் நூதனமாகச் சேர்த்து

சென்னை

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

வித்தியா ரத்நாகரம் பிரஸில்

பதிப்பித்தது.

1941

ரிஜிஸ்தர் காபிரைட்]

[விலை ரு. 2—0.

LuraTech Document Processing Solutions

LuraTech
Document Processing Solutions

அறிவிப்பு

கல்வியிற் சிறந்த நல்லறிவாளர்காள்! சில தமிழ்ப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடும் விருப்பமுடையவர்கள் என்பதை யாங்கள் வெளியிட்டுள்ள புத்தகத்தின் பெருமையைத் தெரிந்தோர் நன்கறிவர். ஆயினும் தமிழ்ப் புத்தகங்களுள் தற்போது கற்றோர் முதல் மற்றெல்லோராலும் நன்கு மதிக்கத் தகுந்தது சோதிட புத்தகங்களே யாகுமென்பதை யறிந்த யாங்கள் சோதிட புத்தகங்களை நன்றாய்த் திருத்தி யமைத்து அச்சிட்டு உலகோபகாரமாய் வெளியிடவேண்டும் என்னும் விருப்பமுடன் கமலமா முனிவர் அருளிச்செய்த இரேகை சாஸ்திரம் என்னும் இந்த நூலை த. துரைசாமி முதலியார் என்பவர் அச்சிட்டு விற்று வந்தாராயினும் அதனை நன்றாய் சீர்திருத்தி வெளியிட வேண்டும் என்னும் விருப்பத்துடன் அவரிடமிருந்த காபிரைட் சுதந்திரத்தைக் கிரயம் பெற்று K. M. தெய்வசிகாமணி சோதிடரைக்கொண்டு சீர்திருத்தி விருத்தி உரை வரையப்பட்டு அச்சிட்டு வெளியிட்டிருப்பதால் ஒவ்வொருவரும் பி. நா. சி. பிரதர்ஸ் என்று போட்டிருக்கும் புத்தகத்தையே அனைவரும் வாங்கி வாசித்து நன்மையடையுமாறு தூண்டுகின்றனம்.

இங்ஙனம்:

பி. நா. சி. பிரதர்ஸ்,

சென்னை

LuraTech
Document Processing Solutions

ரிஜிஸ்தர் அறிவிப்பு

இதனல் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்: கணிதநூற் புலவர் மார்க்கலிங்க சோதிடரால் உரை எழுதப்பட்ட இக் கமலமா முனிவர் அருளிய இரேகை சாஸ்திரத்தை ம-ா-ா-ஸ்ரீ சிறுமணவூர் கண்ணப்ப முதலியார் பாரியாள் சொர்ணும்பாள் என்பவர் அச்சிட்டு அனுபவித்து வந்ததை த. துரைசாமி முதலியார் என்பவர் மேற்படியாரிடம் சகல் சுதந்திரத்தையும் கிரயம் பெற்று அச்சிட்டு அனுபவித்து வந்ததைக் கீழ்க்கண்ட பெயருடைய யான் மேற்படி த. துரைசாமி முதலியார் அவர்களிடமிருந்து இப் புத்தகத்தின் காபிரைட் சுதந்திரத்தைக்கிரயம்பெற்று K. M. தெய்வசிகாமணி சோதிட ரவர்களைக்கொண்டு சீர்திருத்தி விருத்தியுரை வரையப்பெற்று அச்சிட்டு வெளியிட்டிருப்பதால் இதனை என் உத்தரவின்றி வேறு எவரும் அச்சிடக் கூடாதென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

வித்தியா ரத்நாகரம் பிரஸ், பிரம்பூர் பாரெக்ஸ் மதராஸ்.

LuraTech Document Processing Solutions

உ

முருகன் துணை

அணிந்துரை

அனாதி முத்தனாகிய முதல்வன் அனாதி பெத்தர்களாகிய ஆன்மாக்களுக்கு அவரவர்கள் செய்த கன்மத்திற் கீடான சுக துக்கங் கொடுத்தாளுகிறான் என்பதை எச்சமயத்தினரும் ஏற்றுக்கொள்வர். இவை அனைத்தையும் எவ்வாறறியலாமென்பதை ஆராயுமிடத்து வேதத்தாலும் (சாத்திரத்தாலும்) அறியலாமென்பது கற்றறிந்தோர் கொள்கை. இந்த சாத்திரங்களோ, அந்தந்த சமயத்தினற் கேற்றதுபோல் பலவாறு கூறப்பட்டுள்ளன வெனச் சிலர் கூறுகின்றனர். அதனை உண்மை என்றோ பொய்யென்றோ என்னால் வரையறுத்துக் கூற வியலாதாயினும் என் அனுபவத்திற் கண்டவரையில் சோதிடமாத்திரம் எச்சமயத்தவர்க்கும் ஒன்றாகவே யிருக்கலாம் என்றெண்ணுகிறேன். கற்றறிந்தோர் நான்கூறிய இக்குற்றத்திற்கு மாறுபடுமேல் அங்கீகரித்து உண்மை யின்னவை எனவும் அந்தந்த சமயத்தினர்க்கு இன்னின்ன சாஸ்திரங்கள் கூறப்பட்டுள்ளன வென்பதை எடுத்துக்காட்டுவரேல் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன். இதுமாத்திரமல்லாமல் இப்படிப்பட்ட இரகசியங்களை யெடுத்துக்காட்டியவர் இம்மையிலும் மறுமையிலும் சுகமும் மோக்ஷமும் அடைவார் என்பதற்குச் சிறிதேனுஞ் சந்தேகமில்லை.

இவ்வுலகத்திற் றோன்றிய ஆன்மா பலவற்றுள் இம்மானிட தேகமே மற்றெல்லாச் சீவனிலும் மேலானதெனவும் இம்மானுட ஜென்மத்தி லறிந்துசெய்யுங் காரியங்கள் எவையும் எக்காலத்திலும் வீண்போகாதெனவும் கூறியுள்ளனர். ஆயினும் இம்மானிட ஜென்மத்தி லறிந்துகொள்ள வேண்டிய சாத்திரங்கள் பலவாயினும் அவை யனைத்தை

UraTech Document Processing Solutions

யும் நான் இங்குக் கூற இயலாது. ஆயினும் சோதிட சாஸ் திரம் ஒன்றைக்குறித்து மாத்திரம் இங்கு என் சிற்றறிவிற் கெட்டியவரையிற் கூற இசைந்துள்ளேன். சோதிட சாஸ்திரத்தைத் தெரிந்து கொள்வதாலேயே இவனுக் குண்டாகும் தீமை நன்மையாகவோ நன்மைதீமையாகவோ மாற்றவியலுமோ, எல்லாம் அவனவன் விதியின் பயனன்றோ எனச் சிலர் கூறுகின்றனர். இவை உண்மையே.

எக்காரியமும் எச்செயலும் அவரவர்களுக்குள்ள விதியைப்போன்றுதான் நடக்குமேயொழிய வேறு வகையில் அவன் எப்பயனையும் அடையமுடியாதென்பதைச் சம்மதிப்போமாயினும், அவ்விதிப்பயனை இந்த ஜென்மத்திற் றெரிந்துகொள்ளாதவர் வேறு எந்த ஜென்மத்திற்றான் தெரிந்துகொள்ளப் போகிறார் என்பது சந்தேகம்.

வேறு சிலர் எந்த சோதிடனும் உண்மையைச் சொல்லவில்லை ஆதலால் இந்த சாஸ்திரமே பொய்யெனக் கூற இடமுண்டல்லவா என்கின்றனர். சோதிடத்தை முற்றுங் கற்றுத் தெளியாதாரிடம் கேட்கின் யாது பயன். முற்றுங் கற்றோரிடம் வினவின் ஏன் சரியாயிராது. சோதிடன் என வேஷமிட்டுத் தன் வயிற்றுணவுக்காய்த் திரியுமவனிடம் சோதிடம் கேட்டு சரியில்லையேல் சோதிட சாஸ்திரமே பொய்யெனக் கூறலாமா? இவை மகாபாதகம்.

இவ்வாறான சந்தேகங்கள் இத்தமிழ் நாட்டிலும் மற்றைய நாட்டிலுமுள்ள அனேகர் அனேக சந்தேகங்களைக் கொள்கின்றனர். ஆயினும் அவையாவும் பிசகென்றே யான் கூறுவேன். ஜாதகத்தைப் பார்த்துச் சொல்லுபவரோ அல்லது பஞ்சபட்சித் தொழில்முறையறிந்து சொல்லுபவரோ ஆருடம் சொல்லுபவரோ அல்லது இங்குக் கூறும் ரேகைசாத்திரம் சொல்லுபவரோ உண்மையில் தாம் அறிந்தவரையில் கேட்போர்க்குச் சொல்லவேண்டும் என்னும் சத்தியத்தைக் கைக்கொண்டாராயின் மேற்சொன்ன சந்தேகங்கள் எவையுமுண்டா

காது. இவையொருபுறமிருக்க,இங்குக் கூறும் அஸ்தரேகை சாஸ்திரம் என்பது அவ்வவர்களது கைகளிலுள்ள ரேகைகளின் அமைப்பைக்கொண்டு கூறவேண்டுவதாகும். இந்நூலிலோ எனின் மிக்க ஸ்தூலமாகவே கூறியுள்ளனர். இதனைக் கற்கவும் இதனைக் கற்றுப் பிறருக் குறைக்க வேண்டும் என்னும் விருப்பமுடையவர்களும் இதிற் கூறியதைத் தங்களா லியன்றவரையி லாராய்ச்சி செய்து தங்கள் மனதிற் கெட்டியவரையில் கபடமின்றிப் பிறருக் குறைக்கின் இவை எக்காலத்தும் வீண்போகாதென்பது திண்ணம்.

இவை யொருபுற மிருக்க இந்நூல் எக்காரணத்தாலுண்டாகியதென்பதை ஆராயுமிடத்து ஈசன் ஈஸ்வரிக்குச் சொன்ன மர்மத்தை பிரமன் முதல் ரிஷிகள் முனிவர் சித்தர் முதலியோருக்கு ஷை ஈஸ்வரியா ளுரைத்தனள் என்றே கருதவேண்டியதாகிறது. எந்த சாஸ்திரத்திற்கும் நூல் வரலாறு இவ்விதமே கூறப்பட்டுள்ளன. ஆயினும் இந்நூலில் ஓர் விசேஷ மகத்துவம் உள்ளன. அவையாவன, மேற்கூறிய அனைவரும் உலகமாதாவைக் கேட்டனர், உலக மாதாவும் சொல்லினள் என அனேக சாஸ்திரங்களில் கூறப்பட்டிருப்பினும் விஷ்ணுவானவர் இந்த சாஸ்திரத்தைக் கேட்டார். அல்லது இப்படிப்பட்ட சாஸ்திரத்தைக் கேட்டார் என எந்த சாஸ்திரத்திலுங் கூறப்படவில்லை. இதுவன்றி இந்த சாஸ்திரத்தை வாசிக்குமிடத்து இதிற் கூறியுள்ள விஷயங்களை ஆராயுமிடத்து ஷை தேவியே நேர்முகமாய் முனிவர் தேவர் ரிஷிகள் முதலிய பேர்களுக்குக் கூறியிருக்கலாமெனக் கருதவேண்டியதாகிறது. இப்படிப்பட்ட மகாமகத்துவம் பொருந்திய இந்த சாஸ்திரமானது முதலிற் கவிரூபமாயிருந்ததெனினும் அதனை யொருவாறு உரை யெழுதி அச்சிட்டு வெளியிட்டிருந்த சிறுமணலூர் ம-ா-ா-ஸ்ரீ கண்ணப்ப முதலியார் பாரியாள் சொர்ணம்பாளிட மிருந்து ஷை சுதந்திரத்தை வாங்கி அச்சிட்டு விற்பனை செய்து வந்த த. துரைசாமி முதலியார் என்பவரை பெரிதும் போற்றத்தகுந்ததேயாகும். ஆயினும் ஷை உரையில் ஆங்காங்கு

சில குறைக ளிருக்கிறதென்பதை யறிந்துகொண்டவரும் அனேக தமிழ்ப் புத்தகங்களையும் பாடசாலைப் புத்தகங்களையும் அச்சிட்டு வெளியிடுபவரும் மதுரை திருநெல்வேலி சென்னை முதலிய இடங்களில் பிரபல புத்தக வியாபாரி எனப் பெயர் பெற்றவருமாகிய P. N. சிதம்பர முதலியார் பிரதர்ஸ் அவர்கள் இந்நூலை சீர்திருத்தி அக்கவியின் கருத்தையும் ஒருவாறு எழுதித் தரவேண்டும் எனத் தன்க்குள்ள தமிழபிமானத்தாற் கேட்டுக்கொண்டதால் யானும் ஒருவாறு இதனை சீர்திருத்தி விருத்தியுரை எழுதித் தந்தனம்.

ஆனதால் இதனை வாசிக்கும் தமிழபிமானிகளாகிய எனது நண்பர்கள் இதிலேதேனும் குற்றமிருக்கின் திருத்தி வாசித்து ஆசீர்வதிக்குமாறு வேண்டுகின்றனம். எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராகவும்.

இங்ஙனம்,

கே. எம். தெய்வசிகாமணி சோதிடர்.

LuraTech
Document Processing Solutions

உ

சத்தியே துணை

தலைப்புகளின் அட்டவணை

முதற் காண்டம்

காப்பு	1
உபாசனா தேவதையின் துதி	3
இரேகை விபரம்	5
மயேந்திர ரேகையின் பலன்	9
சசிவர்ன சம்பாரி ரேகைகளின் பலன்	11
மயேந்திர ரேகை நான்கின் பலன்	14
மயேந்திர ரேகை ஐந்தின் பலன்	21
மயேந்திர ரேகை ஆறின் பலன்	27

இரண்டாங் காண்டம்

மயேந்திர ரேகை ஏழின் பலன்	33
மயேந்திர ரேகை எட்டின் பலன்	37
மயேந்திர ரேகை ஒன்பதின் பலன்	44
மயேந்திர ரேகை பத்தின் பலன்	47
சாத்மீக ரேகையின் பலன்	50
சாத்மீக ரேகையின் ஐந்தின் பலன்	50
கிரீடி ரேகையின் பலன்	54
விஷ்க்கம்ப ரேகையின் பலன்	59
சாத்மீக ரேகையின் பலன்	65
குடேரிகண்டன் ரேகையின் பலன்	66
சக்கரக் குலிச ரேகையின் பலன்	69
குலிசைரேகையின் பலன்	82
சங்கபாலி ரேகையின் பலன்	82

LuraTech
Document Processing Solutions

மூன்றாங் காண்டம்

சாத்மீக ரேகையின் பலன்	85
காப்பிலி ரேகையின் பலன்	89
பஞ்சவர்ண ரேகையின் பலன்	98
அன்னரேகையின் பலன்	101
இதுவும் சங்கபாலி ரேகையின் பலன்	106
ஐவிந்த ரேகையின் பலன்	109
கடோற்கய ரேகையின் பலன்	111
குவண்டை ரேகையின் பலன்	114
மைநாக ரேகையின் பலன்	120
ஆந்தை ரேகையின் பலன்	123
கேசரி ரேகையின் பலன்	125
வால்மீகபந்தன ரேகையின் பலன்	129

நான்காங் காண்டம்

சங்கு சக்கிர குலிச ரேகையின் பலன்	1[illegible]6
இரேணுகை ரேகையின் பலன்	165
விஷ்ணுபந்த ரேகையின் பலன்	172
வச்சிரமணி ரேகையின் பலன்	178

LuraTech
Document Processing Solutions

ஐந்தாங் காண்டம்

மால்விந்த ரேகை கமலரேகையின் பலன்	187
பஞ்சவர்ண குடேரி ரேகையின் பலன்	206
கமலரேகை கமலிரேகையின் பலன்	214
தனஞ்செய ரேகையின் பலன்	219
விற்பன்ன ரேகையின் பலன்	228
சதுர்பந்த ரேகையின் பலன்	231

ஆறாங் காண்டம்

சசிவர்னன் சம்புராதி ரேகையின் பலன்	235
கார்மேக வருணவிந்த ரேகையின் பலன்	238

சகடவிந்த ரேகை சாந்த பாஷ்ப ரேகையின் பலன் 255
திரிகண்ட ரேகையின் பலன் 261
கபிலசிந்து ரேகையின் பலன் 264
பலவிந்த ரேகையின் பலன் 269
நாகவிந்த ரேகையின் பலன் 273

ஏழாங் காண்டம்

சிவபூஜை மந்திரம் 299
சத்திபூஜை 299
மஹாமந்திரம் 300
அகஸ்தியர் பூஜைமந்திரம் 301
விஷ்ணு பூஜை மந்திரம் 302
விஷ்ணு பூஜா யந்திரம் 303
விஷ்ணு மந்திரம் 305
விஷ்ணு தோத்திரம் 306
சுப்ரமணியர் மந்திரம் 307
மேற்படி பூஜாயந்திரம் 307
தியான மந்திரம் 309
விக்னேஸ்வரர் மந்திரம் 310

LuraTech
Document Processing Solutions

முற்றிற்று

உள்ளங்கையி லிருக்கப்பட்ட ரேகைகள்

LuraTech Document Processing Solutions



CuraTech
Document Processing Solutions



CuraTech Document Processing Solutions

நேத்திரரேகை

கேதரேகை

பெருவிரல் சக்கரம் நடுவிரல்கணுவிரலிலிருக்கப்பட்ட எவரேகை

நாற்கோணரேகை

ஆள்காட்டி விரல் சக்கரம்

கைவிரல் கணுவிரலி லிருக்கப்பட்ட எவரேகை

நீட்டுகீத்துரேகை

நடுவிரலிலிருக்கும் சங்கு எவரேகை

நீட்டுகீத்து ரேகை

பவுந்திரவிரல் சக்கரம்

நீட்டு கீத்து ரேகை

ஆயுள்ரேகை.

சிறியவிரல்சக்க...

நீட்டுகீத்து ரேகை

உள்ளங்கை இடப்பக்க ரேகை

புத்திரரேகை.



உள்ளங்கை வலப் பக்கம் ஸ்திரீ சின்ன ரேகை

சிபகவஸ்திக ரேகை

உ

முருகக்கடவுள் துணை

கமலமா முனிவர் திருவாய்மலர்ந்தருளிய

ஹஸ்த இரேகை சாஸ்திரம்

மூலமும் விருத்தி உரையும்

முதற்காண்டம்

காப்பு

ஆதியெனும் பராபரத்தின் கிருபைகாப்பு
அன்பான மனோன்மணியாள் பாதங்காப்பு
சோதியெனும் பஞ்சகர்த்தாள் பாதங்காப்பு
சொற்பெரிய கரிமுகனுங் கந்தன்காப்பு
நீதியெழு மூலகுரு முதலாயுள்ள
நிகழ்த்தரிய மாமுனிவர் பாதங்காப்பு
வாதியெனும் பெரியோர்கள் பாதங்காப்பு
வழுத்துகிறே னிரேகையின் மார்க்கங்கேளே.

(இ-ள்.) ஆதி பரம்பொருளாய் விளங்காநின்ற பராபரத்தின் கிருபையைப் பெறும்படியாகக் காப்பாகவும், மனோன்மணியின் பாதகமலங்களின் காப்பாகவும், பஞ்சகர்த்தாக்களின் பாதங் காப்பாகவும், சொல்லுதற் கரிதாகிய யானைமுகத்தையுடைய விநாயகருடன் கந்தசுவாமியின் பாதகமலங்கள் காப்பாகவும், நீதியாக விளங்கும் மூலகுருவினோடு முனிவர்களின் பாதங் காப்பாகவும், பெரியோர்களின் பாதங் காப்பாகவும், கொண்டு சொல்லத் தொடங்கினேன் இரேகையினுடைய மார்க்கங்கள் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் ஆதி பராபரத்தின் கிருபைக்கும், மனோன்மணியினது பாதத்திற்கும், பஞ்ச கர்த்தாக்களது பாதங்களுக்கும், விநாயகர், அருமுகனுகியவர் பாதங்களுக்கும், மூலகுரு முதலாயுள்ள மகாமுனிவர்களது பாதகமலங்களுக்கும், பெரியார் கூறத்தகுந்த வாதிகளது பாதபங்கயங் காப்பாக இந்த இரேகை மார்க்கத்தினை வழுத்துகிறேன் என்றனர்.

பராபரம் என்பது ரூபமற்று விளங்கும் பேரொளியானதாலும் அவரது கிருபாகடாக்ஷமே சமஸ்த லோகங்கட்கும் வேண்டுவதாகையாலும் அதனையே முதன் முதலாய்த் தொழவேண்டுவது நியதி எனக் கருதியவராய்

ஹஸ்த இரேகை சாஸ்திரம்

...யெனும் பராபரத்தின் பொருளே காப்பு என்றனர். உலகமே சத்திய... வீடுபட்டிருப்பதாலும் ஸ்ரீ சத்தியின்றி எக்காரியத்தையும் செய்ய இயலாதாகையால் "அன்பான மனோன்மணியாள் பாதம் காப்பு" என்றனர். இதுவன்றி இவரது உபாசனதேவியும் ஸ்ரீ மனோன்மணித்தாய் என்பது குறிப்பிடத் தகுந்தது.

பஞ்ச கர்த்தாக்கள் என்பது பிரமன், விஷ்ணு, உருத்திரன், கணேசன், ஈசன் என்பவர்களாம். ஆகையால் இவர்களை முறையே தொழுவது கடமையாகலின் "சோதியெனும் பஞ்சகர்த்தாள் பாதங்காப்பு" என்றனர். பின்பு. "சொற்பெரிய கரிமுகனுங் கந்தன் காப்பு" என்றனர். அவை யாவன, சொல்லுதற்கரிய விநாயகரையும் குமாரக்கடவுளையும் துதித்தேன் என்பது கருத்தாகும்.

மேலும், இவர்களது லீலாவிபூதியை எவராலும் கூறிமுடிக்க இயலாது என்பதே இப்பதத்திற்குப் பொருள் எனக் கூறலாம் என நினைக்க வேண்டியதாகிறது. இதன் விவரத்தினை விநாயகபுராணம் ஸ்காந்தபுராணம் ஆகியவற்றைக் காண்பவரே தெரிவர். "நீதியெழு மூலகுரு முதலா யுள்ள நிகழ்த்தரிய மாமுனிவர் பாதங்காப்பு" என்றனர். அதாவது அகத்தியர் முதலாயுள்ள மகாமுனிவர்களது பாதபங்கயங்களுக்குச் சரணம் என்பது பொருளாம். முதன் முதலாய் அகத்தியரை முன்வைத்து ஏனைய முனிவர்களை பின்வைத்தே சொல்லுதற்கரியவர் என்றது அகத்தியரது பெருமையினை புகழத் தக்கதாகும்.

"வாதி எனும் பெரியோர்கள் பதம் காப்பாக" என்றதால். வாதத் தொழில் செய்யத் தகுந்த மேலோரது பாதத்தினையும் கும்பிட்டனம் என்பது கருத்தாகிறது. எப்படி எனில், வாதம்செய்வோர் சித்தர்களே யாகும். ஆனதால் சித்தர்களது பாத தாமரையினையும் கும்பிட்டு இந்த இரேகை சாஸ்திரத்தினைக் கூறுகின்றனம் என்பதே இச்செய்யுளின் கருத்தென விளங்குகின்றன. மற்றுங் கற்றவர்களால் இன்னு மனேக பொருளும் விளக்குவர் :—

இதுவன்றி இந்நூலாசிரியர் - சகலமு மறிந்த பண்டிதராயிருந்து, ஞானனந்தத்தை எய்தி மோக்ஷ மெய்தியவ ரென்பது, இக்கவியா லறிய லாம். இவரது பெருமையைப் புகழ்வதென்றால், எம்போல்வார்க் கியலா தாகலின் விடுத்தனம். 1

நூல்

கேளடா தலையோட்டின் மூட்டைப்பார்த்து
கேவலமாய்த் தலையெழுத்தீ தென்பார்மாந்தர்
தாளடா அவர்கையி லெழுத்தமைந்தால்
தவறில்லை சாமளையின் கடாட்சத்தாலே

UpraTech Document Processing Solutions

வாளடா சிவசுப்பிர மண்யர்தானே
மலயமுற்ற குறுமுனிக்காய் வழுத்தினார்பார்
ஆளடா வதிற்சிறிதே தெரிந்தமட்டும்
அவனியோர்க் குரைத்திட்டே னாதிகாப்பே.

(இ-ள்.) தலை மண்டையோட்டின் மூட்டைப்பார்த்து அதை மூட்டென்றறியாமல் கேவலமாகத்தானே தலையெழுத்து தானென்று உலகிலுள்ள மாந்தர்கள் புகல்வரே தவிர, தமது காத்தினிடமாக விளங்கும் எழுத்தை யறியார்கள். அப்படி யறியாதார்க்குச் சாமளையின் கடாட்சத்தினால் சிவசுப்பிரமணியக் கடவுள் கிருபைகூர்ந்து அகத்தியமா முனிவருக்கு அருளிச்செய்தவற்றிற் சிலது தெரிந்தமட்டும் அவனியிலுரைத்தேன். பல்லோர் மகிழும்படியாக ஆதியின் காப்பைத் தொடங்குவாம் எ-று.

(வி-ரை.) சியாமளா தேவியினது கிருபாகடாக்ஷத்தால் குமரக்கடவுள் தெரிந்துகொண்டு பின்பு அகத்தியருக் குபதேசிக்கப் பெற்றதே இந்த அஸ்தரேகை சாஸ்திரம் ஆனதால், அதில் தெரிந்த சிறிதளவையே இவ்வுலகோர்க்குக் கூறுகின்றனம் என்றார். இது யாது காரணத்தால் எனில், தலையோட்டினது மூட்டு என்பதைக் கண்டவர், இது தலை எழுத்து என்பர். இவை அறியாமையாகும். கை எழுத்துச் சரியா யமைந்திருக்குமாயின் தலை எழுத்தென்ன செய்யும் என ஷ சியாமளாதேவி சுப்பிரமணியக்கடவுளுக்கு மேற்படி கை எழுத்து விவரத்தினை யுபதேசித்திருந்ததை அகத்தியர் கேட்க, அதிற் சிறிதளவு யானறிந்து கொண்டதாலேயே இவ்வாறு கூறினேன் என்பது கருத்தாகும்.

மற்றும், கையிலுள்ள எழுத்தாகிய இரேகைகள் சரியாய் அமைந்திருக்குமே யாயின் தலை எழுத்து ஒன்றும் செய்ய முடியாது. ஆதலால் கை எழுத்தை யாருய்ந்து தெரிந்து கொள்ளவும் என நம்மனோர்க்கு வற்புறுத்திக் கூறினர் எனினும் பொருந்து மென்க. 2

உபாசன தேவதையின் துதி

ஆதியெனும் பராபரத்தின் பொருளேதாயே
அம்பிகையே பராசத்தி கௌரியம்பாள்
சோதியெனு மனோன்மணியே வுமையேமுக்கண்
துலங்குகின்ற வுத்தமியே சுயம்பாய்நின்ற
நீதியெனும் பரஞ்சுடரே நீலிசூலி
நீணிலத்தி லுன்னையல்லாற் றெய்வமுண்டோ
வாதியெனும் வாலைபர மேஸ்வரியேநீல
வானவிழிப் பெண்ணரசாம் வஞ்சிநீயே.

(இ-ள்.) ஆதி பராபரப் பொருளாய் விளங்கியதாகியும், அம்பிகையாகியும், பராசத்தியாகியும், கௌரியாகியும், அம்பாளாகியும், சோதியாகியும், மனோன் மணியாகியும், உமைபவளாகியும், முக்கண்ணியாகியும், நிலங்காநின்ற உத்தமியே, சுயம்பாய்நின்ற நீதியே, பாஞ்சுடரே, நீலியே சூலியே, இப் பூதலத்தில் நின்னையல்லால் வேறு தெய்வமுண்டோ? ஆதியெனும் வாலை பரமேஸ்வரியே நீலம்போன்ற வானவிழிகளை யுடையதாயே எ-று.

(வி-ரை.) சர்வத்திற்கும் ஆதாரப் பொருளாயுள்ள பரா பரத்திற்கு முக் கிய உதவிப் பொருளாய் விளங்குபவ ளாதலின் "ஆதியெனும் பராபரத்தின் பொருளே" என்றனர். மற்றும் மேற்படி தேவியே சகல பலத்தையு மளித் தூட்டுபவளாதலின், தாயே என்று அழைத்தனர். இவ்வுல கெங்க ணும் சுயஞ்சோதி மயமாய் விளங்கியிருப்பவளாகலின் "சோதியெனு மனோன்மணி" என்றனர்.

"நீலவான விழிப்பெண்" என்றதால் ஆகாயத்தினையொத்த நீல நிறமுடைய விழிகளையுடையவள் என்பது கருத்தாகும். மற்றும் அம்பிகை பராசத்தி கௌரி அம்பாள் பாஞ்சோதி நீலி சூலி வாலைத்தேவி பரமேஸ்வரி என்பது அவளது திருநாமங்களாகும். 3

வஞ்சியெனுங் கொஞ்சுகிளி வாலைத்தாயே
மாதாவே யாதிசத்தி வடுகிமாரி
அஞ்சினே னின்பாத பதுமத்திற்கே
ஆரணியே பூரணியே யபிராமித்தாய்
நெஞ்சினிலே நின்பாத நினைத்தேனம்மா
நேரிழையே யாரமிர்தே நினதுபாதம்
பஞ்சைகள்போல் ரிஷிகளெல்லா மஞ்சலிப்பார்
பத்தினியே உத்தமியே அகங்கூர்வாயே.

(இ-ள்.) வஞ்சியெனும் வடிவினையுடையாளாகியும் கொஞ்சுகின்ற கிளி யைப்போன்ற மொழியினுடைய வாலைத்தாயே, எவ்வுயிர்க்கு மாதாவாகிய சத்தித்தாயே, வடுகியே, மாரியே, அஞ்சினே னுன்னுடைய பாதபதுமத் திற்கே, ஆரணியே, பூரணியே, அபிராமித்தாயே, எனது நெஞ்சில் நின் பாதத்தை நினைத்தேன் அம்மணியே யாரமிர்தே உனது பாதந்னைதப் பஞ்சை கள்போல் ரிஷிகளெல்லாம் அஞ்சலிசெய்வார்கள். பத்தினியாகிய ஓ அம் மையே உத்தமியே அகங்கூர்வா யம்மணி எ-று.

(வி-ரை.) இக்கவியால் தன்னுபாசனு தேவியினது திருநாமங்களை ஒவ் வொன்றாய்ச் சொல்லித் துதித்து, மஹரிஷிகளெல்லாம் அஞ்சலிசெய்து துதிக்கத் தகுந்த ஓ தேவியே, நான் உன்னைத் துதித்தேனாதால் நீ மனது வந்து இங்குக்கூறும் அஸ்தரேகைசாஸ்திர முழுதுங் கூறுதற் கருள்செய்வா யாக என்பது கருத்தாம். 4

LuraTech Document Processing Solutions

இரேகை விபரம்

அகமான சுண்டுவிர லாம்பல்ரேகை
ஆறுவரை மூன்றுவரை யமர்ந்துநிற்கும்
சகமான நுனிகளெல்லாங் குவண்டைபாண்டில்
தனிப்பெறவே சுழிகளுடைச் சார்பதாகும்
மகமான புள்ளடிகண் மால்விந்தென்னும்
மகத்துவமா முக்கோண வட்டக்கீற்றும்
பகமான கார்க்கோடன் பகைவன்ரேகை
பற்றியநா னேர்க்கீறு படர்ச்சிமாலே.

(இ-ள்.) அகமெனும் உட்புறமாகச் சுண்டுவிரலில் ஆம்பல்ரேகை ஆறுவரை மூன்று வரைகளாகத் தோன்றி நிற்கும். அவ்விரலின் நுனிகளில் குவண்டையைப்போல் வட்டமாகச் சுழிகளுடையதாகவிருக்கும். புள்ளடிகள்மால் விந்து என்னும் ரேகையானது முக்கோணமாகவும் வட்டமாகவும் கீற்றுண்டாகி விளங்கும். கார்க்கோடகன் ரேகையும் அதற்குப் பகைவன் ரேகையான கருடன் ரேகையும் நேர் கீற்றாகப் படர்ந்திருக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவிமுதல் எந்தெந்த ரேகைகள் எந்தெந்த விரலிலிருக்கும்? அவை எவ்வாறமைந்திருக்கும் என்பதைக் கூறுவாராயினர். அவையாவன,

(1) ஆம்பல் ரேகை என்பது சுண்டு விரலில் ஆறு, அல்லது மூன்று கோடுகளா யமைந்திருக்கும்.

(2) குவண்டை ரேகை என்பது விரல்களின் நுனியில் சுழிச் சுழியா யிருக்கும்.

(3) மால்விந்த ரேகை என்பது புள்ளி புள்ளிகளாயும் ஷ புள்ளிகளானது முக்கோணமாயுமிருக்கும். அல்லது வட்டவடிவமாய்க் கீற்று ரேகைகளா யிருக்கும்.

(4) கார்க்கோடகன் ரேகை என்பது மால்விரலிற் படர்ந்து நேர் கீற்றுகளா யமைந்திருக்கும் என்பதாம். 5

மாலையென்ற கபாலவிந்து மணிகனரேகை
மகத்தான மால்விரலில் வட்டம்போலாம்
ஆலையென்ற இடக்கரத்தில் வலக்கரத்தில்
அணிவிரலிற் புள்ளடிக ளெட்டேயாகும்
காலையென்ற சங்கனுடைப் பந்தனங்கள்
தனித்திருக்குந் திருவையென்ற ரேகைதானும்
வாலையென்ற வணிக்கண்டம் புள்ளடிகளென்ன
வாயுவிந்து மூன்றுண்டு சுழிதானென்றே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) மாலையென்று சொல்லும்படியாகிய கபாலவிந்து மணிகள் ரேகைகள் மால்விரலில் வட்டவடிவாகத் தோன்றும். வலக்கரத்திலும் இடக்கரத்திலும் உள்ள அணிவிரலில் புள்ளடிபோல் எட்டு ரேகை தோன்றும். சங்கனுடைய ரேகைகளுடன் சேராமல் தனித்திருக்கும். திருவை யென்ற ரேகையும் வால்மீக பந்தன ரேகையும் அணிகண்டம், புள்ளடி யென்ன அதில் வாயுவிந்தரேகை மூன்றுண்டு. சுழியொன்றுண்டு எ-று.

(வி-ரை.) (1) கபாலவிந்து ரேகை என்பது ஷிமால் விரலிலேயே வட்ட வடிவமாயிருக்கும். அல்லது வலமிடமாகிய கரங்களில் சுண்டு விரலில் எட்டு புள்ளி வடிவங்களா யிருக்கும்.

(2) சங்கபந்தன ரேகை என்பது தனித்தனியே ஒன்றை யொன்று சேராதிருக்கும்.

(3) திருவை என்ற ரேகையானது மேற்படி அணிவிரலில் புள்ளி வடிவங்களாயிருக்கும்.

(4) வாயுவிந்த ரேகை என்பது மூன்று கீற்றுகளும் ஒரு சுழியுமா யமைந்திருக்கும் என்பதாம். 6

ஒன்றான கார்க்கோடன் கவுதனமுங்கெண்டை
உயரவந்த ரேகையது நான்குண்டாகும்
நன்றான பேர்சுண்டன் வைவந்தனிரண்டு
நாகரேஷன் ரேகையது கீற்றுநான்கு
வன்றான வாள்பரிதி கடோற்கஜன்ரேகை
வாள்போன்று விரலெல்லா மேறிநிற்கும்
கன்றான பசுரேகை விடக்கண்ரெண்டு
கைநடுவே சதுர்கோணங் கலக்குமாலே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) ஒன்றாகிய கார்க்கோடகன் கவுபுனன், கெண்டையெனும் உயர்வாகிய ரேகையின் வரை நான்குண்டாம். சுண்டன் வைவந்தன் என்னும் ரேகையின் வரையிரண்டாகும். நாகரேஷன் ரேகையின் கீற்று நான்காகத் தோன்றும். வாள் பரிதி, கடோர்கஜன் என்னும் ரேகையானது வாள்போல் விரல்களின் மீதெங்கும் ஏறிநிற்கும். பசுரேகை இடக்கண்ரேகை இவைகளிரண்டும் கரத்தின் நடுவே சதுர்கோணமாகக் கலந்து கூடி நிற்கும் தாண்பாய். எ-று.

(வி-ரை.) கார்கோடகன், கௌபுனன், கெண்டை, உயர்விந்தம் என்னும் ரேகைகளானது நான்கு ரேகைகளா யமைந்திருக்கும், பேர் சுண்டன், வைவந்தன், நாகரேஷன் என்னும் ரேகைகளானது நான்கு கீற்று ரேகைகளாயிருக்கும். வாள்பரிதி கார்கோடன் ரேகை என்பது ஒவ்வொரு விரலினும் நீட்சியாயிருக்கும். பசுரேகை இடக்கண்ரேகை என்பது இரண்டு கைகளின் மத்தியிலும் நாற்கோண வடிவமுள்ளதாயிருக்கும் என்பதாம். 7

மாலையென்ற மால்விரலிற் சம்பராரி
மயேந்திரம்போ லேறிநிற்கும் நேர்கீறுகக்
காலையென்ற கோசரங்க ளாறிரண்டு
கண்டித்த கார்க்கோடன் குறுக்கேகோணம்
வாலையென்ற மயங்கிருதி காப்பிலியின்ரேகை
வால்போலச் சிறுகீறு யைந்துண்டாகும்
தாலையென்ற வட்டகெஜ மிரண்டுரேகை
தாளத்தின் மேலேதான் குய்யம்ரெண்டே.

(இ-ள்.) மாலையென்ற மால்விரலினில் சம்பராரி ரேகையானது மயேந்திரம்போலும் ஏறிநிற்கும். நேர்க்கீறுகவும் கோசரங்கள் ஆறு இரண்டாகத் தோன்றும். கார்க்கோடன் ரேகையானது குறுக்கே கோணம்போல் விளங்கும். மயங்கிருதி காப்பிலி யென்னும் பெயருடைய ரேகையானது வால்போல் சிறு கீற்றுக ஐந்துண்டாகும். அட்டகஜமென்னும் இரண்டு ரேகையானது விரல்களின்மீது சுழி இரண்டாகத்தோன்றி விளங்கும் எ-று

(வி-ரை.) சம்பராரி ரேகை என்பது நடுவிரலில் மலைபோன்று உயரமாய்த் தோன்றும். அவை கீற்று வடிவமாய் பன்னிரண்டாகத் தோன்றினும் தோன்றும். அதனைப் பிளந்தாப்போல் குறுக்கே கோண வடிவமாய்த் தோன்றுவது கார்க்கோடகன் ரேகை என்க. மயங்கிருதிரேகை காப்பிலி ரேகை என்பது சிறு கீற்று வடிவமாய் வால்போன்றமைந்திருக்கும் என்பராம். அட்டகெஜ ரேகை என்பது உள்ளங்கைக்குமேல் விரல்களில் இரண்டு கீற்று ரேகைகளாயும் இரண்டு புள்ளிகளாயும் அமைந்திருக்கும் என்பதாம்.

LuraTech
Document Processing Solutions

8
ரெண்டான ரேணுகைதா னுங்குமூன்று
ரேகைசிறு கீறததா னிரம்பவுண்டு
உண்டான குறுவகைகள் புள்ளடிகளென்ன
உண்டதுதான் கணக்கில்லை தள்ளிப்போடு
வன்றான கேசரியுங் கேந்திரத்தைத்தொட்டு
வலக்கீறு யுள்ளவெல்லாங் கணக்கேயாகும்
நன்றான நான்முகனுக் குமையாள்சொன்ன
நான்மறைக ளொக்குமது நாட்டக்கேளே.

(இ-ள்.) ரேணுகை யென்னும் ரேகைக்கு வரைகள் நான்கும், மூன்றுமாகும். அதில் ரேகைகள் சிறு கீற்றுக நிறைந்திருக்கும். இன்னமும் குருவரைகள் புள்ளடியென உண்டாகியவைகள் கணக்கில்லை யாதலால் அதனைத் தள்ளிப் போடவேண்டும். அன்றியும் கேசரியும் கேந்திரமுந் தொட்டு வலக்கீற்றுக விருக்கின்றவைகள் யாவும் கணக்கில் சேர்த்துக்

கொள்ளவேண்டும். நன்றாகத்தானே நான்முகனுக்கு உமையாள் சொன்ன நான்மறைக் கொப்பானவிதை நாட்டமாகக் கேளும் எ-று.

(வி-ரை.) ரேணுகை ரேகை என்பது நான்கும் மூன்றுமாய் அமைந் திருக்குமாயினும், சிறு கீற்றுகளும் நிரம்ப உண்டாகியிருக்கும். அதனுடன் புள்ளிரேகைகள் அனேகமிருக்குமாயினும் அவை எவையு மிக் கணக்கில்லை. கேசரி என்பது கட்டைவிரலிலிருந்து வலதுபுறமாயுள்ள புள்ளிகள் யாவும் கணக்கேயாம். இவையே பிரமனுக்கு உமாதேவியார் சொன்ன ரேகை சூட்சுமங்களாகும் என்பதாம். 9

நாட்டுகின்ற சுழிகளெட்டு மன்னரேகை
நலமான மயேந்திரந்தான் பனிரெண்டப்பா
கூட்டுகின்ற கிரீடியெட்டுத் தலைவனன்கு
குறித்துரைப்பேன் ஐவிந்த மாறதாகும்
வாட்டுகின்ற சக்கரமுங் குலிசரேகை
வாள்குடோரி சங்குசக்கரங் குலிசமாமே
தாட்டுகின்ற பால்பசரி சடவன்சாடி
தகிகண்டி சிகண்டியெனும் ரேகைதானே.

(இ-ள்.) நாட்டியவாறு சுழிகளெட்டும் அன்ன ரேகையாகும். மயேந் திரம் பன்னிரண்டாகும். கிரீடியெட்டும், தலைவன் நான்காகும். ஐவிந்தம் ஆறாகும். சக்கரமும் குலிச ரேகையான இவையிரண்டும், இன்னும் வாள் குடோரி சங்கு சக்கரம் குலிசம் பால் பசரி சடவண்சாடி கண்டி சிகண்டி யென்றும் வழங்கிய ரேகைகளாகும் எ-று.

(வி-ரை.) அன்ன ரேகை என்பது எட்டுவிதங்களாகும். மயேந்திர ரேகை என்பது பன்னிரண்டென்க. கிரீடி ரேகை என்பது எட்டாகும். தலைவன் ரேகை என்பது நான்கு. ஐவிந்த ரேகை என்பது ஆறு. இது வன்றி சக்கரக் குலிசரேகை வாள்குடோரி ரேகை சங்கு சக்கரக்குலிச ரேகை. பால்ரேகை. பசரி ரேகை. சடவன் ரேகை சாடி ரேகை தகிகண்டி ரேகை சிகண்டி என்னும் ரேகைகளும் அமைந்திருக்கும் என்பதாம். 10

ரேகையெனுந் தாமரையின் குலிசஞ்சங்கு
திகழ்ந்தவகை யாறுண்டு மூன்றுகோணம்
தாகவிடல் கார்க்கோடன் சமாலிருவி
சார்பதத்தன் காப்பிலியன் சடாரிவீண்டன்
தோகைவிடன் மயிற்சாய லேழுபுள்ளி
தோல்விடலி நால்வரைகள் குறுக்கேயாகும்
ஆகவிட லெட்டிரண்டு முக்கவரின்ரேகை
ஆய்ந்துசொன்ன ரேகையினை வின்றிப்பாயே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) மேற்கண்ட ரேகைகளில் தாமரை குலிசம் சங்கு இவைகட்கு வறை ஆறும், மூன்று கோணமாகத் தோன்றும். கார்க்கோடன் சமாலி குலி சார்பதத்தன் காப்பிலி குடோரிவீண்டனெனும் ரேகைகளின் குறி எவ்வித மிருக்குமெனில் மயிலினுடைய வாலில் தோன்றிய கண்சாயலாக விருக்கும் ஏழு புள்ளிகளென அறியவும். அதில் நாலுவறைக் குறுக்காக வறி கிற்கும் ஆக விரல்கள் பத்துகளிலுமுள்ள முக்கவரின் ரேகைகளை ஆய்ந்து சொன்ன ரேகையினுடைய அறிவைப்பாரும் எ-று.

(வி-ரை.) தாமரை ரேகை. குலிச ரேகை சங்கு ரேகை என்பது ஆறு புள்ளிகளாம், மற்றும் முக்கோணம் புள்ளியாயு மிருக்கும். இதுவன்றி, கார்க்கோடகன் ரேகை, சமாலிரேகை, குலிரேகை, காப்பிலி ரேகை, சடாரி வீண்டன்ரேகை, தோகைவிட ரேகைக ளென்பது நான்கு கீற்றுகளாயும் யிருக்கும். முக்கவர் ரேகை என்பது பதினறு புள்ளிகளாயிருக்கும் என்பதாம்.

மயேந்திர ரேகையின் பலன்

இதுவரையில் முதல் ரேகையின் பலாபலன்களைக் கூறுவாராயினர். அவையாவன மயேந்திர ரேகை மூன்றினது பலனாகும். மயேந்திர ரேகை என்பது மூன்று புள்ளிகள் முதல் 12 புள்ளிகள் வரையிலிருக்கும். அவை யாவன, நடுவிரலின் கீழ்பாகத்திலிருந்து விரலின் நுனிவரையில் காணப்படும். அவற்றின் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு பலன்களுண்டெனினும் இங்கு மயேந்திரரேகை மூன்றினது பலாபலனையே விளக்கியுள்ளனர். இங்கு கூறிய நான்கு கவிகளினது சாராம்சங்கள் என்னே எனின்? மேற்படி மயேந் திரம் மூன்றுண்டாகப் பிறந்தவன் ஆறும் பிறவி; அதுவன்றி கருதரித்த ஒன்பதாம் மாதத்தில் பிறந்தவன். சிறு குடிசையிற் பிறந்தவன். ஜெனிக்கும் போது மாலையுடன் பிறந்தவன். இவன் ஜனிக்கும்போது இவன் பிதாவான வன் சண்டையிட்டுக்கொண்டு மேற்குத் திசையிற் போயிருப்பான். ஜனித்த நாலாம் வருஷத்தில் இவனிருக்கும் இல்லத்திற் தீவிழுந்தது. பின்பு அம்மான் சகோதரி முதலியவர்கள் இறந்து போனர்கள். பிதாமாத்திரம் திரண்ட ஐஸ்வரியத்தைச் சம்பாதித்தான். இந்த ஜாதகனுக்கு 10-ம் வயதில் வைசூரியும் 16-ல் நவக்கிரக தோஷமும் 18-ல் ஜலத்தாலும் கண்டமுண்டா கும். இவன் வயது 14-ல் தாயிறந்துபோவாள்.

மற்றும் 21-ஆம் வயதில் விவாகம் நடக்கும். இவன் வாழ்நாள் மிக்க மேன்மையாயும் யோகமாயுமே நடக்கும். இவனுக்கு வயது 70 என்றனர். இங்குக் கூறிய பலாபலன்கள் எல்லாம் முக்கியமானவைகளேயாகும். அவையாவன மேற்படி ரேகைகளை நன்கு கவனித்துக் கூறவேண்டுவது அவசியம். ஏன் எனின் மேற்படி மயேந்திர ரேகை என்பது 12-வரையி லுள்ளன வாதலால் அவை எத்தனை என்பதைத் திண்ணமாய் கணக்கிட்டுக் கூறுதல் வேண்டு மென்பதாம். பலன் விவரம் வருமாறு. 11

2

பாரென்ற மயேந்திரந்தான் மூன்றுண்டானல்
பக்குவமா மவன்றிசையைப் பண்பாய்ச்சொல்வேன்
நேரென்ற அவன்பிறவி யாறுகெர்ப்பம்
நிகழ்த்துமவ னவமாசம் பிறவியாகும்
கூறென்ற சிறுகுடியிற் பிறந்தமைந்தன்
குறிப்பாக மாலேயிட்டுப் பிறந்தானப்பா
சாரென்ற குழவிபிதா வீட்டிலேதான்
சண்டையிட்டு மேற்கிலவன் போயிருப்பான்தானே.

(இ-ள்.) பாரென்னும் மயேந்திர ரேகையானது மூன்றுண்டாகில் அவன் றிசையைச் சொல்வேன் கேட்பாயாக. இவன் பிறவி ஆறு, கெர்ப்பத்தில் ஒன்பது மாதமிருந்து பிறந்தோனுகும்; சிறுகுடியில் பிறந்தவன். மாலேயிட்டு வந்தவன். இக்குழவியின் பிதா வீட்டில் சண்டையிட்டு மேற்குத் திசையாகப் போயிருப்பான் எ-று. 12

இருக்கவே யிவன்பிறந்த நாலாமாண்டில்
இல்லமதிற் றீவிழுந்து வறுமைபட்டான்
பருக்கவே தாய்தந்தை மனிதர்மக்கள்
பக்குவமா யூர்த்துவதிசை யோடுவார்கள்
திருக்கவே பிதாவினிட யோகந்தன்னைத்
திரட்பரிசு பொருள்பணங்க டேடுவான்பார்
தருக்கவே தாய்மாம னுடன்தைப் பெண்கள்
தன்பிறவிப் பெண்குழந்தைச் சாவதாமே.

(இ-ள்.) இருக்கினும் இவன்பிறந்த நாலாம் வருஷத்தில் வீட்டில் தீயானதுபற்றி யெரியும், அதனுல் வறுமை யடைகுவன். இவனையீன்ற தாய் தந்தை மனிதர் மக்கள் யாவரும் தாங்கள் வாழும்படியான ஊரைவிட்டு ஊர்த்துவதிசை யோடுவார்கள். அப்படிக் கோடினும், இவனுடைய தகப்பனுக்குண்டாகும் யோகத்தினுல் திரண்ட பரிசு பொருள் பணம் இவை முதலானதுந் தேடுவான். தாயுடன் பிறந்த மாமனுடைய பெண்களும் தன்னுடைய பிறவியாகிய பெண்குழந்தையும் மரணமாகும் எ-று. 13

ஆகுமடா விவனுக்கு வயதோர்பத்தில்
அரிதான மாரிவந்து தயங்கினன்பார்
வாகுமடா பதினறி லவன்தோஷங்கள்
வந்துதான் றீருமடா வகையதாக
எகுமடா பதினெட்டாம் வயதின்மைந்தன்
இயலாக க்ஷோரிகெண்ட நீராலுந்தான்
தோகையெனும் ஏழிரண்டு வயதின்மைந்தன்
சொற்பெரிய மாதாவு மிறப்பாளென்னே.

(இ-ள்.) ஆகினும் இவனுக்கு வயது பத்தில் வைசூரியானது கண்டு தயங்கி நிற்பான். வயது பதினாறில் நவக்கிரகதோஷ மணுகித் தீரும் வயது பதினெட்டில் குடோரியினாலும் நீரினாலும் கண்டம் சம்பவிக்கும். வயது பதினாவில் இவனுடைய மாதா மரணமாவாள் எ-று. 14

என்னவே யிவனுக்கு யோகவாழ்க்கை
இடராக வந்ததென்றே யியம்புவாய்நீ
சொன்னதோ ரிருபத்தோ ராண்டிலேதான்
சுகமாக வேள்வியது முடியுமப்பா
கண்ணியதோர் யோகமதாற் பணமும்வீடும்
காசினியி லாச்சுதடா கனமாய்த்தானே
உன்னியதோ ரிவனுக்கு வயதோமைந்தா
உகந்துநான் சொல்லிவிட்டே னெழுபதாமே.

(இ-ள்.) என்னும்படியாக இவனுக்கு யோகவாழ்க்கைகள் யாவும் இடராக வந்தணுகுமெனச் சொல்லவேண்டும். அன்றியும் இருபத்தாறு வயதில் இவனுக்கு விவாகமானது நடக்கும் வாய்க்கும்படியான மனையாளால் யோகமுண்டாகிப் பணமும் வீடும் காசினிமீதுப் பெற்று வாழ்வன். கனம்பெறுவன். இவனுக்கு வயது எழுபதாகும் எ-று. 15

சுசிவர்ன சம்பராரி ரேகைகளின் பலன்

ஆமெனவே சுசிவர்னன் சம்பராரி
ஆறுவரை யிருக்குமெனி லவன்பலன்கேள்
தாமெனவே முப்பத்தா றாண்டுக்குள்ளே
தலைமகன்றா னிறந்திடுவான் வியாதியாலே
போமெனவே பதினெட்டாம் வயதின்மைந்தன்
பொல்லாத ராஜபகை யுண்டுகண்டாய்
வேமெனவே பதினாறும் வயதின்மைந்தா
வீட்டினிலே யனல்வீழு மெனச்சொல்வாயே.

(இ-ள்.) சுசிவர்ண சம்பராரி என்னும் ரேகை ஆறுவரை யிருக்குமாயின் அதனுக்குப் பலன் சொல்வேன் கேட்பாயாக. தனக்கு வயது முப்பத்தாறில் தலைமகன் வியாதியினால் மறிப்பன். பதினெட்டாம் வயதில் பொல்லாப்பாகிய இராஜபய மணுகும். பதினாறும் வயதில் தன்னுடைய வீட்டில் தீயானது விழும் எ-று.

(வி-ரை.) இங்கு சுசிவர்ண சம்பாரி ரேகையினது பலாபலன்களைக் கூறியுள்ளனர். அவையாவன சுசிவர்ண சம்பாரிரேகை என்பது ஆறு வரையில் அவன் அஸ்தத்தி லிருக்குமேயாமாயின் இவன் பிறந்த 36-ஆம் வயதுக்குள் பிதா இறந்து போவான். 18-ல் அரசாங்கத்தாரால் பகை நேரும் 16 ல் இவன் வீடு அனல்பற்றி வேகும் என்பதுவேயாகும். 16

LuraTech Document Processing Solutions

சொல்லவே யின்னமொரு சுருதிமைந்தா
  சொற்சூத்திர மின்னமொன் றுண்டுகேளாய்
நல்லவே யிவன்பிறந்த நாலாமாண்டில்
  நன்மாரி கண்டமொன்று வந்ததப்பா
அல்லவே யிவன்பிறந்த ஆருமாண்டில்
  அடைவாகப் பிதாவுந்தான் றனமெடுத்தான்
ஒல்லையிலா நாய்கடிக்கு மாடுபாயும்
  ஒதமுள்ள ரோமமிவ னுடலிலாச்சே.

(இ-ள்.) மேற்சொல்லியதில் இன்னமொரு சுருதியின் சூத்திரமானதைச் சொல்வேன். யாதெனில் இன்னோன் பிறந்த நாலாம் வருஷத்தில் மாரியி னுடைய கண்டம் வந்ததுண்டு. ஆறும் வருஷத்தில் இவனுடைய தகப்பன் தனப் புதையலெடுப்பான். அதுவுமன்றி இவனை நாய்கடிக்கும். மாடுபாயும். ரோமமானது இவனது தேக ஆதியந்தமும் நீட்சியாக விருக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் இவனது பலாபலன் முதலியவற்றையே கூறுவாராயினர். அவையாவன. இவன் ஜனித்த நான்காம் வயதில் வைசூரி யுண்டு. 6-ஆம் வயதில் பிதா தனக் குவியலைக் கண்டெடுத்தான். மேற்படி 6-ஆம் வயதி லிவனை நாய் கடித்தல், மாடு பாய்தல் முதலியன உண்டாகும் இவனுடலெங்கணும் உரோமம் நீண்டிருக்கும் என்பதாம். 17

ஆச்சப்பா நாற்பத்தா றுண்டுக்குள்ளே
  அருள்பெருகும் புதுமனைதா னெடுப்பான்பாரு
வாச்சப்பா வொருபெண்ணாற் பணமுங்காசும்
  வந்துமே கூடுமென்று வகையாய்க்கூறு
பேச்சப்பா ஐம்பத்தா றுண்டிலேதான்
  பிரியமாய்ப் பூமியது வாங்குவான்பார்
காச்சப்பா மயேந்திரமுந் தானுண்டானல்
  கண்டதொரு பிள்ளைகளோ ராறுண்டாமே.

(இ-ள்.) ஆயினும் இவனுக்கு வயது நாற்பத்தாறில் அருளானது பெருகும். புதிய மனையானது எடுப்பான். ஓர் பெண்பாவினால் பணமுங் காசும் வந்து சேரும். ஐம்பத்தாறும் வயதில் பூமியானது வாங்குவன். இதனோடு மயேந்திர ரேகையானது இருக்குமாயின் பிள்ளைகள் ஆறுண் டாகும் எ-று.

(வி-ரை.) இவன் ஜனித்த 46-ம் வயதிற்குள் புதிய வீடொன்று கட்டுவான். மற்றுமொரு பெண்ணாலும் பொருள் கிடைக்கும். ஐம்பத் தாறும் வயதில் நூதன பூமி முதலியனவற்றை வாங்குவன். இத்துடன் மயேந்திர ரேகையும் ஆறு உண்டாகியிருக்க இவனுக்கு புத்திரர் அறுவர் என்பது கருத்தாகும்.

Luratech
Document Processing Solutions

உண்டான பிள்ளைகளி லாணோநான்காம்
உற்பாத பெண்பிள்ளை யிரண்டுண்டாகும்
நன்றாக குழவியைந்தே நிலைக்குமப்பா
நலமாகக் கருணையுண்டாய் நடந்துகொள்வார்
குன்றும விவன்பிறந்த ஆதிவாரம்
குற்றமில்லா விரேவதியி னிரண்டாங்காலாம்
மன்றான மேடமேகா தசியிற்றானே
வரிசையாய்ப் பிறந்ததிவன் வண்மைகூறே.

(இ-ள்.) மேற்கூறிய பிள்ளைகளில் ஆண் நான்கும் பெண்ணிரண்டும் பிறக்கும். அதில் நிலைப்பது ஐந்தாகும். அவர்கள் கருணையுள்ளவர்களாக நடந்துகொள்வார்கள். இவன் பிறந்தது ஞாயிற்றுக்கிழமையாகும். இரேவதி நட்சத்திரத்தில் இரண்டாங்காலாகும். இராசியோ மேடமாகும். திதியோ ஏகாதசியாம். இத்தியாதி கூடிய நாளிற் பிறந்த இவன் வண்மை கூறுவாம் எ-று.

(வி-ரை.) மேலே சொன்ன புத்திரர்கள் அறுவருள் ஆண் நான்கு. பெண் இரண்டு. இவற்றுள் மொத்தத்தில் ஐந்து மக்களே நிலைப்பர். இது வன்றி இவன் ஜனித்தது சித்திரைமாதம். ஏகாதசி திதி. ஆதிவாரம் இரேவதி இரண்டாம் பாதத்தில் ஜெனித்தவன் என்றுங் கூறுக என்பது கருத்தாகும். 19

கூறுவோ மோரறுபத் தைந்தாமாண்டில்
குற்றமுண்டு வியாதியாற் கண்டமுண்டு
பேறான பெண்ணாலே வந்தசாபம்
பிரதிஷ்டை யீசனுக்குப் பேணிச்செய்தால்
தீருமே பிணிதீர்ந்த பின்னேரைந்தில்
தீர்க்கமாய்ப் பிணியின்றி யிருந்துமைந்தா
ஆரவே குழவிகட்கு விவாகஞ்செய்து
அன்னவனும் வாழ்ந்திருப்ப னளவாய்க்கூறே.

(இ-ள்.) கூறுவோ மின்னமும் கேட்பாயாக. இன்னோன்றோபிறந்த அறுபத்தைந்தாம் வயதில் குற்றமாகிய வியாதியும் கண்டமும் பெண்பாலால் வந்த சாபமும் வந்தணுகும். அது தீர்வதற்கு சிவபெருமானைப் பூசித்துவரில் அவை நீங்கிப் பிணி முதலானதுந் தீர்ந்து பின்னால் எழுபதுவயது வரையிலும் தீர்க்கமாக யிருந்து பிள்ளை பெண்களுக்கும் விவாக முதலானதுஞ் செய்துவைத்து பின்பு மரணமடைகுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனது வயது விவரத்தினைக் கூறுவாராயினர். எப்படி எனில், இவன் ஜனித்த அறுபத்தைந்தாம் வயதிற்றானே கெண்டமுண்டாகும். அது எதனால் என்றால் ஓர் பெண் சாபமாகும். ஆனதால் அச்

LuraTech Document Processing Solutions

சமயம் ஈசனைப் பணிந்து வந்தால் கெண்டம் நீங்கி வியாதியில்லாதிருந்து பின்பு ஐந்து வருஷங்கள்வரையிலிருந்து தன் பிள்ளைகள் முதலியவர்களுக்கும் விவாகம் செய்துப் பின் மரணமாவான் என்பதாம். 20

மயேந்திரரேகை நான்கின்பலன்

கூறவே மயேந்திரந்நா னுன்குண்டானால்
குணமாக வதன்பலனைக் கூறக்கேளாய்
நேரவே யிவன்பிறந்த யோகவாழ்க்கை
நிச்சயமாய்ச் சொல்வதற்கு நிலைமைமைந்தா
காரவே யிவன்றனக்குக் காதன்மைந்தர்
கண்டிதமாய்ப் பதினோர்பே ராவதப்பா
பார்தனிலே மைந்தர்களி லிவனேமைந்தன்
பக்குவங்கே ளிரேவதியின் முதற்காலென்றே.

(இ-ள்.) கூறும்படியாகிய மயேந்திர ரேகையானது நான்குண்டாகில் அதன் பலனைச் சொல்லுவேன் கேட்பாயாக. இவன் பிறந்த யோக வாழ்க்கை யாவும் கூறுகின்றதற்கு நிலைமையாகும். அதாவது இவன் தனக்கு காதல ரொனு மைந்தர் பதினொறு பெயர்கள் பிறப்பர். அதில் இவனே பாரிலுள்ள மைந்தர்களுக்கெல்லாம் மைந்தனாகும். பக்குவமாகிய இரேவதி நட்சத்திரம் முதற்காலில் பிறந்தோனாகும் எ-று.

(வி-ரை.) இங்கு மயேந்திரரேகை நான்குடையவர்களது பலாபலன் களைக் கூறுவாராயினர். எப்படி எனில், இவனுடன் பிறந்த மக்கள் பதினொரு பேர்களாயினும் இவனே மிக்க மேலானவனும் யோகமுடையவனுமாவான். மற்றும் இவன் ஜனித்தது இரேவதியின் முதற்பாதம் என்பதாம். 21

காலென்ற விவன்பிறவி யிருமனைக்குள்
கருணைசேர் கீழ்வாசல் மேல்வாசலாகும்
நாலென்ற கதிரவனு ருதயந்தன்னில்
நலமாகப் பூமியைத்தான் பார்த்துவந்தான்
பாலென்ற விவன்பிதாவுக் கிவனேமைந்தன்
பக்குவமா யிவனுக்குப் பாலனொன்றே
ஓலென்ற விவன்றனக்கு மக்கள்மூன்றும்
உதவியில்லை பிஞ்சிற்போ யுதவுமன்றே.

(இ-ள்.) மேற்கூறிய வண்ணம் இவன் பிறந்தது இருமனையாகும். அதற்குள் கீழ்மேல் வாசலாக விருக்கும். இவன் சூரியோதயத்திற்கு பூமியைப் பார்த்துப் பிறந்தவன். இவன் பிதாவிற்கு இவனே மைந்தனாகும். இவனுக்கு பாலன் ஒன்றேயாகும். மூன்று மக்கள் பிறந்தும் அவைகள் பிஞ்சிற்றானே மரணமடைந்து பின்பு ஒன்றேயாகும் எ-று.

LuraTech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த வீட்டினைத் அடையாளங்களைக் கூறுவாராயினர். எப்படி எனில் இருமனையாயும், கீழ்மேல் வாசலும் உள்ள வீட்டில் சிரோதயமாய் ஜெனித்தவன். மற்று மிவன் பிதாவுக்கிவனே சிரேட்டன். மற்றும் இவனுக்குண்டாகும் குழவிகள் மூவராயினும் ஒருவரே நிலைத்திருப்பார் என்பதாம். 22

ஒன்றான கார்த்திகையிற் கெற்பமானன்
ஓகோகோ வாறுநாள் கெற்பமாகி
உண்டான விவன்பிறந்த மனையிற்றனும்
உறுதியுள்ள செல்வனுமா உயர்ச்சியுண்டாம்
கொண்டான விவன்பிறந்த வேழாமாண்டு
குடிமனையும் விடேகக் கூறலாகும்
நன்றான பதின்மூன்றின் மாரியோகம்
நலமுள்ள வுடற்பிறவி நாதனுமே.

(இ-ள்.) உதவிய இப்பாலன் கார்த்திகையிற் கெர்ப்பமாகி பத்து மாதமுஞ் சென்று, இவன் பிறந்த மனையிற்றனும் செல்வமானது பெருகி உயர்சி யுண்டாகும். இவன் பிறந்த ஏழாம் வருடத்தில் குடியிருக்கும் மனையும் வீடும் ஏகும். பதின்மூன்றும் வருடத்தில் மாரி யோகமுடன் உடன்பிறவி யானதுகளுக்கெல்லாம் நாதனுமவன் எ-று.

(வி-ரை.) மற்றும் இவன் தாயானவள் கார்த்திகை மாதத்தில் குளித்த ஆறும் நாள் கெர்ப்பமானவள். இவன் ஜனித்ததன்பின் இவன் இல்லமானது நல்ல மேலான பதவியி லிருந்ததாயினும் வயது ஏழில் அனைத்து மொழிந்து போய் பதின் மூன்றும் வயதில் மாரியை யொத்த யோகமுண்டாகித் தன் னுடன் பிறந்தோரனைவரையும் காப்பாற்றத் தகுந்தவ னுவான் என்பதாம்.

நாமென்ற விவனுக்குப் பொன்னினும்
நலமாகக் கையிருப்புத் தரிப்பனுகும்
வேமென்றே மூன்றிடத்திற் குடியிருப்பன்
வெகுமுதல்க ளிவன்கையி லிருக்கும்பாராய்
வாமென்ற வாலைசக்கரத்தின் பூசை
வரிசையாய் நடத்துவன்காண் மனதுவந்து
ஆமென்ற விவன்கரும மறக்கையாகும்
அப்பனே வேள்வியதோ ரேழிலாச்சே.

(இ-ள்.) மேற் கூறிய வண்ணம் நாதனுகி பொன்னாமும் பூண்பவன் கையிருப்புள்ளோனுக விருப்பன். மூன்றிடத்திற் குடியானது இருப்பன் வேணதோர்முதல் கையிலிருக்கும். (அன்றியும் பதினுறுபோாகக்கூறி மறிக்க ஒருத்தனென்றமையால் பத்துபேர் அற்பாயுளான புத்திராாகக் கொள்ள

வேண்டும்) இவன் வாலையினுடைய பூசையை வரிசையாக நடத்துவன். மனமானது களிகூர்ந்து இவன் தனக்கு விவாகம் ஏழாம் வயதிலாகும் கருமம் யாவும் மறக்கையாகும் எ-று.

(வி-ரை.) இவன் வாழ்நாட்களில் பொன் பொருள் முதலியன கையிருப் புடையவனுகி மூன்றிடங்களில் குடியிருப்பவனுய் வாலை முதலிய தேவி பூஜை செய்பவனுகி யிருப்பன். மற்று மிவனுக்கு விவாகம் ஏழாம் வயதிலேயாகும் என்பதாம். 24

ஆச்சுதடா கெண்டாந்திர நாலுண்டாகும்
அப்பனே பதினேழில் நீறிற்கெண்டம்
போச்சுதடா விருபத்தெட் டாண்டிலேதான்
பொல்லாத கிரகமென்ற ராகுதோஷம்
வாச்சுதடா ரோகமுந்தா னிவன்றனக்கு
வண்மையாய் வந்ததென்று வகையாய்க்கூறு
பாச்சுதடா பரமனிட மைந்தனுன
பழனிமலை வேலவனுற் பலியாதன்றே.

(இ-ள்.) ஆச்சென மேற் கூறியதோடு கெண்டம் நாலுண்டாகும் அதினும் பதினேழாம் வயதில் நீரினுல் கெண்ட நேறும். இருபத்தெட்டாம் வயதில் கொடுமையாகிய இராகு தோஷம் வந்தணுகும். அதினுல் ரோக மானதுப் பெருகும். இவை பரமசிவனுடைய புத்திரராகத் தோன்றி விளங் கிய பழனிமலை வேலவனுர் சாட்சியாகத் தப்பிவிடும் பலியாது எ-று.

பதினுருபோரகக்கூறி மறித்து ஒருத்தன் என்றமையால் பத்துபேர் அற்பாயுளான புத்திரராகக் கொள்ளவேண்டியது.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டங்களைக் கூறுவாராயினர். அவையாவன பதினேழில் ஜலத்தாலும், இருபத்தெட்டாம் வயதில் இராகு தோஷமும், அதன்பின் மகா கொடிய வியாதிகளு முண்டாகு மாயினும் அவையாவும் சர்வேஸ்வரன் கிருபையால் நீங்கும் என்பதாம். 25

பலிதமென்ற மயேந்திரன்தான் நான்குண்டானுல்
பக்குவமாம் வயதுதா னெழுபத்தைந்தாம்
பொலிவென்ற விவனுக்குப் புத்திரசாபம்
புலமையா லிவனுக்கே சற்பசாபம்
குலிவென்ற முதற்பிறவி தன்னிலேதான்
கூர்மையாய் வந்ததென்று கூறலாகும்
ஒலிவென்ற விவனுடனே பிறந்தபெண்ணே
உதவுவாள் பொருள்களைத்தா னுண்மைதானே.

(இ-ள்.) பல்தமென்ற மயேந்திர ரேகையானது நான்குண்டாகி யிருக்குமாயின் அவனுக்கு வயது எழுபத்தி ஐந்தாம். அன்றியும் இவன் தனக்குப் புத்திரசாபம். இவைகள் முதற் பிறவியிலேயே வந்து வாய்த்ததென்று கூறலாகும். இப்போது இவனுடன் பிறந்த சகோதரியான பெண்ணனவள் பொருளுதவி செய்து வருவாள் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனுக்கு வயது எவ்வளவென்பதை நிர்மாணித்துக் கூறினர். அவையாவன, முன்கூறியபடி இவனுக்குக் கெண்டாதி கெண்டங்கள் நான்கு எனினும் வயது 75 ஆகும் என்பதாம். மற்று மிவன் தான் முன்செய்த வூழ்வினைப்பயனல் இச்சனனத்தில் புத்திரசாபமுண்டாயின வென்றும், தன் அந்திய வயதில் தன்னுடன் பிறந்த பெண்பிறவியானவள் பொருள் உதவிசெய்வாள் எனவுங் கூறவேண்டுவதாம். 26

தானமெனு மிவனுக்குப் பொருளதாகத்
  தலைவனென்று பெற்றிடுவான் றாட்டியன்றான்
ஞானமெனும் விநோதவித்தை செய்வானப்பா
  நாலுபேர்க் குடற்பிறப்பாம் பெண்ணைக்கொள்வான்
வானமெனு மிக்குழவிக் கிருபத்தெட்டாம்
  வயதுதனில் வியாதியினல் வருமேகெண்டம்
ஊனமெனும் பதினன்காம் வயதின்மைந்தன்
  உடலெல்லாஞ் சிட்டைவிழுந் தொழிவான்பாரே.

(இ-ள்.) தானமாகத் தானும் இவன் பொருளனைத்தையும் பெற்று தலைவனாகயிருந்து தாட்டிகனாகப் பெறுவான், ஞானமார்க்கங்கள் பேசுவான், விநோதமாகிய வித்தைகள் செய்வான். நாலுபேர்களுடன் பிறந்த பெண்ணைக் கொள்வன். இக்குழவிக்கு இருபத்தெட்டாம் வயதில் வியாதியினல் கெண்டம் வரும். பதினலாம் வயதில் தேக மாதியந்தமும் சிட்டையானது விழுந் தொழிவான் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனுக்குண்டாகும் புத்திரரையும் அவர்களுக்குண்டாகும் கெண்டாதி கெண்டத்தினையும் கூறுவாராயினர். எப்படி எனில் இவனுக்கு பூரண ஆயுளுடன் நிலைத்திருக்கும் புத்திரர் ஒன்ருகும். அவன் மிக்க தாட்டிகனுயும் ஞானனந்த வித்தை யனைத்தும் கற்றவனுகி நான்கு சகோதர சகோதரிகளுடன் பிறந்த பெண்ணைக் கலியாணம் செய்துக் கொள்வான் மற்று மிவனுக்கு வயது 14-ல் கட்டிப் பிளவையாலும், 28-ல் கொடிய வியாதியாலும் கெண்டம் வரும் என்பதாம். 27.

இதுவுமது

பாரென்ற மயேந்திரந்தா னுன்குண்டானல்
  பக்குவஞ் சொல்வனிது பரிந்துகேளு
காரென்ற வதியரக்கன் கார்க்கோடந்தான்
  கருநாவு வினவுவித்தை யிருந்துசெய்வான்

UraTech Document Processing Solutions

பேரென்ற விவன்வீட்டில் வீரமாற்றிப்
பிரிவாக விருக்குமுதல் விபரங்கேளு
காரென்ற சன்னியாசி யுபதேசத்தால்
கானினைந்த குமரனையு மறந்தான்பாரே.

(இ-ள்.) மயேந்திரரேகை நான்குண்டாகில் அதின் பலனைச் சொல்வேன் கேட்பாயாக. அரக்கன், கார்க்கோடன், கருநாவு இவைகளைக்கொண்டு வித்தைகள் செய்வான். இவனுடைய வீட்டில் வீரமாற்றிப் பிரிவாக விருக்கும் விபரத்தைக் கேளும். இவன் சந்நியாசியின் உபதேசத்தினால் தான் சதா காலமும் நினைந்துவந்த குமரனையும் மறந்தான் பாரும் எ-று.

(வி-ரை.) மற்றும் இக்கவியா லிங்குக்கூறும் மயேந்திரம் நான்குடையவர்களது பலாபலனையே கூறுகின்றனர். எப்படி எனில்? இவன் தன் வாழ்நாட்களில் அரக்கர் மாய்கை, கார்கோடத்தனம், கருநாபி முதலிய வித்தை செய்பவனாவான். இவையாவும் ஓர் சன்னியாசி யுபதேசத்தால் என்க. இவ்விதத்தால் தான்முன்பு தொழுதிருந்த குமரக்கடவுளினது பூஜையினையும் மறந்தான் என்பதாம். 28

பாரென்ற குமரனிட காணிக்கைசர்க்கரை
பாலிக்க மறந்திட்டான் கருப்பனாலே
தேனென்ற மலைமேலே வாழுந்தெய்வஞ்
சிந்தனையாற் பரவசந்தான் றருவேனென்றான்
வானென்ற வயதிலே வாலைபூசை
வண்மையாய்ச் செய்தொழிலின் றப்பிதத்தால்
ஆரென்ற குழவிகட்கு மிவனுக்கப்பா
ஆனதொரு தொழின்முறைகண் முடக்கும்பாரே.

(இ-ள்.) மேற் கூறிய குமரனுக்குச் செலுத்தும் காணிக்கையும் சர்க்கரையும் கொண்டுபோய் செலுத்த மறந்தான். அது யெதனாலே யெனில் கருப்பனென்னும் தேவதையினால் மலையின்மீது வாழும் தெய்வத்தின் சிந்தனையாலும் பரவசம் தருவேனென்றும், அதில் வாலை பூசைசெய்யும் தப்பிதத்தினாலும் குழவிகட்கும் இவனுக்கும் செய்யும்படியான தொழில் முறைகள் யாவும் முடக்காகினவாம் எ-று.

(வி-ரை.) மேற் சொன்னபடி குமரக் கடவுளை மறந்து அவருக் காராதிக்க வேண்டிய சர்க்கரை காணிக்கை முதலியவற்றை மறந்துவிட்டான். இது எதனால் என்றால், முன் சொன்ன சன்னியாசி யுபதேசத்தாலே யாம் என்க. மற்றும் இவன் வாலை பூசை செய்யும்போது நேர்ந்த தப்பிதத்தால் இவனுக்கும் இவன் தனயனுக்கும் தொழின் முடக்க முண்டாயினவென்பது கருத்தாகும்.

LuraTech Document Processing Solutions

பாரேனவு மில்லறமுங் குடியுமைந்தா
பக்குவமாய் மூன்றினுக்கும் பாவமாச்சு
காரேனவுந் தலைமுறைதான் மூன்றுக்கப்பா
காட்சிபெறு ஓர்தந்தைக் கோர்சேயாகும்
சீரேனவு மிக்குழவி நாற்பத்தொன்றில்
சிலைப்பர்வும் பிதாவுக்கு மரணமன்றோ
தீரேனவுங் கோத்திரத்தி லுடையார்மெத்தச்
செப்புகிறே னிவன்கையில் ரேகையாறே.

(இ-ள்.) பார்க்க இன்னமும் இல்லறமும் குடியும் இவை எல்லாவற்றினுக்கும்பாவமானது நேர்ந்தது. தலைமுறை மூன்றுக்கும் ஓர் தந்தைக்கோர் சேயாகத்தான் விளங்கும். அப்படி விளங்கிய யிக்குழவிக்கு நாற்பத்தொரு வயதாக நடக்குங்கால் பிதா மரணமாவான். இன்னேனுடைய கோத்திரத்தி லுடையார்கள் மெத்தவுண்டு. ஆயினும் சொல்வேன். இவன் கையில் ரேகை யாறுண்டாகும் எ-று.

(வி-ரை.) மேலே சொன்ன காரண காரியத்தால் இவனுக்கும் இவன் குடும்பத்திற்கும் இல்லத்திற்கும் பாபம் சூழ்ந்தன. இதன் பயனுல் மூன்று தலைமுறைவரையில் ஒவ்வொரு தனயர்களே நிலைப்பர். மற்றும் இவன் தனயனுக்கு வயது 47-ஆயின் இந்த ஜாதகன் மறித்துப் போவான். இவன் வங்கிசங்களனேகம். இவ னஸ்தத்தில் ரேகைகள் ஆறுண்டாகும் என்க.

ஆறியதோ ரிக்குழவிக் கன்பாந்தாரம்
அப்பனே பெற்றமக்க ளாறுஞ்சாவாம்
கூறியதோர் குழவியுடைக் கையைக்கண்டு
குறித்தறிந்து சாபத்தின் குறைவுதீர்ப்பாய்
பாறியதோர் பெற்றபிள்ளை நிலைக்குமப்பால்
பரிகாரஞ் செய்ததனுற் பாவம்போச்சு
கூறியதோர் பெற்றபிள்ளை வம்சத்தோடு
கொல்லுமடா பாவத்தின் வரலாறுகாணே.

(இ-ள்.) மேற்கூறியவண்ணம் ரேகை ஆறுள்ள இக்குழவிக்கு அன்பான தாரம் வந்து வாய்க்கும். அவள்பெற்ற பிள்ளைகள் ஆறும் மரணமாகும். கூறிய படிக் குழவியின் கையைக்கண்டு குறியறிந்து சாபத்தின் குறையைத் தீர்க்க அப்பால் பெறும்படியான பிள்ளைகள் நிலைக்கும். பரிகாரஞ் செய்வதினுல் பாபமானது போகும். இல்லையேல் பெற்ற பிள்ளையானது வம்சத்தோடு கொல்லும் ஆதலால் பாவத்தின் வரலாறு காண்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இந்த ஜாதகனுடைய இத்தனயனது பலாபலத் தன்மையினைக் கூறுகின்றனர். எப்படி எனில் இத்தனயனது பலத்தால்

அன்பார்ந்த மனைவியிடத்தி லுண்டாகும் புத்திரர்கள் அறுவராயினும் எல்லாம் மறிக்கும். ஆனதால் மேற்படி தனயனது அஸ்தரேகையை ஆருய்ந்து அதற்குத் தகுந்த பரிகாரம் செய்யின் மேற்படி தோஷம் நிவர்த்தியாகும். இல்லையேல், அவன் வம்சத்தோடு நாசம் செய்யும் என்பதாம். 31

ஆறிலே ரெண்டுநீ கம்மிசெய்து
அன்பான குமரனைநீ யறிந்துபோற்று
சீறிலே வயதிவனுக் கெழுபத்தைந்தாம்
செப்பினேன் ருமமதோ ரறுபத்தாறில்
காறிலா ருங்காண்ட மெட்டாம் பாட்டின்
கணக்குகளாற் கண்டமுதற் கருத்தாய்ச் சொல்வேன்
பாரிலே முனிவர்களுந் தேவர்போற்றப்
பக்குவங்கள் சொல்கிறேன் பண்பாய்க்கேளே.

(இ-ள்.) மேற்கூறிய ரேகை ஆறில் இரண்டுக் கம்மிசெய்து அன்பான மனதோடு குமரனை யறிந்து போற்ற வயது எழுபத்தைந்தாகும். அதில் அறுபத்தாறில் ஆருங் காண்டத்தில் எட்டாவது பாட்டின் கணக்கோடு இதன் பலனைச் சொல்வேன். இப்பாரின்கண் முனிவர்களும் தேவர்களும் போற்றப் பக்குவமாகச் சொல்லுகின்றேன் பண்பாய்க் கேளும் எ-று.

(வி-ரை.) குமாக் கடவுளுக்குரிய சடாக்ஷரத்தை நாற்கோண மெழுதி யடைத்து பூஜை செய்துவரின் மேற்கண்ட தனயனுக்கு வயது 75-ஆகும். இல்லையேல் வயது 66 என்பதாம். மற்றும் இக்கருத்து எதனுல் சொன்னேன் எனில் அஸ்தரேகை சாஸ்திரம் ஆருங்காண்டம் எட்டாம் பாட்டின் படிக்குக் கூறினேன் என்பதாம். 32

கேட்கவே மயேந்திரந்தா னுன்குண்டானல்
கேவலமா யிரேகைகளின் மார்க்கஞ்சொன்னேன்
நாட்களுக்கும் ராசிகட்குஞ் சேராரேகை
நலமாகக் கண்டதனைத் தள்ளிமைந்தா
வாட்கவே மயேந்திரந்தா னைந்துரேகை
வளமாக விருப்பதென்ருல் வகையைக்கேளாய்
கோட்களொன்று மில்லையடா குணமுண்டாகும்
கூறுவோ மதன்விபரம் நன்ருய்க்கேளே.

(இ-ள்.) மயேந்திர ரேகை நான்குண்டானல் அதிற் கேவலமாகிய ரேகைகளின் மார்க்கஞ் சொன்னேன். அன்றியும் நாட்களுக்கும் இராசிகளுக்கும் சேராத ரேகையைக் கண்டு தள்ளிப்போட்டு, மயேந்திரரேகை ஐந்திருக்குமாயின் அதின் வகையைக் கேளும். அதற்குக் கோட்களொன்றும் சம்பந்தமில்லை. குணமாகும் அதின் விவரங் கூறுவேன் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின், 'இதுவரையில் மயேந்திர ரேகை நான்கினது பலாபலன்களைக் கூறியுள்ளேனாதால், அஃதத்தைக் கவனித்து, நாள் நக்ஷத்திரம் முதலியவற்றிற்குச் சேராத ரேகைகளைத் தள்ளிக் கணக்கிட்டு மேற்சொன்ன பலாபலன்களை யுரைப்பாய் என்பது கருத்தாகும். இங்கு மயேந்திரம் ஐந்துடையவர்களது பலாபலன்களைக் கூறுவாம். 33

மயேந்திரரேகை ஐந்தின் பலன்

கேளடா மயேந்திரந்தா னைந்துண்டானால்
கீறுபுள்ளி மூன்றுண்டு இரண்டுரேகை
வாளடா வவன்பிறவி பாஞ்சாலந்தான்
வரிசையுள்ள ஏழான கெர்ப்பமாச்சு
தாளடா இவன்பிறவி யேழுபேரும்
தங்கைமார் மூன்றுண்டு தயவாய்த்தானே
பாழடா வொன்றுமில்லை கனவானப்பா
பாக்கியங்கள் பெற்றிடுவான் பண்பாய்த்தானே.

(இ-ள்.) மயேந்திர ரேகை ஐந்துண்டாயின் அதின் பலன் சொல்வேன் கேட்பாயாக. அன்றியும் கீறுபுள்ளியானது மூன்று இரண்டு ரேகை அதனுடனிருக்கில் அவன் பிறவி பாஞ்சாலமாகும். ஏழாம் நாளில் கெர்ப்பந்தரித்தவன். இவன் பிறவி யேழாகும். அதில் தங்கைமார்கள் மூன்று பேருகும். கெடுதியானது ஒன்றுமில்லை கனவானுகுவான் பாக்கியங்கள் பெறுவான் எ-று,

(வி-ரை.) இங்கு மயேந்திரம் ஐந்தென்பது எவ்வண்ணம் இருக்குமென்பதைக் கூறுகிறார். அதாவது மூன்றும் இரண்டுமா யிருக்குமென்பது கருத்து. மற்றும் இவன் ஜனித்தது பாஞ்சால தேசம் எனவும், இவனுடன் பிறந்தவர்கள் எழுவர் எனவும், அவற்றுள் மூவர் பெண்கள் எனவும், இவன் வாழ்நாளில் மிக்க கனவானுகவும் பாக்கியவானுகவும் வாழ்வான் எனவும் கூறுவாய் என்பதாம். 34

தானமெனு மிவன்பிறவி யைந்தாம்பிள்ளை
தாட்டியர்கண் முன்பிறந்தா ரப்பாகேளாய்
வானமெனு மிவன்பிறந்த வில்லறந்தான்
வாழ்க்கையுள்ள விருமனையிற் றென்பால்வீட்டில்
கானமெனும் மிவன்பிறந்த மூன்றுநாளில்
கட்டழகி பாட்டியவ ளிறப்பாள்பாராய்
ஞானமெனு மிவன்பிறந்த மாதமொன்றில்
நாகசர்ப்பம் வீட்டிலேதான் தொட்டிலாச்சே.

(இ-ள்.) மேற்கூறியபடி இன்னேன் ஐந்தாவதுப் பிள்ளையாகும். இவன் முன் பிறந்தோர்கள் தாஷ்டீகர்களாக விருப்பர். இவன் பிறந்த இல்லமானது

வாழ்க்கையுள்ள இருமனை. தென்பால் வீட்டில் இவன் பிறப்பான். இவன் பிறந்த மூன்றுநாளில் பாட்டியானவள் மரணமாவாள். இவன் பிறந்த ஓராம் மாதத்தில் வீட்டிலுள்ள தொட்டிலில் நாகசர்ப்பம் சயனித்திருக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்ன எனின்? இவன் ஐந்தாம் பிறவியும் இவன் ஜனித்த இல்லமானது இருமனையாயுள்ள கட்டிடத்தின் தென்வாயிலுடைய வீட்டில் பிறந்தவனும் ஆவன். இதுவன்றி இவன் பிறந்த மூன்று நாளில் இவன் பாட்டியா ளிறப்பள் எனவும், மாதமொன்றில் இவன் சயனித்திருக்கும் தொட்டிலில் சர்ப்பம் படுத்துக் கிடந்ததென்பதும் கருத்தாகும்.

35

ஆச்சென்ற தொட்டிலிலே நாகம்வந்து
அடவாகப் படுக்கைகண்டு பயந்தாரப்பா
கோச்சென்ற குழவியைத்தான் கொல்லுமென்று
கொந்தலிட்டு குமரனைத்தான் வணங்கினரே
தாச்சென்ற குமரனுக்கு மனமிறங்கித்
தயவாக நாகசர்ப்ப மிறங்கிற்றப்பா
காச்சென்ற சாட்சியதாய் சுப்பராயன்
கருணைவைத்து யோகவானா யாகலாச்சே.

(இ-ள்.) மேற்கூறியபடி அப்பாலகன் சயனித்திருக்கும் தொட்டிலில் நாக சர்ப்பமானது வந்து பாலனுடைய பக்கலில் படுத்திருக்கக் கண்டுப் பயந்து, குழவியைக் கொல்லுமென்று கூச்சலிட்டு குமாரசுவாமியை வணங்கித்தொழுக, அவர்க்கு மனமிறங்கிக் கிருபை புரிய, அந்த நாகசர்ப்பம் இறங்கிப்போயிற்று. அதன் பின்பு சாட்சியாக சுப்பராயன் கருணைவைக்க இவன் யோகவானானன் எ-று.

(வி-ரை.) மேலே சொன்னபடி இவனுடன் சர்ப்பம் சயனித்திருப் பதைக் கண்ட தாய் தந்தையர் ஆபத்துவந்த தென்று பயந்து குமாரக்கட வுளை வணங்க, கடவுளனுக்கிரகத்தால் சர்ப்பமானது கீழே இறங்கிற்று. பிற்காலம் இந்த ஜாதகனும் யோகமுடையவனானன் என்பது கருத்தாகும்.

ஆச்சப்பா ஆதிவாரம் ராகுதன்னில்
அன்பான நாழிகைதா னிருபத்தைந்தாம்
பேச்சப்பா சுக்கிரனும் ராகுவுச்சம்
பிரியமாய்த் தசமியிலே பிறந்தானப்பா
வீச்சப்பா மெய்யதுகொந்த தேழுநாளாய்
வேதனையாற் பெற்றமைந்தன் விப்ரன்கேளாய்
காச்சப்பா வினாலே வீட்டிலேதான்
கடாட்சித்தா னிளையவனுங் கருணைகூர்ந்தே.

UpraTech Document Processing Solutions

(இ-ள்.) மேற்கூறியபடி இப்பாலன் ஆதிவாரம் இரவில் நாழிகை யிருபத்தைந்தில் சுக்கிரனும் இராகுவும் உச்சமாகவிருக்க, இவன் பிரியமோடு தசமியில் பிறந்தோனாகும். இவன் தாயார் ஏழுநாள் கெர்ப்ப வேதனைப்பட்டு பெற்ற மைந்தனாகும். இவனுடைய விபரங்களைக் கேளும். இவனாலே மனையில் லட்சுமி வந்து கடாட்சித்தாள் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த காலத்தையும் தன்மை முதலியனவற்றையுங் கூறுவாராயினர். அவையாவன இவன் பிறந்தது ஆதிவாரம். 25. நாழிகைக்குமேல் இராகுகால நேரத்தில் சுக்கிரனும் இராகுவும் உச்சம் பெற்றிருக்கவும், தசமிதிதியும் கூடியநேரம் பிறந்தான் எனவும், இவனைப்பெற இவன் மாதா ஏழுநாள் அவஸ்தைப்பட்டனள் எனவும், தேவியின் அனுக்கிரகத்தால் ஒருவாறு சிரமம் இன்றிப் பிறந்தான் என்பதுங் கருத்தாகும். 37

கருணையென்ற விவன்மாதா குளித்தவேழிற்
கட்டழகன் மதுபானஞ் செய்துக்கொண்டு
வருணையென்ற வடமுகமாய்த் தலையைவைத்து
வங்கணத்தான் முதற்சாமம் புணர்ச்சியாகி
திருணையென்ற விதபட லீலையாலே
திரட்கண்ட வாயுவங்கே யொதுங்கிற்றப்பா
அருணையென்ற கருவதனிற் குழவியாய்த்தான்
ஆண்பிள்ளை பிறக்குங்கால் துயரமாச்சே.

(இ-ள்.) மேற்கூறிய பாலகனுடைய மாதாவானவள் தான் குளித்த ஏழாம்நாளில் அவளுடைய புருஷனானவன் மதுபானமுண்டு, வடக்கு முகமாகத் தலையைவைத்து முதற்சாமத்தில் புணர்ச்சியாகி லீலைசெய்யும்போது வாயுவானது வொதுங்கி கருவானது தரிக்க அக்குழவி ஆண்பிள்ளையாகப் பிறக்கும்போது துயரமுண்டாயினவாம் எ-று.

(வி-ரை.) இக்கவியில் இவன் எவ்விதத் தன்மையிற் கருதரித்தான் என்பதைக் கூறுவாராயினர். எப்படி எனில், இவன் மாதா ஸ்நானம் செய்த ஏழாம்நாள். இவன் பிதா கள்ளுண்டு வடக்கு திசையாய்த் தலைவைத்து புணர்ச்சி செய்ததால், இக்குழவியானவன் ஜனிக்குங்காலம் நோய் ஏற்பட்டது. தாயானவள் ஏழுநாள் வரையில் அவஸ்தைப்பட்டாள் என்பது கருத்தாகும். 38

ஆச்சடா விவன்பிறவி யழகியன்றான்
ஐந்துமக்கள் பிறந்திடுவா ரிரண்டுசாவாம்
காச்சடா தேவிமா ரிரண்டுபேராம்
கைம்பெண் சாதிகளுடனே வாழ்க்கையாகும்

பேச்சடா வயதொருபத் தாகுமுன்னே
  பிரபலங்க ளாகவே நடப்பான்மைந்தன்
கூச்சடா விவன்குடியிற் றனமோமெத்த
  கொற்றவர்க டுயரமெல்லாம் நீங்கிற்றன்றே.

(இ-ள்.) ஆயினும் இவன் அழகுடைய பாலனாகும். இவனுக்கு மக்கள் ஐந்துபேர்கள் பிறப்பர். அதில் இரண்டு மாணமாகிவிடும். இவனுக்கு தேவிமார்கள் இரண்டுபேரிருக்கினும் இவன் விதவைகளுடன் வாழ்க்கையுடையோனாகுவன். இவனுக்கு வயது பத்தாகு முன்னமே பிரபலமுடையவனாக நடப்பன். இவனுடைய குடியில் தனமானது மெத்தவுண்டாயிருக்கும். இவனை யீன்றவர்கள் துயரமும் பந்துக்களுடைய துயரமும் அன்றே நீங்குமென்பதாம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னை எனின், இவன்மிக்க அழகுடையவனும், ஐந்து மக்களைப்பெற்று இரண்டு மக்களை இழந்து போகுபவனும், இரண்டு மனையாளாயினும், கைம்பெண்களுடன் வாழ்க்கை செய்பவனும், 10 வயதுக்கு முன்பே பிரபலயோக முடையவனும், இவனில்லத்தில் அனேக தனமிருக்கும் என்றும், இவன்பிறந்த பின்பே இவன் தாய் தந்தையர்களது துயரம் அனைத்தும் ஒழிந்துபோயின வென்பதும் கருத்தாகும்.

நீங்கிடவே யிவன்வயதோ ரிருபத்தாரில்
  நிகழ்த்துகிறேன் பொல்லாத கண்டமப்பா
தாங்கிடவே ராகினிடத் தோஷத்தாலே
  தகவலில்லாத் தைந்துதிங்க ளலைவானப்பா
எங்கிடவே சிவன்பதத்தை வணங்கிக்கொண்டால்
  ஏகுமடா வல்பிணியு மியம்பினேனான்
ஓங்கிடவே யிவன்வயதோ ரெழுபதுக்குள்
  உத்தமன்றான் கண்டமட்டி லுயர்வுதானே.

(இ-ள்.) மேற்கூறியபடி துன்பம் யாவும் இவனுக்கு வயது இருபத்தாறில் சொல்லுதற்கரிய பொல்லாதக் கெண்டம் வாய்க்கும். அதனோடு இராகுவினுடைய தோஷத்தினால் தகவலில்லாமற்படிக்கு ஐந்துமாதம் அலைச்சல்பட்டுத் திரிகுவான். அது தீர பரமசிவனுடைய பாதத்தை வணங்கித் தொழுதுவரில் தோஷமும் பிணியும் நீங்கிவிடும். இவன் வயது எழுபதுக்குள் தான் கண்டவரைக்கும் உயர்வாகத்தானிருப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிவனுக் குண்டாகும் கெண்டாதி கெண்டங்களையும், ஆயுளையும் கூறினர். விவரம் எப்படி எனில் இவன் வயது 26-ல் கொடிய கெண்ட மொன்றும், பின்பு ராகுதோஷத்தால் 5-மாதங்கள் வரையில் எவருக்குந் தெரியாதலைவான். அக்காலம் சிவபிரானை வணங்கின் மேற்படி தோஷம் யாவும் நீங்கும். மற்று மிவன் வயது 70-வரையில் மிக்க மேன்மையுடையோனாகவே யிருப்பான் என்பதாம்.

தானென்ற விவன்வயது பதினேழாண்டில்
　தகைமையில்லா நாற்காற்றன் குத்தித்தள்ளும்
தானென்ற பதின்மூன்று வயதிலேதான்
　தாட்டவே சத்துருவால் மெலிவான்மைந்தன்
ஊனென்ற விருபத்தா றுகுமாண்டில்
　உயரவேகை முறிந்து விழுவான்பாரு
கானென்ற காட்டிலேதான் போகும்போது
　கரடியிவன் மேல்விழுந்து பாயுமென்னே.

(இ-ள்.) இவனுக்கு வயது பதினேழில் நாற்கால் ஜீவன் இவனைக் குத்தித்தள்ளும். பதின் மூன்றும் வயதில் சத்துருக்களால் பாதைப்படுகுவன். இருபத்தாறும் வயதில் உயரத்தினின்று முறிந்துக் கீழேவிழுவான். அதுவுமன்றி, இவன் காட்டின் வழியாகப் போகும்போது காடியானது இவன்மேல் வந்து விழுந்து பாயும் அதினுல் மெலிகுவான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டங்கள் நான்கையுங் குறிப்பிட்டுள்ளனர். என்ன எனில்? வயது 17-ல் நாற்கால் ஜீவன் குத்துவதாலும், வயது 13-ல் சத்துருவாலும், 26-ல் உயரத்திலிருந்து வீழ்வதாலும், கூட்டுப்பிரயாணம் செய்யும்போது காடி பாய்வதாலும் கெண்டமுண்டாகும் என்பது கருத்தாகும். 41

என்னவே யிவன்வயது முப்பத்தாறில்
　ஏந்திழையா டன்னுலே விலங்கில்வீழ்வான்
உன்னவே யிருபத்தா றுண்டிலேதான்
　உற்பனமாய் வெடிமருந்தில் வேகுவானும்
பன்னவே யிருபத்தெட் டாண்டிலேதான்
　பாலகனு நீராலே மெலிவானப்பா
கன்னவே கண்டமட்டின் மைந்தனுக்குக்
　கருணையா லாச்சுதென்று கனிந்துகூறே.

(இ-ள்.) இப்படிக்கு மெலிகினும், இவனுக்கு வயது முப்பத்தாறில் ஸ்திரீயினுல் துன்பமுண்டாகி விலங்கு பூண்பான். இருபத்தாறும் வயதில் வெடிமருந்தினுல் வேகுவான். இருபத்தெட்டாம் வயதில் நீரினுல் மெலிவான். இவைகள் கண்டமட்டினுங் கருணையானதென்று பாலகனுக்குக் கருணையாகக் கூறுவாய் எ-று.

(வி-ரை.) மற்று மிவனுக்குண்டாகும் துன்பங்களையும், சுகங்களையும் கூறுகின்றனர். எப்படி எனில் இவன் வயது 36-ல் ஓர் பெண் வகையால் விலங்குண்டாதலும், 26-ல் வெடி முதலிய விபத்தும், 28-ல் ஜலத்தாலும் கெண்ட முண்டாகுமாயினும் சாக்ஷாத் சிவபெருமானது கிருபையால் இவை யாவும் நீங்கிவிடும் என்பது கருத்தாகும். 42

LuraTech Document Processing Solutions

கூறியிவன் ரோகணியிற் செனனமானன்
குறிப்பான பொன்வார முச்சிதன்னில்
பாரியிவன் பதினுன்காம் வயதிலொன்று
பாலகற்கு விவாகமது படியுமென்றே
தாரிவிவன் தனவானும் முப்பத்தாறில்
தைரியங் கொண்டாடும் தாட்டிகனேயாவன்
தோர்வில்லா திருமனையுங் கட்டிவாழத்
தோன்றுதலே மங்கையிடத் துயரம்போமே.

(இ-ள்) கூறினும் இவன் உரோகணி நட்சத்திரம் வியாழக்கிழமை உச்சி வேளையில் ஜெனனமானவன். இவனுக்கு வயது பதினுலில் விவாகமானது முடியும். பூமியின்கண் இவன் வயது முப்பத்தாறில் தைரிய முடைய தாட்டீகனுகுவன். தோர்வில்லாத மூன்று வீடானதும் கட்டி வாழ்குவன்; மங்கையினிட துயரமும்போம் எ-று.

(வி-ரை.) முன் கூறிய 37-ஆம் கவியில் ஜெனன நக்ஷத்திரத்தைக் கூறப்படாமையா லிங்கு உரோகணியிற் பிறந்தோன் என்றனர். இதுவன்றி முன் கூறியது ஞாயிறு 25 நாழிகை என்றனர். அப்படிக்கில்லையேல் வியாழன் உச்சி கோத்தில் பிறந்திருப்பான் என்றது கவனிக்கத் தகுந்தது. இதுவன்றி 14-ல் விவாகமும், 36-ல் யோகமுடையவனுமாகி மூன்று அரண்மனைகளைக் கட்டி வாழ்வான் என்பது கருத்தாகும். 43

போமென்ற விவனுக்குத் தாரம்ரெண்டு
புகழுவே பெற்றபிள்ளை யைந்துண்டாகும்
காமென்ற விவன்மாதா முப்பத்தெட்டில்
கைம்முறையாய் பரமபத மடைவாளப்பா
ஊமென்ற விவன்பிறந்த நாற்பத்தைந்தில்
உத்தமனு மிறந்திடுவா னுயர்வுதானே
காமென்ற விவன்வயதோ ரெழுபதுக்குள்
கைலைதனை யடைந்திடக் காரணமாமென்னே.

(இ-ள்.) மற்றும் இவன் றனக்குத் தாரமானது இரண்டாகும். இவை இரண்டிற்கும் சந்ததி ஐந்துண்டாகும். இவனுடைய தாயார் முப்பத்தெட்டாம் வயதில் மரணமாகிவிடுவாள். இவன் தனக்கு வயது நாற்பத்தைந்தில் தந்தையானவன் மரணமாவான். இவன் எழுபது வயதுக்குள் கைலைபதி போயடைகுவானெனக் கண்டுரைப்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் மனைவி விஷயத்தையும், பிதா மாதா ஆயுளையும், இவனது ஆயுளையுங் கூறுவாராயினர். எப்படி எனில் இவனுக்கு

CuraTech Document Processing Solutions

மனைவி இரண்டும், பிள்ளைகள் ஐந்துமென்க. இவன் வயது 38-ல் மாதாவும் 45-ல் பிதாவும் மரிப்பர். இவனுக்கு வயது 70 என்பதாம். 44

மயேந்திரரேகை ஆறின் பலன்

காரணமா மயேந்திரந்தா றுறுண்டானல்
காட்சிசொல்வே னிவன்வாழ்வு கருணைகூர்ந்து
வாரணமா முனிவர்களு முமையாந்தாயும்
வகுத்துரைத்த கட்டளையின் வகையைக்கேளாய்
பூரணமா முமையவளை ரிஷிகளெல்லாம்
போற்றிசெய்தே யடிவணங்கிப் புலனைக்கேட்க
நாரணனு நான்முகனுங் கும்பமூர்த்தி
நாதாக்க ளனைவோரு நன்றாய்க்கேளே.

(இ-ள்.) மெச்சத்தகுந்த மயேந்திர ரேகையானது ஆறுண்டானல் அதின் பலனைக் காட்சியாகச் சொல்வேன். கருணையானது கூர்ந்து மாமுனிவர்கள் வகுத்துரைத்த கட்டளையின் வகையைக் கேட்பீராக. பூரணமாகத்தானே உமையவளை ரிஷிகளெல்லாம் போற்றிசெய்தும் அடிபணிந்தும் இப்புலன்களைக் கேட்கச் சொன்னவாறு இப்போது நாராணன் நான்முகன் கும்பமூர்த்தி யோடு நாதாக்களாகிய அனைவர்களும் கேட்பீராகவும் எனக் கூறுகின்றனர்.

(வி-ரை.) இக்கவி முதல் மயேந்திரரேகை ஆறு உடையவர்களது பலா பலன்களைக் கூறுவாராயினர். அவையாவன, உலக மாதாவாகிய சர்வேஸ் வரியை விஷ்ணு, நான்முகன், முனிவர்கள், தேவர்கள், முதலானோர் வணங் கிக் கேட்கும்போது உமாதேவியார் சொல்லுகிறார் என்பது கருத்தாகும். 45

கேட்கவே மால்விரலில் ரெண்டுகீறு
கேவலமாய் நான்குவரை சிறியபுள்ளி
ஆட்கவே வவன்கையிலே யிருக்குமாகில்
அன்பான யோகவா னறிந்துபாராய்
நாட்கவே யிவன்பிறந்த யோகவாழ்க்கை
நன்றாகச் சொல்லுகிறே னுடிக்கேட்பாய்
வாட்கவே மைந்தனுந்தா னிடக்கண்சாயல்
வந்தவிவற் குடன்பிறப்போ ரேழுபேரே.

(இ-ள்.) இவ்வாறு கேட்கக் கூறுகின்றனர். மால்விரலினிடமாக இரண்டு கீறும், அதனுடன் கேவலமான நான்குவரையும், சிறிய புள்ளியுமாக இவன் கையிலிருக்குமாயின் அவன் யோகவானாகும். அன்றியும் இவன் பிறந்த யோக வாழ்க்கையானது நன்றாகச் சொல்லிக் கொண்டு வருகின்றேன் கேட்பாயாக. இந்தப் பாலகனுக்கு வலக்கண் சாயலாகத் தோன்றும். இவனுடன் பிறந்த உடன் பிறப்பு ஏழுபேராம் எ-று.

CuraTech Document Processing Solutions

(வி-ரை.) மயேந்திர ரேகை ஆறு என்பது நடுவிரலில் யிரண்டு கீற்று ரேகைகளும், நான்குபுள்ளி ரேகைகளுமாயிருக்கும். அப்படி அடையப் பெற்றவர் மகா யோகவானென்க. மற்று மிவனுக் கிடக்கண்ணனது சாய லாயும், யிவனுடன் பிறந்தவர் எழுபேர் எனவுங் கூறுக என்பது கருத்தாகும்.

பேருடனே யிவன்பிறப்பு முன்னும்பின்னும்
 பேணியே யாண்பிள்ளைகள் பிறப்பார்மைந்தா
காருடனே பிறந்ததிவன் திங்களாகும்
 சாட்சாதி யீஸ்வரனுஞ் சோதியாகும்
கூருடனே யிவன்மாதா குளித்தவேழாம்
 குவலயத்திற் கெற்பமதாய்க் கூறலாகும்
சீருடனே கருத்தரித்த வூரைவிட்டு
 சிந்தனையாய்ப் போனவிடம் பிறந்தான்றானே.

(இ-ள்.) மேற்கூறிய எழுபேரும் யிவனுக்கு முன்னும் பின்னுமாகப் பிறந்தோராகும். அவை ஆண் பிள்ளைகளாகப் பிறக்கும். இவன் பிறந்த வாரம் திங்கட்கிழமையாகும். சோதி நட்சத்திரம் என்க. இவனுடைய தாயார் குளித்த எழாம் நாள் இவன் கெர்ப்பமாகத் தரித்தோனாகும். சீராகத் தான் கருதரித்த வூரைவிட்டுச் சிந்தனையாகப் போய் சேர்ந்த விடத்திற் பிறந்த பாலனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின்? இவனுக்கு முன்பின் ஜனித்தவர் ஆண் என்க. மற்றும் யிவன் ஜனித்தது திங்களில் சுவாதி நட்சத்திரம் கூடிய நாளாகும். இவன் தாய் ஸ்நானம் செய்த எழாநாள் கெர்ப்பம் தரித்தவன் இவன் கெர்ப்பந்தரித்த வூரைவிட்டு பிழைக்கச்சென்ற வூரில் யிவன் பிறந்தவனாகும் என்பதாம். 47

பிறந்தமனை சிறுகூரை பிதாவுமில்லை
 பின்னுமுன்னு மனிதரின்றிப் பிறந்தான்மைந்தன்
அரன்றுணையா லிவன்பிறந்த யேழாமாண்டில்
 ஆத்தாளைக் கொன்றிடுவா னவனுந்தானும்
பரந்தானே யிவன்பின்னே பிறந்தமைந்தன்
 பக்குவமாய்க் கானுடனே நயனமில்லான்
குறைந்தவிம் மைந்தனுக்குப் பெண்ணோஇல்லை
 குற்றமில்லா விளையபிதா குருடுங்காதிலனே.

(இ-ள்.) அப்படிப் பிறந்தோன் அம்மனை சிறு கூரையாகும். இவன் பிறக்கும்போது தகப்பனங்கில்லையாம். பின் முன்னறியா மனிதர்களிடத்திற் பிறந்த சேயாகும். பரமசிவனுடைய கிருபையால் பிறந்த யிப்பாலன் எழாம் வயதில் தாயாரைக் கொல்வன். இவனுக்குப் பின்னுகப் பிறந்த பாலனுக்கு

கால் முடமும், கண்ணில்லானுகும். யிவனுக்குப் பெண் குழவியுமில்லை. இளைய பிதா செவிடனுவன் எ-று.

(வி-ரை.) இதனுல் யிவன்ஜனித்த அடையாளத்தினைக் கூறினர். எப்படி யெனில், சிறு கூரைவீட்டிலும், பிதாவும் மற்றும் ஜனங்களுமில்லாது தாய் மாத்திரம் தனித்திருக்கும் சமயம் பிறந்தவனுமாகும். இதுவன்றி யிவன் ஜனித்த ஏழாம் வயதில் தாய் மரிப்பாள் எனவும், இவனுக்குப் பின் பிறந்த சகோதரன் அந்தகனும் நொண்டியுமாகும் எனவும், பின்பிறவி பெண் யில்லை யென்றும் இளைய பிதா செவிடன் என்பதும் கருத்தாகும். 48

காதிலாச் சிறுவன் முப்பத்திரண்டில்
கருணையாந் தலைவனுந்தா னிறந்தானப்பால்
வீதிலா விவனுக்கிங் குரிமையில்லை
விருதாவில் மைந்தனுந்தா னலைவானப்பா
தீதிலா விவன்றன்னைப் பிடித்தேதானடத்தச்
செகதலத்தி லொருத்தரில்லை சிவனல்லாது
பூதலத்தி லிவன்பிறந்த பதினேழாண்டில்
புதல்வனிவன் வெகுதுயரத் தலைவன்றானே.

(இ-ள்.) காதிலா யிச்சிறுவன் வயது முப்பத்திரண்டில் தலைவனுகிய போது தந்தை மரணமாகி விடுவன். அதன் பின்பு யிவனுக்கு யாதொரு ஆதாரவுமில்லாமல் விருதாவிற்றானே மைந்தனிவன் அலைருவான். இவனைக் காப்பற்ற பரமசிவனல்லாது பூமியிலொருவருமில்லை. பூமியின்மேல் யிவன் பிறந்த பதினேழாம் வயதில் யிப்பாலன் மெத்தவுந் துயரமானது கொண்டு அலைகுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், இவன் ஜனித்த 32-ல் பிதா யிறந்துபோவான் எனவும், அதன்பின் யிந்த ஜாதகனவன் திக்கற்றவனுகி யலைவன் எனவும், யிவன் ஜனித்த 17-ஆம் வயதிலேயே மகா கஷ்டத்துடன் அலைவான் என்பதும் கருத்தாகும். 49

அலைவதப்பா வனேகமாந் தொல்லைபட்டு
ஆதரவின் றுளங்கலங்கி மயங்கினுன்பார்
நிலைவதப்பா விருபத்தா றுண்டிலேதான்
நீதியுள்ள மைந்தனுக்கு யோகமாகும்
அலைவதப்பா பதின்மூன்று மாண்டிலேதான்
அன்பான நீரதனுற் கெண்டமாகும்
மலைவதப்பா விருபத்தெட் டாண்டிலேதான்
வல்பிணியாற் கெண்டமொன்று வந்ததன்றே.

(இ-ள்.) மேற் கூறியவண்ணம் அலைவதோடு அநேகந் தொல்லையும் பட்டு தன்னை யாதரிக்க ஒருவருமில்லாமல் மனமானது கலங்கி நிற்பன். இருபத்

LuraTech Document Processing Solutions

தாரும் வயதில் யிவன் தனக்கு யோகமானது வாய்க்கும். அன்றியும் பதின்மூன்றும் வயதில் ஜலகண்டம் சம்பவிக்கும். இருபத்தெட்டாம் வயதில் பிணியினால் பெருத்த கண்டம் நேரும் எ-று.

(வி-ரை.) மேற்கூறியவண்ணமாய் மகா கஷ்டத்துடனிருந்தா னாயினும் வயது 26-ல் மிக்க யோகமுடையவனாகும். இதுவன்றித் தான் ஜெனித்த 13-ஆம் வயதில் ஜலத்தாலும், 28-ல் கொடிய பிணியாலும் கெண்டம் உண்டாகும் என்பது கருத்தாகும். 50

அன்றான மயேந்திரந்தா னுறுண்டானால்
அன்னவனு மியோகவா னுவான்பாராய்
நன்றான விவன்வயது முப்பத்தாறில்
நலமுள்ள கன்னியைத்தா னுடிச்சேர்வான்
குன்றான குமரனிட வுதவியாலே
குவலயத்திற் பிறந்துவந்தான் தேவனாகும்
பன்றான மனையழித்து நாற்பத்துமூன்றில்
பதியிலிவன் புதுமனையு மெடுப்பான்பாரே.

(இ-ள்.) மயேந்திர ரேகையானது நான்குண்டாகில் அதின் பலன் சொல்வேன் கேட்பாயாக: அவன்யோகவானாக விருப்பான். வயது முப்பத்தாறில் கன்னியரைச் சேர்குவன். குமாரசுவாமியினுடைய உதவியினாலே இப் பூமியின்கண் பிறந்துவந்த இவன் தேவனாகும். இவன் பழய மனையை அழித்து நாற்பத்திமூன்று வயதிற்குமேல் யிவன்வாழும்பதியில் புதுமனை கட்டி வாழ்வான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின், மேலே சொன்னபடி மகா துன்பத்தை யடைவானாயினும், மயேந்திரரேகை ஆறு உடையவர் மகா யோகவானென்றே கூறுதல்வேண்டும். யிவன் குமரக்கடவு ளனுக்கிரகத்தாற் பிறந்தவன். தேவஅமிசம். மற்றும் 36-ஆம் வயதில் ஓர் பெண்ணைச் சேர்வான். 43-ஆம் வயதில் தானிருந்த பழயவீட்டைப் புதிதாக்குவான் என்பது கருத்தாகும். 51

பாரடா விவன்வயதோ ரெழுபத்திரண்டு
பத்தனுக்குச் சக்கிரத்தின் கருவமைப்பு
சீரடா விவன்யாக்கை யொருவனாகும்
சிவப்பிரமாய் நவக்குழந்தை பிறக்குமன்றே
காரடா விவனைத்தா னரனுமம்மைக்
கடாட்சிக்கப் பிறந்தமைந்தன் கடவுள்பத்தன்
கூறடா வவனுக்குக் கிரகம்ரெண்டிற்
கொற்றவனும் உச்சமென்று கூறுவோமே.

CuraTech Document Processing Solutions

(இ-ள்.) மேற்கூறிய யின்னேனுக்குப் பார்க்க வயதோ எழுபத்திரண்டு, இப் பத்தனுக்கு சக்கரத்தின் கருவமைப்பாகும். இவனுடைய ஆக்கையோ ஒன்ருகும். இவனுக்கு சிவனருளால் ஒன்பது குழந்தைகள் பிறக்கும். இவனே அரனும் அம்மையும் கடாட்சித்து அவ்வாரத்தினல் பிறந்த மைந்தனிவன். கடவுள் தனக்குப் பத்தனுகும். கிரகம் யிரண்டு உச்சமாயிருக்கப் பிறந்தவனிவனுகுமென்று கூறுவாய் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வயது முதலியனவற்றைக் கூறியுள்ளனர் அவை யாவன, வயது 72 என்பதாம். மற்றுமிவன் துணைவரின்றித் தனித்தவனும், 6-குழவிகளைப் பெறுபவனும் கடவுளிடத்து பக்தியுடையவனுகியு மிருப்பன். யிவனுக்குரியாராசி சக்கிர அடவியில் யிரண்டு கிரகம் உச்சமாகும் என்பது கருத்தாகும். 52

கூறுவோ மிவன்பிறந்த விருபத்தாறில்
குலமகனுங் தீர்த்தங்க ளாடுவான்பார்
பாருவோ மிவன்பிறந்த வைந்தாமாண்டில்
பாலகனும் புலேகளிப்பான் பண்பன்ருனும்
நேருவோ மிவன்வயதோர் நாற்பத்தொன்றில்
நேர்மையுள்ள மைந்தனவன் பிறப்பானப்பா
சீறுவோங் திசையோக முடிந்துதப்பா
சிக்கிரத்திற் பிள்ளேகளேப் பெறுவான்பாரே.

(இ-ள்.) கூறுவாயாக; இவன் பிறந்த இருபத்தாறும் வயதில் தீர்த்தங்கள் முழுதும் ஆடுவன். இவன்பிறந்த ஐந்தாம் வயதில் களிப்படைகுவன். நேர்மையாகிய வயது நாற்பத்தொன்றில் நேர்மையாகிய மைந்தன் பிறப்பான். திசை யோகங்கள் முடிந்த சீக்கிரத்தில் பிள்ளேகளேப் பெறுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனது வாழ்க்கை விசேஷத்தினேக் கூறியுள்ளனர். எப்படி எனில்? வயது 5-ல் கொடிய காரியங்களேச் செய்து சந்தோஷப்படுபவனும், 26-ல் பற்பல தீர்த்தங்களாடுபவனும், 41-ல் தனயனேப் பெறுபவனும், அதன்பின்பு மகாயோகமுண்டாவதோடு அனேக தனயர்களேயும் பெறுவான் என்பது இதன் கருத்தாகும். 53

பார்க்கவே யிவன்வயதோ ரெழுபத்திரண்டில்
பவழம்போல் பெற்றமைந்தன் சக்கிரவமைப்பில்
ஊர்க்கவே யிவன்பிறந்தான் திசையோகத்தில்
உத்தமன்ருன் பரமபத மடைந்தானன்ரே
கார்க்கவே யீஸ்வரனுர் கடாட்சத்தாலே
கருணைவைத்தா ரிவன்ருனன் பத்துமூன்றில்
தீர்க்கமா யன்பதுமோ ரைந்திலேதான்
தீரமாய்ப் பூமிகொள்வான் திரமாய்த்தானே.

(இ-ள்.) பார்க்க இவன் வயதோ எழுபத்திரெண்டில் பவழம்போல் பெற்றெடுத்த மைந்தன் சக்கரத்தின் அமைப்பில் இவன் பிறந்தான். திசையோகமுடையவன். இவன் பிதா மரணமாயினன். ஈஸ்வரனார் கடாட்சத்தினால் இவனுக்கு வயது அம்பத்துமூன்று. அதன்பின்பு இவனுக்குவயது அம்பத்தைந்தில் இவன் பூமியானதும் கொள்வான் எ-று.

(வி-ரை.) இக்கவியில் இவனது யோகத்தையும் ஆயுளையும் கூறினார் எப்படி எனில்? இவன் ஜனித்த 53 ஆம் வயதில் கடவுளனுக்கிரகத்தால் செல்வத்தையடைவான் எனவும், 55-ல் அநேக பூமி முதலியவற்றைக்கொள்வான் எனவும், இவனுக்கு வயது 72 எனவும், இவனது சக்கர அமைப்பாற் கூறப்பட்டதென்பதாம். 54

தானென்ற விவன்குழவி மூன்றும்பிள்ளை
தனமெடுப்பா னெட்டாண்டிற் றலைவனுகி
வானென்ற விவன்குழவி பத்துக்குள்ளே
வையகத்திற் றனசாலி யாவான்பாராய்
கானென்ற தேவியிட கடாட்சந்தாலே
கணக்கில்லா யோகம்வந்து கதிக்கும்பாராய்
தேனென்ற வக்கருத்தை விட்டிடாதே
தேன்மொழியாள் பத்தாவை மறந்திடாதே.

(இ-ள்.) மேற்கூறியவாறு பிள்ளைகள் மூன்றும் பெறுவன். தனமானதுயெடுப்பன். தனது பிள்ளையாகிய மூவரில் தலைவனுக்கு எட்டாம் வயது நடக்கையில், இவனுடைய குழவிக்குப் பத்துவயதாகி தனசாலியாக விருப்பன். தேவியினுடைய கிருபையினால் யாவும் யோகத்தினால் மென்மேலும் பெருகும். ஆயினும் இவன் சிவபத்தியை யொருக்காலும் மறக்காமலும், தேன்மொழியாளாகிய மனையாள் பத்தாவை மறந்திடாதிருக்கத் தன்மையுண்டாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது புத்திர யோகத்தைக் கூறியுள்ளனர். எப்படி எனில்? இவனுக்குப் பிறந்த மூன்றும் பிள்ளையானது தன் வயது 8-ல் பொருளெடுப்பான். ஆனதால் ஷை 8 க்குமேல் 10-க்குள் தங்க தனமுடையவனுவன். இவை யாவும் மஹாபரமேஸ்வரியினது கடாக்ஷமேயாதலால் ஷை தேவியைத் தொழுங்கருத்தை மறவாதே என்பதாம். 55

மறக்காமற் கேசரியா மிரேகைமார்க்கம்
மாட்டுகிறேன் மைந்தனே மருவிக்கேட்பாய்
இறக்காம லீஸ்வரனு ரெனக்குச்சொன்னார்
இன்னமுந்தான் மயேந்திரத்தின் விபரஞ்சொல்வேன்

(வி-ரை.) இக்கவியா விந்நூலினது மகத்துவத்தினைக் கூறுவாராயினர். எப்படியெனில், ஓ முனிவர்களே, தேவர்களே, ரிஷிகளே கேளுங்கள். இந்த ரேகை சாஸ்திரமானது ஸ்ரீ சர்வேஸ்வரனால் எனக்குச் சொன்னதாகும். இதை அவமதிப்பீர்களாயின் கொடுநரகிற் சேர்வீர்கள். ஆதலால் யான் சொல்வதைக் கவனமாய்க் கேட்பீர்களாக என்பதாம். 56

இரண்டாவது காண்டம்

காண்ட வரலாறு

பேறான மானிடனாய்ப் பிறந்தபோதே
  பெரிதான ரேகைகளை யறியவேண்டும்
கூறான மயேந்திரந்தா னாறுக்கும்மேல்
  குணமாகக் கண்டக்காற் கூறக்கேளாய்
பாரான புவிதனிலே யிவனைப்போலும்
  பாக்கியங்கள் பெற்றவர்க ளொருவரில்லை
சீரான சிவன்முதலா யைந்துபேரும்
  சென்மித்து வருவதுமுண் டவரைப்பாரே.

(இ-ள்.) பூமியின்மீது பெயர் விளங்கத்தானே மானிடராகப் பிறந்தபோதே பெரிதாகிய ரேகைகளைக் கண்டு அறியவேண்டும். அன்றியும் ரேகையானது ஆறுக்குமேலும் உள்ளுங் காண்கில் கூறக்கேளும்; யாதெனில் பாரின்மீது இவனைப்போல் பாக்கியமானது பெற்றோர் ஒருவருமில்லையாம். சீராகத்தானே இவன் முதலாக ஐந்துபேரும் ஜென்மித்து வருபவர்கள் அவரைப் பார்க்கவும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னை எனின் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் ரேகையினது மர்மத்தினையறிந்தே தீரவேண்டும். இங்கு கூறும் மயேந்திரரேகை ஏழினது பலனைக் கூறுகையில் தேவர்களுங் கூட இவ்வாறு ஏழுரேகைகளுடையவர்களாய்ப் பிறப்பர். மற்றும் பிரமன் விஷ்ணு உருத்திரன் மயேசன் கணேசன் முதலியவருங்கூட இவ்வாறு ரேகையுடையவர்களாய்ப் பிறப்பர் என்பதாம். 57

மயேந்திரரேகை ஏழின் பலன்

பாரடா மயேந்திரந்தா னேழுண்டானால்
  பக்குவமாய் மால்விரலி லேறிநிற்கும்
காரடா நால்கீறு மூன்றுபுள்ளி
  கண்டிப்பா யிருக்குமடா கருணைகூர்ந்து

பேரடா பிரமாவின் செய்கைவந்து
  பேணியே முளைத்ததென்று பிரிவாய்ச்சொல்லு
ஊரடா விவன்போல இல்லைமைந்தர்
  யோகவா னுதிப்ப னுகந்துபாரே.

(இ-ள்.) பார்க்க யாவருக்கேனும் மயேந்திர ரேகையானது மேழுண்டாகில் மால்விரலிலே நிற்கும். அதில் நாலுகீறும் மூன்று புள்ளியுங் காணவிருக்கும். அது பிரமாவினுடைய செய்கையினால் உண்டாகினவாமென்று சொல்லவேண்டும். இவன்போல மைந்தனில்லையென்றும், யோகவானாகப் பிறந்தோனென்றும் ஆய்ந்து இவனுடைய பலாபலன்களைப் பார்ப்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது என்னை எனின்? மயேந்திர ரேகை ஏழு என்பது நடுவிரலில் நான்கு கீற்றுகளும் மூன்று புள்ளிகளுமாய் இருக்கும். இவை பிரமன் செயலென்க. ஆனதால் இவனைப்போன்ற யோகவான்களெவரும் இல்லை எனக் கூறுவாயாக என்பதாம். 58

பாரப்பா விவன்பிறந்த வாரந்திங்கள்
  பாலகன்று னவ்வாரத் திரவுதன்னில்
நேரப்பா வோரிருபத் தைந்துநாழி
  நேர்மையா நட்சத்திர தோஷமாகும்
கூறப்பா வநுஷத்தின் முதற்பாகத்தில்
  கூர்மையாய்ப் புதனிவனுக் குச்சமானன்
தாரப்பா இவன்பிறந்த வீட்டிலேதான்
  தனமுதலாய்ச் சம்பத்து விளங்குமன்றே.

(இ-ள்.) பார்க்க இவன் பிறந்தவாரம் திங்கட்கிழமையாகும்; அன்றிரவு இருபத்தைந்து நாழிகையாகும். நட்சத்திர தோஷமுண்டு. நட்சத்திரம் அனுஷம் முதற்பாகமாகும். புதன் இவனுக்கு உச்சமாக விருந்தான். அதனால் இவன் பிறந்த வீட்டில் தனமுதலான சம்பத்துண்டாகி விளங்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்த வாரம் நேரம் கிரகம் முதலியனவற்றைக் கூறுகின்றனர். எப்படி எனில்? இவன் ஜனித்தது திங்கள் இரவு இருபத்தைந்து நாழிகையில் அனுஷம் 1-ஆம் பாதமென்க. மற்றும் கிரக அடைவியில் புதன் உச்சமாகும். இவன் பிறந்த இல்லத்தில் நாளுக்கு நாள் தனம் பெறுகும் என்பதாம். 59

அன்றிடவே யிவனுக்கு வயதோமெத்த
  அளவிறந்த யோகமுமாய் விளங்குவான்பார்
நின்றிடவே தாய்மார்கண் மூன்றுபேராம்
  நிகரில்லாச் செல்வமுள னிவன்பிதாவும்

நன்றிடவே தாய்மாம னைந்துபேராம்
நாற்றிநங்கை மார்களுமுண் டிவன்றுய்க்கப்பா
வன்றிடவே புத்திரரில்லா வீட்டிலேதான்
வந்துபிறந் தான்யோக வானுய்த்தானே.

(இ-ள்.) மேற்கூறியவண்ணம் சம்பத்து இவனுக்கு விளங்கினும், வயது மெத்தவுண்டாம். யோகமும் மென்மேலாகப் பெருகும்; இவன் தனக்கு தாய்மார்கள் மூவருண்டாம். நிகரில்லாத செல்வமுடையவனாகும் இவனுடைய தந்தை அம்மான்மார் ஐந்துபேருடையவன்; இவன் தாய்க்கு நாத்தி மார்களுண்டாம்; இவன் புத்திரர்க ளில்லாத வீட்டில் வந்து பிறந்தோனாகும். அன்றியும் யோகமுடையவனாக யிருப்பன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் தாய் தந்தை சகோதரர் முதலியவர்களது தன்மையினை விளக்குவாராயினர். அவையாவன, யிவனுக்குத் தாய்மார் மூவர் என்றதால், இவன் பிதாவுக்கு மனைவிமார் மூவர் என்பதாகும். தாய் மாமன் 5-பேர்கள் என்றது இவனது தாயின் சகோதரர்கள் என்க. மற்றும் ஷெ தாய்க்கு நாற்றி நங்கையர்களும் உண்டு. இவன் பிதா வெகுநாள்வரையில் புத்திரனில்லாதிருந்து வந்தவன், இந்த ஜாதகன் அப்படிப்பட்ட யோகமும் வாழ்வும் உடைய வீட்டில் ஜனித்தான் என்பது கருத்தாகும். 60

வருகுமப்பா விவனுக்குத் திசையோகந்தான்
வளமான வெண்பத்தா றுண்டுமட்டும்
தருகுமப்பா விவனுக்குத் தாரம்ரெண்டு
தாட்டியாய் முடியுமென்று தகமைசொன்னேன்
பெருகுமப்பா விவன்வயதோ திருபத்தைந்தில்
பேரான சர்ப்பத்தாற் கண்டமுண்டு
தருகுமப்பா விவனுக்குக் குதிரைகெண்டம்
சுருதியாற் பதினெட்டில் வருகும்பாரே.

(இ-ள்.) மேற்கூறியவண்ணம் யிவன் தனக்கு திசையும் யோகமும் எண்பத்தாறு வயது வரைக்கும் நடக்கும். இவன் தனக்குத் தாரம் ரெண்டாகும். தாஷ்டீகமாக முடியும். அன்றியும் இவன் தனக்கு வயது யிருபத்தைந்தில் சர்ப்பத்தினுல் கெண்டம் நேரும். அத்துடன் குதிரையினுல் கெண்டமானது சுருதியின்படியாக பதினெட்டாம் வயதில் தப்பாமல் வந்து வாய்க்கும்.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னை எனின்? இவன் பிறந்தவுடன் யிவனது பிதாவுக்குப் பல்லக்கு தண்டிகை முதலியன உண்டாகி யிப்புவனத்தையும் அதிகாரம் செய்யவல்லவனுகிக் கடவுளை மறவாது சிவயோகத்தைச் செய்வன்; பிள்ளையின்றி பெற்ற யிந்த மைந்தனும் மகா யோகவானுகுவன் என்பது கருத்தாகும். 61

LuraTech Document Processing Solutions

பார்க்கவே யிவன்வயது நாற்பத்தைந்தில்
பண்பான வியாதிகண்டம் வருகும்பாரு
ஏர்க்கவே யிவனுக்குக் குழவிநான்காம்
ஏற்றமுள்ள குழவிகளாய்ப் பிறக்கும்பாரு
ஆர்க்கவே யிவன்யோகங் குபேரன்போலாம்
ஆனந்த கேசரியின் யோகமாகும்
மார்க்கமா யிவன்யோகஞ் சொல்லொண்ணாது
மன்னவனாய்ப் பூமிகொள்வான் மயேந்திரத்தாலே.

(இ-ள்.) மேற்கூறியபடி வாய்க்கினும் யிவன் தனக்கு வயது நாற்பத்தைந்தில் வியாதியினால் கெண்டம் வந்தணுகும். பிள்ளைகள் நான்குண்டாகும். அப்படிப் பிறக்கினும் நன்மையுள்ளக் குழவி நாலாகும். இவனுடைய யோக வாழ்க்கை குபேரனுக்குச் சமமாகவிருக்கும். அதாவது ஆனந்தகேசரி யோகமாதலால் மார்க்கமாகிய இவன் யோகத்தைச் சொல்லமுடியாதாம். இன்னோன் மன்னவனாய்ப் பூமியானதுகொண்டு வாழ்குவான். மயேந்திரரேகை யிவன் கையிலிருப்பதினால் யிப்பலனுண்டாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னை எனின்? மேலே கூறப்பெற்ற திசையும் யோகமும் யிவன் வயது 86 வரையில் நீடிக்கும். மற்றும் யிவனுக்கு மனைவிமார் யிருவர் எனவும், 25-ல் சர்ப்பத்தாலும் 18-ல் குதிரையாலும் கெண்டம் உண்டாகும் என்பதாம். 62

தாலமென்ற விவன்றனும் யோகத்தாலே
சகலருக்கு மிவன்வாக்கு பலிக்கும்பாரு
ஞாலமென்ற யோகமடா சக்கிரயோகம்
நலமான மயேந்திரத்தின் பெருமையெல்லாம்
மூலமென்ற முன்சொன்ன பெருநூற்காண்டம்
முப்பத்தாறும் பாட்டின் மொழிந்தேன்மைந்தா
காலமென்ற தீட்சையிடக் கருணையோகம்
கைகண்ட கண்டாந்திரங் கருணைகூர்ந்தே.

(இ-ள்.) மேற்கூறிய யிவனுடைய யோகத்தின் வலுவால் சகலருக்கும் யிவன் வாக்கானது பலிதமாகும்; பூமியின்மீது சக்கரயோகம்போலும் நன்மையாகி மயேந்திரரேகை யானதின் பெருமை விளங்கும். மூலமாகிய முன் சொன்ன பெருநூலாகிய யிக்காண்டத்தில் முப்பத்தாறும் பாட்டின் பயனிலுஞ் சொன்னேன். அதாவது தீக்ஷையாகிய கருணையுள்ளயோகம். இதனைக் கைகண்ட ஆந்தரீகமாகக்கொண்டு பலன் சொல்லவும் எ-று.

(வி-ரை.) இக்கவியிலும் இவனுக்குண்டாகும் கெண்டம் முதலியவற்றையே கூறுவாராயினர் என்ன எனின்? வயது 45-ல் கொடிய வியாதியில்

கெண்டம் என்றனர். மற்றும் குழவிகள் நான்கு பேருடையவனுகி குபேரன் போன்ற செல்வத்தையடைந்து கேசரி வியோகத்துடன் மன்னனை யொத்த பூமியையுடையவனுகி சொல்லவொண்ணு மதிப்புடையவனுகி வாழ்வான் என்பதாம். 63

(வி-ரை.) இக்கவியால் யிப்படிப்பட்ட யோகத்தினை எதினுல் கூறினர் என்பதை விளக்கிக்காட்டியுள்ளன, அவையாவன, யிதற்காதார நூலாகிய ரேகைசாஸ்திரத்திலுள்ள 36-ஆம் கவியின்படிக் கூறினேன் என்றனர். என்னை எனின்? யிவனிருக்கும் யோகத்தால் யிவன் சொன்னது சொன்ன விதமே பலிதமாகும். யிவை சக்கிரயோகமென்றும் சொல்லப்பெறும். இவை மயேந்திரரேகையினது பெருமை என்பதாம். 64

மயேந்திரரேகை எட்டின் பலன்

கருணைசொல்வேன் மயேந்திரந்தா னெட்டுண்டானல்
 காட்சிபெறு மயேந்திரத்தின் மகிமைமெத்த
வருணமந்திரஞ் செபஞ்செய்த யோகசாலி
 வந்துதான் மைந்தனுய்ப் பிறந்தானப்பா
தருணைசொல்வே னிவனைப்போ லுலகுதன்னில்
 நாட்டியர்க ளில்லையடா சதுர்த்தனுகும்
கருணையடா விவனைத்தான் கண்டபேர்கள்
 சாஷ்டாங்கஞ் செய்திடுவார் தாளிற்றுனே.

(இ-ள்.) மயேந்திரரேகை எட்டுண்டாகில் காட்சியைத் தரும் அந்த சக்கரத்தின் மகிமை மெத்தவாம். அதாவது வருணமந்திரம் செபம் செய்த யோகசாலியாதலால் பூமியின்கண் மைந்தனுக வந்து பிறந்தான். இவனைப் போல் உலகில் யாருமில்லை. நாஷ்டீகரும் யில்லை. இவன் சதுர்த்தனுகும் இவனைக்கண்ட யாவர்களும் சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து பணிகுவார்'

(வி-ரை.) இக்கவியால் மயேந்திரரேகை எட்டுடையவர்களது சிறப்பினைக் கூறுவாராயினர். என்னவெனில் யிவன் தன் முன் ஜென்மத்தில் வருண மந்திரத்தால் ஜெபம் செய்திருந்த யோகசாலியாகும். ஆனதால் யிவ்வுலகின் கண் யிவனையொத்த சதுர்த்தனும் யோகசாலியு மில்லையென்றே கூறுதல் வேண்டும் யிவனைக்கண்டோர் அனைவரும் சாஷ்டாங்கமாய்ப் பணிவார் என்பதாம். 65

தானென்ற பிணிபோச்சு துறவுண்டாச்சு
 சாற்றியதோர் செல்வங்க ளிவனுக்காச்சு
தானென்ற வில்லறத்திற் குழவிமைந்தன்
 தகையாகப் பெற்றபின்பு வறுமைபோச்சு

நானென்ற ராசாக்க ளலமுண்டாச்சு
  நந்திகுரு பீடமுந்தா னனுகலாச்சு
கானென்ற கடவுளர்தன் னருளினாலே
  கட்டழகன் குபேரனாய் வாழ்வான்பாரே.

(இ-ள்.) மேற்கூறிய யிவன் பிறந்தவுடன் யாவருக்கும் பிணியானது தீரும். செல்வமானது பெருகும். உறவாகக்கூடும். இவன் பிறந்தவுடன் வறுமை யானது அகலும். இராஜாக்களின் நேசங்கூடும். குருபீடம் வாய்க்கும். கடவுளினுடைய கிருபையினாலே யின்னோன் குபேரனைப்போல் பூமியின்மீது வாழ்குவன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது, யிவன் யிந்த மனையிற் பிறந்த வுடனே யிவனது தாய் தந்தையர்க்குள்ள சகல துன்பங்களும் ஒழிந்து செல்வமுண்டாயின. இதுவன்றி அரசர்களால் நன்மையு முண்டானது, இவனது நந்தி பீடமும் யிவனிடம் வந்து சேர்ந்தது. இது மாத்திரமல் லாமல் கடவுள் கிருபையால் குபேரனைப் போன்று வாழ்வான் என்பதாம். 66

பார்க்கவே நிடதபுரி ராஜனைப்போல்
  பண்பான யோகவானாய்ப் பிறந்தான்
ஏர்க்கவே யிவனுக்கிங் கயனுமாலும்
  ஏற்றமுள்ள பாக்கியங்க ளீவதன்றி
காக்கவே பரஞ்சோதி யுமையாள்வந்து
  கலைக்ஞான முள்ளதுவுங் கருணைசெய்வார்
தாக்கவே சொல்லுகிறேன் தலைவனுக்குத்
  தங்கமும் ரத்தினமுளவாஞ் சார்புகேளே.

(இ-ள்.) இன்னமுங் கேட்பாயாக. மேற்கூறிய பாலன் நிடதபுரியை யாண்ட நளமகாராஜனைப்போல் யோகவானாகப் பிறந்தவன். இவன் தனக்கு அயனும் மாலும் யேற்றமாகியப் பாக்கியங்க ளீவதுமன்றி பரஞ்சோதியாகிய உமையாள் வந்து கலைஞானமுள்ளது யாவும் கருணைபுரிகுவன். அன்றியுந் தலைவனுக்குத் தங்கமும் ரத்தினமும் வரும்படியான சார்பை விபரமாகச் சொல்வேன் கேளும் எ-று.

(வி-ரை.) இங்கு நிடத நாட்டரசனைப் போன்று சகல யோகமும் உடை யவனாகி வாழ்ந்தவன் என்றனர். அவையாவன, சகல செல்வமும் உடையவ னாகி வாழ்வான் என்பதே யிதன் கருத்தாகும். இதுவுமன்றி உமையவளே யிவனுக்குச் சகல ஞானத்தையும் அளிப்பாள் எனவும் யிவனுக்குத் தங்கம் முதலிய நவரத்தினங்களும் அனேகமாய்ச் சேரும் என்றது கவனிக்கத் தகுந்தது. 67

LuraTech Document Processing Solutions

கேளடா விவன்பிறந்த கூர்மைமந்தா
  கேவலமாய்ப் போனதுகீழ் வாசல்வீடு
ஆளடா கிழமையது வெள்ளியாகும்
  ஆனந்தங் கொண்டநா ளுத்திரமாகும்
தாளடா விரவுதனிற் றசமிபக்கம்
  தாட்டிகனுஞ் சனியுதையந் தனிற்பிறந்தான்
நாளடா லக்கினத்திற் கிரகமைந்து
  நலமாகப் பிறந்துவந்தா னுடிக்கேளே.

(இ-ள்.) கேட்பாயாக. இவன் பிறந்தக் கூர்மை யாதெனில், கேவலமாகப்போன கீழ்வாசல் வீடாகும். பிறந்தவாரம் வெள்ளிக்கிழமையாகும். நட்சத்திரம் உத்திரம். இரவில் பிறந்தவன் திதி தசமி இவைகள் கூடிய தினத்தில் சனி உதயத்தில் பிறந்த பாலனாகும். லக்கினத்தில் கிரகம் ஐந்து நிற்கப் பிறந்தோன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த வாரம் திதி நக்ஷத்திரம் முதலியவற்றையும் கிரகங்களிருக்கும் தன்மையினையும் கூறுவாராயினர். அவை யாவன பழையதும் கிழக்கு வாசலுடையதுமாகிய இல்லத்தில் பிறந்தவன் எனவும் மற்று மிவன் ஜனித்தது சுக்கிரவாரத்தில் இரவில் உத்திரமும் தசமியும் கூடிய நாளில் ஜென்மலக்கினத்திற் சனியும் மற்ற ஐந்து கிரகங் களு மிருக்கப் பிறந்தான் என்பதாம். ஜென்மலக்கினத்தில் ஐந்து கிரகங் கள் எவை எவை என்பதைக் கீழ்வரும் பாடலால் விளக்குகின்றனர். 68

கேட்கவே லக்கினத்திற் சுக்கிரனும்புதனும்
  கேவலமாய்ச் செவ்வாயுஞ் சனியுஞ்சந்திரன்
மீட்கவே சுபர்பார்வை சுபரின்திருஷ்டி
  மேலாகப் பெற்றிடவே பிறந்தான்மைந்தன்
வாட்கவே யிவன்வாழ்வு திசையின்மைந்தா
  வரிசையாய் யிருந்தார்கள் வகையாய்க்கேளு
ஏட்கவே யிவன்பிறந்த வைந்தாநாளில்
  எடுத்தார்காண் புதைத்திருந்த தனங்கடானே.

(இ-ள்.) மேற்கூறிய கிரகங்களின் பெயர் சொல்வேன் கேட்பாயாக: சுக்கிரன் - புதன் - செவ்வாய் - சனி - சந்திரன் - இவர்களிருக்க சுபர்கள் பார்க்க சுபர்கள் திருஷ்டிபெறப் பிறந்த பாலனாகும். வாழ்க்கையாகிய இவன் வாழ்வு திசையிலுண்டாவதுடன் வரிசையாக யிருந்த கிரகங்களின் வலுவால் இவன் பிறந்த ஐந்தாம் நாளில் மனையில் புதைத்திருந்த தனப்புதயலை எடுப்பார்கள். அன்றியும் இன்னமும் இவன் பலன்களைக் கேட்பாயாக எ-று.

(வி-ரை.) ஜென்மலக்கினத்தில் ஐந்து கிரகங்கள் எவை என்பதை விளக்குகின்றனர். அவையாவன சுக்கிரன், புதன், செவ்வாய், சனி, சந்திரன் என்பனவாம். அதன் பயன் என்பதை யிக்கவியின் கடைசியில் விளக்கியுள்ளனர். அவையாவன, மேற்சொன்ன ஐந்து கிரகங்கள் லக்கினத்திலிருக்கப் பிறந்ததின் பயனாய் யிவன் ஜனித்த ஐந்தாம் ஆண்டில் அவ் வீட்டில் புதைத்து வைத்திருந்த புதையற்பொருளை எடுத்தனர் என்பதாம்

தனமென்ற யிவன்வயது மூன்றிலேதான்
  தலைவனைத்தான் பெற்றெடுத்தா ளிவன்றாயப்பா
கனமென்ற காட்டிலவள் சென்றபோது
  கண்டெடுத்தா ணிட்சேப தனங்களைத்தான்
வனமென்ற விவன்பிறந்த மாசந்தானும்
  வைகாசி முதற்றேதி யாகுமன்றோ
நனமென்ற பொருளெல்லாம் வந்துதையா
  நாற்றிசையு மெய்க்கவுந்தா னலம்பெற்றானே.

(இ-ள்.) மேற்கண்ட இப்பாலனுக்கு வயது மூன்றில் இவனுடைய தாயார் தலைவனைப் பெற்றெடுப்பாள். அன்றியும் அவள் காட்டின் வழியாகப் போகும்போது கண்டெடுப்பள் நிட்சேபதனங்கள். அப்பாலன் பிறந்தமாதம் வைகாசி முதற்றேதி யாகும். பலவிதமானப் பொருள்கள் வந்து வாய்க்கும் நாற்றிசையும் மெய்க்க நலம்பெறுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் ஜனித்த மூன்றாம் வயதில் இவன் தாயானவள் ஓர் சகோதரனைப் பெற்றெடுத்தனள் என வேற்படுகிறது. மற்றும் ஷை சகோதரன் பிறந்ததோ எனின் வைகாசிமாதம் முதற்றேதி என்பதாம். இதுவன்றி இவன் தாயானவள் ஷை மூன்று வருஷங்களுக்குப்பின் காட்டு வழியிற் செல்லுகையில் ஓர் புதையற்பொருளைக் கண்டெடுத்தாள் எனவும் அதுமுதல் இவர்களை நான்கு திக்கிலும் புகழத்தகுந்ததாய்ச் சகல சம்பத்தும் உண்டாயின என்பதாம். 70

பெற்றிடவே யிவன்வயதோ ரெண்பத்தைந்தாம்
  பேறுபெறு மிவ்வாழ்க்கை பெரியதாகும்
நற்றிடவே மனிதர்மக்கள் ரொம்பவானார்
  நாற்றிசையு மெய்க்கவந்தா னலங்கள்செய்வார்
சுற்றிடவே யிவன்பிறந்த யோகத்தாலே
  சூழ்வினைக ளெல்லாந்தா னோடிப்போச்சு
பற்றிடவே பரமனிட லருளினாலே
  பாலகன்றான் பூமிதனை யாள்வான்பாரே.

(இ-ள்.) மேற்கண்டவாறு பெறினும் இவனுக்கு வயது எண்பத்தைந் தாகும். பெருமிதமான வாழ்க்கையும் பெரியதாகும். மனிதர் மக்களும்

LuraTech Document Processing Solutions

மிகவும் உண்டாகும். நாற்றிசையும் புகழும்படியாக நன்மை யாவும் புரிகுவர். சுற்றமாகத்தானே இவன் பிறந்த யோகத்தினுல் இவன் குடும்பத்தில் சூழ்ந்திருந்த வினைகள் யாவும் பறந்தோடிப்போகும். பரமசிவனுடைய கிருபையினுல் இப்பாலன் பூமியையாள்வான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வாழ்வாகிய யோகத்தையும் ஆயுளையும் கூறியுள்ளனர். அவையாவன, யிவன் பிறந்தபின்பின் யிவர்களது தாய் தந்தையர்களுக்குள்ள துன்பமெல்லா மொழிந்து போனதுடன் பந்துவர்க்கத்தவர்கள் அனேகமாகி எல்லவரும் புகழத்தகுந்த நன்மைசெய்பவனுகி மிகுந்த வாழ்வையடைந்து தன் வயது 85-வரையில் இப்பூமியையும் ஆளத் தகுந்தவனுகி யிருப்பான் என்பதாம். 71

பாரப்பா மைந்தனுக்கு வயதோர்பத்து
  பண்பாக ஆகுமப்பா பாக்கியமொன்று
பாரப்பா மைந்தன்றுன் மண்ணைக்கெல்லி
  மகத்தான காதுவைத்த நிதிதானென்று
சீரப்பா மைந்தன்றுன் கண்ணிற்கண்டு
  சீக்கிரத்தி லெடுத்துவந்து மனையில்வைத்தான்
கூரப்பா விவன்றுனுங் குபேரனுவான்
  கூர்மையுள்ள ராஜாக்க ளுறவுமாச்சே.

(இ-ள்.) மேற்கூறிய இவ்வெனுக்கு வயது பத்து நடக்கும்போது மைந்தன்றுன் மண்ணைக் கெல்லிப் பார்க்கும்போது காதுவைத்துப் பற்றவைத்த நிதியை கண்ணிற்கண்டு அதை சீக்கிரமாகத்தானே எடுத்து தன் மனையில் சேர்த்துக்கொண்டு பின்னர் இவன் குபேரனுக விருப்பன். அப்போது இராஜாக்களெல்லாம் உறவாவார்கள் எ-று.

(வி-ரை.) இங்கு யிந்த ஜாதகனுக்குச் சுயார்சிதமா யுண்டாகும் யோகத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, இந்த ஜாதகன் வயது 10-ல் மண்ணைக் கிளறும்போது அங்ஙனம் ஓர் புதையற்பொருளிருக்கக் கண்டு அதனை எவருமறியாமல் கொண்டுபோய் வீட்டில் வைத்துக்கொள்வான்; அதுமுதல் இவனுக்கு அனேக அரசர்கள் உறவுண்டாகி குபேரனைப்போன்ற சம்பத்துடையவனுகி வாழ்வன் என்பது கருத்தாகும். 72

ஆச்சடா விவனுக்குத் தாரமைந்து
  அன்பான மைந்தனுக்கு விவாகமாச்சு
பேச்சடா விவன்குடிதான் பெருக்கலாச்சு
  பிரபலமாய் புதுமனைகள் எக்கியசாலை

வாச்சடா லாயத்திற் குதிரையானை
மகிழுமன்னர் கொடிதானுங் கட்டினுன்பார்
ஆச்சடா லட்சுமியும் குடியிருப்பாள்
ஆண்டவன்போ லிவனைக்கை யெடுப்பார்பாரே.

(இ-ள்.) ஆகினும் இவனுக்குத் தாரமானது ஐந்துண்டாம். ஐந்தும் விவாகமானதாகும். இவன்குடிப் பெருகும். அன்றியும் பிரபலமாகத்தானே புதுமனையும் எக்கியசாலையும் லாயத்தில் குதிரை யானையும் விஸ்தாரமாக விளங்க இராஜாக்களுடைய கொடியும் தன் மனையில் கட்டி வாழும்படியாக இலட்சுமியானவள் அவன் மனையிற் குடியிருப்பாள். யாவரு மிவனை கடவுளெனக் கையெடுப்பார் எ-று.

(வி-ரை.) இக்கவியில் இந்த ஜாதகனுக்கு பட்டபு ஸ்திரீகள் ஐவர் என்றனர். அதுவன்றி இவனது வாழ்நாளில் நாளுக்குநாள் மேன்மை யுடையவனுகி புதிய அரண்மனை கட்டுவித்தல், தரும சத்திரம் கலியாண சத்திரம் முதலியன கட்டிவைத்தல் ஆகியவற்றைச் செய்து தன் அரண்மனையில் ராஜக் கொடி நாட்டி யானை குதிரை முதலியனவற்றைத் தனது லாயத்திற் கட்டி வைத்து லக்ஷிமி வாசமுடையவனுகி இவனைக் காண்பேர் அனைவரும் கடவுளெனக் கைகூப்பித் தொழத்தகுந்த நிலைமையில் வாழ்வன் என்பதாம். 73

எடுத்திடவே யதிகார மனேகஞ்செய்வான்
எண்ணுமித மில்லாத பூமிகொள்வான்
தொடுத்திடவே யேகசக்கிர வர்த்தியாவான்
தொல்லுலகிற் குபேரனைப்போல் வாழ்வான்பாரு
அடுத்திடும்பேர் யாவரையும் பேணுவான்பார்
ஆந்திரிக சிவபூசை செய்வான்பாரு
கொடுத்திடவே தானமது பதினெட்டுந்தான்
கொடுத்திடுமோர் தயவுடைய பெருமைதானே.

(இ-ள்.) மேற்கூறிய வண்ணம் கையெடுக்கினும் யிவன் அதிகாரம் அநேகமாகச் செய்குவன். மிதமில்லாத பூமிகளை வாங்குவன். யோகச் சக்கிரவர்த்தியாகுவன். உலகின்கண் குபேரனைப்போல் செல்வமுற்று வாழ்வன். இவனை யடுத்தோர்களை யாதரிப்பன். ஆந்தரீகமாகச் சிவபூசை புரிவன். முப்பத்திரண்டு தருமமும் வழுவாமல் செய்யும் பெருமையுள்ளவனுகும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் இவனது வாழ்க்கை விநோதத்தினையே கூறுவாராயினர். அவையாவன, இந்த ஜாதகன் ஏக சக்ராதிபதியாகி அனேக பூமி முதலியனவற்றை யுடையவனும் குபேரனை யொத்த சம்பத்தைப் படைத்து தன்னை யடுத்தவரை யாதரிக்குங் குணமுடையவனுவன். மற்றும் தன் வயதில் பதினெட்டு தானங்களையும் செய்து அந்தரங்க சிவபக்தி யுடையவனும்,

LuraTech Document Processing Solutions

இருப்பன். இதுவரையில் கூறிவந்த பாட்டால் இவனே ஏக சக்கிராதிபதி எனவும் யிவனுக்கு நிகர் வேறு ஒருவரையும் சொல்ல முடியாதெனவுங் கூற வேண்டுவதாகிறது. இப்படிப்பட்டவர் மஹாராஜர் அல்லது சக்கிரவர்த்திக ளென்றே கூறத்தகும். 74

பெருமையாய் வாழ்வதற்குக் குழவியைந்தாம்
பேரான விவனுக்குக் கெண்டமூன்றும்
சிறுமையுள்ள மைந்தனுந்தான் வாலிபத்தில்
சீமையெங்கும் புகழ்ந்திடவே வாழ்வான்பாரு
அருமையாய் நடந்திவனு மம்பாள்பாதம்
அறிவரிய யோகத்தா லறிந்துபோற்றும்
வறுமையின்றிப் பிறந்தமைந்தன் குபேரனென்ன
வாழ்குவன்பார் மயேந்திரந்தா னெட்டினாலே.

(இ-ள்.) இவ்வாறு பெருமையாக வாழினும் யிவனுக்கு சந்ததி ஐந்துண்டாகும். அன்றியு மிவனுக்குக் கெண்டம் மூன்று சம்பவிக்கும். இவனே னுடைய மைந்தன் வாலிபத்தில் சீமையெங்கும் புகழ வாழ்குவன். அருமை யாகத்தானே யிவன் நடந்து அம்பாளுடைய பாதத்தை அறிவினால் யோகம் புரிந்துப் போற்றுவன். வறுமையானது சற்றுமில்லாதுப் பிறந்த மைந்தன் குபேரனுக்குச் சமமாய் வாழ்குவன். மயேந்திரரேகையானது எட்டுண்டாகி யிருக்குமாகின் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது என்னே எனின் மயேந்திர ரேகை எட்டினையுடையவர்கள், ஐந்து குழவிகளுடன் குபேரனைப்போன்ற செல்வ முடையவர்களாகி இந்நாடெங்கும் புகழத்தக்க யோகத்திலிருந்து, தேவியின் இணையடிச் சேர்வன். என்பதும் இவன் மாணமடைவதற்குள் மூன்று கெண்டங்கள் உண்டென்பதுங் கருத்தாகும். 75

ஆலென்ற விவன்வயதோ ரிருபத்தைந்தில்
அவனுடைய பிதாவுந்தா னிறந்தான்பாரு
ஞாலென்ற விவன்வயது முப்பத்தைந்தில்
நலமான மாதாவு மிறப்பாளப்பா
ஏலென்ற விவன்வயது முப்பத்தைந்தில்
ஏந்துகின்ற குழவிகளைப் பெற்றான்மைந்தன்
மாலென்ற மாயவனால் வந்தபாக்கியம்
மகத்தான யோகமிவை யமைந்ததன்றே.

(இ-ள்.) ஆயினும் மேற்கூறிய யின்னோனுக்கு வயது யிருபத்தைந்தில் தாயாரும் மரணமாகிப் போவாள். வயது முப்பத்துக்குள் குழவிகளைப் பெறுவன். இவனுக்கு மாயவனுடைய கிருபையினால் இயம்பும்படியாகிய இவ்வித பாக்கிய முண்டாகினவாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது பிதா மாதாக்களினது ஆயுள் முதலியன வற்றைக் கூறுவாராயினர். எப்படி எனில் 25-ல் பிதாவும், 35-ல் மாதாவும் இறந்து போவார். வயது 30-க்குள் அழகிய குழவிகளைப் பெற்றனன். இவை யாவும் சர்வேஸ்வரனது கிருபா கடாக்ஷத்தால் வந்த பாக்கியமாகும் என்பதாம்.

மயேந்திரரேகை ஒன்பதின் பலன்

அன்றெனவே மயேந்திரந்தா னெட்டுஞ்சொன்னேன்
அருமையினுல் வந்ததுபார் மயேந்திரரேகை
நன்றெனவே நவமான மயேந்திரந்தான்
நன்மையாய்ச் சொல்லுகிறே னடிக்கேளு
குன்றெனவே குவலயத்தின் முனிவருக்கும்
கூடிறிய மயேந்திரந்தான் நவமுண்டாகும்
சென்றெனவே யிவன்யோக வாழ்க்கைமைந்தா
செப்புகிறே னிரேகையிடச் செய்திகேளே.

(இ-ள்.) மயேந்திர ரேகையானது ஒன்பதுண்டாயின் அதின் பலன் சொல்வேன் கேட்பாயாக; இப் பூமியின்கண் முனிவர்கட்குத்தானே மயேந்திர ரேகையானது ஒன்பதுண்டாகும் ஆயினும் யிவனுடைய போகவாழ்க்கையும், ரேகையினிட செய்தியையும் கேட்பாயாக எ-று.

(வி-ரை.) இக்கவி மயேந்திரரேகை ஒன்பதுடையவர்களது பலா பலனைக் கூறுவாராயினர். பொதுவாய்க் கூறுமிடத்து மேற்படி மயேந்திர ரேகை ஒன்பது என்பது இப் பூமியின்கண் மகா முனிவர்களுக்கே ஒன்பது உண்டாவதுண்டு என்றனர். அதன் விவரமும் பலனும் பின் வருமாறு. 77

கேளப்பா லிவன்கையி லாறுகிறு
கேவலமாய் மூன்றுபுள்ளி கெட்டியாகும்
வாளப்பா லிவன்கைதான் புட்பம்போல
வண்மையாய்ச் சிவந்திருக்குங் கைகளெல்லாம்
நாளப்பா கூர்மைவிழி பாஞ்சாலன்றன்
நலமான யோகீஸ்வ ரன்றன்கேளு
ஆளப்பா லிவன்பிறப்போ ரைந்துபேராம்
ஆந்திரிக முள்ளனிவ னருமைகேளே.

(இ-ள்.) இவன் கையில் ஆறுகீறும் கேவலமாகிய மூன்று புள்ளியும் கெட்டியாகவிருக்கும் அதுவுமின்றி யிவனுடைய கையானது புஷ்பம் போலும் வெண்மையாகச் சிவந்திருக்கும். கைகள் முழுதும் கூர்மையுள்ள விழி யாகும். பாஞ்சாலனுகுவன் அல்லது யோகீஸ்வானுகுவன். இவனுடன் பிறந்தோர் ஐந்து பெயராகும் ஆகினும் ஆந்திரீகமுள்ளவன் யிவனுடைய அருமையைக் கேளும் எ-று.

LuraTech Document Processing Solutions

(வி-ரை.) மேலே சொன்ன மயேந்திரரேகை ஒன்பது என்பது எவ் வண்ணமிருக்குமெனின் ஆறுகீற்று ரேகைகளாயும் மூன்று புள்ளிகளாயு மிருக் கும் என்பதாம். இப்படி ரேகை யமைந்திருப்போர்களது அஸ்தம் புட்பம் போன்று சிவந்திருக்கும் என்பது கையின் அடையாள மென்பதாம். மற்றும் இவன் கூர்மையான விழிகளை யுடையவனும் பாஞ்சால நாட்டிற் பிறந்தவ னும் யோகியும் ஐந்து சகோதரர்களுடன் பிறந்தவனும் மிக்க மருமமுடை யவனுமாவன் என்பதாம். 78

கேட்கவே யிவன்பிறந்த கிழமை தானும்
கேவலமாய் வியாழமைந்த விரவின்மைந்தா
ஆட்கவே நாழிகையோ ரிருபத்தைந்தாம்
அன்பான நாளது ரோகணிதானாகும்
நாட்கவே யிவன்பிறந்த மாதங்கேட்கில்
நலமான கன்னியென்ற மாதமாகும்
ஏட்கவே யெம்பிரா னருளினாலே
இவ்வுலகில் வந்தவனென் றியம்புவீரே.

(இ-ள்.) கேட்கினும் யிவன் பிறந்தவாரம் வியாழமாகும். அன்றிரவில் நாழிகை யிருபத்தைந்தில் உரோகணி நட்சத்திரத்தில் பிறந்தவன்; மாதம் புரட்டாசியாகும். எம்பிரானுடைய கிருபையினால் யிவ்வுலகின்கண் வந்து உதித்தவனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்தமாதம் திதி நக்ஷத்திரம் முதலியன வற்றைக் கூறுவாராயினர். அவையாவன, புரட்டாசிமாதம் வியாழக்கிழமை இரவு இருபத்தைந்து நாழிகையில் உரோகணி நக்ஷத்திரத்தில் சாக்ஷாத் எம்பிரான் திருவருளால் இவ்வுலகிற் பிறந்தான் என்பதாம். 79

இயம்புவீ ரிவன்பிறந்த வைந்தாமாண்டில்
இயல்பான ரிஷிகளும் வந்துபதேசித்து
நயம்பெறவே மைந்தனைத்தா னழைத்துச்சென்று
நன்னயமாய் ரகசியங்கள் சொல்வார்சித்தர்
வயம்பெறவே வயதைந்தி லனேகவாழ்க்கை
வண்மையாய் வந்ததென்று வழுத்துவாய்நீ
துயம்பெறவே சித்தனடா மைந்தன்றானும்
துப்புரவா யிவன்சித்த னாவான்பாரே.

(இ-ள்.) அப்படிக்குதித்த யின்னானுக்கு ஐந்தாம் வயதில் யியல்பாகத் தானே ரிஷிகளானவர் வந்து உபதேசித்தும் யிவன்றன்னை அழைத்துச் சென் றும் நன்மையாகிய ரகசியங்களைச்சொல்வார்கள். இவன்றனக்கு வயது ஐந்திற்

ரூனே வாழ்க்கையர்கவும் வண்மையாக வந்ததென்றும் சொல்லவேண்டும். அன்றியும் யிவன் சித்தனுகித் திரிகுவானெனக் கண்டுரைப்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிவனது வாழ்நாளினது விசேஷங்களைக் கூறுகின்றனர். அவையாவன, இவன் ஜனித்த ஐந்தாம் வருஷத்தில் மஹரிஷிகள் இவனிடத்திற்கு வந்தழைத்துச் சென்று உபதேசம் செய்து மற்றுமநேக ரகஸ்யங்களையுஞ் சொல்லிப் போவாரானதால் இவன் பிறந்த காலத்தில் மகா சித்தனுய் விளங்குவான் என்பது கருத்தாகும். 80

பாரப்பா விவன்பிறந்த நாளுங்கோளும்
பக்குவமாந் திசையோகம் பண்பாய்ச்சொன்னேன்
நாரப்பா விவன்பிறந்த வேழாமாண்டில்
நலமான பிதுருதனக் கேமவித்தை
ஆரப்பா வந்துபதே சிப்பதென்னில்
ஆனந்த போகர்வந்திங் கருள்செய்வார்பார்
ஊரப்பா விவனைப்போ லரசர்மற்றோர்
உலகுதனி லில்லையில்லை யுண்மைதானே.

(இ-ள்.) உரைக்கினும் யிவன் பிறந்த நாளுங்கோளும் திசையும் யோகமும் பண்பாகச் சொன்னேன். இனி கேளும் யிவன்பிறந்த வேழாமாண்டில் நலம்பொருந்திய பிதுர் தனக்கு ஏமவித்தையானது வந்து உபதேசிப்பார். பூமியின்மீது யிவனைப்போல் அரசர்களும் மற்றவர்களும் யில்லையாம்; இது உண்மையா மறிகுவீர். இதைப் பார்க்கவேண்டுமானுல் போகர் பஞ்சபட்சி சாஸ்திரத்தை வாங்கிப் பார்த்தால் தெரியவரும் எ-று. 81

தானென்ற விவன்பிறந்த வேழாமாண்டில்
சற்குருதான் வந்திவனை யழைத்துச்சென்று
ஊனென்ற வுடற்கூற்றை யுபதேசித்து
உற்றதொரு ரகசியங்க ளருள்வார்பின்பு
வானென்ற மைந்தனிவன் றன்னைப்போல்வார்
வையகத்தி லில்லையடா மைந்தாகேளு
தேனென்ற மைந்தனிவன் லோகத்துள்ளே
சித்தர்களில் போகர்பட்சி தெளிவாய்சொல்லும்.

(இ-ள்.) மேற்கூறிய யிவன்பிறந்த எழாம்வருடத்தில் சற்குருவானவர் வந்து அழைத்துச் சென்று உடற்கூற்றை யிவன்றனக்கு உபதேசித்து அதன் பின்பு முற்றுமுள்ள ரகசியங்கள் யாவும் புகன்றார். இந்தப் பாலனைப்போல் உலகிலொருவரு மில்லையென்று மதித்துப் புகழத்தக்க யிவன் பூமியின்மீது தேவர்களிலொருவனுகவும் விளங்குவானென்றுந் தெரிந்துரைக்கச் செய்ய

Curatech Document Processing Solutions

வேண்டும். அன்றியும் போகர் பஞ்சபட்சியைப் பார்க்கத் தெளிவாய் கூறும் எ-று.

(வி-ரை.) முன்சொன்ன 80-ஆம் கவியில் யிவன் பிறந்த 5-ஆம்ஆண்டில் மஹரிஷிகள் சில ரகஸ்யங்களையுபதேசிப்பார்' என்றனர். இக்கவியில் இவன் வயது 7-ல் சற்குரு என்பவ ரெழுந்தருளி யிவனுக்கு உடற்கூறு என்னும் தத்துவசாஸ்திரத்தை உபதேசிப்பர் என்றனர். மற்றும் யிவன் மஹாசித்தகளி லொருவரான போகர் என்றனர். ஆனதாலிவனைப்போல் வாரிவ்வுலகத்தி லில்லை என்றனர். 82

சொல்லடா மயேந்திரந்தான் நவத்திற்கப்பாற்
சொல்லுதற்கு லோகத்தி லில்லையில்லை
வல்லடா விவனைப்போற் சதுர்த்தரில்லை
வயதுதான் சொல்வதென்ன கவனியாச்சே
நல்லடா நான்முகன்றான் படைத்தமைந்தன்
நலஞ்சொல்லக் கும்பமுனி நாடிக்காண
அல்லடா விவனுடைய வாழ்க்கையெல்லாம்
அன்பாக நீயறிய வருளினேனே.

(இ-ள்.) தெரிந்துச் சொல்லினும் மயேந்திரரேகை ஒன்பதுண்டாகில் அதற்குப் பலன் சொல்வதற்கு உலகத்திலொருவருமில்லை; யிவ்வித ரேகையுள்ள சதுர்த்தருமில்லை. வயதானது சொல்லவும் முடியாது அன்றியும் நான்முகன் படைத்த மைந்தன் யிவனுடைய நலத்தைச் சொல்லக் கும்பமுனியானவர் நாடிக்காணவும், யிவனுடைய வாழ்க்கையெல்லாம் அன்பாகத் தானே நீ யறியும்படியாக அருளினேன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மயேந்திரரேகை ஒன்பதுடையவர்களது பெருமையினையும் பலாபலன்களையுங் கூறுவாராயினர். எப்படி எனில், மயேந்திரரேகை ஒன்பதுடையவர்களுடைய பலாபலனையும் அதற்கப்பால் பத்துடையவர்களது பலாபலனையுங் கூறுதற்கு யிவ்வுலகத்தில் எவருமில்லை என்றது கவனிக்கத் தகுந்தது. மற்றும் இவனது வயதை எவராலும் சொல்ல முடியாதெனவும் யிவனைப்போன்ற சதுர்த்தர்கள் எவரும் யில்லை யெனவும் யிவை யாவும் கும்பமுனி என்னும் அகத்தியரது நாடியிலிருந்துக் கூறியதெனவும் என்பதாம். 83

மயேந்திரரேகை பத்தின் பலன்

அருள்செய மயேந்திரந்தான் பத்துண்டானால்
ஆச்சரிய மிவன்பிறவி ராஜனாவான்
வருள்செய்த வாறுவரை நாலுபுள்ளி
வகுத்ததொரு மயேந்திரந்தான் றான்பத்தாகும்

LuraTech Document Processing Solutions

குருசெய்த பாக்கியம்போற் பிறந்தான்மைந்தன்
குவலயத்திற் றனசாலி யோகவான்றான்
திருவுளத்தின் செயன்மிகுந்த செல்வனாகும்
செல்வனே கேளிதனைத் தெளிவாய்த்தானே.

(இ-ள்.) அருள் பெருகும்படியான மயேந்திரரேகையானது பத்துண்டாயின் அதின்பலன் சொல்வேன் கேட்பாயாக: அவன் அரசனாகுவன் அதில் ஆறுவரையும் நாலுபுள்ளியும் வகுத்திருப்பது மயேந்திரரேகையாகும். அதுவே பத்தாகும் குருவினுடைய பாக்கியம்போல் மைந்தன்பிறந்து பூமியின்மீது தனசாலியாகவும் யோகவானுமாக விருந்து திருவுளத்தினுடைய செயலானது மிகுந்து செல்வவானாகி வாழும். இவனுடைய செய்கையைச் சொல்வேன் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியில் மயேந்திரரேகை பத்துடையவர்களது பலாபலனையும் ரேகையினது அமைப்பையுங் கூறுவாராயினர். எப்படி எனில்? மயேந்திர ரேகை பத்து என்பது ஆறு கீற்று ரேகைகளும் நான்கு புள்ளி ரேகைகளுமாயமைந்திருக்கும். அப்படிப்பட்ட ரேகை யமையப் பிறந்தவன் அரசனேயாகும் என்னும் அவனது பிதாசெய்த புண்ணியத்தாலேயே யிவன் பிறந்தானென்னும் யிலக்குமி தேவியினது திருவருளால் யிவன் மிகுந்த செல்வமுடையவனாகி ஜெனித்தான் என்பதே யிதன் கருத்தாகும். 84

LuraTech Document Processing Solutions

தானென்ற விவனாறு பேர்கள்கூடத்
தருவாகப் பிறந்தவன்காண் தரணிமீதில்
ஊனென்ற விவன்றனக்குக் கிரகநான்கு
உச்சமடா லக்கினத்திற் குறுதியாக
வானென்ற கிரகநாலுச் சத்தாலே
வண்மைமிகும் புதன்கிழமை யேகாதசி
நானென்ற மகரமெனு மாதமப்பா
நலமாகப் பிறந்துவந்தா னாதன்றானே.

(இ-ள்.) கேட்பாயாக மேற்கூறிய ரேகையுடையவன் ஆறுபேர் சகோதரர்கள் கூடப்பிறந்தவன் அன்றியும் யிவன் தனக்கு கிரகம் நான்கும் உத்தமமாக நிற்க உச்சத்திலுதித்து உறுதியான உச்சத்தாலும் புதன்கிழமை திதி ஏகாதசியில் தைமாதம் ஜெனனமாவன் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிவன் பிறந்த மாதத்தினையும் வாரம் திதி முதலியவற்றையும் கிரகங்களினது அமைப்பையுங் கூறுவாராயினர். அவையாவன, யிவன் ஜெனித்தது தைமாதம் புதன்கிழமை ஏகாதசி திதியாகும். இதுவன்றி யிவனுக்கு நான்கு கிரகங்கள் உச்சமாகும். யிவனுடன் பிறந்தவர்கள் ஆறுபேர் என்பது அறியத் தகுந்ததாகும். 85

தானமென்னு மிவன்யோகஞ் சொல்லொணாது
   தாட்டிகனும் ராசனிடப் பிறவியாகும்
ஏனமென்னு மிவனாலே யனேகபாக்கியம்
   ஏந்திழையாள் பெற்றமைந்த னேர்மையாகும்
வானமென்னு மிவனுக்குத் தாரம்ரெண்டு
   வகுத்துரைப்பேன் மைந்தர்களோ ராறதாகும்
பானமென்னு மிவன்யோகங் கேசரியோகந்தான்
   பண்பாக மேன்மேலாய் நடக்குந்தானே.

(இ-ள்.) தானமென்னு மேற்கூறிய இவனுடைய யோகத்தைச் சொல்ல முடியாது எனெனில், இவன் தாட்டீகனாகவும் இராஜனுடைய பிள்ளையாகத் தோற்றுவன். பந்துக்களோடு அநேக பாக்கியமானது தோன்றும். இவனை யீன்ற மாதாவினிற்கு ஏற்கை யுடையவனாகும். இவன் தனக்குத் தாரம் இரண்டாகும். மைந்தர்கள் ஆறு பெயராகும். இவன்றனக்குக் கேசரியோக முண்டாகும். அதினால் பண்புபொருந்தி மென்மேலாக நடக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனது யோகம் முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இந்த ஜாதகனுக்கு மனைவியர் இருவர் எனவும்; புத்திரர்கள் 6-எனவும், இவன் அரசனைப்போன்றவன் எனவும், இவனுக்கு அனேக பாக்கியங்களுண்டாகும் எனவும், இவனுக்குக் கேசரி யோகம் எனவும் கூறவேண்டும் என்பதாம்.

86

நடக்குமடா விவன்வய தெண்பத்தெட்டு
   நகரமெல்லா மதிகார மிராச்சியங்கள்
கொடுக்குமடா வுமையவளும் பாக்கியத்தைக்
   கொற்றவளு மிலட்சுமியுங் குடியிருப்பாள்
அடக்குமடா வுத்திரத்திற் பிறந்தமைந்தன்
   அன்பான திசைகார னாகும்பாரு
இடுக்கடைக ளொருநாளும் வருவதில்லை
   இயல்பான மைந்தனுக்கு வியம்பிட்டேனே.

(இ-ள்.) நடக்கினும் மிவனுக்கு வயது எண்பத்தெட்டாகும்; அன்றியும் நகரத்திற்கும் இராஜ்யத்திற்கும் அதிகார முடையவனாகுவன். உமையவளருளாலும் பாக்கியங் கிடைக்கும். இலட்சுமியானவள் மிவன் மனையில் குடியாக விருப்பாள். உத்திர நட்சத்திரத்தில் பிறந்தோனாகும். திசைக்காரனாகுவன். இடுக்கமானது ஒருக்காலும் இவனை நாடாதுயென அறியவும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மிவனுக்கு வயது எண்பத்தெட்டு எனவும், இவன் பிறந்தது உத்திரம் எனவும், இவனுக்கு உமாதேவியாரது கடாக்ஷத்தால் சகல செல்வங்களும் உண்டாகும் எனவும் இவன் ராஜரீகம் செய்யும் தன்மை

வாய்ந்தவன் எனவும், யிவனுக்கு எக்காலத்தும் எவ்வித யிடுக்கண்களும் உண்டாவதற்கு யிடமில்லை என்பதே யிச்செய்யுளின் முக்கிய கருத்தாகும். 87

சாத்மீக ரேகையின் பலன்

இயம்பிட்டேன் சாத்மீக ரேகைமைந்தா
  இயல்பாக விவன்கையி லிருக்குமாகில்
நயம்பிட்டே னிவன்பிறந்த மனைதானென்று
  நலமான வடவாசற் றலாத்தின்மூலை
துயம்பிட்டே னினத்தார்க ளொருவரில்லை
  துப்புரவாய்ப் பிதாவுந்தா னில்லையப்போ
அயம்பிட்டேன் றாய்மாமன் மனையிலேதான்
  அன்னவர்தா னிருந்தவனு முதவியாச்சே.

(இ-ள்.) யாதாமொருவருக்குக் கையில் ரேகையானது பார்க்கும்போது சாத்மீக ரேகையானது அவன் கையிலிருக்குமாகின் அவன் பிறந்த மனை யொன்றாகும். அதற்கு வடக்குவாசல் மனை மேற்கு மூலையாகும். அவ்விடத்தில் யினத்தார்கள் யாருமில்லை. தன்னுடைய மனையிலிருந்தவர்கள் அப்போது உதவியாயிருக்கலாம் எ-று.

(வி-ரை.) இங்கு சாத்மீக ரேகையினது பொதுப் பலன்களைக் கூறுவாராயினர். எப்படி எனில் ஷை ரேகை யமையப்பெற்றவன் ஒற்றை மனையில் வடக்கு வாயிலுடைய வீட்டில், வடமேற்கு மூலையிற் பிறந்தவன் எனவும், இவன் ஜனிக்கும்போது இவனது பிதாவும் மற்றவர்களெவர்களும் அவ்விடத்திலில்லை எனவும் அக்காலம் தாய் மாமன் முதலியபேர்களே அவ்விடத்திலுதவியாயிருந்தவர் என்பதும் கருத்தாகும். 88

சாத்மீக ரேகை ஐந்தின் பலன்

ஆச்சப்பா சாத்மீக மைந்தேயானால்
  அப்பனே யிவனுடைய வளமைகேளு
வாச்சப்பா வசுபதியிற் பிறந்தமைந்தன்
  வண்மையுள்ள கன்னியென்ற மாசமாகும்
கோச்சப்பா கோசரத்தில் வியாழன்புதனும்
  கொற்றவர்க ளிருந்தார்கள் கோட்களுச்சம்
வேச்சப்பா வெய்யவன்றான் முதற்சாமத்திற்
  வேணபடி சிவனையிவன் வரங்கேட்பானே.

(இ-ள்.) சாத்மீக ரேகையானது ஐந்துண்டாகின் அதின்பலன் சொல்வேன் கேட்பாயாக; அவன்வறுமைப்படுவன். அசுவதி நட்சத்திரத்திற் பிறந்த

வன். புரட்டாசி மாதம். கோசாரத்தில் வியாழனும் புதனுமிருக்க கோட்கள் உச்சமாக நிற்க சூரியோதயம் முதற்சாமத்தில் சிவனுடைய வரத்தினல் வந்து பிறந்தவனாகும் எனச் சொல்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவியால் சாத்மீக ரேகை ஐந்தின் பலாபலன்களைக் கூறுகின்றனர். அவையாவன, இவன் பிறந்தது புரட்டாசி மாதம் முதற்சாமம் அச்சுவினி நக்ஷத்திரத்தி-லென்பதாம். மற்றும் இவனது கிரக அடைவியில் புதன் குரு ஆகிய இருவர்களும் உச்சமாகும். இதுவன்றி இவனது வாழ்நாட்களில் இவன் சிவபிரானைத் துதித்து வரங்கேட்பவன் என்பதாம். 89

கேட்டிடவே யிவன்பிறந்த ரெண்டாமாண்டில்
கேவலமாய் பிதாவுக்கு யோகந்தானும்
நாட்டிடவே நகரமெங்கு மதிகாரந்தான்
நன்மையுள்ள திசையோகம் வந்ததப்பா
காட்டிடவே கால்நீண்ட மைந்தனுக்கு
கருணையால் வரும்வரையில் கதிக்கும்யோகம்
வாட்டிடவே திசையோகங் குழவியாலே
வந்ததடா சிவனருளால் வண்மையாமே.

(இ-ள்.) மேற்கூறிய அப்பாலன் பிறந்த இரண்டாம் வருடத்தில் தகப்பனுக்கு யோகமானது பெருகி நகரமெங்கும் அதிகாரம் செலுத்தும்படியாக நன்மையுள்ள திசையோகமும் மைந்தனால் உண்டாயினவாமென்று கண்டுரை செய்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவி முதலிவன் பிறந்த பலாபலன்களைக் கூறுகின்றனர். அவையாவன, இவன் ஜெனித்த 2-ஆம் வயதில் பிதாவுக்கு மகா யோகமும் மற்றும் இவன் பிறந்தது முதல் மறிக்கும்பரியந்தமென்பதாம். பொதுவாய் இவன் ஜனித்த பிறகே இவனது தாய் தந்தையர்களுக்கு மகாயோகமும் உண்டாயின என்பதாம். 90

வண்மையா லிவன்வயதோ ரெழுபத்தைந்து
வகுத்திட்டேன் றாரமொன்று வண்மையாக
உண்மையா லிவன்வயது பதினேழாண்டில்
உத்தமர்க்கு விவாகமது முடியுமன்றே
தண்மையா மிவனுக்குக் குழவியைந்தாம்
தகைமைசொல்ல முடியாது தாட்டிகற்கு
நன்மைபெற்று வாழ்ந்திருப்பா னுலகத்துள்ளே
நாகரிக முள்ளவன்று னினனுமே.

(இ-ள்.) மேற்கூறிய யிவனுக்கு வயது எழுபத்தைந்தாகும், தாரம் ஒன்றாகும். இவன் தனக்கு வயது பதினேழில் விவாகமானது முடியும்

சந்ததி ஐந்துண்டாகும். அதில் ஆண் மூன்று பெண் இரண்டாகும். தகமை யோடு தாஷ்டீகமாகவும் நன்மையும் பெற்று வாழ்குவன். உலகோர் மெச்ச நாகரிகமுடையவனுகும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனது வயதையும் மனைவி புத்திரர் கலியாணம் யோகம் முதலியனவற்றைக் கூறுகின்றனர். அவையாவன, இவனுக்கு வயது 75-ஆகும். மற்றும் 17-ல் விவாகமாகும். புத்திரர்கள் ஐவர். மிக்க யோக முடையவனும் ஏகபத்தினிவிரதனும் வாழ்வான் என்பதாம். 91

நளினமென்ற விவன்வயதோ ரிருபத்தைந்தில்
நலமுள்ள ஆண்பிள்ளை பிறக்கும்பாரு
தெளினமென்ற விவன்வயது நாற்பத்தெட்டில்
செல்வனுக்குக் குழவியைந்து திரமாயுண்டு
வளினமுள்ள ஆண்மூன்று பெண்ணிரண்டு
வண்மையாய்ப் பிறப்பார்கள் மைந்தர் தானும்
திண்மைசெய்ய வொட்டாது சாத்மீகந்தான்
செப்பினேன் கேசரியின் றிறமைதானே.

(இ-ள்.) மேற்கூறிய இன்னேனுக்கு வயது இருபத்தைந்தில் நன்மை யுள்ள ஆண்பிள்ளையானது பிறக்கும். இவன் வயது நாற்பத்தெட்டில் செல்வ முடைய சேய்கள் ஐந்துண்டாகும். அதில் ஆண் மூன்று பெண் இரண்டாகும்; அப்படிப் பிறந்த பாலகர்கள் வன்மையுடையவராக யிருந்து வாழ்வார், திண்மையானது செய்யவொட்டாதாகிய கேசரியின் திறமையால் சாத்மீக ரேகையை அதனுடன் சொன்னேன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது புத்திர விவரத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, இவனது வயது 25-க்குமேல் 48-ஆம் வயதுக்குள் ஐந்து குழவி கள் ஜெனிக்கும். அவர்களுள் ஆண் குழவி-3. பெண்குழவி-2 என்பதாம். இவையே இங்கு கூறும் கேசரி ரேகையினது தன்மை என்பதாகும். 92

தானென்ற விவன்பிறந்த வாறுமாண்டில்
தன்னுடைய தாய்மாம னிறப்பான்பாரு
ஊனென்ற விவன்வயதோ ரிருபத்தைந்தில்
உற்றதொரு தாய்தந்தை யிறந்தார்பாரு
வானென்ற மாசமொன்றிற் றுயுந்தந்தை
வண்மையாம் முன்பின்னு யிறந்தார்பாரு
கானென்ற விவன்வயது பதினாறுண்டில்
கண்டமட்டுஞ் சொல்லுகிறேன் கருணைகூர்ந்தே.

(இ-ள்.) நாளானதுவாகி இவன் பிறந்த ஆறும் வருடத்தில் தன்னுடைய தாய்மாமனும் மரணமாகுவான்; இவன்றனக்கு வயது இருபத்தைந்தில்

Curatech Document Processing Solutions

தாயாரும் தந்தையும் மரணமடைகுவர்; அது எவ்விதமெனில்? ஒரு மாதத்தில் முன்னும் பின்னுக இறப்பார்கள்; இவன் வயது பதினறில் நடப்பதைக் கண்ட மட்டுஞ் சொல்லிக்கொண்டு வருகிறேன் கருணையானது கூர்ந்தும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிவன் தாய் தந்தை முதலிய வர்க்கத்தவருக்குண்டாகும் கெண்டம் முதலியவற்றினைக் கூறுகின்றனர். அவையாவன, இவன் வயது 6-ல் அம்மான் மறிப்பன். 25-ஆம் வயதில் தாய் தந்தை யிருவரும் ஒருமாதம் முன்னும் பின்னுமாய் யிறந்துபோவார். இந்த ஜாதகன் வயது 16-ல் பலத்த கெண்டமொன்றுண்டாகும் என்பதாம். 93

கூர்ந்திடவே யிவனுக்குக் கண்டமப்பா
குவலயத்தில் வயதுபதி னுறின்மைந்தா
கார்ந்திடவே யிவன்றனுங் கிணற்றினேற்றத்
தலைமரத்தி லேறியிவன் விழுந்தான்பாரு
ஆர்ந்திடவே யிவன்வயதோர் முப்பத்தைந்தில்
அன்பான வியாதியினல் மெலிந்தான்பாரு
சார்ந்திடவே யிவன்வயதோ ரெழுபத்தைந்து
கண்டதுபார் சிவனருளாற் கருணைகூரே.

(இ-ள்.) கூர்ந்திடும்படியாகக் கேட்பாயாக; இப்பாலகனுக்குப் பூமியின் மீது கண்டம் வயது பதினறில் வந்தணுகும்; இவன் கிணற்றின் யேற்றத்தின் மீதிலேறி விழுவான்; வயது முப்பத்தைந்தில் வியாதியினல் மெலிவான். மெலியினும் இவனுக்கு வயது எழுபத்தைந்து எனச் சிவனருளால் கூறவும்.

(வி-ரை.) மேற்சொன்ன செய்யுளில் 16-ஆம் வயதில் கெண்டம் என்றதை விளக்கிக் காட்டினர். அவையாவன, 16-ஆம் வயதில் கிணற்றிலேற்றமிரைக்கும் மரத்தின் மேலிருந்து வீழ்வான் என்பதாம். மற்றும் வயது 35-ல் கொடிய வியாதியால் கெண்டம் உண்டு எனினும், வயது 75 எனத் திண்ணமாய்க் கூறவேண்டும் என்பதாம். 94

கூறப்பா சாத்மீக ரேகையாகும்
குறிப்பாகச் சொல்லிவிட்டேன் கூர்மையாக
ஆரப்பா வென்னைப்போ லுலகத்துள்ளே
அன்பான மக்களுக்கிங் குதவியென்றல்
காரப்பா வருணகிரி யுதவியாலே
கடாட்சித்தேன் மக்களைநான் காக்கவேண்டி
சேரப்பா சின்மயத்தி னருளினலே
செப்புகிறேன் கேசரியின் திறத்தைக்கேளே.

(இ-ள்.) கூறும்படி விபரமாக சாத்மீக ரேகையின் யோகமனைத்தும் குறிப்பாகச் சொல்லிவிட்டேன், என்னைப்போல் உலகமீது யார் உதவியாவார்;

அருணகிரிநாத ரருளினால் கடாட்சித்தேன், மக்களைக் காக்கும்படியாக வெண்ணி, சின்மயத்தினருளினாலும் இன்னமும் கேசரியின் திறத்தைச் சொல்வேன் கேளும் எ-று.

(வி-ரை.) இதுகாறுங் கூறிவந்த பாட்டால் கேசரிரேகையிற் பிறந்தவர்களது பலாபலன்கள் எல்லாவற்றையும் அண்ணாமலைக் கடவுளது கிருபையால் இவ்வுலகமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணமாய்க் கூறியுள்ளேன். ஆனதால் மற்றுமுள்ள ரேகை மார்க்கத்தினையுங் கூறுகிறேம் கேட்பீர்களாக என்பதாம். 95

கிரீடி ரேகையின் பலன்

கேட்கவே கிரீடியிட ரேகைமைந்தா
கேவலமா யிவன்கையி லிருக்குமாகில்
நாட்கவே நன்மைபெற்ற மைந்தனுக்கு
நலம்பெற்ற யோகவா னுடிக்கேளு
ஆட்கவே யாறுவரை யிரண்டுபுள்ளி
அப்பனே கைநடுவி லிருக்குமாகில்
ஏற்கவே யிவன்பிறந்த யோகவாழ்க்கை
என்னசொல்வேன் மகத்துவத்தை யியம்பக்கேளே.

(இ-ள்.) யாதாமொருவர் கையைப் பார்க்கும்போது கிரீடி ரேகையானது யிருக்குமாகின் அப்பாலனுக்கு நலமாகிய யோகமானது நாடும். அதாவது ஆறுவரையும் யிரண்டு புள்ளியும் நடுவாகயிருக்கும். யிவன் பிறந்த யோக வாழ்க்கையை யென்னென்றுச் சொல்வேன் எ-று.

Luratech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியால் கிரீடி ரேகை எவ்வித முன்னன என்பதையும் அதன் பலாபலன் முதலியவற்றையும் கூறுவாராயினர். அவையாவன, கிரீடி ரேகை என்பது ஆறு கீற்றுகளும் இரண்டு புள்ளிகளாயும் அமைந்திருக்கும். அப்படிப்பட்டவர்களது யோகத்தையும் வாழ்வையும் சொல்லமுடியாது. எப்படி எனில் அவன் மிக்க யோகவான் என்பதேயாகும். 96

கேளடா வினத்தார்கள் மெத்தவுண்டு
கேவலமாய்த் தாய்தந்தை மிகவேபோற்ற
ஆளடா விவன்பிறந்த மாதந்தன்னில்
அன்பான மனையிலே சோபனங்கள்
வாளடா விருக்குமந்த வேளைதன்னில்
வரிசையாய்ப் பெற்றமைந்தன் வண்மைகேளு
நாளடா விவன்பிறந்த நாளுங்கோளும்
நன்றாகச் சொல்லுகிறே னயந்துக்கேளே.

(இ-ள்.) மேற்கூறிய ரேகையுடையோனுக்கு யினத்தார்கள் மெத்த வுண்டாம். தாய்தந்தையர் மிகவும் போற்றுவர். இவன் பிறந்த மாதத்தில் அம்மனையில் சோபனங்கள் நடக்கும். அப்படி நடக்குங்கால் வரிசையாகப் பெற்ற மைந்தனுடைய வண்மை யாதெனில் யிவன் பிறந்த நாளுங் கூடிய தைச் சொல்லுகிறேன் கேளும் எ-று.

(வி-ரை.) இச்சுவியா விவன் பிறந்த காலத்திலுள்ள சில அடையாளங் களைக் கூறுவாராயினர். அவையாவன யிவன் பிறந்த காலம் யிவனது வீட்டில் கலியாண சுபசோபனாதிகள் நடக்கும் எனவும், இவனுக்கு பந்து வர்க்கத் தினர் அநேகர் உண்டு எனவுங் கூறவேண்டுவதாம். 97

கேட்கவே யிவன்பிறந்த நாள்தான்மைந்தா
   கேவலமா யனுஷமதிற் பிறந்தமைந்தன்
ஆட்கவே வாரமது வெள்ளியாகும்
   அன்பாகப் பெற்றமைந்த னருமைகேளு
நாட்கவே மாசமது மகரமாகும்
   நன்மையினுற் செவ்வாய்தா னுச்சமானுன்
ஏட்கவே யிவனுடனே பிறந்த மைந்தர்
   எண்ணவொரு பத்துபே ரியம்பினேனே.

(இ-ள்.) கேட்பாயாக; யிவன் பிறந்த நட்சத்திரம் அனுஷமாகும். வாரம் வெள்ளி, மாதம் தையாகும்; யிவன் ஜெனனகாலத்தில் செவ்வாய் உச்சனுக விருந்தான்; யிவனுடன் பிறந்தோர்கள் பத்துப் பெயராகும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த மாதம், வாரம், திதி, நக்ஷத்திரம், கிரக அடைவு முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் பிறந்தது தைமாதமும் வெள்ளியும் அனுஷமும் கூடிய நாளில் இராசி சக்கரத்தில் செவ்வாய் உச்சம்பெறப் பிறந்தான் என்பதாம். 98

இயம்பிடவே யிவன்றனும் பத்தாம்பேரும்
   இயல்பான வாணுறு பெண்கள்நான்கு
துயம்பிடவே இவனுக்குக் கெண்டமெட்டு
   துப்பரவாய்ச் சொல்லுகிறேன் றொடர்ந்துகேளு
வயம்பிடவே யிவனுக்குத் தாரம்நாலு
   வாய்க்குமடா பெண்ணுலே திரவியங்கள்
நயம்பிடவே யிவனுக்கே யன்னியத்தில்
   நயமாகப் பொருளும்வந் துதவும்பாரே.

(இ-ள்.) மேற்கண்ட மைந்தர்களில் பத்தாவது பெயருடையவன் யிவனுகும்; அதில் ஆண் ஆறு பெண் நான்கு. அவனுக்குக் கெண்டமானது எட்டுஞ் சொல்லுகிறேன் கேளும். அன்றியும் இவனுக்குத் தாரமானது

காலாகும். அவர்களினுல் திரவியங் கிடைக்கும்; அத்துடன் அன்னியரிடத்திருந்தும் பொருளானது வந்து யிவனுக்குதவும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறப்பு மனைவி முதலிய விவரத்தைக் கூறுவாராயினர். அவையாவன, இவனுடன் பிறந்தவர் 10 பேர் எனவும் அவர்களுள் ஆண்கள் 6, பெண்கள் 4 எனவும், இவனுக்கு மனைவிமார் நால்வர் எனவும், இவனுக்குப் பெண்களாலும் அன்னியர்களாலும் அனேக செல்வங்கள் வந்துதவுமெனவுங் கூறவேண்டுவதாம். 99

பார்க்கவே யிவன்வயதோ ரைந்திலேதான்
பாலகர்க்கு விவாகமது பலிக்கும்பாரு
ஏற்கவே யிவன்வயது பதினெட்டிற்றன்
இயல்பான விவாகமது முடியும்பாரு
தார்க்கவே தலைவனுக்கு முப்பத்தாறில்
தகைமையில்லா விவாகமதொன் றுகும்பாரு
கார்க்கவே யிவனுக்கு மைந்தர்தாமும்
கருணையாற் பதினறு பிள்ளையாமே.

(இ-ள்.) மேற்கூறிய யிவன் தனக்கு வயது ஐந்தில் விவாகமானது நடக்கும்; பதினெட்டாம் வயதில் ஓர் விவாகம் முடியும், அன்றியும் தலைவனுக்கு முப்பத்தாறாம் வயதில் விவாகமொன்றுகும்; மைந்தர்கள் பதினறு பெயருண்டாம் எ-று.

(வி-ரை.) மேற்சொன்ன கவியில் இவனுக்கு மனைவியர் நால்வர் என்றமையால், அவை எந்தெந்த வயதிலென்பதை இங்குக் கூறுகின்றனர். அவையாவன, 5-ஆம் வயதில் முதல் விவாகமும், 18-ல் இரண்டாம் விவாகமும் 36-ஆம் வயதில் மூன்றும் விவாகமெனவுங் கூறவேண்டுவதாம். மற்றும் இவனுக்குப் புத்திரர்கள் 16 பேர் என்பதாம். நான்காம் விவாகத்தைக் குறித்து இங்கு ஏதுங் கூறப்படாமையால் பின்வருங் கவியை கவனிக்கவும். 100

ஆமப்பா யிவன்றுர மிரண்டுக்குந்தான்
அப்பனே சாபத்தாற் பிள்ளையில்லை
ஓமப்பா மூன்றுவது தாரந்தானும்
ஓகோகோ பிள்ளைகளைப் பெற்றுள்பாரு
வாமப்பா பத்துபே ராணதாகும்
வண்மையுள்ள பெண்குழவி யைந்ததாகும்
ஏமப்பா மக்களுக்கு வேதனையில்லாமல்
ஏற்றமுடன் மக்களுமே வாழ்வார்பாரே.

(இ-ள்.) மேற்கூறிய யிவனுடைய தாரம் யிரண்டிற்கும் சாபத்தினுல் சந்ததியில்லாமற்போகும்; மூன்றுவது தாரத்திற்கு மேற்கண்ட பிள்ளைக

ளுண்டாம் அதில் பத்துப்பேர் ஆண் பிள்ளைகளும் பெண்பால் ஐந்துமாகும்; யிவர்கள் யாதொரு வேதனை யில்லாமல் வாழ்குவார் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னை எனில், இவன் முதல் மனைவி யிரண்டு பேருக்கும் பூர்வத்திற் செய்த சாபத்தால் புத்திரர்க ளில்லை யாயினும் மூன்றும் மனைவியானவள் 10 ஆண்களையும் 5 பெண்களையும் பெறுவாள். மேற்படி குழவிகளும் சுகமே வாழும் என்பதாம். 101

பாரடா விவனுக்கு வயதோமைந்தா
  பக்குவமாய்த் தொண்ணூற்றைந் தாண்டதாகும்
காரடா விவன்வயது நாற்பதுக்குள்
  கனமான குடியுந்தான் பெருகும்பாரு
நேரடா விவனுக்குக் குபேரன் தானும்
  நிகரில்லை யிவன்யோக நிகழ்த்தப்போமோ
ஆரடா வீடுசொல்வா ரறிவிற்றானும்
  ஆச்சரியம் பெற்றமக்க ளதிகாரமாமே.

(இ-ள்.) பார்க்க மேற்கூறிய யிவனுக்கு வயது தொண்ணூற்றைந் தாகும்; அதில் நாற்பத்துக்குள் கனத்த குடியானது பெருகும். பேறன் பிறப்பான். யோகவானாக விருப்பன். பூமியின்மீது அறிவுள்ளவனும் யாவரும் புகழும்படியாக ஆச்சரியம் பெற்ற மக்களாகிய அதிகாரமும் பெற்று வாழ்வார்.

(வி-ரை.) இக்கவியா லிவனது யோகவாழ்வு முதலியனவற்றைக் கூறு வாராயினர் எப்படி எனில், இவனுக்கு வயது 95. ஆயினும் வயது 40-க்குள் விசேஷ செல்வம் பெருகும் இவன் வாழ்விற்குக் குபேரனும் ஈடாகார். இது வன்றி இவனது பிள்ளைகளும் நீண்டசெல்வத்துடன் வாழ்வர் என்பதாம். 102

ஆமெனவே இவன்றானு மனைகபூமி
  அப்பனே விலைகொள்வா னன்பன்றானும்
வாமெனவே வயதிருபத் தாறுமுதலாக
  வாகான வயதெண்பத் தைந்துமட்டும்
காமெனவே யுலகுதனி லதிகாரந்தான்
  காட்சியா யாளுவன்றன் கருணையாக
பாமெனவே சிவன்பூசை யிவன்றன்மைந்தா
  பக்குவமாய்ச் செய்துவந்தான் பண்புதானே.

(இ-ள்.) அப்படிக்கு வாழ்ந்திடும் யிவன் அநேக பூமிகளை விலைக்குக் கொள்வான்; அன்றியும் வயது யிருபத்தாறு முதலாக எண்பத்தைந்து வயது மட்டும் உலகத்தின்மீதும் அதிகாரஞ் செலுத்திக்கொண்டு வருவன்; சிவன் பூசை முதலானதும் சிரகப் புரிகுவன் பக்திமானதும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது யோகத்தினைக் கூறப்பட்டது. அவை யாவன, தன் வயது 26 முதல் 35-ஆம் வயதுவரையில் இவ்வுலகையதிகாரம் செய்யத் தகுந்தவனும் அநேக பூமி முதலியவற்றை விலைக்குவாங்கிச் சுகித் திருப்பன். அதுவன்றி இவன் சிவபூஜைச் செய்யத் தகுந்த பக்தன் என்பதாம். 103

பண்பனு யிருப்பனிவ னுக்குக்கண்டம்
பகுத்துரைப்பே னிவன்வயது பதினேழ்தன்னில்
நண்பனுய்ச் சலந்தனிலே கண்டமொன்று
நலமாக வந்ததென்று நாடிச்சொல்லு
அன்பனு மிவன்வயது பதின்மூன்றுக்குள்
அப்பனே நாற்காலி கண்டமொன்று
வன்பனு யிருந்தவந்தா னிருபத்தேழில்
வரிசையாய் வியாதிகண்டம் வந்ததென்றே.

(இ-ள்.) மேற்கூறிய வின்னேனுக்கு கெண்டம் சொல்வேன் கேட்பா யாக: பதினேழாம் வயதில் சலகெண்டம் ஒன்று வந்தணுகும்; வயது பதின் மூன்றில் நாற்கால் ஜீவனுல் கெண்டம் சம்பவிக்கும்; அதுவுமன்றி யிருபத் தேழாம் வயதில் வரிசையாக வியாதி கெண்டம் வந்து சம்பவிக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டங்களைக் கூறுவாராயினர் அவையாவன, வயது 13-க்குள் நாற்கால் ஜீவன்களாலும் 17-ல் ஜலத்தாலும் 27-ல் கொடிய வியாதியாலும் கெண்டம் உண்டாகும் என்பதாம். 104

வந்துதா னிவன்வயதோ ரேழிலேதான்
வாகான மாரிகண்ட மெலிந்தான்மைந்தன்
இந்துதா னுற்பத்தெட் டாண்டிலேதான்
இயல்பான பிராண கெண்டம் வருகும்பாரு
எந்துதா னிவன்வயதோ ரெழுபத்தைந்தில்
என்னசொல்வேன் சன்னியா லிறக்கலாச்சு
சந்துதான் சரவணையில் விளங்குகின்ற
சண்முகனுல் வந்தபலன் ருக்கிப்பாரே.

(இ-ள்.) மேற்கண்டதுமன்றி யிவன்றனக்கு வயது எழில்மாரி கெண்டத் தினுல் மெலிந்திருப்பன்; நாற்பத்தெட்டாம் வயதில் பிராணுபாயமான கெண்டம் வரும்; எழுபத்தைந்தாம் வயதில் சன்னியானது கண்டு அதனுல் மரணமாகுவன்; யிவைகளெல்லாம் சண்முகக் கடவுளின் அருளினுல் வந்த பலனெனச் சொல்வாய் எ-று.

turatech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியால் இவனுக்குண்டாகும் கெண்டத்தினையும் கிரியாணத்தையுங் கூறுவாராயினர். அவையாவன, 7-ஆம் வயதில் வைசூரி முதலியனவும், 18-ல் கொடிய வியாதியால் கெண்டமும், 75-ல் சன்னிவாதையால் இறந்துபோவான் என்பதாம். இவையே ஸ்ரீ முருகப் பெருமானது கடாக்ஷம் எனக் கூற வேண்டுவதாகும். 105

பார்க்கவே கிரீடியிட பிரபலன்கள்
  பண்பான மைந்தனுக்குப் பதவிரொம்ப
ஏர்க்கவே யிவனமைப்பு காலயோகம்
  என்னசொல்வேன் மைந்தனிட வியல்புமைந்தா
கார்க்கவே தேவரிலே யொருவனப்பா
  காரணமாய்ப் பதவியுடன் வந்தான்மைந்தன்
தீர்க்கமாய்க் கிரீடியிட மைந்தனுக்குத்
  திசைப்பலன்க ளுள்ளதெல்லாஞ் செப்பினேனே.

(இ-ள்.) மேற் கூறியோனுக்குடைய கிரீடிகையின் பலன் யாதெனில் பதவியானது கிடைக்கும், யிவனுடைய அமைப்பு காலயோகம் சொல்ல முடியாது; தேவர்களி லொருவனாக விருப்பன். ஏதோ காரணார்த்தமாகப் பூமியில் வந்து பிறந்தவனாகும்; தீர்க்கமுடைய கிரீடிரேகை யுடையவர்களுக்கு திசைபலன் முதலா யுள்ளதெல்லாஞ் சொன்னேன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிங்குக்கூறும் கிரீடி ரேகையினது பெருமை முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, ஷை கிரீடி ரேகையுடன் பிறந்தவர் சகல பாக்கியங்களுமுடையவராகி யிருப்பன். இவன் தேவர்களி லொருவனுக்குச் சமமானவனெனக்கருதியே கிரீடிரேகையிற் பிறந்தவர்களது பதவி என்பதாம். 106

விஷ்க்கம்ப ரேகையின் பலன்

செப்புகிறேன் விஷ்க்கம்ப ரேகைமார்க்கம்
  சேதிசொல்ல முடியாது திறமாய்க்கேளு
ஒப்புகிறே னிவன்யோகங் காலகண்டம்
  ஓகோகோ மைந்தர்களே யுவமைகேளீர்
அப்புகிறேன் க்ஷீரமென்ற சமுத்திரத்தில்
  ஆனந்த வாலிலைமேற் பள்ளிகொண்டான்
செப்புகிறேன் ரிஷிகளே யுங்கட்காக
  மேதினியி லுள்ளவர்கட் காதியாமே.

(இ-ள்.) விஷ்க்கம்ப ரேகையின் மார்க்கம் சொல்ல முடியாதாயினும் சொல்கிறேன் திறமாய்க் கேட்பாயாக; இவ்வித ரேகை யுடையவனுடைய

UniTech Document Processing Solutions

யோகமும் காலத்திற் றோன்றிய கண்டமும் இவைகளின் உண்மைகளைக் கேளீர்; திருப்பாற் கடலினிடமாக ஆலிலையின்மீது பள்ளிகொண்ட ஓ மாயனே ஓ ரிஷிகளே உங்கட்காகவும் பூமியின்மீதுள்ளவர்கட் காதியாகவும் சொல்லுகிறேன் எ-று.

(வி-ரை.) க்ஷீரசமுத்திரத்தின்கண் ஆலிலைமீதிற் றுயின்ற மஹா விஷ்ணுவே, ரிஷிகளே! விஷ்க்கம்பரேகையினது மார்க்கங்களை எவராலுங் கூறமுடியாதாயினும் அவற்றின் முக்கியபொருளாகிய யோகம் ஆயுள் கெண்டாதி கெண்டம் முதலியவற்றைமாத்திரம் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேட்பீர்களாக என்பதாம். 107

ஆதியடா விஷ்க்கம்பம் இரண்டிரண்டு
அணுவிரலிற் சிறுவிரலி லேறிநிற்கும்
சோதியடா விருசுழியு நாலுபுள்ளி
சொல்லுதற்கு மூவரைமே லேறிக்காணும்
வாதியடா விவன்பிறவி யோகசாலி
வளமைபெற்ற மைந்தனிவன் வரிசைகேளு
நீதியடா வேலமுறைத் தகமைமைந்தன்
நீனிலத்தி லிவன்போல்வா ரில்லைதானே.

(இ-ள்.) மேற்கூறிய ஆதியாகிய விஷ்க்கம்ப ரேகையானது யிரண்டு யிரண்டாக அணிவிரல் முதல் சிறுவிரல் முட்டியேறி நிற்கும். அதில் யிரண்டு சுழியும் நாலு புள்ளியும் உற்று மூன்று வரைக்குமேல் யேறிக்காணும். அவ்வித முடையோன் பிறவி யோகசாலி வளமைப்போன்றவன், நீதியுடையவன் யிந்த நீனிலத்தில் யிவன்போ லில்லையென்ப் புகல்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவியால் ஷை விஷ்க்கம்பரேகை என்பது எவ்வண்ண மிருக்கும் என்பதைக் கூறியுள்ளனர். அவையாவன, சிறுவிரலில் மூன்று வரைக்குமேல் இரண்டு சுழிகளும் நான்கு புள்ளிகளுடையதாய் அமைந்திருக்கும். அப்படி யமையப்பிறந்தவர் மிக்க யோகமுடையவராய்த் தமக் கொருவரும் நிகரில்லை எனக் கூறும்படிக்கு வாழ்ந்திருப்பர் என்பதாம். 108

இல்லையென்று சொல்வதென்ன மைந்தாகேளு
இகத்திலே வறுமையில்லை யிளையாள்யோகம்
வல்லமையாய்ப் பிறந்தமைந்தன் சதயந்தன்னில்
மகத்தான வேழாநாள் கெர்ப்பக்காரன்
கல்லையென்ற வில்லறந்தான் பிறந்தவீடு
காட்சிபெறும் புதுமனையிற் கருணைகூர்ந்தான்
ஒல்லையென்ற வைப்பசியிற் செவ்வாய்தன்னில்
உதயம்போற் பிறந்துவந்தா னுவமைகேளே.

(இ-ள்.) இல்லையென்று சொன்ன முறைப்படியே கேட்பாயாக: இவன் யிகத்தின்மீது ஒருக்காலும் யிளக்காத யோகமுடையவனுவன். வல்லமையாக இவன் பிறந்த நட்சத்திரம் சதையமாகும்; இவன் தாயார் குளித்த ஏழாம்நாள் கருத்தரித்தவன். இவன் பிறந்த வீடு புதிதாகக் கட்டினதாகும். ஜெனன மாதம் ஐப்பசி, கிழமை செவ்வாய்; செவ்வாயுதயத்தில் பிறந்தவன்.

(வி-ரை.) இக்கவியா லிவன்பிறந்த வாரம் மாதம் நக்ஷத்திரம் முதலியவற்றையும் மற்றும் சில அடையாளங்களையுங் கூறுவாராயினர். அவையாவன, இந்த ஜாதகன் ஐப்பசிமாதம் செவ்வாய்க்கிழமை உதயகாலம் சதய நக்ஷத்திரம் கூடிய நேரத்தில் பிறந்தவன் எனவும், இவன் மாதா குளித்த ஏழாம் நாளிற் கெர்ப்பந் தரித்தவனும், புதுமனையிற் பிறந்தவனும், எந்நாளும் லக்ஷிமிவிலாசம் பொருந்தியவனுமாவன் என்பதாம். 109

கேளப்பா பிறந்ததிவன் வடவாசல்வீடு
  கேவலமாய்ப் பிறக்கையிலே பிதாவுங்காணுன்
நாளப்பா நாழிகைதான் முக்காலுக்குள்
  நன்னயமாய்ப் பிதாவுமவன் மனையில்வந்தான்
தாளப்பா தனசாலி மூன்றும்பேறு
  தனக்குமுன்னே பிறந்ததுதான் பெண்ணேயாகும்
ஆளப்பா விவன்முன்னோர் வைத்தபண்டம்
  அத்தனையு மெடுத்திடவே வந்தான்பாரே.

(இ-ள்.) மேற்சொன்ன இவன் பிறந்தது வடக்குப்பார்த்த வாசலுடைய வீடு யிவன் ஜெனன காலத்தில் தகப்பன் அவ்வூரி லிருக்கமாட்டான்; பின்பு மைந்தன் பிறந்த முக்கால் நாழிகைக்குள் தகப்பனும் அம்மனைக்குள் வந்து காணப்படுவன். இவன் மூன்றுவது புத்திரனுகும் இவனுக்கு முன் பிறந்தோர் பெண்பாலாகும்; அன்றியும் இவன் முன்னோர்கள் வைத்த சொத்துக்கள் ஆதியந்தமும் கண்டு யெடுத்திட வந்தவனுகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னை எனின், யிவன் ஜனித்தது வடக்குவாயில் எனவும், யிவன் ஜனித்த முக்கால் நாழிகைக்குப் பின்பே யிவனது பிதா வீடுவந்து சேர்ந்தான் எனவும், யிவனுக்கு முன் னிரண்டு பெண் தமக்கைக ளெனவும், யிவன் மூன்றும் பிறவியும், யிவனது முன்னோர் வைத்த திரவியத்தை யெடுத்தாளவே யிவன் பிறந்தான் என்பதுங் கருத்தாகும். 110

பாரடா விவனுக்குக் கிரகமூன்று
  பண்பான லக்கினத்திற் குச்சமானுர்
சீரடா திசையோகம் பார்த்துமைந்தா
  சிற்பரத்திற் கருணைவைத்தா ரீஸ்பரர்தான்

UpraTech Document Processing Solutions

கூாடா மண்மனை தான் கொள்ளமைந்தன்
  குவலயத்தில் பிறந்திடுநற் குணவானப்பா
ஆரடா விவனைப்போல் யோகவான்றான்
  ஆச்சரியம் பெற்றமைந்த னழகனாமே.

(இ-ள்.) மேற்கூறிய இவன் ஜெனனகாலத்தில் கிரகம் மூன்று லக்கினத்தில் உச்சம் பெற்றிருக்கப் பிறந்தவன். இவனுடைய திசை யோக முதலானதும் பார்த்து பரமசிவன் கருணைவந்தவராவர். இவனரண்மனை முதலானதும் கொள்வான். நற்குணமுடையவனாகும்; சொல்வதற்கு இவனைப் போல் யார் யோகமுள்ளவர்; பூமியின்மீது ஆச்சரியம் பெற்ற மைந்தனாகும் அழகுடையவன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் யிவனது ராசிக் கிரகத்தில் மூன்று கிரகங்கள் உச்சமெனவும் கூறினர். மற்றும் யிவன் பிறந்த நாளின் விசேஷத்தால் எவரும் மதிக்க முடியாத விசேஷ யோகத்துடன் அநேக மண் மனை முதலியன உடையவனாகி எவரும் ஆச்சரியப்படத் தகுந்ததாய் மிக்க அழகுடன் வாழ் வான் என்பதுவேயாகும். 111

ஆமென்ற யிவன்வயதோ ரெழுபத்தெட்டாம்
  அன்பான வுடன்பிறவி பத்துபேர்கள்
காமென்ற கருவமைப்பின் மூன்றுபேர்கள்
  கைவிட்டுத் தாண்டுவார் கனிவதாக
வாமென்ற சிவபூசை வாமபூசை
  வரிசையாய் நடத்துவான் வகையைக்கேளு
தாமென்ற தாய்தந்தை யிருவர்தங்கள்
  சரணகம லங்களைத்தான் போற்றுவானே.

(இ-ள்.) மேற்கூறிய அழகுடைய பாலனாகிய யிவன்றனக்கு வயது எழுபத்தெட்டாகும். இவனுடன் பிறந்தோர் பத்துப்பெயராகும். அதில் கருவமைப்பில் மூன்று பேர்கள் கைவிட்டுத் தாண்டிப் போவார்கள்; யிவன் சிவபூசை வாமபூசை முதலானதும் வரிசையாக நடத்திக்கொண்டு வருவான். தாய் தந்தையினுடைய சரணா கமலங்களை சதாகாலமும் போற்றுதல் செய்வான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வயது, பிறவி, குணம் முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவை யாவன, இவனுக்கு வயது 78. உடன் பிறந்தவர் 10-பேர். அவர்களுள் மூவர் வெளிதேசம் சென்று விடுவர். இந்த ஜாதகன் தனது தாய் தந்தையர்களைப் போற்றத் தகுந்தவனாகி சிவபூஜை முதலியவற் றைச் செய்து சுகித்திருப்பான் என்பதாம். 112

போற்றுவன்கா ணிவன்வயது பத்துக்குள்ளே
   பொக்கிஷந்தா னெடுத்திடுவ னிவன்றானப்பா
சாற்றுவன்கா ணிவன்வயது பனிரண்டுக்குள்
   தரணிதனிற் பூமிகொள்ள சோகமுண்டாம்
ஏற்றுவன்கா ணிவன்வயதோ ரேழுக்குள்ளே
   இல்லறத்தி லுள்ளபொரு ளெல்லாம்போகும்
மாற்றுவன்கா ணிவன்வயதோ ரைந்துக்குள்ளே
   வண்மையுள்ள மாரியது வருகும்பாரே.

(இ-ள்.) போற்றிய இவன்றனக்கு வயது பத்துக்குள் பொக்கிஷம் எடுப்பன்; வயது பன்னிரண்டுக்குள் பூமிவாங்கச் சோகமுண்டாகும், வயது எழிற்குள் இல்லறத்திலுள்ள பொருள் யாவும் போகும். வயது ஐந்திற்குள்ளே அம்மையானது காணும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது யோகத்தையும் கெண்டாதி கெண்டம் முதலியவற்றையுங் கூறுவாராயினர். அவையாவன, வயது 10-க்குள் திரவிய மெடுப்பன். 12-ல் அநேக பூமி முதலியன வாங்கி, அதனால் துன்பமடைந்து டி. வயது எழிலேயே சகலத்தையு மிழந்துபோவன். மற்று மிவன் வயது 5-க்கும் வைசூரி என்பதுண்டாகும் என்பதாம். 113

பார்க்கவே யிவன்வயது பனிரண்டுக்குள்
   பண்பான வுடற்பிறவி மூன்றுபேராம்
ஏற்கவே யிவன்வயதோ ரிருபத்தெட்டில்
   ஏற்றமுள்ள விவன்பிதா விறக்கும்பாரு
கார்க்கவே யிவன்வயது முப்பத்தைந்தில்
   காரிழையு மாதாவு மிறப்பாள்பாரு
ஆர்க்கவே யிவன்வயது பதினாறுக்குள்
   அன்னவனும் விவாகமது வாகும்பாரே.

(இ-ள்.) இன்னமுங் கேட்பாயாக; வயது பனிரண்டுக்குள் இவனுக்கு உடன்பிறவி மூன்று பெயருண்டாகும்; இவன் வயது இருபத்தெட்டிற்குள் யிவன் பிதா மரணமாகுவன். வயது முப்பத்தைந்தில் தாயார் மரணமாவாள். வயது பதினாறுக்குள் யிவன்றனக்கு விவாக முடியும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் இந்த ஜாதகனது பிதா மாதா முதலியோரது கெண்டாதி கெண்டங்கள் முதலியவற்றைக் கூறுவாராயினர். விவரம் எப்படி எனில், வயது 12-க்குள் மூன்று சகோதரர்களுண்டாவர். 16-க்குள் விவாக முடியுமாயினும் 28-ல் பிதாவும் 35-ல் மாதாவும் மரணமடைந்து விடுவர் என்பதாம். 114

UpaTech Document Processing Solutions

ஆவதென்ன விவனுக்குத் தாரம்யோகம்
 அப்பனே ரெண்டுண்டா மிவனுக்கப்பா
பாவதென்ன முன்றூர முப்பத்தாறில்
 பனிமொழியாள் வியாதிகெண்ட முண்டுபாராய்
ஈவதென்ன சிவனுக்கு பிரதிஷ்டைதானே
 இயல்பாகச் செய்திடவே நீங்கும்பாவம்
காவதென்ன பிரதிஷ்டை செய்யாவிட்டால்
 காரிழையா ளிறந்துகலி யாணமாமே.

(இ-ள்.) மேற் கூறிய யிவன்றனக்கு தாரயோகம் யிரண்டுண்டாம்; அதில் முன் தாரமானது முப்பத்தாறு வயதில் வியாதியினுல் கெண்டமுண்டாம். அது நீங்க, சிவாலயப் பிரதட்சணஞ் செய்ய அப்பாவம் விலகும். அப்படிச் செய்யாவிட்டால் அவளிறந்து போய்விடுவாள்; இவன்றனக்கு மறுபடியும் விவாகமாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் யிந்த ஜாதகனுக்கு மனைவியர் யிருவர் எனவும் அவை யிந்த ஜாதகன் வயது 36-ல் உண்டாகும் எனவும் அக்காலம் சிவபிரானுக்கு பிரதிட்டை செய்யின் நீங்கும் என்பதாம். மேற்படி சிவ பிரதிட்டை செய்யவில்லையேல் முதல் மனைவி இறப்பாளாயினும் மறுவிவாகம் நடக்கும் எனவுங் கூறவேண்டும் என்பது கருத்தாகும். 115

ஆமடா விவனுக்கே கெண்டமாறு
 அகலாமல் வந்துவிடு மறிந்துகொள்ளு
வாமடா வாயுதத்தாற் பகையுமுண்டு
 வஞ்சனைகள் மெத்தவுண்டு வரிசைகேளு
ஊமடா விவனுக்கோ ரைந்துபிள்ளை
 உற்பனமாய் பிறந்திடுவ ருறுதியாக
நாமடா சொல்லுகிறே மிவன்றன்மைந்தா
 நலமான தனசாலி யையமின்றே.

(இ-ள்.) மேற் கூறிய யிவனுக்குக் கெண்டம் ஆறுண்டாகும்; அதுவோ தவறுமல் வந்தணுகும். அன்றியும் ஆயுதத்தால் பகையுண்டாகும். வஞ்சனையாலும் பலவிதத் துன்பமணுகும். இவன் றனக்குச் சந்ததி ஐந்துண்டாம்; அவர்கள் உறுதியுடையவ ராகவிருப்பர்; யிவனும் தனசாலியாகுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டங்கள் ஆறு. என்றும் அவை ஆயுதங்கள் முதலியவற்றாலும் பகைவர்களாலுமே உண்டாகும் என்றனர். மற்றும் இவனுக்குண்டாகும் குழவிகள் ஐவர் எனவும் இவனது வாழ்நாட்களில் மிக்க யோகமுடையவனுகி வாழ்வான் என்பதுங் கருத்தாகும். 116

ஐயமில்லை சொன்னமொழி மைந்தர்க்கப்பா
அருளுதவு மீஸ்வரனுர் சொன்னவாக்கியம்
மெய்யெனவே தானென்ற பேர்க்குமைந்தா
மேதினியி னற்சனனம் விளங்கும்பாரு
பொய்யெனவே மனதினுள் நினைப்பாராகில்
போதமில்லா மறலிகுழி விழுவார்பாரு
வையகத்தின் மக்களுக்காய்ச் சொன்னமார்க்கம்
வாகான கேசரியின் வண்மைகேளே.

(இ-ள்.) மேல் தனசாலியெனச் சொன்னது ஐயமில்லை; மைந்தர்களுக்கு அருள்செய்யும்படியான ஈஸ்வரன் சொன்ன வாக்கியம். யிதனை மெய்யென யெண்ணியபேர்க்கு பூமியின்மீது நன்மையாகிய ஜெனனம் வாய்க்கும். நீதி விளங்கும். அப்படிக் கெண்ணுமல் மனதில் பொய்யென நினைப்பாராகில் மாலியினுடைய நரகக் குழியில் விழுவார்; இவையெல்லாம் வையகத்திலுள்ள மக்களுக்காகச் சொன்ன மார்க்கமாகிய ரேகையின் வன்மையைக் கேளும்.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னை எனின், இதுகாறுங் கூறிவந்த வாக்கியத்தில் எவ்வித குறைவுமில்லை. ஏனெனில் இவை சாக்ஷாத் ஈஸ்வரனுர் கூறியதாகும். மற்றும் யிவை உண்மை என நினைத்தவற்கே நற் பிறவி கிடைக்கும். பொய்யென நினைப்பார்களேயாயின் அவர்களுக்கு நரகமே சம்பவிக்கும் என்பதில் ஐயமில்லை என்பதாம். 117

சாத்மீக ரேகையின் பலன்

வண்மையடா சாத்மீக ரேகையாலே
வரிசையாய் கெண்டங்க ளாறுண்டாகும்
உண்மையடா நீராலே கண்டமொன்று
உற்றதொரு சர்ப்பத்தாற் கண்டமொன்று
தண்மையடா வாயுதத்தாற் கண்டமொன்று
தாட்டியற்கு நாயாலே கண்டமொன்று
திண்மையடா கண்டங்க ளாறுஞ்சென்றால்
தீமையொன்று மில்லையடா செய்திநன்றே.

(இ-ள்.) வண்மையாசத்தானே சாத்மீக ரேகையானது உடையோன் அவன்றனக்கு வரிசையாகத்தானே கெண்டம் ஆறுண்டாகும். அதாவது, ஜலத்தினுல் ஒன்றும், சர்ப்பத்தினுல் ஒன்றும், ஆயுதத்தால் ஒன்றும், நாயினுல் ஒன்றும் நேரும். இந்த ஆறு கெண்டமும் தவறினுல் அதன் பின்பு தீமை யானது வொன்றும் அணுகாமல் நன்மையாகும் எ-று,

(வி-ரை.) சாத்மீக ரேகையானது தன் கையி லமைந்திருக்கப் பெற்ற வர்களது பலாபலன்களைக் கூறுகின்றனர். அவையாவன, ஷை ரேகையமையப்

LuraTech Document Processing Solutions

பிறந்தவர்களுக்கு தன் ஆயுள் முடிவதற்குள் ஆறு கெண்டாதி கெண்டங்கள் உண்டாகும் என்றனர். அவையாவன, நீராலும், சர்ப்பத்தாலும், ஆயுதத்தாலும், நாய்க் கடியாலும் என்பதாகும். 118

நன்றெனவே சத்துருக்கள் மருந்துங்கள்ளும்
நன்மையாய்க் கொண்டுவந்து மைந்தாகேளு
சென்றெனவே யிவனைத்தான் கொல்லவேண்டி
செய்திடுவார் மந்திரந்தான் முப்பத்தாறில்
அன்றெனவே யறிந்துநீ நீக்கவேண்டும்
அப்பனே சிவபூசை மறந்திடாதே
நன்றெனவே குமரனைநீ வணங்கிக்கொண்டால்
நலமான கெண்டமெலா மோடும்பாரே.

(இ-ள்.) மேற்கூறிய வண்ணம் நன்மையாலும் இவன்றன்னை சத்துருக்கள் கூடிக்கொண்டு மருந்துங் கள்ளுங் கொண்டுவந்து கொடுத்து நன்மையாகப் பேசி இவன்றன்னைக் கொல்லும்படி மந்திரங்களுஞ் செய்வார். அது எப்போதெனில், இவன் வயது முப்பத்தாறிலாம். அதை யறிந்து அப்போது நீக்கவேண்டும். அன்றியும் இவன் சிவபூஜையை ஒரு நாளும் மறக்கப்படாது. அதுவுமன்றி சண்முகக் கடவுளையும் தொழுது வருவானானல் மேற்கூறிய கெண்டம் யாவும் பறந்தோடும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வாழ்நாளின் வரும்பயனை யுரைக்கின்றனர். அவையாவன, இவன் வயது 36-ல் மருந்து, மது முதலியவற்றைக் கொண்டுவந்து, யிவனைக் கொல்லவேண்டிய மார்க்கந் தேடுவர். ஆனதால், அக்காலம் அவ்விதச் செயல்களைத் தெரிந்து நீக்குதல்வேண்டும். மற்றும், சிவபூஜை செய்தல், குமாரக் கடவுளை வணங்கலாகிய இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யின் மேற்சொன்ன துன்பம் எவையும் அணுகாது என்பதாம். 119

குடேரிகண்டன் ரேகையின் பலன்

பார்க்கவே குடேரிகண்ட ரேகைமைந்தா
பண்பான நடுவிரலிற் குறுக்கேரெண்டு
தீர்க்கவே யிருகூறு வரைகண்மைந்தா
சிற்பரம்போ லிருக்குமது திறத்தைக்கேளு
ஆர்க்கவே குடேரிகண்டன் வளையமாக
அன்பாக விருக்குமடா வறிவினலே
சேர்க்கவே யிவன்பிறந்த திசையின்யோகம்
திரமில்லாப் பாவியடா செப்பக்கேளே.

(இ-ள்.) பார்க்க காத்தில் குடேரிகண்ட ரேகை எவ்வித மிருக்குமெனில், நடுவிரலில் குருக்கே இரண்டு கூராக வரைகள் தோன்றி, சிதம்பரம்

போலிருக்கும். அதின் திறம் என்னவெனில், குடேரி கண்டனென்பது வளையம்போலிருக்கும்; அதையறிந்து அவன் பிறந்த திசையும் யோகமும் திறமையில்லாததுஞ் சொல்வேன் எ-று.

(வி-ரை.) குடேரிகண்டன் ரேகை என்பது நடுவிரலிற் குறுக்கே இருகூறுகளாயும், வரைகளாயும், வளையமாயும் இருக்குமாதலால், அவற்றின் பலாபலனையும், யோகம் முதலியவற்றையுங் கூறுவாராயினர். அவையாவன, யிந்த ஜாதகன் திறமில்லாப் பாவி என்பது கருத்தாகும். 120

செப்புகிறேன் மைந்தனிவன் பிறக்கும்போது
சேதிசொல்வே னில்லறத்தின் மிகவேபாக்கியம்
அப்புகிறே னிவன்பிறந்த ஆண்டுக்குள்ளே
அர்த்தமொன்று மில்லாம லழிந்துபோச்சு
நப்புகிறே னிவன்பிறந்த மூன்றுங்கெர்ப்பம்
நானிலத்தில் வெறுமைபட்டு திரிவான்மைந்தன்
வப்புகிறேன் வறுமையுள்ள மைந்தன்றனே
வகையான புதனின்ற நேரமாமே.

(இ-ள்.) மேற்கூறிய மைந்தன் பிறக்கும்போது இல்லத்தில் மிக்க பாக்கிய முண்டாயிருக்கும். இவன் பிறந்த வருஷமொன்றுக்குள் பொருளென்பது வொன்றுமில்லாமல் அழிந்துபோயிருக்கும். இவன் மூன்றுவது புத்திரனும்; பூமியில் வறுமைபட்டுத் திரிகுவன்; இவ்வித வறுமையோடு பிறந்த மைந்தன் புதனுடைய அம்சமாகும் எ-று.

(வி-ரை.) இதனால் யிவனது பலாபலன்கள் முதலியவற்றைக் கூறுகின்றனர். அவையாவன யிவன் பிறந்த காலத்தில் யிவனது யில்லத்தில் அநேகஞ் செல்வம் முதலியன யிருந்தபோதிலும், யிவன்வயது ஒன்றுக்குள் அவையிருக்குமிடந் தெரியாமல் ஒழிந்துபோயின என்பதாம். பின்னும் யிந்த ஜாதகன் மகா வறுமையாளனுகித் திரிபவனும் யிவன் மூன்றும் பிறவியுமாகும் என்பது கருத்தாகும். 121

நேரமடா கேட்டையிலே பிறந்தபிள்ளை
நேர்மையுள்ள சனிக்கோளிற் பிறப்பதாகும்
தாரமடா தனக்குத்தான் விவாகமில்லை
தன்மையுள்ள முதற்சனனஞ் செய்தபாவம்
ஆரமடா விவன்வெகுவாய் வீடுதோறும்
அன்னமில்லா திரந்துண்டு யலைவான்மேனி
பாரமடா பந்துக்களிற் பகையுண்டாகிப்
பரதவித்துப் பேதையனுய்த் திரிவான்பாரே.

(இ-ள்.) மேற்கண்ட நேரத்தில் பிறந்த பிள்ளை சனிக்கோளிலுதித்த தாகும். இவன்றனக்கு விவாகமானது யில்லை; அது யாதுக்கென்றால், இவன் முன் ஜெனனத்தில் செய்த பாபமாகும்; அன்றியும் இவன் வீடுதோறும் திரிந்து அன்னமில்லாமல் அலைந்து இரந்துண்பான். இன்னமும் பந்துக்கள் யாவரும் பகையுண்டாகி பாதவித்துப் பேதையனாய்த் திரிகுவான் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனது வாழ்நாளின் வரும்பயனைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் சனிக்கிழமைப் பிறந்தவனும், இவன் தான் முன் ஜென்மத்திற் செய்த ஊழ்வினைப்பயனால் விவாகமில்லை என்பதோடு தன் பந்துக்களிடத்து மிக்க பகையுடையவனாகி அன்னமில்லாது வீடுகள் தோறும் இரந்துண்டு பேதையாய்த் திரிவான் என்பதாம். 122

பார்க்கவே யிவன்வயது நாற்பத்தெட்டு
பண்பான ஆயுளில்லை பாலிக்கப்பா
ஏர்க்கவே இல்லறத்தி லைஞ்சுக்குள்ளே
எடுத்திடுவன் றாய்தந்தை யினங்களோடு
தார்க்கவே யிவனுக்கோ ரைந்துகெண்டம்
தாட்டியா யுண்டெனவே சாற்றலாகும்
வார்க்கவே யிவன்கிளையி லொருவரில்லை
வண்மையின்றிப் பெற்றமைந்தன் வரிசைகூறே.

(இ-ள்.) பார்க்க இவனுக்கு வயது நாற்பத்தெட்டிற்குமேல் ஆயுள் இல்லை. இவன்றனக்கு இல்லறத்தில் வயது ஐந்திற்குள்ளே தாய் தந்தையரையும் இனங்களையும் பீடிப்பான். அன்றியும் இவனுக்குக் கெண்டம் ஐந்து விதமாக அணுகும்; இவனுடைய கிளைகளில் ஒருவருமில்லை; இவன் பிறந்த வண்மையை வரிசையாகக் கேளும் கூறுவேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னை எனின்? இவன் வயது 5-க் குள்ளேயே இவனது தாய் தந்தையர் யிறந்துபோவார். மற்றும் சகோதரர் அற்றவன். இவனுக்கு வயது 48-ஆகும். மேற்படி வயது 48-க்குள் 5-கெண்டங்கள் உண்டாகும். இவையே யிவன்பிறந்த அமைப்பின் பயன் என்பதாம். 123

கூறிடவே யிவன்யோக வாழ்க்கைமைந்தா
குவலயத்திற் சொல்லிவிட்டேன் கூர்மையாக
ஆறிடவே யிவனுடைய வமைப்பினாலே
அடைவாகச் சொல்லிவிட்டே னனைவோர்க்காக
பாறிடவே யிவனமைப்பின் வளவேமைந்தா
பரிந்துசொல்லும் ரேகையிடப் பலன்றானே
சீறிடவே புவியரச ருறவாவார்கள்
தேவர்களுக் கிந்திரனாய்ச் செப்பலாமே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) கூறும்படியான இவன் யோக வாழ்க்கையானது அறியச் சொன்னேன் விபரமாக, அன்றியும் இவனுடைய அமைப்பினால் அறிந்து சொன்னேன்; அனைவோர்க்கும் வேணுமென்று திறந்திட்டேன். ஆதலால் யிவனுடைய அமைப்பு இவ்வளவேயாகும். இதனை ரேகைகளைக் கொண்டு பலாபலன்களை அறிந்துச் சொல்லவேண்டும். அப்படிக்குச் சொல்லப் புவியரசரும் உறவாவர்; தேவர்களுக்கெல்லாம் மேலாய் விளங்கும் தேவேந் திரனைப்போல் சொல்லலாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது யோகமும் வாழ்வும் இவ்வளவேயாகும் என்றனர். இவனது ரேகை யமைப்பின்பலன் இவ்வளவே என்பதோடு, இவ் வாறு ரேகையினது கூர்மைபறிந்து எவரொருவர் சொன்னார்களோ அவர்க ளுக்கு யிப்புவியிலுள்ள அரசர்களனைவரும் உறவாவதோடு தேவர்களுக்கெல் லாம் மேம்பட்ட இந்திரனைப்போன்று வாழ்வான் என்பது கருத்தாகும். 124

சக்கரகுலிச ரேகையின் பலன்

ஆமெனவே சக்கரக் குலிசமைந்தா
அறியவே சொல்லுகிறே னன்பாய்க்கேளு
மாமெனவே யிவன்கையி லிருக்குமாகில்
மகத்தான குலிசமட்டும் வளரும்பாரு
நாமெனவே யிவன்பிறந்த யோகவாழ்க்கை
நலம்பெற்ற மைந்தனடா னுடிக்கேளு
காமெனவே யுமையவள் தான் கருணைகூர்ந்து
கடாட்சிப்பா ளிலட்சுமியுங் கருணைகூர்ந்தே.

(இ-ள்.) சக்கரக் குலிச ரேகை கையிலிருக்குமாயின் அது குலிச மட்டும் வளர்ந்து யிருக்கும். அவ்வாறிருக்க யிவன் பிறந்த யோக வாழ்க்கை யானது நன்மையுள்ளதாக விளங்கும். இவன் தனக்கு உமையவள் கருணை கூர்ந்து கடாட்சிப்பள்; இலக்குமியு மருள்புரிகுவள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னை எனின், சக்கரக் குலிச ரேகை என்பது தன் கையி லமைப்பெற்றவருக்கு நாளுக்குநாள் தனம் வளருவதோடு, இலக்குமி தேவியானவள் கருணைகூர்ந்து சகல சம்பத்தையும் அளிப்பாள் என்பதேயாகும். 125

ஆகுமென்ற குலிசமடா விற்பனந்தான்
ஆச்சரியம் லிபிகளெல்லாம் படிப்பான்பாரு
வாகுமென்ற வேதமெல்லா மறிவானப்பா
வகையாக வில்லறத்தி லிருந்துவாழ்வான்

LuraTech Document Processing Solutions

போகமென்ற வதிபோகஞ் செய்வான்பாரு
போக்குநீக் குள்ளபுத்தி புலமைசெய்வான்
ஆகுமென்ற கலைக்கியான மறிவன்மைந்தன்
அன்பான சரஸ்வதிவந் தருள்செய்வாளே.

(இ-ள்.) மேற்கண்ட குலிசம் விற்பனமாகத் தோன்றில் அவன் சகல வித்தையையும் படிப்பன். வேதங்கள் யாவும் அறிகுவன். இல்லறத்திற்றனே இருந்து வாழ்குவன். யோகநிஷ்டை முடிப்பன். போக்கு நீக்குள்ள புத்திகள் யாவு முறைப்பன். புலமை செய்வன். கலைக்கியானம் அறிகுவன்; சரஸ்வதி வந்தருள் புரிகுவள் எ-று.

(வி-ரை.) சக்கரக் குலிசரேகை என்பது தன் கையி லமையப்பெற்றவர் ஆச்சரியத்தை விளைவிக்கத்தகுந்த லிபி முதலியவற்றையும் வேதத்தையும் படித்து இல்லறம் நடத்தி, சர்வ யோகத்தையு மறிந்து தாரதம்மியத்தோடு கலைக்கியானம் முதலியவற்றையுந் தெரிந்துகொள்ளும் வண்ணமாய்ச் சரஸ்வதி தேவி யானவள் கடாக்ஷிப்பாள் என்பது கருத்தாகும். 126

செய்யவே மைந்தனிவ னழகனப்பா
செப்புகிறேன் மன்மதனுக் கொப்பேயாவான்
வையகத்தில் யிவன்பெரிய யோகசாலி
வாகனங்க ளேறியிவன் றிரிவான்பாரு
மையல்விழி மாதர்களை மயங்கச்செய்வான்
மகாராச ராசர்களை வசமேசெய்வான்
ஐயமில்லா வழகனடா சூட்சுமபுத்தி
ஆச்சரிய முள்ளவனு மறிந்துபோற்றே.

(இ-ள்.) மேற்கூறிய பாலன் அழகுடையோன்; மன்மதனுக் கொப்பாக யிருப்பான்; பூமியின்மீது பிரபலமுள்ள யோகசாலியாகவிருப்பன். வாகனங்களேறித் திரிகுவன்; மைவிழியுடைய மாதர்களை மயங்கச் செய்வன். மகாராஜ ராஜர்களையும் வசமாகச் செய்குவன்; ஐயமில்லாதவன்; சூட்சும புத்தி யுடையோன், ஆச்சரிய முடையவனுகும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலு மிவனது யோகவாழ்வு முதலியவற்றையே கூறுவாராயினர். என்னஎனில், யிந்த ஜாதகன் மன்மதனை யொத்த அழகு வாய்ந்தவனுகி மிக்க யோகமுடையவனுய், வாகனத்திலூர்ந்து செல்லும் தன்மையுடையவனுகி, அழகிய மாதர்களையும் மயங்கச் செய்பவனுயும் அரசர்களையுந் தன் வயமாக்குபவனுயும், எவரும் ஆச்சரியப்படத்தகுந்த சூக்ஷ்மபுத்தியுடையவனுகி யிருப்பான் என்பது கருத்தாகும். 127

போற்றுவதற் கிவனைத்தான் போற்றவேண்டும்
பூமியிலே குலிசமென்ற விஷ்ணுவாகும்
சாற்றுவதற் கைங்கரனைச் சாற்றவேண்டும்
தன்மையுள்ள மைந்தனையுஞ் சாற்றவேண்டும்

வாழ்த்துவதற் கிவனுடைய யோகவாழ்க்கை
வையகத்தில் மற்றொருவர்க் குண்டோகண்டாய்
போற்றுவதற் கிவன்யோக வாழ்க்கைதன்னைப்
பேசரிதா முதலறியப் பேசுவோமே.

(இ-ள்.) போற்றுவதற்கு இவனையே போற்றவேண்டும். எனெனில் குலிசமென்பது விஷ்ணுவாகும். அன்றியும் விநாயகக் கடவுளைப்போல் இவனை யெண்ணவேண்டும். வாழ்த்துவதெனில் இவனுடைய யோக வாழ்க்கையை வாழ்த்தவேண்டும். வையகத்தில் இவ்வித ரேகையிருப்பது அருமையாகும்; போற்றும்படியாக இவனுடைய யோக வாழ்க்கையை முதலாகப் பேசுவோம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னை எனின், இந்த ஜாதகன் விஷ்ணுவைப் போன்று போற்றத் தகுந்தவனும், விநாயகனைப் போன்று கௌரவித்துப் பேசத் தகுந்தவனும் ஆவன் என்பதோடு, யிவனுக்குள்ள யோகமும் வாழ்வும் வேறு எவருக்குங் கிடைக்கும். மேற் சொன்னபடி சாற்றற்கரியவனுயினும், சிறிது விஷயங்களை மட்டுமே கூறுகிறேனெனக் கூறி பின்வருங் கவியா லிவனது விசேஷங்களைக் கூறுகின்றனர். 128

ஓமென்ற வுட்பொருளை யறிவான்மைந்தன்
உத்தமனுக் கிடதுகண் தான் சாயலாகும்
வாமென்ற கெஜகர்ன கோகர்னவித்தை
வையகத்தில் விநோதவித்தை மிகவுண்டாகும்
ஆமென்ற வாயுமையா ளுதவியுண்டு
அன்பான தேவிவந்தே யனுசரிப்பாள்
காமென்ற கர்னனடா குபேரவாழ்க்கை
காசினியி லுயிர்களுக்குக் கருணைசெய்வான்.

(இ-ள்.) மேற்கூறிய யிவன் ஓமென்னும்படியான உட்பொருளை யாவு மறிகுவன். இவன் தனக்கு யிடதுகண் சாயலாக விருக்கும். கெஜகர்ன கோகர்னவித்தை அறிகுவன். இயம்பொணுத விநோதம் புரிகுவன். இவன் தனக்கு உதவியுண்டாம். தேவி சகாயத்தினுல் கர்னனைப்போலும் குபேர வாழ்க்கையுடையவனுக யிருந்து காசினியிலுள்ளவர்களுக்கு உதவி செய்வான் எ-று.

(வி-ரை.) இந்த ஜாதகனுனவன், ஓம் என்கிற பொருளையறிந்து கொள்ளுவன். மற்றும், யிந்த ஜாதகனுக்கு யிடதுகண் சாயலாக விருக்கும் என்பது அவனது அடையாளத்தைக் குறித்ததாகும். கெஜகர்னவித்தை கோகர்ன வித்தை விநோதவித்தை முதலியன கற்றுக் கொள்வான் என்பது அவனது

LuraTech Document Processing Solutions

வித்தியாப் பெருக்கினைக் கூறியதாகும். மற்று மிவனுக்குண்டாகும் லக்ஷிமி கடாக்ஷத்தையும் தருமத்தின் சிறப்பினையுங் கூறியதென்க. 129

செய்யவே யிவன்பிறந்த மனைதான்மைந்தா
செப்புகிறேன் வடவாச லுள்ளதாகும்
ஐயவே செவ்வாயின் கிழமையாகும்
அன்பான லக்கினத்தி லிராகுவாகும்
உய்யவே யிவனுக்குக் கிரகமூன்று
உச்சமாய் நிற்குமடா வுறுதியாக
வையகத்திற் சதயமென்ற நாளேயாகும்
வாகாக விவன்பிறந்த நாள்கோளாச்சே.

(இ-ள்.) செய்யும்படியாக வலிமையுடைய மேற்கூறியவன் பிறந்த மனையானது வடக்குபார்த்த வாசலாகும். வாரம் செவ்வாய்க்கிழமை. இவன் ஜென்ம லக்கினத்தில் இராகு நின்றனன். கிரகம் மூன்று உச்சம்பெற நட்சத்திரம் சதையமாகும். இவை கூடியதினத்தில் இவன் ஜெனித்தவனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது பிறவியின் வீட்டு அடையாளத்தையும் ஜெனனவாரம் முதலியவற்றையுங் கூறுவாராயினர். அவையாவன, யிவன் பிறந்தது வடக்குபார்த்த வாசற்படியில் என்க. மற்றும் ஜெனனவாரம் செவ்வாய்க் கிழமையும், சதய நக்ஷத்திரமும் கூடிய நாள் என்க. மற்றும் ஜென்ம லக்கினத்தி லிராகுவும் மற்றும் மூன்று கிரகங்களும் உச்சமாயுமமையப் பிறந்தான் என்பது கருத்தாகும். 130

ஆச்சப்பா வவதானஞ் சொல்லக்கேளு
அண்டாண்ட புவனமெங்கு மிவன்பேச்சப்பா
வாச்சப்பா தவறாத வசனமுள்ளான்
வண்மையாந் தாரமது கிட்டும்பாரு
கோச்சப்பா கோத்திரமும் பெலமுள்ளான்றான்
கொற்றவனுந் தனசாலி வீரியவானும்
வாச்சப்பா மயேந்திரந்தா னிவன்தன்கையில்
வளமாக வேழுண்டா மருவிக்கேளே.

(இ-ள்.) மேற்கூறிய இவனுடைய பிரதாபஞ் சொல்லக்கேளும்: இந்த அண்டாண்ட புவனங்கள் யாவுமுள்ளோர் யிவனுடைய பேச்சைப் புகழ்வார்கள். வாக்காலாகிய வசனங்கள் ஒருக்காலும் பிசகான்; வண்மையாகிய தாரமானது வந்து கிட்டும்; கோத்திர பலமுள்ளவன், தனவான், வீரமுடையவன்; மயேந்திர ரேகையானது யிவன் கையில் ஏழு ரேகையிருக்கப் பார்க்கவும் எ-று. 131

மருவியதோ ரிவனுடனே பிறவியைத்தான்
ஐமைந்தனுடன் பிறந்தவர்கள் வரிசைகேளு
கருவியதோ ரிவன்பிறவி யோகவானும்
சாட்சாதி ஈஸ்வரனு ருதவியாலே
பிறவியதோ ரிவன்றமையன் றம்பிமார்கள்
புஜபலங்க ளுள்ளவர்கள் புலமையாவார்
பெரியதொரு கோத்திரமாம் மிகவேவாழ்வர்
பேரின்பந் தனைநோக்கிப் பெருகுவாரே.

(இ-ள்.) மேற்கூறிய இவனுடன் பிறந்த பிறவியானது ஐந்து பெயராகும். இவனுடைய மைந்தனோடு பிறந்தவர்களைக் கேட்பாயாக: அன்றியும் இவனுடைய பிறவி யோகவானகும்; சாட்சாத் ஜகதீஸ்வரனல் உதவியுண்டாய் வாழ்குவன்; இவனுடைய தமையன் தம்பிமார்கள் புஜபலமுடைய புலமையோர்களாவார்; பெருத்தக் குடும்பமாக வாழ்குவர் பேரின்பத்தை நாடுவர் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பெரிய கோத்திரத்திற் பிறந்தவன் எனவும், தன் வயது அந்தியத்தில் பேரின்ப மெய்துவன் என்றும், இவனுடன் பிறந்தவர்களும் கூட மிக்க யோக முடையவர்களாகவே வாழ்வார் எனவும் புஜபல முடையவரும் கல்வியிற் சிறந்தவர்களாயு மிருப்பர் என்பது அறியத் தகுந்ததாகும். 132

பாரடா விவன்யோக மெப்போதென்றால்
வாகான வயதுபதி னென்றுக்குள்ளே
காரடா கரைமிடற்ற னுமையாள்மாலும்
கருணையா யழைத்திவனைக் கொண்டுபோய்த்தான்
தாரடா தனத்தையொரு தலத்திற்காட்டி
சாற்றரிய திருவருளே சார்வாயீவர்
ஊரடா தனமிவன்றன் கொண்டுவந்து
ஒப்பில்லா வாழ்விவர்க்கு வந்ததன்றே.

(இ-ள்.) மேற்கூறிய யிவனுக்கு யோகம் எப்போதெனில், இவன்றனக்கு வயது பதினென்றுக்குள்ளே பரமசிவனும் உமையவளும் விஷ்ணுவும் கருணை கூர்ந்து யிவனை அழைத்துக்கொண்டு போய் ஒரு தலத்தினிடமாகத் தனத்தை காட்டியபின் திருமாலின் அருளானது பெருகி அப்பொருளை இவன் கொண்டு வந்து வைத்து அதிக சம்பத்தோடு வாழ்வன். யாவரும் புகழ்வார்கள் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது யோகத்தையும் யோகமுண்டாகும் தன்மையினையுங் கூறுவராயினர். எப்படி எனில் இவனது வயது 11-க்கு மேல் இலக்குமியும் நாரணனும் இவனுக்குப் பொருளுள்ள விடத்தைக் காட்டுவானதால் அதைக் கொண்டுவந்து இவன் மிக்க தனமுடையவனுகி வாழ்ந்து வருவன் என்பதேயாகும். 133

அன்றெனவே யிவன்வயதோ ரிருபத்திரண்டில்
   அப்பனே யிவனுடைய கனவிலேதான்
சென்றனவே சதாசிவன்றான் வந்துசொல்லி
   சேவையாய் வடபாலி லழைத்துச்சென்று
குன்றெனவே குபேரனைப்போ லாகவென்று
   குவலயத்திற் றனமிகவே யீந்திட்டையன்
நன்றெனவே நிதிதானுங் காட்டிற்காட்டி
   நலமுள்ள குடம்ரெண்டா யெடுப்பான்பாரே.

(இ-ள்.) மேற்கூறிய வண்ணம் யிவன் வாழ்கினும் வயது யிருபத்திரண்டில் யிவனுடைய கனவில் சதாசிவன்வந்து சொல்லி வடபாலாக அழைத்துச்சென்று யிவனை குபேரனுக்குச் சமமாக ஆக்க வேண்டுமென்றும் தனமானது வேணது ஈந்தும் நிருதியிருக்கும் யிடத்தைக்காட்டி யவர் மறைந்தபின் யிவன் அக்காட்டினிடமாக யிரண்டு குடம் பொன்னெடுப்பான் யிவனும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலு மிவனுக்குண்டாகும் யோகம் முதலியனவற்றையே கூறியுள்ளனர். அவையாவன, இந்த ஜாதகனது வயது 22-ல் இவன் கனவில் சதாசிவமூர்த்திதோன்றி வடபாலிலுள்ள தனப்புதையலைக் காட்டும்போது இந்த ஜாதகனும் அவ்வண்ணமே சென்று அதனை எடுத்து வந்து குபேரன்போன்ற தனமுடையவனுவான் என்பதேயாகும். 134

பார்க்கவே மைந்தனுந்தா னிதியெடுத்து
   பக்குவமாய் மனைசேர்ந்த பாலன்றன்னை
ஏற்கவே தனவானுய்ப் பேருங்கீர்த்தி
   எடுத்துமவன் வளர்ந்திருப்பா னிகபரத்தில்
கார்க்கவே யுமையவளும் ரிஷியுந்தானும்
   கருணைவைத்து ரக்ஷித்தார் மைந்தனைத்தான்
ஆர்க்குமிவ னடங்காத யோகசாலி
   அருள்பெருகும் பிதாவினிடப் புண்யத்தாலே.

(இ-ள்.) பார்க்கவே மேற்கூறிய வண்ணம் யிப்பாலன் நிதியானது எடுத்துத் தன்னுடைய மனையில் கொண்டுவந்து சேர்த்துப் பின்பு தனவானென்னும் பெருங் கீர்த்தியும் எடுத்து வாழ்குவன்; யிவனைக் காக்கும்படியாக உமையவளும் ரிஷிகளும் கருணையானது வைத்து ரட்சித்து வருவார்கள். இவன் யார்க்கும் அடங்காத யோகசாலியாக அருளானது பெற்றுக் கீர்த்தியானது பெருகுவன். அது எவரால் உண்டாயினவெனில் யிவனுடைய தகப்பன் செய்த புண்ணிய வசத்தினுலாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவது என்னை எனின், மேற்கூறியவண்ணம் இவன் தந்தை செய்த புண்ணியவசத்தால் புதையற்

LuraTech Document Processing Solutions

பொருளை எடுத்து வந்து குபேரனை யொத்த சம்பத்துடையவனுகிச் சுகித்திருக்க ஸ்ரீ உமாதேவியும் ரிஷிகளும் கடாக்ஷம் செய்தனர் என்பதாம். 135

தாலமென்ற விவன்தாய்தான் றிருவையாகும்
தன்னுடைய பிதாவுமவன் யோகவான்பார்
ஆலமென்ற தேவரிலே யொருவனப்பா
ஆச்சரியம் பெற்றமைந்த னதிகயோகம்
ஞாலமென்ற தெய்வமடா வதிகயோகம்
நாதாக்கள் மெச்சியிவ னல்கினுன்பார்
ஏலமென்ற வெம்பிரா னருளினுலே
ஏகாந்த வுமையவள் சொல்லினுளே.

(இ-ள்.) மேற்கூறிய இவனுடைய தாயார் இலட்சுமிக்கொப்பாகும்; தகப்பனும் திருமாலுக்கொப்பான யோகவானுகும். ஆயினும் இவன் தேவர்களி லொருவனுகும்; ஆச்சரியம் பெற்ற மைந்தனுகும்; அதியோக முடையவன்; ஞாலத்திலுள்ள தெய்வங்கள்மீதும் நாதாக்கள்மீதும் பட்ச முடையவன்; எவர்களுமிவனை மெச்சுவார்கள். எம்பிரானருளால் ஏகாந்தமாக விளங்கும் என உமையவளுரைத்த வாக்காகும் எ-று.

(வி-ரை.) இக்கவியினது முதலில் இவனது தாயானவள் லக்ஷிமியை யொத்தவள் எனவும் பிதாவானவன மிக்க யோகவான் எனவும் கூறியதோடு இப்பாலனுனவன் தேவர்களி லொருவன் எனவும் பெரியோர்கள் மெச்சப் பட்டே இப்பாலன் பிறந்தான் எனவும் மிக்க யோகமுடையவனுவன் என்றனர். இறுதியில் ஸ்ரீ எம்பிரானது கிருபாகடாக்ஷத்தால் ஏகபரஞ்சோதியாயுள்ள உமையவளது கடாக்ஷம் என்றது அறியத்தகுந்தது. 136

சொல்லவே சக்கரத்தின் குலிசமைந்தா
சொற்பெரிய விவன்வயது துலங்கக்கேளு
நல்லவே இவன்றனக் கெழுபத்தைந்தாம்
நலமுள்ள யோகமடா நாடிக்கேளு
அல்லவே இவனுக்கு ஆறுகெண்டம்
அப்பனே சொல்லுகிறே னறிந்துகேளு
வல்லவே இவன்வயது யோகவாழ்க்கை
வரிசைசொல்வேன் மைந்தனே மனதாய்க்கேளு.

(இ-ள்.) சொல்லிய வாக்கின்படி சக்கரத்தின் குலிசரேகைக்கு இவனுடைய வயது என்னவெனில் எழுபத்தைந்தாம். ஆகினும் நன்மையாகிய யோகங்களைக் கேட்பாயாக; இவன்றனக்குக் கெண்டம் ஆறுண்டாம். அதனை விபரமாகச் சொல்லிக்கொண்டு வருகுவேன் கேட்பாயாக எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வயதையும் கெண்டாதி கெண்டத்தையும் யோகத்தையுங் கூறுவாராயினர். அவையாவன வயது எழுபத்தைந்தெனவும்

CuraTech Document Processing Solutions

இதன் மத்தியில் ஆறு கெண்டங்கள் உண்டாகும் எனவும் கூறியதோடு இவனது யோகத்தைப் பின்வரும் கவியாலும் கூறுவேன் கேளும் என்பது கருத்து. 137

கேளப்பா இவன்வயது அஞ்சுக்குள்ளே
 கேவலமாய் மாரிவந்து போச்சுதப்பா
வாளப்பா யிவன்வயது பதினாலுக்குள்
 மகத்தான வாய்வுகெண்டம் வருகும்பாரு
ஆளப்பா இவன்வயது இருபத்தெட்டில்
 அன்பான சத்துருவால் பேயாலுண்டு
பாரப்பா இவன்வயது இருபத்தஞ்சில்
 பாலகனைப் பெற்றபிதா இறப்பான்பாரே.

(இ-ள்.) கேட்பாயாக மேற்கூறிய இவனுக்கு வயது ஐந்திற்குள்ளே அம்மையானது கண்டு விலகும்; வயது பதினாலுக்குள் வாய்வினால் மகத்தாகிய கெண்டம் சம்பவிக்கும்; வயது இருபத்தெட்டிற்குள் அணுகுவது சத்துருக்களாலும் பேயினாலும் கெண்டமாம். வயது அறுபத்தைந்தில் தகப்பன் மரணமாகி விடுவான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டங்கள் முதலியவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, வயது 5-க்குள் வைசூரி கெண்டமும் 14-ல் வாய்வு நோயால் கெண்டமும் 28-ல் பகைவரால் கெண்டமும் உண்டாகும் என்பதாம். மற்றும் இவன் வயது 25-ல் இவன் இறந்து போவான் என்றது கவனிக்கத் தகுந்தது. 138

பார்க்கவே யிவன்வயது முப்பதுக்குள்
 பாலகனைப் பெற்றெடுத்த மாதாசாவாள்
ஏற்கவே யிவன்வயது முப்பத்தாறில்
 ஏற்றமுள்ள நீராலே கெண்டமுண்டு
தாக்கவே யிவன்வயது நாற்பதுக்குள்
 தலைவனால் ராஜபகை சார்வதாகும்
வார்க்கவே யிவன்வயது அன்பத்தஞ்சில்
 வளமான விஷத்தாலே பயமுண்டாமே.

(இ-ள்.) இன்னமும் பார்க்க வயது முப்பதுக்குள் தாயார் மரணமாகுவள். இவன் வயது முப்பத்தாறுக்குள் ஜலகெண்டம் சம்பவிக்கும்; வயது நாற்பதுக்குள் இராஜாக்கள் பகை நேரும். வயது ஐம்பத்தைந்தில் விஷத்தால் கெடுதியுண்டாம் எ-று.

(வி-ரை.) இக்கவியாலு மிவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டம் முதலியவற்றையே கூறுவாராயினர். அவையாவன, இவன் வயது 36-ல்

CuraTech Document Processing Solutions

ஜலத்தால் கெண்டமும் 40-க்குள் ராஜாக்கள் பகையும் 65-ல் விஷபீடையால் கெண்டமுண்டாவதோடு வயது 30க்குள் இவன் தாய்சாவாள் என்றதாம். 139

உண்டாகு மிவனுக்குத் திரையும்யோகம்
உறுதியாய்ச் சொல்லுகிறேன் ஷமந்தாகேளு
நன்றாகு நான்முகனர் வகுத்தவண்ணம்
நடக்குமடா திகைக்காம னன்றாய்க்கேளு
கொண்டாடுங் குமரனிட வருளேமெத்தக்
கோதண்ட ராமனவர் கோபாலன்றான்
வண்டாடும் பூங்குழலா ளம்மைசோதி
வகுத்துரைத்த கட்டளையும் நடக்கும்வாழ்வே.

(இ-ள்.) உண்டாவதுடன் இவனுக்கு திசையும் யோகமும் உறுதியோடு சொல்லுகிறேன் கேட்பாயாக. இவனுக்கு அன்று நான்முகன் வகுத்த வண்ணம் நடக்குமாதலால் அன்றியும் கொண்டாடும்படியான குமரனுடைய அருளானது மெத்த உண்டாகும். ஸ்ரீ கோதண்டராமனுடைய கிருபையு முண்டாகும்; இவனுக்கென உமையாள் உரைத்தபடி நடக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னை எனின், இவன் பூர்வத்திற் செய்த புண்ணிய வசத்தால், நான்முகனல் யிவாது கையில் உத்தம ரேகை யமையப் பெற்றதுடன் குமரக் கடவுளது கிருபா கடாக்ஷம் பொருந்தியவனும். ஸ்ரீ ராம மூர்த்தியினது கிருபா கடாக்ஷ முடையவனும் திருவம்மையார் கிருபையில் சகல வாழ்வையும் அடைவான் என உமாதேவியார் கூறினர் என்பதாம். 140

வாழுவே யிவன்பிறந்த வாறுமாண்டில்
வளமையுள்ள வில்லத்திற் பொருள்களெல்லாம்
தாழுவே செய்துவைத்தான் மைந்தன்றானும்
தாட்டியங்கள் குறையவைத்தான் பிதாவையப்பா
மாளவே பொருளெல்லாம் வாரிமைந்தன்
வையகத்திற் செலவுதனை செய்தான்பாரு
ஆளவே யில்லத்தி லதிகமாக
ஆக்கிவைத்தான் மைந்தனிட அருமையாலே.

(இ-ள்.) வாழும்படியாக மேற்கூறிய பாலன் பிறந்த ஆறும் வருடத்தில் வளமையாகிய இல்லத்திலுள்ள பொருள்கள் யாவும் தாழ்வாக யிவனாற் போகும்; தகப்பனுக்குத் தாட்டீகமானது குறையும்; ஒழியும்படியாகப் பொருள்களை வாரிச் சிலவிடுவன்; ஆளும்படியாகிய இல்லத்தில் அதிக கஷ்ட முண்டாக்கியவ னிவனகும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த ஆறாம் வயதில், தன் கையிலிருந்த தனம் எல்லாவற்றையும் சிலவுசெய்துவிட்டுப் பிதாவினது பலத்தைக் குறைய

வைத்தானுயினும் பிற்காலம் யிவனது ரேகையமைப்பால் ஆயிரம் பங்கு அதிகமாயின என்பதாம். இதன் விவரம் பின்வருவனவற்றால் கூறுகின்றனர். 141

அருமையா யிவன்பிறந்த பத்தாமாண்டில்
ஆச்சரிய முமையவள்தா னனுக்கிரகிப்பாள்
பெருமையா யிவன்பிறந்த விருபத்தைந்தில்
பிரபலங்க ளனேகமதாய் நடக்கும்பாரு
அருமையா யிவன்பிறந்த விருபத்தாறில்
தாட்டிகனு மண்ணாளுந் தகமேவெசெய்வான்
உருமையா யிவன்பிறந்த பதினாறுக்குள்
உற்றதோ ருறவுவந்து கூடுமென்றே.

(இ-ள்.) அருமையாக இவன் பிறந்த ஐந்தாம் வருடத்தில் உமையவள் அனுக்கிரகிப்பாள். இருபத்தைந்தாம் வயதில் அதிசப் பிரபலம் நடக்கும். இருபத்தாறும் வயதில் தாட்டீகனுகவும் மண்ணாளுந்தகமை யள்ளவனுக யிருப்பான்; பதினாறும் வருடத்தில் உறவானது அதிகமாக வந்து கூடும் எ-று.

(வி-ரை.) முன் சொன்னபடி இவன் வயது 6-ல் சகலமும் துலைந்து போனதாயினும் பின்பு எவ்வண்ணம் மேற்படி யோகம் உண்டாகின்றன என்பதைக் கூறுகின்றனர். அதாவது இவன் வயது 10-லேயே உமையாள் கடாக்ஷம் உண்டாகும். 25-முதல் பிரபலயோகமாய் நடக்கும். 16-ல் சகல பந்துக்களும் வந்து சேர்வர். 26-ல் மிக்க பிரபலமுடையவனுகி மண்ணாளத் தகுந்தவனுவன் என்பதாம். 142

கூடிடவே சக்கரத்தின் குலிசமானல்
குலமான ரேகையடா மைந்தர்க்கப்பா
நாடிடவே யிவன்யோக வாழ்க்கைமைந்தா
நலமான குலிசமடா நாடிக்கேளு
பாடிடவே பரமனிட அருளாலேதான்
பாக்கியங்கள் வந்தமென்று பலிதஞ்சொன்னேன்
தேடிடவே யுமையவள்வந் திருப்பாள்பாரு
செப்பரிதாய்ப் பிறந்ததிந்த மைந்தன்றானே.

(இ-ள்.) கூடுமென்பதற்குச் சக்கரத்தின் குலிசமாகின் குலமான ரேகையாகும். பாலனுக்கு நாடிடும் யோகவாழ்க்கை யாதெனில் நன்மையாகிய குலிசத்தின் வலுவால் பரமனுடைய அருளானது பெருஞ் பாக்கிய முதலானதும் வந்து வாய்த்தனவாம்; இந்த மைந்தனுக் கருள்புரியும்படியாக உமையவள் வந்து பாதுகாப்பாள்; இவன் சொல்லுதற்கரிதாக வந்து பிறந்தோனாகும் எ-று.

(வி-ரை.) சக்கரக் குலிசரேகை என்பது தன் கையில் அமைந்திருக்குமேயாமானல் மற்றெல்லா காரண காரியங்களுக்கும் குலிசமேயாகும்.

CuraTech Document Processing Solutions

பரமனது கிருபாகடாக்ஷத்தால் இவன் இல்லத்தில் எக்காலமும் இலக்குமி தேவியானவள் குடியிருந்து வாழ்வாள் என்பதாம். 143

மைந்தனுப் பிறப்பதென்றால் குலிசம்வேண்டும்
மகத்துவங்கள் வேண்டுமென்றால் விஷ்க்கம்பம்வேண்டும்
சிந்தனைக ளில்லையடா மைந்தாசொல்வேன்
சீக்கிரத்திற் சிவபூசை சிறக்கச்செய்நீ
தந்தையொடு தமையனையும் வைத்துப்பேணு
நாட்டியற்கு மிகவாழ்வு தனஞ்செயன்றான்
சொந்தமடா வுமையவளும் பெற்றதாயும்
சோதியா மனோன்மணியாற் றுலங்கிட்டேனே.

(இ-ள்.) பூமியின்மீது மைந்தனைப் பிறப்பதற்கு குலிசமானது வேண்டும். மகத்துவம் வேண்டுமாகின் விஷ்க்கம்பம் வேண்டும்; அன்றியும் சிந்தனைகள் இல்லாமற் சொல்வேன்; ஆதலால் சீக்கிரத்தில் சிவபூசையானது சிறப்பாகச் செய்குவாய். தந்தையோடு தமயனையும் வந்து காப்பாய், நாட்டியாகத் தனஞ்சயன்போல் வாழ்குவாய், என உலக மாதாவாகிய உமையவளுரைத்த வாக்கிது உண்மையாக நம்பவும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் சகலசம்பத்தும் அடையவேண்டுவதென்றால் குலிசரேகையே வேண்டும் எனவும் சகலதேசத்திலும் கீர்த்தியுடனிருக்க வேண்டும் என்றால் விஷ்கம்பரேகை வேண்டும் என்றது அறியத்தகுந்தது. மற்றும் இப்படிப்பட்டவர்கள் வாலைத் தேவியைப் பூஜைசெய்வாராயின் தாய் தந்தை சகோதரர் இவர்களுக்கு எவ்வித குறைவுமின்றி லக்ஷிமி யருள் பெற்று வாழ்வர் என்பதாம். 144

Luratech Document Processing Solutions

துலங்கிடவே யிவன்வயதோர் முப்பத்தாறில்
தூய்மையுள பொன்னாரங் கொள்வான்பாரு
அலங்கிடவே யிவன்றானும் ராஜசேவை
அன்பாகச் செய்துலகில் வருவான்பாரு
பலங்கிடவே யிவன்வயது முழுதும்மப்பா
பாக்கியங்கள் பெற்றிவன்றான் வாழ்வான்பாரு
நிலங்கிடவே யிவனுடைய முச்சனனவாழ்க்கை
நிகழ்த்துகிறேன் மைந்தனே நினைவாய்க்கேளே.

(இ-ள்.) துலங்கிய மேற்கூறிய இப்பாலனுக்கு வயது முப்பத்தாறில் ஆடையும் பொன்னாரமும் கொள்வான். அன்றியும் இராஜசேவை அன்பாகச் செய்துவருவன். இவனுடைய வயது முழுதுக்கும் பாக்கியங்கள் பெற்று வாழ்குவன்; ஆகினும் இவனுடைய முன்ஜனன வாழ்க்கைதன்னைச் சொல்லுகிறேன் அதனை நினைவாய்க் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலு மிவனது யோகம் வாழ்வு முதலியனவற்றையே கூறுகின்றனர். அவையாவன, 36-ஆம் வயதிலேயே அழகாகிய ஆடை பூணாரம் முதலியனபெற்று சகலபாக்கியமும் உடையவனாகி அரசாள்வான் என்பதாம். 145

கேளுங்கள் முனிவர்களே யீங்கவன்றன்
   கேவலமா முன்ஜனன வாழ்க்கைதானும்
வாழுங்க டேவர்களே யிவனைவாழ்த்து
   வளமான மைந்தனிவன் அங்காளிற்றான்
ஆறுங்க ளாண்டவனார் பாதந்தன்னில்
   அம்பாளைப் பூசைசெய்த வருமையாலே
தாறுங்க ளீஸ்பரனார் மனமுவந்து
   சமைத்துவிட்டா ரிதுகாட்சி செய்யுதற்கே.

(இ-ள்.) கேளுங்கள் முனிவர்களே: இவனுடைய முன்ஜெனன வாழ்க்கையைச் சொல்வேன் இவன் கபடநாடகனாக வாழ்ந்து அங்காளிருக்கும் போது ஆண்டவனுடைய பாதமதிற் பக்தியாகியும் அம்பாளைப் பூஜை செய்து வரும் அருமையாலும் பரமேஸ்வரனார் மனமகிழ்ந்து உலகாட்சிச் செய்யும் படியாகவும் சமைத்தார் எ-று.

(வி-ரை-) இக்கவியா லிவனது முற்சனன வாழ்வினைக் கூறுகின்றனர். அவையாவன, இவன்றனது முன்சனனத்தில் மகாவிஷ்ணுவினது அருளாற் றோன்றியவனாயினும் ஸ்ரீ சாக்ஷாத் சிவனையும் அம்பிகா தேவியையும் பூஜை செய்த மகுத்துவத்தால் இச்சனனத்தில் இவன் இவ்வுலகினை யாகஷி செய்வதற்கே இவனைப் பிறப்பித்தனர் என்பதாம். இவற்றின் சிறப்பினைப் பின் வருங் கவியாற் கூறுகின்றனர். 146

செய்யவே யிவன்றான்முற் சனனந்தன்னில்
   செப்பரிய பிராமணன்றா னுகுமப்பா
ஐயமில்லை சிவனுக்குப் புட்பஞ்சாற்றி
   அன்புமிகச் செய்ததினால் மனதிரங்கி
உய்யவே பூமியிலே பிறந்துவந்தான்
   உற்றதொரு மைநாகம் பிறந்தமைந்தன்
வையகத்தி லீஸ்வரியாள் கோயில்புக்கி
   வளர்ந்துமவன் வரங்கொண்ட மனிதனாகும்.

(இ-ள்.) செய்யும்படியாகிய செபமாவது யாதெனில், இவன் முன் ஜென்மந்தன்னில் பிராமணனாகும். இவன் ஐயமில்லாமல் சிவபெருமானுக்குப் புஷ்பஞ்சாற்றி அன்பு செய்துவந்ததினால் பரமன் மனமிரங்கிக் கடாட்சித்த படியால் பூமியின்மீது பிறந்து வந்தான்; இவன் மைனாகத்தி னிடமாகத்

LuraTech Document Processing Solutions

தோன்றி வையகத்தினிடமாக ஈஸ்வரியாள் கோயிற் புக்கிவளர்ந்தும் வரங்கள் பெற்றும் மனிதனைப் பிறந்தானுகும் எ-று.

(வி ரை.) மேற்கவியிற் சொல்லிய விவரத்தினை இங்கு எடுத்துக் கூறு வாராயினர். அவையாவன, இவன் தனது முன்சனனத்தில் பிரம்ம குலத்திற் பிறந்து, சிவபிரானுக்கு மிக்க அன்புடன் புட்பம் சாற்றிவந்ததால், பரமேஸ்வரி யினது ஆலயம் சென்று இவ்வண்ணம் வரங்கேட்க, அவர்களும் மனமுவந்து இவ்வாறு நல்ல ரேகை யமைய இப்பூமியிற் பிறந்தான் என்பது கருத்தாம். 147

மனிதனென்றாற் பூர்வத்திற் பாக்கியசாலி
  மானிலத்திற் பிறந்துவந்தான் யோகங்கூடி
கனிமொழியா ளுமையவள் தான் தானதர்மம்
  காட்சிதன்னைக் கொடுத்திவனைப் பிறப்பித்தாள்பார்
இனிதயம்போ லிவனுடைய வாண்மைமெத்த
  இன்னவன் தான் மாயவன்றன் பாதத்துளாம்
பணிமுதலாம் பாலகர்க்கு முதவியுண்டாம்
  பாக்கியமாம் நிதியிரண்டு மெடுப்பான்பாரே.

(இ-ள்.) மனிதனைத் தோன்றினும் பூர்வத்தில் யோகசாலியாக விருந்து பூமியின்மீது பிறந்தான். அன்றியும் யோகமானது கூடி கனிபோன்ற மொழியி னுடைய உமையாள் இவனை தானதரும முதலானதுஞ் செய்துவரும்படியா கக் காட்சியானது கொடுத்து இவனைப் பிறப்பித்தாள்; இவனுடைய ஆண் மையானது மெத்த வுண்டாகும். இவன் மாயவனுடைய பாதனாகப் பணிந்தேற்றுவான்; யாவருக்கும் உதவியுள்ளோனுகுவன்; பாக்கியவானுய் நிதியானது இரண்டு எடுப்பான் எ-று.

(வி-ரை.) இதனை லிவனது பெருமையினைக் கூறுவாராயினர். அவை யாவன, இவன் தனது முன் சனனத்தில் விஷ்ணுவினது பாதத் தூளியாகு மாயினும், அவன் மேற்படி பூவர்த்திற் செய்த புண்ணிய வசத்தால் சகலமு முண்டாகக் கடாக்ஷித்து இப்பூமியின்கண் பிறக்கச் செய்ததால், இவன் சனித்த பின்பு இரண்டு தனப் புதையலினை எடுத்தான் என்பதேயாகும். 148

பார்க்கவே நிதியிரண்டு மெடுத்தபாலன்
  பைங்கொடியா ளுதவியினுல் பாக்கியவானும்
ஏர்க்கவே யிவனுடைய பிதாவோமைந்தா
  இயல்பான தேவரிலே யொருவனப்பா
கார்க்கவே யிவனைத்தான் காளகண்டர்
  கடாட்சித்தார் முன்செய்த புண்யத்தாலே
வார்க்கவே வைகுந்தன் வச்சுதன்றன்
  வகையான மயேந்திரம்போல் வாழ்ந்தானன்றே.

UraTech Document Processing Solutions

(இ-ள்.) பார்க்கும்படியாக நிதிகள் இரண்டும் எடுத்தபாலன் அம்பாளுடைய கிருபையினால் பாக்கியவானாகுவன்; இவனுடைய பிதாவானவன் தேவர்களில் ஒருவனாகும். இவனைக் காக்கும்படியாகக் காளகண்டராகிய சிவபெருமான் கடாட்சித்தார். முன்செய்த புண்ணியத்தினாலும் அச்சுதன் போல் மயேந்திரரேகையுண்டாகி வாழ்ந்திருப்பன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், இவன் தான் முன் செய்த புண்ணிய வசத்தால் காளகண்ட மூர்த்தியானவர் இவ்வாறு கடாக்ஷித்தருளினார் எனவும், வைகுந்த வாசனது கிருபையாலும், பூர்வத்திற் செய்த புண்ணிய வசத்தாலும், இவ்வாறு இரண்டு தனப் புதையலை எடுத்துக் குபேரனை யொத்தவனாகி வாழ்ந்தான் என்பது கருத்தாகும். 149

குலிசை ரேகையின் பலன்

அன்றெனவே சக்கரத்தின் குலிசைமைந்தா
ஆச்சரிய மிதனுடைய அருமைசொன்னேன்
நன்றெனவே நான்முகனுங் கும்பமூர்த்தி
நவில்வேத வியாசமுனி நயந்துகேட்டார்
குன்றெடுத்த கோபாலர் கோமூர்நந்தீசர்
குவலயத்திற் படைத்ததெனுங் கூறுகேட்டார்
நன்றெனவே நாதாக்கள் முனிவோரெல்லாம்
நாகரிக உமைபாத நாடினாரே.

(இ-ள்.) சக்கரத்தின் குலிசை ரேகையினை ஆச்சரியமாக அதனுடைய அருமையைச் சொன்னேன்; அதனை நான்முகனும் பரமமூர்த்தியும் வேத வியாசரும் கேட்டார்; அத்துடன் கோபாலரும் நந்திதேவரும் இவர்கள் கூடி குவலயத்தில் படைத்தது என்ன எனக்கூறுமென்று கேட்க, அப்போது நன்றென நாதாக்கள் முனிவர்கள் இவர்களெல்லோரும் உமையவளின் திருப்பாதத்தை நாடினினர் எ-று.

(வி-ரை.) இதுவரையிற் கூறிவந்த கவியால் சக்கரக்குலிச ரேகை என்பதின் விருத்தாந்தம் அனைத்தையும் சொன்னேன். இவை எதற்காய் கூறினேன் எனின், பிரமன் அகத்தியர் வியாசர் முதலியவர்களும் மற்றுமுள்ள முனிவர்களும் நாதாக்களும் விஷ்ணுவின் அமைப்பென்னவெனக் கேட்க இதன் விருத்தாந்தத்தைக் கூறியதால் அனைவரும் உமையினது திருப்பாதகமலங்களைக் கூறினார் என்பது கருத்தாகும். 150

சங்கபாலி ரேகையின் பலன்

நின்றிடவே யின்னமுந்தான் சங்கபாலி
நிகழ்த்துகிறேன் முனிவர்களே நினைவாய்க்கேளீர்
நன்றிடவே யிதுவித்தாம் யோகமாகும்
ராஜாதி ராஜர்களும் நடுங்குவார்பார்

சென்றிடவே மயேந்திரத்தி லேறிநிற்கும்
செகத்திலே கேசரியின் பலன்களாகும்
மன்றிடவே வாலேசுப்பிர மண்ணியயோகம்
வாகான தெய்வசித்தி யாகும்பாரே.

(இ-ள்.) அப்படி நின்ற முனிவர்களைப் பார்த்து உமையவள் சொல்லத் தொடங்கினள். கேளுங்கள் முனிவர்களே! இந்தவிதமாகிய யோகமாகும். இவனைக்கண்ட இராஜாதி ராஜர்களும் நடுங்குவார்கள்; இது மயேந்திர ரேகையின்மீது ஏறி நிற்கும்; அது கேசரியின் பலனாகும், வாலை சுப்பிரமண் ணியருடைய யோகம் பலிக்கும். தெய்வசித்தி புண்டாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் சங்கபாலி ரேகையினது பலாபலன்களைக் கூறுவா ராயினர். அவையாவன. ஓ முனிவர்களே சங்கபாலி ரேகை என்பது தன் கையிலமைந்திருப்பது யோகத்திற்கு வித்து இந்த ரேகை யமைந்திருக்கப் பெற்றவர்களுக்கு அரசர்களும் பயப்படுவர் என்றனர். இதுவன்றி இந்த ரேகை யானது, மயேந்திர ரேகையிலேறி நிற்குமெனவும் இவனுக்கு சுப்ரமண்ய யோகமும், சகல தெய்வ சித்தியும் உண்டாவதுடன் கேசரி ரேகைக் குரிய பலாபலன்களே இதற்குண்டாகும் என்றனர் இதன் விவரத்தினைப் பின்வருங் கவியால் விளக்குவாராயினர். 151

பார்க்கவே சங்கனிடப் பாலிஎன்ற
பண்பான ரேகையிடப் பலன்சொல்லக்கேள்
ஏர்க்கவே யிவன்கையி லிருக்குமாகில்
என்னப்பா இவன்யோகம் இயல்பாகத்தான்
கார்க்கவே இவன்பிறப்போ ராறுபேரும்
கருணையால் பிதாவர்க்க மெல்லாம்போகும்
ஆர்க்கவே யிவன்வயது பதினைந்துக்குள்
அன்பான பாலகனும் மயங்குவானே.

(இ-ள்.) பார்க்க சங்கபாலி ரேகையின் பலன் சொல்லுவேன் கேட்பாயாக. அவ்விரேகை கையிலிருக்குமாயின் அவனுடைய யோகத்தை யென்ன சொல்வேன். இவனுடன் பிறந்தோர் ஆறுபெயராகும்; அன்றியும் பிதாவி னுடைய வர்க்கம் யாவும் போகும். இவன் தனக்கு வயது பதினைந்துக்குள் இப்பாலன் மயங்குவான் எ-று.

(வி-ரை.) இக்கவி முதல் மேற்படி சங்கபாலி ரேகையினது பலாபலன் களைக் கூறுகின்றனர். அவையாவன. இவனுக்கு உடன் பிறப்பு ஆறு. பிதுர் வர்க்கத்தாரனைவரும் நாசமாவர். வயது 15-க்குள் சில கஷ்டமுண்டாகுமாயி னும் இவனது யோகத்தைச் சொல்லமுடியாது என்பதே யாகும். இவற்றின் விவரத்தைக் கீழ்வருங் கவிகளாற் கூறுவர். 152

LuraTech
Document Processing Solutions

வானெனவும் இவன்வயதோ ரிருபதுக்குள்
வங்கிசத்தில் உள்ளவர்கள் எல்லாம்சாவார்
நானெனவும் காட்சிபெற்ற மைந்தனாகும்
கருணையுள்ள பாலகனாம் இவன்தானப்பா
தேனெனவும் சோதியிலே முளைத்தகூட்டம்
செப்புதற்கு இவன்யோக வாழ்க்கைமைந்தா
மானெனவும் வையகத்தில் ஒப்பாரில்லை
வந்ததடா திசையோகம் வளமையாமே.

(இ-ள்.) மேற்சொன்ன இவன்றனக்கு வயது இருபதுக்குள் இவனுடைய வங்கிசத்திலுள்ளவர்கள் யாவரும் மரணமாகி விடுவார். காட்சியானது பெற்ற மைந்தனிவனாகும். கருணையுள்ளவன். சோதியில் முளைத்த கூட்ட மாகும். இவனுடைய யோகவாழ்க்கை உலகத்தில் ஒப்புவார்களில்லை வருகும் திசையை எ-று.

(வி-ரை.) இக்கவியால் இந்த ஜாதகன் ஜனித்த வருஷம் 20-க்குள் எல்லோரும் மரணமாவர் எனவும், இவன் சுவாதி நக்ஷத்திரத்திற் பிறந்தவனும் அனைவருங் கூறத் தகுந்த யோகமும் வாழ்க்கையு முடையவனுமாகும் என்றதுடன், இவனுக்குண்டாகும் யோகத்திற்கு இப்பூமியின்கண் மற்றெவரையும் இணை சொல்லவுங்கூடாதெனக் கூறியதோடு மிக்க கருணையுடையவனும் ஆவன் என்றனர். 153

LuraTech Document Processing Solutions

வளமையடா சொல்லுவென்றால் அனேகதொல்லை
வந்ததடா இவன்றனக்குத் தன்மையாக
இளமையடா பருவத்தில் சனிதொடர்ந்து
எளிதாக நீங்கியல்லோ இனியதாச்சு
பழமையதாம் யோகமது இருபத்தாறில்
பாக்கியங்கள் வந்ததடா அன்பத்தைந்தில்
நிலைமையதாம் அஷ்டதிக்கு எட்டிலேதான்
நிலையான நிதியொன்று கிடைத்ததன்றே.

(இ-ள்.) வளமையாக இன்னமுஞ் சொல்வேன் கேட்பாயாக, இவன் றனக்கு அனேகத் தொல்லையாகும். அதாவது, இளமையாகிய பருவத்தில் சனி தொடர்ந்து, அது நீங்கி இனிமையானது உண்டாச்சு. பழமையாகிய யோகம் இருபத்தாறில் வந்த நிதிபாக்கியம். அன்பத்தைந்தாம் வயதில் வந்தனாகும்; நிலைமையாகிய அஷ்டதிக்கு யெட்டிற்குள் நிதியானது ஒன்று கிடைக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்த பிறகு இளம் பிராயத்திலேயே சனி தொடர்ந்து அதன்பயனாய் அனேக தொல்லைக ளுண்டாயினவெனினும்

பிற்காலத்திலேயே சுகப்பட்டான். அவையாவன சகல பாக்கியங்களையும் தன் வயது 26-ல் பெற்றனன் என்பதாம். இதுவன்றி திக்குகள் எட்டினுள் ஓர் திக்கில் புதையற் பொருளும் கிடைத்தன என்பதாகும். 154

அன்றெனவே இவனுக்குப் புத்திரர்கள்எட்டு
ஆச்சரியம் பெற்றமக்கள் அதிகயோகம்
நன்றெனவே யிவன்வயதோ ரெழுபத்திரண்டு
நலம்பெறவே பரமபதம் அடைகுவான்பார்
இன்றெனவே யிவனுக்கு அன்னம்பாலும்
இஷ்டமொன்றும் இல்லாமல் இருந்துவாழ்வான்
மன்றெனவே இவன்தாரம் திருமால்மங்கை
மாயவனார் சட்டளையின் காரணமாமன்றே.

(இ-ள்.) அன்றியும் புத்திரர்கள் எட்டுண்டாகும்; அவர்களால் அதிக யோகமுண்டாகும்; யிவன்றனக்கு வயது எழுபத்திரண்டாகும்; அதற்குள் அவன் பாமபதமடைகுவன்; இன்னோனுக்கு அன்னமும் பாலும் இஷ்டமொன்று மில்லாமல் வாழ்வன், யிவனுடைய மங்கைத் திருமாலுக் கொப் பாகும்; இதுகளெல்லாம் மாயவனுடைய சட்டளையாகும் எ-று.

(வி ரை) இக்கவியால் இவனது மனைவி புத்திரர் வாழ்க்கை வயது முதலியவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இவனது மனைவி இலக்குமியை யொத்தவளும், எட்டு புத்திரர்களை யுடையவனும், மேற்படி புத்திரர்களும் மிக்க யோகமுடையவர்களாவார் என்றதும், இந்த ஜாதகனுக்குப் பூரண வயது 72-எனவும், மேற்படி 72-வயது வரையில் பால் அன்னம் என்னுமிவற்றில் விருப்பமில்லாமலே வாழ்வான் என்பது கருத்தாகும். 155

ஆக காண்டம் 2-க்கும் பாடல்-155.

மூன்றுங் காண்டம்

சாத்மீக ரேகையின் பலன்

காரணமாம் சாத்மீக ரேகைமைந்தா
காட்சிபெறச் சொல்லுகிறேன் கருணைகூர்ந்தே
வாரணமாம் புத்திரனைப் பெற்றமாதா
வாலைமனோன் மணித்தாயை வணங்கினேன்யான்

LuraTech Document Processing Solutions

பூரணமாம் பராபரையின் பாதங்காப்பு
புகலரிய தேவர்களின் பாதங்காப்பு
நாரணனோ டயனிருவர் பாதங்காப்பு
நந்தியெனும் மீஸ்வரனார் பாதங்காப்பே.

(இ-ள்.) காரணமாக விளங்கிய சாத்மீக ரேகையின் காட்சியைச் சொல்ல கருணையானது கூர்ந்து யானைமுகனையும், அறுமுகனையும் பெற்ற மாதாவாகிய வாலை மனோன்மணித் தாயை வணங்கியும், பூரணமாகிய பராபரியின் பாதம் போற்றி, தேவர்களின் பாதம் வணங்கி, ஆயனோடு அயன்பதம் போற்றி நந்தீஸ்வரர் பாதங்காப்பாகப் போற்றிச் சொல்லுவேன் எ-று.

(வி-ரை.) சாத்மீக ரேகையிற் பிறந்தவர்களது பலாபலன்களைக் கூறு தற்கு விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த உலக மாதாவையும், பிரமன்-விஷ்ணு - பராபரை - தேவர்கள் - நந்தீஸ்வரர் ஆகிய இவர்களது பாதகமலங்களைக் கும்பிட்டுக் கூறுகின்றனம் என்பதாம். 1

காப்பென்ற சாத்மீக ரேகைமைந்தா
கைகளிலே இருந்தாக்கால் கருணைகேளு
வாப்பென்ற ஐந்துபுள்ளி ரெண்டுரேகை
வகையாகச் சிறுகீறு இருக்குமப்பா
தாப்பென்ற மயேந்திரம்போல் ஏறித்தானே
சகமுழுதும் புகழ்தரவே இருக்கும்பாரு
ஏப்பென்ற இவன்தனக்கோ யோகவாழ்க்கை
என்னசொல்வேன் சொல்லரிது மைந்தாகேளு.

(இ-ள்.) காப்பாகத்தானே காத்தைப் பார்க்கும்போது சாத்மீக ரேகையானது தோன்றியிருக்கும். அது எவ்விதமிருக்குமெனில்? ஐந்து புள்ளியும் இரண்டு ரேகையுமாக அத்துடன் சிறு கீறுமாக விருக்கும். அது மயேந்திரம் போல் ஏறி இருக்கும். அவ்வித ரேகையுடையோன் ஜெகமுழுதும் புகழானது தருகும்படியாக வாழ்குவன். யோகமும் வாழ்க்கையும் சொல்லுதற்கரிதாகும். எ-று.

(வி-ரை.) இக்கவியின் முதலில் சாத்வீக ரேகை என்பது எவ்வண்ணமிருக்கும் என்பதைக் கூறுவாராயினர். அவையாவன, இரண்டு ரேகைகளும் ஐந்து புள்ளிகளும் மற்றும் சிலக் கீற்று ரேகைகளு மாயிருக்கு மென்பதாம். அவை, முன்சொன்ன மயேந்திரரேகை போன்று இருக்குமாதலால் இவனது யோகம் வாழ்வு முதலியவற்றை என்ன சொல்வேன் என்பது கருத்தாகும். 2

மைந்தனே யிவன்பிறந்த மனையிலேதான்
வளமாக யிவன்பிறக்கும் அந்தவேளை
கந்தனைத்தான் பெற்றெடுத்த கயிலாநாதர்
கருணையது கடாட்சிக்கக் கருணையானன்

வந்ததிவன் இருமனையில் தென்பால்வீட்டில்
வாழவே பிறந்தான்காண் சுக்கிரவாரம்
சிந்தனைக ளில்லாமல் செல்வத்தோடே
செப்புகிறேன் உதயமதில் பிறந்தானன்றே.

(இ-ள்.) மேற்கூறிய மைந்தன் பிறந்த மனையில் அந்த வேளையில் கந்தனை யீன்ற கருணைக்கடலாகிய சிவபெருமான் அப்போது கடாட்சிக்க ஜெனனமானான். பிறந்த மனையானது இருபால்; அதில் தென்பால் வீட்டில் வாழும்படியாக வந்தான். அன்றியும் சுக்கிரவாரத்தில் சிந்தனைகள் யாதுமில்லாமல் செல்வத்தோடு உதையகாலத்தில் ஜெனனமாகி வந்தோனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின்? இருமனையாயுள்ள இடத்தில், தென்வாயிலில், சுக்கிரவாரம் உதையத்தில் பிறந்தவன் எனவும், இவன் பிறந்தது கைலாயநாதற் கிருபையால் சகல செல்வமும் உண்டாகும்படிக்குக் கடாக்ஷிக்கப் பிறந்தனன் என்பது கருத்தாகும். 3

அன்றெனவே யிவன்பிறக்கும் போதில்மைந்தா
அன்பான பிதாதனது வீட்டிலில்லை
குன்றெனவே யிவன்பிறந்த நாலாமாதம்
குலமான பிதாவுக்கு யோகமுண்டாம்
நன்றெனவே யிவன்யோகம் மிகவாமப்பா
நலமான தெய்வத்தை நாடிநிற்பன்
மன்றெனவே யிவன்பிறந்த ஆறுமாதம்
வளமான புதுமனையும் எடுக்கலாச்சே.

(இ-ள்.) மேற்கூறிய பாலன் பிறக்கும்போது அவன் பிதா அந்த வீட்டிலில்லை; இவன் பிறந்த நாலாவது மாதம் பிதாவினுக்கு யோகமுண்டாம் அதில் இவனுடைய யோகம் மிகவும் நன்மையாகும்; தெய்வத்தை நாடி நிற்பன். இவன் பிறந்த ஆறாவது மாதம் புதுமனை எடுத்துக்கட்டி வாழ்குவார்கள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின்? இவன் ஜனிக்கும்போது இவன் பிதா இவன் வீட்டிலில்லை எனவும், இவன் ஜனித்த நான்காம் மாதமே இவன் பிதாவுக்கு யோகம் உண்டாயினவென்றும், 6-ஆம் மாதத்தில் புதிய வீடு ஒன்று கட்டினான் எனவும், தெய்வபக்தியை யுடையவன் என்பதே இதனது கருத்தாகும். 4

ஆச்சப்பா யிவனுக்குக் கண்டமைந்து
அன்பான பாலனை அறிந்துசொன்னோம்
வாச்சப்பா யிவனுக்குத் தாரம்ரெண்டு
வையகத்தில் யிவனைப்போல் புண்ணியசாலி

LuraTech Document Processing Solutions

கோச்சப்பா யிவன்வயதோ பதினெட்டாண்டில்
　கொற்றவர்க்கு விவாகமது ஆச்சுதன்றோ
வீச்சப்பா யிவன்வயதோ ரிருபத்தெட்டில்
　மேன்மையாம் யிவனுக்கு விவாகமன்றே.

(இ-ள்.) அப்படிக்கு வாழ்கினும் இவனுக்குக் கெண்டம் ஐந்துண்டாகும்; அதுவுமன்றி இவனுக்குத் தாரம் இரண்டாம்; ஆயினும் இவன் பூமியின்மீது மிகவும் புண்ணியசாலியாகும். இவன் தனக்கு பதினெட்டாவது வயதில் விவாகமாகும்; இருபத்தெட்டாம் வயதில் இரண்டாவது விவாகமாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்கு மனைவிகள் இரண்டெனவும், அவற்றுள் முதல் விவாகமானது 18-லும், இரண்டாம் விவாகமானது இருபத்தெட்டிலும் என்றனர். மற்றும் இவனுக்கு கெண்டாதிகெண்டங்கள் 5 எனவும், இவனைப் போன்ற புண்ணியவான்களில்லை எனவுங் கூறியது அறியத் தகுந்தது. 5

அன்றேதான் யிவனுக்கும் புத்திரன்பத்து
　அப்பனே பிறக்குமென அறிந்துசொன்னோம்
நன்றெனவே யிவன்பிதா வுடன்பிறந்த
　நலமான உடற்பிறப்போ ராறுபேராம்
குன்றெனவே யிவன்பிறவி பதின்மூன்றுகும்
　குறித்துரைப்பேன் ஆண்யெட்டு பெண்தான்நாலு
நன்றெனவே யிவன்தானும் ஆறும்பேராம்
　நலமான யிவன்வயதோ ரெழுபத்தைந்தே.

(இ-ள்.) மேற்கூறிய இவனுக்கு புத்திரர்கள் பத்துண்டாகும்; இவன் பிதாவுடன் பிறந்த உடன்பிறப்பு ஆறுபெயராகும்; இவனுடன் பிறந்தோர் பதின்மூன்று பெயராகும்; அதில் ஆண் எட்டு, பெண் நாலாகும்; அதிலிவன் ஆறுவது பிள்ளையாகும்; இவனுக்கு வயது எழுபத்தைந்தாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்ன எனின், இவனுடன் பிறந்தவர் 13 பேர் எனவும், அவற்றுள் யிவன் ஆறும்பிறவி எனவும், மொத்தத்தில் ஆண் எட்டு, பெண்கள் 4 எனவுங் கூறுவாராயினர். இதுவன்றி இவன் பிதாவுடன் பிறந்தவர் அறுவர் எனவும், புத்திரர்கள் 10 எனவுங் கூறியதும் வயது 75 என்பதும் கருத்தாகும். 6

ஐந்தான பரிசுத்த ரேகைமைந்தா
　அன்பான பாலகனே அறியச்சொன்னேன்
மைந்தான முக்கவரின் வட்டம்போலாம்
　மகத்தான ரேகையது வெறுமையாகும்

LuraTech Document Processing Solutions

நிந்தான யிவனுக்குப் பிறந்துவந்த
நீணிலத்தின் வருடம்தான் ஒன்றுக்குள்ளே
மன்ருன தாய்தந்தை கொன்ருன்பாரு
வண்மையாம் அவன்வெறுமை ஆனுனன்றே.

(இ-ள்.) பரிசுத்தமாகிய ரேகையை அன்போடு அனைவர்களும் அறியச் சொன்னேன். அதாவது முக்கவரின் வட்டம்போல் தோன்றும்; அதின் பலன் வெறுமையாகும்; இவன் பிறந்துவந்த ஒருவருஷத்திற்குள் தாய் தந்தையர்கள் இறப்பார்கள்; அதன்பின்பு இவன் வறுமைப்படுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னே எனின், ஷெ ரேகையானது முக்கவர் வண்ணம் போன்ற தன்மையாயிருக்கும். இதன் பயனும் இந்த ஜாதகன் பிறந்த வருடம் ஒன்றுக்குள் தாய் தந்தையர் ஆகிய இருவரையும் கொன்று ஏகனுய்த் தனித்து நின்றனன் என்பது கருத்தாகும். 7

காப்பிலி ரேகையின் பலன்

ஆனதென்ன காப்பிலியின் ரேகைமைந்தா
அப்பனே யிவன்கையில் இருக்குமாகில்
தானதென்ன யிவன்பிறந்த இருபத்தைந்தில்
தருமான ஆயுதத்தால் மடிவான்அன்ருே
நானதென்ன பாலியிட ரேகைமைந்தா
நலமாகக் கண்டுநீ தள்ளுதள்ளு
வானதென்ன வண்மையிட ரேகைகண்டால்
வம்மிசத்திற் காகாது வண்மைதானே.

(இ-ள்.) காப்பிலி யென்னும் ரேகை கையிலுள்ளோன் அவன் பிறந்த இருபத்தைந்து வயதில் ஆயுதத்திஞல் மடிகுவன்; பாலியிட ரேகை யதனைக் கண்டு தள்ளிப்போடுவாய்; வண்மையாகிய ரேகையைக் காண்பாயாகில் அதுவும் வம்மிசத்திற்கு ஆகாவாம் எ-று.

(வி-ரை.) இங்கு காப்பிலி ரேகையினது தன்மையினைக் கூறுவாராயினர். அவையாவன, காப்பிலி ரேகையிற் பிறந்தார்களாயின் அவர்கள் வங்கிசத்திற்கே ஆகாது என்றனர். மற்று மிந்த ஜாதகனது பலாபலன்களைக் கூறுகையில் இவன் ஜனித்த 25-ஆம் வயதில் ஆயுதங்கள் முதலியவற்ருல் மடிந்து போவான் என்று கூறிமுடித்தனர். 8

பாஞ்சாலி ரேகையின் பலன்

தானென்ற பாஞ்சாலி ரேகைமைந்தா
தருவான திருவையிட ரேகைதானும்
ஊனென்ற பஞ்சவர்ண ரேகைமைந்தா
உற்பனமாய்ச் சொல்லுகிறேன் உணர்வாய்கேளு

LuraTech Document Processing Solutions

வானென்ற பஞ்சவர்ண மஞ்சும்ரெண்டு
வண்மையாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
பானென்ற சுக்கிரன்தன் ரேகைமைந்தா
யான்சொல்வேன் இதனுடைய அடர்புபாரே.

(இ-ள்.) பாஞ்சாலி ரேகையையும் திருவையிட ரேகையையும் பஞ்ச வர்ண ரேகையையும் ஆகிய இவைகளைச் சொல்லுகிறேன் உணர்வாகக் கேளும்; அதில் சுசிவர்னம் ஐந்தும் இரண்டும் அதனை சொல்கிறேன்; சுக்கிர னுடைய ரேகையையும் யான் சொல்வேன் அதனுடைய அடவியைப்பாரும். எ-று.

(வி-ரை.) பஞ்சாலி ரேகையினது பெருமையையும் அதன் விருத்தாந்தத் தையுங் கூறுவாராயினர். அவையாவன, மேற்படி ரேகையானது ஐந்தும் இரண்டுமாகி யமைந்திருக்கும் எனவும், இவையே சுக்கிரன் ரேகை எனவும், மேற்படி குபேரன் ரேகை எனவுங் கூறவேண்டுவதாகும். இதன் பலன் முதலிய விவரத்தினைப் பின் வருங்கவியாற் கூறுகின்றனர். 9

பாரென்ற யிவன்வீட்டில் தெய்வக்காரி
பைங்கொடியாள் அனல்மாய்ந்த கன்னிப்பெண்ணுள்
கூரென்ற யிவன்வழியில் தலைமுறைதான்மூன்றும்
குடும்பத்தார் பூசைதனை மறந்தார்பாரு
சாரென்ற அனேகநாள் செய்யவில்லை
சற்குணமாய் இவள்தன்னைப் போற்றிசெய்தால்
சீரென்ற திசையோகம் பின்னாலேதான்
சீக்கிரத்தில் வருடம்ரெண்டு செல்லுமன்றே.

(இ-ள்.) பார்க்க மேற்கண்ட ரேகையுள்ளோன் வீட்டில் தெய்வக்காரி, அவள் அனல்பாய்ந்தக் கன்னிப் பெண்ணாகும். அவள் யிவன் வழித் தலை முறையில் மூன்றாந் தலைமுறையாம். அதனைக் குடும்பத்தார்கள் அவளுக்குச் செய்யும் பூஜையை மறந்தார்கள். அப்படி மறந்து அனேக நாளாய் செய்ய வில்லை; அவளை இப்போது சற்குணமாகத்தானே பூமியில் போற்றிச் செய்து வந்தால் சிறுகிய திசையும் யோகமும் பின்னால் வருஷம் இரண்டில் வந்து கூடும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்கு எவ்வாறு செய்யின் யோகம் உண்டா கும் என்பதைக் கூறுவாராயினர். அவையான, இவன் வீட்டில் நெருப்பா லிறந்து போன கன்னிப் பெண்ணினை பூஜை செய்யாது மூன்று தலைமுறை மறந்து போனார். அவளே இவனது குடும்பத்திற்குக் குலதெய்வம். ஆதலால், இரண்டு வருடங்களுக்குப் பின் இவனுக்கு யோகம், திசை முதலியன உண் டாகும் என்பதாகும். 10

UraTech Document Processing Solutions

செல்லுமடா யிவன்மனதின் துயரமெல்லாம்
சேயிழையாள் உதவியது செய்தாளன்றோ
வல்லுமடா வியாகூலம் வேண்டாமைந்தா
வாகான புத்திரபாக்கியமும் உண்டாம்
அல்லுமடா ஆயிமைந்தன் குமரன்தன்னை
அன்பாகச் சிவனையும் பூசிக்கவேண்டும்
நல்லுமடா யிவன்குழவி பிறந்தயோகம்
நலமான நீதியுண்டாம் நாடிக்கேளே.

(இ-ள்.) மேற்சொன்னபடி தவராமல் செய்துவரில் இவனுடைய துயர மெல்லாந் தீரும்; அந்தத் தெய்வமானமங்கை உதவி புரிகுவாள்; வியாகூல மில்லை பாக்கிய முண்டாகும். உமையவள் மைந்தனாகிய குமரன் தன்னையும் சிவபிரானையும் பூசித்துவரில் இவன் சுதன் பிறந்த யோகத்தினால் நிதியானது உண்டாகும் எ-று.

(வி-ரை.) மேற்சொன்ன பாட்டின் கருத்தின்படிச் செய்ய, இவனது துன்பம் அனைத்தும் ஒழிந்துபோம். அதுமுதல் எவ்வித வியாகூலமும் இன்றி புத்திர பாக்கியத்துடன் வாழ்வதுடன், பிற்காலத்தில் சிவபிரானைத் துதித்துவர எவ்விதத் துன்பமும் உண்டாகாது என்பதாம். 11

கேட்கையிலே ரேகையிலே திருவையப்பா
கேவலமாய்த் திசையோகம் கெடுதிகேளு
வாட்கையிலே முன்னோர்கள் பொருள்கள்வைத்து
வகைசொல்லி மாளாமல் மாண்டுபோனார்
நாட்கவே தலைமுறைகள் மூன்றுமப்பா
நலமாக பூமியிலே வைத்திடும்பொருளை
ஆட்கையிலே நாலான தலைமுறைதனில்தான்
ஆண்பிள்ளை யிவன்பிறந்து எடுப்பான்பாரே.

(இ-ள்.) கேட்கும்படியான ரேகையில் திருவையுண்டாகில் அதின் கேவலமான திசையோகத்தையும் கெடுதியையுங் கேளும். அதாவது வாழ்க்கையாயிருந்த முன்னோர்கள் பொருள் தேடிவைத்து, அதற்கு வகை யாதொன்றும் சொல்லாமல் மாண்டு போனார்கள். அது தலைமுறை மூன்றாகப் பூமியில் வைத்த அப்பொருளை நாலாவது தலைமுறையில் ஆண் பிள்ளையாக இவன் பிறந்து யாவரும் புகழ அதனை இவன் எடுப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியால், இவனுக்குண்டாகும் திசை யோகம் முதலியன வற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இவனது முன்னோர்கள் தான் சம்பாதித்து வைத்த திரவியத்தைப் புதைத்துப் போட்டனர். அவை, மூன்று தலைமுறைக ளாயின. அப்படிப்பட்ட பொருளை இந்த ஜாதகன் ஜனித்ததன் பின் அப்பொருளைக் கண்டெடுப்பான் என்பதாம். 12

LuraTech Document Processing Solutions

எடுத்திடவே திருவைக்கு பின்னங்கேளு
　இயல்பாக மனதிலிவன் எண்ணுங்காரியம்
தொடுத்திடவே மனையிலேதான் சுகமேயில்லை
　தொல்லைமெத்த பிள்ளைகள்தான் துயரத்தாலே
கொடுத்திடவே பாக்கியத்தின் வியாகூலந்திர
　கொடுப்பாரே அருணகிரி கோபாலர்தாமும்
அடுத்திடவே ஆயிர நாமத்தையன்
　அன்பான விஷ்ணுவுந்தான் அருள்செய்வாரே.

(இ-ள்.) எடுத்திடினும் திருவையென்னும் ரேகைக்கு இன்னமும் பலன் கேட்பாயாக: இவன் இயல்பாகத்தானே மனதிலெண்ணுங் காரியங்கள் யாவும் மனையில் சுகமில்லை. தொல்லையானது மெத்தவுண்டாம்; பிள்ளைகளினுடைய துயரத்தினுல் வாடுவான். கொடுக்கும்படியான பாக்கியத்தின் வியாகூலந்திர அருணகிரிநாதரும் கோபாலரும் அருள் புரிகுவார் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் இவனது வாழ்நாளின் விசேஷத்தையே கூறுவாராயினர். அவையாவன, இவன்பிறந்த காலத்தில் இவனுக்கு எவ்விதச் சுகங்களுமின்றி, பிள்ளைகளின் துயரத்தால் தன் மனையில் சுகம்குறைந்துமிருக்குமாயினும்; பிற்காலம் முற்கூறிய நாரணனும் இலிங்க மூர்த்தியும் சகலச் செல்வமும் உண்டாகும் வண்ணமாய் கடாக்ஷிப்பார் என்பதாம். 13

அருள்செய்வார் ஐயனிட உண்டிக்கேயென்றும்
　ஆரிழையாள் அனல்மாய்ந்த கன்னிப்பெண்ணும்
பொருள்செய்யும் ஈஸ்வரனர் உதவியாலே
　போச்சுதடா யிருபத்தி எட்டிலேதான்
தெருள்செய்தார் திசையோகம் வந்ததப்போ
　அன்னவன்தன் வயதிருபத்தி ரெண்டதாகும்
விருள்செய்த ஒருதாய்க்கோர் மைந்தனாகும்
　மிகவான மைந்தனுக்கு விவாகமாச்சே.

(இ-ள்.) அருள் செய்யும்படியாக ஐயனருக்கு உண்டிகட்டி வைக்க நன்மையாகும். அனல்பாய்ந்த கன்னிப் பெண்ணினல் பொருள் பெருகும். ஈஸ்வரனருடைய உதவியினல் தொல்லையானது விலகிப்போகும். இவனுக்கு வயது இருபத்திரெண்டிற்குமேல் அருளாகத்தானே திசையும் யோகமும் வாய்க்கும்; அப்போது இவன்றனக்கு வயது இருபத்திரெண்டாக நடக்கும்; இவன் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையாகும். விவாகமானது முடியும் எ-று.

(வி-ரை.) முன் சொன்னபடி தன் குலத்தில் அனலில் வீழ்ந்து இறந்துபோன குலதெய்வத்திற்கும், விஷ்ணுவுக்கும் உண்டிப்பணம் செலுத்தி வருவார்களேயாமாயின், இவன் வயது 28-ல் மகாப் பிரபலமாகிய திசையும்

யோகமும் உண்டாகும் என்பதாம். மற்று மிவன் ஓர் தாய்க் கொருவனே யாகும் என்பதும், மேற்படி வயது 28-ல் விவாகம் உண்டாகும் என்பதும் கருத்தாகும். 14

ஆச்சப்பா ஆறுநாள் கெர்ப்பக்காரன்
  ஆனந்த மதியோகன் அன்பானபிறவி
காச்சப்பா யிவன்பிறந்த பதின்மூன்றுண்டில்
  கணக்கில்லாத் தொல்லையது வந்ததப்பா
தாச்சப்பா நலைவனுடன் பிறந்ததாறு
  தன்னுடைய பிறவிகளைக் கொன்றான்பாவி
போச்சப்பா மயேந்திரத்தில் நாலுண்டானல்
  பிரபலங்க ளாவனடா விருபத்தாறே.

(இ-ள்.) இவன் தாயார் குளித்த ஆறுநாள் கருதரித்தவன். ஆனந்த யோகமுள்ளப் பிறவியாகும்; இவன் பிறந்த பதின்மூன்றும் வருஷத்தில் கணக்கில்லாத தொல்லையானது அனுபவிப்பன். தகப்பனோடு பிறந்தவர்கள் ஆறுபேராகும். இவன் தன்னுடைய பிறவிகளைக் கொன்றவன்; ஆகையால் மயேந்திர ரேகையானது உண்டாகில் பிரபலமுடையவனாகுவான் இருபத்தாறும் வயதில் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிவன் தாய் ஸ்நானம் செய்த ஆறும் நாள் கருத்தரித்தவன் எனவும், இவன் பிதாவுடன் பிறந்தவர்கள் ஆறுபேர்க ளாயினும் அவர்கள் எல்லோரையுங் கொன்றான் எனவும், தான் வயது 13-ல் அளவிட முடியாத் தொல்லையுண்டாயினும் வயது 26-ல் மகா யோகத்துடன் வாழ்வன் எனவும், இத்துடன் மயேந்திர ரேகை என்பது நன்குண்டாகி இருக்கவேண்டும் என்பது கருத்தாகும். 15

ஆறிடவே யிவன்யோகன் தனவானப்பா
  ஆச்சரியங் கேட்டபொருள் கூடும்பாரு
பாறிடவே யிவனுக்கு யிருபத்தெட்டில்
  பண்பான கலியாண மாகும்பாரு
பேறிடவே யிவன்வயதோ ரிருபத்தெட்டில்
  பெரியதொரு கெண்டமது வந்ததப்பா
சீறிடவே யிவன்றனும் திசையோகந்தால்
  சீக்கிரத்தில் திசையோகம் வருகும்பாரே.

(இ-ள்.) மேற்கூறிய இவன் யோகத்தில் தனவானவான். ஆச்சரியமாகத் தான் கேட்ட பொருள் யாவுங் கைகூடும்; இவனுக்கு இருபத்தெட்டு வயதில் கலியாணமாகும்; அத்துடன் ஒரு கெண்டமானது அவ்வயதிற்றனே சம்பவிக்கும். இவனுடைய திசையினது யோகத்தினல் சீக்கிரத்தில் பலன்கள் பெருக உண்டாகும் எ-று.

LuraTech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் திசை யோகம் முதலியன வற்றைக் கூறுவாராயினர். அவையாவன, முன்சொன்னபடி வயது 28-ல் விவாகம் நடக்கும் எனவும், அதுமுதல் மிக்க யோகமாயும் மேம்பாடுடையவனாயும் வாழ்வான் என்பது கருத்தாகும். 16

பாரடா விவன்கேட்ட காரியந்தான்
 பக்குவமாந் தனத்தோடு பாக்கியங்கேட்டால்
சீரடா விவனுக்கு ஐந்நூற்றுநாற்பது
 சிவாசிவா கிடைக்குமென்று செப்புவாய்நீ
கூரடா குழவிகள்தா னாறுக்குள்ளே
 கொழுநனுக்குப் பாக்கியங்கள் கூறுவோம்பாம்
வாரடா மயேந்திரத்தின் பெருமையாலே
 வகையான திருவையுட வள்ளல்தானே.

(இ-ள்.) பார்க்க இவன் கேட்ட காரியங்கள் யாதெனில், பக்குவமாகத் தானே தனத்தோடு பாக்கியங்கள் பெருகவுங் கேட்டான்; இவனுக்கு ஐந்நூற்றுநாற்பது பொன் சிவனருளால் கிடைக்கும். குழவிக்கு ஆறு வயதிற்குள்ளே கொழுநனுக்குப் பாக்கியம் கிடைக்கும். மயேந்திரத்தின் பெருமையாலும் திருவையுடைய பாலனும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலு மிவனது யோகம், பாக்கியம் முதலியவற்றையே கூறுவாராயினர். அவையாவன, இவன் ஐந்நூற்று நாற்பது விராகன் சொத்துடையவனாகியும், புத்திர பாக்கியங்கள் அறுவருடையவனாகிச் சுகித்திருப்பன். இவை தேவியினுடைய கிருபையி லமைந்த மயேந்திர ரேகையினது பெருமை எனக் கூறுவாய் என்பதாம். 17

தானென்ற விவன்பிறவி யோகவானாய்
 தருவான தேவரிலே யொருவனப்பா
ஊனென்ற வுட்கருத்து மிகவேயப்பா
 உத்தமன்றான் றனசாலி யாகிவாழ்வான்
வானென்ற விவன்குழவி யோகத்தாலே
 வையகத்தி லில்லையடா வரிசைகேளு
கானென்ற கருணையடா கடவுளார்தான்
 கண்டித்த படிசொல்வான் கருணைகேளே.

(இ-ள்.) மேற்கூறிய இவன் பிறவியானது யோகவானாகும், தேவர்களிலும் மேம்பட்டவன் இவனாகும். உட்கருத்துடையவனும், தனசாலியாகவும் வாழ்குவன்; இவனுடைய குழவி யோகத்தினால் பூமியில் ஒருவரும் இவனுக்கு நிகரில்லாமல் வாழ்குவன். கருணையானது தானே கடவுளர் கண்டித்த சொன்னபடி சொல்வான் எ-று.

turaTech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்ன எனின், இவன் தேவர்களி லொருவன் எனவும், அதனாலேயே மிக்க யோகமுடையவனாகி வாழ்வன் என வும், இவன் ஜெனித்த ரேகையினது அமைப்பால், இவனுக்கெதிரான யோக முடையவர்கள் எவர்களுமில்லை என்பதுங் கருத்தாகும். 18

கேட்கவே யிவன்றானும் சத்புருஷனாகும்
  கேவலமாய்ப் பூமிகொள்வான் தனவானப்பா
ஆட்கவே ஆயுசுதா னெழுபத்தைந்நாம்
  அப்பனே யிவனுக்கு அறிவுமெத்த
நாட்கவே யுமையவளும் இளையாள் தானும்
  நலமாகப் பிரியாத விடையிருப்பார்
வாட்கவே திருவையுட யோகத்தாலே
  வருமைதான் நீங்குமடா நாற்பத்தெட்டே.

(இ-ள்.) கேட்கும்படியாக மேற்கூறிய இவன் சத்புருஷனாகும்; பூமி யானது கொள்வன்; இவன்றனக்கு வயது எழுபத்தைந்தாகும்; அறிவுடை யோனாக விருப்பன்; இவன் மனையில் உமையவளும் இலட்சுமியும் பிரியாம லிருப்பர்; அன்றியும் திருவையென்னும் ரேகையினுடைய யோகத்தால் வறுமையானது நாற்பத்தெட்டில் நீங்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வயதையும் யோகமுண்டாகுங் கால அளவினையுங் கூறுவாராயினர். அவையாவன, வயது 75 எனவும், வயது 48ல் இவனுக்குள்ள துன்பமனைத்தும் நீங்கிச் சகல இன்பங்களுடன் வாழ்ந்து அநேக பூமி முதலியன உடையவனாகி வாழ்வான் என்பது கருத்தாகும். 19

எட்டான விற்பனந்தான் அஞ்சுக்குள்ளே
  ஏகாந்த மானபரஞ் சோதியப்பா
வட்டான குமரனைத்தான் பெற்றந்தவி
  வண்மையாம் பூஜைதனை மறந்திடாதே
இஷ்டான சுகமெல்லாம் குறைக்குமப்பா
  எடுத்திடுவான் புதுமனையும் இயம்பத்தானே
இஷ்டான பரமசுக மெல்லாந்தானும்
  ஏகாந்தந் தானாக இருப்பான்பாரே.

(இ-ள்.) எட்டெழுத்தான விற்பனமாயும், ஐந்தெழுத்திற்குள்ளே ஏகாந்த மான பரஞ்சோதியாய் விளங்கிக் குமாரசுவாமியைப் பெற்ற மாதாவான அம்பாளுடைய பூசையை மறவாமல் எந்நாளும் பூசித்துவர, இஷ்டார்த்த மான செல்வம் யாவும் குறையாமல் பெருகும்; புது மனையானது ஏற்படும். இஷ்டமான பரமசுகமெல்லாம் அனுபவித்து ஏகாந்தமாகத்தானே யிருந்து வாழ்குவான் எ-று.

LuraTech Document Processing Solutions

(வி-ரை.) பஞ்சாக்ஷர சக்கரத்துள் சோதிமயமாய்த் துலங்குபவனும் குமரக் கடவுளைப் பெற்றவனுமாகிய உமாதேவியை மறவாதே. அப்படி மறந்தாயாயின் உனக்குள்ள சுகம் யாவும் குறைந்துபோம். மேற்சொன்னபடி செய்வாயாயின் எல்லாச் சுகத்தையும் அடைந்தவனாகி ஏகாந்தமாயிருப்பாய் என்பதாம். 20

பாரடா இவனொருவன் பத்தனாகும்
  பண்பான சிவபூசை முடிக்கும்வள்ளல்
தீரடா யிவனுக்கு மூன்று கெண்டம்
  திசையாகச் சொல்லுகிறேன் தெரியத்தானே
ஆரடா யிவனைப்போல் யோகவான்தான்
  அன்பான பூமியிலே யில்லைமைந்தா
பேரடா யிவன்தானும் மகிழ்ச்சிபெற்று
  பெரியவனாய் வளர்ந்திருப்பான் பேசுவீரே.

(இ-ள்.) பார்க்க மேற்கூறிய இவன் ஒருவனே பத்தனாகும்; சிவபூசையை வழுவாமல் முடிக்கும் வள்ளலென்றும் சொல்லலாம். அன்றியும் இவனுக்கு மூன்று கெண்டம் வருவதைச் சொல்லுகின்றேன்; இவனைப்போல் யோகவான் பூமியில் யாருமில்லை; இவன் மகிட்சியானது பெற்று பெரியோனாக வாழ்ந்திருப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது பெருமையினையும் யோகத்தினையுங் கூறுவாராயினர். அவையாவன, இவன் மகாபக்தர்களிலொருவன் எனவும் மகா யோகமும் பெருமையும் உடையவனாகி வாழ்வான் எனவும்,இவனுக்குண்டாகும் கண்டங்கள் மூன்று எனவுங் கூறுவாய் என்பதாம். 21

பேசுவீர் கோபால சாமிதானும்
  பெற்றெடுத்த மைந்தனென்று பெருமையாச்சு
ஆசுவீர் ஆண்டவனார் உதவியாலே
  ஆக்கிவிப்பார் தனவானும் ஐம்பதுக்குள்
கோசுவீர் பலனில்லா வருஷம்எழு
  கொற்றவனை வதைக்குமடா கொடுமையாலே
வேசுவீர் காலமெல்லாம் யோகவாழ்க்கை
  வேதாந்தகுரு உபதேசம் செய்வார்.

(இ-ள்.) பேசும்படியாக மேற்கூறி இவனை கோபால சுவாமி பெற்ற மைந்தனென்றும், பெருமையானது பெருகி ஆண்டவனுடைய அருளினாலே இவனைத் தனவானாக ஆக்கிவைப்பார்; வயது ஐம்பதுக்குள்ளும் அதிக பலனில்லாமல் ஏழு வருஷம் பாதைப் படும்படியாக சில வாதையானது செய்யும் காலமில்லாத காலத்தில் யோகவாழ்க்கையை வேதாந்த ரூபான குருவானவர் வந்து உபதேசஞ் செய்வார் எ-று.

LipiTech Document Processing Solutions

(வி-ரை.) ஸ்ரீமந் நாராயண மூர்த்தியினது கிருபாகடாக்ஷத்தால் தோன்றியவனாகலின் இவன் வயது 50-க்குள் மகாயோகத்தை யடைவானாயினும் மத்தியில் ஏழுவருஷ காலங்களே பலனின்றி வருந்துவன். மற்றும் இவன் குருகடாக்ஷம்பெற்றவனாகி மேலான யோகம் வாழ்வு முதலியவற்றை அடைவான் என்பதாம். 22

செய்யவே யின்னமும்தான் அசுபதிக்கு
செப்புகிறேன் இவனுடைய காரியந்தான்
வையகத்தில் இவனைப்போல் இல்லைமைந்தன்
மகத்தான யோகமடா மருவிக்கேளு
கையதனிற் கர்னனைப்போல் புலவர்க்கெல்லாம்
கனகமுதற் குறைவின்றி கனிவுற்றீவான்
ஐயமில்லா வேளைப்போல் இருப்பன்மைந்தன்
அன்பான வாழ்க்கைநன்று அறிவுகூறே.

(இ-ள்.) செய்யும்படியாக இன்னமும் அசுபதிக்கு இவனுடைய காரியங்களைச் சொல்லுகிறேன் கேட்பாயாக: இவனைப்போல் வையகத்தில் ஒருவருமில்லை; மகத்தான யோகமுடையவன். மேலும்; கர்ணனைப்போல புலவர்கள் முதலானோர்க்கு கனகமோடும் பலவிதமான தானங்களும் கனிவோடு யீகுவன். ஐயமில்லாதவன்; வேளைப்போற் றுலங்குபவன்; அன்பான வாழ்க்கை உடையவனென்று தெளிவாகக் கூறுவாய் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்தது அசுவினி எனவுங் கூறப்பட்டன. இதுவன்றி இவன் கர்ணனைப்போன்ற தானம் செய்பவனும் குறைவுபடாத யோகத்தை யுடையவனும் இவனைப்போன்ற காரியம் இவ்வுலகிலொருவரும் செய்யவில்லை எனவுங் கூறியது அறியத்தகுந்தது. 23

கூறிடவே யிவன்வாழ்க்கை யோகமெல்லாம்
குறிப்பாகச் சொல்லிவிட்டேன் கூர்மையாலே
நேரிடவே யிவனுடைய திசையும் கெண்டம்
நேர்மையாய்ச் சொல்லுகிறே னினைவாய்க்கேளு
ஆறிடவே லக்கினத்தின் முறைகளெல்லாம்
அன்பாகச் சொல்லிவிட்டே னறிவினாலே
பாரிடவே யின்னமுந்தா னனேகரேகை
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளே.

(இ-ள்.) கூறும்படியாக இவனுடைய யோகமும் வாழ்க்கையும் யாவும் குறிப்பாய்ச் சொல்லிவிட்டேன். யாவருமறியக் கூர்மையாகத் தானே; இவனுடைய திசையுங் கெண்டமும் தெரியச் சொல்லுவேன் தெளிவாகக் கேட்பீராக. அன்றியும் இலக்கணத்தின் முறைகள் யாவும் அன்பாகத்தானே

UpraTech Document Processing Solutions

அறிவினு லறிந்தமட்டும் சொல்லிவிட்டேன்; இன்னமும் அநேக ரேகைகளின் குணத்தைப் பக்குவமாகத்தானே சொல்லுகிறேன் கேட்பாயாக எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவது என்னை எனில் இங்கு இதுவரையில் கூறிவந்த பாஞ்சாலி ரேகையினது பலாபலன்களனைத்தையும் தெளிவாயும் கண்டமட்டு முதலியவற்றை உண்மையாயுங் கூறிவிட்டேனாதால் இனி மற்றுமுள்ள ரேகையினது பலாபலன்களேயுங் கூறுகிறேன் என்றனர் மற்றுமுள்ள ரேகையின் பலாபலன்கள் வருமாறு. 24

பஞ்சவர்ன ரேகையின் பலன்

கேளப்பா பஞ்சவர்ன ரேகைமைந்தா
  கேவலமா மதின்மகிமை பெரிதேயாகும்
நாளப்பா யிவன்கையிலே யிருக்குமாகில்
  நன்மைபெற்ற மைந்தனைத்தா னுடிச்சொல்வேன்
வாளப்பா விவன்தானு மாறுங்கெர்ப்பம்
  வண்மையுள்ள வில்லத்திற் பிறந்தானன்றே
ஆளப்பா மாதிவார மிரவுதன்னில்
  அன்பான திதியேகா தசியுமாமே.

(இ-ள்.) கேட்க பஞ்சவர்ன ரேகையானது இருக்கில் அதின் மகிமை பெரிதாகும்; அவ்வித ரேகை யாருக்காவது கையிலிருக்குமாகில் அவனுக்குண்டாகும் நன்மையைச் சொல்வேன். இவன் ஆறுவது கெர்ப்பமாகும்; வளமையுள்ள இல்லத்திற் பிறந்தோனாகும்; ஆதிவாரம் இரவில் திதி ஏகாதசியாம் எ-று.

(வி-ரை.) இதுமுதல் பஞ்சவர்ண ரேகையினது பலாபலன்களைக் கூறுகின்றனர். அவையாவன, மேற்படி ரேகையினது மகிமையைச் சொல்ல முடியாது. மற்றும் இவன் ஆறுங் கெற்பம் எனவும் அழகிய இல்லத்தில் பிறந்தவன் எனவும் ஞாயிற்றுக்கிழமை இரவில் ஏகாதசித் திதியில் பிறந்தவன் கூறுக என்பதாம். 25

ஆமென்ற விவனுடனே பிறந்தபேர்கள்
  அப்பனே யைந்துமக்க ளொன்றுபெண்ணும்
வாமென்ற வலியதொரு வீட்டிலேதான்
  வகையான பூரமதி லிரண்டாங்காலாம்
ஓமென்ற உட்பொருளே யறியும்வள்ளல்
  உத்தமன்தான் தனசாலி யாகிவாழ்வான்
காமென்ற காமியங்க ளுள்ளவன்தான்
  காட்சியுள்ள வழகியனு மைந்தன்றானே.

(இ-ள்.) ஆமெனும்படியாக இவனுடன் பிறந்தபேர்கள் ஆண் ஐந்தும் பெண் ஒன்றாகும். வலியவொரு வீட்டில் பிறந்தவனிவன்; பூர நட்சத்திரத்தில் இரண்டாங் காலில் வந்த புதல்வனிவனாகும்; அந்தரங்கமான பொருள்களை யறிகுவன்; தனசாலியாக வாழ்குவன்;, காமியங்களுள்ளவன்; காட்சி பெருகும்படியான அழகுடைய மைந்தனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின்? இவனுடன் பிறந்தவர்கள் ஐந்து ஆண்களும் ஓர் பெண்ணுமாகும் மற்று மிவன் ஜனித்தது பலமாகிய இல்லம் என்க. ஜெனன நக்ஷத்திரமானது பூரம் இரண்டாம் பாதமாகும். இவன் வாழ்நாளில் சகலமும் தெரிந்தவனாகி சகல காரியங்களையுஞ் செய்யத்தகுந்தவனாய் எவரும் மதிக்கும்படி வாழ்வான் என்பதாம். 26

மைந்தனெனு மிவன்யோக மாறுதம்போல்
மகத்தான தாய்தந்தை வைத்துவாழ்வான்
ஐந்ததெனு மாறுபே ருடப்பிறப்பாம்
அன்பான பாலகன்தான் ஆறாம்பேராம்
விந்தனெனும் விற்றொழிலும் வினோதவித்தை
விதமான வேதங்கள் படிப்பான்பாரு
சுந்தரம்போற் பிள்ளையுந்தான் யோகவானும்
சுசிகரமு முள்ளவன்தான் சூழத்தானே.

(இ-ள்.) மேற்கூறிய இந்த மைந்தன் யோகம் மாறுதல்போல் மகத்தாகித் தாய்தந்தையை வைத்து வாழ்குவான். ஆறுபேருடன் பிறந்தோனாகும்; அதில் மூன்றாவது பிள்ளை இவனாகும்; இவன் விந்தை விந்தையாகிய விற்றொழிலும் வினோதமான வித்தையும் வேதங்களும் படிப்பான்; சுந்தரர் போல் யோகமுடைய சுசிகரனுமாகும் எ-று.

LuraTech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவ தென்னை எனின், இவன் தனது வாழ்நாட்களில் தன் தாய் தந்தையர்களை மிக்க அன்புடன் ஆதரிக்கத் தகுந்தவனும் உடன் பிறந்தவர் 6. அவர்களுடன் ஆண் புத்திரர்கள் மூன்றுடன் எவருங் கண்டு சந்தோஷிக்கத் தகுந்த கல்வியை யறிந்தவனாகி, தானும் தன் மைந்தர்களும் வெகு சந்தோஷத்துடன் வாழ்வர் என்பதாம். 27

தானென்ற விவன்வயது பனிரண்டுக்குள்
தருவான விவாகமது ஆச்சுதப்பா
கானென்ற காணிக்கை யோகவானும்
காட்சிசொல்வே னிவன்வயதோ வைம்பத்தாறு
ஊனென்ற விவன்வீட்டி லனேகபாக்கியம்
உற்றதொரு மைந்தனுக்குக் குழவிரெண்டாம்
பானென்ற பஞ்சகர்த்தர் வுதவியாலே
படும்பாடு வொன்றுமில்லை பண்பனுக்கே.

(இ-ள்.) மேற்கூறிய இப்பாலனுக்கு வயது பனிரண்டுக்குள் விவாக மானது முடியும். யோகவானுயிருப்பன். இவன் வயது அன்பத்தாருகும்; இவன் வீட்டில் அநேக பாக்கியங்கள் பெறுகும்; சந்ததி இரண்டுண்டாகும்; இவனுக்கு பஞ்சகர்த்தாக்களின் அருளால் கஷ்டங்களில்லையாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் ஆயுள் விவாகம் முதலியனவற்றைக் கூறு வாராயினர். அவையாவன, வயது 12-க்குள் விவாகம் என்றும் இவனுக்கு வயது 56 எனவும், இவனுக்குண்டாகும் புத்திரர்கள் இரண்டென்றும், இவ னில்லத்தின் கண் அநேக பாக்கியங்க ளுண்டாகும் எனவுங் கூறவேண்டும் என்பதாம். 28

பண்பான விவனுக்குக் கெண்டமைந்து
பாங்காக வருமென்று பரிந்துசொல்லு
நண்பான விவன்வயது பதினேழாண்டு
நலமான மாரிகெண்டம் நடந்ததப்பா
உண்பான விவன்வயதோ ரிருபதுக்குள்
உற்றதொரு நாய்கடிக்கு மாடுபாயும்
வண்பான விவன்வயதோ ரிருபத்தெட்டில்
வரிசையாய் வியாதிகண்டம் வந்ததன்றே.

(இ-ள்.) பண்பாகு மிவனுக்கு கெண்டம் ஐந்துண்டாகும்; அதாவது இவனுக்கு வயது பதினேழில் அம்மையால் கெண்டம் நேரும்; வயது இரு பதுக்குள் மாடானது பாயும்; நாயானது கடிக்கும்; வயது இருபத்தெட்டில் வரிசையாகத்தானே வியாதியினல் கெண்டம் வந்தணுகும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிவனுக்குண்டாகுங் கெண்டாதி கெண்டங்களைக் கூறுவாராயினர். அவையாவன, கெண்டாதி கெண்டங்கள் ஐந்து என்ப தாம். அவற்றுள் வயது 17-ல் வைசூரியும், வயது 20-க்குள் நாய் கடித்தல் மாடு பாய்தல் முதலியனவும் 28-ஆம் வயதில் கொடிய வியாதியால் கெண்டம் வரும் என்பது கருத்தாம். 29

அன்றெனவே யிவன்வயது முப்பத்திரண்டில்
அப்பனே சத்துருவால் மெலிவான்பாரு
குன்றெனவே யிவன்வயது நாற்பத்தைந்தில்
குலமகனும் நீராலே மெலிந்தான்பாரு
நன்றெனவே யிவன்வயதோ ரைம்பத்தாறில்
நலமான சக்கரத்தி னமைப்பினாலே
இன்றெனவே யிவன்தானு மிறப்பானப்பா
இயல்பான சக்கரத்தின் அமைப்புதானே.

(இ-ள்.) மேற்கூறிய இவனுக்கு முப்பத்திரண்டாவது வயதில் சத்துருக்களால் மெலிகுவன்; வயது நாற்பத்தைந்தில் சலத்தினால் கெண்டம் நேர்ந்து மெலிகுவன்; வயது அம்பத்தாறில் நலமாகிய சக்கரத்தின் வலுவாலும் மகிமையாலும் இவன் மரணமாகுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் மேலே சொன்ன கெண்டாதி கெண்டங்கள் முதலியவற்றையே கூறுவாராயினர். அவையாவன வயது 32-ல் பகைவரால் துன்பமும் 45-ல் ஜல கெண்டமும் இவன் கையிலுள்ள ரேகையின் அமைப்பால் வயது ஐம்பத்தாறில் பரமபதமடைவான் என்பதுவேயாகும். 30

தானெனவும் பஞ்சவர்ன ரேகையப்பா
தருவான வாழ்க்கைமுதல் யோகமெல்லாம்
வானெனவும் திசையோகம் கர்மமெல்லாம்
வளமையுள்ள கண்டமுதல் வரிசைசொன்னேன்
நானெனவும் நாயகியாள் சொன்னவாக்கியம்
நயந்துநின்று கேட்டவர்க்கும் மோட்சமாச்சு
வானெனவும் தேவர்களும் முனிவரெல்லாம்
வணங்கினா ருமைபாதம் வண்மையாமே.

(இ-ள்.) தானென்னும்படியாகப் பஞ்சவர்ன ரேகையின் யோகவாழ்க்கையையும் அத்துடன் திசையோகமும் நன்மையும் துன்மையும் கெண்டம் முதலானதும் வரிசையாகச் சொன்னேன். இது நானென்னும்படியாய் தாயாகிய பரமேஸ்வரி சொன்ன வாக்கியத்தின்படியாம். நயந்துக் கேட்டவர்க்கு மோட்சமாகுமென முனிவர்களும் தேவர்களும் கூடி வணங்கினார்கள் உமையவள் பாதத்தையும் எ-று.

(வி-ரை.) இங்குக்கூறிய பஞ்சவர்ன ரேகையினது பலாபலன்களை உலகமாதாவாகிய உமாதேவியானவள் சொன்ன வாழ்க்கை திசையோகம் வாழ்வுமுதலியவற்றைக் கேட்டு தேவர் முனிவர்கள் முதலாயினோர் மேற்படி தேவியை வணங்கித் துதித்தனர் என்பதாம். 31

அன்ன ரேகையின் பலன்

ஆகவே இன்னமும்தான் மைந்தாசொல்வேன்
ஆச்சரிய முள்ளதொரு ரேகைமைந்தா
ஆகவே அன்னத்தின் ரேகையுண்டு
அப்பனே சொல்லுகிறேன் அறியத்தானே
தாகவே பிரம்மவரை உன்னடியில்மைந்தா
தகையான முக்கோணம் கீறுமுண்டாம்
ஏகவே இருபுள்ளி ரெண்டுரேகை
என்னசொல்வேன் மைந்தனிட இயல்புதானே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) ஆகும்படியாக இன்னமுஞ் சொல்வேன் ஆச்சரியமானதோர் ரேகை; அதாவது அன்னத்தின் ரேகையென உண்டு; அதை அறியச்சொல்லு கிறேன் கேட்பாயாக; பிரம வரையின் அடியில் முக்கோணமாகக் கீறுண்டாம் அத்துடன் இரண்டு புள்ளியும், இரண்டு ரேகையுமுண்டாம் இவ்வாறுள்ள பாலனுடைய இயல்பைச் சொல்வேன் எ-று.

(வி-ரை.) இங்கு அன்னரேகையினது விவரத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, அன்ன ரேகை என்பது, பிரம்மவரையில் முக்கோணக் கீற்று யும், இரண்டு ரேகையும் இரண்டு புள்ளியுமாயமைந்திருக்கும். இவை மகா ஆச்சரியத்தையுடைய ரேகையாகும். இதன் மகத்துவத்தை என்ன சொல் வேன் என்பது கருத்தாகும். 32

தானடா இவனுக்கு யோகமெத்த
தருவான அன்னத்தின் பாலரேகை
வானடா யிவன்பிறந்த மனையிலேதான்
வளமையில்லா வெறுமையால் மெலிந்தான்பாரு
ஊனடா யிவன்பிறந்த பின்புமைந்தா
உற்றதொரு செல்வமுந்தான் உயர்ச்சியாச்சு
பானடா பரமகுரு அருளாலேதான்
பாக்கியங்கள் வந்ததென்று பலிவாய்க்கூறே.

(இ-ள்.) தானாகிய இவனுக்கு யோகமானது மெத்தவுண்டாம். அன்னத் தின் பால ரேகையினாலும் அன்றியும் இவன் பிறந்த மனையில் வளமையானது இல்லாமல் வெறுமையினால் மெலிந்தவனாகும்; இவன் பிறந்த பின்பு செல்வ மானது மேன்மேலும் உண்டாகியதை அது பரம குருவின் அருளால் இப்பாக் கியம் வந்ததெனக் கூறவேண்டும். எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவது என்னை எனின் இவன் பிறந்த காலத்தில் மனையிலுள்ளவர்கள் மகா வறுமையால் மெலிந்தார் எனவும் இந்த ஜாதகன் ஜனித்ததின்பின்பே சாக்ஷாத் பரமகுருவினுடைய கிருபாகடாக்ஷத்தால் சகல செல்வங்களும் மென்மேலு முண்டாயின வென்றும் இவனுக்கு யோகம் அதிகம் என்பது கருத்தாகும். 33

கூறிடவே யிவன்பிறந்த வாரம்தானும்
கூர்மையாய்ச் சொல்லுகிறேன் சனிவாரம்தான்
பாறிடவே பகல்வேளை உச்சிதன்னில்
பண்பான துதிகையுடன் சித்திரையாகும்
ஊறிடவே உட்கருத்து உள்ளபாலன்
உற்றதொரு விசாகநாள் ரெண்டாங்காலில்
வாறிடவே மைந்தன்தான் ஓர்மனையில்மைந்தா
மண்பார்த்துப் பிறந்ததில் ஐயமின்றே.

(இ-ள்.) கூற இவன் பிறந்த வாரம் சனிவாரமாகும்; பகல் வேளையான உச்சிக்காலமாகும்; திதி துதிகையாகும்; சித்திரை மாதம் சுபமாக இதிற்பிறந்த இவன் உட்கருத்துடையோனாகும்; விவாக நட்சத்திரம் இரண்டாங் கர்லாகும்; ஓர் புரத்தி மனையில் பிறந்த மைந்தனாகும்; பூமியைப் பார்த்து வந்தவன் ஐயமிலான் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவன் பிறந்த வாரம் நாள் கோள் முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, சித்திரைமாதம் சனிவாரத்தில் பகல் உச்சிவேளையில் துதிகையும் விசாகம் இரண்டாம் பாதமுங் கூடிய தினத்தில் பிறந்தான். அதிலும், ஜெனிக்கும்போது பூமியை நோக்கிப் பிறந்தனன் என்பது கருத்தாகும். 34

ஐயம்இல் லாமல்இவன் பிறந்தான்ஐயா
  ஆச்சரியம் லக்கினத்தில் வியாழம்சுக்கிரன்
வையகத்திற் பணங்களைத்தான் மிகவேதேடும்
  மண்ணுலகில் வேளாண்மை மிகுதிசெய்வான்
பையயிவன் பிரபலங்கள் ஆவான்பாரு
  பார்வதியாள் கடாட்சத்தால் பாக்கியம்சேரும்
உய்யவுமே உறமுறைதான் மெத்தவுண்டு
  உண்மையாய் இப்பலன்தான் நடக்குந்தானே.

(இ-ள்.) ஐயமில்லாமல் இவன் பிறக்கும்பொழுது இலக்கினத்தில் வியாழனும் சுக்கிரனுமிருந்தால் இன்னோன் வையகத்திற் பணம் காசு மிகவும் தேடுவான்; வேளாண்மை மிகுதியாகச் செய்குவன்; அதிக பிரபலமுடையோனாகுவன்; பார்வதியின் கடாட்சத்தால் பாக்கியஞ் சேரும். உறவின் முறையார்கள் மெத்தவுண்டு. உண்மையாகத்தானே சொன்ன இப்பலன் உறுதியாக நடக்கும் எ-று.

(வி-ரை.) இங்கு இவனது யோகத்தையும் கிரக அடவியையுங் கூறுவாராயினர். அவையாவன, ஜென்மலக்கினத்தில் குருவும் சுக்கிரனும் என்பதாம். இந்த விசேஷத்தால் அனேக பந்து ஜனங்களை யுடையவனும் தனமுடையவனும் பயிர்த்தொழில் செய்பவனும் பெருமையுடன் வாழ்வன் இவை யாவும் தேவியினது கடாக்ஷம் என்பதாம். 35

உறுதியாய் இவன்வயதோ ரைந்திலேதான்
  உற்றதோ ரிவன்தானும் தோளில்அப்பா
பருகியாய் கிழங்குகளை மிகவேதோண்டிப்
  பக்குவமாய் நிதியொன்று எடுப்பான்பாரு
சிறுதியா யிருந்ததொரு வாழ்க்கைதானும்
  சிற்பரத்தின் பெருமைபெற்று வாழ்ந்தார்பாரு
கருதியா யிளையவளுங் கருணைகூர்ந்து
  கடாட்சித்தா ளிவனுக்குக் கருணைதானே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) உறுதியாகத்தானே மேற்கூறிய இவன் வயது ஐந்தில் கொல்லையில் கிழங்குகளைத் தோண்டிக்கொண்டு வருகையில் அங்கு நிதிப் புதையல் கண்டெடுப்பான்; எடுத்த பின்பு சிறுகுடியாக வாழ்ந்தவர் சிற்பரத்திற் பெருமையானது பெற்று வாழ்குவர்; இளையவளாகிய இலட்சுமியானவள் கருணைகூர்ந்து இவன் மனையில் பொருந்தி வாழ்குவாள் எ-று.

(வி-ரை.) இளையாளாகிய இலக்குமி தேவியினது கிருபாகடாக்ஷத்தால் இவன் வயது 5-ல் கொல்லையில் கிழங்குகளைத் தோண்டும் சமயம் அங்ஙனம் புதையலொன்று கண்டெடுத்து அதுமுதல் மிக்க தனமுடையவனாகி சம்பத்துடன் வாழ்வன் என்பதாம். 36

கருணையடா விவனுக்கு வயதோமைந்தா
  கடாட்சித்த வாண்டெழுபத் தைந்துமாகும்
வருணையடா விவனுடனே பிறந்தார்மூவர்
  வண்மையுள்ள மக்களென்று வரிசைகூறு
தருணையடா தங்கையொன்று பிறப்பாள்மைந்தா
  தாழ்வில்லாத் தாய்தந்தை வைத்துவாழ்வான்
கருணையடா சற்சனனாய் வேதம்பார்ப்பான்
  சற்குருவாய் சிவபூசை செய்வானன்றே.

(இ-ள்.) கருணையாகத்தானே மேற்கூறிய இவனுக்கு வயது எழுபத்தைந்தாகும். இவனுடன் பிறந்தோர் மூன்று பேராகும். அவர்களுடன் தங்கையானவள் ஒருத்திப் பிறப்பாள்; தாழ்வில்லாமற்படிக்குத் தாய்தந்தை வைத்துக் காப்பான்; சற்சனனாக வேதங்களைப் பார்ப்பான்; சற்குருவாக சிவபூசை செய்குவான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது சகோதரர்கள், தாய் தந்தையரது வயது முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இவனுடன் பிறந்தவர் மூவர், அவர்களுள் பெண்ணொருத்தியாகும். இவனுக்கு வயது 75. தாய் தந்தையர்களுள்ள வரையில் அவர்களுடன் மிக்க அன்புடனிருப்பான். மற்றும் சகல வேதங்களையுந் தெரிந்தவனாகி, எல்லவர்க்கும் குருவாகிச் சிவபூசை செய்திருப்பான் என்பதாம். 37

அன்றெனவே யிவனுக்குக் கண்டம்நாலு
  அற்பமாய்த் தீருமடா ஆய்ந்துபாரு
நன்றெனவே யிவனுக்கு நீராலொன்று
  நன்றில்லாச் சத்துருக்கள் வாதையொன்று
குன்றெனவே அக்ரமமாய் முப்பதாண்டு
  கூர்மையாங் கடியதனாற் கண்டமொன்று
வன்றெனவே யிவன்வயதோ ரெழுபத்தாறில்
  வரிசையாஞ் சக்கரத்தின் வண்மைதானே.

CuraTech Document Processing Solutions

(இ-ள்.) அன்றென மேற்கூறியோனுக்குக் கண்டம் நாலு சம்பவிக்குமாம்; அது அற்பமாகத் தீரும்; அதாவது சலத்தினுல் ஒன்றும் சத்துருக்கள் வாதை ஒன்றும் முப்பதாம் வயதில் கடியினுல் கண்டமொன்றும் வயது எழுபத்தாறில் வரிசையாகும் சக்காத்தின் வண்மைகேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது கெண்டாதி கெண்டங்களைக் கூறுவாராயினர். அவையாவன, இவனுக்குண்டாகுங் கெண்டாதி கெண்டங்கள் நான்கு அவற்றுள்: ஜலத்தாலும், சத்துருக்களாலும், வயது 30. நாய்கடியாலுமென்க. வயது 76-ல் உண்டாகும் கெண்டத்தால் மாணமாவான் என்பதாம். 38

தானடா இவன்தானும் பிறந்தவாழ்க்கை
தகைமைசொல்லி விட்டேன்காண் தாழ்வில்லாமல்
ஊனடா திசையோகம் வாழ்க்கைகண்டம்
உத்தமமாய்ச் சொல்லிவிட்டேன் வுண்மையாக
வானடா வயசுமுதல் தப்பாதெல்லாம்
வாகான இதன்விபரம் வகுத்துச்சொன்னேன்
ஏனடா இன்னமுண்டு மைந்தாகேளு
எடுத்துரைப்பேன் பிரமமதை இசைந்துகேளே.

(இ-ள்.) தானுக இவன் பிறந்த வாழ்க்கையின் தகைமையைச் சொல்லி விட்டேன் தாழ்வானது ஒன்றுமில்லாமலும் அத்துடன் திசையும் யோகமும் வாழ்க்கையாகிய கெண்டமும் உத்தமர்களாகி உங்களுக்குச் சொல்லி விட்டேன். உண்மையாகத்தானே; இது வயது முதலாகத் தப்பாது என விபரமாக வகுத்துச் சொன்னேன்; அன்றியும் இன்னமுண்டு அந்தப் பிரமத்தை எடுத்துரைப்பேன் மனமானதுகொண்டு இசைந்து கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இங்கு கூறும் அன்னரேகையிற் பிறந்தவர்களது பலன், யோகம் வயது முதலியவனைத்துங் குறையின்றிக் கூறினேன் ஆயினும் இவனது விஷயம் இன்னும் உள்ளனவாதலால் அவ்விஷயத்தையுங் கூறுகிறேன் கேளுங்களெனக் கூறி பின்வருங் கவி முதலாக வுரைப்பாராயினர். 39

கேட்கவே நந்தீசர் பிரமாவோடு
கேவலமாய்க் கும்பமுனி ரிஷிகளெல்லாம்
வாட்கவே வானோர்கள் முனிவரெல்லாம்
வண்மையாய்க் கேளுங்கள் வரிசையாக
நாட்கவே லோகத்தில் நடக்கும்வாழ்வு
நான்சொன்ன படியதுபோல் நடக்கும்வாழ்வு
ஆட்கவே அனைவோரும் சந்தோஷித்து
அன்பான மனோன்மணியைத் தொழுதபோதே.

UraTech Document Processing Solutions

(இ-ள்.) கேட்க நந்தீசரும் பிரமாவும் இன்னும் கும்பமுனியோடு ரிஷி களும் வாரேரும் முனிவர்களும் வண்மையாக இதனைக் கேளுங்கள். உலகத்தில் நடக்கும் வாழ்வு நான் சொன்னபடி நடக்கும்; அவ்வாழ்வுயென அப்போது அனைவரும் சந்தோஷித்து அன்பாகத்தானே மனோன்மணியாளைத் தானே தொழுதபோதே எ-று.

(வி-ரை.) இங்குக் கூடியுள்ள நந்தீசர், பிரமா, அகத்தியர் மற்றுமுள்ள ரிஷிகள், முனிவர்கள் ஆகியவர்களே கேளுங்கள். யான் இதுவரையில் இவ்வுலக வாழ்வினைக் கூறியது ஒன்றுந் தவறாமல் நடக்கும் என்ற மனோன் மணியினது வார்த்தையைக் கேட்ட அனைவரும் மிக்க சந்தோஷமெய்தி, மேற்படி தேவியைத் தொழுதனர் ஆதலால், மேற்படி தேவியானவள் இன் னுங் கூறுவாராயினள் என்பதாம். 40

சங்கபாலி ரேகையின் பலன்

போதென்று இவர்களெல்லாம் போற்றிக்கொள்ள
புதுமையுள்ள உமையவளும் பெருமைசொல்வாள்
ஆதென்ற அஷ்டகன்மம் எட்டுரேகை
அன்பான திசைபால ரேகைமைந்தா
தானென்ற சங்கினுட பாலியென்பார்
தருவான ரேகையிட மார்க்கங்கேளு
காமென்ற காட்சியடா ஏகசூட்சம்
கருதுகிறேன் இதன்விபரம் காட்கிகேளே.

(இ-ள்.) மேற்கூறிய இவர்களெல்லோரும் போற்ற நிற்க அப்போது உமையவளும் பெருமையாகச் சொல்வாள். அஷ்டகன்மமாகிய எட்டு ரேகை அதாவது திசை பாலரேகை அல்லது சங்கனிடரேகை யென்பர்; அதின் மார்க்கங்களைக் கேளும்; காட்சியாக விளங்கும் ஏக சூட்சமமாகும் இதன் விபரஞ் சொல்லுகிறேன் கேளும் எ-று.

(வி-ரை.) சங்கபாலி ரேகையென்றொன்றுளது ஆனதால் அதன் விவரத்தையுங் கூறுகிறேன் கேளுங்கள். என்றதைக் கேட்ட முன்சொன்ன தேவர்கள் முனிவர்கள் பிரமன் ஆகியவர்கள் மேற்படி தேவியைத் துதிக்க அவை மகா சூக்ஷ்மமானது. அதனை அஷ்டகன்மம் எனவும் திக்குப் பாலக ரேகை எனவுங் கூறத்தகும். 41

கேளடா இவன்கையிலே மால்விரல்தன்னில்
கேவலமாய் எட்டுபுள்ளி ரெண்டுரேகை
ஆளடா இருகீற்றும் ஐந்துகீற்றும்
அன்பாக இருக்குமதின் அருமைகேளு

வாளடா இவன்கையிலே இருக்குமாகில்
　வண்மையுள்ள வரிசைகளைக் கண்டுசொல்லு
பாழடா ஒன்றுமில்லை இவன்யோகம்மைந்தா
　பக்குவமாய் திசையோகம் சொல்லுவேனே.

(இ-ள்.) கேட்பாயாக: இவன் கையின் மால்விரல் தன்னில் எட்டுப் புள்ளியும் இரண்டு ரேகையும் இரண்டு கீற்றும் ஐந்து கீற்றும் அமர்ந்திருக்கும்; அதின் அருமையைக் கேளும், அவ்வித ரேகை கையிலிருக்குமாயின் அதின் வண்மைகளைக் கண்டு சொல்லலவும் அன்றியும் ஒன்றுமில்லை; இவன் யோகம் ஆயினும் இவன் திசை யோகத்தைச் சொல்வேன் எ-று.

(வி-ரை.) இக்கவியில் மேற்படி ஐவிந்தரேகை என்பது எவ்வண்ணமிருக்குமென்பதையும் எங்கனம் உள்ள தென்பதையும் விளக்குவாராயினர். அவையாவன, மால்விரலில் இரண்டு ரேகையும் எட்டு புள்ளிகளுமா யிருப்பதுடன் மற்றொரு விரலிலும் ஐந்து இரண்டு ரேகைகளாக இருக்கும் என்பது கருத்தாகும் ஆனதால் அதன் திசையோகம் முதலியனவற்றைக் கூறுவேன் என்றனர். 42

சொல்லுவேன் இவன்பிறந்த யோகமைந்தா
　சொற்பெரிய பதினாறு பிள்ளையாகும்
அல்லுவேன் இவன்பதி னாறுபிள்ளை
　அன்பாகப் பெற்றிவன்தான் வாழ்வானப்பா
நல்லுவேன் இவனுடனே பிறந்தோராறு
　நலமான வீட்டிலேதான் பாக்கியமுண்டாம்
வெல்லுவேன் வில்தொழிலும் விநோதவித்தை
　விசிதமுள்ள திசையோக மாகும்பாரே.

(இ-ள்.) சொல்வேன் இவன் பிறந்த யோகம் பதினாற பிள்ளையாகும்; இப்பதினாறு பிள்ளையும் பெற்று அன்பாகத்தானே வாழ்குவன். இவனுடன் பிறந்தோர்கள் ஆறுபெயராகும்; நலமாகத் தானே வீட்டில் பாக்கிய முண்டாகும். வில்தொழிலும் விநோதவித்தையும் விசிதமுள்ளத் திசையோகத்தில் ஆகும் பார்க்கவும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது சகோதரர் புத்திரர் முதலிய பேரையும் வாழ்வு தன்மை முதலியனவற்றையுங் கூறுவாராயினர். அவையாவன இவனுக்குச் சகோதரர்கள் - 6. புத்திரர்கள் 16. இதுவன்றி இந்த ஜாதகன் வில்வித்தை விநோதவித்தை முதலியன உடையவனுகி மிக்க யோகத்துடன் வாழ்வான் என்பது கருத்தாகும். 43

ஆகுமடா இவன்பிறந்த நாளுங்கோளும்
　அன்பான திசையோகம் ஆய்ந்துசொல்வேன்
வாகுமடா திசையுட னவிட்டம்தன்னில்
　வரிசையாய் வியாழமதில் மனிதனாகும்

UpdaTech Document Processing Solutions

வாருமடா திசைகன்மம் யோகவாழ்க்கை
மைந்தனே சொல்லுகிறேன் வண்மையாக
வேகுமடா வறுமைமுத லிடர்களெல்லாம்
வேதாந்த நல்லறிவு விளங்குங்கேளே.

(இ-ள்.) ஆக இவன் பிறந்த நாளும் கோளும் திசையும் யோகமும் ஆய்ந்து சொல்வேன் கேட்பாயாக: அவிட்ட நட்சத்திரம் வியாழக்கிழமையில் ஜெனித்தவன்; திசை கன்மயோக வாழ்க்கையைச் சொல்லுகிறேன் வண்மை யாகத் தானே தன்னைச் சூழ்ந்த வறுமையும் இடர்கள் யாவும் நீங்கி வேதாந்த மோடு நல்லறிவு வாய்க்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த வாரம் நாள் முதலியவற்றைக் கூறு கின்றனர். அவையாவன, வியாழக்கிழமையில் அவிட்ட நக்ஷத்திரம் கூடிய நாளிற் பிறந்தான் என்பதாம். இதுவன்றி இவன் பிறந்தது முதல் இவனுக் குள்ள வறுமைத்துன்பம் முதலியனவெல்லாம் ஒழிந்தவனாகி வேதம் அறிவு முதலியன விளங்கியவனாகி யிருப்பான் என்பதாம். 44

கேளப்பா அஷ்டதிக்கு ரேகைகண்டால்
கேவலமாய் இவனுக்கு லக்கினத்தில்
வாளப்பா இவனுக்குக் கிரகம்நாலு
வண்மையாய் உச்சமுண்டு வரிசைசொல்வேன்
நாளப்பா இவனுக்குத் தேவியொன்று
நலமாக முப்பத்தி ரெண்டிலேதான்
ஆளப்பா யிவன்வயதோ ரெண்பத்தைந்தில்
அன்பான சக்கரத்தின் அமைப்புகேளே.

(இ-ள்.) கேட்பாயாக அஷ்டதிக்கு ரேகையானதைக் கண்டால் அவன் றனக்கு இலக்கினத்தில் கிரகம்நாலு உச்சம்பெற்று நிற்கும். இவனுக்குத் தாரம் ஒன்று; இவனுக்கு வயது முப்பத்திரெண்டில் விவாகமாகும்; இவன் வயது எண்பத்தைந்தில் அன்பாகிய சக்கரத்தின் அமைப்பு கேளும் சொல் வேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவ தென்னை எனின்? மேற் சொன்னபடி ரேகைகளானது எண்திக்கா யமைந்திருக்கின் இவனது ராசி சக்கரத்தில் நான்கு கிரகங்கள் உச்சம் பெற்றிருக்கும் எனவும் இவனுக்கு விவாகம் 32-ல் நடக்கும் எனவும் மனைவி ஒன்றேயாகும் எனவும் வயது 85. எனவுங் கூறுக என்பதாம். 45

கேளெனவே இவனுக்குத் திசைகேசரியோகம்
கேவலமாய்ச் சகடையது நடக்கும்பாரு
நாளெனவே நாயகனு மனேகமான
நலமான பூமிகள்தான் கொள்வான்பாரு

வாளெனவே வர்னமுள்ள ரூபனாகும்
வஞ்சனைகள் கொலைகளவு இல்லைமைந்தா
தாளெனவே தாழ்ச்சியில்லா மைந்தனுக்குத்
தைரியவான் இவன்யோக தாஷ்டிகனென்னே.

(இ-ள்.) கேட்பாயாக: மேற்கூறிய இவனுக்கு திசைக்கேசரி யோகம் சகடையாக நடக்கும். இவன் அநேகமான பூமிகளைக்கொள்வன். வர்ன முடைய ரூபமுள்ளவனாகும். வஞ்சனை, கொலை, களவு இவைகள் புரியான். தாட்சியில்லாத மைந்தனாகும். தைரியவான் யோக தாஷ்டீகன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது யோகம் முதலியனவற்றைக் கூறுவா ராயினர். அவையாவன, இவன் வாழ்நாளில் கேசரியோகம் முதலியன உடை யவனாகி வண்டி வாகனங்களிலூர்ந்து சென்று அனேக பூமி முதலியவைக ளுடன் வாழ்வான் எனவும் கூறினர். மற்றும் மிக்க அழகுடையவனும் வஞ் சனை செய்யாதவனுமாவான் என்பதாம். 46

தாட்டிகனும் மயேந்திரத்தில் முக்கால்வுண்டாம்
தைரியவான் யிவனுக்கு நிகரோயில்லை
ஆட்டிவைப்பான் லோகமெல்லாம் இவன்சொல்கேட்கும்
அண்டரண்ட புவனமெல்லாம் அடக்கும்வள்ளல்
நாட்டிவைப்பான் நாயகனு மீசன் தன்னை
நன்மைபெறப் பிரதிஷ்டை பண்ணுவிப்பான்
வாட்டமில்லா யோகமடா வண்மையாக
வரிசையாய்ச் சொல்லிவிட்டேன் வண்மைகேளே.

(இ-ள்.) மேற்கூறியோனுக்கு தாவ்டீகனுயினும் மயேந்திரத்தில் முக் கால் உண்டாம்; தைரியவான். இவனுக்கொருவரும் நிகரில்லை. உலக முழுதும் ஆட்டிவைப்பான். இவன் சொல் கேட்கும்படியாகச் செய்வான். அண்டரண்டப் புவனமெல்லாம் அடங்கும் வள்ளலாகும். ஈஸ்வரனைப் பூசை செய்து பிரதிஷ்டை செய்துவைப்பான்; லோக மாதியர்தமும் வாய்மட்டாகத் தானே சொன்னேன் வண்மையாகக் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் இவன் யோகம் வாழ்வு முதலிய பெருமை யினையே கூறுவாராயினர். அவையாவன, முன்பு கூறிய மயேந்திர ரேகை யில் முக்கால் யோகமுடையவனுய்ச் சகல சம்பத்தும் நிறைந்து அரசு செய்யுந் தன்மையுடையவனுய்ச் சிவனுக்கு வேண்டிய கைங்கரியங்களைச் செய்து வைப்பான் என்பதாம். 47

ஐவிந்த ரேகையின் பலன்

கேளடா இன்னமொரு ரேகையுண்டு
கேவலமாய்ச் சொல்லுகிறேன் கேளுகேளு
ஆளடா ஐவிந்தம் ரேகையொன்று
அப்பனே சொல்லுகிறேன் அறிவாய்க்கேளு

நாளடா நடுவரையில் இரண்டுபுள்ளி
நலமாகு முக்கவரின் நலினமாங்கேள்
தாளடா தாழ்வில்லா யோகவானும்
தனஞ்செயனும் பெருமைபெற்று வாழ்வான்பாரே.

(இ-ள்.) கேட்பாயாக: இன்னம் ஒரு ரேகையானது வுண்டு; அதன் பலன் சொல்லுகிறேன் கேளும். அதாவது ஐவிந்த ரேகை ஒன்று அது நடுவறையில் இரண்டு புள்ளியும் முக்கவரின் நலினம்போல் தோன்றும்; அவ்வித ரேகையுள்ளவன் தாழ்வில்லாத யோகவானும் பெருமையும் பெற்று வாழ்வன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மேற்படி ஐவிந்தரேகை என்பது எவ்வாறிருக்கும் என்பதைக் கூறுவாராயினர். அவையாவன, நடுவிரலில் முக்கோண வடிவமாயுள்ள ரேகையொன்றும் இரண்டு புள்ளி ரேகைகளுமாயிருக்கும். இதன்பலனுவ தென்னை எனின் மிக்க யோகவான் என்பதாம். அதாவது தனஞ்செயனை யொத்தவன் என்பதாம். 48

பார்க்கவே இவன்தானும் மூன்றும்பேராம்
பக்குவமாய் சொல்வதென்ன பரிந்துகேளு
ஏர்க்கவே ஆணிவனும் பெண்ணுரெண்டு
இயல்பாகப் பிறந்ததின்பின் னிவன்பிறந்தான்
வார்க்கவே இவன்பிறந்த பின்புமைந்தா
வண்மையாம் வறுமையெல்லாம் போச்சுதன்றோ
கார்க்கவே தேவியிட கடாட்சத்தாலே
கருதுதுவா தசிமதியாம் வாரம்தானே.

(இ-ள்.) பார்க்க இவன் மூன்றுவதுப் பேராகும் அதில் பெண் இரண்டும் ஆண் இவன் ஒன்றுகவும், பின்னுகப் பிறந்தவனுல் இவன் வறுமை யாவும் நீங்கிப்போச்சுதாம்; பிறந்த திதி துவாதசி வாரம் திங்கட்கிழமை யாம் எ-று.

(வி-ரை.) இக்கவியில் கூறிய தென்னவெனில், இவன் மூன்றும் பிறவியும் இவனுக்கு முன் பிறந்தவர் இரண்டு பெண்களேயாகும் எனவும் இவன் ஜெனித்தவுடனேயே இவன் குடும்பத்திலுள்ள துன்பம் அனைத்தும் ஒழிந்தன என்பதாம். மற்றுமிவன் பிறந்தது திங்களில் தசமி திதி என்பதாம்.

வாரமென்ற புனர்பூசம் ரெண்டாங்காலாம்
வண்மையாய்ப் பிறந்ததிவன் மாநிலத்தில்
தாரமென்ற இவனுக்கு ரெண்டுதாரம்
தண்மையாய் முடியுமென்று தகைமைசொல்வேன்

LuraTech Document Processing Solutions

பாரமென்ற இவன்வயதோ ரிருபதுக்குள்
பண்பான விவாகமது ஆகும்பாரு
சாரமென்ற இவன்வயது நாற்பத்நாறு
சற்குணனும் இறந்திடுவான் சார்புதானே.

(இ-ள்.) வாரமாகிய புனர்பூசம் இரண்டாங்காலாகும்; வண்மையாகத் தானே இவன் பூமியிற் பிறந்தோனுகும். இவனுக்கு இரண்டு தாரமாகும்; வயது இருபதுக்குள் விவாகமானது ஆகும். வயது நாற்பத்தாறில் சற்குணனுகிய இவன் மரணமாகிவிடுவான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின்? இவனது நக்ஷத்திரம் புனர்பூசம் இரண்டாங்கால் எனவும், இவன் வயது 20 க்குள் விவாகம் நடக்குமாயினும் மனைவியர் இருவர் எனவும் இவனுக்கு வயது 46-எனவுங் கூறினர் என்பதாம். 50

தானென்ற இவனுக்குக் குழந்தைமூன்றும்
சற்குணமாய்ப் பிறக்குமென்பர் சான்றோர்தாமும்
வானென்ற இல்லறத்தில் அனேகபாக்கியம்
வண்மையாய் உண்டாகும் வரிசைகேளு
ஆனென்ற ஐங்கரனர் உதவியாலே
ஆனந்த யோகமடா அப்பாகேளு
ஊனென்ற உட்கருத்து மிகவேவுண்டாம்
உண்மையாய்ச் சொல்லிவிட்டேன் உறுதிதானே.

(இ-ள்.) இவனுக்குக் குழந்தை மூன்றும்; சற்குணமாகப் பிறக்குமெனப் பெரியோர் கூறினர். அன்றியும் இல்லத்தில் அனேக பாக்கியம் வரிசையாக உண்டாகும். ஐங்கரனுடைய உதவியினுலேயே அனந்தமாகிய யோகம் வாய்க்கும்; உட்கருத் துடையவனுருவன்; இப்பலன் உண்மையாகத் தானே சொல்லி விட்டேன் எ-று.

(வி-ரை.) இக்கவியி லிவனுக்கு புத்திரர் போகம் முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இவனுக்குண்டாகும் புத்திரர்கள் மூவர் எனவும் விநாயக மூர்த்தியினது உதவியால் அனேக சம்பத்து நிறைந்தவனுகி மிக்க யோகத்துடனும் அறிவுடனும் வாழ்ந்திருப்பான் என்பதாம். 51

கடோற்கய ரேகையின் பலன்

உறுதியப்பா இன்னமொரு ரேகைமைந்தா
உண்மையாய்ச் சொல்லுகிறேன் உறுதிகேளு
பருதிமதி யுள்ளளவுங் கீர்த்தியோகம்
பார்த்திபனு மேலவர்கள் பணிந்துநிற்பார்

பருதியென்ற கடோற்கயன்தன் ரேகையைத்தான்
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பண்பாய்மைந்தா
திருதியென்ற சுண்டுவிரற் கீழேமைந்தா
திரமாக யிருக்குமடா செப்பக்கேளே.

(இ-ள்.) உறுதியாகத்தானே இன்னமொரு ரேகையைக் கேட்பாய்; சூரியன் சந்திரன் உள்ளளவும் பார்த்திபனாக இவனை மேலோர்கள் பணிந்து நிற்பர். பருதியென்னும் கடோற்கயன் ரேகையைச் சொல்லுகிறேன் அது சுண்டுவிரற்கு கீழே திரமாகத்தானே யிருக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின்? மேலே சொன்ன கடோற்கயன் ரேகை என்பது, சுண்டு விரலுக்குக் கீழே அமைந்திருப்ப தெனவும் இவன் ஜனன அமைப்பால் சூரிய சந்திரர்கள் உள்ளளவும் கீர்த்திவும் யோகமும் உண்டெனவும் பார்த்திபனைப்போன்று மேலோ ரனைவரும் போற்றத் தகுந்தவனாயிருப்பான் என்பதாம். மற்று மிந்த ரேகை விஷயத்தைப் பின் வரும் பாட்டாலும் விளக்குகின்றனர். 52

கேட்கவே இருபுள்ளி இரண்டுகீறு
கேவலமாம் விரல்தனிலே ஏறிநிற்கும்
ஆர்க்கவே கடோற்கயன் தான் இருந்துதானால்
அன்பாகச் சொல்லுகிறேன் ஆய்ந்துதானே
வார்க்கவே யிவன்பிறந்த யோகவாழ்க்கை
வண்மையாய்ச் சொல்லுகிறேன் வரிசையாக
ஏர்க்கவே ஏகாதசி இயன்றநாளில்
என்னவே அஸ்தமென்ற இயல்பதாமே.

(இ-ள்.) கேட்பாயாக: மேற்கூறிய ரேகை இரண்டு புள்ளியும் இரண்டு கீறு விரலில் யேறிநிற்கும்; அவ்வித ரேகையானது இருக்குமாகின் அதின் பலன் ஆய்ந்து சொல்லுகின்றேன். இவன் பிறந்த யோகவாழ்க்கை யாவும் வரிசையாகச் சொல்லுகின்றேன்: திதி ஏகாதசி அஸ்த நட்சத்திரம் இன்னமும் கேட்பாயாக எ-று.

(வி-ரை.) மேற்சொன்ன கடோற்கய ரேகை என்பது முன்சொன்ன சுண்டுவிரலின் கீழ் இரண்டு புள்ளியாயும் இரண்டு கீற்றுகளாயு மமைந்திருக்கும் மற்று மிவன் பிறந்தது ஏகாதசியும் அஸ்த நக்ஷத்திரமும் கூடிய நாளாகும் என்பதாம். கீழ்வருங் கவியால் ஜெனனவாரம் என்ன வென்பதை விளக்குவார். 53

தாகவே யிவன்பிறந்தான் செய்வாய்தன்னில்
தகமையுள்ள மைந்தனுக்குச் சார்புகேளு
ஏகவே யிவன்பிறந்த திரவேயாகும்
ஏறமுள்ள நாழிகையோ யிருபத்தைந்தாம்

வாகவே வர்ணிப்பு உள்ளமைந்தன்
மன்மதன்போல் அழகனடா வரிசைகாண்கில்
காகவே யிவன்பிறந்த ஐந்தாமாதம்
கருணையாம் பிதுருதனம் எடுப்பான்றுனே.

(இ-ள்.) மேற்கூறியோன் செவ்வாய்க்கிழமையிலே ஜெனனமானவன்; அவன் பிறந்த சார்பு நாழிகையோ இருபத்தைந்தாகும்; களிப்புடைய மைந்தன்; மன்மதனைப்போல் அழகுடையவன்; இவன் பிறந்த ஐந்தாமாதம் பிதுருடைய தனமெடுப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னை எனின், இவன் ஜனித்தது செவ்வாய்க்கிழமை இரவு இருபத்தைந்து நாழிகையிற் பிறந்தவன் எனவும், இவன் ஜனித்த சக்கரத்தில் அமைப்பானது மிக்க அழகுடையவனுகியும் இவன் ஜனித்த ஐந்தாம் மாதத்தில் இவன் பிதாவானவன் புதையலொன்றைக் கண்டெடுப்பான் எனவுங் கூறவேண்டுவதாகும். 54

எடுத்திடவே யிவன்பிதா வழியிற்போகும்
ஏற்றமுள்ள விருட்சமொன்று அடியோடுவீழ
கடுத்திடவே மரவேறிற் கிளம்பிமேலே
கனமாக நிதியொன்று கண்டுமைந்தன்
மடுத்திடவே மரவேரிற் கிளம்பிமேலே
வண்மையாய் மனையில்வந்து பெரியோனுனன்
இடுக்கமில்லா மனையிலவன் வாழ்வான்பாரு
இயல்பான மைந்தனுக்கு இனஞ்சொல்வேனே.

(இ-ள்.) எடுக்கினும் மேற்கூறியோன் பிதாவானவன் வழியிற் போகும் போது விருட்சமானது ஒன்று அடியோடே சாய்ந்து வீழ்ந்து விருட்சத்தின் வேர் மேலே கிளம்ப அங்கு நிதியானது ஒன்று கண்டு அதை யெடுத்துவந்து மனையில் வைத்துக்கொண்டு பெரியோனுகியும் இடுக்கமானது சற்றுமில்லாமல் வாழ்குவன்; இன்னமும் எழிலாகத்தானே மைந்தனுக்கு இனம் சொல்வேன் எ-று.

(வி-ரை.) மேலே சொன்னபடி பிதாவுக்கு எவ்வாறு பொருள் கிடைக்கும் என்பதை இங்கு விளக்கிக் காட்டினர். அவையாவன, மேற்படி பிதாவானவன் பாதைமார்க்கமாய்ச் செல்லுகையில் ஓர் மரமானது வேருடன் சாய மேற்படி வேரிலிருந்து ஓர் தனப்புதையல் கிடைக்க அதை எடுத்துவந்து மிக்க பெருமையுடன் வாழ்ந்தான் என்பதாம். 55

சொல்லுவேன் யிவனுக்குத் தாரமொன்று
சொற்பெரிய யிவன்வயதோ ரெழுபத்திரெண்டாம்
அல்லுவேன் இவனுக்குப் பாலரைவர்
அன்பாகப் பிறக்குமென்றே அறிந்துகேளு

நல்லுவேன் இவனுக்கு முன்னோர்சாபம்
நலமாகச் சாபமதிற் பட்டான்மைந்தன்
எல்லுவேன் இவன்சாபம் பொல்லாச்சாபம்
இயல்பாகத் தீர்க்கபென்று இனிதுகூறே.

(இ-ள்.) சொல்லும்படியாக மேற் கூறியோனுக்குத் தாரமொன்று, வயது எழுபத்திரெண்டாகும்; சந்ததி ஐந்தாம், இவனுக்கு முன்னோர் சாபம் உண்டாம்; அதுவும் பொல்லாதாம், அது தீராதென்றுங் கூறவும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது மனைவி, புத்திரர், ஆயுள் முதலியவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இவனுக்கு மனை ஒன்றும் புத்திரர் ஐவர்களுமாகும். இவனுக்கு வயதோ 72 ஆகும். இதுவன்றி இவனுக்கு முன்னோர் சாபம் ஒன்றுளது அவை மகா கொடியது என்பதாம். 56

குவண்டை ரேகையின் பலன்

கூறிடவே குவண்டையிட ரேகைமைந்தா
குணமாகச் சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
பாறிடவே நுனிகளெல்லாம் சங்குதிருகுபோலும்
பண்பாக யிருந்தாக்கால் பகரக்கேளு
காறிடவே யிவன்கையிலே காசுதங்கும்
கனத்தபண்டம் இவன்கையிலே யிருக்கும்பாரு
பாறிடவே இசையுள்ள மைந்தனென்று
பெற்றியுடன் சொல்லுகிறேன் பெருமையாச்சே.

(இ-ள்.) கூறிடக் குவண்டை ரேகையைச் சொல்வேன் கேளும். அது எவ்விதமிருக்குமெனில், நுனிகளெல்லாம் திருகுபோலும் பண்பாகத்தானே இருக்குமாகின் அவன் தனக்குக் கையில் காசு தங்கும். சனமானப் பண்டங்கள் இருக்கும்; இசையுள்ள மைந்தனுகுவன்; இவனுடைய பெருமையை இன்னம் சொல்வேன் எ-று.

(வி-ரை.) இங்குக் கூறும் குவண்டைரேகை என்பது எவ்வண்ணமிருக்கும் என்பதை இங்கு விளக்கியுள்ளனர். அவையாவன, மேற்படி குவண்டை ரேகை என்பது, ஒவ்வொரு விரலின் நுனியிலும் சங்கு திருகு போன்று காணப்படும் என்பதாம். அப்படி ரேகை யமையப் பிறந்தவர் தனவந்தராவர் என்பது கருத்தாகும். 57

ஆச்சப்பா குவண்டையுட ரேகைதானும்
அன்பான விரல்நுனியில் இருக்கும்பாரு
பேச்சப்பா யிவன்கையிலே காசுண்டப்பா
பிரபலமாய் இருக்காது பேணிப்பாரு

வாச்சப்பா வைரமணி ரேகைதானும்
வளமாகச் சொல்லுகிறேன் கேளுகேளு
காச்சப்பா காச்சுதடா கருணையாலே
கைகண்ட வித்தையடா கருணைகூறே.

(இ-ள்.) ஆகவும் குவண்டை யென்னும் ரேகையானது விரல்களின் நுனியில் இருக்கும். அவ்விதமிருப்போன் கையில் காசானது உண்டாம். பிரபலமாக இராது; அன்றியும் வைரமணி ரேகையைச் சொல்லுகிறேன் கேளும்; காசானது காய்த்தாப்போல் கருணையானது பெருகும்; கைகண்ட வித்தையாமெனக் கருணை கூறுவாய் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மேற்படி குவண்டை ரேகை யுடையவர்களுக்கு தனமுண்டு எனினும், அவை அதிகம் எனக் கூறுதற் கில்லை என்றனர். மேற் சொன்ன ரேகையுடன் வைரமணி ரேகை என்பது யிருக்குமே யாயின் அவன் மிக்க அபூர்வமாகிய வித்தை யனைத்தையும் தெரிந்து கொள்வான் என்பதாம். 58

கருணைவைத்து வைரமணி ரேகைதானும்
கார்குழலாள் மாதுமையாள் கருணைகூர்வாள்
வருணைவைத்து வைரமணி ரேகைதானும்
வயம்பெறவே நற்கரத்தில் இருக்கும்பாரு
அருணைவைத்துப் பிறந்தமைந்தன் இவனையப்பா
ஆச்சரியம் பெற்றமைந்தன் அதிகம்பாரு
திருணைவைத்து தேவரிலே ஒருவனப்பா
திசையோகம் வல்லமைதான் செப்பொணாதே.

LuraTech
Document Processing Solutions

(இ-ள்.) கருணையாக வைரமணி ரேகையின் வலுவால் உமையவள் கருணையானது கூறுவாள். அந்த வைரமணி ரேகையானது நன்மையாகக் கரத்திலிருக்கும். அவன் அருமையாகப் பிறந்த மைந்தனுகும்; ஆச்சரிய முடையவன்; தேவர்களிலொருவன்; இவன் திசை யோக வல்லமையைச் சொல்ல வொண்ணுதாம் எ-று.

(வி-ரை.) மேற்சொன்ன வைரமணி ரேகை யுடையவர்களது பெருமை யினைக் கூறுகின்றனர். அவையாவன, மேற்படி வைரமணி ரேகையுடைய வர்கள் தேவர்களி லொருவனேயாகும் எனவும், கடவுளின் திருவருளாலேயே இந்த ஜாதகன் இப்பூமியின்கண் எவரும் ஆச்சர்யப்படும் வண்ணமா யிவன் பிறந்தான் என்பது கருத்தாகும். 59

செப்புகிறேன் வயிரமணி ரேகையுற்றால்
செபமான விவன்தானும் பாஞ்சாலந்தான்
ஒப்புகிறேன் உத்தமியாள் பெற்றமைந்தன்
ஓகோகோ யிவனுக்கு உறுதிகேளு

மெய்ப்புகிறேன் இவன்தனக்கு மதியாம்வாரம்
மேன்மையா மமரபட்சந் தசமியாகும்
அப்புகிறேன் ஆண்டவனுர் உதவியாலே
ஆண்பிள்ளை ஓரிரண்டு பிறக்கும்பாரே.

(இ-ள்.) வயிரமணி ரேகையானது இருந்தால் ஜெயமுடைய பாஞ்சாலனும்; உத்தமியாள் பெற்ற மைந்தனுகும்; இவனுடைய உறுதியைக் கேளும். திங்கட்கிழமை அமரபட்சம் திதி சத்தமி இத்தினத்தில் ஆண்டவனுடைய உதவியினுல் ஆண் பிள்ளை இரண்டு பிறக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவன, மேலே சொன்ன ரேகையுடன் வயிரமணி ரேகை என்பதும் தன் கையிலிருக்குமேயாயின், அவன் பாஞ்சாலனேயாகும் என்பது கருத்தாகும். மற்றும் இவன் ஓர் உத்தமியின் கெர்ப்பத்தி லுதித்தவன் என்றும், திங்கட்கிழமையில் அமரபக்ஷத்து தசமி திதியில் இவன் பிறந்தான் என்பதும் கருத்தாகும், மற்றும் இவனுக்கு புத்திரர் இரண்டு என்பதறியவும். 60

பார்க்கவே யிவன்தானும் ஏழாம்பேராம்
பண்பான பக்குவத்தி லிறந்துபோவார்
ஆர்க்கவே தசமியிலே பிறந்தான்மைந்தன்
அன்பான உத்திரத்தில் அவதரித்தான்
ஏர்க்கவே யிவன்பிறந்த யில்லறந்தான்
இயல்பான பெரியமனை யிரண்டதாகும்
சார்க்கவே சற்புத்திரன் இவன்பிதாவும்
தாயுந்தான் முதற்சாதி மங்கையாமே.

(இ-ள்.) பார்க்க மேற்கூறிய இவ்னேன் ஏழாம் பெயராம்; பக்குவமாக விருப்பான்; அன்றியும் தசமியில் பிறந்தவன்; உத்திர நட்சத்திரத்தில் அவதரித்தவன்; இவன் பிறந்த வீடு பெரியதாகிய மனை இரண்டாகும்; சற்புத்திரன் இவன் பிதாவுந் தாயார் முதற்சாதி மங்கையாமே எ-று.

(வி ரை.) இக்கவியா லிவன் ஏழாம் பிறவி என்றனர். மேற்படி சகோதரர் தன் நடுவயதிற் றுனே இறந்துபோவார் என்றனர். மற்றும் இவன் பிறந்தது தசமியும் உத்திர நக்ஷத்திரமுங் கூடியநாளாகும் என்பதாம். மேலும் இவன் பிறந்த மனை இரண்டென்பதும். தாயானவள் உத்தமியும் தந்தை சற்குணனும் ஆவான் என்பது கருத்தாம். 61

ஆகவே யிவன்பிறந்த ஆறுமாண்டு
அன்பான மாதாவு மடிவாள்பாரு
ஏகவே யிவன்பிறந்த மூன்றுமாண்டு
இயல்பாகப் பிதாவுந்தான் இறந்துபோவான்

பாகவே பரப்பிரம்ம யோகத்தாலே
  பாக்கியங்கள் பெற்றிடுவான் பாலன்தானும்
வாகவே வாலையாம் பருவந்தன்னில்
  வலுவான வறுமையால் மெலிவான்தானே.

(இ-ள்.) ஆகத்தானும் இவன் பிறந்த ஆறும் வருடம் தாயார் மரணமாகி விடுவாள்; இவன் பிறந்த மூன்றும் வருஷம் தகப்பன் மரணமாகி விடுவன்; அன்றியும் பரப்பிரமத்தினுடைய யோகத்தினல் பாக்கியங்கள் பெருகுவன்; பாலன் வாலிபத்தில் வறுமையால் மெலிகுவான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது தாய் தந்தையர்களது ஆயுள் முதலியன வற்றைக் கூறுகின்றனர். அவையாவன, இவன் ஜனித்த ஆறும் வயதில் மாதாவும் மூன்றும் வயதில் பிதாவும் மடிவதுடன் தன் வாலைப் பருவத்தில் வறுமைத் துன்பத்தால் வாடுவானுயினும் கடவுள் கிருபையால் நீண்ட பாக்கியத்தைப் பெறுவான் என்பது கருத்தாகும். 62

மெலிவதென்ன யிவனுக்குப் பதினலாண்டு
  மேன்மையுள்ள மைந்தனிவன் மெலிவான்பாரு
அலிவதென்ன யிவனுக்குத் திசையோகந்தான்
  ஆண்டவனுர் அளித்திடுவர் பதினறுந்தான்
ஒலிவதென்ன யிவனுக்கு உத்தியோகம்
  உற்றதொரு அரண்மனையில் எழுதலாச்சே
பலிவதென்ன யோகத்தால் பாக்கியம்வந்து
  பலித்ததடா திசையோகம் பண்பதாமே.

(இ-ள்.) மேற்கூறிய பருவமாகிய பதினலாண்டில் மேன்மையாகிய பாலன் மெலிகுவான்; இவனுக்கு திசையோகம் ஆண்டவனுடைய கிருபையால் பதினறு வயதில் வாய்க்கும்; இவனுக்கு உத்தியோகம் இராஜாக்களுடைய மனையில் கணக்கெழுதுவான். யோகத்தினல் பாக்கியமானது பெருகி பலித்தது திசையும் யோகமும் உண்டாம் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மேற்படி வறுமைத் துன்பம் என்பது எத்தனை வயது வரையில் என்பதைக் கூறுவாராயினர். அவையாவன, வயது 14-வரையில் என்பதாம். மேற்படி 16-வயதுக்குமேல் கடவுள் சகல பாக்கியத்தையும் கொடுப்பாரென்க. மற்றும் இவனுக்கு எழுத்து மூலமான உத்தியோகம் கிடைக்கும் என்றனர். 63

ஆகவே யிவன்வயதோ ரிருபத்தைந்தில்
  அன்பான ராஜாக்களுறவுமாமே
வாகவே யிவன்வயதோ ரிருபத்துநாலில்
  வரிசையாய்ப் பெரியிடத்தில் விவாகமாச்சு

பாகவே பத்தனுக்கு உத்தியோகந்தான்
பண்பாக நடக்குமென்று பகரலாகும்
ஆகவே யிவன்தேவி மூலத்தாலே
ஆனயிளை யவளாண்மை செய்திட்டாளே.

(இ-ள்.) ஆக மேற்கூறிய இவனுக்கு வயது இருபத்வைதந்தில் இராஜாக்கள் உறவுகூடும்; வயது இருபத்திஞலில் பெரிய இடத்தில் விவாகமாகும்; உத்தியோகம் பண்பாக நடக்கும். ஆயினும் இவனுடைய தேவியின் மூலத்தால் இலட்சுமியும் ஆண்மையானது புரிகுவாள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின், வயது 25 ல் அரசர்களுறவு உண்டாதலும், 24-ல் விவாகமும் இந்த ஜாதகனுக்குத் தான் செய்யும் உத்தியோகத்தால் தனம் உண்டாவதுடன் இவனது மனைவியாலும் லக்ஷிமி கடாக்ஷ முண்டாகிச் சுகித்திருப்பான் என்பது கருத்தாகும். 64

செய்திடவே யிவனுக்குக் குழவியெட்டாம்
செல்வமுண்டாம் ஆயுசுண்டாம் திரமாய்த்தானும்
ஐதிடவே ஆண் ஆறு பெண்ணிரண்டு
அப்பனே யோகத்தால் பிறந்தார்மைந்தர்
பாடிடவே பாமனுட அருளினலே
பாக்கியங்கள் வந்துதடா பலிதஞ்சொன்னேன்
ஆடிடவே அண்டத்தி லிவனைப்போலே
ஆச்சரியம் பெற்றமைந்த னில்லைகேளே.

(இ-ள்.) செய்யினும் இவனுக்குப் பிள்ளைகள் எட்டாம். அவர்கட்கு செல்வமும் ஆயுசுமுண்டாம்; அதில் ஆண் ஆறு பெண் இரண்டாம்; யோகத்தினல் பிறந்தவர்களாகும். அன்றியும் பரமசிவனுடைய அருளினல் பாக்கியங்கள் உண்டாயினவாமென்று பலிதமானது சொன்னன். அகிலத்தில் இவனைப்போல் ஆச்சரியம் பெற்றவரில்லை கேட்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது புத்திரர் முதலிய யோக விவரங்களைக் கூறுவாராயினர். அவையாவன, இவனுக்குண்டாகுங் குழவிகள் எட்டு எனவும் அவற்றுள் 6-ஆண்களும், 2-பெண்களுமாகும் என்பதாம். மற்றும் இப்பூமியின்கண் இவனைப்போன்ற யோகமுடையவர்கள் இல்லையென்றது அறியத்தகுந்ததாகும். 65

கேளப்பா யிவனுக்குக் கோசரங்கள்
கேவலமாய் கிரகமது நாலுண்டாகும்
வாளப்பா யிவனுக்கு ராகுதோஷம்
வளமையாய் நாற்பத்தி ஆறிலேதான்

ஆளப்பா யிவனுக்குப் பொல்லாரோகம்
  ஆண்மையால் வந்ததென்று அறிந்துபாரு
மீளப்பா பொல்லாத கண்டமுண்டு
  விருதாவி லிவனைத்தான் அடிக்கும்பாரே.

(இ-ள்.) கேட்க மேற்கூறியோனுக்கு கோட்சாரத்தில் கிரகம் நாலு நிற்கும்; அதில் இராகுதோஷம் வயது நாற்பத்தியாறில் அடுக்கும்; அதினால் பொல்லாத ரோகமும் வண்மையால் வந்தனுகும் அத்துடன் பொல்லாத கண்டமும் வந்து விருதாவில் இவனை யடிக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிவனது கிரக அமைப்பு முதலியவற்றையும் கெண்ட முதலியனவற்றையும் கூறுவாராயினர். அவையாவன, இவனுக்கு நான்கு கிரகங்கள் பலம் பெற்றிருக்கும் என்றனர். மற்றும் இவன் வயது 46-ல் இராகுவினது தோஷத்தால் கொடிய ரோகமுண்டாகி அதனுல் கெண்டாதி கெண்டங்களுண்டு என்பதாம். 66

பார்க்கவே வச்சிரமணி ரேகைமைந்தா
  பண்பாகச் சொல்லிவிட்டேன் பலிதமாக
ஏர்க்கவே யிவனுடைய திசையும்வாழ்வும்
  இயல்பான யோகமுதல் காணம்நாளும்
வார்க்கவே வச்சிரமணி ரேகைமைந்தா
  வளமையுள்ள நட்புமுத லெல்லாஞ்சொன்னேன்
ஆர்க்கவே சக்காத்தின் அமைப்புமுதலாய்
  அன்பாகச் சொல்லிவிட்டேன் ஆய்ந்துபாரே.

(இ-ள்.) பார்க்க வச்சிரமணி ரேகையின் பலிதம் சொல்லி விட்டேன்; அத்துடன் இவனுடைய திசைவாழ்க்கை யோகம் காணம் நாள் வச்சிரமணி ரேகையின் குறி நட்பு முதலாகியதெல்லாஞ் சொன்னேன்; அன்றியும் சக்காத்தின் அமைப்பும் சொல்லி விட்டேன் ஆய்ந்து பார்க்கவும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது என்னவெனில் இங்குக்கூறிய வச்சிர மணி ரேகை என்பதின் பலனையும் ஜெனனவாரம் திதி நக்ஷத்திரம் முதலிய வற்றையும் கிரக அடைவி முதலியனவற்றையும் விவரமாய் சொல்லி விட்ட னன் என்பது கருத்தாகும். 67

பார்க்கவே வச்சிரமணி ரேகைமைந்தா
  பண்பாகச் சொல்லுகிறேன் பரிந்துகேளு
ஏர்க்கவே அதினுடைய விபரமெல்லாம்
  இயல்பாகச் சொல்லிவிட்டேன் மூன்றுங்காண்டம்

UniTech Document Processing Solutions

தார்க்கவே தன்னுடைய யோகமெல்லாம்
  தைரியமாய்ச் சொல்லிவிட்டேன் சார்பதாக
மார்க்கமாய் மைநாக ரேகைமைந்தா
  மகுத்துவத்தைச் சொல்லுகிறேன் மருவிக்கேளே.

(இ-ள்.) வச்சிரமணி ரேகை சொல்லுகிறேன் பரிந்துக் கேட்பாயாக: ரேகையினுடைய விபரமெல்லாம் சொன்னேன் மூன்றுங் காண்டம் தன்னுடைய யோகம் யாவும் தைரியமாகச் சொல்லிவிட்டேன். இன்னமும் மைநாக ரேகையின் மகத்துவத்தைச் சொல்லுகிறேன் கேளும் எ-று.

(வி-ரை.) இங்குக் கூறிய இரண்டாங் காண்டத்தால் வச்சிரமணி ரேகை என்பதின் பலனையும், யோகமுண்டாகும் காலத்தையும், கெண்டாதி கெண்டத்தையும் விவரமாய்க் கூறிவிட்டேன். ஆதலால், பின் வரும் கவி முதல் மைநாக ரேகையினது பலாபலன்களைக் கூறுகின்றனன் எனக் கூறி பின்வருவனவற்றால் விளக்குகின்றனர். 68

மைநாக ரேகையின் பலன்

கேழ்க்கவே யின்னமுந்தான் மைநாகத்தின்
  கேவலங்க ளானதொரு ரேகைகேளு
வாழ்க்கவே மைவிந்தன் இருக்கையாலே
  வளமாக இருக்கிறதை வரிசைகேளு
தாழ்க்கவே மைநாகம் சமத்துதானும்
  தனிமையாய்ச் சொல்லுகிறேன் சார்புகேளு
நாட்கவே நாலுவரை யிரண்டுபுள்ளி
  நலமான இருகோணம் நாடிக்காணே.

(இ-ள்.) கேட்க மைநாக ரேகையானது மைவிந்தனிருக்கையால் அதின் வரிசையைக் கேளும்; மைநாகனுடைய சமத்தும் தனிமையாகச் சொல்லுகிறேன் சார்பைக்கேளும்; நான்குவரையும் இரண்டு புள்ளியும் இருகோணமும் காண்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவிமுதல் மைவிந்த ரேகை அல்லது மைநாக ரேகையினது பலாபலன்களைக் கூறுகின்றனர். அவையாவன, மேற்படி மைநாகம் என்பது, நான்கு வரைகளாயும் இரண்டு புள்ளிகளாயும் இருகோணமாயும் அமைந்திருக்கும் என்பதாம். மற்றும் இவை மகா சமர்த்துடைய ரேகை என்பது கருத்தாகும். 69

காணுகின்ற மைநாகம் கையிலானால்
  கனம்பெற்று வாழ்வுண்டாம் நன்றாய்க்கேளு
தோணுகின்ற இவன்யோகம் நல்லயோகம்
  தொல்லைமெத்த இல்லாத தொழிலேயாவான்

UraTech Document Processing Solutions

வாணாகின்ற வர்ணலக்ஷம் தொழிலேசெய்வான்
  வர்ணிப்பு வுள்ளமைந்தன் அழகனாவான்
வீணாகின்ற இவன்பிறந்த மனையிலேதான்
  விகல்பமில்லாச் செல்வத்தோர் மைந்தனாவான்.

(இ-ள்.) காணும்படியாய் மைநாகம் சையிலிருக்குமாகின் அவன் கனமானது பெற்று வாழ்குவன்; இவனுடைய யோகம் நல்லபோகம்; தொல்லையில்லாத தொழில் புரிகுவன்; வர்ணிக்கத்தக்க அழகுடையவன்; இவன் பிறந்த மனையில் விகற்பமானது இல்லாமல் செல்வமுடையவர்களின் மைந்தனாகுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது என்னவெனில், மேலே சொன்ன மைநாகரேகை என்பது அமைந்திருக்குமேயாமாயின் மிக்க யோகம் உடையவன் எனவும், எக்காலத்தும் தொல்லையற்றவனும் அனேக தொழில்களைச் செய்பவனும் அழகனும் இவனில்லத்தி லிவனொருவனே மிக்க செல்வமுடையவனாவன் எனக் கூறுவதாம். 70

ஆவதப்பா இவன்பிறவி அஞ்சுபேராம்
  அருமையா யிவன்தானும் நாலாம்பேராம்
காவதப்பா பெண்ணொன்று பிறக்குமைந்தா
  கருணைசேர் இவன்யோகம் நசிக்கும்பாராய்
ஆவதப்பா ஆச்சரியம் பெற்றபாலன்
  ஆய்ந்துசொல்வேன் மைநாகப் பெருமைதானும்
மாவதப்பா ராஜ்ஜியத்தில் மந்திரியேயாவான்
  மைந்தனே இவன்பிறந்த வாழ்க்கைசொல்லே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) ஆவதோடு இவன் பிறவி ஐந்து பெயராகும்; அதில் இவன் நாலாம் பேராகும்; இவனுடன் பெண் ஒன்றும் பிறக்கும்; இவனுடைய யோகம் நசிக்கும்; ஆச்சரியம் பெற்ற பலனாகும். ஆய்ந்து சொல்வேன் மைநாகப் பெருமைதனை; இவன் இராஜ்ஜியத்தில் மந்திரியாகுவன்; இவன் பிறந்த வாழ்க்கையைச் சொல்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது சகோதரர் முதலியவர்களது பலாபலன்களைக் கூறுவாராயினர். அவையாவன, உடன்பிறந்தோர் ஐவருள் பெண்ணொருவளெனவும், அக்காலம் இவனுக்கு யோகம் தாழ்வடையுமாயினும் பிற்காலம் யோகமுடையவனாகி ராஜாங்கத்தில் மந்திரித்தொழில் செய்யுந் தன்மையுடையவன் ஆவன் என்பதாம். 71

சொல்லவே இவன்பிறந்த வேளைதானும்
  சொற்பெரிய வெள்ளியினில் இரவின்போது
அல்லவே சத்தமியும் பூரட்டாதி
  ஆனதொரு மூன்றாங்கால் பிறந்தாரன்றோ

வல்லவே இருமனையாய்ப் பிறந்தவீடு
   வாழ்மனையில் தென்பாலில் வீட்டிலேதான்
நல்லவே வலதுகைப் பக்கந்தன்னில்
   நலமான மச்சம்ஒன் றுண்டுகாணே.

(இ-ள்.) சொல்ல இவன் பிறந்தவாரம் வெள்ளிக்கிழமை இரவு. திதி சத்தமி, நட்சத்திரம் பூரட்டாதி, அதில் மூன்றாங்காலில் பிறந்தவன். அன்றியும் இவன் பிறந்தது இருமனையான வீடு. அதில் தென்பால் வீடு. இவனுக்கு வலதுகை பக்கம் மச்சமொன்று இருக்கும் பார்க்கவும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்த லக்ஷணம் நாள் கோள் முதலிய வற்றைக் கூறுவாராயினர். அவையாவன, சுக்கிரவாரம் இரவில் சப்தமியும் பூரட்டாதி மூன்றாங்காலிலும் பிறந்தான் என்றனர். மற்றும் இருமனையில் தென்வாயிலுள்ள வீட்டில் பிறந்தவனும், வலப்பக்கத்தில் மச்சத்துடனும் பிறந்தான் என்பது கருத்தாகும். 72

காணுமடா யிவன்வயதோ ரெழுபத்தெட்டாம்
   கைபாகம் மிச்சமுள்ள கருணைவீரன்
ஆணுமடா யிவன்யோகம் அதிகவான்தான்
   அப்பனே சொல்லுகிறேன் ஆய்ந்துதானே
வாணுமடா மைநாக ரேகையாலே
   வச்சிரம்போல் பிள்ளையிவன் வாழ்வான்பாரு
தாணுமடா யிவன்பிறந்த யோகத்தாலே
   தாயுமையாள் உதவியினால் எல்லாமாச்சே.

(இ-ள்.) காண இவன் வயது எழுபத்தெட்டில் கைபாகமும் மிச்சமுள்ளக் கருணைவீரனாகும். அதிக யோகவானாகுவன். மைநாக ரேகையினால் வச்சிரம்போல இவன் வாழ்குவன்; இவன் பிறந்த யோகத்தினால் உமையவளுடைய கிருபையால் யாவும் ஆச்சுதாம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின், இவனுக்கு வயது 78 எனவும், உமையவளது கிருபாகடாக்ஷத்தால் மிக்க யோக முடையவனும், கருணையுடையவன் வீரன் எனவுங் கூறுவதுடன், வச்சிரத்தையொத்த அழகிய குழவிகளைப் பெற்று வாழ்வன் என்பது கருத்தாகும். 73

ஆச்சப்பா யிவன்பிறந்த ஆறுமாண்டு
   அன்பாக யிவன்பிறந்த சயனம்தன்னில்
பேச்சப்பா ஒருபேயே வந்துதானும்
   பிரபலமாம் நீதியுள்ள யிடத்திலேதான்

வாச்சப்பா அழைத்துப்போய் நிதியேகாட்டும்
　வகையாக மறுநாளில் மைந்தன்சென்று
நாச்சப்பா தட்சணத்தில் நிதியெடுத்து
　நாஷ்டியனும் குபேரன்போல் ஆனன்பாரே.

(இ-ள்.) ஆச்சென இவன் பிறந்த ஆறும் வருடம் இவன் சயனத்தில் பேயானது ஒன்று வந்து நிதியானது உள்ள இடத்தில் இவனை அழைத்துப்போய்க் காட்டும்; காட்டின மறுநாள் மைந்தன் சென்று தட்சணத்தில் நிதியையெடுத்து மனைக்குக்கொண்டுவந்து பின்பு குபேரன்போல் வாழ்வான்.

(வி-ரை.) இக்கவியா விவனுக்கு யோகமுண்டாகும் மார்க்கத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, இவன்ஜனித்த ஆறும்வயதில் ஓர் பேயானது இவனை அழைத்துச் சென்று நிதியுள்ள இடத்தைக் காட்டியதால், மறுநாள் சென்று அதை எடுத்துவந்து குபேரனை யொத்த சம்பத்துடையவனுகி வாழ்ந்து வருவான் என்பதேயாகும். 74

பார்க்கவே யிவனுக்குப் பிள்ளைஐந்தாம்
　பண்பாக யிவன்வயதோ ரெழுபத்தெட்டாம்
ஏர்க்கவே யிவன்வயதோ ரெட்டுக்குள்ளே
　எம்பிரான் அருளாலே விவாகமாச்சு
தார்க்கவே தாயினிட உதவியாலே
　தன்மையுள்ள மைநாக ரேகைக்காரன்
வார்க்கவே யிவன்யோகம் கனயோகம்தான்
　வண்மையாய்ச் சொல்லிவிட்டேன் வகையதாமே.

(இ-ள்.) பார்க்க மேற்கூறிய இவனுக்குப் பிள்ளைகளைந்துண்டாம்; இவனுக்கு வயது எழுபத்தெட்டாம்; அன்றியும் வயது எட்டுக்குள் எம்பிரானுடைய அருளால் விவாகமாகும்; உமையவளுடைய உதவியால் மைநாக ரேகையுள்ளோன் கனமான யோகவானுகுவன் வண்மையாகத்தானே சொல்லிவிட்டேன் இன்னுங் கேட்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவனுக் குண்டாகும் புத்திரர் விவாகம் முதலியவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இவனுக்குண்டாகும் புத்திரர்கள் மொத்தம் 5. இவன் வயது 8க்குள் விவாகமாகும். சாக்ஷாத் பரமேஸ்வரியினது கிருபா கடாக்ஷத்தால் மேன்மேலும் யோகமுண்டாகி வாழ்வான் என்பதாகும். 75

ஆந்தை ரேகையின் பலன்

வகையான ஆந்தையிட ரேகைமைந்தா
　வசனித்தேன் இவன்கையி லிருக்குமாகில்
பகையான யிவன்பிறந்த தம்மாவாசை
　பாலகன்தான் அஸ்தமதின் நாலாங்காலாம்

LuraTech
Document Processing Solutions

துகையான யிவன்பிறவி நாலுபேராம்
துன்பத்தா லாகத்தான் இளையாள்போச்சு
நகையாக யிவன்வயது நாற்பதுக்குள்
நல்மனையும் பாக்கியங்கள் நாசமாச்சே.

(இ-ள்.) வகையாகத்தானே ஆர்ந்தை ரேகை கையிலிருக்குமாகில் அவன் அமாவாசைதினம் அஸ்தநட்சத்திரம் நாலாங்காலில் பிறந்தவனாகும். இவனுடன் பிறந்தோர் நாலு பெயராகும். துன்பத்தால் இளையாளென்னும் இலட்சுமி விலகிப்போவாள். இவன் வயது நாற்பதுக்குள் நல்ல மனையும் பாக்கியமும் நாசமாகப் போகும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் ஆர்ந்தை ரேகையிற் பிறந்தவர்களது பலாபலன்களைக் கூறுவாராயினர். அவையாவன, அமாவாசை திதியில் அஸ்தம் 4-ஆம் பாதத்தில் பிறந்தவனும், நான்கு உடன்பிறவியும், வயது நாற்பதுக்குள் இலக்குமியானவள் நீங்கி தன் மனை பாக்கியம் முதலியன வெல்லாம் ஒழிந்து போயின என்பது கருத்தாகும். 76

ஆச்சப்பா யிவன்தானும் தாயாதிகொண்டு
அண்டாத தொழில்முறைகள் செய்ததாலே
வாச்சப்பா யிவன்பிதா யிருபத்தாறில்
வளமையா யிறந்தபின்பு மனைபாழாச்சு
வேச்சப்பா வெய்யவன்தன் சாபமுண்டு
மேன்மையுள்ள ஸ்திரீசாபம் வெகுவாயாச்சு
காச்சப்பா லவணமுத வில்லாமல்தான்
நாசந்தான் சூழ்ந்ததடா சாபத்தாலே.

(இ-ள்.) மேற்கூறியோன் தாயாதியைக்கொண்டு தொழில் முறைகள் செய்ததால் கெடுதி நேர்ந்தனவாம். இவனுடைய தகப்பன் இவன் வயது இருபத்தாறில் மரணமான பின்பு மனையானது பாழாயினவாம். சூரியனுடைய சாபம் மூண்டு அத்துடன் ஸ்திரீ சாபமும் வந்து வாய்த்ததாம். அதினால் உண்ண உப்புக்கும் கருப்பாகி நாசமாகத்தானே சூழ்ந்தனவாம் எ-று.

(வி-ரை) இக்கவியால் முன் சொன்னபடி இவனது பாக்கியம் முதலியன எவ்வாறு நீங்கியதென்பதைக் கூறுவாராயினர். அவையாவன, இவனது தாயாதியுடன் சேர்ந்து வியாபாரம் செய்து வரும்போது 26-ஆம் வயதில் இவன் பிதா இறந்து போன காரணத்தால் பாழானது என்பதாம். மற்றும் ஸ்திரீ சாபமும் கிரக சாபமும் சூழ்ந்து உப்புக்கும் கெதியில்லாமல் மகா துன்பத்திற் காளானன் என்பது கருத்தாகும். 77

தாலென்ற ஆர்ந்தையிட ரேகையாலே
தன்னுடைய பிறவிகளைக் கொன்றான்பாவி
ஆலென்ற யில்லறமும் பாக்கியமும்போய்
ஆதினமாம் மண்ணையும்விற் றலைவான்பாரு

காலென்ற பாதத்தில் காலசக்கரம்
கண்டிப்பாய் இருக்குமிவன் தாரத்திற்கு
வேலென்ற அவளைத்தான் விவாகம்செய்தான்
வெகுசுருக்காய் லட்சுமியும் இறந்துபோமே.

(இ-ள்.) மேற்கூறியோன் ஆந்தையிட ரேகையாலே தன்னுடன் பிறந்தவர்களை யெல்லாங் கொன்றான். அன்றியும் இல்லமும், பாக்கியமும்போய் ஆதீனமாகிய மண்ணையும் விற்று அலைகுவான். காலென்னும் பாதத்தில் காலசக்கரம் கண்டிப்பாய் தானேயிருக்கும் இவனுடைய மனைவியின் காலில், அவளை விவாகம்பண்ண வெகு சீக்கிரத்தில் லட்சுமியு மிறந்துபோவாள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின் மேலேசொன்ன ஆந்தை ரேகை என்பது தன் கையிலிருப்பதின் பயனும் தன்னுடன் பிறந்தவரை இழந்ததுடன் மண் மனை எல்லாவற்றையு மிழந்துவிட்டான். இதுவன்றி யிவன் மனைவியின் காலில் காலசக்கரம் என்பதொன்றுண்டு. அப்படிப் பட்ட லக்ஷிமியைக் கலியாணம் செய்தானாயினும் அவளும் வெகுசீக்கிரத்தி லிறந்துபோனாள் என்பதாம். 78

போகவே ஆந்தையிட ரேகையாலே
பொல்லாத வெறுமையாய் அலைவானப்பா
ஆகவே யிவனுக்கு நாலுபெண்ணு
அன்பாகப் பிறக்குமடா யெல்லாஞ்சாகும்
வாகவே யிவனுக்கு வயதுதானும்
வளமாக அன்பத்து ஆறுமைந்தா
சாகவே யிவனுக்குச் சக்கிரமமைப்பு
சங்கரியாள் கட்டளைப்போல் நடக்கும்பாரே.

(இ-ள்.) ஆந்தையினுடைய ரேகையால் மேற்கூறியோன் வெறுமையால் அலைகுவான்; இவனுக்கு நாலு பெண் பிறக்கும். அந்நாலும் சாகும்; இவனுக்கு வயது அன்பத்தாறாகும். சாக இவனுக்குச் சக்கரத்தின் அமைப்பு; அன்றியும் சங்கரியாள் கட்டளைப்போல் நடக்கும் பார்க்கவும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின்? ஆந்தை ரேகை என்பது தனது கையிலிருக்குங் காரணத்தால் இவனுக்குப் பிறக்கும் பெண்கள் நான்கு ஆயினும் எல்லாவற்றையும் இழந்து வறுமைவாய்ப் பட்டலைவான். மற்று மிவனுக்கு சாக்ஷாத் பரமேஸ்வரியினது கிருபாகடாக்ஷத்தால் வயது 56-என்பதாம். 79

கேசரி ரேகையின் பலன்

பார்க்கவே கேசரியின் ரேகைமைந்தா
பண்பான யிவனுடைய பாக்கியங்கேள்
கார்க்கவே அரசனைப்போ லவனிமீதில்
கற்பகம்போல் நினைத்ததெல்லாங் கனிந்தளிப்பான்

ஏர்க்கவே கேசரிதான் இருக்குமாகில்
என்னசொல்வேன் இவன்யோகம் எளிநேர்மைந்தா
கார்க்கவே உமையவள்தான் கடாட்சம்வைத்து
கருணைசெய்து பிறந்தமைந்தன் கனிவுகேளே.

(இ-ள்.) பார்க்க கேசரியின் ரேகையாகில் அதின் பாக்கியங் கேளும். அவ்வித ரேகையுள்ளோன் அரசனுக்குச் சமானமாக பூமியின்மீது கற்பகம் போல் நினைத்ததெல்லாம் கனிவாகத்தானே அளிப்பன். இன்னமுஞ் சொல்வேன் கேசரியானது இருக்குமாகில் அவனுடைய யோகத்தை என்னென்று சொல்வேன்; கடாட்சம்வைத்து கருணைசெய்யப் பிறந்த மைந்தனும் எ-று.

(வி-ரை.) இங்கு கேசரி ரேகையினது பலனைக் கூறுவாராயினர். அவையாவன, மேலே சொன்ன ரேகையமைப் பெற்றவர்கள் அரசனைப்போன்று சகல பாக்கியங்களுமுடையவனாதும் இவ்வாறு பிறப்பது உமாதேவியின் கடாக்ஷமேயாகும் என்பதாம். 80

கேட்கவே நடுவரையின் மூன்றுகோணம்
கேவலமாய் இரண்டுபுள்ளி யிருக்குமப்பா
வாட்கவே இவனுடனே பிறந்தார்மூவர்
வையகத்தி லிவனைப்போல் யோகமில்லை
ஆட்கவே யிவனுடைய ஆண்மைமெத்த
அன்பான பாலகந்தான் யோகம்மெத்த
நாட்கவே நல்மனையில் பிறந்தபாலன்
நாதாக்கள் மெச்சிவர நல்கினரே.

(இ-ள்.) கேட்பாயாக, நடுவரையின் மூன்று கோணமும் இரண்டு புள்ளியும் இருக்கும்; இவ்வித ரேகையுடையவனுடன் மூன்று பெயராகும். ஆகினும் வையகத்தில் இவனைப்போல் யோகசாலியில்லை. இவன் ஆண்மையுடையவன், யோகமுடையவன், நன்மையாகிய மனையிற் பிறந்தவன், இவனைப் பார்த்து நாதாக்கள் மெச்சி வரம் நல்கினர் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் ரேகையினது தன்மையினைக் கூறுவாராயினர். அவையாவன, முக்கோணமாயும் இரண்டு புள்ளிகளாயும் அமைந்திருக்கும் என்பதாம். மற்றும் இவன் மேலோர்கள் மெச்சுதலால் நல்ல வரங்களைப் பெற்று, ஆண்மையும், யோகமும் உடையவனாகி, எவரும் மதிக்கத்தக்க வாழ்வடைபவனும், இவனுடன் பிறந்தோர் மூவர் என்பதுங் கருத்தாகும். 81

நல்கியே யிவன்பிறந்த யோகவாழ்க்கை
நலமான நாட்கள்முதல் நவிலுவேன்யான்
அல்கியதோ ரிவன்றனக்கு வடபால்வீட்டில்
அன்பான துதிகையுடன் சதயமாகும்

மல்கியதோர் இவன்தானும் இரண்டாங்காலாம்
வணமாகப் பிறந்தவன்பார் மதிவாரத்தில்
ஒல்கியதோ ரிரவதனில் உதயநேரம்
உத்தமன்தான் பிறந்திடுவான் உயர்வுதானே.

(இ-ள்.) நல்கியபடியே இவன் பிறந்த யோகவாழ்க்கையும் நாள் முதலியதும் சொல்வேன். இவன் வடபால் வீட்டில் திதி துதிகையில் சதைய நட்சத்திரத்தில் பிறந்தவன். மேற்கண்ட நட்சத்திரம் இரண்டாங்காலாகும்; வாரம் திங்கள் உதையநேரத்தில் உத்தமன் ஜெனனமாகினவன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த வாரம் திதி முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, வடக்கு நோக்கிய இல்லத்தில் ஜெனன மானான் என்பதாம். இதுவன்றி, திங்கட்கிழமை இரவு உதய சந்தியில் துதி-கையும், சதயம் இரண்டாம் பாதமுங் கூடியநாளில் பிறந்தவன் என்பது கருத்தாகும். 82

தாமென்ற யிவன்பிறந்த போதுமைந்தா
தகையான பிதாவுந்தான் இருக்கமாட்டான்
ஆமென்ற யிவன்பிறந்தான் கன்னிமூலை
அன்பான தனுராசி ஆகும்பாரு
வாமென்ற யிவனுக்குக் கிரகம்நாலு
வண்மையாம் உச்சமென்று வசனித்தேன்யான்
ஊமென்ற உட்கருத்து விணுவித்தை
உத்தம் வேதப்படித்து வாழ்வான்தானே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) மேற்கூறியோன் பிறக்கும்போது அவனுடைய தகப்பன் அங்கில்லையாம். இவன் பிறந்தது கன்னிமூலையாகும் தனுசுராசியாம்; கிரகம் நாலு உச்சம்பெற்றிருந்தனவாம். இவன் உட்கருத்துடையோன்; வித்தையாளன், வேதங்கள் முதலானதும் படித்து வாழ்குவன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்து என்னவெனில், இவன் ஜனித்த காலத்தில் இவனது தந்தையானவன் அவ்வீட்டிலில்லை எனவும், மேற்சொன்ன வடக்கு வீட்டில் கன்னிமூலையிற் பிறந்தவன் எனவும், தனுசு ராசியும் நான்கு கிரகங்கள் உச்சமாயும் அமையப் பிறந்தவனும் தர்க்கவித்தை, வேதம் முதலியவற்றைப் படிப்பவன் என்பதுங் கருத்தாகும். 83

வாழ்வதென்ன யிவன்பெரிதும் சமர்த்தனப்பா
வையகத்தில் தாய்தந்தை வைத்துவாழ்வான்
தாழ்வதென்ன ஒருநாளும் இல்லைமைந்தா
தாட்டிகற்கு வயதொருபத் தாகவேண்டும்

நாழ்வதென்ன யிவனுக்கு வயதோமைந்தா
நலமான எழுபத்து எட்டேயாகும்
வாழ்வதென்ன பாலகன்தன் யோகத்தாலே
பாக்கியங்கள் வந்திடும்பார் பண்பாய்த்தானே.

(இ-ள்.) வாழ்குமிவன் சமர்த்தனாக விருப்பன்; தாய்தந்தையர்களை வைத்து வாழ்வான். தாழ்வானது ஒருநாளுமிராது. ஆகிலும் வயது பத்தாக வேண்டும். அன்றியும் இவனுக்கு வயது எழுபத்தைந்தாகும். இவனுடைய யோகத்தினால் பாக்கியங்கள் பெருகி வரும் பண்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனுக்கு வயது எழுபத்தைந்தெனவும், இவன் வயது 10-க்குப் பின்பே மிக்க யோகமுடையவனாய் வாழ்வன் எனவும், தாய் தந்தையர்களை ஆதரிப்பவனும், இவன் பிறந்த அமைப்பால் எல்லா யோகங்களையும் பெற்று மிக்க மேன்மையுடன் வாழ்ந்திருப்பான் எனவுங் கூற வேண்டுவதாம். 84

தானென்ற யிவனுக்கு வயதோமைந்தா
தருவான எழுபத்து எட்டேயாகும்
வானென்ற யிவனுக்குக் கெண்டமூன்று
வையகத்தி லிவனுக்கு நிகரேயில்லை
ஏனென்ற யிவன்வயது பதினாலுக்குள்
எடுப்பான்பார் சொழுமுனையில் நிதியேமைந்தன்
கானென்ற யிவன்வயது இருபதுக்குள்
கருணையாம் கடவுளால் அதிகமாச்சே.

(இ-ள்.) கானென்ற இவனுக்கு வயது எழுபத்தெட்டாகும். கெண்டம் மூன்று வரும். வையமீது இவனுக்கு நிகரானவர் இல்லை. வயது பதினாலுக்குள் சொழுமுனையில் நிதியானது யெடுப்பான். வயது இருபதுக்குள் கடவுள் கிருபையால் அதிகாரமானது செலுத்துவான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னை எனின், மேலே கூறியபடி இவனுக்கு வயது 78 ஆயினும், அதற்குள் இவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டங்கள் மூன்று. வயது 14ல் பூமியைத் தோண்டுகையில் நிதியொன்றை எடுத்து அதுமுதல் மிக்க யோகமுடையவனாவன். அவையாவன, இவை யாவும் இவன் வயது 20-க்குள் என்பதாம். 85

ஆச்சப்பா யிவன்வயது யிருபத்தெட்டில்
அன்பான விஷகண்டம் உண்டுகண்டாய்
பேச்சப்பா யிவன்வயது முப்பத்தாறில்
பெரியதொரு ரோககண்டம் பேசுவோம்பார்

வாச்சப்பா யிவன்வயது அன்பத்தாறில்
வருகுமடா ராஜாவின் கோபமொன்று
நீச்சப்பா நிலவரமாய்ச் சிவனைத்தானும்
நேர்மையாய்க் கைதொழுதால் நீக்குவாரே.

(இ-ள்.) மேற்கூறியோனுக்கு வயது இருபத்தெட்டில் விஷகெண்டமுண்டு. வயது முப்பத்தாறில் பெரிதாகிய ரோகம் வாய்க்கும். வயது அன்பத்தாறில் இராஜகோபம் நேரும். இதற்கு நிச்சயமாகியும் நிலவரமாகியும் சிவபெருமானை நேர்மையாகத்தானே கைதொழுதால் நீங்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது கெண்டாதி கெண்டங்களைக் கூறுவாராயினர். அவையாவன, 28-ல் விஷத்தாலும், 36-ல் ரோகத்தாலும், 56-ல் அரசர்களது கோபத்தாலும் என்பதாம். அச்சமயம், சிவபிரானைத் தொழ மேற்சொன்ன கெண்டம் அனைத்தும் நீங்கும் என்பதாம். 86

வாரென்ற யிவன்யோகம் மயேந்திரயோகம்
வாருதிபோற் கனயோகம் செய்வான்மைந்தன்
காரென்ற காணிக்கை உத்தியோகங்கள்
கட்டழகன் செய்திடுவான் கருணையாக
பாரென்ற பார்தனிலே யிவனைப்போலும்
பாக்கியங்கள் பெற்றமைந்தன் பாரிலில்லை
ஊரென்ற உட்கருத்து மிகவேயப்பா
உத்தமன்தான் பெற்றிடுவான் உயர்ச்சியாமே.

(இ-ள்.) இவன்யோகம் மயேந்திர யோகம்போலும் வாருதிப்போற் கனயோகம் பெருகுவன். உத்தியோகம் புரிகுவன். இவனைப்போல் பாக்கியங்கள் பெற்றவர்கள் பூமியின்மீது ஒருவருமில்லை; உட்கருத்துடையோனும். உயர்ச்சியானது பெருகுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது யோகச் சிறப்பினைக் கூறுவாராயினர். அவையாவன, மயேந்திரத்தை யொத்த மேலான யோகமும், உத்தியோகப் பெருமையும், செல்வமும் உடையவனாகி மிக்க அறிவாளனாகி எவரும் மெச்சத் தகுந்தபடி வாழ்ந்திருப்பன் என்பதாம். 87

வால்மீகபந்தன ரேகையின் பலன்

உயர்ச்சியா யின்னமுந்தான் ரேகைமைந்தா
உண்மையுள்ள ரேகையொன்று உரைக்கக்கேளு
வயர்ச்சியாய் வால்மீக பந்தனந்தான்
வண்மையாய்க் கைகளிலே கண்டதானால்

பயிர்ச்சியாய்ப் பருவரைகள் ரெண்டுகீறு
  பண்பாக இருமூலே பயில்வால்காணும்
வியிர்ச்சியாய் நடுக்கீற்று இருக்குமைந்தா
  விண்ணுலகு மண்ணுலகு மேச்சும்பாரே.

(இ-ள்.) உயர்ச்சியாகத்தானே இன்னம் உண்மையுள்ள ரேகையொன்று சொல்வேன் கேளும்: அதாவது வால்மீக பந்தன ரேகை கைதனில் காணில் அது எவ்விதமிருக்குமெனில் பெருத்தவரை இரண்டு கீறும் இருமூலேயும் வால்போல் காணும். அது நடுக்கீற்றிலிருக்கும்; அதனுல் விண்ணுலகமும் மண்ணுலகமும் மெச்சும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் வால்மீக பந்தன ரேகையின் அமைப்பைக் கூறுவாராயினர். அவையாவன, பருவிரலில் இரண்டு கீற்று ரேகைகளும் மேற்படி விரலில் நடுவில் ஓர் கீற்று ரேகையும் இருக்கும். இப்படி ரேகை யமையப் பெற்றவர்களே இவ் விண்ணுலகும் மண்ணுலகும் மெச்சும் என்பதேயாகும். 88

பார்க்கவே யிவன்வயது வால்மீகபந்தனம்
  பண்பாக யிருக்குமென்றால் பகரக்கேளு
ஈர்க்கவே யிவன்பிறந்த வாரஞ்செவ்வாய்
  இயல்பான யிரவுதனில் இருபத்தைந்தில்
வார்க்கவே அநுஷமத் ரெண்டாங்காலம்
  வண்மையாய்ப் பிறந்ததிவன் வண்மைகேளே
கார்க்கவே காணிக்கை யுள்ளபேர்க்கு
  கைகண்ட வால்மீக பந்தனமே.

(இ-ள்.) பார்க்க மேற்கூறியவண்ணம் வால்மீக பந்தனரேகை யிருக்குமாகின் சொல்லக்கேளும்: இன்னேன் பிறந்த வாரம் செவ்வாய்; அன்றிரவில் இருபத்தைந்து நாழிகையில் அனுஷ நட்சத்திரம் இரண்டாங்காலில் இவன் பிறந்தோன் இவனுடைய வண்மையைக் கேளும்; அது காணிக்கையுள்ள பேர்க்குக் கைகண்ட ரேகையாம். எ-று.

(வி-ரை.) இக்கவியால் வால்மீக பந்தன ரேகையிற் பிறந்தவர்களது வாரம் திதி முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, செவ்வாய் இரவு 25-நாழிகையில் அனுஷம் 2-ஆம் பாதத்திற் பிறந்தவன் என்பதாம். 89

ஆமென்ற யிவன்பிறந்த வருஷநாளில்
  அன்பான யிவன்பிறந்த யோகத்தாலே
வாமென்ற யிவனுக்கு உத்தியோகந்தான்
  வண்மையாய் வந்ததென்று வரிசைகூறு

LuraTech Document Processing Solutions

தாமென்ற யிவனுக்கு ஆறுபிள்ளை
தயவாகப் பிறக்குமென்று சார்புசொன்னேன்
வேமென்ற யிவனுக்கு கண்டம்நாலாம்
வெகுமான மாகயிவன் வாழ்வான்பாரே.

(இ-ள்.) ஆமெனும் இவன் பிறந்த வருஷம் நாளில் இவன் பிறந்த யோகத்தினால் உத்தியோகம் வந்ததென்றும் சொல்லவேண்டும். அன்றியும் இவனுக்கு ஆறு பிள்ளைகள் பிறக்கும்; கண்டம் நாலுண்டாகும். ஆகினும் அதிக செல்வமோடு வாழ்குவோன் எ-று.

(வி-ரை.) மேலே சொன்ன வாரம் நக்ஷத்திரம் முதலியவற்றாலும் வருட மாதத்தினது பலத்தாலும், இவன் வாழ்நாளில் உத்தியோகம்செய்யும் தன்மை யுடையவனுஞன் எனவும், இவனுக்குண்டாகும் புத்திரர்கள் அறுவர் எனவும் கெண்டாதிகெண்டங்கள் நான்கு உண்டாகும் என்பதும் கருத்தாகும். 90

பார்க்கவே யிவனுக்கு நீரால்கண்டம்
பண்பான நரியாலே கண்டமுண்டு
ஏர்க்கவே யிவன்பிறந்த யோகத்தாலே
இயம்புவேன் சக்கரத்தி னியல்புநன்றாய்
மார்க்கவே மனுநெறியே தவறாமைந்தன்
மன்னவன்தான் மந்திரங்கள் மகிழ்ந்துஓதும்
ஆர்க்கவே யிவன்கோத்திரம் விளங்கவைப்பான்
அன்பான யிவன்வயதோ ரெழுபத்தெட்டே.

(இ-ள்.) பார்க்க மேற்கூறியோனுக்கு ஜலகண்டமும் நரியால் கண்டமும் உண்டு. இவன் பிறந்த யோகத்தால் சக்கரத்தின் இயல்பு சொல்வேன். அதாவது இவன் மனுநெறி தவறாதவன்; மந்திரங்கள் மகிட்சியாக ஓதுவன்; கோத்திரத்தை விளங்கவைப்பன்; இவனுக்கு வயது எழுபத்தெட்டாகும்.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டத்தினை யும் மற்றுமுள்ள பலாபலன்களையுங் கூறுவாராயினர். அவையாவன, ஜலத் தாலும் நரியாலும் என்பதாம். மற்றுமிவன் பிறந்த சக்கிர அமைப்பால், மனுநீதி தவறாத அரசனுகி, மந்திரம் பல கற்று தன் கோத்திரத்தையும் விளங்க வைப்பானுகி வயது 78-வரையிலிருப்பான் என்பது கருத்தாகும். 91

எட்டான யிவன்வயதும் யோகஞ்சொன்னேன்
எம்பிரா னருளாலே வாழ்க்கைசொன்னேன்
மட்டான வால்மீக பந்தனத்தை
வரிசைபெறச் சொல்லிவிட்டேன் உண்மையாக

LuraTech Document Processing Solutions

கட்டான ரிஷிகளென்போர் சொல்லவில்லை
. கந்தபிரான் சொன்னதிந்தக் கருத்துமைந்தா
இட்டான சுகமெல்லாஞ் சொன்னாற்போலே
இனிதாக நடக்கவென்று எண்ணிச்சொன்னேன்.

(இ ள்.) மேற்கூறியோனுடைய வயதும் யோகமும் சொன்னேன்; எம்பிரானருளாலே வாழ்க்கைச் சொன்னேன்; வால்மீக பந்தன ரேகையின் வரிசையைச் சொன்னேன்; கட்டாகிய ரிஷிகள் யென்போல் சொல்லவில்லை. அன்றியும் கந்தசுவாமி சொன்னதிந்தக் கருத்தாகும். அதுபோல் இஷ்டமாகிய நடக்கைகள் யாவுஞ் சொன்னேன். எ-று.

(வி-ரை.) இக்கவியால் வால்மீகபந்தன ரேகையிற் பிறந்தவர்களுடைய பலாபலன் அனைத்தும் கூறிவிட்டேன் எனவும், இவ்வாறு முனிவர்கள் ரிஷிகள் முதலியோர் கூறவில்லையாயினும், குமாரக் கடவு ளுபதேசித்தபடியே இங்கு விளக்கியுள்ளதால் இவை இவ்வுலகத்தில் மகா உண்மைப் பொருளாய் விளங்கும் என்பது கருத்தாகும். 92

சொன்னேனையா வெகுசுருக்காய்ச் சுருக்கித்தானே
சொற்பெரிய வால்மீக பந்தந்தன்னை
அன்னைமுதல் தந்தைவரை ஆய்ந்துசொன்னேன்
அப்பனே யிவன்வாழ்வும் அறிவுசொன்னேன்
என்னையே தொழுகின்ற பேர்கட்கெல்லாம்
எம்பிரா னருளாலே யியற்றுவேன்யான்
அன்னையைப்போ லின்னமுண்டு மைந்தாகேளு
அரனார்தன் னுதவியெலாம் ஆண்மைதானே.

(இ-ள்.) சொன்னேன் சுருக்காகச் சுருக்கியும் வால்மீக பந்தனத்தை அன்னை முதலாகத் தந்தை வரைக்கும் ஆய்ந்துச் சொன்னேன். இவன் வாழ்வும் அறிவும் சொன்னேன் என்னைத் தொழுகின்ற பேர்கட்செல்லாம் எம்பிரான் அருளால் சொல்வேன்யான் அன்றியும் அன்னையைப்போல் இன்னமுமுண்டு அரனாருடைய உதவியினாலும் ஆண்மையாம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னை எனின், வால்மீக பந்தன ரேகையிற் பிறந்தவர்களுக்குத் தாய்தந்தையாது வாழ்வு மரணகாலம் முதலிய வனைத்தும் சொன்னே னாயினும், பிரமன்விதி யின்னு மநேகமுள்ளன. அதனை பக்தி விநயத்துடன் கேட்கின் சொல்லுகிறேன் என்பது கருத்தாகும். 93

தானமெனு மென்தாயைத் தோத்தரித்து
தயவாகப் பூரணியை வந்துநிற்பாய்
வானமெனும் மனோன்மணியே உமையேதாயே
வர்ன்விழி மாமயிலே மாயிஆயி

பானமெனும் பராசத்தி யென்றுவானோர்
பதம்போற்றி யர்ச்சித்து புரிந்துவாழ்த்தி
தானமெனுந் தங்கையடித் தரணியாளி
சரணமுவந் தெங்களைநீ காப்பாய்தாயே.

(இ-ள்.) தானமாகிய என் தாயை ஸ்தோத்தரித்து பூரணமாக வைத்து நின்று மனோன்மணியே உமையே தாயே மாயி ஆயி பராசத்தியென்று வானோர்கள் பாதத்தைப்போற்றி பூசைபுரிந்து வாழ்த்தி ஓ மாயவன் தங்கையே! சரணமடைந்தோம்; எங்களை நீ காப்பாய் ஓ தாயே எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது என்னை எனின், இந்நூலைக் கேட்டு வரும் முனிவர், தேவர், ரிஷிகள் முதலானோர் மேற்சொன்னவாறு முடித்த மகாபரமேஸ்வரியை அவளது திருநாமங்களைச் சொல்லித் துதித்து, இன்னு முள்ள ரகஸ்யங்களையுங் கூறவேண்டுமெனத் தோத்தரிக்கின்றனன். 94

கார்க்கவென்று தேவர்களும் முனிவோர்வாழ்த்த
காருணிய முடையவள்தான் மனதிரங்கி
ஏர்க்கவென்று ஈஸ்வரனு ரருளினாலே
இயம்புகிறேன் பிரம்மாவே யிசைந்துகேளு
பார்க்கவென்று பராபரனும் உமையாள்சோதி
பத்தினியாள் மனதுவைத்து பகர்வாள்சேதி
சீர்க்கவென்று திருமாலின் உதவியாலே
சிருஷ்டித்த ரகசியத்தின் திறத்தைக்கேளே.

(இ-ள்.) இப்படியாகக் கார்க்கவேணுமென்று தேவர்களும் முனிவர்களும் வாழ்த்த அப்போது உமையவள் மனமிரங்கி ஈஸ்வரருடைய அருளினால் சொல்லுகிறேன் பிரம்மாவே கேளுமென்று பராபரமாகிய உமையாள் மனது வைத்து சொல்வாள் திருமாலினுடைய அருளினால் சிருஷ்டித்த ரகசியத்தைக் கேளும் எ-று.

(வி-ரை.) மேற் சொன்னவாறு தோத்திரம் செய்தவர்களை ஈஸ்வரியானவள் நோக்கி, ஓ பிரமன் முதலாயுள்ள ரிஷிகள், முனிவர்களே, மகா விஷ்ணுவினது லீலாவிபூதியில் இவ்வுலகிலுண்டாகும் ரகஸ்யங்களைக் கூறுவேன் கேட்டு வருவீர்கள் என்பது கருத்தாகும். 95

கேளப்பா அகஸ்தியனே பிரம்மாவேநீ
கேவலமாய் வதிஷ்டர்முதல் ரிஷிகளென்று
வாளப்பா வுலகத்தி லனேகசீவர்
வர்னலட்சங் கோடியதாய் வகுத்தாரீசன்

நாளப்பா சீவர்கட்குப் புராணஞ்சேர்ந்து
நலமான சீவாத்மா எல்லோருந்தான்
வேளப்பா கருதகிர்த்தர் மூவர்தாமும்
விதிப்படி சொல்லுகிறேன் விகற்பமாமே.

(இ-ள்.) கேளுமப்பா அகஸ்தியனே பிரம்மாவே வஷிஷ்டரே முனிவர் முதலானவர்களே உலகத்தில் அநேக சீவர் வர்னலக்ஷங்கோடியாக ஈஸ்வரனுர் வகுத்தார். சீவர்கட்கு புராணஞ்சேர்ந்து சீவாத்மா எல்லோர்க்கும் கருத கிர்த்தர் மூவர்களும் விதித்தப்படிச் சொல்லுகிறேன் விகற்பமாகத்தானே எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்து என்னவெனில், ஓ அகத்திய முனிவரே! பிரம்மாவே, வஷிஷ்டர் முதலாயுள்ள ரிஷிகளே! ஸ்ரீ சர்வேஸ்வரன் இவ்வுலகில் அநேக வர்ணலக்ஷணங்களாய் வகுத்து, அவர்களுக்கு மூவரை ஏற்படுத்தித் திருவிளையாடல் புரியும் விநோதங்களைக் கூறுவேன் கேட்பீர்களாக என்பது கருத்தாகும். 96

ஆகவே முன்காண்டந் தன்னிலேதான்
அறிந்தமட்டு மெல்லாந்தான் சொல்லிவிட்டேன்
வாகவே வகைதுறவும் அமைப்புமைந்தா
வாகாகச் சொல்லிவிட்டேன் வரிசையாக
தாகவே தரணியிலே மக்கட்காக
தாய்கார்க்க என்னையவர் தொழுததாலே
பாகவே பலபேர்கட் காகவென்று
பத்தினியாள் சொன்னமொழி கேட்பார்பாரே.

(இ-ள்.) ஆகும்படியாக முற்காண்டத்தில் அறிந்தமட்டும் எல்லாஞ் சொல்லினேன் வகையுந் துறவும் அமைப்பும் வரிசையாகச் சொன்னேன் தரணியின்மீது மக்கட்காக என்னை அவர்கள் தொழுததினுல் பலபேர்க்கும் ஆகவென்று பத்தினியாகிய பார்வதி சொன்னமொழி பாரும் எ-று. 97

கேட்கவே தேவர்களும் முனிவர்போற்ற
கேவலமா முமையவள்தான் சொன்னுளப்பா
ஆட்கவே பருவதரா ஜன்குமாரி
அன்பாக வாய்திறந்து அளித்தாள்மைந்தா
நீட்கவே கவுமாரி வடுகிஆதி
நீலிதிரி சூலியவள் நிகழ்த்தினுள்பார்
வாட்கவே யுலகமெல்லாம் வாழவேண்டி
மனேன்மணித்தா யுரைத்தனள்பார் மகிழ்வதாகே.

(இ-ள்.) கேட்க தேவர்களும் முனிவர்களும் போற்ற உமையவள் சொன்னுள்; பர்வதராஜனுடைய குமாரியாகிய பார்வதி வாய்திறந்தளித்தாள்; உலகமுழுதும் வாழவேண்டி மனேன்மணியாகிய மாதா உரைத்தாள்.

ஆகவே முன்காண்ட மூன்றும்சொன்னேன்
அறிந்தமட்டு மெல்லாந்தா னன்பாய்ச்சொன்னேன்
வாகவே வகைதுகைகள் வகுத்துச்சொன்னேன்
வளமையுள்ள நாள்கோள்கள் மகிழ்ந்துசொன்னேன்
ஏகவே முன்காண்டத் தெல்லாஞ்சொன்னேன்
என்மக்க ளறிவதற்கா யியம்பினேன்பார்
வாகவே கருணைவைத்து கருதிநன்றாய்க்
கைலாச மனோன்மணித்தாய் கடாட்சித்தாளே.

(இ-ள்.) ஆக முக்காண்டமாகிய மூன்றும் சொன்னேன் அறிந்தமட்டும் யாவுஞ் சொன்னேன்; வகையுந் துகையும் வகுத்துச் சொன்னேன்; வளமையுடன் நாளும் கோளும் மகிழ்ந்து சொன்னேன்; முக்காண்டத்திலுள்ளது யாவுஞ் சொன்னேன்; உலகோர்கள் அறியும்படியாய் இயம்பினேன்; கருணையானது வைத்துச் சொன்னாள் கைலாச மனோன்மணியாள் கடாட்சித்தாள்.

ஆக காண்டம் 3-க்கும் பாடல் 254.

நான்காங் காண்டம்

ஆதியெனும் பராபரத்தி னருளினாலே
ஆனந்த சிவயோக மம்பாள்சொல்வாள்
சோதியெனும் பரப்பிரம்ம சோதிமாதா
சொல்லுவாள் நாலாங்காண் டத்திலேதான்
நீதியெனும் பரஞ்சோதி யுமையாள்தாயே
நீணிலத்தில் தேவர்களும் முனிவோரெல்லாம்
வாதியெனுங் கேசரியின் வண்மைதன்னை
வகுத்துரைப்பேன் தேவர்கட்கும் வண்மைகேளே.

(இ-ள்.) ஆதியாகிய பராபரத்தின் அருளால் ஆனந்த சிவயோகியாக விளங்கும் அம்பாள் சொல்வாள்; சோதியாகிய பரப்பிரம்ம சோதிமாதா சொல்லுவாள்; நாலாங் காண்டத்தில் நீதியாகிய பரஞ்சோதி உமையாள் என் தாயருளால் உலகத்தில் தேவர்கள் முனிவர்களுக்கெல்லாம் வாதியாகிய கேசரியின் வண்மைதன்னை வகுத்துரைப்பேன் தேவர்கட்கும் எ-று.

(வி-ரை.) பராபரத்தினிடம் தெரிந்துகொண்டதையே பராபரியானவள் இங்கு கூறுகிறாள் என்பது இக்கவியின் முதல் கருத்தாகும். மற்றும் இது வரையிற் கூறி வந்ததைக் கேட்ட முனிவர்களும் தேவர்களும் அகமகிழ்ந்து

இன்னுமுள்ளதையும் கூறவேண்டுமெனக் கேட்க தேவியும் அதற்கிசைந்து கூறுகிறுள் என்பது கருத்தாகும். 1

சங்கு சக்கிர குலிச ரேகையின் பலன்

கேளீரோ சக்கரத்தின் ஆறுங்கூட்டி
கேவலமாய்ச் சங்குசக்கிர குலிசப்பாடல்
நாளீரோ சங்குசக்கிரக் குலிசைமைந்தா
நலமாக மால்விரலில் வுயர்ந்துகாணும்
கேளீரோ யிதன்கையிலே ஏழுரேகை
கார்க்கடக ரேகையது இருக்கும்பாரு
ஆளீரோ விடக்கப்பந் திருவையோடு
ஆனதல்ல கையிலேதா னிருக்கும்பாரே.

(இ-ள்.) கேட்பீராக சக்கரத்தின் ஆறுங்கூட்டி சங்குசக்கிரக் குலிசத்தைப்பார்க்க மால் விரலில் உயர்ந்து காணும்; அதனோடு அவன் கையில் ஏழுரேகை கர்க்கடக ரேகையிருக்கும்; விடக்கம்பம் திருவையோடு கையிலிருக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது என்னை எனின் சக்கரக் குலிச ரேகை என்பதின் பலாபலன்களைக் கூறுமிடத்து மேற்படி ரேகையினது நடுவிரலின் ஏழு ரேகையும் அதனிடப் பக்கத்தில் மூன்று ரேகைகளுமாய் அமைந்திருக்குமானதால் அதன் விருத்தாந்தங்களைக் கூறுவேன் கேளுங்கள் என்பது கருத்தாகும். 2

பாரப்பா சக்கரமாம் குலிசைதானும்
பரமனிட வருளாலே ரேகைகாணும்
காரப்பா கடாட்சிபெற்ற ரேகைமைந்தா
கருணையினுல் மால்கையி லிருக்கும்பாராய்
சாரப்பா சற்குருவாம் பிரம்மரேகை
சாஷ்டாங்கம் சிவன்செயலுஞ் சற்குருவாகும்
பேரப்பா பேரின்பம் பேணிவாழ்த்தும்
பெரியவன்பார் இவன்ரேகை பெரியதாச்சே.

(இ-ள்.) பார்க்க சக்கிரக் குலிசையெனும்படியாய் பரமேஸ்வரனுடைய அருளினலே ரேகையானதுக் காணும் காட்சியானது பெற்ற ரேகை மால் விரலிலிருக்கும்; சற்குருவாகிய பிரமரேகை சிவன் செயலால் சற்குருவாகும் பேரின்ப வழிகாட்டும் பெரியவனக இவன் ரேகை பெரியதாகும் எ-று.

(வி-ரை.) மேலே சொன்ன சக்கிரக் குலிசரேகை என்பது பரமன் கிருபை யிருந்தால்தான் உண்டாகும் எனவும் இவை பிரம்மரேகை எனவுங்

கூறலாகும் எனவும் இந்த ரேகையுடையவர்கள் சற்குருவாவார் எனவும் பேரின்பத்திலாழ்ந்து சுகித்திருப்பவர் எனவுங் கூறவேண்டும் என்பதாம். 3

ஆச்சென்ற யிவன்செயலும் திசையும்யோகம்
அன்பான விவாகமது ஆனதெல்லாம்
வாச்சென்ற முடிகிடைப்பில் நாலாங்காண்டம்
வச்சிரமணி யோகமடா வரிசைகேளு
நீச்சென்ற யிவன்யோகங் குபேரனப்பா
நிதியுடைய வல்லவன்பார் நேர்மைகேளு
வாச்சென்ற வகைநடத்தி யுள்ளமைந்தன்
வாகான அழகியின்மா வர்னனுமே.

(இ-ள்.) ஆச்சென்னும்படியாக இவனுடைய செயலும் திசையும் யோகமும் விவாகமானதோடு யாவும் முடிகடப்பாகிய நாலாங்காண்டம் வச்சிரமணி போல யோகம் வரிசையாய்க் கேளும் இவன்யோகம் குபேரனுக்கும் நிதியுடையவல்லன்; இவனுடைய நேர்மையைக் கேளும் யாதொரு காரியமும் நடத்திவைக்கும் பாலன் அழகிய வர்னனும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின் இந்த ரேகையை வச்சிர மணி ரேகை என்றே கூறுதல் வேண்டும் எனவும் மகாயோகமும் திசையு முடையவனுகி குபேரனை யொத்த சம்பத்துடையவனுகி வல்லமையும் அழகும் வாய்ந்தவனுய்த் தன் வாழ்நாட்களில் மிக்க மேன்மையுடனிருப்பான் என்பது இதனது கருத்தாகும். 4

வர்னமடா அழகிவனும் இடக்கண்சாயல்
வாகான மச்சங்கள் மூன்றுவுண்டு
சொர்னமடா யிவன்வாழ்வு குபேரன்வாழ்தான்
சொற்பெரிய தேகத்தில் வல்லவன்காண்
நிர்னமடா ஒல்லியிவன் உருவமையோ
நீலாதி சொல்தவறான் பொய்சொல்லானே
கர்னனடா கீர்த்திகள் யோகவாழ்க்கை
காசினியி லிப்பிரவி வேணுந்தானே.

(இ-ள்.) மேற்கூறியோன் வர்னமுடைய அழகிய இடக்கண் சாயலுள்ளான்; மச்சமானது மூன்றுடையான்; சொன்னவாறு இவன் வாழ்வு குபேரன் வாழ்வாகும் தேகத்தில் வல்லவன்; ஒல்லியான உருவமுடையோன்; நீதியாகிச் சொல்தவறான்; பொய்யானது சொல்லான்; கர்னனுருவன்; கீர்த்தியிலும் யோகவாழ்க்கையிலும் பூமியின்மீது இவனைப்போல் பிறவிவேணும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவன, மேற்படி குலிசரேகை யுடையவன் இடக்கண் சாயலும் மூன்று மச்சமும் உடையவன் மகா வல்லமைசாலி

CuraTech Document Processing Solutions

சிறுத்ததேகி பொய்சொல்லான். சொல் தவரான் கீர்த்திவான் குபேரனை யொத்த சம்பத்து நல்வாழ்வுடையவன் ஆனதால் இப்பிரவியில் பிறப்பது விசேஷம் என்பதாம். 5

வேணுமென்ற இவன்போலுந் தவங்கள்செய்து
வேதாந்த குருவருளால் வரங்கள்வாங்கி
ஆணுவங்கள் போலவுந்தன் பாக்கியத்தோடே
அன்பாகப் பூமியிலே பிறக்கவேணும்
தாணுவங்கள் தனயோகம் இல்லாமைந்தன்
தவஞ்செய்த மகிமையினல் வந்ததன்றோ
பாணுவங்கள் பரமனிட அருளேமைந்தா
பார்வதியாள் பெற்றமைந்தன் பாக்கியமாச்சே.

(இ-ள்.) வேணுமென்றுத்தானே மேற்கூறியவன்போல் தவங்களானது செய்து வேதாந்த குருவினருளால் வரங்களானது பெற்று பாக்கியத்தோடு பூமியில் பிறக்கவேணும். தாணுவாகிய தனயோகமானது இல்லாத மைந்தன் தவத்தினுடைய மகிமையினல் வந்த மைந்தனுக்கும் பரமனுட அருளால் பார்வதியாள் பெற்ற மைந்தனல் பாக்கியங்களாச்சுது எ-று.

(வி-ரை.) இவனைப்போன்ற ஜென்மம் எடுப்பது விசேஷம் என்று கூறியதற்குக் காரணம் என்னவென்பதைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் மிக்க தைரியவானய்த் தவங்கள் செய்து வரம்வாங்கி சகல சம்பத்தையும் அடைந்தவன். இவன் மிக்க வறுமையாளன் எனினும் இவன் செய்த தவப்பேற்ருல் இவ்விதமடைந்தான் என்பது கருத்தாகும். 6

ஆச்சப்பா முதற்சனனம் சொல்வேன்மைந்தா
அன்பான பாலகனும் பிராமணன்பார்
மூச்சப்பா விஷ்ணுவின்தன் மூச்சதாகும்
முற்பிறவி யீஸ்வரனுர் பாதத்துளாம்
பாச்சப்பா பரமனிட அருளாலேதான்
பார்தனிலே பிராமணனய்ப் பிறந்தான்பாரு
காச்சப்பா உமையவட்கும் விஷ்ணுவுக்கும்
காட்சியாய்ப் பூஜைவிதி செய்தான்காணே.

(இ-ள்.) ஆகினும் முதற்ஜெனனம் சொல்வேன்; மைந்தன் பிராமணனும்; விஷ்ணுவினுடைய மூச்சாகும்; முற்பிறவி ஈஸ்வரனுர் பாதத்துளாகும்; பரமனிட அருளால் பார்மீது இவன் பிராமணனகப் பிறந்தான்; உமையவட்கும் விஷ்ணுவிற்கும் காட்சியாகத்தானே பூசைகள் செய்தான்.

(வி-ரை.) இக்கவியா லிவன் முற்சனன விவரத்தைக் கூறுவாராயினர், அவையாவன, இவன் முன் சனனத்தில் வைஷ்ணவ பிராமணனய்ப் பிறந்து

UpaTech Document Processing Solutions

உமாதேவிக்கும் காரணத்துவ பூஜை முதலியவற்றை விதி தவாது செய்து வந்தவன் என்பது கருத்தாகும். 7

செய்திடவே முன்னே தான் முத்திபெற்றான்
 செப்பமுடன் அறமிகுதி செலுத்துவான்பார்
மெய்திடவே மேதினியில் யாரும்வாழ்த்த
 மெய்ப்பரனுஞ் சந்தோஷம் விளங்கினன்பார்
ஐதிடவே யிவன்தேடுந் திரவியந்தான்
 அந்தணர்கள் பூமியிலே மறைத்ததுண்டு
உய்திடவே யுலகமதில் சனனம்ரெண்டு
 ஓகோகோ விஸ்வனுமாய்ப் பிறந்தான்ரெண்டே.

(இ-ள்.) செய்ததினால் முன்னும் முத்தியானது பெற்றான்; அறமானது அதிகமாகப் புரிந்தான்; பூமியின்மீது யாவரும் வாழ்த்த பரமசிவனும் சந்தோஷங்கொண்டு மகிழ்ந்தார்; இவன் தேடும் திரவியத்தை அந்தணர்கள் பூமியின்கண் மறைத்ததுண்டு; அன்றியும் இவனுக்கு உலகத்தில் ஜெனனம் இரண்டு; விஸ்வகர்மாவாய் இரண்டாவது ஜெனனமாகப் பிறந்தான் எ-று.

(வி-ரை.) மேற்சொன்னபடி பிராமணனாய்ப் பிறந்து அனேக தருமங்களைச் செய்து எவரும் வாழ்த்தவும், பிரமனும் சந்தோஷப்படவும், வாழ்ந்தானாயினும் இவன் தேடிய திரவியத்தை இவனது வர்க்கத்தார் பூமியிற் புதைத்து வைத்தனர். அதன்பின்பு இவன் இரண்டு ஜனனங்கள் வரையில் விஸ்வ பிராமணனாய்ப் பிறந்தான் என்பது கருத்தாகும். இதன் விவரம் கீழ்வரும் கவியை கவனிக்கவும். 8

இரண்டான ஜெனனந்தான் உலகுதன்னில்
 ரேகையுடன் விஸ்வனுமாய்ப் பிறந்ததென்ன
வண்டான முதற்சனன மூன்றுக்குமுன்னே
 வளமான விஸ்வகர்மா சிவபூஜைக்கு
நன்றான புஷ்பவகை சமிதைகந்தம்
 நலமாகக் கொண்டுவந்து நல்கினன்பார்
அன்றான சிவதூளிதஞ் செய்ததாலே
 ஆனதொரு பாக்கிய விஸ்வனாம்பாரே.

(இ-ள்.) இரண்டாவது ஜெனனத்தில் உலகமீது இரேகையுடன் விஸ்வனுமாய்ப் பிறந்ததென்னவெனில் முன் ஜெனனம் மூன்றுக்கு முன் விஸ்வகர்மாவாகப் பிறந்து சிவபூஜைக்கு புஷ்பவகையும் சமிதை கந்தம் இவைகளை நலமாகத்தானே கொண்டு வந்து நல்கினன் அப்படி சிவதூளிதஞ் செய்தால் பாக்கியத்தோடு விஸ்வகர்மாவாகினன் எ-று.

UpraTech Document Processing Solutions

(வி-ரை.) மேற்சொன்னபடி விஸ்வ குலத்தில் பிறந்தான். ஆயினும், இரண்டாம் ஜனனத்தில், விஸ்வகர்மா செய்யவேண்டிய சிவபூசைக்கு வேண்டிய புஷ்பம் சமித்து, கந்தம் முதலியன கொண்டுவந்து கொடுத்தால் இச்சனனத்தி லிவன் விஸ்வகர்மாவாய்ப் பிறந்து பாக்கியவானாவான் என்பது கருத்தாகும். 9

ஆனதென விஸ்வகர்மா மனதுவந்து
அன்னவற்குப் பலமீந்து உலகுதன்னில்
வானவரி லோர்பிறவி செய்துவைப்பேன்
வங்கிசத்தில் போய்பிறக்க என்றுசொன்னான்
சானதென்ன கருணையினால் வரங்கள்வாங்கி
கயிலாச வருளாலே பிறந்தான்மைந்தன்
நானதென்ன உமையுடைய குலமேமைந்தா
நாகரிக மானதிவை நயந்துபாரே.

(இ-ள்.) ஆனதுயென்ன விஸ்வகர்மாவாய் மனதுவந்து அன்னவர்களுக்குப் பலன்களீந்து உலகத்தில் வானவரில் ஓர் பிறவியாகச் செய்து வைப்பேன்; விஸ்வகர்மாவின் வங்கிசத்தில் போய்ப் பிறப்பாயென்று பரமனருளியபடி வரங்கள் வாங்கி கைலாசவாசகரின் அருளால் பிறந்த மைந்தனாகும்; இது உமையவளுடைய குலமேயாமென்று நயந்து பார்க்கவும் எ-று.

(வி-ரை.) இச் சனனத்தில் விஸ்வகுலத்திற் றோன்றிய விருத்தாந்தத்தை யிங்குக் கூறுவாராயினர். அவையாவன, மேற்சொன்னபடி பணிவிடை செய்து வரும்போது மேற்படி விஸ்வகர்மாவானவர் இவனை நோக்கி, உன்னை மிக்க பலமுடையவனாயும் இப்பூமியிற் பிறக்கும்படி செய்வேன் என்று கூறினார். அவ்வண்ணம் வரம் வாங்கியவன் கைலாயநாதர் கிருபையால், மேற்படி விஸ்வ குலத்திலேயே இச் சனனத்தில் வந்து தோன்றினான் என்பது கருத்தாகும். 10

பார்க்கவே பராபரியும் வந்துதித்த
பத்தினியார் மைந்தர்களும் ஆவார்பாரு
ஏர்க்கவே யீஸ்வரியும் அரனுங்கூடி
ஏகாந்த மாயிருந்த வமிசமாகும்
கார்க்கவே பரசமயம் உண்டுசெய்து
கயிலாச பகவானும் வாக்கிட்டார்பார்
ஆர்க்குந்தான் இவ்வகையாம் பொருளோமைந்தா
அகப்படா தென்றுவுமை அருளினாளே.

(இ-ள்.) பார்க்க பராபரியாள் வந்திருக்கும் அந்தப் பத்தினியின் மைந்தர்கள் இவர்களாவார்; ஏற்கையாகத்தானே ஈஸ்வரியும் அரனுங்கூடி ஏகாந்த

மாக இருந்ததோர் வமிசமாகும். அதில் கார்க்குப்படியாக பாசமையம் உண்டு செய்து கயிலாசபதியாகிய பரமசிவனும் ஆச்கிவிட்டனர்; இதுபார்க்கும் இவ் வகையான பொருள் அகப்படாதென்று உமையவளருளினள் எ-று.

(வி-ரை.) மேற்சொன்ன காரணத்தால், பராபரியின் வயிற்றிலுதித்த பாலன் எனவும், ஈஸ்வரனும் ஈஸ்வரியும் கூடியிருந்த ஏகாந்த வமிசம் எனவும், கைலாயநாதருடைய வரம் வாங்கியவன் எனவும், இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த பிறவி எடுப்பது அருமை என்பதும் கருத்தாகும். 11

நாளென்ற யிவ்வசனம் பிரம்மாவதிஷ்டர்
நலமான நந்திகேஸ்பர் கௌதமர்
ஆளென்ற வேதவியாசர் அகஸ்தியருந்தான்
அன்பான வாசவனும் போகர்தானும்
வாமென்ற வுமையவளுஞ் சொன்னமாத்திரம்
வரிசையா யிவர்களெல்லாம் வணங்கினார்கள்
தாமென்ற தாழ்வில்லாத் தரணியாளத்
தங்கமுத்தைப் பெற்றெடுத்த தாய்சொல்வாளே.

(இ-ள்.) மேற்கூறிய இவ்வசனம் பிரம்மா வதிஷ்டர் நந்திதேவர் கௌதமர் வேதவியாசர் அகஸ்தியர் மகாவிஷ்ணு போகர் இவர்கள் முன்னே உமையவள் சொன்னமாத்திரம் வரிசையாகத்தானே இவர்களெல்லாம் வணங்கினார்கள். அப்போது தாழ்வில்லாமற்றான் தரணியையாளத் தங்கமுத்தைப் பெற்ற தாயாகிய உமையவள் சொல்வாள் எ-று.

(வி-ரை.) இவ்வாறு தன்னருகிலிருந்த பிரம்மா, வதிஷ்டர், வியாசர், நந்தி, கௌதமர், வாசவர், போகர் முதலியவருங் கூறவே, இவர்க ளெல்லோரும் உலக மாதாவை; வணங்குகையில் மேற்படி மாதாவானவள் இன்னுமுள்ள விஷயங்களையுங் கூறுகிறாள் என்பது கருத்தாகும். 12

சொல்லுவா யுலகமெல்லாம் படைத்தசோதி
சொற்பெரிய பத்தினியே சோதிமாதா
நல்லுவாய் நாரணியே வைகுண்டத்தாய்
நற்பதவி யீன்றருளும் நாயகியே
வெல்லுவாய்ப் புவனமெல்லாம் வேதரூபி
வேதாந்த வேதியம்மா விமலிரூபி
நல்லுவாய் மக்களைநீ ரட்சியம்மா
நலமாகப் பாகதியை நாட்டுந்தாயே.

(இ-ள்.) சொல்லத் துடங்கினாள் உலகமாதியந்தமும் படைத்த சோதியாகிய நாதா நாரணி வைகுண்டத்தாள் நற்பதவி யீயும் நாயகி புவனமெங்கும்

Uratech Document Processing Solutions

நிறைந்த வேதரூபி வேதாந்தவேதி விமலி சூலி மக்களை நீ ரட்சியம்மா; நலமாகப் பாகதியை நாட்டுந்தாயே எ-று.

(வி-ரை.) ஓ உலக மனைத்தையும் படைத்த மாதாவே, பத்தினி, உலகத் தாயே, வைகுண்ட நாரணி, கற்பதவியளிக்கும் நாயகி, வேதரூபி, விமலி, சூலி எனப் பலவாறு துதித்து, இன்னுமுள்ள விஷயங்களையும், கூறவேண்டும் என மேற்படி மாதாவைத் துதித்தனர் என்பது கருத்தாகும். 13

தாயென்று கனவிலுமென் மனதிலுந்தான்
தார்குழலே யுன்திருத்தாள் தலைமேல்வைத்தோம்
ஆயியென்று அனுதினமும் போற்றுவோமே
அன்பாக எங்களைநீ கார்க்குந்தாயே
வாயென்று சொல்லவுந்தான் போராதம்மா
வங்கிசத்தைக் கார்க்குமுன் வருவாய்த்தாயே
பேயென்றும் பித்தனென்றும் பிள்ளையைத்தான்
பெற்றெடுத்த மாதாவே பெருமைசெய்யே.

(இ-ள்.) தாயென்றும் கனவிலும் மனதிலும் தாயாமோ உன் திருத் தாளைத் தலைமேல் வைத்தோம்; ஆயியென்றும் அனுதினமும் போற்றுவோம் அன்புவைத்து எங்களைக் கார்க்குந்தாயே யென்றும் வாயினால் சொல்லப் போதாதம்மா; வங்கிசத்தைக் கார்க்குமுன் வருவாய்த்தாயே. பேயென்றும் பித்தனென்றும் பிள்ளையைப்பெற்ற தாயே பெருமைசெய்வாய் எ-று.

(வி-ரை.) ஓ எங்களைக் காக்கும் தாயே, கனவிலும், நனவிலும் உம்மையே, தியானிப்போம். தினமும் போற்றுவோம். பேயனெனவும் பித்தன் எனவுங் கூறத் தகுந்த பிள்ளையைப் பெற்று உலகத்தைக் காப்பாற்றிய மாதாவே, எங்கள் மனக் குறையை யகற்றவேண்டுவது உமது கடமையே யாகு மென மேற்படி அனைவரும் துதித்தனர் என்பதாம். 14

செய்யவென்று முனிவர்களும் தொழுதுபோற்ற
சேதிசொல்வா ளுத்தமியும் செப்பக்கேளீர்
வையகத்தில் சக்கரக் குலிசைகண்டால்
வைகுண்ட நாரணனார் மூச்சதாகும்
மெய்யனென்ற மெய்யனவன் வேதாந்தவேதன்
மேன்மைபெற்று வந்துதித்தான் மேதினித்தான்
செய்யவுந்தான் திருமுடியில் புஷ்பஞ்சூடும்
செகராஜன் குபேரனிவன் செலுத்தும்வாழ்க்கை.

(இ-ள்.) பெருமைசெய்ய வேண்டுமென்று முனிவர்களுந் தொழுது போற்ற உமையவள் சொல்வதைச் சொல்லக்கேளீர். வையகத்தின்மீது

சக்கரகுலிசை ரேகையைக் கண்டால் அது வைகுண்டத்தில் வாழும் நாரணனுருடைய மூச்சாகும். அவன் மெய்யென்ற வேதாந்த வேதமேன்மையைப் பெற்றுவந்து பிறந்தான்; முடியின்மீது திருமுடியில் புஷ்பஞ் சூடும்படியான சேகராஜராகிய வாழ்க்கை செலுத்துவன் எ-று.

(வி-ரை.) மேற் சொன்னவாறு தோத்திரம் செய்த தேவர்கள், முனிவர்கள் முதலாயுள்ள அனைவரையும் பார்த்த மாதாவானவள் பின்வருமாறுரைக்கின்றனள். என்னவெனின், மேற்படி குலிச ரேகையுடன் பிறந்தவர், நாரணனது மூச்சேயாகும். இச்சனனத்தில் வேதாந்த வேதனாய் ஈசனுக்குப் புட்பம் சூடுபவனாகி குபேரனை யொத்த சம்பத்துடையவனாய் வாழ்பவன் 15
இவனே எனக் கூறினாள் என்பது கருத்தாகும்.

வாழ்க்கையடா யிவன்பிறந்த செனனயோகம்
　　வண்மையாய்ச் சொல்லுகிறேன் வரிசைகேளீர்
நாழ்க்கையடா யிவன்பிறந்த யில்லறந்தான்
　　நலமான புதுமனையு மிரண்டுவாசல்
ஆழ்க்கையடா செவ்வாயில் இரவுதன்னில்
　　அன்பான நாழிகைதான் இருபத்தைந்தாம்
வாழ்க்கையடா ராகுவுட வுச்சமாகும்
　　வண்மையா லிவனுக்குக் கிரகம்ராசி.

(இ-ள்.) வாழ்க்கையாகத்தானே மேற்கூறியோன் பிறந்த ஜெனன யோகம் வண்மையாகச் சொல்லுகிறேன் அதை வரிசையாகக் கேளீர். இவன் பிறந்த இல்லறம் புதுமனையாகும்; இரண்டு வாசலுண்டாம்; செவ்வாய்க் கிழமை இரவு நாழிகை அன்பத்தைந்தா மிவன் ஜெனனம். அப்போது இராகு உச்சமாகும்; வண்மையாகிய இவனுக்கு கிரகமும் இராசியும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன்பிறந்த வாரம் முதலியனவற்றைக் கூறுவரா ராயினர். அவையாவன, புதிய மனையும், இரண்டு வாசலு முடைய இடத்தில் செவ்வாய் இரவு 25-நாழிகையில் இராகு பகவான் உச்சம் பெற இப்பூமி 16
யின்கண் வந்து தோன்றினன் என்பது கருத்தாகும்.

கிரகமென்ற யிவன்பிறந்த வடவாசல்வீட்டில்
　　கிளையாலே மனிதர்களும் உரிமைமெத்த
துரகமென்ற சதுரங்க பலத்தினாலே
　　சுகம்பெற்று வாழலாஞ் சுசிகரந்தான்
அரகமென்ற அறத்தையிவன் பேணுவான்பார்
　　அன்பான பாலனுக்கு சிறுகுரலதாகும்
வரகமென்ற யிவன்பிறக்கும் போதுமைந்தா
　　வாகான அவ்விடத்தில் பெண்கள்மூன்றே.

(இ-ள்.) கிரகமாகிய இவன் பிறந்த வடவாசல் வீட்டில் மனிதர்களும் உரிமைமெத்த உண்டு; திரவமோடு சதுரங்க பலத்தினுல் சுகம்பெற்று வாழ்குவன். சுசிகரனுகவும் அறமானது புரிகுவன். சிறுகுறலாகப் பேசுவன்; இவன் பிறக்கும்போது அருகிருந்தவர்கள் மூன்று பெண்களாம் எ-று.

(வி-ரை.) முன் கவியிற் சொல்லியபடி புதியதும் இரண்டு வாசலுமுடைய வீட்டில் வடக்கு வாயிலேயுடைய இல்லத்தி லிவன் பிறந்தவன் எனவும் இவன் வாழ்நாளில் சதுரங்க பலத்துடன் தருமம் முதலியனவற்றைச் செய்து வாழ்வன். இதுவன்றி இவன் சிறுகுரலன் என்றும் ஜெனிக்கும் போது தாயுடன் மூன்று பெண்களிருந்தனர் எனவுங் கூறவேண்டுவதாம். 17

பெண்களென்ற மூன்றுபேர் பெண்கள்மைந்தா
பேணியே யிருக்கும்பபோ பூமிபார்த்து
அங்களென்ற மைந்தனிவன் பிறந்தானப்போ
ஆச்சரியஞ் சதையமதி லவதரித்தான்
கொங்குமுத லினம்வரைத் தேடினுலும்
கோளனைப்போல் குலிசமுடன் பிறப்பறிந்து
அங்கையிலே ரேகையைந்துண் டாகுமைந்தா
அதிகாரம் வாழ்வுண்டாம் ஆய்ந்துசொன்னேன்.

(இ-ள்.) மேற்கூறிய வண்ணம் மூன்று பெண்கள் அருகிருக்கும்போது பூமியைப்பார்த்துப் பிறந்தோனுகும். நட்சத்திரம் சதையம். இனங்கள் முழுதுந்தேடினுலும் குலிசமுடையோன்; பிறப்பறிந்து அவன் உள்ளங் கையில் ரேகையானது ஐந்துண்டாம். அதிகாரம் வாழ்வுண்டாம் ஆய்ந்து சொன்னேன் எ-று.

(வி-ரை.) மேலே சொன்னபடி இவன் தாயுடன் மூன்று பெண்களிருக்கும் சமயம் இவன் பிறந்தான் என்றும் சதயம் இரண்டாங்காலிற் பிறந்தவனுமாகும் என்பதாம். மற்றும் இச்செய்யுளின் முக்கிய கருத்து என்ன எனின், கொங்கு தேசத்திலிருந்து இத்தேயம் வரையிற் றேடினுலும் இவனைப்போன்று 5-ரேகையுடன் பிறந்தவர்கள் இல்லை என்பதே முக்கிய கருத்தாகும். 18

ஆய்ந்துநான் இன்னமுந்தான் சொல்லக்கேளு
ஆகார யிவன்கெர்ப்பம் ஆறும்நாளாம்
வாய்ந்துமுள்ள மனையாளும் மன்னன்தானும்
வரிசையாய் தென்பாலில் புணர்ச்சியானுர்
சேர்ந்துமிக தரித்துகெர்ப்பந் திசையோகத்தில்
சேர்மானம் உச்சமது கெர்ப்பம்நாலாம்
ஏர்ந்துமிகப் பிறவியிலே ராகுஉச்சம்
என்சொல்வே னவமாண்டு யிருப்பான்காரே.

CuraTech Document Processing Solutions

(இ-ள்.) ஆய்ந்து இன்னமும் சொல்லக் கேட்பாயாக: இவன் கெர்ப்பம் ஆறு நாளிலானவன்; மனையாளும் மன்னனும் தென்பாற் பக்கமாகப் புணர்ச்சி செய்தார்கள். அது தரித்தது திசையோகத்திலாம். உத்தமமாகிய கெர்ப்பம் நாலாம் ஜென்மலக்கினத்தில், இராகு உச்சம்பெற்று யிருந்தான், அவன் திசையு மின்னம் ஒன்பது வருடமிருப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் கருதரித்த விவரத்தினைக் கூறுவாராயினர். எப்படி எனில்? இவன் மாதா ஸ்நானம் செய்த ஆறும் நாள் தென்பாலிற் சிரம் வைத்துப் புணர்ந்தகாலம் இவன் தரித்தனன். இதன் பயனால் இவனது கிரக அடவியின்படி யிவனுக்கு குருவுடன் நான்கு கிரகங்கள் உச்சம் எனவும் ஜனனத்தின்போது இராகு திசையில் 9-வருஷங்கள் இருப்புள்ளன என்பது கருத்தாகும். 19

இருக்கவும்தான் இவனுக்கு முன்னேமைந்தா
இயல்பாக மூன்றுபேர் பிறந்தார்பாரு
தருக்கவும்தான் இரண்டுபேர் இருப்பாரப்பா
தரித்துதப்பா கெர்ப்பமொன்று தாழ்ந்துபோச்சு
பருக்கவும்தான் மனையிலுள்ள பொருள்களெல்லாம்
பண்பான பணமுதலும் யாவும்போகும்
திருக்கவுந்தான் ஆண்நான்கு பெண்தான்ஐந்து
திரமாகப் பிறக்குமென்று செப்பினேனே.

(இ-ள்.) இருக்கத்தானும் இவனுக்குமுன் மூன்றுபேர்கள் பிறந்திருப்பார்கள்; அதில் இரண்டுபேர் இருப்பார்கள். ஒன்று தரித்து கெர்ப்பத்திலேயே அழிந்துபோம்; அன்றியும் மனையிலுள்ளப் பொருள்களும் பணமுதலானதும் ஆறும்போகும். ஆண் நான்கும் பெண் ஐந்தும் பிறக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது சகோதர விவரத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, முன்பிறந்தோர் மூன்று. அவற்றுள் ஒன்று கெர்ப்பத்திற்றானே பாழாகும். மொத்தத்தில் நான்கு ஆண்களும் 5 பெண்களும் பிறப்பர். இவன் யோகமானது மகா பிரபலமுடையதாகி யிருக்கும் என்பதாம். 20

செப்புகிறேன் இவனுக்குத் திசையோகம்தான்
சேயனுக்கு நவமாண்டில் வருகுமப்பா
ஒப்புகிறேன் நிதியாலே யோகம்தானும்
ஓகோகோ வருகுமடா மைந்தனுக்கு
மெய்ப்புகிறேன் இவன்பிறந்த போதுமைந்தா
மேன்மையாய் கெண்டாந்திரம் உண்டுகண்டாய்
தப்புகிற துண்டுமைந்தா தீட்சைசெய்ய
சற்குருவாம் ஈஸ்வரனைப் போற்றிசெய்யே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) செப்பியபடி இவனுக்குத் திசையும் யோகமும் ஒன்பதாம் வருஷத்தில் வருகும். வருகினும் நிதியாலும் யோகம் மேன்மேலாக வருகும். இவன் பிறந்தபோது கெண்டாந்திரமுண்டு; அதைத் தப்பிப்போகும்; தீட்சையானது செய்ய சற்குருவாகிய ஈஸ்வரப் பூசைசெய்குவாய் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் திசையோகம் முதலியனவற்றையும், கெண்ட பரிகாரத்தையுங் கூறுவாராயினர். அவையாவன, இவன் வயது 9-க்குப் பின்பே யோகம் வரும். இவன் பிறந்த காலத்திலேயே கெண்டம் வருமாதலால் அக்காலம் ஈஸ்வரரைத் துதிக்க நீங்குமென்பதாம். 21

செய்யப்பா யிவனுடைய யோகவாழ்க்கை
சேயனுக்கே திசையோகம் செப்பக்கேளு
வையப்பா ரிஷிகளெல்லாம் இதுபோல்தானே
வகையாகச் சொல்வதுண்டோ வையகத்தில்
மெய்யப்பா யிந்நூலைப் பழித்தபேர்கள்
மீளாத நரகத்தில் வீழ்வார்பாரு
பையப்பா என்குருவாம் அரனார்தானும்
பைங்கொடிக்கு ரகசியமாய்ப் பகர்ந்ததன்றே.

(இ-ள்.) செய்யவும் இவனுடைய யோகவாழ்க்கையும் திசையும் சொல்லக் கேளாய். வையகத்தில் ரிஷிகள் இதுபோல் வகையாகவும் சொல்வதுண்டோ. மெய்யாகிய இந்நூலைப் பழித்தபேர்கள் மீளாத நரகத்தில் வீழ்குவார். என் குருவாகிய அரனுடைய பாலன் பைங்கொடிக்கு ரகசியமாகப் பகர்ந்ததாம்.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது என்னவெனின்? இந்த ஜாதகனது திசை யோகம் வாழ்வு முதலியனவற்றைக் கூறுகிறேன். ஆயினும், இதைப் போன்ற எந்த முனிவர்களும், ரிஷிகளும் கூறமாட்டார்; ஆனதால் இதனை எவரொருவர் பழித்தார்களோ அவர்கள் கொடிய நரகில் வீழ்வர். இவை, ஈசன் எனக்கு ரகஸ்யமாயுபதேசிக்கப்பட்டதென்க என்பதாம். 22

பகர்ந்திடவே இன்னமும்தான் குலிசமார்க்கம்
பக்குவமாய்ச் சக்கரங்கள் பகரக்கேளு
நிகர்ந்திடவே இவன்வயதே ஆகுமுன்னே
நிட்சேபம் ரெண்டதுதான் கிடைக்கும்பாரு
அகர்ந்திடவே இவன்வயது இருபத்தாறில்
அகப்படுமே புதைத்துவைத்த தனம்தான்மைந்தா
மகிழ்ந்திடவே வாலைசொன்ன மைந்தற்கப்பா
வண்மையால் இன்னமுண்டு வரிசைகேளே.

(இ-ள்.) பகரும்படியாக இன்னமும் குலிசமார்க்கம் சக்கரங்கள் பகரக் கேளும்: இவன் வயதாகு முன்னமே புதையலானது இரண்டு கிடைக்கும்.

இவனுக்கு வயது இருபத்தாறில் பூமியில் புதைத்துவைத்த தனங் கிடைக்கும். மகிழ்வாக வூலையானவள் சொன்ன மைந்தனுக்கும் வண்மையாக இன்னமு முண்டு வரிசையாகக் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்ன வெனில், இவனுக்கு விருத் தாப்பிய வயது ஆகும் முன்னரே, இரண்டு புதையலை எடுப்பான். அதில் முன் பிராமணனு யிருந்தபோது புதைத்துவைத்தப் பொருளானது இவன் வயது 26-ல் கிடைக்கும், ஆனதால், இன்னமிவன் பலனைக் கூறுவேன் கேளுங்கள் என்பதாம் 23

கேட்கவே யிவன்மாதா பிதாவுக்கப்பா
சேவலமாய் வைத்திருப்பான் கேள்வியாக
வாட்கவே யிவன்வயது பத்துக்குள்ளே
வளமையாம் சிறிதுபொருள் போகும்பாரு
ஆட்கவே யிவன்வயது எழுபத்தைந்தாம்
ஆசியனே விதமொன்று அன்பாய்ச்சொன்னேன்
தாட்கவே யிவன்தானும் மிகவேவாழ்வான்
சந்தான மகண்டமது நாலுமுண்டே.

(இ-ள்.) கேட்கவும் இவன் மாதா பிதாவைக் கேவலமாகத் தானே வைத்திருப்பான் கேள்வியாகவும், இவனுக்கு வயது பத்துக்குள்ளே வளமையாகி சிறிது பொருள்போகும் இவன் வயது எழுபத்தைந்தாகும்; இவன் மிகவும் மேன்மையாக வாழ்வன் சந்தானக் கெண்டம் நாலுண்டாம் எ-று.

(வி-ரை.) இச் செய்யுளின் கருத்தாவதென்ன வெனில், இவன் வயது 10-க்குள் இவன் மாதா பிதாக்களுக்குச் சிறிது பொருள் விரயமாகும் எனவும் இந்த ஜாதகனுக்கு வயது 75 எனவும் கெண்டாதி கெண்டங்கள் நான்கு எனவுங் கூறவேண்டுவதேயாகும் என்பதாம். மேற்படி கெண்டாதி கெண்டங் களைக் கீழே வருவனவற்றால் விளக்குவார். 24

உண்டான கெண்டந்தான் மைந்தாகேளு
உறுதியாய்ச் சொல்லுகிறாள் உமையாள்தானே
நன்றான யிவன்வயது ஒன்பதுக்குள்
நலமான மாதமொரு நாளிலேதான்
குன்றான காலிலே விஷமுள்பட்டு
கொடியதொரு வியாதிகொண்டு ரோகமுற்று
வண்டான மாசமது ரெண்டுமாகும்
வண்மையாம் மைந்தனிவன் மெலிவான்பாரே.

(இ-ள்.) உண்டாகிய கெண்டங்களைக் கேளும் உறுதியாக உமையாள் சொல்லுகிறாள். இவன் வயது ஒன்பதுக்குள் ஒருநாளில் காலில் விஷமுள்

பட்டு அதனால் வியாதிகொண்டு ரோகமுற்று இரண்டு மாதம் வரையிலும் வண்மையாகிய மேற்கூறிய மைந்தனும் மெலிவான் எ-று.

(வி-ரை.) முன்சொன்ன கெண்டாதி கெண்டங்களுள் ஒன்றை இக்கவியால் விளக்குகின்றனர். அவையாவன, இவன் வயது 9-க்குள் இவனது காலில் விஷமுள் தைத்து அதனால் விஷமுண்டாகிக் கொடிய ரோகமுற்று, இரண்டு மாதங்கள் வரையில் மெலிவடைந்திருப்பான் என்பது கருத்தாகும். 25

பார்க்கவே தீட்சைகளைப் பின்காண்டத்தில்
  பாகமதாய்த் தீர்க்கவும்தான் பாடினேன்பார்
ஏர்க்கவே யிவன்வயது இருபத்துநாலில்
  என்னசொல்வேன் கடினமுள்ள கண்டமப்பா
ஆர்க்கவே பதினெட்டு நாள் தான்மைந்தா
  அதிகமுந்தான் வியாதியினால் மெலிவானப்பா
கார்க்கவே முன்சொன்னேன் பின்னும்சொன்னேன்
  கருணையால் விரதத்தில் நிவர்த்திசெய்யே.

(இ-ள்.) பார்க்க தீட்சைகளைப் பின்காண்டத்திற் பாகமாகத் தீர்க்கும்படியாகப் பாடினேன்; இவன் வயது இருபத்து நாலில் இயம்பமுடியாதக் கடினமாகிய கெண்டம் சம்பவிக்கும்; அது பதினெட்டுநாள் வரைக்கும் வியாதியினால் மெலியவைக்கும்; கார்க்கும்படியாக முன்னும் பின்னுமாகச் சொன்னேன் அதைக் கருணையாகிய விரதத்தினால் நிவர்த்தி செய்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வயது 24-ல் உண்டாகும் கெண்டாதி கெண்டங்களைக் குறித்துக் கூறுவாராயினர். அவையாவன இவன் வயது 24-ல் கொடிய நோயொன்றுண்டாகி, அதனால் 18-நாட்கள் வரையில் துன்பப்பட்டு தேகமெலிவான், அக்காலம் விரதம் முதலியவைக ளிருக்கின் மேற்படி கெண்டம் நிவர்த்தியாகும் என்பதாம். 26

செய்யவே யிவன்வயது நாற்பத்தாறில்
  தீமையால் சத்துருவால் வியாதியாலும்
வையவே வயிற்றிலே வாய்வுபோலும்
  வழகான கெண்டையைப்போல் வளரும்பாரு
உய்யவே ஈசனைத்தான் பூசைசெய்து
  உற்றதொரு கண்டத்தைத் தீர்க்கவேண்டும்
மெய்யவே பின்காண்டம் தனிலேசொன்னேன்
  மேன்மையாய் உள்ளபடி நடத்துவாயே.

(இ-ள்.) செய்யும்படியாக இவன் வயது நாற்பத்தாறில் தீமையாலும் சத்துருவாலும் வியாதியாலும் வயற்றில் வாய்வுபோலும் கெண்டையைப்

Curatech Document Processing Solutions

போல் வளர்வதாலும் துன்பமனுகும் அது நீங்கச் சிவபெருமானைப் பூசை செய்து உற்ற கெண்டங்கள் இவைகளைத் தீர்க்கவேண்டும்; இதைப் பின் காண்டமதிற் சொன்னேன் அவ்வாறு நடத்துவாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் வயது 46-ல் உண்டாகும் கெண்டாதி கெண்டங்களைக் குறித்துச் சொல்லியுள்ளன. அவையாவன, மேற்படி வயது 46-ல் இவனது சத்துருவாதையால் வயிற்றிலோற் கட்டி கெண்டை யுண்டாகி அவை நாளடைவில் வளர்ந்து துன்பத்தைத் தரும் அக்காலம் ஈசனை பூஜை செய்யின் அவை நீங்கிச் சுகமுண்டாகும் என்பதாகும். 27

வாயென்று யிவன்வயது எழுபத்துநாலில்
வருகுமடா பெரியகண்டம் வண்மையாக
சாயென்று ஒருவருஷம் ஒடுக்கிப்பின்னும்
சண்ணுமடா சக்கரத்தின் அமைப்பினுலே
காயென்று கருத்ததுபோல் நடக்கவேண்டிக்
கருணையால் சொல்லிவிட்டேன் கண்டுகொள்ளு
தாயென்று என்னைத்தான் தொழுததாலே
தயவுவைத்தேன் மனதிறங்கித் தன்மையாலே.

(இ-ள்.) வாயென்றபடி மேற்கூறியோன் வயது எழுபத்து நாவில் பெரிய கண்டமானது வருகும்; அது ஒருவருஷம் ஒடுக்கி பின்னும் கண்ணும் சக்கரத்தின் அமைப்பினுல் கருத்துபோல் நடக்கவேண்டுமென்று கருணையாகச் சொன்னேன்; கண்டுகொள்வாய் தாயென்று என்னைத் தொழுததினுல் தயவுவைத்தேன் மனமானது யிறங்கித் தன்மையாகவும் எ-று.

UrdaTech
Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியா லிவனது முடிவு காலத்தைக் கூறியுள்ளனர். அவை யாவன, இவன் வயது 74-ல் ஓர் பெரிய கெண்டம் வரும். அவை வருஷம் ஒன்று வரையிலிருந்து மேற்படி வியாதியாலேயே மரணமாவான். இவையே இந்த ரேகையினது கருத்தாகும் என்று கூறினுன் என்பது கருத்தாகும். 28

தண்மையப்பா யிவன்வயது யிருபத்தாறில்
தலைவனிடப் பிதாவும்தான் இறப்பான்பாரு
வண்மையப்பா யிவன்வயது முப்பத்தாறில்
வகையாக மாதாவும் இறப்பாளப்பா
உண்மையப்பா யிவன்வயது முப்பத்தாறில்
உற்றதொரு மூத்தாளும் இறப்பாள்பாரு
நன்மையப்பா யிவன்வயது அறுபத்தெட்டில்
நலமான தமையனவன் இறப்பான்பாரே.

(இ-ள்.) தண்மையாக இவன் வயது இருபத்தாறில் தகப்பன் மரண மாகுவன்; இவன் வயது முப்பத்தாறில் தாயாரும் மரணமாவாள்; வயது

நாற்பதுக்குள் இவனுக்கு மூத்தாள் இறப்பாள்; வயது அறுபத்தெட்டில் தன்னுடைய தமயனவன் மரணமாகுவன்.

(வி-ரை.) இக்கவியா லிவன் தாய், தந்தை, தமயன், தமக்கை முதலி யோரின் மரண காலத்தைக் கூறியுள்ளனர். அவையாவன, 26-ல் பிதாவும், 36-ல் மாதாவும், 40-ல் தமக்கையும், 68-ல் தமயனும் மரிப்பர் என்பதே யாகும். 29

பார்க்கவே யிவன்வயது எழுபத்தைந்தில்
  பண்பாகப் புனலாறு கொள்வதுண்டு
ஏர்க்கவே யிவன்வயது மூன்றுக்குள்ளே
  ஏற்றதொரு மாரிகண்டம் ஆச்சுதன்றே
மார்க்கவே யிவன்வயது ஆறுக்குள்ளே
  வண்மையால் அலகுகண்டம் ஆச்சுதன்றே
தீர்க்கவே யிவன்வயது பதினைந்தப்பா
  திரமான வியாதிகெண்டம் ஆச்சுதன்றே.

(இ-ள்.) பார்க்க இவன் வயது எழுபத்தைந்தில் ஆற்றில் கெண்டம் நேரும் அன்றியும் இவன் வயது மூன்றுக்குள்ளே அம்மையானது கண்டு நீங்கிப் போனதுண்டு; வயது ஆறில் அலகு கண்டம் வாய்த்ததுண்டு வயது பதினைந்தில் வியாதி கண்டம் வந்து தீரும் எ-று.

(வி-ரை.) இக்கவியில் முன்சொன்ன பிரபல கெண்டங்களைத் தவிர்த்துச் சுலப கெண்டங்கள் முதலியனவற்றைக் கூறியுள்ளனர். அவையாவன, வயது மூன்றுக்குள் வைசூரி, 6-ல் ஆயுதத்தால், 15-ல் வியாதியால் கெண்டம் என்பனவாம். மற்று மிவன் வயது என்ன வெனில் 75 என்பதாகும். 30

அன்றெனவே யிவனுக்கு வுணர்வுமெத்த
  ஆச்சரியம் உள்ளமைந்தன் வேதம்பார்ப்பன்
தொன்றெனவே வினோதவித்தை மிகவேகற்பான்
  கூறரிய சாஸ்திர வாதியாவான்
நன்றெனவே வைத்தியமுதற் கண்ணியாகும்
  நலமான புராணங்கள் கீதைபார்ப்பான்
சென்றமிகு செல்வனிவன் லிபிதான்னாலு
  திறமாகப் பிடித்திடுவான் செல்வன்தானே.

(இ-ள்.) மேற்கூறிய இவனுக்கு உணர்வு மெத்தவுண்டாம் ஆச்சரிய முள்ள மைந்தனாக விருப்பான் வேதங்களைப் பார்ப்பான்; வினோதமாகிய வித்தைகளை கற்பன் சாஸ்திரவாதியாவன் வைத்திய முதலானதுஞ் செய்வன் புராணங்கள் கீதைகள் பார்ப்பன் செல்வத்தில் மிகுந்தவனாகுவன் வித்தைநாலுங் கற்பன் செல்வனிவனும்.

LuraTech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியா லிவன் கல்வியின் திறத்தைக் கூறுவாராயினர். எப்படி எனில், மிக்க அறிவுடையவனாகி, வேதாந்த மறிந்து, விநோத வித்தையைத் தெரிந்து, சாஸ்திரமறிந்து, வாத முறையினைக் கற்று, வைத்தியத்திற் றேர்ந்து, புராண முதலியவற்றிற் கரை கண்டு, விடு முதலியவற்றையும் படிப்பான் என்பதுவே யாகும். 31

தானமெனும் இவனுக்குத் தாரம்ரெண்டு
தன்மையுள்ள மக்களவர் ஏழுபேராம்
வானமெனும் ஆண்நாலு பெண்தான்மூன்று
வண்மையுள்ள மக்களிவன் பெருவான்பாரு
ஞானமெனும் அமைப்பதுதான் ஒன்றதாகும்
கருணையால் தேவிமார் மூன்றுபேராம்
பானமெனும் பாலுடனே அன்னம்வுண்ணல்
பைங்கிளிமார் மூன்றினிலே ஒன்றுபோமே.

(இ-ள்.) இவனுக்குத் தாரம் இரண்டாகும் சந்ததிகள் ஏழுண்டாம். அதில் ஆண் நாலு பெண் மூன்றாகும் வண்மையாகப் பெருவான். அமைப்பு ஒன்றாகும் தேவிமார்கள் மூன்று போகும்; பாலும் அன்னமுமாக உண்ணும் மூன்று பெயர்களில் ஒன்று போகுமாம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனில், இவனுக்கு மனைவிமார் மூவர் ஆயினும் நிலைத்திருப்பது இரண்டெனவும், சந்ததிகள் எழுவருள் ஆண் பிறவி நான்கும், பெண் பிறவி மூன்று என்பதாம். மற்று மிவன் வாழ்நாட்களில் பாலன்ன முண்பான் என்றது. இவன் உணவின் சிறப்பினைக் கூறியதென்பதாம். 32

LuraTech
Document Processing Solutions

போகுமடா ஜென்மாந்திர வினைதான்ரெண்டு
பொல்லாத கெண்டமது ரெண்டும்சொன்னேன்
ஆகுமடா கெண்டமிவை அடித்துப்போடும்
அப்பனே மின்காண்டத் தரைந்தேன்மார்க்கம்
ஏகுமடா மார்க்கம்போல் செய்துக்கொள்ளு
என்னசொல்வேன் பிதாமகனை எடுக்கப்பார்க்கும்
தாகுமடா பொல்லாத துன்பம்வந்து
தனக்குமுதற் பிதாவையுந்தான் சார்வதாமே.

(இ-ள்.) போவது ஜென்மாந்திர வினையாம். இரண்டாவது பொல்லாதக் கெண்டமாகிய இரண்டும்சொன்னேன் ஆகிய இக்கெண்டம் அடித்துப்போடும். அதை முன்காண்டத்திற் சொன்னேன் அது போவதற்கு மார்க்கம்போல் செய்துக்கொள்ளவும். அது பிதா மகனை யெடுக்கப்பார்க்கும் பொல்லாத துன்பமாக வந்து தனக்கு முதல் பிதாவிற்கும் சாறும் எ-று.

(வி-ரை) இக்கவியின் முக்கிய கருத்தென்னை எனின், முன்னங் கூறிய கவியால், இவனுக்குண்டாகுங் கெண்டாதி கெண்டங்களுள் இரண்டு கெண்டங்கள் மகா கொடியதெனவும், அவை இந்த ஜாதகனையோ அல்லது இவன் பிதாவையோ கொல்லப் பார்க்கும் என்பதாம். இதற்கு வேண்டிய சாந்தி பரிகாரம் முதலியனவற்றைப் பின்வருங் கவியாலுரைக்கின்றனர். 33

ஆகவே யிவையறிந்து மைந்தாநீதான்
    ஆச்சரியம் ஓமமும் தர்ப்பணமும்செய்து
பாகமாய்ப் ப்ரமனிட பூசைசெய்து
    பற்றியது துறிதியிலே பாய்ந்துநிற்பாய்
போகவே முன்சாபம் உண்டுமைந்தா
    பொல்லாத சாபமடா சொல்லப்போமோ
வாகவே விலகுமோ யிந்தச்சாபம்
    மனோன்மணித்தாய் கிருபைமிகு வாக்கியமாமே.

(இ-ள்.) ஆகும்படியாக இதையறிந்து மைந்தா நீயும் ஓமமும் தர்ப்பணமுஞ் செய்து பரமனிட பூசையுஞ்செய்து இறிதியில் பாய்ந்து நிற்பாய் உனக்கு முன்சாபமுண்டு. அது பொல்லாத சாபம் சொல்லப்போகாது இந்தச் சாபம் விலகுமோ மனோன்மணித்தாய் கிருபை மிகுத்துரைத்த வாக்கியம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவதென்னை எனின், மேலே சொன்ன கெண்டாதி கெண்ட முண்டாகும் சமயம் ஓமம் செய்தல், தர்ப்பணம் வெய்தல், ஈசனைத் துதித்தல், ஆகிய கருமங்களைச் செய்வது நலம். அவ்வாறு செய்யின் மேற்படி கெண்டம் நீங்கும். இல்லையே லிவனுக்கு பூர்வத்திற் செய்த சாபம் உண்டு என்றதால் இவை விலகாது. இவை யாவும் மனோன்மணியினது கிருபையே யாகும் என்பதாம். 34

வாக்கியமேன் என்வாக்கியம் சௌக்கியம்பார்
    வசனிப்பேன் இன்னமுந்தான் மகிழ்ந்துகேளு
பாக்கியமென் மைந்தனுக்கு வேளையென்ன
    பார்வதியாள் சொல்லுகிறேன் பரிந்துகேளு
ஆக்கியமென்ன யிவன்வயது எண்பதேமுக்கால்
    அன்பான பாலகனுக்குத் தர்மம்ஈதேன்
பாக்கியமேன் யிவனுக்குச் சென்மம்தொட்டு
    பாகான வருஷமது ஒன்பதப்பா.

(இ-ள்.) வாக்கியன்ன வாக்கியம் சர்வவாக்கியம் வசனிப்பேன் அதை மகிழ்ந்துகேளும்; பாக்கியமென்ன மைந்தனுக்கு வேளையென்ன பார்வதியாள் சொல்கிறேன் பரிந்துகேளும் இவன் வயது எழுபதேமுக்கால் இப்பாலகனுக்

UpaTech Document Processing Solutions

குத் தர்மமாக ஈந்தேன். இவ்வாக்கியம் இவனுக்குச் சென்மந்தொட்டு ஒன்பதுவருஷந் தப்பாதாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவனது தீர்க்க வயதையும், யோகமுண்டாகும் காலத்தையுங் கூறுவாராயினர். எப்படி எனில், இந்த ஜாதகனுக்கு தீர்க்க வயதானது 87—9—0 எவ்வாறுண்டாகும் எனின், முன் சொன்னபடி ஓமம் செய்தல், தர்ப்பணம் செய்தல், ஈசனைத் துதித்தல் முதலியவற்றுலேயே உண்டாகவேண்டும் என்பது கருத்தாகும். 35

தப்பாதே ஒன்பதுடன் ஏழுமாதம்
தருவான கன்னியென்ற மாதமாகும்
மிப்பாதே யிருபதுக்குள் மதியாம்வாரம்
மேன்மையாம் என்தமயன் வந்துதானே
ஒப்பாதே பிதாவினிடம் சொல்லினானும்
ஓகோகோ தவங்காட்டி நின்றிட்டேனே
வைப்பான சொர்னமது மெத்தவாகும்
வரிசைபெற ஈந்திட்டேன் வண்மைகேளே.

(இ-ள்.) தப்பாமற்படிக்கு ஒன்பது வருடமோடு ஏழுமாதம் அது கன்னிமாதமாகும்; இருபதுக்குள் திங்கட்கிழமை என்னுடையத் தமையன் வந்து ஒப்பாத பிதாவினிடம் சொல்லி நானும் தவங்காட்டி நின்றேன் சொர்னமது மெத்தவும் வரிசைபெற ஈந்தேன் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவனது யோக விவரத்தைக் கூறினர். அவையாவன, இவன் வயது 9, 7-க்குள் திங்களில், இந்த தேவியுடைய தமயனான நாராயணன் இவனது பிதாவிடம் தனமிருக்கு மிடத்தைச் சொல்லி அதனை எடுத்தாளும்படி அருள்சுரந்தேன் என்பது கருத்தாகும். 36

கேட்கவே யிவன்வயது இருபத்தாறில்
கேவலமாம் மகரமென்ற மாதம்தன்னில்
ஆட்கவே யிவன்உறங்கும் வேளைதன்னில்
அன்பான வாழிநந்தி சடையோன்போல
வாட்கவே யிவனுக்குத் தனங்களொன்று
வகையாக ஈன்றிடவே முன்னோர்சொன்னர்
ஏட்கவே எம்பிரான் அருளினலே
இயம்பிட்டேன் தன்மீயம் இணங்கத்தானே.

(இ-ள்.) கேட்க இவன் வயது இருபத்தாறில் தைமாதத்தில் இவன் உறங்கும் வேளையில் நாழி ஐந்தில் சடையோன்போல் வாழ்க. இவனுக்கு தனம் ஒன்று வகையாக ஈன்றிட முன்னோர்சொன்னர்; ஏற்கும்படியாக எம்பிரான் அருளால் இயம்பினன் தன்மீயம் இணங்கத்தானும் எ-று.

UraTech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியாலும் இவனுக்குண்டாகும் தனத்தின் விவரத்தையே கூறுவாராயினர். அவையாவன, இவனது வயது 26-ல் தைமாதத்தி லிவன் தூங்கும் நேரம் சிவபிரானைப் போலிவன் கனவிற் றோன்றி தனமிருக்கு மிடத்தை யிவனுக்குக் காண்பித்தார் என்பதாம். 37

தானென்ற யிவன்பிறந்த குலிசமாகும்
தருவாக யிவன்யோகம் சுக்கிரயோகம்
ஊனென்ற யிவன்யோகம் கனத்தயோகம்
உண்மையாய்த் தனம்வந்து உதவிற்றன்றோ
நானென்ற நன்மைமெத்த செய்தபேர்கள்
நல்லவர்கள் முன்செய்த பாக்கியத்தாலே
நானென்ற ஆணவங்கள் மெத்தமைந்தா
நான்சொன்ன கட்டளைப்போல் நடக்கும்பாரே.

(இ-ள்.) தானென்னும்படியாக இவன் பிறந்த குலிசமாகும். இவன் யோகம் சுக்கிரயோகமாகும்; அது கனத்த யோகமாகும். உண்மையாகத் தனமானது வந்து பெருகும்; நன்மையானது மெத்தப்பேர்கள் செய்வார். முன் செய்த பாக்கியத்தாலும் நான் என்ற ஆணவமானது மெத்த உண்டாகும். இதுவெல்லாம் நான் சொன்னக் கட்டளைப்போல் நடக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், இவன் ஜனித்தது குலிச ரேகை யாதலாலும், சுக்கிர யோகத்தில் பிறந்தவன் ஆதலாலும், இவன் மேலான தனம் உடையவனாகி வாழ்ந்திருக்க தனம் கிடைத்தன. இவ்வாறு முன்னால் பாக்கிய மநேகம் செய்தவர்களுக்கும் நன்மை யநேகம் செய்தவர் களுக்கு யான் சொன்னபடி நடக்கும் என்பதாம். 38

பாரப்பா யிவனுக்குத் திசையோகங்கள்
பண்பாகச் சொல்லுகிறேன் பலிதம்கேளு
காரப்பா யிவன்வயது இருபத்துமூன்றில்
கட்டுவான் லாயத்தில் அசுவயோகம்
தாரப்பா யிவன்வயது முப்பதுக்குள்
தருவான புதுமனைதான் எடுப்பான்பாரு
பேரப்பா யிதற்குமேல் பதின்மூன்றுக்குள்
பேர்பெரிய பூமியவன் கொள்வான்பாரே.

(இ-ள்.) பார்க்க இவனுக்குத் திசையோகம் பண்பாகச் சொல்கிறேன் அதின் பலன்கேள். இவன் வயது இருபத்துமூன்றில் அவ்யோகம் வாய்க்கும்; லாயத்தில் குதிரை கட்டுவான். வயது முப்பதுக்குள் புதுமனையானது கட்டுவான் வயது நாற்பத்தி மூன்றுக்குள் பூமியானது கொள்வான் எ-று.

LuraTech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனில், இவன் வயது 13-ல் புதிய பூமி கொள்வதும், 23-ல் குதிரை வாங்குதலும், 30-க்குள் புதுமனை எடுப்பதுமாகிய பலன் நடக்கும் என்பதாம். 39

பாரென்ற புவனமதில் இவனைப்போலும்
பாக்கியங்கள் பெற்றவர்கள் ஒருவரில்லை
சீரென்ற திசையோகம் இந்தமட்டும்
செப்பினேன் பெருமைபெற்ற சேயனுகும்
காரென்ற கருணைவைத்தாள் உமையாள்தானும்
கருணைபெறப் பிறப்பித்தார் கடவுளர்தான்
வாரென்ற வையகத்தில் இவனைப்போலும்
வரிசைபெற்ற மக்களில்லை வண்மைகேளே.

(இ-ள்.) பாரென்னும்படியான புவனத்தில் இவனைப்போல் பாக்கியம் பெற்றவர் ஒருவருமில்லையாம்; சீராகிய திசையோகங்களை இந்தமட்டும் சொன்னேன் பெருமைப்பெற்ற இந்தப் பாலனுக்கும் உமையவள் கருணையானது வைத்தாள்; கருணைப் பெறும்படியாகக் கடவுளும் பிறப்பித்தார். இந்த வையகத்தில் இவனைப்போல் வரிசைப் பெற்றவர்கள் இல்லையாம் எ-று.

(வி-ரை.) இச்செய்யுளின் கருத்தாவதென்ன வெனில், இவனைப் போன்ற பாக்கிய முடையவர்களோ திசை யோகமுடையவர்களோ இவ்வுலகி லொருவரும் இல்லை. இவை ஈசனும் உமாதேவியும் கடாக்ஷம்செய்த அருளாகும் என்பதாம். 40

கேட்கவே யிவர்வழியில் பிதாமுதல்தான்
கேவலமாய்ச் சிறுவயதில் அலைவார்பாரு
வாட்கவே யிவர்கள்தான் மீறிவந்தால்
வரிசைபெற்று நடந்துநன்ருய் வாழ்வார்மைந்தா
தாட்கவே யினிமேலுங் கெடுதியில்லை
சஞ்சலங்கள் இல்லையடா தரணிமீதில்
வீட்கவே யில்லாமல் திசையோகத்தால்
விண்ணிலவர் புண்ணியமாம் மைந்தாபாரே.

(இ-ள்.) கேட்க இவர் வயதில் பிதாமுதலோர்கள் கேவலமாகத்தானே சிறுவயதில் அலைவார். இவர்கள் மீறிவரில் வரிசையானது பெற்று வாழ்வார்கள். இவர்கட்கு இனிமேல் கெடுதியானது இல்லை; சஞ்சலமானதும் அணுகாது; திசையோகத்தினுல் விண்ணில் இவர் புண்ணியமாகும் எ-று.

(வி-ரை.) இச்செய்யுளின் முக்கிய கருத்தென்னவெனில், இவன் சிறுவயதாயிருக்கையில் இவன் பிதாவானவன் அலைவான் ஆயினும் பிற்காலத்தில்

CuraTech Document Processing Solutions

எவ்விதத் துன்பம் சஞ்சலம் இவைக ளின்றி வாழ்வர். இவை யாது கார ணத்தால் எனில், இவ்விண்ணின் கண் இவர்களது தாய் தந்தையர் செய்த புண்ணியமேயாகு மென்பதாம். 41

மைந்தராய்ப் பிறந்தசக்கிரக் குலிசமாகும்
மகத்துவந்தான் வந்தந்த மகிமையாலே
சொந்தமாய் இருந்திட்ட மனிதர் தானும்
தொல்லைமெத்த சமுசார வாழ்க்கையாலே
இந்தநல்ல பதவியது எதினுலென்ருல்
ஈஸ்வரர்க்குத் தொண்டுசெய்த யியல்பினுலே
கந்தருட அருள்மிகுந்து வந்ததென்று
காட்சியினுல் உமையவள்தான் கருணித்தாளே.

(இ-ள்.) மைந்தராகப் பிறந்தச் சக்கரக் குலிசையாகும். அதனுல் மகத் துவம் வந்ததாம்; மகிமையினுல் சொந்தமாயிருந்த மனிதர்களுக்கு தொல்லை யானது உண்டாயினவாம். சமுசார வாழ்க்கையால் இந்தப் பதவி எதனு லென்ருல் ஈஸ்வாருக்குத் தொண்டுசெய்த இயல்பினுல் கந்தசுவாமியுட னருள் மிகுந்து வந்ததாமென்று காட்சியினுல் உமையவள் கருணித்தாள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவ தென்னவெனில், இங்குக் கூறிய சக்கரக் குலிச ரேகையுடன் பிறந்தோ ராயினும் மற்றெல்லோரும் சமுசார வாழ்க்கையி லாழ்ந்தவராய் துன்பமே படுவர் ஆயினும், இவன் மாத்தி ரம் இவ்விதனன்மைக் காளாகியதற்குக் காரணம் என்னஎனில், இவன் பூர்வத் திற் செய்த தொண்டின் பயனேயாகும் என்பதாம். 42

கருணையினுல் இன்னமுந்தான் மைந்தனுக்கும்
காட்சிசொல்வேன் சக்கரக் குலிசைமைந்தா
கருணையால் இவன்சீவன் கொஞ்சசீவன்
தாஷ்டீகம்தான் இவனுக்குப் போதாதன்றே
வருணையால் கிளைகோத்திரம் வாழ்த்துவார்பார்
வஞ்சனைகள் இல்லாத மைந்தனுகும்
கருணையால் பலவுபகாரங்கள் செய்வான்
பாக்கியவான் வீண்செலவு செய்வான்பாரே.

இ-ள். கருணையினுல் இன்னமும் மைந்தனுக்குக் காட்சி சொல்வேன் சக்கரக் குலிசையை மைந்தா. இவன்சீவன் கொஞ்ச சீவன்; தாஷ்டீகம் இவனுக்குப் போதாதாம்; இவனுடைய கிளைகோத்திரம் யாவரும் வாழ்த்து வார். வஞ்சனையில்லாத மைந்தனென்றும் இவன் பல உபகாரங்களும் செய் வான் பாக்கியவான் வீண்செலவு செய்வான் எ-று.

(வி ரை.) இதுகாறும் இந்த ஜாதகனுக்கு ஆயுளும், பலமும் கொஞ்சமாயினும், இவன் பிறந்த சக்கரக்குலிச ரேகையின் மகத்துவத்தால், இவனது வர்க்கத்தவரும் சகோதரர்களும் மெத்த புகழ்வர். இந்த ஜாதகனும் வஞ்சனையற்றவனாகி எல்லோருக்கும் உபகாரம் செய்பவனும், வீண் செலவு செய்பவனும் இருப்பான் என்றனர். இதன் கருத்தாவது, இவனுக்கு ஆயுளும் பலமும் கொஞ்சமாயினும் மேற்படி காரண காரியங்களால் இந்த ஜாதகனுக்கு ஆயுளும் பலமும் என்பதுவே யாகும். 43

பாரப்பா யிவன்தானும் பாஞ்சாலந்தான்
பத்தினியாள் பெற்றதொரு பாலகன்தான்
காரப்பா யிவன்வயது ஒட்டியாகும்
காத்திரமென்ற ஆக்கையது ஒல்லியாகும்
ஏரப்பா கழுத்திலே வரைதான்மூன்று
இயல்பான வயிற்றிலே மடிப்புநான்கு
கோரப்பா கோசமது அங்குலம்தான்மூன்று
கொற்றவன்தான் ஸ்திரீமுகம் சிவப்பதாமே.

(இ-ள்.) பார்க்க இவன் பாஞ்சாலனாகும்; பத்தியாகிய தாய்பெற்ற பாலனிவன்; வயது ஒட்டியாகும்; தேகமானது ஒல்லியாகும்; இவன் கழுத்தில் வரையானது மூன்று உண்டு. வயற்றில் மடிப்பு நாலுண்டாம்; கோசமானது அங்குலம் மூன்று; இவன் ஸ்திரீ முகமுடையவன், சிவப்பன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது என்னை எனின், இந்த ஜாதகன் பாஞ்சாலன் மனைவி பெற்ற உத்தமன் எனவும், வயது ஒற்றை எனவும் (70) சரீரமானது மெலிவடைந்திருப்பா னெனவும் கழுத்து மடிப்பு மூன்றுண்டெனவும், வயிற்றுமடிப்பு நான்கெனவும், கூறவேண்டுவதென்பதாம். மற்றும் கோசம் 3 அங்குலம் சிவந்த முகம் ஸ்திரீமுக முடையவன் என்பது அறியத்தகுந்தது, 44

ஆமென்ற பரம்பொருளும் உண்டுசெய்வான்
அன்பான பாலகனுக் கறிவுமெத்த
ஓமென்ற அகாரமுதல் உகாரமட்டும்
உத்தமன்தான் பிறந்ததொரு தசமியாகும்
ஏமென்ற அரசனிடச் சேவைசெய்வான்
என்னசொல்வேன் ஸ்திரீகூட்டம் மெத்தவுண்டாம்
காமியென்ற காமியங்கள் மெத்தவாகும்
கண்டிப்பு மெத்தவடா கோபியாமே.

(இ-ள்.) ஆமெனும்படியாகப் பலபொருளும் உண்டுசெய்வான். பாலனுக்கு அறிவானது மெத்தவுண்டாம். ஓமென்னும் பதமான அகாரமுதல்

உகாரமட்டும் உத்தமன் பிறந்ததும் தசமி திதியாகும். இவன் அரசர்களிடத்தில் சேவைசெய்வான். இவனுக்கு ஸ்திரீகூட்டம் மெத்தவுண்டாம். காமி என்ற காமியங்கள் மெத்த வுடையோனாகும், கண்டிப்புடையக் கோபியாவான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் அகார-உகார மென்பதையுந் தெரிந்து கொள்வான் என்றனர். இதுவன்றி தசமியில் பிறந்தவன் என்றனர். மற்றும் சிவத்தொண்டு செய்பவனாய், காமியாயும் ஸ்திரீ கூட்டம் அதிகமுடையவனும், கண்டித வார்த்தையுங் கோபியாயு மிருப்பான் என்றது அறியத் தகுந்ததாகும். 45

கோபமென்றால் கடுங்கோபம் உள்ளமைந்தன்
  கோத்திரத்தில் இவனைப்போ லில்லையப்பா
தாபமென்றால் இவன் தனக்குத் தாபம்மெத்த
  தலைவன்தான் தச்சணத்தில் ஆள்வான்பாரு
ஆபமென்றால் யிவன்பிதா ஆக்கையொன்று
  அறிவான மாதாவின் ஆக்கையொன்றும்
பாபமென்றால் பரிகரிக்கும் மைந்தனுக்கு
  பக்குவமாம் அவதரித்த பாலனுமே.

(இ-ள்.) கோபமென்றால் கடுங் கோபமுடைய மைந்தன் கோத்திரத்தில் இவனைப்போல் ஒருவருமில்லை. தாபமுடையவன் தலைவன் தட்சணத்தை ஆள்வன்; இவன் பிதாவினுடைய ஆக்கை ஒன்றாகும். மாதாவினுடைய ஆக்கையும் ஒன்றாகும். பாபமானது பரிகரிக்கும். இப் பாலனுக்குப் பக்குவமாகத் தானே அவதரித்தோனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இந்த ஜாதகன் கோபத்திலும் தாபத்திலும் பெரியவன் எனவும், இவன் பிதாவுடனே அல்லது மாதாவுடனே பிறந்தவர் ஒருவரும் இல்லை எனவும், எவருக்கு ஆபத்துண்டாயினும் அதனை நீக்குதற்கே இவன் பிறந்தான் என்பதும் கருத்தாகும். 46

ஆமப்பா யிவனுக்குப் பஞ்சரேகை
  ஆண்டவனே வந்ததிவன் அறிவாய்ப்பாரு
வாமப்பா வயிரவனார் அருளினாலே
  வரமென்றால் மாயவனார் வறுமைநீங்க
காமப்பா காணிக்கை யாகமைந்தன்
  கருணையால் வாழ்ந்திடுவன் கனிவுகூர்ந்து
வீமப்பா யிவன்வீட்டில் உள்ளமார்க்கம்
  விபரமாய்ச் சொல்லுகிறேன் விரைந்துகேளே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) ஆமெனும்படியாகத்தானே இவனுக்குப் பஞ்சரேகை, அதனையறிவாகப்பாரும். இவன்றனக்கு வயிரவரின் அருளினால் வரம் என்றனர். மாயனார்; அப்போது வருமையானது நீங்கக் காணிக்கையாகவும் கருணையால் வாழ்குவன்; கனிவானது கூர்ந்தும் இவன்வீட்டில் உள்ள மார்க்கம்; அதனை விவரமாகச் சொல்லுகிறேன் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தெனவெனில், இவன் வயிரவ நாதரது புண்ணியத்தாலும் மாயனது அருளாலும் பிறந்தவன் என்க. மற்றும் இவனது வீட்டிலுள்ள ரகஸ்யங்களைக் கூறுகிறேன் எனக் கூறி பின்வருங் கவியால் மேற்படி விஷயத்தினை விளக்குகின்றனர். 47

கேளப்பா யிவன்வீட்டில் தெய்வக்காரி
கேவலமாய் அனல்பாய்ந்த கன்னிப்பெண்ணும்
வாளப்பா யிவனுடைய வங்கிஷத்தின்
வகையாக அனல்பாய்ந்து வறுமையாக
நாளப்பா நல்லதொரு கன்னிதானும்
நலமான வீட்டிலே விரோதமாகி
ஏளப்பா எம்பிரான் அருளாலேதான்
ஏற்றமாம் மனோன்மணியாள் பியல்பிதாமே.

(இ-ள்.) கேட்பாயாக; இவன் வீட்டில் தெய்வக்காரி அவள் அனலில் பாய்ந்த கன்னியாம்; அவள் இவனுடைய வங்கிசத்தில் அனல்பாய்ந்தும் வறுமையாக அந்த நல்ல கன்னிதானும் வீட்டில் விரோதமாகி எம்பிரான் அருளால் மனோன்மணியாள்பால் சேர்ந்தனள்.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனில், முன்பு இவனது வங்கிசத்தில் ஓர் கன்னிப் பெண்ணனவள் தன் வீட்டில் விரோதமாகி, வெளிப்பட்டு வறுமைமேலிட்டு, அக்கினியால் மாரணமானள். அவளே இவனது வீட்டில் குலதெய்வமாய் விளங்குபவள் என்பதாகும். 48

ஆமடா ஞானகுரு உபதேசத்தால்
அளவற்ற பலகலைகள் படிப்பான்பாராய்
போமடா பொல்லாத பேர்களோடே
போயிவன் தான்கூடான் பொறுமையாளன்
வாமடா வஞ்சனைகள் நடக்கான்பாரு
வண்மையாம் புலைகளவு செய்யானப்பா
காமடா கனபண்டம் அநேகம்தாதும்
கருணையாய்த் தேடுவான் கண்டுபாரே.

(இ-ள்.) ஆமென இவனுக்கும் ஞானகுருவின் உபதேசத்தால் அளவிறந்த கலைகள் பலவும் படிப்பான். பொல்லாதப் பேர்களோடு இவன்போய்

CuraTech Document Processing Solutions

கூடான்; பொருமையுள்ளவன் வஞ்சனையான தொழில் நடக்கான்; புலைகளவு முதலான துர்ச்செய்கைகள் புரியான்; தனபண்டங்கள் அநேகபாகத்தானே கருணையால் இவன் தேடுவான் எ-று.

(வி-ரை.) இக்கவியினது கருத்தாவதென்னை எனின், இவனுக்குண்டாகும் ஞானகுருவினது உபதேசத்தால், அநேக வேதங்களையுங் கற்பவனாகி பொல்லாதவர்கள் நேசமற்றுப் பொறுமை யுடையவனாகி,வஞ்சனை, புலைகளவு முதலியன செய்யாதவனாய், அநேக தனங்களைத் தேடுவான் என்பதே யாகும். 49

பாரப்பா யிவனுக்கு நாளுங்கோளும்
 பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பண்பாய்மைந்தா
சீரப்பா யிவனுக்குப் பிள்ளையேழாம்
 சிறப்பான ஆண்நாலு பெண்தான்மூன்று
காரப்பா காட்சியால் பிள்ளைரெண்டு
 கனக்கவே பிழைத்திடுவார் பிள்ளைரெண்டாம்
வீரப்பா முன்பிறப்பில் ஓர்குழவியாகும்
 விவரமதைச் சொல்லுகிறேன் வியந்துகேளே.

(இ-ள்.) பார்க்க இவனுக்கு நாளுங்கோளும் பக்குவமும் சொல்லுகிறேன் கேட்பாயாக: இவனுக்குப் பிள்ளை எழாம்; அதில் ஆண் நாலு பெண் மூன்று. காட்சியாக பிள்ளைகளில் இரண்டு பிழைக்கும்; மூன்று பிறப்பில் ஓர் குழந்தையாகும்; அதின் விபரத்தைச் சொல்லுகிறேன் வியந்து கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குப் பிள்ளை யுண்டாகும் விவரத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, இவனுக் குண்டாகும் புத்திரர்கள் எழுவர். அவர்களுள், ஆண் 4, பெண் 3 என்பதாம். மற்று மிவன் தன் முன்சனனத்தில் ஓர் குழவிக் கொருவனேயாகும் என்பது கருத்தாகும். 50

கேளடா யிவன்வயது யிருபத்துமூன்றில்
 கெட்டியாய் ஆண்பிள்ளை பிறப்பதுண்டு
நாளடா நான்முகனார் அருளினாலே
 நாயகந்தான் பிறந்திடுவான் நன்மையாக
கேளடா யில்லாமற் பிறந்தமைந்தன்
 கொற்றவனாய்க் குபேரனாய் வாழ்வானன்றே
ஆளடா உத்திரத்தில் நாலும்கூடி
 அன்பான பாலனவன் அவதரித்ததாமே.

(இ-ள்.) கேட்பாயாக இவன்வயது இருபத்திமூன்றில் ஆண் பிள்ளையானது ஒன்றுபிறக்கும்; நான்முகனுடைய அருளால் நாயகன் பிறப்பான் நன்

மையாகவும் குற்றமில்லாமற் பிறந்த மைந்தன் கொற்றவனுகியும் குபேரனுகியும் வாழ்வான் உத்திர நட்சத்திரத்தில் நாலுங்கூடி அன்பாகிய இப்பாலன் அவதரித்தான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குக் குழவி யுண்டாகும் விவரத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் வயது 23-ல் ஓர் பிள்ளை பிறப்பன், அவன் உத்திர நக்ஷத்திரத்தில் நான்கு கிரகங்கள் உச்சமாகும். இவை பிரமனது கிருபா கடாக்ஷமாகும் என்பதாகும். 51

ஆமப்பா யிவன்தானும் பிறக்கும்போது
அரனுடைய கடாட்சம்வந்து லபித்ததாகும்
வாமப்பா வயிரம்போல் உமையாள்சொல்லே
வகையாகக் கேட்டினிதாய் வருந்துவாய்நீ
ஏமப்பா யிக்குழவி யோகம்தன்னில்
எம்பிரான் தேவியரு ளிசைந்துபாரு
காமப்பா திசையோகம் பிதாவுக்கப்பா
காரணமாய்க் கெண்டமது வருகும்பாரே.

(இ-ள்.) மேற்கூறிய இன்னேன் பிறக்கும்போது பரமசிவனுடைய கடாட்சம்வந்து லபித்திடும். அன்றியும் வயிரம்போல் உமையாள் சொல்லக் கேட்டும் வருந்திச்சொல்வாய்; இக்குழவியின் யோகமதனில் எம்பிரானுடைய தேவியின் அருளானது பெருகும், திசையும்யோகமும் பிதாவிற்குப் பெருகும் அன்றியும் கெண்டமுமுண்டாம்.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனில், மேலே சொன்ன குழவியானவன் பிறக்கும்போது முன்சொன்னபடி நான்முகன் கடாக்ஷத்தோடு ஸ்ரீமந் நாராயணமூர்த்தியும், உலகமாதாவும் கிருபாகடாக்ஷம் வைத்தனர். இக்குழவிக்கும் மகா யோகமுண்டாகும். ஓ முனிவர் முதலாயுள்ள ரிஷிகள் பிரமன் ஆகியவர் யான் சொல்லுவதில் ஒரு களங்கமின்றிக் கேட்பீர்கள். மேலே சொன்ன மகன் பிறந்தவுடன் இந்த ஜாதகனுகிய பிதாவுக்கும் பிரபல யோகமுண்டாயின. இதுவுமன்றி, கெண்டமும் உண்டாயின என்பது கருத்தாகும். 52

பார்க்குமது கெண்டந்தாம் உண்டாமென்று
பைங்கொடியே சொன்னதென்ன பாவஞ்சொல்வாய்
ஏற்குமது திருவாக்கால் உரைத்ததென்ன
எம்பிரா னிடத்திருக்கும் கௌரிமாரி
கார்க்குமப்பா மாதாவே சூலிநீலி
சண்முகனைப் பெற்றெடுத்த எங்கள்தாயே
ஏர்க்கவே எங்களைத்தான் காக்குஞ்ஜோதி
ஏகாந்த மாதாவே இசைந்திடாயே.

(இ-ள்.) பார்க்கக் கண்டாந்தரம் உண்டாமென்று பைங்கொடியாள் சொன்னவண்ணம் பாவம்சொல்வார்; ஏற்கும்படியாகத்தானே திருவாக்கால் உரைத்ததென்ன; எம்பிரான் இடமிருக்கும் கௌரிமாரி காருமம்மா மாதாவே சூலிநீலி சண்முகனைப் பெற்றத்தாயே ஏற்கும்படியாக எங்களைக் காக்குஞ் சோதியே ஏகாந்தமாகிய மாதாவே இசைந்திடுவாய் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னவெனில், இப்படிப்பட்ட மகாமசத்துவம் வாய்ந்தவனும் தொண்டு செய்து வரம் வாங்கியவனுமாகிய இவனுக்கு கெண்டாதி கெண்டங்கள் உண்டாகும் என்றதற்குக் காரணம் என்ன என வினவுவாராயினர். 53

மாதாவே யென்றுமிகத் தொழுதாரெல்லாம்
  மனமகிழ்ந்து உமையவள்தான் வர்ணிப்பாளே
சீதரன்தான் பிறவியிலே வைத்தசூட்சம்
  சிறப்பாக நிவர்த்திசெய்யத் தீரும்பாராய்
வாதாடி வந்ததொரு பிணிதான்தீரும்
  வண்மையுள்ள உமையவள்தான் வசனிப்பாள்பார்
போதான பொற்புடைய புண்ணியத்தாலே
  பொல்லாத கண்டமெல்லாம் போகும்பாரே.

(இ-ள்.) மாதாவேயென்று யாவர்களுந் தொழுதபோது மனமானது மகிழ்ந்து உமையவள் சொல்வாள். சீதரன் பிறவியில்வைத்த சூட்சம் அதை நிவர்த்திசெய்யத் தீரும். வாதாடி வந்தப் பிணியுந் தீருமென்று வண்மையாகிய உமையவளும் சொல்வாள். தான்செய்த பொற்புடையப் புண்ணியத்தினால் பொல்லாத கண்டங்கள் யாவும் போகும் எ-று.

(வி-ரை.) கெண்டம் உண்டாகியதற்குக் காரணம் என்னவெனில், ஸ்ரீமந் நாராயணனால் ஏற்பட்டதாகும். ஆயினும் இவனது புண்ணியத்தாலும் தபோபலத்தாலும் மேற்படி கெண்டாதி கெண்டம் அனைத்தும் நீங்கும் எனக் கூறி பின் வருவனவற்றால் மற்றுமுள்ள விசேஷங்களையுங் கூறுவாராயினர்.

பார்க்கவே உமையவளே எந்தன் தங்கை
  பத்தினியே உடன்பிறப்பே பரஞ்சோதியாளே
ஏர்க்கவே யேந்திழையே யின்னமுந்தான்
  இயல்பாகச் சொல்லுமப்பா யிளையாளேநீ
தார்க்கவே பராபரியே சொல்வாயென்று
  சர்க்குணியே நிர்க்குணியே தயாளுவேநீ
சார்க்கவே வையகத்தைப் படைத்தமாதா
  தயாபரியே பராசத்தி தங்கைநீயே.

இ-ள். பார்க்க உமையாளாகிய என் தங்கையே பத்தினியாகிய உடற்பிறப்பே, பரஞ்சோதியே, ஏந்திழையே, இன்னமுமியல்பாகத்தானே சொல்லு

CuraTech Document Processing Solutions

மம்மா இளையாளே பராபரியே சொல்வாயென்று சற்குணி நிற்குணி தயாளுவே இந்த வையகத்தைப் படைத்த மாதாவே தபராபரியே பராசத்தியான தங்கையே நீயே சொல்லும்.

(வி-ரை.) ஓ பரஞ்சோதிமயமாய் விளங்கிய உலகமாதாவாகிய பராபரியே ஷை தேவியின்து திருநாமங்களைச் சொல்லித் துதித்து இவ்வுலக மர்மங்களின்னும் எவ்வளவு உள்ளனவோ அவையனைத்தும் கூறவேண்டும் என மேற்சொன்ன தேவர்கள் முனிவர்கள் ஆகிய அனைவரும் கேட்டுக்கொண்டனர் என்பதாகும். 55

தங்கையென்று மாயவனுர் கேட்டபோதே
சாங்கமாய் உமையவளும் தயவுகூர்ந்து
பொங்கரவம் அணிந்து சங்கத்தோடணிந்து
புரமதனை நகைத்தெரித்த புங்கவன்தான்
கங்கைமுடி தரித்தவன்யான் மழுவிரண்டும்
கரத்தணிந்த கண்ணுதலோன் கருதக்கேட்டு
செங்கைதனில் திரிசூலி சொன்னமார்க்கம்
செப்பினேன் மக்களுக்குத் திரமாய்த்தானே.

(இ-ள்.) தங்கையே என்று மாயனுர் நின்று கேட்டபோது உமையவளும் மனமானது கூர்ந்து சொல்வாள்; பொங்கரவம் பூண்டு சங்குசக்கரம் தோளணிந்த மாயனேகேளும். திரிபுறத்தை நகைத்து எறித்த புங்கவன், கங்கையை முடியிற் றரித்தவன், மான் மழு இரண்டும் கரத்திற் பிடித்தவராகியக் கண்ணுதல் சொல்லக்கேட்டும் செங்கையிற்றிருசூலம் பிடிக்க தான் சொன்னமார்க்கம் யான் சொன்னேன்; மக்கட்குத் தெரியும்படியாகத்தானே நன்றாயறியத் திரமாகத்தானும் எ-று.

(வி-ரை.) இவ்வாறு தோத்தரித்த தேவர் முனிவர்களையும் உத்தமனுகிய விஷ்ணுவையும் நோக்கிக் கூறுவாள். புரத்தை நகைத்தெரித்தவரும் பொங்காவமும் மான் மழு சூல மிவற்றைபும் கரத்திற்றரித்த சாக்ஷாத் சர்வேஸ்வரன் எனக்குக் கூறியதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் எனக்கூறி பின் வருமாறு கூறுவானாயினள் என்பதாம். 56

தானென்ற சக்கரத்தின் குளிசயோகம்:
தன்னையினி யென்சொல்வேன் தரணியோர்க்கு
மானென்ற மகுடமுடி மன்னர்போற்றும்
மகாபாக்கிய யோகமிது மகேசர்பூசை
ஆனென்ற முதற்செனனம் முடித்ததாலே
ஆதிபரா பரப்பொருள்தான் அன்புகூர்ந்தார்
பானென்ற பாக்கியத்தால் வந்தரேகை
பண்பாக:யினிசுருக்கிப் பகருவேனே.

UdaTech Document Processing Solutions

(இ-ள்.) தானுகிய சக்கரத்தின் குலிசை யோகந்தனை இனி என்ன சொல்வேன். தரணியிலுள்ளோர்க்கு மகுடமுடி மன்னவர்கள் போற்றும் மகா பாக்கிய யோகம்; இது மயேசர் பூசையுமாகும்; முதற்சனனம் முடிந்தால் ஆதி பராபர வஸ்துவானவர் அன்பானது கூர்ந்து பாக்கியத்தினுல் வந்த ரேகையின் பலனைப் பண்பாகத்தானே இனி சுருக்கிச் சொல்வேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னை எனின், ஓ தேவர்களே, முனிவர்களே கேளுங்கள். முன் ஜென்மத்தில் சிவபிரானுக்கு பூஜை செய்து, வந்த காரணத்தால், மேலான ரேகை யமையப் பெற்று இப்பூமியிற் பிறந்து, மன்னுதி மன்னர்களும் போற்றத் தகுந்தவனுய் இப்பூமியிற் பிறந்து வாழ்ந்தனன். இந்த ரேகையினது மகத்துவம் இன்னும் உள்ளன அதனையுங் கூறுவேன் எனக் கூறி பின்வருங் கருத்தைக் கூறுவான். 57

பகருவேன் யிவனுக்கு வயதுக்குமார்க்க
பலன்களைத்தான் நன்றாகப் பகரக்கேளு
நிகருவேன் யிவன்வயது ஆறுக்குள்ளே
நிட்சயமாய் வீட்டிலுள்ளபொருள் செலவேயாகும்
வகருவேன் யிவன்வயது பத்துக்குள்தேவி
வளமாக மூன்றுபேர் பெண்பிறப்பார்
தகருவேன் யிவன்வயது பத்துக்குள்ளே
தனஞ்செயனுர் வாழ்வதுண்டு தன்மையாக.

(இ-ள்.) பகரக்கேளும் மேற்கண்ட ரேகையோனுக்கு வயதும் யோகமும் பலாபலன்களும் நன்ருய் பகரக்கேளும். இவன்வயது ஆறுக்குள் நிச்சயமாகத்தானே இவன் வீட்டிலுள்ள பொருள்கள்யாவும் சிலவாகும். வயது பத்துக்குள்ளே வளமாகத்தானே மூன்று பெண் குழவி பிறக்கும்; வயது பத்துக்குள் தனஞ்சயன்போல வாழ்வார் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இந்த ஜாதகனத் புத்திர யோகத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, மேலே சொன்ன இந்த ஜாதகனுக்குப் புத்திரன் பிறந்த வயது 6-க்குள் பொருள் சிலவுண்டு. மற்றும் அப்பாலனுக்கு வயது 10-க்கு மூன்று பெண் பிறக்கும். மேற்படி 10-ஆம் வயது முதல் இவனுக்கு மேலான தனலாப யோகம் உண்டு என்பது கருத்தாகும். 58

தண்மையப்பா யிவன்வயது பதினலாண்டில்
தருவான விவாகமது ஆகும்பாரே
உண்மையப்பா யிவன்வயது முப்பத்திரண்டில்
உற்பனமாய் ஆண்புத்திரன் பிறக்குமன்றே
வண்மையப்பா யிவன்வயது யிருபத்தாறில்
வரிசையுள்ள பிதாவுந்தான் இறப்பதுண்மை
பண்மையப்பா யிருபத்தொன் பதிலேதானே
புண்பான மாதாவும் அடைவதாமே.

(இ-ள்.) தன்மையாகத்தானே மேற்கூறியோனுக்கு வயது பதினாலில் விவாகம் கூடும். வயது இருபத்திரெண்டில் ஆண்புத்திரர்கள் பிறக்கும். வயது இருபத்தாறில் தகப்பன் மரணமாகுவன். வயது இருபத்தொன்பதில் தாயார் மரணமாகுவள் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன்கருத்து என்னவெனில், இந்த ஜாதகனுக்குப் பிறந்த மேற்படி பிள்ளைக்குத் தன்வயது 14 ல் விவாகம் நடக்கும் ஷை பிள்ளைக்கு வயது 26-ல் பிதாவாகிய இந்த ஜாதகனும் 29-ல்இவனது மனைவியும் இறந்து போவார். மற்றும் மேற்படி புத்திரனுக்குத் தன் வயது 32-ல் ஆண்குழவி யொன்று ஜெனிக்கும் என்பதாம். 59

ஆகுமடா யிவன்வயது ஒன்பதாண்டில்
அன்பான பிதாவுந்தான் பூமிவாங்கும்
வாகுமடா யிவன்வயது முப்பத்தாறில்
வளமான யிவனுக்கு விவாகமாகும்
தாகுமடா யிவன்வயது முப்பத்தாறில்
சகடையென்ற யோகம்வந்து தயங்குமப்பா
ஆகுமடா அட்டசித்தி யிவனுக்கப்பா
அட்சணத்தில் திசையோகம் நடக்கும்பாரே.

(இ-ள்.) ஆகவும் இவன்வயது ஒன்பதில் இவன் தகப்பன் பூமியானது வாங்குவான். வயது முப்பத்தாறில் விவாகமாவதோடு வயது முப்பத்தாறில் இவனுக்கு சகடையென்ற யோகமானது வந்துத் தயங்குவான்; அஷ்ட சித்தியும் இவனுக்குண்டாகி அட்சணமே திசையும் யோகமும் நடக்கும் எ-று.

(வி-ரை.) மேலே சொன்ன புத்திரன் பிறந்த 9-ஆம் வயதில் பிதாவானவன் அநேக பூமி முதலியனவற்றைக் கொள்வான். 36-ல் விவாகம். அக்காலம் சகடயோகம் என்பதுண்டாகு மாயினும், பிற்காலம் ஷை பாலனானவன் சகல சம்பத்தும் விளங்கியவனாகி வாழ்வான் என்பதில் ஐயமில்லை என்பதாம். 60

இரேணுகை ரேகையின் பலன்

ஆமப்பா சக்கரக் குலிசமார்க்கம்
அன்பாகச் சொல்லிவிட்டேன் அறிவுபாரு
ஓமப்பா யின்னமொரு ரேகைதானும்
ஓகோகோ சொல்லுகிறேன் உறுதியாக
வாமப்பா வகையுடனே சொன்னமார்க்கம்
வரிசைசொல்வேன் ரேகையிட வளமைபாராய்
ஏமப்பா ரேணுகையாம் ரேகைதானும்
எடுத்துரைப்பேன் இதனுடைய விபரங்கேளே.

(இ-ள்.) ஆச்சக்கரக் குலிசையின் மார்க்கம் அன்பாகத்தானே சொல்லி விட்டேன், அன்றியும் இன்னமொரு ரேகை சொல்லுகிறேன் உறுதியாகத் தானும் அவை வகையுடன் சொன்ன மார்க்கம் வரிசையைச் சொல்வேன்; ரேகையின் வளமையைப் பாராய் இரேணுகை யென்னும் ரேகையானது எடுத்துரைப்பேன் அதின் விபரங்கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது என்னை எனின் இதுவரையில் கூறிவந்த பாட்டால் ரேகையினது விவரங்கள் அனைத்தையும் சரியாய்க் கூறியுள்ளேனாயினும் இன்னமொரு ரேகையுள்ளன அவை இரேணுகை ரேகை எனப் பெயர்பெறும். அந்த ரேகையினது பலாபலன்களைக் கூறுகிறேன். கேட்பீர்களாக என்பதாம். 61

கேளப்பா ரேணுகையாம் ரேகைதானும்
  கேவலமாய் நடுவேதான் ரெண்டுபுள்ளி
வாளப்பா அங்குலியாம் விரலுக்கிட்ட
  வளமாக யிருக்குமடா வரிசைகேளு
தாளப்பா வாழ்வில்லா பெற்றமைந்தன்
  தனஞ்செயனும் ஓர்தாயிக் கொரேமைந்தன்
கொள்ளப்பா யில்லாமற் பிறந்தான்மைந்தன்
  கொற்றவனும் பிறந்தொருகீழ் வாசல்மணியே.

(இ-ள்.) கேட்பாயாக: ரேணுகையென்னும் ரேகையானது கரத்தினடுவிலே இரண்டுபுள்ளி யிருக்கும்; அங்குலியென்னும் விரலின்கிட்ட வளமாகத் தானே யிருக்கும். அவ்வித ரேகையுள்ளோன் தாழ்வில்லாமற்படிக்கு பிறந்த மைந்தனாகவும், தனஞ்செயனாகவும் ஓர் தாய்க்கொரு மைந்தனாகவும், குற்றமொன்றுமில்லாமற் பிறந்த பாலனாகும் இவன் பிறந்த கீழ்வாசல் மனையாகும்.

(வி-ரை.) இக்கவியால் இரேணுகை ரேகை எப்படியிருக்கும் என்றதைக் கூறுவாராயினர். அவையாவன, மேற்படி ரேகையானது கையின் மத்தியில் 2-புள்ளியும் ஆள்காட்டி விரலுக்குக்கீழ் கீற்றுமா யிருக்கும். இவனது தாய் தந்தையர் நெடுநாள் புத்திரர்க ளில்லாதிருந்தாராகையால் ஓர் தாய்க்கோர் மைந்தனாய் இவன் பிறந்தால் இவன் ஜனித்தது கீழ்வாசல் என்பதாம். 62

மனையான சிறுகூரை மனைத்தான்மைந்தன்
  மகத்தான யிருமனையாந் தென்பால்வீட்டில்
துணையான யிவன்பிறக்கும் போதேயப்பா
  துப்பரவாய் ஒருவர்தான் இல்லையென்றே
வனையான யிவன்பிதா மனையிலில்லை
  வண்மையாய் பிதாவுந்தான் தலைவில்போனான்
கனையான யிவன்பிறக்கும் போதேயப்பா
  காட்சியாய் உண்ணுதற்கும் அன்னமின்றே.

turaTech Document Processing Solutions

(இ-ள்.) மேற்கூறிய மனை சிறுகூறையாகும்; அந்த மகத்தாகிய மனைத் தென்பால் வீட்டில் இவன் பிறக்கும்போது அந்த மனையில் துப்பரவாக அங் கொருவருமில்லையாம்; அன்றியும் இவன் பிதா மனையில் போயிருப்பான்; இவன் பிறக்கும்போதே உண்பதற்கு அன்னமில்லையாம் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்த அடையாளங்களைக் கூறுவாராயி னர். அவையாவன, இருமனையும் சிறு கூரையும் தெற்கு மூலையிலுள்ள வீட்டி லிவன் பிறந்தான். மற்றும் இவன் ஜனிக்கும்போது உண்ணுதற்கும் உணவுமில்லை. மற்று மெவரும் அருகிலில்லை அச்சமயமிவன் பிறந்தான் என்பதாம். 63

இல்லையென்று யிவன்பிறந்த எட்டாமாதம்
இயல்பான யிவன்யாவும் மனையும்விட்டு
தொல்லையென்று தொல்லைபட்டு துயரத்தாலே
தோன்றுதலும் வெறுமைகொண்டு துலைநடந்தாள்
அல்லையென்ற ஒரூரில் குடியிருந்து
அன்னவளும் பசிமயங்கி கீரைகிள்ள
நல்லையென்று ஓர்தலத்தின் பால்ஜெலத்தில்
நலமான கீரையது பறித்தாள்மங்கை.

(இ-ள்.) மேற்கூறிய இவன்பிறந்த எட்டாமாதம் இவனுடையத் தாயும் மனையைவிட்டு தொல்லையான துப்பட்டு துயரத்தினால் அவன் வெறுமையா னதுகொண்டு துலையில் நடந்தாள். ஒரு ஊரிற்போய்க் குடியிருந்துகொண்டு பசியினால் மயங்கி கீரையானதும் கிள்ள ஓர் தலத்தின் பால் சலத்தில் கீரை யானது பறித்தாள் மங்கை எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னை எனின், இவன் பிறந்த எட்டாமாதம் இவன் பிறந்த வீட்டை விட்டு வெளியூர் சென்று மிக்க வறு மையுடன் குடியிருக்கு நாளில் இவன் தாயானவள் கீரை கிள்ளுவதின் நிமித்தம் ஓர் ஜலக்கரையருகில் சென்றனள் என்பது கருத்தாகும். 64

மங்கைதான் கீரையது பறிக்கும்போது
மகத்தான நிதியொன்று குடந்தானப்போ
செங்கைநிற மானதிரு வாலையோதி
சிவந்ததொரு திரவியந்தான் நிறையபீந்தான்
பங்கயம்போல் நிதியெடுத்து மங்கைதானும்
■த்தினியாள் குபேரன்போ லானாள்பாரு
திங்கள்முக மீசனருளாலே மைந்தன்
திகழ்வாகப் பிறந்ததடா மாதமெட்டே.

UraTech Document Processing Solutions

(இ-ள்.) மேற்கூறிய மங்கை கிளையானது பறிக்கும்போது மகத்தாகிய நிதி ஓர் குடந்தானப்போ செங்கை கிறமாகத்தானே யிராநின்ற திருவாலைச் சோதியானவள் சிவந்த திரவியமானது நிறைய ஈந்தனள் அந்த மங்கை அந்த நிதியை எடுத்து வந்து மனையில் வைத்துக்கொண்டு குபேரனைப்போலானான் திங்களை யணிந்த ஈஸ்வரனுர் அருளால் மைந்தனனவன் பிறந்த எட்டா மாதம் எ-று.

(வி-ரை.) மேற்சொல்லிய வண்ணம் இந்த ஜாதகனது தாயானவள் கிளைக் கிள்ளுகை அங்ஙனம் இலக்குமி தேவியானவள் பொன் திரவியத்தைக் காட்டினள், இவளும் அதை எடுத்துவந்து குபேரனை யொத்த சம்பத்துடைவளானுள் என்பதாம். 65

எட்டான மாதத்தில் பிதாவுமப்பா
  எடுத்துரைப்பேன் முன்தலமே போய்ச்சேர்வார்கள்
மட்டான யிவன்பிதுர்த் துயரமப்பா
  வண்மையாய் தீர்ந்ததப்பா வரிசையாக
இட்டான உறன்முறையார் பந்துசிவன்கள்
  இயல்பாகப் புதுமனைதான் எடுத்தார்பாரு
முட்டான முட்டெல்லாம் தீர்ந்ததப்பா
  முளையான இளையவளும் குடியிருந்தாள்.

(இ-ள்.) மேற்கூறியவண்ணம் எட்டாமாதத்தில் தகப்பனும் தானும் முன்தலத்திற் போய்ச் சேர்ந்தான். இவனுடைய தகப்பன் துயர் வண்மையாகத்தானே வரிசையாகத் தீர்ந்தனவாம்; அப்போது இஷ்டமாகத்தானே உறவின் முறையாரும் பந்து ஜனங்களும் வந்து சேர்வார்கள்; புதுமனையானது கட்டுவான் முட்டாகிய மூட்டு யாவும் தீர்ந்தனவாம்; இலட்சுமி இவன் மனையில் குடியிருப்பாள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவது என்னை எனின், மேற்சொல்லிய வண்ணம் தனத்தை கைக்கொண்டவுடன் தன் புராதீனமான இடமே வந்து சேர்ந்து, எவ்விதத் துயரமும் இல்லாதவர்களாகி புதிய மனை யொன்றுண்டு செய்து அவ்விடம் தனதில்லத்தில் அநேக உறவின் முறையார்கள் கூடியிருக்க லக்ஷிமி விலாசம் பொருந்தியவர்களாய் வாழ்ந்து வந்தனர் என்பதாம். 66

இருந்திடவே யிவனுடைய நாளுங்கோளும்
  இயல்பான மாதமுதல் கெண்டமுதலான
பொருந்திடவே யிவனுடைய சக்கிரவாழ்வு
  பொல்லாத வேளைக்கு எல்லாங்கேளு

LuraTech Document Processing Solutions

வருந்திடவே யிவன்தானும் சுக்கிரவாரம்
வண்மையாம் பூரமது ரெண்டாங்காலம்
தருந்திடவே மகரமென்ற மாதந்தன்னில்
சார்வாக உதயத்திற் பிறந்தானன்றே.

(இ-ள்.) இருக்கினும் இவனுடைய நாளுங்கோளும் மாத முதலாகவுங் கண்டமும் பொருந்தும்படியான இவன் சக்கிரத்தின் வாழ்வும் பொல்லாத வேளை இவையெல்லாங்கேளும்; இவன் சுக்கிரவாரம் பூரநட்சத்திரம் இரண்டாங்காலம் தைமாதம் உதையத்தில் பிறந்தோனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த வாரம் நாள் கோள் முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, தைமாதத்தில் சுக்கிரவாரம் உதய நேரத்தில் பூரம் இரண்டாம் பாதத்தி லிவன் ஜெனித்தனன் என்பதாம். 67

பிறந்திட்ட பாலகன்தான் அழகனப்பா
பிரபலமாய் நாளிலேதான் மிளிர்வானப்பா
மறந்திட்ட யிவன்தானும் ஏழாங்கெர்ப்பம்
வண்மையாம் இருபேரும் ஒருமனதாய்நிற்பர்
சுறந்திட்ட நலமான கனியினங்கள்
சுயம்பெறவே தென்முகமாய்ப் புணர்ச்சியானார்
சுறந்திடவே அனுபோகம் செய்ததாலே
காசினியில் நால்கிரகம் உச்சமாமே.

LuraTech
Document Processing Solutions

(இ-ள்.) மேற்கூறியவண்ணம் பிறந்தபாலன் அழகுடையவன்; பிரபலமாக நாளில் மிளிர்வான்; இவன் தாய் குளித்த ஏழாம்நாள் கெர்ப்பத்தில் தரித்தவனாகும். இவன் தாயும் தகப்பனும் ஒருமனதாக நின்று கனியின் வர்க்கங்கள் புசித்துத் தென்புறமாக படுத்துப் புணர்ச்சியானார்கள்; அவர்கள் அனுபோகம் செய்ததால் இவன் காசினியில் பிறந்தான் நால்கிரகம் உச்சமாக நிற்க எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னை எனின், இந்த ஜாதகன் மிக்க அழகனும், இவனது தாயானவள் ஸ்நானம்செய்த ஏழாம்நாள் தென்முகமாய்ப்புணர்ந்து காலையில் உண்டாகியவனானதால் நல்ல நேரத்திலும் நான்கு கிரகங்கள் உச்சமாயிருக்க இவன் பிறந்தான் என்பதாகும். 68

கறந்திட்ட காசியினால் கனத்தயோகம்
கருணையினால் பிறந்ததொரு தேவனாகும்
பறந்திட்ட யிவன்தான்முற் செனனமப்பா
பாக்கியமாய்ப் பிராமணனே ஆவான்மைந்தா

பிறந்திட்ட யிவனுக்குப் பாதபூசை
பிரபைமுதல் யிவனெடுத்து பூசைசெய்தான்
பறந்திட்டான் மிகநொந்து கேட்டதாலே
பரிவாக வரம்வாங்கிப் பாக்கியமாச்சே.

(இ-ள்.) இவனுக்குக் கிடைத்த தனத்தினால் கனத்தயோகம் வாய்க்கும். கருணையாகப் பிறந்த தேவனாகும். இவனுடைய முன் ஜென்மம் பிராமணனாகும். இவனுக்குப் பாதபூசை செய்ய பிரபை முதலானதும் இவன் வெடுத்துப் பூசையானது செய்தான். பின்பு நொந்து பரமனைக் கேட்டதால் பரிவாகத்தானே வரமானது வாங்கியும் பாக்கியவானாகினான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பூர்வஜன்ம விவரத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் தேவனே என்பதாம். யாது காரணத்தால் எனில், முன் ஜனனத்தில் பிராமணனாய்ப் பிறந்து, ஈசனுக்குப் பாத பூஜை முதலிய பணிகளை நடத்தி, நல்ல வரங்களைப் பெற்றவனாகி இச்சனனத்தில் தோன்றினான் என்பதாம். 69

ஆச்சென்ற யிவன்தானும் குருபத்தனப்பா
அன்பான சிவபூசை உள்ளமைந்தன்
வாச்சென்ற யிவன்தானும் குபேரன்போலாம்
மகத்தான பல்லக்கு ஏறிவாழ்வான்
கூச்சென்ற வினைவுவித்தை பார்ப்பான்மைந்தன்
குவலயத்தில் எழுபிள்ளை பிறக்குமன்றோ
வாச்சென்ற யிவனுக்குத் தாரம்ரெண்டு
வண்மையாய் முடியுமென்று வகுத்திட்டேனே.

(இ-ள்.) ஆகினும் இவன் குருபத்தனாகும். சிவபூசை மறவாமல் செய்வன்; குபேரனைப்போல் இவனும் பல்லக்கேறுவன், வித்தை முதலானதும் கற்பன்; எழுபிள்ளைகள் பிறக்கும்; இவனுக்குத் தாரம் இரண்டாகும் வண்மையாகத்தானே எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வருங்கால வாழ்வினைக் கூறியுள்ளன. அவையாவன, குருபக்தனாயும், சிவபூஜையை மறவாதவனாகிக் குபேரனையொத்த சம்பத்துடையவனால் பல்லக்கி லூர்ந்து தர்க்கவித்தை முதலியனவற்றை யாராய்ந்து மகிழ்வன். மற்று மிவனுக்கு மனைவிகள் இரண்டும் மக்கள் ஏழும் என்று அறிக என்பதாம். 70

வகுத்திட்ட ரேகைதான் இன்னம்மைந்தா
வண்மையாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
இகுத்திட்ட நீராலே யிரண்டுகெண்டம்
இனியதொரு வரத்தாலே கெண்டமொன்று

நிருத்திட்ட சுரத்திஞல் கெண்டமொன்று
நிச்சயமாய்ச் சத்துருவால் கெண்டமொன்று
கழுத்திட்ட சண்முகர்க்குப் பூசைதானும்
கருத்துவந்து செய்திடவே கண்டம்போச்சே.

(இ-ள்.) வருத்த ரேகையானது இன்னமும் வண்மையாகத்தானே சொல்கிறேன் இன்னமுங் கேட்பாயாக: இவனுக்கு சலத்தில் இரண்டு கெண்டமுண்டாம்; மரத்தால் ஓர் கெண்டமாம்; சுரத்திஞல் ஓர் கெண்டமுண்டாம் சத்துருக்களால் ஒரு கெண்டமாம். இவை நீங்க சண்முகனைப் பூசைசெய்ய கெண்டம் தவரிப்போம் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, ஜலத்தா லிரண்டு கெண்டமும் மரத்தா லோர் கெண்டமும் மற்றும் ஜுரத்தாலும் சத்துருவாலும் கெண்டமுண்டாகும். ஆனதால் அக்காலம் சிவசண்முகப் பெருமானுக்கு பூஜை செய்ய மேற்படி கெண்ட மனைத்தும் நீங்கும் என்பதாம். 71

கெண்டமப்பா அஞ்சுகெண்டம் கடினகெண்டம்
கனத்ததொரு கெண்டாந்தம் ஓமதீட்சை
வண்டமப்பா கெண்டாந்தம் நீங்கும்பாரு
வரிசையாய்த் தீட்சைகளைச் செய்குவாய்நீ
இண்டப்பா யிவனுக்கு வயதுகூறில்
இயல்பாக அன்பத்து எட்டதாகும்
துண்டமப்பா யிவன்வயது திருஷ்டாந்தரந்தான்
தூய்தாகச் சொன்னகுரு பலிக்கும்பாரே.

Luratech
Document Processing Solutions

(இ-ள்.) மேற்கூறிய கெண்டங்களில் ஐந்து கெண்டம் கடினமானதாம்; அது தீர ஓம தீட்சை செய்ய கெண்டம் நீங்கும்; ஆகையால் வரிசையாக தீட்சைகளைச் செய்து வருகுவாய்; இவனுக்கு வயது கூறவேண்டில் அன்பத்தெட்டாகும்; இவன் வயது திருஷ்டாந்தமாகும் சொன்னகுறியும் பலிக்கும்.

(வி-ரை.) இக்கவியா விவனது வயது முதலியனவற்றைக் கூறுவாராயினர். எப்படி எனில், மேலே சொன்னபடி இவனுக்கு ஐந்து கெண்டாதி கெண்டங்கள் உண்டு எனினும் அக்காலம் மேற்சொன்னபடி பூஜைசெய்து வர அவையாவும் நீங்கி வயது 58-வரையில் சுகித்திருப்பான் என்பதாம். 72

பார்க்கவே யிவன்வயதோ ரிருபதுக்குள்
பண்பான பிதாவுந்தான் யிறப்பான்பாரு
ஏர்க்கவே யிவன்வயதோ ரிருபத்திரெண்டில்
இயல்பான மாதாவும் மரணமன்றே

ஆர்க்கவே யிவன்குழந்தை ரெண்டுதானும்
அப்பனே போகுமென்று அறிந்துசொல்லு
வார்க்கவே குழவிதான் அஞ்சுமப்பா
வகையாக நிலைக்குமென்று வகுத்திட்டானே.

(இ-ள்.) பார்க்க இவன் வயது இருபதுக்குள் தகப்பன் மரணமாகுவன். வயது இருபத்திரண்டில் தாயார் மரணமாகுவள். இவனுடையக் குழந்தைகள் இரண்டும் மரணமாகிப் போய்விடும்; குழவிகள் ஐந்தும் தீர்க்கமாகத்தானே களைத்திருக்குமென்று வகுத்தேன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது தாய் தந்தையரது கெண்டாதி கெண்டங்களையும் புத்திரவகையினையுங் கூறுவாராயினர். அவையாவன, வயது 20-க்குள் பிதாவும், 22-ல் மாதாவும் மரணமாவார். மற்று மிவனுக் குண்டாகும் குழவிகள் எழுவருள் இரண்டு மரித்து ஐந்து குழவிகளே தீர்க்காயுளுடன் நிலைத்திருப்பர் எனவுங் கூறவேண்டுவதாகும். 73

வகுத்திட்ட ரேணுகையின் யோகமெல்லாம்
வண்மையாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளும்
இருத்திட்ட யிவன்யோகம் சகடமென்றும்
இயம்பினேன் உமையவள் யியல்பினாலே
தொகுத்திட்ட திசைகர்மம் யோகவாழ்க்கை
சொல்லிவிட்டேன் வரலாறு கருதியாலே
அகுத்திட்டேன் ஆயுசுடன் எல்லாந்தானும்
அப்பனே ரேகையின்னம் அறைகிறேனே.

(இ-ள்.) வகுத்த ரேணுகை ரேகையின் பலன்களெல்லாம் வண்மையாகச் சொல்லுகிறேன் கேளும்; இவன் யோகம் சகடயோகமென்று இயம்பினேன்; உமையவளினுடைய இயல்பினால் திசை கர்ம யோகவாழ்க்கைகளைச் சொன்னேன்; கருத்தின்படி வரலாற்றையும் ஆசையுடன் யாவையும் சொன்னேன்; ரேகையினது விபரமுஞ் சொல்வேன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிதுவரையிற் கூறிவந்த ரேணுகை ரேகையினது பலம் வாழ்வு ஆயுள் முதலிய அனைத்தும் சொல்லினேனாயினும் இவனுக்குண்டாகும் யோகத்திற்கு சகடயோகமென்றும் பெயராகும் என்று கூறியதாம். 74

விஷ்ணுபந்த ரேகையின் பலன்

அறைகிறேன் ரேகையொன்று அருமையாக
ஆச்சரியம் ரேகையிட அருமைகேளு
விறைகிறேன் விஷ்ணுபந்த ரேகையொன்று
விகற்பமின்றி உண்டதனை விரும்பிக்கேளு

துறைகிறேன் மால்விரலில் தாய்விரலில்தான்
துயம்பெறவே ஐந்துபுள்ளி ரெண்டுரேகை
மறைகிறேன் மால்விரலில் ஏறிநின்றால்,
மகத்தான யோகமடா மைந்தாகேளே.

(இ-ள்.) சொல்வேன் ரேகையானது ஒன்று அருமையாகத்தானும் கேட்பாயாக: விஷ்ணுபந்த ரேகை ஒன்றுண்டு; அதனை விளம்பக்கேளும். மால்விரலிலும் தாய்விரலிலும் ஐந்து பிள்ளையும் இரண்டு ரேகையும் மால்விரலின்மேல் யேறி நிற்குமாயின் அவன் தனக்கு மகத்தாகிய யோகமுண்டாம் எ-று.

(வி-ரை.) இக்கவியால் விஷ்ணுபந்த ரேகையினது விவரத்தினைக் கூறுவாராயினர். எப்படி எனில், இங்கு சொன்ன விஷ்ணுபந்த ரேகை என்பது நடுவிரலில் இரண்டு ரேகையும் ஐந்து புள்ளிகளுமா யமைந்திருக்கும் இவ்வாறு ரேகை யுடையவர்களுக்குப் பூரணயோகம் உண்டு. ஆனதால் அந்த விவரத்தைக் கூறுவேன் என்பது. 75

கேட்கவே விஷ்ணுபந்த ரேகையானால்
கேள்வியால் புண்ணியங்கள் செய்தமைந்தன்
ஆட்கவே யிவன்தானும் பிறக்கும்போது
ஆச்சரிய மாகயிவன் பிறந்தான்மைந்தன்
நாட்கவே நன்மைபெற்ற மைந்தனப்பா
நலமான யோகத்தை நாட்டுவேனே
வாட்கவே யிவன்பிறவி ஐந்துபேராம்
வகையாகப் பிறந்திட்ட வண்மைபாலே.

(இ-ள்.) கேட்பாயாக: மேற்கூறிய விஷ்ணுபந்த ரேகையாயின் புண்ணியம்செய்த பாலனுகும். இவன் பிறக்கும்போது ஆச்சரியமுடன் பிறந்தான். நன்மைபெற்ற மைந்தனுகும்; இவனுக்குண்டாகிய நலமான யோகவாழ்க்கையை சொல்வேன் இவனுடன் பிறந்தபிறவி ஐந்துபோகும் இவன் வகையாகப் பிறந்தோனுகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனில், விஷ்ணுபந்த ரேகையுடன் பிறப்பதென்றால் மகாபுண்ணியம் வேண்டும். இவன் மிக்க ஆச்சர்யத்துடன் பிறந்தவனுகும். இவனுடன் பிறந்தவர் ஐந்துபேர் என்பதாம். மற்றும் இவன் வாழ்வில் மகாநன்மையை அடைவான் என்பதாம். 76

வண்மையாம் யிவன்மூன்றும் பிறவியாகும்
வாயாக வடவாசல் வீட்டில்ஜென்மம்
உண்மையாய் யிவன்பிறக்கும் போதுமைந்தா
உற்றதொரு அவிடமுற்ற பெண்கள்நான்காம்

அண்மையா யப்பொழுது பிறவிபார்த்து
  அடவான பாலனென அன்புகூர்ந்து
கண்மையா யிவன்பிதா வீட்டிலுற்றான்
  காட்சியாய்த் தாய்மாமன் மூன்றுபேரே.

(இ-ள்.) மேற்கூறிய ஐந்துபெயரில் இவன் மூன்றும் பிறவியாகும்; வடவாசல் வீட்டில் ஜெனனமானவன். இவன் பிறக்கும்போது அவ்விடத்திலிருந்த பெண்கள் நாலு பெயராகும்; அவர்கள் அப்போது இவன் பிறப்பைப் பார்த்து நன்மையுடைய பாலனென்று அன்பானது கூர்ந்தனர்; இவன் பிதாவும் வீட்டிலிருந்தான் இவனுக்கு அம்மான் மூன்றுபேராகும் எ-று.

(வி-ரை.) முன்னங் கூறிய கவியா லிவனுடன் பிறந்தவர் ஐவர் என்றுராயினும், இவன் எத்தனையாம் பிறவி என்பதை விளக்கவில்லையாதலால் அதனை யிங்கு விளக்கியுள்ளனர். அவையாவன, இவன் மூன்றும் பிறவி என்பதாம். மற்றும் இவன் ஜனிக்கும்போது தாயுடன் 4-பெண்க ளிருந்தனர் எனவும், தாய்மாமன் மூவர் எனவுங் கூறியது அறியத்தகுந்ததாகும். 77

பேரான மைந்தனிவன் பிறந்தபோது
  பேணியே வீட்டிலே துயர்கள்போச்சே
காரான உமையவள்தன் கடாட்சத்தாலே
  கனத்ததொரு யோகமது வந்ததப்பா
தூரான பிதாவுடைய துயரம்போச்சு
  துன்பமென்ப தெல்லாமுந் தூரம்போச்சே
தாரான சார்பதுதான் அனேகவாழ்க்கை
  சாங்கமாய் யிவன்பெருமை சொல்லுவேனே.

(இ-ள்.) போகத்தானே இவன் பிறந்தபோது வீட்டிலிருந்த துயரங்கள் யாவும் நீங்கிப்போச்சுதாம்; உமையவள் கடாட்சத்தினால் கனமாகிய யோகமொன்று வந்ததாம்; தகப்பனுடைய துயரமும் போச்சாம், துன்மையானது யாவும் விலகிற்றும்; சார்பாகத்தானே அனேக வாழ்க்கையும் இவன்பெருமையும் சொல்வேன்.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில் இந்த ஜாதகன் பிறந்தவுடனேயே உமாதேவியினது கடாக்ஷத்தால் இவனது வீட்டில் இவன் பிதாவுக்குள்ள துயரம் அனைத்தும் ஒழிந்து மகாயோகமுண்டாகிப் பெருமையாய் வாழ்ந்தனர் என்பது கருத்தாகும். 78

சொல்லவே யிவன்தானும் ஏழாங்கெர்ப்பம்
  சொல்லுமொரு முதற்சாமம் தரித்தகெற்பம்
அல்லவே யிவன்பிதா மாதர்தானும்
  அன்பான புணர்ச்சியும்நல் யோகமப்பா

LuraTech Document Processing Solutions

மல்லவே யிவன்தானும் மகரமாதம்
வளமான ஓணம்நாலினிற் பிறந்தான்
நல்லவே தசமியொடு மதியின்வாரம்
நலமாகப் பிறந்ததிவன் நாடிக்கேளே.

(இ-ள்.) சொல்லிய இவன்தாய் குளித்த ஏழாம்நாள் கெர்ப்பந்தரித்தவனும்; அதினும் முதற்சாமமாகும்; இவன் பிதாவும் மாதாவும் அன்பாகத் தானே புணர்ச்சிசெய்த வேளையின் பலத்தால் யோகவானாய் இவன் தைமாதம் திருவோண நட்சத்திரம் நாலாங்காலில் பிறந்தான்; திதி தசமி வாரம் திங்கள் இவன் பிறந்தவனும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் தாயானவள் ஸ்நானம் செய்த ஏழாம் நாளிரவு முதற் சாமத்தில் கெர்ப்பம் தரித்தவன் என்றனர். மற்று மிவன் பிறந்தது தைமாதத்தில் திங்கட்கிழமை தசமி திதி கூடிய நாளில் திருவோணம் நாலாம் பாதத்தில் பிறந்தவன் என்பதாம். 79

கேளப்பா விஷ்ணுபந்தம் இன்னந்தானும்
கேவலமாய் யிவன்பிறந்த நாலாமாதம்
கேளப்பா யிதுவுமன்றி பத்தாமாதம்
வெய்யவன்போல் வீட்டிலே அனல்தான்கொள்ளும்
வீளப்பா வருமையது பிடித்துக்கொண்டு
விற்பனமாய்த் தாயிறந்தாள் விழலதாக
ஆளப்பா உறன்முறையார் பகைவரானார்
அன்பாக அதன்மேலே அருளுண்டாச்சே.

(இ-ள்.) விஷ்ணுபந்த ரோகையின் பலன் இன்னமும் கேட்பாயாக: இவன் பிறந்த நாலாமாதம் அல்லது பத்தாமாதம் வீட்டில் அனலானது கொள்ளும், அத்துடன் வறுமையும் பிணியும் பிடித்துக்கொண்டு இவன் தாயார் மரணமாகினள்; விழலாகவும் உறவின் முறையாரும் பகையானார்கள். அதன் மேல் இவனுக்கு அருளானது உண்டாயினவாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வருங்கால வாழ்வினைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் ஜனித்த நான்கு அல்லது 10-ம் மாதத்தில் இவன் வீட்டில் அனல் பிடித்துச் சாம்பலாகியதுடன் தாயுமிறந்து உறவின் முறையாரும் பகைவரானார் ஆயினும் மேற்படி 10-ஆம் மாதத்திற்குப் பின்பே மேலான யோகம் உண்டாயின என்பதாம். 80

ஆகவே யின்னமுந்தான் கேட்பாயப்பா
ஆச்சரியம் பெற்றமைந்தன் அதிகயோகம்
ஆகவே யிவன்வயதோ ரெழுபத்தைந்தாம்
அப்பனே யிவனுக்குத் தாரமூன்றும்

UraTech Document Processing Solutions

வாகவே யிவனுக்குப் பிள்ளையாறும்
  வரிசையாய் ஆண்மூன்று பெண்தான்மூன்று
போகவே தேவிமா ரிரண்டுபேர்க்குள்
  புகலவே பிள்ளையொரு தாரத்தின்றே.

(இ-ள்.) ஆகும்படியாக இன்னமுங் கேட்பாயாக. இவன் ஆச்சரிய முள்ள அதிக யோகசாலியாகும்; இவனுக்கு வயது எழுபத்தைந்தாம்; தாரமானது மூன்றும்; சந்ததிகள் ஆறும் அதில் ஆண் மூன்று பெண் மூன்றும்; இவனுடைய மனைவியர் இரண்டு பேருக்குள் ஒரு தாரத்திற்குப் பிள்ளையில்லை எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது ஆயுள் மனைவி புத்திரர் முதலிய விவரத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, வயது 75. மனைவிமார் மூவர் புத்திரர் 3. புத்திரி மூன்று ஆக அறுவர் என்பதோடு இவன் மனைவியர்கள் மூவரி லொருத்திக்குச் சந்ததியில்லை என்பது கருத்தாகும். 81

இல்லையென்று யின்னமுந்தான் சொல்லக்கேளு
  இயல்பாகச் சொல்லுகிறேன் யியன்றமட்டும்
அல்லையென்று சொல்லுகிறேன் அறிவுள்ளோர்க்கு
  அப்பனே யின்னமுந்தான் அறிந்துபாரு
கல்லையென்ற கண்ணுதலாள் சொன்னமார்க்கம்
  கருணையால் உமையவள்தான் கடாட்சிப்பாள்பார்
தொல்லையொன்றும் இல்லையடா விஷ்ணுபந்தம்
  சொல்லுகிறேன் யின்னமுந்தான் சுருதிகேளே.

(இ-ள்.) மேற்கூறியதில் இன்னமும் இயல்பாகத்தானே சன்றமட்டுஞ் சொல்வேன் அறிவுள்ளோர்க்கு இன்னமும் அறிந்துப்பார்ப்பாய். கண்ணுதலாகிய உமையவள் சொன்னமார்க்கம் காட்சியாகும். தொல்லையானது ஒன்றுமில்லை. விஷ்ணுபந்த ரேகையானது அன்றியும் சொல்கிறேன் இன்னமும் சுருதியைக்கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனின், இங்குக் கூறிய விஷ்ணுபந்த ரேகையினது மர்மங்களை உமாதேவியார் எனக்குக் கூறிய ரகஸ்யங்களின்னு மனேக முள்ளன. இப்படி இந்த ஜாதகனுக்கு மகா கொடிய துன்பங்களுண்டாயினும் பிற்காலம் மேற்படி தேவியின் கடாக்ஷத்தால் மிக்க நன்மையடைவான் ஆனதால் அவ்விவரத்தினைக் கூறுவேன் கேளுங்கள் என்பதாம். 82

கேட்கவே யிவன்வயது பதினுலுக்குள்
  கணிதமுள்ள விவாகமுந்தான் முடியும்மைந்தா
ஆட்கவே யிவனுக்கு அஞ்சுகெண்டம்
  அப்பனே உண்டாம்என் றுய்ந்துசொல்லு

வாட்கவே யிவனுக்குப் பிள்ளை தானும்
வண்மையுள்ள பத்துபிள்ளை வரிசையாகும்
கோட்கவே இவன்யோகம் தனயோகம்தான்
கொற்றவன்தான் அதிகாரம் செய்குவானே.

(இ-ள்.) கேட்பாயாக இவன் வயது பதினாலுக்குள் விவாகம் முடியும். இவனுக்கு ஐந்து கெண்டமும், சந்ததி பத்துண்டாம். இவன் யோகம் தன யோகம். இவன் கொற்றவன்போல் அதிகாரம் செய்வான் எ-று.

(வி-ரை.) முன்னங்கூறிய கவியால் இவனுக்குண்டாகும் புத்திரர்கள் 6 எனவும், இக்கவியால் 10-புத்திரர் என்றமையால் நிலைத்திருப்பது 6-எனவுங் கொள்க. மற்று மிவனுக்கு விவாகம் 14-ஆம்வயதி லெனவும் கெண்டாதி கெண்டங்கள் 5-எனவுங் கூறவேண்டும் என்பது கருத்தாகும். 83

செய்யவே யிவன்தான்சற் சனனேயாகும்
செப்புகிறேன் நீராலே இரண்டுகெண்டம்
வையவே மிருகத்தால் கெண்டம்ஒன்று
வரிசையாய்ச் சொல்லுகிறேன் சத்துருவால்ஒன்று
மெய்யவே வியாதியினால் இரண்டுகெண்டம்
மேன்மையாய் உண்டென்று விளம்பினேன்பார்
வெய்யவே கெண்டமெல்லாம் தீரவேண்டி
வேதவருக் கர்ச்சனைதான் விரும்பினனே.

(இ-ள்.) செய்யினும் இவன் சர்ச்சனனாகும்; சலத்தினால் கெண்டம் இரண்டாம்; மிருகத்தினால் கெண்டம் ஒன்றாம்; சத்துருக்களால் கெண்டம் ஒன்று; வியாதியினால் கெண்டம் இரண்டு; இவைகள் வந்து வாய்க்கும்; இவைகள் தீரும்படி வேலவர்க்கு அர்ச்சனை புரிவான் எ-று.

(வி-ரை.) இக்கவியால் எந்தெந்த விதத்தில் கெண்டம் என்பதனைக் கூறுவாராயினர். அவையாவன, ஜலத்தால் இரண்டு கெண்டமும், மிருகத்தாலோர் கெண்டமும், சத்துருவாலொன்றும் கொடிய வியாதியால் இரண்டு கெண்டமும் உண்டாகும் என்பதாம். இவை நீங்க கடவுளுக்கு அருச்சனை செய்யவேண்டும் என்பதாம். 84

விரும்பிட்ட யிவன்வினைத் தொழில்கள்சொல்வான்
விரிவான வேதத்தை விரும்புவான்பார்
அரும்பிட்ட சிவபூசை நாளும்செய்வான்
அப்பனே யின்னமுந்தான் அறையக்கேளு

LuraTech Document Processing Solutions

பொரும்பிட்ட யிவனுக்குப் பூமியோகம்
  பொருந்துமடா மைந்தனே புண்ணியமாக
தரும்பிட்ட புதுமனையும் குதிரைலாயம்
  சார்வாக அஸ்வம்உண்டாய் வாழ்குவானே.

(இ-ள்.) விரும்பும்படியாக இவன் வினாவினால் தொழில்கள் செய்வன், வேதநூற்களை விரும்புவன், சிவபூஜைகள் நாளும் செய்வான்; இன்னமுஞ் சொல்லக்கேளும், இவனுக்குப் பூமியோகமும் பொருந்தும், புண்ணியத்தினால் அத்துடன் புதுமனையும் குதிரைலாயமும் கட்டி அஸ்வமுண்டாகி வாழ்வான்.

(வி-ரை.) இக்கவியா லிவனது வாழ்வு விசேஷத்தைக் கூறுவாராயினர். எப்படி எனில், வினவும் வித்தை முதலியவற்றையறிந்து சிவபூஜை செய்பவனாகி அனேக பூமியும் அழகிய புதிய அரண்மனையும் அதில் குதிரை லாயம் முதலியன கட்டிவைத்து மிக்க மேன்மையுடன் வாழ்வான் என்பது கருத்தாகும். 85

வாழ்வான விஷ்ணுபந்த ரேகைமைந்தா
  மாநிலத்தில் சொல்லிவிட்டேன் உள்ளதெல்லாம்
தாழ்வான நாயமெல்லாம் மறைப்பொன்றில்லை
  நலமான மனோன்மணியாள் நவின்றமார்க்கம்
ஆழ்வான ஆதியந்தம் கண்டுதேறு
  அப்பனே யின்னமும்உண் டாய்ந்துகேளு
வீழ்வான தில்லாமற் சொல்வேன்மைந்தா
  விகற்பமாய் ரேகையொன்று சொல்லுவேனே.

(இ-ள்.) வாழ்க விஷ்ணுபந்த ரேகையின் பலன் மானிலமீது சொல்லிவிட்டேன் உள்ள யாவும் நாயமேயல்லாமல் மறப்பான தொன்றுமில்லை; நலமாகத்தானே மனோன்மணியாள் சொன்ன மார்க்கத்தினில் ஆதியந்தமும் கண்டு தேர்வாய்; அன்றியும் இன்னமுமுண்டு அதை ஆய்ந்துக்கேட்பாய்; இழிவான தில்லாமற் சொல்வேன் விகற்பமாகியரேகை ஒன்று கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின் இதுவரையில் கூறிவந்த விஷ்ணுபந்த ரேகைக்குறிய வாழ்வு திசாயோகம் ஆயுள் கெண்டாதி கெண்டம் முதலிய அனைத்தும் கூறிவிட்டேனாதால் மற்றுமொரு ரேகை விவரத்தினைக் கூறுவேன் என்பது கருத்தாகும். 86

வச்சிரமணி ரேகையின் பலன்

சொல்லுகிறேன் ரேகைஒன்று யின்னம்கேளு
  சொல்லரிய முப்பொருள்கள் துலங்கத்தானே
அல்லுகிறேன் வச்சிரமணி ரேகைஒன்று
  அப்பனே சொல்லுகிறேன் அடவாய்க்கேளு

சொல்லுகிறேன் நடுக்கரத்தில் ஐவிந்தம்ரெண்டு
 உற்பனமாம் வச்சிரமணி ரேகைமூன்று
மல்லுகிறேன் இரண்டுபுள்ளி மூன்றுரேகை
 வளமாக யிருக்குமப்பா வண்மைபாரே.

(இ-ள். சொல்கிறேன் ரேகை ஒன்று கேளும் சொல்லுதற்கரிதாகிய பழம்பொருள் யாவும் துலங்கும்படியாகவும் நல்ல வச்சிரமணி ரேகை ஒன்று சொல்கிறேன் அடவாகக் கேளும். நடுகரத்தில் ஐவிந்தம் ரெண்டு வச்சிரமணி ரேகை மூன்றும் அதில் இரண்டு புள்ளியும் மூன்று ரேகையும் வளமாகத் தானே யிருக்கும் வண்மையைப் பார்ப்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிங்கு கூறும் வச்சிரமணி ரேகை என்பது எவ்வாறிருக்கும் என்பதைக் கூறுவாராயினர். அவையாவன, ஐவிந்தம் போன்றிரண்டும் வச்சிரமணி போன்று மூன்றுமாயிருக்கும் என்பதாம். அவையாவன, இரண்டு புள்ளி ரேகையும் மூன்று கீற்று ரேகையுமா யிருக்கும் என்பது கருத்தாகும். 87

பார்க்கவே வச்சிரமணி வைவிந்தம்ரெண்டு
 பண்பாக யிருக்குமென்றால் குணத்தைக்கேளு
ஏர்க்கவே யிவன்பிறவி நல்லயோகம்
 இயம்புகிறேன் இவன்பிறவி மூன்றுபேராம்
கார்க்கவே இரண்டாணும் ஒன்றுபெண்ணாய்
 கருணையால் மூன்றுபேர் பிறவியாகும்
தார்க்கவே யிவன்தானும் அஞ்சாங்கேர்ப்பம்
 தாஷ்டிகந்தான் மகநாளிற் பிறப்பான்றானே.

(இ-ள்.) பார்க்க வச்சிரமணி ரேகையும் ஐவிந்தரேகையும் இவையிரண்டு மிருக்குமாயின் அதின் குணத்தைக் கேளும் அவ்வித ரேகையுள்ளோன் பிறவி யோகவானாகும். இவனுடன் பிறந்தவர்கள் மூன்று பெயராம். அதில் இரண்டு ஆணாகும், ஒன்றுப் பெண்ணாகும்; கருணையான மூன்றுபேரும் பிறவியாகும்; இவன் தாயார் குளித்த ஐந்தாநாள் கெர்ப்பந் தரித்தவன்; மக நட்சத்திரத்தில் ஜெனனமானவனாகும் எ-று.

(வி-ரை.) இங்கு கூறும் வச்சிரமணி என்பது ஐவிந்தம் இரண்டாயமைந்திருக்குமாயின் அந்த ஜாதகனுக்கு மேலான யோகம் உண்டு. மற்றும் இவனுடன் பிறந்தவர் மூவரில் ஒருத்தி பெண்ணாகும் என்ப. இதுவன்றி ஐந்தாநாளிற் கெற்பம் தரித்தவன் எனவும் மக நக்ஷத்திரத்திற் பிறந்தவன் என்பது அறியத்தகுந்தது. 88

ஆனதொரு கிழக்கான வாசல்வீட்டில்
 அடவாகப் பிறந்திவன் ஆண்மையாக
வானதொரு குருவாரம் மத்தியானந்தான்
 வண்மையாம் சஷ்டியென்ற திதிதானாகும்

LuraTech Document Processing Solutions

போனதொரு புரட்டாசி மாதத்தில்தான்
கொற்றவன்தான் பிறந்திட்டான் திசையினாலே
நானதொரு யிவன்பிறந்த போதுமைந்தா
நலமான தன்பிறவிக் காகாதன்றே.

(இ-ள்.) ஆன கிழக்குப் பக்கமான வாசலுள்ள வீட்டில் பிறந்தோன்; ஆண்மையுள்ளவன்; வியாழக்கிழமை மத்தியானம் சஷ்டி திதியில் புரட்டாசி மாதத்தில் இவன் பிறந்தான்; திசையால் இவன் பிறந்தது தன்னுடைய பிறவிக்கு ஆகாதாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவன் பிறந்த மாதம் நாள் முதலியனவற்றைக் கூறுவாராயின. அவையாவன, புரட்டாசிமாதம் குருவாரத்தில் மத்தியான நேரத்தில் சஷ்டி திதி கூடிய நாளிற் பிறந்தான் என்பது கருத்தாகும். முன்னங்கூறிய கவி யிவன் பிறந்த நக்ஷத்திரத்தைக் கூறப்பட்டுள்ளன. 89

அன்றெனவே தன்பிறவி அப்பாலேசொல்வேன்
அன்னவன்தான் பிறந்திட்டான் எட்டாமாதம்
குன்றெனவே ஒருபிள்ளை அடுப்பில்வீழ்ந்து
குறிப்பாக யிறந்ததென்று கூறினேநான்
நன்றெனவே யிவன்பிறந்த நாலாமாண்டு
நலமான பிதாவிடத் துயரமாச்சே
வன்றெனவே யிவனுடைய யோகவாழ்க்கை
வகையாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு.

(இ-ள்.) மேற்கூறியோன் பிறவியைச் சொல்வேன்; இவன் பிறந்த எட்டாமாதம் ஒரு பிள்ளை அடுப்பில் வீழ்ந்து மரணமாகினதுவாம். இவன் பிறந்த நாலாம் வருடம் தன் தகப்பனுக்கு துயரம் ஆகும்; இவனுடைய யோக வாழ்க்கைதனைச் சொல்லுகிறேன் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவன் வருவினையினைக் கூறியுள்ளனர். அவையாவன, இவன் ஜனித்த எட்டாம் மாதத்தில் இவனது சகோதரருள் ஒருவன் அடுப்பில் வீழ்ந்து இறந்தான் எனவும், வயது நாலில் பிதாவுக்கு மகா துயரம் உண்டாயின என்பதுங் கருத்தாகும். 90

கேளப்பா யிவனுக்குத் தேவியொன்று
கிருபையுடன் வாழ்ந்திருப்பார் கீர்த்திகேளு
வாளப்பா வகையுடனே வாழ்ந்திருந்து
வரிசையாய்ப் பிள்ளைகள் பதின்மூன்றாகும்
கோளப்பா யில்லாமல் பிறப்பார்மைந்தர்
கொற்றவன்றான் பாக்கியமுற்று வாழ்வாரன்றோ
வேளப்பா பிள்ளைதான் அஞ்சுபேராம்
வேதாந்த சற்குணன்பொன் கிடைக்கும்பாரே.

(இ-ள்.) கேட்பாயாக: அவனுக்கு மனைவி ஒன்றாகும்; கிருபையோடு கூடி வாழ்ந்திருப்பார்கள்; கீர்த்தியானதைக் கேளும்; வரிசையாகத் தானே வாழ்ந்திருந்தும் பிள்ளைகள் பதின்மூன்றும் பெறுகுவர், குற்றமில்லாத மைந்தராகும். தலைவனும் பாக்கியமுற்று வாழ்குவான்; அம்மைந்தர்களில் இவன் ஐந்தாம் பேராகும். இவனுக்குப் பொன்னானது கிடைக்குமாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது மனைவி மக்கள் முதலிய விவரத்தினைக் கூறுவாராயினர். அவ்வயாவன, இவனுக்கு மனைவி ஒருவள். அவளுக்குண்டாகும் புத்திர புத்திரிகள் 13. அவர்களுள் ஆண் குழவிகள் 5. இவர்கள் யாவரும் தமது வாழ்நாளில் மகாயோகமுடையவராகி வாழ்வார் என்பதாம். 91

கிடைக்குமென்று உத்தரவு சொன்னாய்தாயே
கிருபையுடன் எதாலே கிடைக்குமம்மா
படைக்குமென்று எந்தனுக்குப் பகர்ந்தசோதி
பார்வதியே பராபரியே சொல்லுமம்மா
அடைக்கலம் உன்பாதமெனப் பிரமதேவன்
ஆனந்த மதியமிர்த அம்பிகைத்தாய்
துடைக்கவே சாஸ்திரங்கள் அநேகங்கோடி
சொன்னஅம்பாள் இன்னமுந்தான் சொல்லுவாளே.

(இ-ள்.) கிடைக்குமென்று சொன்ன தாயே அது எதாலே கிடைக்கும் படைக்குமென்று யெந்தனுக்குப் பகர்ந்த சோதியே பார்வதி சொல்லும் அம்மாவென்று கேட்க, அடைக்கல முன்பாதமென்றும் பிரமதேவன் அப்பாது ஆனந்தமதி யமிர்தமாகிய அம்மையாள் கூர்ந்து சாஸ்திரங்கள் அநேகங் கோடிச் சொன்ன அம்பாள் இன்னமும் சொல்லத் தொடங்கினர் எ-று

(வி-ரை.) இக்கவியா லிவனுக்கு எவ்வகையால் யோகம் உண்டாகும் அதனை விவரமாய்க் கூறுதல் வேண்டுமென அங்குள்ள பிரமன் முனிவர் தேவர் ரிஷிகள் முதலாயினோர் வினவுவாராயினர். கீழ்வருங் கவியாலிதற்கு பதிலுரைக்கின்றனர். 92

சொல்லுவாள் மனோன்மணியாள் என்னைப்பெற்ற
சுந்தரிதான் தனங்கிடைக்கும் வகையைத்தானே
மல்லுவாள் வாலைபரஞ் சோதியான
வச்சிரமணி நிகரான முறவலாள்தான்
ஒல்லுவாள் உபதேசம் உறுதியாக
உத்தமனும் பிரமனுளம் உவக்கைபூப்ப
அல்லுவாள் அகிலாண்ட கோடிமாதா
ஆயிழையாம் சிற்பரிதாம் அருள்செய்வாளே.

UnaTech Document Processing Solutions

(இ-ள்.) சொல்லுவாள் மனோன்மணியாகிய என்னைப் பெற்ற சுந்தரியும் தனம் கிடைக்கும் வகையைச் சொல்லுவாள். அவள் யாரெனில், வாலை பரஞ்சோதியாய் வச்சிரமணி போன்ற உமையாள் கூறும் உபதேசம் உறுதியாக உத்தமனாகிய பிரமன் மனங் களிக்க அல்லுவாள். அகிலாண்டகோடியான மாதா ஆயிழையாயும் சிற்பரியாயும் விளங்கிய என் தாய் அருள்செய்வாள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவன, ஓ எங்களுக்குத் தாய் போன்று விளங்கும் மாதாவே! பரஞ்சோதிமயமாய் விளங்கும் தேவியே, இங்குக் கூறும் வச்சிரமணி ரேகையுடையவர்களுக்கு தனமுண்டாகும் வகை எவ்வாறு அதனை யாங்களறியும் வண்ணம் கூறுதல் வேண்டுமெனக் கேட்க உலக மாதாவானவள் பின்வருமாறு கூறுகின்றனள். 93

செய்யவவே யிவனுக்கு அஞ்சாம்பிள்ளை
செய்ததொரு தவத்தாலே மைந்தாகேளு
வையவே யீஸ்வரற்குப் பாதபூசை
வண்மையாய்ச் செய்ததினால் எல்லாஞ்சித்தி
உய்யவே அதனாலே யிவன்றனக்கு
உற்றதொரு ரிஷபவாகன மீதேறும்
ஐயரவர் ஐயமில்லாப் பொருள்களீந்தார்
அனந்தயோகம்இதுவே அருளாமன்றே.

(இ-ள்.) செய்யவும் இவனுக்கு ஐந்தாம்பிள்ளை பாலன்செய்த தவத்தாலும் ஈஸ்வரனுருக்குப் பாதபூசை வண்மையாகத்தானே செய்ததினால் எல்லாம் சித்தியாகி இதனால் இவன்றனக்கு ரிஷபவாகனமேறும் பரமேஸ்வரனார் கிருபையானது கூர்ந்து இவனுக்குப் பொருள் ஈந்தார் ஆனந்தயோகத்தின் அருளாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில் இவனுக்குப் பிறக்கப் போகும் ஐந்தாம் குழவியானது பூர்வத்திற் றான் செய்த புண்ணியத்தாலும் ஈசனுக்குச் செய்த தொண்டாலும் மேற்படி ரிடபாரூடர் இவர்களுக்கு வேண்டிய தனமனைத்துங் கொடுத்து கடாக்ஷித்தருளினார் என்பதாம். 94

அன்றப்பா யிக்குழந்தை அஞ்சுபேராம்
அருளான சதயத்தில் நாலாங்காலாம்
குன்றப்பா குலமகனும் இவனைப்போலும்
குவலயத்தி லில்லையில்லை குபேரன்ஒப்பு
மன்றப்பா மண்ணும்விண்ணும் வந்துபோற்றும்
மகாபாக்கிய யோகமிது மருவிக்கேளு
நன்றப்பா பூருவத்திற் செய்தபுண்ணியம்
நரேந்திரனாய் வந்துதித்தான் நடந்துபாரே.

(இ-ள்.) ஆனதால் இக்குழந்தை ஐந்தாம்போராகும் சதைய நட்சத்திரம் நாலாங்காலம் குலமகனுகும் இவனைப்போல் குவலயத்தில் யாருமில்லையாம்; குபேரனுக்கு ஒப்பாகுவன் மண்ணும் விண்ணும் வந்து போற்றும் மகாபாக்கிய யோகமாகும் இவன் பூர்வத்தில் செய்த புண்ணியமாகும், இப்போது நரேந்திரனுகத்தானே பூமியில் வந்துதித்தான் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவனுக்குப் பிறக்கும் ஐந்தாங் குழவியினது விவரத்தைக் கூறுவாராயினர். அவையாவன, மேற்படி ஐந்தாங் குழவி என்பது சதயம் நாலாங்காலிற் பிறந்ததாகும். மற்றுமவன் பூர்வத்திற் செய்த புண்ணியத்தால் நாகேந்திரனுகி குபேரனையொத்த செல்வம் படைத்தவனுய் ஒப்பற்ற வாழ்வினை யடைவான் என்பது கருத்தாகும். 95

பார்க்கவே யிவனுடைய யோகத்தாலே
  பண்பான குழந்தைக்கு வயதுமூன்றில்
ஏர்க்கவே அக்குழந்தை தானேமைந்தா
  இயல்பாக நிலத்திலே குழிதான்கெல்லி
வார்க்கவே விளையாடும் போதுதானே
  வண்மையாய்ப் பணம்கண்டு பிதாவுக்குரைத்தான்
தார்க்கவே பிதாவும்போய்க் கண்டுதானே
  சற்சனனுய் நிதியெடுத்து வாழ்ந்தானன்றே.

(இ-ள்.) பார்க்க இவனுடைய யோகத்தினுல் பண்பாகியக் குழந்தைக்கு வயதான மூன்றில் அக்குழந்தையானது பூமியில் குழியானது கெல்லி விளையாடும்போது வண்ணமாகிய பணப்புதையல்கண்டு தந்தையிடம் வந்துரைக்க அதைப் பிதாவும்போய் கண்டெடுத்துக்கொண்டு வாழ்வன் எ-று.

(வி-ரை.) இந்த ஜாதகனது யோகத்தின் பயனுய் மேற்சொன்ன 5-ஆம் குழவியானது தன் மூன்றும் வயதில் பூமியிற் குழிதோண்டி விளையாடும் போது பணக் குவியலைக்கண்டு பிதாவுக்குச் சொல்ல பிதாவும் அதனை எடுத்து வந்து நல்வாழ் வடைந்தனர் என்பதாம். 96

அன்றெனவே அன்னமுந்தான் நிதியெடுத்து
  ஆனந்த மகாயோகம் அணுகிற்றன்றே
குன்றெனவே யிவனுடைய யோகவாழ்க்கை
  குவலயத்தில் பிரமாவே எல்லாஞ்சொல்வேன்
நன்றெனவே நானுனக்குச் சொல்லுமார்க்கம்
  நலமுடனே முடியுமென்று நாடிக்காண்பாய்
ஒன்றெனவே யிருந்ததொரு சகலஜீவன்
  உண்மையாய் ரட்சையதாம் உறுதிசொல்லே.

(இ-ள்.) அன்றென இன்னமும் சிதியானது எடுத்து ஆனந்தமாகிய யோகமானது அனுகி குன்றைப்போல் இவனுடைய யோகவாழ்க்கையை பூமியின்மீது சொல்லக்கேளும்; பிரமாவே நானுனக்குச் சொல்லும்படியான மார்க்கம் நலமாகத்தானே முடியுமென்றுங் காண்பாய் இருக்கும்படியாகிய சகலஜீவன் உண்மையாக ரட்சிப்பது உண்மையாம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில் மேலே சொன்னபடி பிதாவானவன் மேற்படி புதையற் பொருளைக் கொண்டுவந்து சகல சம்பத்து முடையவனாகி எவரையும் இணைசொல்ல முடியாதவனாய் மேன்மை பெற்ற னன். இவை உண்மை என்பதாம். 97

சொல்லவும்தான் தேவர்களும் முனிவோரெல்லாம்
சொற்பெரிய உமையவளைத் தொழுதுநின்றார்
வெல்லவுந்தான் மூவுலகு தன்னைவெல்ல
வேதாந்தம் உணர்ந்தபெரி யோரும்வெல்ல
அல்லவும் அஷ்டதிக்கு பாலர்மெச்ச
அருளான கும்பமுனி வசிஷ்டர்மெச்ச
வல்லமையாய்ச் சொன்னசொற்கள் எல்லாம்கேட்க
வண்மையாய்த் தொழுதிறைஞ்சி வழிகேட்பாளே.

(இ-ள்.) மேற்கூறியவண்ணம் உமையாள் சொல்ல தேவர்கள் முனிவர்கள் யாவரும் உமையவளைத் தொழுதுநிற்க மூவுலகத்தையும் வெல்ல வேதாந்தமுணர்ந்த பெரியோர்களும் வெல்ல அஷ்டதிக்குப் பாலர்களும் மெச்ச அருளாகிய கும்பமுனியும் வசிஷ்டர் மெச்ச வல்லமையாகத்தானே சொன்ன சொற்களை யெல்லாம்கேட்ட வண்மையாகத்தானே தொழுது வழி கேட்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனில், மேற்கூறிய வண்ண முரைத்த உமாதேவியினது திருவாக்கைக் கேட்ட தேவர் முனிவர் ரிஷிகள் முதலாயினோர் மேற்படி தேவியைத் தொழுது, ஓ மாதாவே இன்னுமுள்ள விஷயங்களையுங் கூறவேண்டுமென வேண்டிக்கொண்டனர் என்பதாம். 98

கேட்கவே முன்சொன்ன மூன்றுகாண்டம்
கேவலமா யிக்காண்டம் ஒன்றுங்கூட
ஆட்கவே காண்டந்தான் நான்கதாச்சு
அப்பனே சாலமுந்தான் அன்பாய்ச்சொன்னேன்
வாட்கவே வம்சமுதற் கோத்திரமெல்லாம்
வண்மையாம் நடக்கைமுதல் பிறவிசொன்னேன்
ஏட்கவே யிந்நூலிற் சகலசெய்தி
எம்பிரா னருளாலே யியம்பிட்டேனே.

(இ-ள்.) கேழ்க்க முன்சொன்ன மூன்று காண்டமும் இக்காண்டம் ஒன்றையுங்கூட காண்டம் நான்காச்சு; அதிலுள்ளதைச் சகலமுஞ் சொன்னேன்; வாழ்க்கை முதலாக வம்சமும் கோத்திரமும் நடக்கை முதலான விபாமுஞ் சொன்னேன்; இந்நூலிற் சகலசெய்தியும் எம்பிரானருளால் இயம்பினேன்.

(வி-ரை.) ஓ முனிவர்களே தேவர்களே ரிஷிகளே கேளுங்கள் முன்னங் கூறிய மூன்று காண்டத்துடன் இங்கு கூறியதைச் சேர்க்க நான்கு காண்டங்களாயின. இவற்றுள் எமது உடன் பிறந்தோராகிய எம்பிரானது கிருபா கடாக்ஷத்தால் சகல மார்க்கத்தையுங் கூறிவிட்டேன் என்பது கருத்தாகும். 99

இயம்பிட்டேன் நாலாங்காண் டத்தைமைந்தா
இன்னமுந்தான் சுவாமிசொன்ன தியம்புவேன்யான்
நயம்பிட்டேன் நான்முகனே கைலாசர்சொன்ன
நலமுள்ள கேசரியின் நடத்தையெல்லாம்
வயம்பிட்டேன் மழுவிடையான் சொன்னமார்க்கம்
வஞ்சனைகள் இல்லாமல் வகுத்துச்சொன்னேன்
துயம்பிட்டேன் தூய்சடையோன் சொன்னமார்க்கம்
சுந்திரம்போல் இந்நூலைத் துலக்கிடாயே.

(இ-ள்.) இயம்பினேன் நாலாங் காண்டத்தையும் இன்னமும் சுவாமி சொன்னதை இயம்புவேன். ஓ நான்முகனே, கயிலாசநாதர் சொன்னக் கேசரியின் நடக்கையாவும் மழுவிடையான் சொன்ன மார்க்கத்தையும் வஞ்சனைகள் இல்லாமல் வகுத்துச்சொன்னேன்; தூய சடையோனாகிய பரமசிவன் சொன்ன மார்க்கத்தைச் சுந்திரமாக இந்நூலைத் துலக்கஞ் செய்வாய் எ-று.

(இ-ள்.) கரத்தில் மானும் மழுவுந் தரித்தவராகியும் சந்திரனைச் சடாபாரத்திற் றரித்தவருமாகிய சிவபிரான் என்னிடங் கூறிய விஷய மெல்லாவற்றையும் விவரமா யுங்களிடம் கூறிவிட்டேன் என்பது கருத்தாகும். 100

துலங்கிட்ட இந்நூலைப் பழித்தபேர்க்கு
தொலையாத நரகம்வந்து எய்துங்கண்டாய்
அலங்கிட்ட அநேகநாள் ஈசனைவேண்டி
அன்பாகத் தவமதுசெய் தறிந்தேன்மார்க்கம்
நலம்பெறவே கயிலாச நாதர்பார்த்து
நயமாக எந்தனுக்கு உபதேசித்தார்
வலம்பெறவே மகாரிஷிகள் கேளுங்களென்று
வசனித்தாள் கேசரியை ஆதித்தாயே.

(இ-ள்.) துலங்கும்படியாகிய இந்நூலைப் பழித்தபேர்க்கு தொலையாத நரகமானது வந்தெய்தும்; அநேகநாளாக ஈஸ்வரனைவேண்டி அன்பாகத்தானே தவங்கள் செய்து யான் தெரிந்தேன். இந்த மார்க்கம் நலம் பெறும்படியாக

LuraTech
Document Processing Solutions

கயிலாச நாதரானவர் பார்த்து நயமாகத்தானே எந்தனுக்கு உபதேசித்தார். மகா ரிஷிகளே கேளுங்களென்று வசனித்தாள். கேசரியை ஆதித் தாயாகிய உமையவளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனில், யான் இதனை யறிய ஈசனை வேண்டி வெகுநாள் தவமிருந்து தெரிந்துகொண்ட தாகையால் இதனை எவர் பழித்தார்களோ அவர்களுக்கு நரகவாதனை சித்திக்கும் என்பது கருத்தாம். 101

ஆக காண்டம் 4-க்கும் பாடல் 356.

ஐந்தாங் காண்டம்

ஆதியே ஐந்தெழுத்தாம் உமையேதாயே
அற்புதமே மெய்ப்பொருளே ஆதிசோதி
நீதியே பரஞ்சுடரே நிர்மலத்தாய்
நீலவர்ண கலாபமயில் சாயலாளே
வாதியேவாலைபர மேஸ்வரியே அம்பாள்
வச்சிரமணி மரகதப்பெண் உலகமாதா
சோதியே சொக்கர்மகிழ் மீனாட்சிதாயே
சொல்லுவாய் நடனசபை துலங்குவாளே.

இ-ள். ஆதியாகியும் ஐந்தெழுத்தாகியும் நின்ற உமையே தாயே அற்புதமாகிய மெய்ப்பொருளே சோதியே நீதியாகிய பரஞ்சுடரே நிர்மலமாகியத் தாயே வாதியே வாலைபரமேஸ்வரியே வச்சிரமணியான மரகதப் பெண்ணாகிய உலகமாதாவே சொக்கர் மகிழும் மீனாட்சித்தாயே சொல்வாய் நடனசபைத் துலங்கியத்தாயே எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், ஓ பஞ்சாக்ஷரரூபியே, எவரும் வியக்கத்தகுந்த மெய்ப்பொருளே, நீல நிறத்தினையுடைய மயிற் சாயலையுடையவளே! வாலை பரமேஸ்வரி, சொக்கேசர் மகிழும் மீனாக்ஷித் தாயே இன்னுமுள்ள விஷயங்களையுங் கூறுவாய் என்று வேண்டுகின்றனர். 1

துலங்கவே யெந்தாயே பரஞ்சோதியம்மாள்
துன்பவினை தீர்த்தருளத் துலங்குவாயே
அலங்கவே ஆதியந்தம் நிறைந்தசோதி
அற்புதமே சிற்பரியே ஆதிசத்தி
பலங்கவே பராபரியே பராசத்திதேவி
பகருமம்மா உள்ளதெல்லாம் பாவியோர்க்கு
நிலங்கவே நிமிலிதிரி சூலியென்று
நின்றுதொழ ஐந்தாங்காண்டம் சொன்னாள்பாரே.

(இ-ள்.) துலங்கும்படியாகிய என் தாயே பரஞ்சோதியே துன்பவினைகளைத் தீர்த்தருளத் துலங்குவாயே; ஆதியந்தமாக நிறைந்தசோதி அற்புதமாகியச் சிற்பரியே ஆதிசத்தியே பராபரியே பராசத்தியாகிய தேவியே பகருவாய் அம்மணி; உள்ளது யாவும் பாவியாகிய எங்கட்கு சிமிலி திரிசூலி என்று இவ்விதமாகத்தொழுது ஐந்தாங் காண்டமதை எடுத்துக் கூறினாள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னவெனில், பரஞ்சோதிமயமாய் விளங்காநின்ற தாயே, அனைவரின் துன்பத்தையும் நீக்குதற்கென்றே தோன்றிய மாதாவே, ஆதியந்தமும் நிறைந்திருப்பவளே! திரிசூலி இன்னுமுள்ள ஐந்தாங்காண்டத்தையும் எடுத்துக்கூறி எங்கள் மனத்திலுள்ள துன்பத்தை நீக்குவாய் என்பதாம். 2

சொல்லவென்று முனிவர்களும் தேவர்கேட்க
சொல்லினாள் உமையவள்தான் சொல்லினாள்பார்
அல்லவென்று மகிமையுள்ள சிலதுரேகை
அன்பாக சொல்லிவைத்த அருமைகேளு
மல்லவென்று வண்மையினாற் சொல்லப்பட்ட
வாகான பிரமாவும் வணங்கிக்கேட்க
நல்லதென்று நாயகியாள் சொன்னமார்க்கம்
நான்சொல்வேன் கமலமுனி நன்றாய்க்கேளே.

(இ-ள்.) சொல்லவேண்டுமென்று தேவர்களும் முனிவர்க்கங்களுங் கேட்க உமையவள் சொல்லுவாள். மகிமையுள்ள சிலது ரேகை அன்பாகத் தானே சொல்லிவைத்த அதின் அருமையைக்கேளும் அல்லவென்று வண்மையினாற் சொல்லப்பட்ட பிரமாவும் வணங்கிக்கேட்க நல்லதென்றுத்தானே நாயகியாள் சொன்ன மார்க்கம்போல் தானே கமலமுனி சொல்வேன் நன்றாகக் கேளீர் எ-று.

(வி-ரை.) மேற்சொன்னவாறு தோத்திரம் செய்து கேட்டுக்கொண்ட தேவர் முனிவர் ரிஷிகளைப் பார்த்து உலகமாதாவாகிய உமாமயேஸ்வரியானவள் சொல்ல, அதனைக்கேட்டிருந்த கமலமாமுனி என்னும் யான் உங்களுக்குக் கூறுகின்றனம் என்பது கருத்தாகும். 3

மால்விந்தரேகை சமலி ரேகையின் பலன்

கேளப்பா மால்விந்த ரேகைகண்டால்
கேவலமாய்ச் சமலியென்பர் இரண்டுரேகை
வாளப்பா யிரண்டுபுள்ளி நான்குரேகை
வளமாக நடுவிரலில் யிருக்கும்பாரு

ஆளப்பா மால்விரலில் கீழேநிற்கும்
அன்பான ரேகைகண்டால் அறைகுவேன்கேள்
நாளப்பா யிவனுடைய யோகவாழ்க்கை
நலமாக நானுனக்குச் சொல்லுவேனே.

(இ-ள்.) கேட்பாயாக: மால்விந்த ரேகையைக் கண்டால் சமலியென்பார். இரண்டுரேகை அல்லது இரண்டு புள்ளியும் நான்கு ரேகையும் நடுவிரலிலிருக்கும் மால்விரலில் கீழே நிற்கும். அப்படிக்கொத்த ரேகையைக் கண்டால் சொல்வேன் கேள்; அவ்விதரேகையுடையோனுடைய யோகவாழ்க்கையை நலமாகத்தானே நான் உனக்குச் சொல்வேன் எ-று.

(வி-ரை.) இங்கு மால்விந்த சமலி என்னும் ரேகையானது எவ்வாறிருக்கும் என்பதைக் கூறுவாராயினர். அவையாவன, மேற்சொன்ன மால்விந்த சமலி என்னும் ரேகையானது நடுவிரலில் நான்கு ரேகைகளும் இரண்டு புள்ளிகளுமா யிருக்கும். ஆனதால் அதன் விவரங்களைக் கூறுவேன் கேட்பீர்களாக என்பது கருத்தாகும். 4

சொல்லுவேன் யிவன்பிறந்த யோகவாழ்க்கை
சொல்லரிது மைந்தாநீ சுருதிகேளு
அல்லுவேன் யிவன்பிறந்த மனைதான்மைந்தா
அப்பனே சிறுகூரை கிழக்குவாசல்
ஒல்லுவேன் யிவன்பிறக்கும் போதுமைந்தா
உத்தமனே பிதாவுந்தான் வீட்டிலில்லை
இல்லுவேன் யிவன்தானும் தலைச்சனப்பா
இயல்பாக யிவன்பிறவி ஏழுபேரே.

(இ-ள்.) சொல்லுவேன் கேட்பாயாக: இவன்பிறந்த யோகவாழ்க்கையைச் சொல்லுதற்கரிதாகும். அன்றியும் சுரிதியைக்கேளும் இவன்பிறந்த மனையானது சிறு கூரையாகும். கிழக்குவாசலுடையது, இவன் பிறக்கும் போது இவன்பிதா வீட்டிலில்லை. இவன் தலைச்சன் பிள்ளையாகும். இவனுடன் பிறவி ஏழுபோம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த அடையாள விவரங்களைக் கூறுவாராயினர். எப்படி எனில், இவன் ஜெனித்தது சிறு கூறை வீட்டில் கிழக்கு வாயிலில் எனவும், இவன் ஜனித்தபோது இவன் பிதா வீட்டிலில்லை எனவும் இவன் தலைச்சனும் இவனுடன் பிறந்தவர் எழுவருமாகுமென்பதாம். 5

பேரான ஆண்நாலு பெண்தான்மூன்று
பெரியவனும் யிவன்தானும் வாழ்வதற்கு
கூரான யிவன்பிறந்த நல்லயோகம்
குணமான யோகமொன்று கூறலாகும்

வாரான யிவன்பிறந்த போதேயப்பா
வம்சமுதல் எல்லாமும் பிரபலமாச்சு
கோரான யிவன்குடிதான் பெருகிற்றப்பா
கூர்மையுள்ள மனிதர்கள்தான் உறவுகூறே.

(இ-ள்.) பேராகிய அவர்களில் ஆண் நாலு பெண் மூன்று அதில் பெரியவனாக இவன் வாழ்வதற்கு இவன்பிறந்த யோகம் நலமாகும். அதில் ஒன்று கூர்வேன். இவன் பிறந்தபோதே வம்மிசமுதலானதும் பிரபலமாச்சு இவன் குடியும் பெருகிற்று, கூர்மையாகிய மனிதர்கள் உறவாவார்கள் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் யோகத்தினைக் கூறுகின்றனர். அவை யாவன, இவனுடன் பிறப்பு எழுவருள் ஆண்பிறவி நான்கும் பெண்பிறவி மூன்றுமாகும் எனவும், இவன் பிறந்ததி லிருந்தே இவனது இல்லமும் வமிசமும் விருத்தியாயினவென்றுங் கூறவேண்டுவதாம். 6

கூறியதோர் யிவன்பிறந்த அஞ்சாமாதம்
குணமான பிதாவுக்குச் சகடயோகம்
ஆறியதோர் யோகமெல்லாம் வந்ததப்பா
அரசர்களின் சன்மானம் அதிகமாச்சு
தேறியதோர் தேவாலயப் பிரதிஷ்டையப்பா
செய்துவந்தான் சிதறிவிட் டதன்மேல்தானே
தாறியதோர் யோகம்வந்து வந்துமாறும்
தாழ்வில்லா திருந்தனன்பார் இருபதாண்டே.

(இ-ள்.) மேற்கூறிய இவன்பிறந்த ஐந்தாமாதம் பிதாவிற்குச் சகடயோக முண்டாம். அதனுடன் யோகம் யாவும் வந்ததாம். அரசர்களின் சன்மானம் அதிகமுண்டாகும். தேவதா பிரதிஷ்டைச் செய்வன். சிலநாளில் செதரிப் போகும் யோகமானது வந்துமாறும் தாழ்வில்லாதிருப்பான் இருபதாண்டும்.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிதாவுக்குண்டாகும் யோகத்தினைக் கூறியுள்ளனர். அவையாவன, இவன் ஜனித்த 5-ஆம் மாதமுதல் மேற்படி பிதாவுக்குச் சகடயோகம் என்பதுண்டாயின எனினும் இவன் செய்திருந்த தேவாலயப் பிரதிஷ்டையை மறந்துவிட்டதால் சிவகாலம் மாறுதலை யடைந்து பின்பு நன்மையுண்டாகும். இவ்வாறு 20 - வருஷங்கள் வரையில் நன்மை யுடன் வாழ்ந்தான் என்பதாம். 7

ஆண்டப்பா யிவனுக்குத் தாரம்ரெண்டு
அப்பனே முடியுமென்று அன்பாய்ச்சொல்லு
தாண்டப்பா யிவனுக்குத் தாரம்ரெண்டு
தகைமையாய்ப் பிறந்தவரும் யோகமாவார்

நாண்டப்பா யிவன்வயது முப்பத்தாறில்
கலமில்லா அரவத்தால் அடைவான்பாரு
ஈண்டப்பா இவனுடைய யோகவாழ்க்கை
இயல்பாகச் சொல்லிவிட்டே னிசைந்துகேளே.

(இ-ள்.) மேற்கூறிய இவனுக்குத் தாரம்ரெண்டு உண்டாகும். இவனுக்கு நாலு பிள்ளைகள் உண்டாம். அவர்களும் யோகசாலிகளாவர். இவனுக்கு வயது முப்பத்தாறில் அரவத்தால் மரணமடைகுவன். இவனுடைய யோகவாழ்க்கை யாவும் இயல்பாகத்தானே சொல்லி விட்டேன் இசைந்து கேட்கவும். எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில் இவனுக்கு மனைவிமார் இருவராவர் எனவும் மேற்படி இரு மனைவியாலும் சகல யோகத்தையு மடைந்து தன் வயது 36-ல் பாம்புக்கடியால் பரமபதம் அடைவான் என்பது கருத்தாகும். 8

கேளப்பா வச்சிரபங்கி ரேகைமார்க்கம்
கிருபையுடன் சொல்லுகிறேன் பெருமைமெத்த
நாளப்பா வச்சிரபங்கி ரேகைதானும்
நன்றான திரிகோண நடுமையத்தில்
ஆளப்பா ஆள்காட்டி விரலிலேதான்
அன்பாக விருக்குமடா வாய்ந்துபாரு
கேளப்பா விருகோண மிரண்டுபுள்ளி
கொற்றதொரு ரேகையிடங் கோர்வைகாணே.

(இ-ள்.) கேட்பாயாக வச்சிரபங்கி ரேகையின் மார்க்கம் அதைக் கிருபை யொடு சொல்லுகிறேன் அதின் பெருமையானது மெத்த அந்த வச்சிரபங்கி ரேகைத் திரிகோணமாகி நடுமையத்தில் ஆள்காட்டி விரலில் அன்பாகவிருக் கும் அதை ஆராய்ந்து பார்க்கவும் அதில் இரண்டு கோணமும் இரண்டுபுள்ளி யுங்கூடிக் கோர்வையாக யிருக்கில் கைரேகையிட சூரிக்காண்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியால் வச்சிரபங்கி ரேகையினது பலாபலன்களைக் கூறுவாராயினர். அவையாவன, ஆள்காட்டி விரலின் நடுவில் ஒரு ரேகை யும் இரண்டு புள்ளிகளுமாயமைந்திருக்கும். இதனது பெருமை சொல்ல முடியாது என்பது கருத்தாகும். 9

காணப்பா விவனுடைய வலதுகையில்
கனக்கவே வளர்ந்திருக்கும் ரேகைதானும்
ஆனப்பா வலப்பாக மிரண்டுபுள்ளி
அப்பனே யிருக்குமடா மச்சம்ரெண்டு

LuraTech Document Processing Solutions

வாணப்பா வச்சிரபங்கி பெருமைதன்னை
வளமான குபேரியெனும் ரேகைரெண்டும்
தாளப்பா குருசிஷ னாகவேதான்
சார்ந்திருக்கு மென்றுமையுஞ் சொன்னாள் தானே.

(இ-ள்.) காண வலது கையிலிருக்கும் ரேகையானது அதில் வலதுபாகத்தில் இரண்டு புள்ளியும் மச்ச மிரண்டும் இருக்கும். அவ்விதமுள்ள வச்சிர பங்கியின் பெருமைதனை வளமாகிய குபேரி யெனும் ரேகை யிரண்டும் குரு சிஷனாகவும் சார்ந்து இருக்குமென்று உமையவள் சொல்லினாள் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் மேற்படி வச்சிராங்கி ரேகையினது பெருமையினையே கூறுவாராயினர். அவையாவன, இவனது வலதுகையில் இரண்டு புள்ளியும் இரண்டு பச்சமும் இருக்கும். மற்றும் குபேரி என்னும் ரேகைகள் இரண்டமைந்திருக்கும் மேற்படி ரேகையினது குரு சிஷ்யனைப்போன்றிருக்கும் என்பதாம். 10

சொன்னாள் தான் உமையவளும் வதிஷ்டர்க்கப்போ
துரிதமுடன் வதிஷ்டரவர் சுத்தமாக
அன்னாடா ஆயிழையே யுமையேயென்று
அடிவணங்கி மிகத்துதித்து அன்பாய்க்கேட்க
முன்னாடா முனிக்குறைத்த மார்க்கம்போல
முயற்சியுள்ள வுத்தமியும் வுளவாய்ச்சொன்னாள்
வன்னவடா னுரைத்தபடி சொல்வேன்யானும்
மகத்தான ரேகையிட வண்மைகேளே.

(இ-ள்.) சொல்லினள் உமையவளும் வதிஷ்டர் அப்போதைத் துரிதமுடன் வதிஷ்டரானவர் அதைச் சுத்தமாகவும் அடிவணங்கியும் துதித்தும் அன்பாகக் கேட்கச்சொல்வாள். முன்ப முனிக்குறைத்த மார்க்கம்போல் முயற்சியாக உத்தமியாள் சொன்னாள்; அவ்வாறாக யானும் சொல்வேன் ரேகையினுடைய வண்மையைக்கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னை எனின், வச்சிரபங்கி ரேகை என்பது மேற்குறித்தபடி யிருக்கும். எவை செம்மையாய் வசிஷ்டருக்குரைத்தனள் வசிஷ்டருங் கேட்டானந்தித்து வணங்கினார். அதனையே யானிங்கு கூறுகின்றனம் என்பது கருத்தாகும். 11

வண்மையென்ற வச்சிரபங்கி ரேகையோகம்
வகுத்திதனைச் சொல்லுகிறேன் வகையாய்க்கேளு
உண்மையென்ற விவன்பிறந்த யோகவாழ்க்கை
உறுதியாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு

LuraTech Document Processing Solutions

தண்மையென்ற இவ்விரண்டு ரேகையிற்றான்
சாற்றிடுவோம் தமயந்தி ரேகையொன்று
அண்மையென்ற நளச்சக்கிர வர்த்திராஜன்
அன்பான ரேகையொன்று மறிந்துசொல்லே.

(இ-ள்.) வண்மையாகிய வச்சிரபங்கி ரேகையின்யோகம் அதனை வகுத்துச் சொல்லுகிறேன் கேளும். அவ்வித ரேகையுள்ளோன் பிறந்த யோக வாழ்க்கையை உறுதியாகச் சொல்கிறேன் கேளும். தன்மையாகிய இவ்விரண்டு ரேகை யாதெனில் தமயந்தி ரேகை ஒன்று நளச்சக்கிரவர்த்தி ராஜன் ரேகை ஒன்றாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிந்த ரேகையின் பெருமையினைக் கூறுவாராயினர். அவையாவன மேற்படி வச்சிரபங்கி ரேகை இரண்டென்பது ஒன்று தமயந்தி ரேகையும், மற்றொன்று நளச்சக்கரவர்த்தி ரேகை என்பதுங் கருத்தாகும். ஆனதால் அதன் பலாபலனைக் கூறுவேன் கேளுங்கள் என்பது கருத்தாகும் 12

சொல்லப்பா யிவ்விரண்டு ரேகைதானும்
சித்தமாய் இருக்குதென்றாற் றேவனுவான்
அல்லப்பா வாச்சரிய மிவன்றானப்பா
அன்பான ஓர் தாய்க்கோர் மைந்தனாகும்
நல்லப்பா யிவன்யோக சாலிமெத்த
நலமுள்ள யோகவான் நன்றாய்க்கேளு
வல்லப்பா யிவன்பிறந்த நாளுங்கோளும்
வரிசையாய்ச் சொல்லுகிறேன் வண்மைகேளு.

(இ-ள்) சொல்லும்படியாகிய இவ்விரண்டு ரேகையுஞ் சுத்தமாகத்தானே இருக்குமாயின் அவன் தேவனுவன்: ஆச்சரியமுள்ளவனாகும். ஓர் தாய்க் கோர் மைந்தன் அவனாகும்; அவன் யோகத்தில் மிகுந்தவன். இவன் பிறந்தநாளுங் கோளும் வரிசையாகச் சொல்லுகிறேன் வண்மையைக்கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னையெனின் முன்னங்கூறிய தமயந்தி ரேகை நளன் ரேகை என்னு மிவ்விரண்டும் கையிலமையப் பெற்றவர்கள் எவர்களோ அவர்கள் தேவர்களே எனக் கூறத்தகும். இவர்களுக்கு யோக மதிகமானதால் இவன் பிறந்தநாள் கோள் முதலியனவற்றைக் கூறுகிறேன் என்பதாம். 13

கேளப்பா யிவன்பிறந்த வீடதாகும்
கேவலமான சிறுகூரை வீடதாகும்
ஆளப்பா பிறக்கையிலே யொருவரில்லை
அன்பான மாதிவார மிரண்டாஞ் சாமம்

வாளப்பா மாசமது மகரமாகும்
 வண்மையுள்ள துதிகைபிலே பிறந்தான்பாலன்
நாளப்பா உத்திரந்தான் மூன்றதாகும்
 நலமான கிரகநா லுச்சமாமே.

(இ-ள்.) கேட்க மேற்கூறியோன் பிறந்தவீடு ரொம்பவும் சிறியகூரை வீடாகும்; இவன் பிறக்கையில் அருகி லொருவருமில்லை; திங்கட்கிழமை இரண்டாஞ்சாமம் தைமாதம் திதி துதிகை உத்திர நட்சத்திரம் மூன்றும் பாதம் இவன் பிறந்த வேளையாகும்; அப்போது கிரகம் நாலும் உச்சமாகின வாம் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிவன் ஜெனித்த வீட்டினது இலக்ஷணத்தையும் ஜெனனநாள் முதலியனவற்றையுங் கூறுவாராயினர். அவையாவன, பிறந்தது கூரைவீடு எவருமின்றி அகாலத்தில் பிறந்தான். மற்றும் தைமாதம் திங்கட்கிழமை இரண்டாம் சாமத்தில் துதிகையும் உத்திரம் மூன்றும்பாதமும் கூடிய நாளில் நான்கு கிரகங்கள் உச்சம்பெறப் பிறந்தான் என்பதாம். 14

உச்சமென்ற யிவன்பிறந்த ராசிக்குத்தான்
 உறுதியுள்ள நவக்கிரக மொன்பதுக்குள்
மச்சமென்ற சுக்கிரனும் புதனுமின்னம்
 பாங்கான சனியுடனே வியாழனுச்சம்
அச்சமென்ப தொன்றுக்கு மில்லையப்பா
 அன்பான விரவுதனிற் பிறந்தான்மைந்தன்
நிச்சமென்ற நிதியெடுத்து வாழவந்தான்
 நீனிலத்தி லிவன்யோக மில்லையன்றே.

(இ-ள்.) உச்சமாகி இவன்பிறந்த ராசிக்குள் நிற்கும் கிரகம் ஒன்பதில் சுக்கிரன் புதன் சனி வியாழம் இவர்கள் உச்சமாம். இவன் தனக்கு அச்சமென்பது ஒன்று மில்லையாம். இரவில் பிறந்தவன் நிதியானது யெடுத்து வாழவந்தோனாகும். நீநிலத்தில் இவன் யோக மில்லையாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்கு எந்தெந்த கிரகங்கள் உச்சம் என்பதைக் கூறுவாராயினர். அவையாவன, சுக்கிரன் புதன் சனி வியாழன் என்பவராம். இதுவன்றி இவன் இரவிற் பிறந்தவன். இவனுக்குப் பூர்வோத்திர யோகமில்லையாயினும் புதையலை எடுத்துச் சுகித்த வாழவந்தவன் என்பதாம். 15

இல்லையென்ற யிவன்றாய்தான் வமங்கிலியஸ்திரீ
 இயல்பான சிறுவயதிற் கணவன்மாண்டான்
அல்லையென்ற மற்றொருமாப் பிள்ளைக்குத்தான்
 அவதரித்த பாலனிவ னைப்துசொன்னேன்

LuraTech Document Processing Solutions

நல்லையென்ற வக்கணவன் ருய்க்கோர்பாலன்
நலமுள்ளான் றனக்கிவன்ருன் பிறந்தான்காணும்
வல்லையென்ற ஜாதக நாளிற்கூடி
வரிசையா யனுபோகம் செய்ததாலே.

(இ-ள்.) மேற்கூறியோனுடைய தாய் அமங்கலியஸ்திரீயாகும்; சிறுவயதிலேயே கணவன் மரணமடைந்தனன். அவள் மற்றொரு மாப்பிள்ளைக்கு அவதரித்த மைந்தனிவனாகும்; அக்கணவன் ஓர் தாய்க்கு ஓர் பாலனாகும்; அவன் றனக்கு இவன் பிறந்தோனாகும், ஜாதகநாளிற்கூடி அனுபோகஞ் செய்தார் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது தாயின் தன்மையைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் தாயை மாலையிட்டவன் சிறுவயதிற் றனே இறந்து போனான், ஆனதால் இவன்தாய் வேறு புருடனைத் தான் ஸ்நானம் செய்திருக்கும் சமயத்திற் கூடியபோது ஜெனித்தவனே இந்த ஜாதகன் என்பது கருத்தாகும். 16

நாலெனவே ஸ்திரீபுருஷா ளிரண்டுபேரும்
நன்மையுடன் றென்முகமாம் முதற்சாமத்தில்
ஆலெனவே நலமுள்ள வாசஞ்செய்து
அன்பாக ஒருமனதாய்க் கூடினார்கள்
நாலெனவே நல்லமுகம் விழித்ததாலும்
நன்மையுள்ள மைந்தனிவன் றரித்தான்பாரு
பாலெனவே பைங்கிளியாள் பெற்றபாலன்
பாக்கியங்கண் மிகப்பெறவே பிறந்திட்டானே.

(இ-ள்.) நாளாகத்தானே ஸ்திரீபுருஷாள் இரண்டு பேரும் தென்முகமாகச் சயனித்து முதற்சாமத்தில் இருவரும் ஒரு மனதாகத்தானே கூடினார்கள்; கூடியும் அவள் நல்லமுகத்தில் முழித்ததாலும் நன்மையாகிய இந்தப் பாலன் தரித்தான். அந்த பைங்கிளியாள் பெற்றபாலன் பாக்கியங்கள் மிகவும் பெறப்பிறந்தான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னை எனின், மேற்சொன்னபடி இவனது தாய் தந்தையரிருவரும் இரவு முதற்சாமத்தில் நல் வாசனைவீசப் புணர்ந்து ஏகமனதாயிருந்து நல்லோர்கள் முகத்தில் விழிக்க வெழுந்ததால் இவ்வித யோகம் உண்டாகும் வண்ணமாய்ப் பிறந்தனர் என்பதாம். 17

பிறந்திட்ட இவன்ருய்தா னுத்தமிப்பெண்
பிரியமுள்ள பிதாவுந்தான் பாஞ்சாலன்பேயன்
அறிந்திடவே ஆஸ்தியில்லை இவனுக்கப்பா
அன்பான சீவனுந்தான் கூலிநாளி

வறிந்திடவே பொய்சொல்லா பிதாவுமாதா
  வஞ்சனைகள் கொலைகளவு செய்யமாட்டார்
சறிந்திடவே சற்சனரா முத்தமியாமங்கை
  சாபத்தான் முன்கணவ|னிறந்தான்பாரே.

(இ-ள்.) பிறந்த இவன் தாய் உத்தமியாகும்; இவன் பிதாப் பாஞ்சாலன் பேயன்; இவனுக்கு ஆஸ்திபானது ஒன்றுமில்லை; சீவனம்கூலிநாலி செய்துப் பிழைப்பன். மாதா பிதா பொய்சொல்லாதவராகிய வஞ்சனை முதலாகிய கொலை களவு யாதொன்றும் புரியாத சர்ச்சனராகுவர். தாயார் உத்தமியான மங்கை. அவளுக்குச் சாபத்தினல் முன்கணவனிறந்தான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனில், இவனது தாயா னவள் மகா உத்தமியேயாயினும் இவளது முற்கர்மத்தால் தன் முதல் கணவன் இறந்துபோனுயினும் இந்த ஜாதகனது பிதாவோ பாஞ்சால அரசன் எனவே கூறவேண்டும். மற்றும் இவர்கள் மகா உத்தமர்களும் பஞ்சமா பாதகங்களைச் செய்யாதவர்களுமாகும் என்பதாம். 18

பாரடா வச்சிரபங்கி ரேகை மந்தா
  பராபரத்தின் கிருபையினு லவதரிப்பான்
காரடா உமையவளை யநேகநாளாய்
  காட்சிபெறக் காத்திவன்ருன் றெழுததாலே
கூறடா குணமுள்ள பாலனென்று
  கொடுத்தான்பார் பாக்கியங்கள் கூர்மையாக
வாரடா பூலோகந் தன்னிற்சென்று
  வண்மையுள்ள பாலகனுப் பிறப்பித்தாளே.

(இ-ள்.) பார்க்க வச்சிரபங்கி ரேகையுள்ளவன் பராபரத்தின் கிருபையி னல் அவதரிப்பன். இவன் உமையவளை அநேக நாளாகக் காட்சிபெறக் காத்திவனும் தொழுதலால் கூறத்தக்கக்குணமுடையப் பாலனென்றுகொடுத் தார் பாக்கியங்கள்யாவும் கூர்மையாகத்தானும்; அன்றியும் சொல்வார் பூலோ கத்தினிற்சென்று வண்மையுள்ள பாலகனுகப் பிறக்கவும் வரம் தந்துப் பிறப் பித்தார் எ-று.

(வி-ரை.) இங்கு கூறிய வஞ்சிபங்கி ரேகையுடன் பிறந்தவன் எப்படிப் பட்டவன் எனில் முன் ஜென்மத்தில் உமையவளைத் தொழுததின் காரணத் தால் உமாமயேஸ்வரன் கருணைகூர்ந்து மகாபாக்கியமுடையவனும் இவ் வுலகில் ஜெனிக்கும்படி கருணைகூர்ந்தார் என்பதாம். 19

பிறக்கவுந்தான் பிதாவினிடத் துயரம்போச்சு
  பிறபலமாய் மாதாவும் வாழலாச்சு
உறத்கவுந்தா னிவனுடைய யோகந்தன்னை
  உண்மையாய்ச் சொல்லுகிறே னுகந்துகேளு

LuraTech Document Processing Solutions

பறக்கவுந்தான் பாடுமிகப் படவுமாட்டேன்
பார்வதியாள் தான்கொடுத்த பாக்கியத்தாலே
சிறக்கவுந்தா னரிமாலுங் கடாட்சம்வைத்து
சிதம்பரத்திற் பிறப்பித்தார் சீராய்த்தானே.

(இ-ள்.) மேற்கூறிய பாலன் பிறந்தவுடன் பிதாவினுடையத்துயரமானது போச்சு; பிரபலமாகத் தாயாரும் வாழலாச்சு, இவனுடைய யோகத்தைச் சொல்கிறேன் கேளும். இப்பாலன் பாடுபடமாட்டான் என்தாய் பார்வதியாள் கொடுத்திருக்கும் பாக்கியத்தினாலும் மாலுடைய கடாட்சத்தினாலும் சிதம்பரத்திற் பிறந்தான் சீராகவும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவதென்னவெனில், இந்த ஜாதகன் பிறந்தவுடனேயே இவனது தாய் தந்தையர்களுக்குள்ள துன்பம் யாவும் ஒழிந்துபோயின வென்பதாம். இவை யாது காரணத்தால் எனின் விஷ்ணு முதலாகிய தேவர்களும் பராசத்தியும் கருணைகூர்ந்ததாலேயாகும் என்பதாம். 20

ஆகவே யிவனுருவஞ் சிவந்தவர்ணம்
அன்பான விவன்றலையிற் தனஞ்செயனென்று
பாகவே இரண்டுசுழி கூடிநிற்கும்
பண்பான விவன்கண்ணுஞ் சிறுத்திருக்கும்
வாகவே வலக்காற்ற னுகந்துகாணும்
வண்மையுள்ள யிவன்தேக மெல்லியாகும்
தாகவே யிவன்தேகம் தூக்கமைந்தா
தருவான பலமதுதா நூற்றருபதாமே.

(இ-ள்.) ஆகவும் இவனுடைய உருவம் சிவந்த வர்ணமாகும். இவனுடையத் தலையிலும் தனஞ்செயனென்றுச் சொல்லும்படியாக இரண்டு சுழியானதுகூடி நிற்கும்; இடதுகண் சிறுத்திருக்கும் வலதுகால் உகந்துகாணும், இவனுடைய தேகம் ஒல்லியாகும்; இவனைத்தூக்க பாரம் நூற்றருபது பலமிருப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது அடையாளம் முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் சிவந்த நிறமுடையவனும் அருச்சுனனைப் போன்று தலையில் இரண்டு சுழிகளுடை வனாகி இடக்கண் சிறுத்து தேகம் சிறுத்து 160 பலம் பலமுடையவனாகி யிருப்பான் என்பதுவேயாகும். 21

ஆமெனவே யிவனுடைய வலதினிடைத்துடையில்
அன்பான மச்சமென்ற ரூபமாகும்
வாமெனவே மேனியெங்கும் பூமயிர்தானப்பா
வற்பமாயச் சனம்வளருந் திடவான்பாரு

UniTech Document Processing Solutions

காமெனவே புலாலுடனே போஜனந்தான்
கருதியிவ னருந்தான்பார் கருணையுள்ளோன்
நாமெனவே யிவன்றான்பார் பழங்கடன்னை
நலமாகப் புசித்திடுவர் னன்மையாமே.

(இ-ள்.) மேற்கூறிய இன்னோனுடைய துடையில் மச்சமென்ற ரூபமாக விருக்கும். இவன் தேசமெங்கும் பூமயிர் தோன்றி யிருக்கும்; அற்பமாகிய சனம் வளருந்திடவான். புலாலுடன் போசனம் புசியான், கருணையுள்ளவன்: இவன் பழங்கள் தன்னைப் புசித்திருப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் சரீர அமைப்பையும் தன்மையினையுங் கூறுவாராயினர். எப்படி எனில் வலது துடையில் மச்சமுடையவனாகி உடலெங்கும் மெல்லிய ரோமம் உடையவனாகி அனேக பந்துக்களை யுடையவனாய் புலாலருந்தாது சத்துவபோஜனம் செய்பவனாவான் என்பதாம். 22

நன்மையப்பா இவன்விர்த்தி கோபியாகும்
நலமுள்ளான் சீலமுட னடப்பான்பாலன்
அம்மையப்பா வரனுரைப் போற்றிசெய்யான்
அன்பான சிவபூசை மறக்கான்பாரு
வண்மையப்பா யிவன்கோத்திரம் விளங்கச்செய்வான்
வம்மிசத்தை மறக்காம னடத்திடுவானப்பா
இம்மையப்பா யிவன்பிறவி முதற்சனனந்தன்னில்
இகத்திலன்ன பட்சியதாய்ப் பிறக்கின்றானே.

(இ-ள்.) நன்மையாகிய விருத்தியுடையவன் கோபியாகும் நலமுடையவன். சீலமுடன் நடப்பான். அம்மையோடு அரனுரையும் பூசை செய்குவான்; ஒருக்காலும் சிவபூசையை மறக்கமாட்டான்; இவனுடையக் கோத்திரத்தை விளங்கச் செய்குவான். வமிசத்தாரை மறக்காமற் காப்பான். இவனுடைய பிறவி முதல் ஜென்மத்தில் இகத்தில் அன்னபட்சியாகப் பிறக்கின்றான் எ-று.

(வி.ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னவெனில், இவனது முன் சனனத்தில் அன்னப்பக்ஷியெனக் கூறுவதோடு இப்பிறவியில் கோபியாயும் சீலமுடையவனாயும் சிவனை மறவாது தனது கோத்திரத்தை விளங்கச் செய்யுந் தன்மையுடையவனாவான் என்பதாம். 23

பிறக்கவே யன்னமொழிந் திவன்றானப்பா
பிரபலமாய் வச்சிரபங்கி ரேகையோடு
திறக்கவே யிவன்பிறந்தான் யோகசாலி
தீரமுள்ளான் யிவன்யோகம் செய்பக்கேளு

துறக்கவே யிவன்பிறந்த நான்காமாதம்
துறவான யிவன்பிதா வோரிடத்தில்
கறக்கவே மலபாதை செய்யும்போது
கண்டெடுத்தான் நிதியொன்று செம்புதானே.

(இ-ள்.) பிறந்து அன்னபட்சியின் ரூபமழிந்து வச்சிரபங்கி ரேகையோடு பிரபலமாகத்தானே இவன் பிறந்தான். யோகசாலியாகவும் பொருளுடையவன்; இவனுடைய போகத்தைச் சொல்லமுடியாதாம். இவன் பிறந்த நான்காம் மாதம் இவனுடையத் தகப்பன் ஓரிடத்தில் மலபாதைச் செய்யும்போது கண்டெடுத்தான் நிதியானதொன்றுச் செம்பாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது பிதாவுக்கு உண்டாகும் யோகத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, மேற்படி பிதா இவன் பிறந்த நான்காம்மாதம் மலவிசர்ச்சனம் செய்யும்போது ஓர் புதையற்பொருளைக் கண்டெடுத்தான். ஆனதால் அன்றுமுதல் மிக்க யோகமுடையவனாகி வாழ்ந்து வந்தான் என்பதாம். 24

தானென்ற யிவனுடைய சகோதரங்கள்
தயவாக வைந்துபேர் பிறப்பாரப்பா
வானென்ற வாண்மூன்று பெண்ணிரண்டு
வரிசையாய்ப் பிறப்பார்கள் வண்மையாக
ஊனென்ற விவன்பிறவி நல்லபேர்கள்
உத்தமர்களாய்ப்பிறந்தார் துணைவரப்பா
ஏனென்ற வில்லறத்தின் துயரம்போச்சு
என்னசொல்வே னிவனுடைய பெருமைதானே.

(இ-ள்.) இவனுக்குச் சகோதரர்கள் ஐந்துபேர் பிறப்பார்கள்; வண்மையுடையவராகவும் அதில் ஆண் மூன்று, பெண் இரண்டும் வரிசையாகத் தானே பிறப்பார்கள்; இவனுடைய பிறவி நல்லோராகவும், உத்தமராகவும், பிறந்தார்; துணைவர்கள் இவனுடைய இல்லறத்தின் துயரமானது போய்விடும். இவன் பெருமையை யென்சொல்வேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவதென்னை எனின், இவனுடன் பிறப்பவர் ஐவருள் ஆண் 3, பெண் 2 எனவுங் கூறியதாம். மற்றும் இவனுடன் பிறந்தவர்கள் மகா உத்தமர்களும் நல்லவர்களுமாவர் என்பதாம். 25

தேனடா யிவன்பிறந்த பத்தாமாதம்
தயவான விவன்மாதா புஞ்சைகொய்ய
வானடா வவள்சென்ற விடத்தில்வாய்க்கால்
வளமாக வுண்டதிலோர் செம்புகண்டாள்

ஊனமடா மங்கையது யெடுத்துநல்ல
உற்பனமாம் புஞ்சைகொய் துடனேவந்தாள்
ஆனடா அவளெடுத்த செம்பிற்சொர்னம்
அதிகமா யிருந்ததைக்கொண் டழகாய்வாழ்ந்தார்.

(இ-ள்.) இவன் பிறந்த பத்தாம் மாதம் இவன் தாயார் புஞ்சையானது கொய்ய, அவள் சென்றவிடத்தில் ஒரு வாய்க்காலுண்டு; அதில் ஓர் செம்பு கண்டு அம்மங்கை அதனை யெடுத்துப் புஞ்சையானது கொய்து உடனே மனைக்கு வந்து பார்க்க செம்பு சொர்ணமாக மாரியதை வைத்துக்கொண்டு அழகாகத் தானே வாழ்ந்தார்கள் எ-று.

(வி-ரை.) இக்கவியா வினவனது தாய்க்குண்டாகும் யோகத்தைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் பிறந்த மாதத்தில் இவன் தாயானவள் புஞ்சைக் களை யெடுக்கும்போது அங்கு ஓர் செம்பு நிறைய சொர்ணத்தைக் கண்டு அதை எடுத்து வந்து மிக்க மேன்மையுடன் வாழ்ந்து வந்தனர் என்பதாம். 26

வாழ்ந்திடவே மைந்தனுக்கு கன்னிகாயோகம்
வளமையான் மிகவாழ்ந்தான் மைந்தனப்பா
ஆழ்ந்திடவே இதனுடைய யோகவாழ்க்கை
அறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் பிர்மதேவர்
தாழ்ந்திடவே தலைவணிவ னனேகம்பேர்கள்
தாள்வணங்கி தொழுதுநிற்பார் தலைவனுக்கு
ஆழ்ந்திடவே யிவன்வயதோ ரைம்பதுக்குள்
நலமான மனைநாலு வெடுத்திட்டானே.

(இ-ள்.) வாழ்க்கையில் மேற்கூறிய பாலனுக்குக் கன்னிகாயோகமானது வாய்க்க வளமையாகத்தானே மிகவும் வாழ்வுண்டாகி வாழ்ந்தான் அதனுடைய யோகவாழ்க்கையை அறிந்தமட்டும் சொல்கிறேன்; பிரமதேவர் இத் தலைவனுக்கு அநேகம்பேர்கள் தாள் வணங்கித் தொழுது நிற்பார்கள்; இவன் வயது அன்பதுக்குள் நாலுமனையானது யெடுப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவன் கருத்தாவ தென்னை எனின், இவனுக்குண்டாவது கன்னிகா யோகம் எனவும், பிரம்ம தேவனால் இவனுக்கு விதிக்கப்பட்ட தென்னை எனின், இவனிடம் அநேகர் வந்துத் தலைவணங்கித் தாழவென்றும் இவன் வயது 50-க்குள் நான்கு மனைகளைக் கட்டுவான் எனவுங் கூறுவாய் என்பதுவே யாகும். 27

எடுத்திடவே குதிரைகட்ட மைந்தன்தானும்
ஏகமுள்ள லாயந்தான் கட்டும்போது
வடுத்திடவே மண்வாங்கி வெட்டும்போது
வளமான வம்மனையிற் காதுவைத்த

தொடுத்திடவே கொப்பரையுண் மைந்தன்தானும்
துகையுளறு பத்துலட்சம் பொன்னெடுத்தான்
அடுத்திடவே யிளையவளும் வாலையிட்டு
அன்பான விவன்வீட்டி லிருந்திட்டாளே.

(இ-ள்.) மேற்கண்டபடி யெடுத்தபின் குதிரையானது கட்ட இலாயமானது கட்ட மண்வாங்கி வெட்டும்போது அம்மனையிற் காதுவைத்த நிதியுடையக் கொப்பறையில் அறுபது லட்சம் பொன்னெடுத்தான்; அப்போது இளையவளாகிய இலட்சுமி இவன் வீட்டில் வந்திருந்திட்டாள் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிந்த ஜாதகனுக் குண்டாகும் யோகத்தினைக் கூறுவாராயினர். எப்படி எனில், இவன் குதிரை லாயம் கட்ட மண்ணைத் தோண்டுகையி லவ்விடம் பத்துலக்ஷம் பொன் அடங்கிய கொப்பரை யொன்றிருந்தன வாதலால் அதனை இந்த ஜாதகன் எடுத்து லக்ஷிமிவிலாச முடையவனாகி வாழ்ந்திருந்தான் என்பதாம். 28

இருந்திடவே யிளையவளும் பிரியாமற்றான்
இவனில்லை யறுபத்தெட் டாண்டிருந்தான்
வருந்திடவே வாலையுடை யீந்தபாக்கியம்
வம்மிசத்தை மெத்தவும்பெருகி வாழ்ந்திட்டார்கள்
பொருந்திடவே பூலோகந் தன்னிலேதான்
போகமுட னிவன்றானும் வாழ்வதாகும்
சரிந்திடவே சாயுச்சியம் பெற்றபாலன்
சற்குணவான் பெறும்போகந் தனைச்சொல்வேனே.

(இ-ள்.) இருகத்தானே இலட்சுமியும் பிரியாமல் இவன் வீட்டில் அறுபத்தெட்டு வருடமிருப்பாள்; இந்த பாக்கியத்தினால் வம்மிசத்தோடும் பெரும் வாழ்வு வாழ்ந்திருந்தார்கள்; பூலோகமதனில் இவன் வாழ்வு யோகபாக்கியமாகும் சாயுச்சியம் பெற்ற இப்பாலன் பெரும்யோகஞ் சொல்வேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவ தென்னவெனில், மேற்கூறியபடி மகா யோகமுடையவனாகி தன் வயது 68-வரையில் எவ்வித குறைவும் அற்றவனாகி வாழ்ந்திருந்து சாயுச்சியம் எய்தினன் என்பதுவேயாகும். 29

சொல்வனப்பா வச்சிரபங்கி ரேகையாகும்
செகத்திலே பெரிதப்பா நலங்கள்கேளு
அல்லுவேன் அஷ்டசித்தா டிடுவான்மைந்தன்
அன்பனிவன் சிவபூசை செய்வானப்பா

நல்லுறவா யிவனுக்குத் தாரம்ரெண்டு
நலமாகப் பன்னிரண்டு தனிலேயாச்சு
இல்லவே யிவன்வயதோ பதினாறுக்குள்
இயல்பான தாரமிரண்ட தாச்சுப்பாரே.

(இ-ள்.) சொல்லும்படியாகிய வச்சிரபாங்கி ரேகை செகத்திற் பெரிதாகும். அதின் நலங்களும், இவ்வித ரேகையுடையோன் அஷ்டசித்துக்களாடுவன். அன்பனுகச் சிவபூசை செய்குவன்; நல்லவுறவாகத்தானே தாரம் இரண்டுண்டாம். வயது பன்னிரெண்டில் விவாகமாகும். வயது பதினாறுக்குள் இரண்டாவது விவாகமுமாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது மனைவி விவாதத்தையும் இவன் தன்மையினையுங் கூறியுள்ளனர். அவையாவன, இவனுக்கு மனைவி இரண்டுள் முதல் விவாகம் 12-லும் இரண்டாம் விவாகம் 16-லும் என்பதாம். மற்று மிவன் வாழ் நாட்களில் அஷ்டமாசித்தையும் செய்பவனுகி சிவபூஜை செய்யுந் தன்மையுடையவனுகி விளங்குவான் என்பதாம். 30

பாரடா விவனுக்குப் புத்திரபாக்கியம்
பக்குவமா யன்பதொன்ப தாண்டுக்குள்ளே
ஆரடா பிள்ளைகளைந்துண் டாச்சுதப்பா
அதிலேமூன் றிறந்திரண்டே வாழாநிற்கும்
காரடா வவையிலொன்றாண் பெண்ணொன்றாகும்
கனக்கவே நிலைத்ததப்பா கருணையாக
சீரடா வவனுக்கு கெண்டாந்திரமைந்தாம்
சிறப்பாக வேழுகெண்டம் நடக்கும்பாரே.

(இ-ள்.) பார்க்க இவனுக்குப் புத்திரபாக்கியம் அன்பத்தொன்பதாம் வருஷத்திற்குள் பிள்ளைகள் ஐந்துண்டாகும்; அதில் மூன்று இறந்துபோய் இரண்டு வாழாநிற்கும்; அதில் ஆண் ஒன்று, பெண் ஒன்றாக நிலைத்ததாம்; இவனுக்கு கெண்டம் ஏழுண்டாம்.

(வி-ரை.) இக்கவியா லிவன் புத்திரர், கெண்டம் முதலியனவற்றைக் கூறுவாரியினர். எப்படி எனில், இவன் வயது 59-க்குள் புத்திர புத்திரிகள் ஐந்து எனினும், அதில் ஓர் ஆணும் ஓர் பெண்ணுமே நிலைத்திருக்கும். மற்று மிவனுக்கு ஐந்து அல்லது ஏழு கெண்டங்கள் உண்டாகும் என்பதாம். 31

பாரப்பா யிவனுக்கு கெண்டம்வந்த
பருவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
சீரப்பா யிவன்வயதோ றறிலேதான்
சிறப்பாக வக்கினியாற் கெண்டமொன்று

LuraTech Document Processing Solutions

காரப்பா வயதிருபத் திரண்டிலேதான்
கனக்கவே நீராலே கெண்டமொன்று
வீரப்பா யிவன்வயதோ ரிருபத்தாறில்
வியாதியால் மெத்தவுந்தன் மெலிவான்பாரே.

(இ-ள்.) பார்க்க இவனுக்குக் கெண்டமானது வந்தப் பருவத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக; இவன் வயது ஆறில் அக்கினியாற் கெண்டமொன்று நேரும், வயது இருபத்திரெண்டில் சலத்தால் கெண்டமொன்று நேரும், வயது இருபத்தாறில் வியாதியால் மெத்தவும் மெலிவான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் கெண்டமும் அதன் வயதைக் கூறுகின்றனர். எப்படி எனில் 6-ல் அக்கினியாலும் 22-ல் ஜலத்தாலும் 26-ல் வியாதியாலும் கெண்டம் உண்டு என்பதாம். மற்றுமுள்ள கெண்டங்கள் பின்வருமாறு. 32

பார்க்கவே யிவன்வயதோர் நாற்பத்தாறில்
பன்மையுள்ள மரப்பலகை மேலேவீழும்
ஆர்க்கவே யுடலிலே காயம்பட்டு
அன்பான மாசமூன் றிளைப்பான்பாரு
ஏர்க்கவே ஐம்பத்தி நாலிலேதான்
இயல்பான குதிரைமே லேறிவீழ்ந்து
கார்க்கவே சற்புத்திரன் மாதமூன்று
சகசமாய் மைந்தனிவன் மெலிவான்பாரே.

(இ-ள்.) பார்க்க வயது நாற்பத்தாறில் மரப்பலகையானது மேலே விழும்; அதினால் உடலில் காயமானதுப் பட்டு மூன்றுமாதம் பாதைப்பட்டு இளைப்பன்; வயது அன்பத்திநாலில் குதிரையின்மீது யேறிவீழ்ந்து மூன்றுமாதம் பாதையால் மெலிந்திருப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் மேற்படி கெண்டாதி கெண்டங்களையே கூறுவாராயினர். அவையாவன, வயது 46-ல் ஓர் மரப் பலகை மேல் விழுதலால் மூன்றுமாதம் வரையில் துன்பப் படுவன். வயது 54-ல் குதிரை மேலிருந்து வீழ்தலால் மூன்று மாதங்கள் வரையில் துன்பப்படுவான் என்பதாம். 33

பாரென்ற விவன்வயதோ ரறுபத்தெட்டில்
பாங்கான சக்கரத்தி னமைப்பால்மைந்தா
வீரென்று வயதிருபத் தெட்டிலேதான்
விதிமுறையாப் பிதாவினுக்குக் கருமஞ்செய்வான்

காரென்ற வயதப்பா முப்பத்தொன்றில்
கனக்கவே மாதாவின் கருமமாகும்
ஊரென்ற விவன்முப்பத்தி ரெண்டாமாண்டில்
உற்றதொரு விவாகமது வாகும்பாரே.

(இ-ள்.) பாங்காகிய சக்கரத்தின் அமைப்பினால் பார்க்க இவனுக்கு வயது அறுபத்தெட்டு. வயது இருபத்தெட்டில் பிதாவினுக்கும், முப்பத்தொன்றில் தாய்க்கும் கருமம் செய்வன்; இவன் வயது முப்பத்திரண்டில் விவாகமாகும்.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னவெனின், இவனுக்கு வயது 68-எனவும், 28-ல் பிதாவும், 31'ல் மாதாவும் மரணமாவர் எனவும் கூறிய துடன், முன்னங் கூறிய 30-ஆம் கவியின்படி வயது 16-ல் இரண்டாம் விவாகம். இல்லை எனின், 32-ஆம் வயதில் மேற்படி இரண்டாம் விவாகம் நடக்கும் என்பது கருத்தாகும். 34

பாரடா முற்சனனந் தன்னிலப்பா
பக்குவமா யன்னமென்ற பறவையாகும்
காரடா வதின்பின் வேதியனாய்வந்தான்
காட்சிபெற விப்பிறப்பிற் சூத்திரனானன்
கூரடா விவன்மைந்தா குபேரன்போலே
கூர்மையாய்ப் பிறந்தவரும் வாழ்வார்பாரு
ஊரடா விவன்யோகம் மயேந்திரயோகம்
உத்தமனும் வாழ்வனிவ னுறுதிசொன்னேன்.

(இ-ள்.) பார்க்க இவன் முன்ஜென்மத்தில் அன்னப்பட்சியாகும். அதன் பின்பு வேதியனாகப் பிறந்தான். காட்சியானது பெரும்படியாக இப்பிறப்பில் சூத்திரனாகப் பிறந்தான்; கூறுதற்கு இவன் குபேரனைப் போலிருப்பன்; இவனைப் பெற்றவரும் அப்படியே வாழ்குவர். இவன்யோகம் மயேந்திரயோக மாகும். உத்தமனாக வாழ்குவன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனது ஜனனக் கூற்றினைக் கூறுவாராயினர். எப்படியெனில், முன் ஜனனத்தில் அன்னப்பறவையும் இரண்டாம் ஜனனத் தில் பிராமணனும், இந்த ஜனனத்தில் சூத்திரனும் பிறந்தான் என்பதாம். மற்றும் இவன் மகா யோகமுடையவன் என்பது கருத்தாகும். 35

சொன்னேனப்பா விவன்றானும் அனேகபூமி
சொர்னமதைக் கொடுத்திவனும் வாங்குவான்பார்
அன்னப்பா விவன்றேவி மயில்போ லுள்ளாள்
அழகுள்ள ஸ்திரீயாகு மறத்தைப்பேணும்
வன்னப்பா குயில்மொழிதான் முதலாஞ்சாதி
வங்கிஷமு நல்லதப்பா வறிந்துசொன்னேன்
கன்னதப்பா தருமத்தை மறவாச்சீலன்
காட்சிபெற்ற மைந்தனென்றே கருதுவாயே.

(இ-ள்.) சொன்னவண்ணம் இவனும் அனேகம் பூமிகளைச் சொர்னம் கொடுத்து வாங்குவான். இவனுடைய தேவியானவள் மயில்போன்ற சாயலுடையாள்; அழகுடையவள்; தருமம்புரிவள். குயில்போல் மொழியுடையவள். முதல்வகுப்பு உத்தம ஸ்திரீயாகும். வங்கிஷம் நல்லவள். இவனும் தருமத்தை மறவாத சீலனாகுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது மனைவியின் மேன்மையினைக் கூறுவாராயினர். எப்படி எனில்? இவன் மனைவியானவள் நற்குலத்திற் பிறந்தவளும் முதற்சாதியும், தருமம் செய்பவளும், மயில்போன்ற சாயலும், குயில்போன்ற மொழியும் உடையவளாவள். இந்த ஜாதகனும் தருமத்தை மறவாதான் என்பதாம். 36

வாயென்ற விவனுடைய வம்சமூன்றும்
வண்மைபொரு ளழியாமல் வாழ்வாரப்பா
ஆயென்ற வற்புதம்போ லுமையாள் தந்த
அன்பான பாக்கியமிதென் றறிந்துபாரு
சாயென்ற விவனுடைய தம்பிமார்கள்
சற்சனராய் வாழ்ந்திருப்பார் தயவுள்ளோர்கள்
ஏயென்ற வெம்பிரா னருளினாலே
எய்திடும்பார் சகலசௌ பாக்கியந்தானே.

(இ-ள்.) இவனுடைய பின்வம்சங்கள் மூன்றும் வண்மையாகிப் பொருளானது அழியாமல் வாழ்வார். அற்புதமாகத்தானே உமையாள் தந்த பாக்கியமாமென்று அறிந்திடுவாய்; இவனுடைய தம்பிமார்கள் சர்ச்சனராகியும் தயவுள்ளோராகியும் வாழ்ந்திருப்பார்கள். அன்றியும் எம்பிரானுடைய அருளினால் சகல சவுபாக்கியமும் பெருகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னை எனின், மேலே சொன்ன யோகமானது இந்த ஜாதகன் முதல் மூன்றுதலைமுறைகள் வரையில் குறைவுபடா திருக்கும் எனவும், இவனது தம்பிமார்களுங் கூட மிக்க நன்மையும் புகழும் உடையவர்களாகி வாழ்ந்திருப்பர் என்பதாம். 37

தானென்ற தத்துவங்கள் படிப்பான்மைந்தன்
தயவாக சகலகலைக் கியானம்பார்ப்பான்
வானென்ற வச்சிரபாங்கி ரேகையாலே
வண்மையாய் மாடமா ளிகையுங்கட்டி
ஊனென்ற தண்டிகை யேறிமைந்தன்
உற்பனம்போற் பெரியவனாய் வாழ்ந்திருப்பான்
ஆனென்ற வரசர்முத லுலகத்தோரும்
அற்புதமாய்க் கார்த்திருப்ப ரடிமையென்றே.

(இ-ள்.) தானெனும் தத்துவங்கள் யாவும் படிப்பன். சகலகலைக்கியானமும் பார்ப்பன். வச்சிரபாங்கி ரேகையினால் வண்மையாகிய மாடமாளிகை கட்டியும் தண்டிகைமீதேறி பெரியோனாக வாழ்ந்திருப்பன்; அரசர் முதலாகிய உலகத்தோரும் அடிமையாகக் காத்திருப்பர் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிந்த ஜாதகனது யோகத்தைக் கூறுவாராயினர், அவையாவன, அரசர்முத லனைவரும் இவனை வணங்குபவராயும், சகல கலைக் கியானங்களையும் தத்துவங்களையும் ஆராய்ச்சி செய்பவனாகி, மாடமாளிகை கட்டித் தண்டிகையி லூர்ந்து செல்லும் தன்மை யுடையவனாகி யிருப்பன் என்பதாம். 38

என்றெனவே இவன்பிதா யோகத்தாலே
ஏற்றமுள்ள மகனிவன்றான் பிறந்தானப்பா
குன்றெனவே இவன்றானும் ஈஸ்பரனைநோக்கி
குணமாகக் குறித்திவன்முன் றவஞ்செய்தான்
வன்றெனவே ஈசனருட் பெற்றுமைந்தன்
வரம்வாங்கிப் பிறந்ததினால் பாக்கியம்பெற்றான்
இன்றெனவே யீஸ்வரியாள் கிருபையாலே
இகத்திற் குபேரனைப்போல் வாழ்ந்திருப்பான்பாரே.

(இ-ள்.) இவனுடைய பிதாவின் யோகத்தால் ஏற்றதாகிய மைந்தனிவன் பிறந்தான். இவன் ஈஸ்வரனை நோக்கிக் குணமாகத்தானே குறித்து தவம் புரிந்து ஈஸ்வரனுடைய அருளானது பெற்று, வரத்தோடும் பிறந்ததினால் பாக்கியமானது பெற்றான். இப்பவும் ஈஸ்பரியாள் கிருபையால் இகத்தில் குபேரன்போல் வாழ்வுண்டாயிருப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னை எனின், இவன் தனது முன்ஜென்மத்தில் ஈஸ்வரனை நோக்கித்தவம் செய்து இப்பிறவி எடுத்தவனாதலால் ஷை ஈசன்கிருபையால் லக்ஷ்மிகடாக்ஷம் பொருந்தியவனாகி வாழ்ந்து வந்தான் என்பதே இக்கவியின் கருத்தாகும். 39

பாரென்ற வச்சிரபாங்கி ரேகையின்றன்
பலனெல்லாம் விபரமுடன் பகர்ந்தேனனும்
காரென்ற காட்சிகளும் யோகவாழ்வும்
கைமுறையாய் வேதம்போற் சொன்னேன்மைந்தா
சீரென்ற ஜகந்தனிலே யறிந்துநீயும்
செப்புவீர் கும்பமுனி செப்புகின்ற
ஆரென்ற வைம்புலன்க ளறிந்தஞான
அகஸ்தியரென் றம்மையவ ளருளினாளே.

(இ-ள்.) பாரென்னும்படியான வச்சிரபாங்கி ரேகையின் பலன்கள் யாவும் விபரமாகப் பகர்ந்தேன்; காட்சியும் யோகமும் வாழ்வும் கைமுறையாக வேதம்

போற் சொன்னேன். இதை ஜெகத்தின்மீது நீயறிந்து சொல்வாய். கும்ப முனிவர்சொன்ன ஆறென்னும்படியான ஐம்புலன்களையறிந்த ஞான அகஸ்திய ரென்று அம்மன் அருளினுள் எ-று.

(வி·ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னை எனின், இங்குக் கூறும் வச்சிரபாங்கி ரேகைக்குரிய யோகம், வாழ்வு ஆயுள் முதலிய அனைத்தும் குறை வின்றி உள்ளதை உள்ளபடியே கூறிவிட்டேன். ஆனதால் இதனை மிக்க சூக்ஷமமாய் அறிந்து தெரிந்து சொல்ல வேண்டுவது கடமை என்பதாம். கீழ்வருங் கவி முதல் பஞ்சவர்ண குடோரி ரேகையினது பலாபலன்களைக் கூறுகின்றனர் 40

பஞ்சவர்ண குடோரி ரேகையின் பலன்

அருளுகிறே னின்னமொரு ரேகைமைந்தா
  ஆச்சரிய முள்ளதிந்த ரேகையப்பா
வருளுகிறேன் பஞ்சவர்ண குடோரியொன்று
  வகையான நடுக்கரத்தி லிரண்டுகீறு
பொருளுகிறேன் பூதபாண்டி ரேகையொன்று
  பெருமையாய்ச் சிறுவிரலி லேறிநிற்கும்
திருளுகிறேன் பஞ்சவர்ண குடோரியப்பா
  திரிகோண மைந்திதழா யிருக்கும்பாரே.

(இ-ள்.) அருளுகின்றேன் இன்னமொரு ரேகை, அதுவோ ஆச்சரிய முள்ளது; அதாவது, பஞ்சவர்ணக் குடோரி என்பதாம். அது நடுக்கரத்தில் இரண்டு கீறு உள்ளதாம். பூதபாண்டி ரேகையானது சிறுவிரலில் ஏறிநிற்கும். பஞ்சவர்ணக் குடோரியானது ஐந்திதழாகவும் திரிகோண மாகவு மிருக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மூன்று ரேகையிருக்கு மிடங்களைக் குறித்துக் கூறியுள்ளனர். அவையாவன, பஞ்சவர்ண குடோரி ரேகை என்பது, நடுக் காத்தி லிரண்டு கீற்றுடனிருக்கும். பூதபாண்டி ரேகை என்பது சிறுவிரலி லிருக்கும். பஞ்சவர்ண குடோரி என்பது திரிகோண வடிவமாய் ஐந்திதழா யிருக்குமென்பது கருத்தாகும். 41

பாரப்பா நடுவிரலின் முழுதுமேறி
  பாங்கான விதமுடனே நிற்கும்பாரு
காரப்பா பஞ்சவர்ணக் குடோரிகண்டால்
  கருத்துறவே யிவன்யோகக் கருணைகேளீர்
சீரப்பா இவனுடைய திசையும் யோகம்
  சிறப்பாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
ஆரப்பா என்னைப்போ லுங்களுக்கு
  அறிவுதனைச் சொல்லிடுவா ராய்ந்துகேளு.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) பார்க்க நடுவிரலில் முழுதும் ஏறி பாங்காகத் தானே நிற்கும். இவ்விதப் பஞ்சவர்ணக் குடோரி ரேகையானது கண்டால் அவ்வித ரேகை யுள்ளோன் யோகத்தின் கருணையைக் கேட்பாயாக; இவனுடைய திசையும் யோகமும் சிறப்பாகத் தானே சொல்கிறேன் கேளும்; பூமியின்மீது என்னைப் போல் உங்கட்கு அறிவுதனை யார் சொல்வார்கள் ஆராய்ந்து பார்ப்பீர் எ-று.

(வி-ரை.) மேலே சொன்ன பஞ்சவர்ண குடோரி ரேகை என்பது நடுவிரல் முழுதும் மேற்சொன்னபடி விரல்முழுது மேறிநிற்கும். அப்படிப் பட்ட ரேகைகளானது தன அஸ்தத்தி லிருக்குமேயாயின் அதற்குப்பலாபலன் களைக் கூறுவேன் கேட்பீர்களாக என்னைப் போன்று இவ்வாறாகிய ரகஸ்யங் களை எவர் சொல்வார் என்பது கருத்தாகும். 42

கேளடா இவன்றானும் பிறக்கும்போது
கேவலங்க ளிவன்வீட்டிற் கெடுதிரொம்ப
நாளடா இவன்றாய்க்குக் கெருப்பந்தன்னில்
நலமாக விவாகமவட் கானதப்பா
வாளடா வக்கணவ னிறந்தான் பின்பு
வளமாக மற்றொருவன் விவாகஞ்செய்தான்
ஆளடா இவனுக்குப் பிறந்தானிந்த
ஆச்சரிய முள்ளமைந்த னருமையாமே.

(இ-ள்.) கேட்பாயாக இவன் பிறக்கும்போது கெடுதியானது அதிக முண்டாம். இவன் தாய்க்கு கெர்ப்ப முற்றிருக்கும்போது கலகத்துடனே விவாகமாச்சுதாம்; அக்கணவனும் இறந்தபின்பு மற்றொருவன் விவாகம் செய்து கொண்டான்; அவனுக்குப் பிறந்த மைந்தன் இவனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது தாயின் விஷயத்தைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் தாயானவள் கெர்ப்பமாயிருக்கும்போது ஓர் கலியாணம் நடந்ததெனினும், மேற்படி கணவன் இறந்துபோனான். பின்பு வேறொருவனை விவாகம் செய்துகொண்டாள். அந்தக் கணவனுக்கு பிறந்தவனே இந்த ஜாதகனாகும். இவன் எவரும் அதிசயிக்கத்தகுந்தவனாவான் என்பதாம். 43

ஆமென்ற அத்தாயின் வயிற்றிலப்பா
அவதரித்த பாலனிவ னன்பாய்ச்சொல்வேன்
ஊமென்ற இவன்பிறக்கும் வேளைதன்னில்
உற்றபிதா இவன்வீட்டி லிருந்தான்பாரு
காமென்ற ஓர் தாய்க்கோர் மைந்தனாகும்
காணிக்கை யோகமுள்ள கனவானப்பா
வாமென்ற வானோரிற் கெந்துருவரேகை
வகையான இவன்பிறவி யறிந்துபாரே.

(இ-ள்.) மேற்கூறிய அத்தாயின் வயிற்றி லவதரித்தவன் இப்பாலனுகும். இவன் பிறக்கும் வேளையில் இவன் பிதா வீட்டில் தானே யிருந்தனன்; இவன் ஓர் மைந்தனுகும். காணிக்கையும் யோகமுள்ள மைந்தனுகும். வானேற்குடைய கெந்துருவ ரேகையுள்ளப் பிறவியே இவனுகும் அறிந்து பார்க்கவும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனில், இவனது கையில் கெந்துருவரேகை பதிந்திருக்குமெனவும், இவன் தாய்க்கிவன் ஒருவனே எனவும், இவன் ஜனிக்கும்போது இவனது பிதாவும் வீட்டிலேதானே இருந்தான் எனவும், மிக்க பொருளுடையவனுகி யோகத்துடன் வாழ்வான் என்பதும் இச்கவியின் கருத்தாகும். 44

பார்க்கவே இவன்பிறந்த நான்காமாண்டில்
   பண்பான பிதாவுந்தா னிறந்தான்பாரு
ஏர்க்கவே இவன்பிறந்த வீராமாண்டில்
   இயல்பான மாதாவைக் கொன்ருன் மைந்தன்
கார்க்கவே இவன்தலைதா னெடுக்காமுன்பே
   கரியுறவே எல்லாருஞ் சாய்ந்திட்டார்கள்
மார்க்கமுள்ள இவன்ருன்றன் வீட்டிலுள்ள
   மகத்தான பொருளைக்கொண் டலைவான்பாரே.

(இ-ள்.) பார்க்க இவன் பிறந்த காலாம் வருடத்தில் தகப்பன் மரணமாவான்; இவன் பிறந்த இரண்டாம் வருடத்தில் தாயார் மரணமாவாள்; இவன் தலையெடுக்கா முன்பு உறவோர்கள் யாவரு மொழிந்தார்கள்; இவன் தன் வீட்டிலுள்ள மகத்தாகியப் பொருளைக்கொண் டலைவான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது தாய், தந்தையர்களது கெண்டாதி கெண்டத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, 2-ஆம் வயதில் தாயும், நான்காம் வயதில் பிதாவும் இறந்தார். மற்று மிவன் பந்துக்கள் அனைவரும் இவனுக்கு விவகார திசை வரா முன்பே இறந்துபோனுர். ஆனதால் இவனுக்குள்ள பெருஞ் செல்வத்தை வைத்துக்கொண்டு அலைபவனுமானுன் என்றதாம். 45

பாரப்பா விப்பொருடான் வந்தமார்க்கம்
   பண்பான தாய்தந்தை இறக்கா முன்பு
வீரப்பா இவன்ருய்செய் பாக்கியத்தாலே
   விளங்கவே யோர்தலத்தி னிதியைக்கண்டு
ஆரப்பா வந்தரங்க மாகவேதான்
   அன்பான புருஷனிடஞ் சொன்னுள்பாரு
பேரப்பா வத்தலத்திற் சென்றுமைந்தா
   பேணியே வெட்டியவர் பார்த்தபோதே.

(இ-ள்.) பார்க்க அப் பொருளானது வந்த மார்க்கம் தாய் தந்தையர்கள் இறக்கா முன்பாம்; இவனுடைய தாயார்செய்த பாக்கியத்தினுல் விளங்கும்படியாகிய ஓர் தலத்தில் நிதியானதைக் கண்டு அதை அந்தரங்கமாகத் தானே தன் புருஷனிடஞ் சொல்ல அவன் அத்தலத்திற் சென்று எட்டிப்பார்த்த போது எ-று.

(வி-ரை.) இக்கவியா லிந்த ஜாதகனுக்கு எவ்வகையிற் பொருள் கிடைத்தன என்பதைக் கூறியுள்ளனர். எப்படியெனில், இவனது தாய் தந்தையர்கள் மரணமடையா முன்பு மேற்படி தாயானவள் புதையலிருக்கும் இடமறிந்து அதைத் தன் புருஷனுக்குச் சொல்ல இவன் சென்று மேற்படி தனமுள்ள இடத்தைத் தோண்டினுன் என்பதாம். 46

பொழுதான வத்தலத்திற் காதுவைத்த
போதமுள்ள சொர்ணபுட்ப மதிலேகண்டார்
வழுதான வந்தநல்லப் பொருளைக்கொண்டு
வண்மையுள்ள ஊரைவிட் டகன்றுன்பாரு
செழுதான வப்பொருளைக் கொண்டுநல்ல
திசைதிசையாய் மூன்றூறிற் குடியிருப்பான்
பழுதில்லா வவனிருக்குங் குடிகடோறும்
பாக்கியமுடன் செல்வனுய் வாழ்வான்பாரே.

(இ-ள்.) அப்போது அத்தலத்திற் காதுவைத்த சொர்ண புஷ்பமானது அங்கிருக்கக் கண்டும், அப்பொருளை கைப்பற்றிக்கொண்டு அவ்வூரை விட்டு அகன்றுபோய் திசையாக மூன்று ஊரில் குடியிருந்தும், பழுதில்லாமற்படி அவன் குடியிருந்த இடந்தோறும் பாக்கியமுடன் செல்வனுக வாழ்ந்திருந்தான் எ-று.

(வி-ரை.) மேற்சொன்னவாறு இந்த ஜாதகனது பிதாவானவன் அங்ஙனம் புதையற் பொருளைக் கண்டு தோண்டி அதை எடுத்துக்கொண்ட பின்பு அவ்வூரைவிட்டு வெளியூர் சென்றுன். இவ்வாறு இந்த ஜாதகனும் ஊரில் சென்று குடியிருந்தானுயினும் ஆங்காங்கு மிக்க செல்வமுடையவனுகவே வாழ்ந்து வந்தனன் என்பது கருத்தாகும். 47

பாரடா இவனுடைய செல்வயோகம்
பர்வதம்போல் வளர்ந்ததடா குபேரன்போல
காரடா கன்னிகா யோகத்தாலே
கருணையுட னல்லவனுய் வாழ்ந்தான்பாரு
கூரடா இவனுக்கோர் புத்திரன்றுன்
கூர்மையுள்ள பாலகனுய்ப் பிறந்தான்பாரு
யேரடா இவனுடைய மூன்று தலைமுறையும்
பேணியே ஒருபிள்ளை நிலைக்கும்பாரே.

(இ-ள்.) பார்க்க இவனுடைய செல்வமும் யோகமும் பர்வதம்போல் வளர்ந்து குபேரனைப் போலாயினன். இவனுக்குக் கன்னிகா யோகத்தினால் கருணையோடு நல்லவனாக வாழ்ந்திருந்தான். அப்போது இவனுக்கு ஓர் புத்திரன் கூர்மையாகத் தானே பிறந்தான். அப்படியே இவனுடைய மூன்று தலைமுறைக்கும் ஒரு பிள்ளை நிலைக்கும் பார்ப்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனின், இந்த ஜாதகன் ஓர் தாய்க்கோர் மைந்தனாவன். இதுபோலவே இவனுக்குப் பின் மூன்று தலைமுறைகள் வரையில் ஓர் தாய்க் கொருவனாகவே இருக்கும் என்பதாம். 48

பாரப்பா இவன்றேடுந் தனந்தான் மைந்தா
பரிவான இவன்மகனுக் குதவாதப்பா
சீரப்பா இவனுக்கு முன்னே தானும்
சிறப்பான மகனுந்தா னிறந்துபோவான்
காரப்பா பிராமணன் கையிலேதான்
கடன்முறைகள் வாங்கியிவ னிறப்பான்பாரு
ஊரப்பா கலகமதில் தனத்தையிவன் தான்
உற்பனமாய் மண்மறைவிற் போச்சுதன்றே.

(இ-ள்.) பார்க்க இவன்தேடும் தனம் இவன் மகனுக்கு உதவாமற் போகும். ஏனெனில், இவனுக்கு முன்னே இவன் மைந்தனானவன் இறந்து போவான்; இவன் பிராமணனுடைய கையில் கடன் வாங்கி இவன் இறந்து போவான்; பின்பு கலகத்தால் தனத்தை மண்ணினுள் புதைத்து வைப்பான்; அதுபோகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னை எனின் இவனது முதல் மகன் பிராமணனிடம் கடன் வாங்கிச் செலவு செய்துவிட்டு இறந்துபோனான். இந்த ஜாதகனும் தான் தேடிய தனத்தை மண் மறைவிற்போட்டு வைத்தான். ஆதலால் இவன் மைந்தர்களுக்கு அவை உதவாது என்றனர். 49

அன்றெனவே யிவனிறக்கும் போதேமைந்தா
அன்பான நாவுதனை யெழாமற்றானும்
நன்றெனவே மகனுக்குச் சொல்லாமற்றான்
நாவுக்கிடந் துயிரிழந்து போவான்பாரு
குன்றெனவே கூட்டமுடன் விவகாரத்தில்
குவலயத்தில் வெகுபொருள்க ளழிந்துதப்பா
வின்றெனவே சகடமென்ற யோகந்தானும்
வெகுவான ராஜாதி காரமாமே.

(இ-ள்.) இவன் இறக்கும்போதே ஒருவருடனும் சொல்ல நாவானது எழாமல் மகனுக்குஞ் சொல்லாமல் உயிரானது இழந்து போயினன். அன்றி,

கூட்டத்திலும் விவகாரத்திலும் பொருளானது சிலது அழிந்ததாம்; சகடமென்ற யோகமானது வருக இராஜ அதிகாரமாம் எ-று.

(வி-ரை.) அவையாவன, இவனுக்கு மற்றோர் மைந்தன் நிலைத்திருக்கும் ஒரு மைந்தனுக்குக்கூடத் தான் புதைத்திருக்கும் பொருளைச் சொல்லவில்லை. இது யாது காரணத்தால் எனில், இவன் உயிரிழக்கும்போது பேச முடியாமற் போயின வென்பதாம். இவன் பொருளில் கொஞ்சம் வழக்கு
வாது முதலியவற்றில் சிலவழிந்தன என்பதாம். 50

ஆமப்பா விவன்பிறந்த மனைதான்மைந்தா
அன்பான சிறுமனைதான் கூரையாகும்
ஓமப்பா தென்வாச லுள்ளவீட்டில்
ஒருவரில்லை யிவன்பிறக்கும் வேளைதன்னில்
வாமப்பா இவன்பிறந்த நாளுங்கோளும்
வகையாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
வீமப்பா வைப்பசியிற் கதிரோன்வாரம்
விரிவான அவிட்டநாண் மைந்தன்றானே.

(இ-ள்.) ஆயினும் இவன் பிறந்த மனையானது சிறுமனை கூரைவீடாகும்; தென்பக்கமான வாசலுள்ள வீட்டில் இவன் பிறக்கும்போது ஒருவருமில்லையாம்; அந்த வேளையில் இவன் பிறந்தநாளுங் கோளும் சொல்கிறேன் கேளும் ஐப்பசிமாதம் ஞாயிற்றுக்கிழமை அவிட்ட நட்சத்திரம் ஜெனனமாயினன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த வாரம் நேரம் முதலியவற்றையும் வீட்டினது லக்ஷணத்தையுங் கூறுவாராயினர். அவையாவன, சிறு கூரையில் தெற்கு வாயிலில், ஒருவரும் தாயுடனில்லாத நேரம் என்பதாம். மற்றும் ஐப்பசி மாதம் ஞாயிற்றுக்கிழமை அவிட்ட நக்ஷத்திரம் கூடிய நாள்
என்பதாம். 51

மைந்த னவிட்டம்முற்கா லேகாதேசி
மகத்தான லக்கினத்தில் வியாழன்சந்திரன்
ஐந்தனப்பா இரவுதனிற் பிறந்தான்பாலன்
அற்புதமாய் இவன்மெத்த யோகசாலி
பந்தனெனும் பலபேர்கட் குபகாரித்தான்
பாக்கியத்திற் பெரியவனாய் வாழ்வானப்பா
இந்தனப்பா இல்லறத்திற் சற்றுநேரம்
இருக்கவுந்தான் மாட்டானென் றியம்பிட்டேனே.

(இ-ள். அவிட்டத்தில் முதற்கால் திதி ஏகாதசியாம். இலக்கினத்தில் வியாழன் சந்திரன் நிற்க இரவில்பிறந்த பாலனும், அற்புதமாகிய யோக

முடையவன். பலபேர்க்கும் உபகாரியாகயிருப்பான். பாக்கியத்தில் பெரிய வனாக வாழ்குவான்; இல்லறத்தில் சற்று கோமாகிலும் இருக்கமாட்டான் எ-று.

(வி-ரை.) மேலே சொன்ன ஞாயிற்றுக்கிழமை இரவில் அவிட்டம் 1-ஆம் பாதத்தில் ஏகாதசி கூடிய நாளில், லக்கினத்தில் வியாழனும் சந்திரனு மிருக்கப் பிறந்தவன் ஆனதால் இவன் ஓர் நிமிஷமேனும் வீட்டிற்றங்காது சுற்றுவான் என்றனர், 52

இயம்பிட்டேன் வயதிவனுக் கெழுபத்தெட்டாம்
  இயல்பாக இவனுந்தான் சிங்கக்கூறும்
துயம்பிட்ட மதிற்கோயில் கயந்தானப்பா
  துப்புரவாம் நலமுள்ள வாசஞ்செய்வான்
அயம்பிட்டே னிவனதிக பலவான்பாரு
  ஆண்மையுள்ள புருடரைப்போல் வாழ்வானப்பா
நியம்பிட்டே னனேகம்பே ரிவனுக்கப்பா
  நித்தமுமே ஏவல்விடை செய்வார்பாரே.

(இ-ள்.) இயம்பியபடி வயது இவனுக்கு எழுபத்தெட்டாகும்; இவன் சிங்கக் கூறுடையவன்; மற்றும் நன்மையாகிய மதில் கோயிலகமெடுப்பன், நல்ல வாசஞ் செய்வன்; அதிக பல முடையவன். ஆண்மையுடையவனாக வாழ்வான். இவனுக்கு அனேகம் பேர்கள் வந்து நித்தமும் ஏவலும் பணிவிடையுஞ் செய்குவார் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனின், இவன் பிறந்தது சிங்க லக்கினம் என்பதாம். மற்று மிவன் கோவில் ஜலக்கரை முதலிய விடங்களில் வாசம் செய்பவன். மற்றும் மிக்க ஆண்மையும் வீரமும் உடையவனாகித் தன் வயது 78-வரையில் வாழ்பவனவன் என்பதாம். 53

பாராயே இவன்மேனி பருத்தக்கூடாம்
  பக்குவமாய் இவனுக்குக் கெண்டமெட்டாம்
வாராயே வந்தகெண்ட மிவனுக்கப்பா
  வரிசையாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
தோராயே வயதிவனுக் கைந்திலேதான்
  தோன்றுமப்பா வக்கினியாற் கெண்டமொன்று
சீராயே வயதிவனுக் கேழிலேதான்
  சிறப்பாகச் சலந்தனிலே கெண்டமொன்றே.

(இ-ள்.) இவனுடைய மேனியானது பருத்தக்கூடாகும். இவனுக்கு கெண்டம் எட்டாகும்; இப்படிக்கு வந்தகெண்டம் அதனை வரிசையாகச் சொல்லுகிறேன் கேளும்; இவனுக்கு வயது ஐந்தில் அக்கினியால் ஓர் கெண்டம் நேரிடும்; வயது ஏழில் சலத்தில் கெண்டமொன்றுண்டாம் எ-று.

UniTech Document Processing Solutions

(வி-ரை.) இக்கவியா லிவன் திறத்தையும் கெண்டத்தையுங் கூறியுள்ள னர். அவையாவன, கருத்த நிறமுடையவன் கெண்டாதி கெண்டங்கள் எட்டுண்டாகும். அவற்றுள் 5-ல் அக்கினியாலும் 7-ல் ஜலத்தாலும் என்பதாம். 54

ஒன்றுன விவன்வயது பன்னிரண்டில்
ஓகோகோ நாற்காலி லேறிவீழ்ந்தான்
நன்றுக இவன்வயதோர் பதினெட்டிற்றுன்
நயமில்லா சர்ப்பங்கண் டரண்டான் மைந்தன்
குன்றுன வயதிருபத் தாறிலேதான்
குடிபோனு னிராச்சியத்தை விட்டுமைந்தன்
வின்றுன விவன்முப்பத் தாறுமாண்டில்
வெகுவான சத்துருவால் மெலிந்திட்டானே.

(இ-ள்.) இவன்வயதுப் பன்னிரெண்டில் நாற்காலிமேல் ஏறி வீழ்கு வான்; வயது பதினெட்டில் சர்ப்பத்தினுல் கெண்டம் நேரும்; வயது இருபத் தாரில் ராஜ்ஜியத்தை விட்டுக் குடியானது போவான்; வயது முப்பத்தாறில் சத்துருக்களால் மெலிகுவான் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் மேற்படி கெண்டாதி கெண்டங்களையே கூறியுள்ளனர். அவையாவன, 12-ல் வாகனத்தி விருந்து வீழ்தல்; 18-ல் சர்ப்பபயம்; 26-ல் தன் தேயம் விட்டு வெளிதேயம் செல்லல்; 36-ல் சத்துரு வாதையால் மெலிதல் ஆகிய கெண்டங்கள் என்பதாம். 55

மெலிந்திடவே விவனுற்பத் தாறுமாண்டில்
வியாதியினு லுடல்வருந்தி வேட்கையானுன்
அலிந்திடவே வருடநான் கவதிப்பட்டான்
அன்பான வழக்கதனை வென்றுன்மைந்தன்
வலிந்திடவே யிவனைம்பத் திரண்டாமாண்டில்
வாகான காலகதியினு லோடினுன்பார்
கலிந்திடவே யதனுலே பொருளநேகம்
காரணமில் லாச்செலவு செய்வான்பாரே.

(இ-ள்.) மெலிந்து வயது நாற்பத்தாறில் வியாதியால் உடலானது வருந்தி வேட்கையாவான், நான்கு வருடம் அவதிப்படுவான், வழக்கு வெல் லுவான், வயது அன்பத்திரெண்டில் காலகதியினுல் ஊரைவிட்டு ஓடிப்போ வான். அதினுல் பொருளானது அனேகம் காரணமில்லாமற்படிக்கு செலவா னது செய்குவன் எ-று.

(வி-ரை.) இக்கவியிலும் மேற்கூறிய கெண்டாதி கெண்டங்களையே கூறுவாராயினர். அவையாவன, 46-ல் கொடிய வியாதி, அவை நான்கு

வருடங்கள் வரையிலிருக்கும். 52-ல் உலக கலகத்தால் ஊரைவிட்டோடி அநியாயச் செலவு செய்து அதனல் மெலிவடைவன் என்பதாம். மற்றும், வழக்கு வெல்வன் என்றது, தன் தேகத்தி லுண்டாகிய கொடிய வியாதியை வெல்வன் என்பதேயாகும். 56

பாரப்பா வயதெழுபத் தெட்டிலேதான்
 பரமபத மடைந்திடுவான் சக்கரநேர்மை
காரப்பா பஞ்சவர்ணன் குடோரிரேகைக்
 கருத்தையெல்லா மறிந்துரைத்தேன் கண்டுகொள்ளு
சீரப்பா வவனுடைய திசையும்யோகம்
 சிறப்பாகச் சொல்லிவிட்டேன் மைந்தாகேளாய்
ஊரப்பா உலகதனிற் கண்டறிந்து
 உற்பனமா யறிந்துரைப்பாய் மைந்தாதானே.

(இ-ள்.) இவன் தனக்கு வயது எழுபத்தெட்டில் பரமபதமடைகுவன்; சக்காத்தின் நேர்மையால். பஞ்சவர்னக் குடோரிரேகையின் கருத்தெல்லா மறிந்துரைத்தேன் கண்டு கொள்வாயாகவும். இவனுடைய திசையும் யோகமும் கூடச் சொல்லிவிட்டேன் இதனை உலகுதனில் கண்டறிந்தும் சொல்வாயாகவும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னவெனின், மேலே சொன்ன கெண்டாதி கெண்டங்கள் எவ்வளவாயினும் அவையனைத்தையும் தவிர்த்து வயது 78-ல் பரமபதம் அடைவான். இதுவரையில் எல்லா விஷயத்தையும் விவரமாய்க் கூறிவிட்டதால் இதனை வெகு சூக்ஷமமாயறிந்து கூறுக என்பதாம். 57

கமல ரேகை கமலி ரேகையின் பலன்

தானெனவே இன்னமப்பா ரேகையொன்று
 தருவான ரேகையதைச் சாற்றக்கேளு
ஆனெனவே யஷ்டமா கமலரேகை
 அப்பனே கமலியுமொன் றிரண்டுரேகை
கானெனவே கைநடுவி லிருக்குதப்பா
 கனத்ததோ ரிரண்டுபுள்ளி மூன்றுகீறு
வானெனவே யிந்தநல்ல ரேகையானல்
 வரிசையுள்ள பாலகனு மாவான்பாரே.

(இ-ள்.) தானெனும்படியாக இன்னம் ரேகை ஒன்று அதனைச் சாற்றக் கேளும்; அதாவது அஷ்டமா கமலரேகை கமலியுமென்ற இரண்டு ரேகை இவைக் காண கைநடுவிரலி லிருக்கும்; அதில் கனத்தப்புள்ளியானது இரண்டுமூனறு கீறு, இவ்விதரேகை யிருக்குமாயின் அவன் வரிசையுள்ளப் பாலனவன் எ-று.

(வி-ரை.) இக்கவிமுதல் இன்னமொரு ரேகையின் பலாபலன்களைக் கூறுகின்றனர். அவையாவன, கமல ரேகை, கமலி ரேகை என்பனவாம். இவை அஸ்தத்தின் மத்தியில் இரண்டு புள்ளிகளும் மூன்று கீற்று ரேகைகளுமாயிருக்கும் என்பதாம். இதன் பலாபலன்கள் கீழ்வருமாறு. 58

பாரடா இவன்பிறந்த வாரஞ்செவ்வாய்
பரணியிலே மூன்றுங்கா லாகுமைந்தா
சீரடா விவன்றானு நவமிதன்னில்
செல்வனுமே பிறந்திட்டா னாடிமாதம்
காரடா விவனுந்தான் கீழ்வாசல்வீட்டில்
கனக்கவே கன்னியிற்றான் பிறந்தான்பாலன்
கூறடா இவன்பிறக்குங் காலையிற்றான்
குணமுள்ள செல்வமுள்ள பாலனாமே.

(இ-ள்.) பார்க்க இவன் பிறந்தவாரம் செவ்வாய் பரணிநட்சத்திரத்தில் மூன்றாங்காலம். திதி நவமியாகும்; மாதம் ஆடிமாதமாம்; கீழ்வாசல் வீட்டில் கன்னியில் பிறந்தோனாகும் இவன் பிறக்குங் காலையில் செல்வமுடையவனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மேற்படி ரேகையுடையவர்கள் பிறந்த அடையாளம் நாள் கோள் முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, ஆடிமாதம் செவ்வாய்க்கிழமை நவமி கூடிய நாளில் பரணி மூன்றாங்காலிற் கன்னியாராசியிற் பிறந்தவன் என்பதாம். இவன் ஜெனித்த வீட்டு வாசலானது கிழக்கு என்பதாம். 59

பாலனாய் இவன்பிறக்கும் போதிற்றானும்
பாக்கியங்கள் வளர்ந்தேறி இருக்கும்வீட்டில்
சீலமுட னுடன்பிறந்தார் மூன்றுபேர்கள்
செல்வமுட னால்வரப்பா தெரிந்துகொள்ளு
ஆலமாய்ப் புத்ரமித்ர களத்திராதி
அவர்களுடன் வாழ்வினில் மூன்றாமைந்தன்
தாலமதிற் றனஞ்சயனும் பிறந்தானப்பா
தன்மையுடன் செல்வனாய் வாழ்ந்திடுவன்றானே.

(இ-ள்.) மேற்கூறியோன் பாலனாகப்பிறக்கும் போதில் பாக்கியங்களானது வீட்டில் வளர்ந்தேறியிருக்கும். இவனுடன் பிறந்தவர்கள் மூன்று பேராகும். ஆகச்செல்வர்கள் நால்வராகும். புத்திரமித்திர களத்திராதிகளுடன் வாழ்குவன்; இவன் மூன்றாவது மைந்தனாகும், பூமியின்மீதுச் செல்வனாகப் பிறந்து தனஞ்சயன்போல் வாழ்குவன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனில் இவனுடன் பிறந்தவர் மொத்தம்-4. அதில் இவன் மூன்றாம் பிறவி என்க. இவன்

CuraTech Document Processing Solutions

பிறக்குங்காலம் இவனது குடும்பமானது மிக்க யோகத்துடன் வாழ்ந்து வந்தது என்பது கருத்தாகும். 60

வாழ்ந்திடவே இவனுடைய பெரியஅண்ணன்
வண்மையாய்க் குளத்தினில் வீழ்ந்திறப்பான்
ஆழ்ந்திடவே வவர்க்கிளைய வண்ணன்றானும்
அக்கினியுள்ள வடுப்பினில் வீழ்ந்திறப்பான்பாரு
நாழ்ந்திடவே இவர்க்கிளைய தம்பியப்பா
நலமான காட்டிலவன் செல்லும்போது
தாழ்ந்திடவே புலிதின்று போட்டதப்பா
தயவாக மூன்றுபே ரிறந்திட்டாரே.

(இ-ள்.) வாழ்க இவனுடையப் பெரிய அண்ணன் குளத்தில் வீழ்ந்து இறப்பன்; அவர்க்கிளைய அண்ணன் அக்கினியில் வீழ்ந்துப் பிணியால் வாடியிறப்பன்; இவனுக்கு இளையதம்பிக் காட்டில் செல்லும்போதுப் புலியானதுத் தின்றுப்போடும். இப்படியாக மூன்றுபேரும் மரணமாகினார்கள் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் சகோதரர்கள் மரணமான விவரத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, இவனது பெரிய தமையன் குளத்தில் வீழ்ந்திறப்பான் எனவும், இளையவன் அடுப்பில் வீழ்ந்திறப்பான் எனவும் தம்பியானவனைக் காட்டில் புலி கொன்றுப்போட்டன என்பதாம். 61

இறக்கவே யிவன்வயதோர் பதினெட்டுக்குள்
இயல்பான மூன்றுபேர் பிறவிபோனார்
பறக்கவே இவன்வயதைத் தாண்டிற்றானும்
பாண்பான மாரிகண்டத்தால் மெலிந்தான்
கறக்கவே இவன்வயது பதினாறுக்குள்
கனத்ததோ ரிவன்பிதா இறந்தான்பாரு
துறக்கவே வயதிருபத் திரண்டிலேதான்
துறவான மாதாவு மிறந்தாள்பாரே.

(இ-ள்.) இவன் வயதுப் பதினெட்டுகுள் இவன் உடன்பிறவி மூன்று பேரும் மரணமாகிப்போனார். இவன் வயது ஐந்தில் அம்மையானதுகண்டு மெலிவான். வயது பதினாறுக்குள் தகப்பன் மரணமாகுவன். இவன் வயது இருபத்திரண்டில் தாயாரும் மரணமாகுவள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னவெனில், இவன் வயது 18-க்குள்ளேயே இவனது சகோதரர்கள் மேற்சொன்னவாறு இறந்து போனார். மற்றும் 16-ல் பிதாவும் 22-ல் மாதாவும் இறந்து போனார் என்பது கருத்தாகும். இதுவன்றி மேற்படி 18-ல் இந்த ஜாதகனுக்கு வைசூரி கண்ட தென்பதாம். 62

LuraTech Document Processing Solutions

பார்க்கவே வயதிருபத் தெட்டிலப்பா
பலமான வியாதிகண்டத் தால்மெலிந்தான்
ஏர்க்கவே இருபத்து மூன்றுமாண்டில்
இயல்பான விவாகமுந்தா னாகும்பாரே
பார்க்கவே வயதிருபத் தாறின்மைந்தா
கனகம்போற் புத்திரனும் பிறப்பானப்பா
தீர்க்கமாய்க் குழந்தையது பிறந்தயோகம்
திரமாக வதிகாரஞ் செலுத்துவானே.

(இ-ள்.) இவனுக்கு வயது பதினெட்டில் பலமான வியாதி கெண்டத்தினால் மெலிவான்; வயது இருபத்திமூன்றில் விவாகமானது ஆகும்; வயது இருபத்தாறில் கனகம்போல் புத்திரன் பிறப்பான்; தீர்க்கமாகத்தானே இவனுக்குக் குழந்தையானது பிறந்த யோகமதினால் திரமாகத்தானே அதிகாரஞ் செல்லுத்துவான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், இவன் வயது 23-ல் விவாகமும், 28-ல் கொடிய வியாதியினால் கெண்டமும் 26-ல் அழகிய மைந்தரும்பிறப்பர். மொத்தத்தில் இவனுக்குண்டாகும் புத்திரனால் மேலான யோகம் உண்டாகும் என்பது கருத்தாகும். 63

யானென்ற விவன்றனக் காறுபிள்ளை
வளமாகப் பிறக்குமடா மக்கடானும்
ஆனென்ற நாலுபேர் நிலைப்பாரப்பா
ஆகா'' விரண்டுபே ரிறப்பாறன்றோ
ஊனென்ற இவனுக்குக் கெண்டம்நாலு
உற்பனமாய் முடியுமென் றுரைத்தேன்மைந்தா
கானென்ற சத்துருவாற் கெண்டமொன்று
கனமிருகத் தாலுமொரு கெண்டந்தானே.

(இ-ள்.) இவனுக்கு ஆறுபிள்ளைகள் பிறக்கும்; ஆண்குழந்தைகள் நாலு நிலைக்கும்; இரண்டு குழந்தைகள் மரணமாகிவிடும். இவனுக்குக் கெண்டம் நாலுண்டாகும். அதாவது சத்துருக்களால் கெண்டம் ஒன்று. மிருகத்தினாலொன்றாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்து என்னவெனின், இவனுக்குண்டாகும் குழவிகள் மொத்தம் 6. அதில் நிலைத்திருப்பது நான்கு. இவனுக்குண்டாகும் கெண்டாதி கெண்டம் நான்கினுள் ஒன்று சத்துருவாலும் ஒன்று மிருகத்தாலும் என்பது கருத்தாகும். 64

கண்டமப்பா வாயுதத்தால் வருமோற்கண்டம்
கருணையால் மாரிகண்டங் கதிக்கத்திரும்
அண்டமப்பா புவனங்கண் மெய்க்கவாழ்வன்
ஆச்சரியந் தொழின்முறையு மந்திரவாதி

LuraTech Document Processing Solutions

பண்டமப்பா பலதொழிலுஞ் செய்வான்பாரு
  பாக்கியவான் புண்ணியங்கள் செய்வானப்பா
கொண்டதோ ரிவன்விடந்தான் குபேரன்போலாம்
  கொற்றவர்கள் சார்புள்ளான் மிகவுநன்றே.

(இ-ள்.) இவனுக்கு ஆயுதத்தினால் கெண்டம் ஒன்று சம்பவிக்கும். அம்மையால் கெண்டமானது வந்து நீக்கும். அண்ட புவனங்களும் மெச்சும் படியாக வாழ்குவான். கைத்தொழில் முறை செய்பவன், மந்திரவாதியாக யிருப்பவன், பலதொழிலுஞ் செய்வான். பாக்கியவானுகிப் புண்ணியங்கள் புரிகுவன். இவன்கொண்ட விடமும் குபேரன்போல் உள்ளவர்களாம். இவன் அரசர்களின் சார்புள்ளவனுகும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலு மிவனுக்குண்டாகும் கெண்டம் வாழ்வு இவற்றையே கூறுவாராயினர். அவையாவன, ஆயுதத்தாலும், வைசூரியாலும் என்பதாம். மற்று மிவன் குபேரனையொத்த சம்பத்துடையவனுகி மந்திர முதலிய கலைகளைப் பயின்று வாழ்வன் என்பது கருத்தாகும். 65

நன்றெனவே விஞவித்தை படிப்பான்பாரு
  நலமுள்ள தொழின்முறைகள் படிப்பான்பாலன்
அன்றெனவே யிவனுலு நாளில்கெர்ப்பம்
  ஆச்சரியம் கீழ்முகமாய் புணர்ச்சியாகி
வன்றெனவே முதற்சாமந் தரித்தகெர்ப்பம்
  வளமையுள்ள பாலனென்றே மதித்தேதன்பாரு
குன்றெனவே லக்கினத்திற் கிரகம்ரெண்டு
  குணமாக விருந்ததப்போ மைந்தன்றனே.

(இ-ள்.) நன்ருகத்தானே இவன் நான்கு வித்தைகள் படிப்பவன், நல முள்ளதொழில் முறைகளுங் கற்பவன் இவன் தாயார் குளித்த நாலாநாள் கெர்ப்பந்தரித்தவன் கீழ்முகமாகத்தானே புணர்ச்சியானதுவாகி முதற்சாமத்திற் தரித்த கெர்ப்பமாகும். இவன் வளமையுள்ள பாலனுகும். இவன் பிறந்த இலக்கினத்தில் கிரகம் இரண்டு நிற்கப் பிறந்தான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் கெர்ப்பந் தரித்த முறையினைக் கூறியுள்ளனர். அவையாவன, இவன் தாய் ஸ்நானம் செய்த நான்காம் நாள் இரவு முதற்சாமத்தில் கீழ்முகமாய்த் தலைவைத்துப் புணர்ந்தனர். இதன் பயனுய் இவன் ஜனனலக்கினத்தில் இரண்டுகிரகங்கள் உச்சம் பெற்றன என்பதாம். 66

தானடா விவன்வயதோ ரருபத்தெட்டில்
  தான்கீழே விழுந்திவனு மடிவானப்பா
வானடா யான்சொன்ன மொழிதான்மைந்தா
  வையகத்தி லுமையவடான் சொன்னவாக்கியம்

UniTech
Document Processing Solutions

ஊனடா வுலகமெல்லாம் பிழைக்கவேண்டி
உத்தமியும் பாடிவைத்தாள் கடாட்சம்வைத்து
யானடா வடமொழியைத் தமிழாற்பாடி
ஆச்சரிய மாகவைத்தே னறிவினாலே.

(இ-ள்.) தானாகிய வயது அறுபத்தெட்டில் தான் கீழே விழுந்து மடிவான்; நான்சொன்ன மொழியானது வையகத்தில் உமையவள் மொழியாகும்; இந்த உலகமெல்லாம் பிழைக்க வேண்டி உத்தமியாளும் பாடிவைத்தனள்; யான் வடமொழியைத் தமிழினாற் பாடி ஆச்சரியமாக வைத்தேன் அறிவினால் எ-று.

(வி-ரை.) இக்கவியாலிவன் மரணத் தன்மையைக் கூறுவாராயினர். அவையாவன, தன் வயது 68-ல் திடீரெனக் கீழேவிழுந்து மரண மடைந்து போவான். இவை உண்மையாகும் என்பது கருத்தாம். 67

தனஞ்செய ரேகையின் பலன்

நாலென்ற வின்னமொரு ரேகைமைந்தா
நலமான ரேகையதைச் சொல்லக்கேளு
தாலென்ற தனஞ்செய ரேகையப்பா
தாழ்வில்லா ரேகையடா சொல்லக்கேளு
ஆலென்ற வாச்சரிய முள்ளரேகை
அப்பனே சந்த்ரவுதைய ரேகையொன்று
காலென்ற சௌபாக்கிய ரேகையொன்று
கண்டிப்பாய் ரேகையிரண் டிருக்கும்பாரே.

(இ-ள்.) இன்னமொரு ரேகையானதுண்டு அதைச் சொல்வேன் கேளும். தனஞ்செயனெனும் ரேகை; அது தாழ்வில்லாது சொல்லக் கேளும்; ஆச்சரிய முள்ள ரேகை அதாவது, சந்திரோதய ரேகை ஒன்று சௌபாக்கிய ரேகையானதொன்று இவை யிரண்டு ரேகையையும் பாரும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லின்ன மொரு ரேகை விஷயத்தைக் கூறுவாராயினர். அவையாவன, தனஞ்செய ரேகை என்று பெயராம். அவை சந்திர உதய ரேகை சௌபாக்ய ரேகை என இரு விதமாகும். ஆனதால், அதன் விவரத்தைக் கூறுகிறேன் எனக்கூறி கீழ்வருங் கவியால் உரைப்பாராயினர். 68

பாரப்பா நடுக்கரத்தில் மால்விரலில்தான்
பக்குவமாய் யிரண்டுகெணு வேறிநிற்கும்
சீரப்பா இரண்டு வட்டந் திரிகோணந்தான்
சிறப்பாக வைந்துபுள்ளி இருக்கும்பாரு

காரப்பா ரேகையெல்லாஞ் சிவந்துகாணும்
காரணமா மிந்தநல்ல ரேகைகண்டால்
பேரப்பா சந்திரகுல ராசர்கையில்
பெருமையுள்ள ஸ்ரீரேகை இருக்கும்பாரே.

(இ-ள்.) பார்க்க நடுக்காத்தில் மால்விரலில் இரண்டு கணுவில் ஏறிநிற்கும் அதில் இரண்டுவட்டம் திரிகோணம் ஐந்து புள்ளி யிருக்கும். அவ் விரேகை யெல்லாம் சிவந்துகாணும். இவ்விதமாக இருக்குமாயின் அன்றியும் பேராகியச் சந்திர குலராசர் கையில் ஸ்ரீ ரேகையிருக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிந்த ரேகையினது விவரத்தைக் கூறுவாராயினர். அவையாவன மேற்படி ரேகையானது நடுவிரலில் இரண்டு கணுக்களுக் கப்பால் ஐந்து புள்ளியும் வட்டத் திரிகோணமாய் சிவப்பு நிறமுடையதாகக் காணப்படும். இவை அனேகமாய் சந்திர வம்ச அரசர்களுக்கே இருக்கும் என்பது கருத்தாகும். 69

பாரடா ரேகையுள்ள மைந்தனோடு
பதினறு பிள்ளைகடான் பிறப்பார்பாரு
காரடா இவன்றாய்க்கு முதலாம்பிள்ளை
காக்கவே யிவன்பிறந்த நாளுங்கோளும்
தீரடா இவனிடத் திசையும்வாழ்வும்
தீர்க்கமாய் பெருமைமுத லெல்லாஞ்சொல்வேன்
ஊரடா உலகதனிற் பெருமையுள்ளான்
உத்தமிதன் வயிற்றிலிவன் பிறப்பானன்றே.

(இ-ள்.) மேற்கூறிய ரேகையுள்ள மைந்தனோடு பதினறு பிள்ளைகள் பிறப்பார். அதில் இவன்றாய்க்கு முதற் பிள்ளையாகும். இவன் பிறந்த நாளுங் கோளும் திசையும் வாழ்வும் தீர்க்கமும் பெருமை முதலானதுஞ் சொல்வேன். இவன் உலகத்தில் பெருமையுள்ளான். நல்ல உத்தமியின் வயிற்றில் பிறப்பான் எ-று.

(வி-ரை.) இக்கவியி லிவன் சகோதர விஷயத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் முதல் பிள்ளையும் இவனுடன் பிறந்தோர் மொத்தம் 16-என்பதாம். மற்று மிவன் தாயானவள் மகா உத்தமி என்பது கருத்தாகும். 70

அன்றெனவே இவன்மாதா மைந்தாகேளு
ஐஸ்சுவரிய முள்ளவளாம் முதலாஞ்சாதி
நன்றெனவே இவன்றாயுந் தந்தையுந்தான்
நன்மனதாய்ப் பாலுடனே வன்னமுண்டு

குன்றெனவே மதிவாரம் இரண்டாஞ்சாமம்
　குணமாக இருவருமே கூடினார்கள்
வன்றெனவே கீழ்முகமாய்த் தலையைவைத்து
　வலியசதா சிவத்தையெண்ணிச் சேர்ந்திட்டாரே.

(இ-ள்.) அன்றியும் இவன் தாயார் ஐசுவரிய முள்ளவள். முதலாவது ஜாதியாளாகும்; இவன்றாயும் தந்தையும் நல்ல மனதோடுப் பாலும் அன்னமு முண்டு ஞாயிற்றுக் கிழமை இரண்டாஞ் சாமம் குணமாகத் தானே இருவரும் கூடிட கீழ்முகமாய் தலையை வைத்தும் சதாசிவத்தை எண்ணிக் கூடி னார்களாம் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் தாயானவள் மிக்க ஐஸ்வர்யமுடையவ ளும் உத்தமியும் என்றனர். மற்று மிவன் தாயுந் தந்தையும் ஆதிவாரத்தில் பாலன்னமுண்டு சிவபிரானை நினைந்து கீழ்முகமாய்த் தலைவைத்து கூடிய காலத்தில் கெற்பந் தரித்தவனாகும் என்பது கருத்தாம். 71

சேர்ந்தவர்கள் இருபேரு மனிதராவர்
　செம்மையுள்ள முற்சனனந் தேவராகும்
ஆர்ந்தவிவ் விருவரிட கணமொன்றப்பா
　அப்பொழுதில் கிரகமைந் துச்சந்தானும்
வார்ந்திருவர் வாலவய ததனிற்கூடி
　வண்மையுள்ள லீலையினால் வகித்தமைந்தன்
ஊர்ந்ததோ ருற்பனத்தா லுமையாள்மாலும்
　உபசரித்தா ரிவன்செய்த பாக்கியத்தாலே.

(இ-ள்.) சேர்ந்தோர்கள் இருவரும் மனிதர்களாகும். முன் ஜெனனத்தில் தேவர்களாகும். இவ்விருவர்களுடைய கணமு மொன்றாகும். அப்போது கிரகம் ஐந்து உச்சம் பெற்றிருந்தனவாம். இவர்கள் இருவரும் வால வயதிற் கூடி வண்மையாகிய லீலை செய்ததினால் வகித்த மைந்தனாகும். அன்றியும் உமையவளும் மாலும் உபசரித்தனர் இவன் செய்த பாக்கியத்தாலும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது தாய் தந்தையாது விஷயத்தைக் கூறி யுள்ளனர். அவையாவன; மேற்படி இருவரும் இச்சனனத்தில் மானிடரே யன்றி, முன் ஜனனத்தில் தேவராகும். இவன் ஜனன ராசியில் இவன் செய்த பூர்வபுண்ணியத்தால் ஐந்து கிரகங்கள் உச்சமாயின என்பது கருத்தாகும். 72

பாக்கியந்தான் இவன்பிறவி யானதப்பா
　பண்பான நவநாளிற் கெர்ப்பமானான்
நாக்கியந்தா னவமுகமு மளித்தகெர்ப்பம்
　நலமுள்ள மைந்தனுக்குப் பத்துமாதம்

LuraTech Document Processing Solutions

சாக்கியம்போ லிவன்றனுஞ் சதையந்தன்னில்
 சர்ச்சனனும் பிறந்திட்டான் செவ்வாய்ராவில்
சோக்கியந்தான் றசமியிலே பிறந்தான்பாலன்
 சுதன்பிறந்த வேளைமிக நல்லதென்றே.

(இ-ள்.) பாக்கியமாகத் தானே இவன் பிறவியானது நவநாளிலானக் கெர்ப்பமாகும். அப்படி நவமுகமாகத் தரித்த கெர்ப்பம் பத்துமாதமுஞ் சென்று சதைய நட்சத்திரம் செவ்வாய்க் கிழமை இரவில் பிறந்தானாகும். திதி தசமி இவன் பிறந்த வேளை நன்றாம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னே எனின், இவன் தாய் ஸ்நானம் செய்த 9-ஆம் நாள் கெர்ப்பந்தரித்தவன் எனவும், செவ்வாய் இரவு தசமியும் சதய நக்ஷத்திரமும் கூடிய நாளிற் பிறந்தவன் எனவும், மகா உத்தம காலத்திற் சிவபிரானருளால் தோன்றியதெனவுங் கூறவேண்டும் என்பதாம். 73

நல்லதென்ற விவன்பிறக்கும் போதேமைந்தா
 நலமான கிரகமதி லைந்துச்சந்தான்
அல்லவே யிவன்பிறந்த லக்கினத்தில்
 அன்பான மாலவனும் இருந்தான்பாரு
வல்லதென்ற வண்மையினாற் பிறந்தமைந்தன்
 வரிசைதனைச் சொல்லுகிறேன் வகையாய்க்கேளு
மல்லதென்ற இவனுடைய ரூபத்தோடு
 மகத்தான யோகமதை மருவிக்கேளே.

(இ-ள்.) இவன் பிறக்கும்போது கிரகம் ஐந்தும் உச்சம் பெற்று இருந் தனவாம். இவன் பிறந்த இலக்கினத்தில் புதன் இருந்தனன். இவ்வித நன்மையாகப் பிறந்த மைந்தனுடைய வரிசையைச் சொல்வேன் கேளும், இவனுடைய ரூபத்தினோடு யோகத்தையும் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனில், இவன் மேற் கவியிற் சொன்னபடி மகா உத்தம தினத்தில் பிறந்தவன் எனவும், ஜென்ம லக்கினத்தில் புதனோடு ஐந்து கிரகங்கள் உச்சம்பெறப் பிறந்தவன் எனவும் கூறுக என்பதாம். 74

கேளப்பா இவன்றனு மழகன்மெத்த
 கேவலமாய்த் திசையோக முள்ளமைந்தன்
நாளப்பா கிரீடியடா வடிவிலேதான்
 நலமுள்ள பாலகனும் பிறந்தான்பாரில்
வாளப்பா இவன்றனும் வில்லின்வித்தை
 வளமான வேதமுத லெல்லாங்கற்பன்
ஆளப்பா இவனைப்போ லுலகந்தன்னில்
 அன்பான பாலகனும் இல்லைபாரே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) கேட்பாயாக: இவன் மெத்தவும் அழகுடையவன், திசையோக முள்ளவன். கிரீடியைப்போல் வடிவுடையவன். இத்தன்மையாகப் பாலனும் பூமியிற் பிறந்தான். இவன் வில்வித்தையும் வேத முதலானதுங் கற்பான். இவனைப்போல உலகில் அன்பான பாலரில்லையாம் எ-று.

(வி-ரை.) இக்கவியில் இந்த ஜாதகன் மெத்த அழகன் என்றனர். அவையாவன, கிரீடியினை யொத்த அழகும் திசையும் யோகமும் உடையவன். மற்றும் வில்வித்தையும், வேதமும் கற்று வெகு மேன்மையுடன் வாழ்வான். என்பது முக்கிய கருத்தாகும். 75

பாரடா இவன்ரூப முப்பத்திரெண்டு
பண்பான லக்ஷணத்தோ டிருப்பான்பாரு
சீரடா இவனுக்குற் றப்பாமற்றுன்
சிறப்பாக லக்ஷணங்கள் திரமாய்க்காணும்
கூறடா முன்பிறப்பி லிவனுக்குத்தான்
குறிப்பான சாபமொன் றுண்டுபாரு
தீரடா அந்தநல்ல சாபந்தானும்
திறமாகப் பதினெட்டாண் டிருக்குங்காலே.

(இ-ள்.) பார்க்க இவன் ரூபமானது முப்பத்திரண்டு லட்சண முடைய வனாக விருப்பான். கூறியலட்சணங்கள் ஒன்றுங் குறையாமலிருப்பன். அன்றியும் இவனுக்கு முன்பிறப்பில் சாபமானது ஒன்றுண்டாம். தீர அந்தசாபம் பதினெட்டுவருட மிருக்கையில் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் முப்பத்திரண்டு இலக்ஷணமும் பொருந்தியவன் என்றனர். இதுவன்றி இவனுக்கு முன் ஜென்மத்தில் ஓர் சாபமுண்டு எனவும், அந்த சாபமானது இவன் வயது 18-வரையி லிருக்கும் எனவுங் கூறுக என்பதாம், இதன் பயனும் பலனும் பின் வருமாறு. 76

காலமென்ன வெகுவறுமைப் பட்டார்மைந்தா
கண்கலங்கி வறுமையினுல் வளர்க்குங்காலம்
சீலமெனுஞ் சிவனிடச் சோதனையினுலே
சிவசிவா வன்னமவர்க் கில்லாததாலே
பாலனென்ற பிள்ளைகடான் பசியானெந்து
பதைபதைத்து மயங்கிமிகக் கிடக்கும்போது
ஆலமுண்ட வருணகிரி யாரைநொந்து
அற்புதமாம் பிள்ளைகளை வீட்டிவிட்டே.

(இ-ள்.) காலாக வெகு வறுமையானதுப் பட்டுக் கண்கலங்கி வறுமையினுல் வளருங்காலத்தில் சிவபிரானுடையச் சோதனையில் அன்னம் அவர்க்கில்

லாதாலும், பாலர்கள் பசியால் நொந்து பதைபதைத்து மயங்கிக் கிடக்கும் போது பரமசிவனை நொந்து பிள்ளைகளை வீட்டில் விட்டுவிட்டு எ-று.

(வி-ரை.) இக்கவியால் மேற் சொன்னபடி இவன் வயது 18-க்குள் நடக்கும் கஷ்ட நஷ்டங்களைக் கூறுவாராயினர். அவையாவன, சிவபிரானது [illegible]னையா விவர்களுக்கு அன்னம் முதலியன இல்லாதவர்களாய், இந்த ஜாதகன் முதலாயுள்ள குழவிகள் பசியாற் றுடித்திருந்தன என்பது கருத்தாகும். 77

இட்டிடவே பிள்ளைகளை மனையிலிட்டு
இயல்பான தேவியுடன் றானுமப்போ
கட்டிடவே குழந்தைகளை மனையிலிட்டு
காரணத்தால் வாசலைத்தா ளடைத்துமூடி
விட்டிடவே பசியினாற் குழவியெல்லாம்
மெலிந்துமிக விகாரமதாய் மயக்கமாகி
மட்டிடவே மனமெல்லாஞ் சோர்ந்துபாலர்
வாய்விட்டுக் கதறியங்கே வீழ்ந்த தன்றே.

(இ-ள்.) பிள்ளைகளை மனையில் விட்டு மனையாளுடன் தானும் அப்போ கதவை மூடிக்கொண்டு போக, அப்போது பாலர்கள் பசியினால் மெலிந்து மயங்கி விகாரமான மயக்கமாகி மனமெலாஞ் சோர்ந்து பாலர்கள் வாய்விட்டுக் கதறி வீழ்ந்தனராம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்து மேற் சொன்னவாறு துடிதுடித்திருக்கும் குழந்தைகளை இவனது தாய்தந்தையர்கள் வீட்டிவிட்டு கதவைமூடிவிட்டனர். அச்சமயம் ஷை குழவிகளெல்லாம் அலைந்தழுது மூர்ச்சையாய் விழுந்துவிட்டனர் என்பது கருத்தாகும். 78

வீழ்ந்திடவே வழுதழுது மயங்கிவீழ
வியல்பாகப் பிள்ளைகடான் சோர்ந்திருக்க
தாழ்ந்திடவே தருமமே செயமென்றெண்ணி
தன்றேவி தானிருவ ரிரண்டுபேரும்
ஆழ்ந்திடவே வரனுமைக்கே அபயமென்று
ஆசரித்தா ரன்னேர மபையஞ்செய்ய
வாழ்ந்திடவே இவர்முறையை உமையாள்கேட்டு
வருத்தமுற்றுச் சிவன்பதத்தில் வணங்கினாளே.

(இ-ள்.) அழுது அழுது மயங்கிவிழ பிள்ளைகள் சோர்ந்திருக்க, இவர்கள் தருமமே ஜெயமென்று யெண்ணி தன் தேவியும் தானும் இரண்டுபேரும் அரனுமைக் கபயமென்று ஆசரித்து அபயஞ் செய்ய, இவர்கள் முறையை உமையாள் கேட்டு வருத்தமுற்று சிவனுடையப் பாதத்தில் வணங்கினாள் எ-று.

(வி-ரை.) மேற்சொன்னவாறு மயங்கி வீழ்ந்து கிடக்கையில் மேற்படி பிதா மாதாக்கள் அரனையும் உமாதேவியையும் நினைந்து அபயமென்ன, இக்குறையை உமாதேவியா ரறிந்து சிந்தையடைந்து மயேஸ்வரனுக்குக் கூறலானாள் என்பது கருத்தாகும்,
79

ஆதியே பராபரனே கைலைமூர்த்தி
அற்புதமே வரனுரே வையாசாமி
சோதியே பரஞ்சுடரே மகாதேவாநீர்
சொல்லுகிறேன் மைந்தரையுங் காக்கவேணும்
நீதியோசெய்யுமொரு காரணந்தான்
நிர்ணயமாய்ப் பிள்ளைகளைக் காருமென்ன
நாதனுமை இருபேரு மன்னம்பாலும்
நலமுடனே கொண்டுவந் தீந்திட்டாரே.

(இ-ள்.) ஆதியே பராபரப்பொருளே ஓ கைலைவாழும் மூர்த்தியே அற்புதமாகிய வரனுரே பூமியைப் படைத்தவரே சோதியே பரஞ்சுடரே ஓ மகாதேவா நீர் மைந்தர்களைக் காக்கவேண்டும். இப்பிள்ளைகளைக் காருமென்ன அம்மொழிக்குப் பரமனுமிரங்கி அரனும் உமையும் இருபேரும் அன்னம்பாலும் எடுத்துக்கொண்டு வந்து அந்தப் பாலர்களுக்கு ஈந்தனராம் எ-று.

(வி-ரை.) மேலே சொன்னபடி உமாதேவியார் தன் மனம் தாளாது சர்வேஸ்வரனைத் தொழுது அச்சமயம் மேற்படி மயேஸ்வரனுங் கருணை கூர்ந்து உமாதேவியுடன் அவ்விடம்வந்து அக்குழவிகளுக்கு அன்னம் பால் முதலியவற்றைக் கொடுத்து அருள்சுரந்தார் என்பதாம். 80

ஈந்தவுட னெல்லவரும் பசிகடீர்ந்து
இளைப்பாற்றிக் குழந்தைகளைக் காத்தாரப்போ
வாந்தமுள்ள சகலசவு பாக்கியந்தான்
வண்மையாய்க் கொடுத்தார்க ளப்போதானே
சாந்தமுட னீஸ்பரனும் உமையாளுந்தான்
சலியாத வரங்கொடுத்துப் போனாரப்போ
எந்தவுடன் வாழ்ந்திருந்தா ரிவர்களுக்கு
எம்பிரா னருளாலே இன்னங்கேளே.

(இ-ள்.) அப்படிக்குக் கொண்டுவந்து யீந்ததவுடன் உண்டுப் பாலர்கள் பசிதீர்ந்துக் களைத்தீரக் காப்பாற்றினார்கள். சகல சௌபாக்கியமும் அப்போதே கொடுத்தனர் அன்றியும் ஈஸ்வரனும் உமையாளும் கலையாமற்படிக்கு வரமானது யீந்தார்க ளப்போது பாலரோ சுகமாக வாழ்ந்திருக்க எம்பிரானுடைய அருளினால் இன்னமுங்கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னெனின் மேற்சொல்லிய வண்ணம் சர்வேஸ்வரனும், உமாதேவியும் கடாக்ஷம் செய்ததோடு மேற்படி

குழவிகளுக்கு வேண்டிய வார்த்தையுங் கொடுத்துப்போயினர் என்பது கருத்தாகும். 81

கேளப்பா சந்திரோதய ரேகைமைந்தன்
கேவலமாய்க் குபேரனைப்போல் வாழ்ந்தானப்போ
நாளப்பா இவனுக்குத் தாரம்ஒன்று
நலமாக இருபத்தோ ராண்டிலாச்ச
வாளப்பாமைந்தர்களு மிரண்டுபேராம்
வளமாகப் பிறப்பார்காண் மைந்தனுக்கு
ஆளப்பா இவனுக்கே யனேகபாக்கியம்
ஆச்சரியம் வந்ததுவு மருமையாலே.

(இ-ள்.) கேட்பாயாக சந்திரோதய ரேகையுள்ள மைந்தன் குபேரனைப் போல் வாழ்குவன். இவனுக்குத் தாரமானது ஒன்று. இருபத்தோராம் வயதில் விவாகமானது ஆச்சுதாம் இவனுக்கு மைந்தர்கள் இரண்டு பேராம் அவர்களும் வண்மையாகத்தானே பிறப்பார்கள். இவனுக்கு அனேகபாக்கியம் ஆச்சரியமாகத்தானே வந்த தருமையாம் எ-று.

(வி-ரை.) இக்கவியால் சந்திரோதய ரேகையின் பெருமையினைக் கூறியுள்ளனர் மற்றும் இவனுக்கு மனைவி ஒன்றே என்றும், அவை இவன் வயது 21-ல் நடக்கும் எனவும், புத்திரர் இரண்டே எனவும், சகல பாக்கியங்களும் உண்டாக வாழ்ந்திருப்பார் எனவுங் கூறுவாய் என்பதாம். 82

அருமையென்ற இவனுடைய யோகவாழ்க்கை
ஆச்சரிய மெத்தவப்பா சொல்லக்கேளு
வருமையென்ற மிடியெல்லா மோடிப்போச்சு
வளமையாய் இவன்றானும் வாழ்வதாச்சு
பெருமையென்ற பெருமைமெத்த இவன்வாழ்வுத்தான்
பொல்லாத காரியங்கள் செய்யமாட்டான்
விருமையென்ற வருமையட மயேந்திரயோகம்
விரிவான வஷ்டசித்தும் வசமதாமே.

(இ-ள்.) அருமையாகிய இவனுடைய யோகவாழ்க்கை மெத்தவுண்டாம்; சொல்வேன்கேளும். இவனுக்கு வறுமைகள் யாவும் ஓடிப்போயினவாம். வளமையாகிய வாழ்வு உண்டாயினவாம் பெருமையானது மெத்தப்பெருகும் பொல்லாத காரியங்கள் ஒன்றுஞ் செய்யமாட்டான். அருமையாகிய மயேந்திர யோகம் அட்டசித்தும் வசமாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தாவ தென்னெனின், முன் சொன்னபடி ஆதியில் மகா கஷ்டம் துன்பம் முதலியவற்றை யடைந்தா

ஞயினும் பிற்காலம் மகா யோகத்துடன் உத்தமமார்க்கத்துடன் அட்டமா சித்தையும் அடைந்தவனாகி வெகு விநோதத்துடன் வாழ்ந்திருப்பான் எனக் கூறுவாய் என்பதாம். 83

ஆகுமப்பா இவன்வயதோ ரிருபத்தெட்டில்
அன்பான பிதாவுந்தான் இறப்பான்பாரு
காகுமப்பா இவன்வயது முப்பதுக்குள்
கருணையுள்ள மாதாவு மிறப்பதாகும்
வாகுமப்பா இவன்வயது இருபத்திமூன்றில்
வண்மையுள்ள மைந்தனுக்கே விவாகமாகு
மாகுபப்பா பராபரனு முமையாள்வாக்கியம்
பண்பாக நடக்குமென்று பகருவீரே.

(இ-ள்.) ஆக இவன்வயது இருபத்தெட்டில் இவன் தகப்பன் மரண மாகுவான், வயது முப்பதுக்குள் தாயார் மரணமாகுவள், வயது இருபத்தி மூன்றில் இவன் தனக்கு விவாகமாகும், பராபரனும் உமையாளும் சொன்ன வாக்கியம் பண்பாகத்தானே நடக்குமென்றுப் பகர்வீராகவும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது தாய் தந்தையரது மரணகாலத்தைக் கூறுவாராயினர். எப்படியெனில், இவனது வயது 28-ல் பிதாவும், 30-க்குள் மாதாவும் மறிப்பர். முன் சொன்ன 21-ல் விவாகம் இல்லையேல், 23-ஆம் வயதில் கட்டாயம் விவாக முண்டெனவும் ஸ்ரீ உமாதேவியார் கூறினர் என்பதாம். 84

பகருவேன் இன்னமொரு ரேகைமார்க்கம்
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
நிகருவே னதினுடைய பெருமையெல்லா
நிச்சயமாய்ச் சொல்லுகிறேன் னினைவாய்க்கேளு
அகருவே னுதிபொருள் ரேகையொன்று
அப்பனே யதின்பெருமை யறியச்சொல்வேன்
வகருவேன் வாலைமனோன் மணித்தாய்சொன்ன
வாக்கியத்தின் படிச்சொல்வேன் மைந்தாகேளே.

(இ-ள்.) பகருவேன் கேட்பாயாக, இன்னமொரு ரேகையான துண்டு; அதின் பெருமையைச் சொல்வேன் கேளும்; அதாவது ஆதிபொருள் ரேகை யொன்று அதின் பெருமையை அறியச் சொல்வேன்; வாலை மனோன்மணி யாகி என்தாய் சொன்னவண்ணம் யான் சொல்வேன் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மற்றுமொரு ரேகையினது பலாபலனைக் கூறு வாராயினர். அவையாவன, ஆதிபொருள் ரேகை என்பதாம். அதன் விவ

ரத்தை வாலைத் தேவியார் எம்மிடம் சொல்லியவண்ணம் உங்களுக்குக் கூறுகிறேன். கேளுங்கள் என்பதாம். ஆதிபொருள் ரேகை என்பது சிறப்புப் பெயர் என்க. அதன் விவரம் கீழ்வருமாறு. 85

விற்பன்ன ரேகையின் பலன்

கேளப்பா விர்ப்பன்ன ரேகையொன்று
  கேவலமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
நாளப்பா வங்குஷ்ட விரலிலேதான்
  நலமாக இருபுள்ளி இரண்டுகீறு
வாளப்பா வதின்கீழே வைஸ்பரியரேகை
  வண்மையாய் முக்கோண மாயிருக்கும்
வாளப்பா விர்ப்பன்ன ரேகையோகம்
  வண்மையாய் நடக்குமதின் பலன்சொல்வேனே.

(இ-ள்.) கேட்பாயாக விற்பன்ன ரேகையானது ஒன்று சொல்கிறேன் அங்குஷ்ட விரலில் இருபுள்ளியும் இரண்டு கீறுமிருக்கும். அதின் கீழே ஐசுவரிய ரேகை முக்கோணமாயிருக்கும் இவ்வகை விற்பன்ன ரேகையின் யோகம் வண்மையாக நடக்கும் பலனைச் சொல்வேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனின், மேற் சொன்ன ஆதிபொருள் ரேகை என்னும் விற்பன்ன ரேகையானது அங்குஷ்ட விரலில் இரண்டு கீற்றுகளாயும் இரண்டு புள்ளியாயும் இருக்கும். அதன் கீழ் ஐஸ்வர்ய ரேகை என்பது முக்கோணமாயிருக்கும். ஆதலால் அதன் விவரத் தினைக் கூறுவேன் கேளுங்கள் என்பதாம். 86

சொல்லுவேன் இவன்பிறந்த யோகவாழ்க்கை
  சுகமுள்ள இவனுடைய திசையும்சொல்வேன்
அல்லுவே னிவன்பிறந்த மனைதான்மைந்தா
  அன்பான அசல்வீட்டிற் பிறந்தபாலன்
நல்லுவே னிவன்பிறவி மூன்றுபேராம்
  நலமுள்ள பிதாவுக்கிவன் மூத்தபிள்ளை
இல்லுவே னிரண்டு பெண்ணொன்றப்பா
  இயல்பாகப் பிறக்குமென்றே சொன்னேன்பாரே.

(இ-ள்.) சொல்வேன் இவன் பிறந்த யோகவாழ்க்கையும் சுகமும் திசையும் சொல்வேன்; இவன் பிறந்த மனையானது அயல் வீடாகும்; அதிற் பிறந்தவன் இவனுடன் பிறந்தவர்கள் மூன்று பேராகும். அதில் இவன் மூத்தோனாகும். அதில் ஆண் இரண்டு பெண் ஒன்றாகும். இயல்பாகத் தானே பிறக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மேற்படி விற்பன்ன ரேகையினது புலாபலன் களைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் அன்னியர்களது வீட்டில்

பிறந்தவனும், இவனுடன் பிறந்தோர் மூவருள், ஆண் 2. பெண் 1 எனவும், இந்த ஜாதகனே மூத்தவன் எனவுங் கூறவேண்டும் என்பதாம். 87

சொன்னப்பா இவன்பிறக்கும் போதுமைந்தா
சொற்பெரிய பிதாவுமவன் வீட்டிலில்லை
அன்னப்பா தன்னுடைய தாய்மாமன்றான்
அன்பாக வன்னேர மிருந்தானங்கே
வன்னப்பா இவன்பிறந்த போதுமாதா
வண்மைமெத்த விசனமுடன் பெற்றாள்பாரு
மன்னப்பா இவன்பிறந்த உடனேகேளு
மாடதுவும் பிதாவினைத்தான் குத்துமன்றே.

(இ-ள்.) சொன்னவண்ணம் இவன் பிறக்கும்போது இவன் பிதாவும் வீட்டிலில்லையாம்; அம்மான்மார் அவ்வேளையி லங்குயிருந்தார்கள்- இவனை இவன்றாய் மெத்தவும் விசனமோடு பெற்றாள். இவன் பிறந்த வுடனே மாடானது தகப்பனைக் குத்திற்று எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வருவினையினைக் கூறியுள்ளனர். எப்படி எனில், இவன் ஜெனிக்கும்போது இவன் பிதா அவ்வீட்டிலில்லை யாயினும், தாய் மாமன் அவ்விடம் இருந்தான் தாயானவள் மெத்த வருத்தத்துடன் பெற்றாள். என்பது இவன் பிறந்தவுடன் பிதாவை மாடு குத்தித் தள்ளியதென்பதாம். 88

குத்திடவே இவன்பிறந்த நாலாமாண்டில்
குணமுள்ள பிதாவினுக்கே அலைச்சலாகும்
பத்திடவே பாலகன்றான் பிறந்தநாள் தான்
பரியனவே வசுபதியின் முதற்காலப்பா
நத்திடவே திதியேகா தசியதாகும்
நலமாகப் பிறந்திட்ட னடிசொன்னேன்
முத்திடவே இவன்மூன்று நாளின்கெர்ப்பம்
முதற்சாமப் புணர்ச்சியிலே பிண்டமாச்சே.

(இ-ள்.) குத்திட இவன் பிறந்த நாலாம்வருடத்தில் தகப்பனுக்கு அலைச்சலுண்டாகும். பாலன் பிறந்த நாள் அசுபதியின் முதற் காலாகும்; திதி ஏகாதசி யாகும் நலமாகத் தானே பிறந்தான். இவன் தாயார் குளித்த மூன்றாம் நாள் கெர்ப்பந் தரித்தோனாகும் முதற்சாமம் எ-று.

(வி-ரை.) இங்கு இவன் பிறவி லக்ஷணம் கூறுவாராயினர். எப்படி எனில், இவன் தாய் ஸ்நானம் செய்த மூன்றாம் நாள் கருதரித்தவன். மற்றும் ஏகாதசியில் அஸ்வனி 3-ல் பிறந்தான். இவன் வயது 4-ல் பிதாவுக்கு மகா துன்பம் உண்டாயின என்பதாம். 89

பிண்டமடா பாலனிவன் பிறந்ததாலே
பிரியமாய் லக்கினத்திற் செவ்வாய்சுக்கிரன்
அண்டமடா சனியுடனே மூன்றுபேர்கள்
அன்பாக விருந்தார்க ளந்நேரத்தில்
விண்டனடா விற்பனனு யிருந்துவாழ்வான்
விருதான விவன்வயதின் விபரங்கேளு
கண்டமடா இவனுக்கே ஆறுகெண்டம்
கருணையால் வந்ததென்றே கருதிச்சொல்லே.

(இ-ள்.) இப்பாலன் பிறக்கும்போது இலக்கினத்தில் செவ்வாய், சுக்கிரன், சனி இவர்கள் மூன்றுபேரும் நல்லவாக இருந்தார்கள். ஆதலால் இவன் விற்பன்னனாக இருந்து வாழ்குவான்; இவன் வயதின் விபரங்கேளும் கெண்டம் இவனுக்கு ஆறுண்டென்பதும் கருதிச் சொல்வாய் எ-று.

(வி-ரை.) இங்கு இவனது கிரக அடவியையும் யோகத்தையுங் கூறுவாராயினர். அவையாவன, இவன் ஜனன லக்கினத்தில் குஜன் சனி சுக்கிரன் ஆகிய மூவரிருந்தனர் என்றதாம். இதன் பயனாய் இவன் மிக்க விற்பன்னனாயிருப்பானாயினும் ஆறு கெண்டாதி கெண்டங்கள் உடையவன் என்பது கருத்தாகும். 90

சொல்லவே இவனுக்கு வயதுமைந்தா
சொல்லுகிறே னறுபத்தெட் டாகுமப்பா
நல்லுவேன் இவன்வயது பதின்மூன்றுக்குள்
நலமாக விவாகமது முடியுமன்றே
அல்லுவே னிவனுக்குப் பிள்ளைநான்காம்
அன்பான ஆணிரண்டு பெண்ணிரண்டு
உல்லுவே னிவன்மைந்தன் யோகசாலி
உத்தமர்க்கே நல்லிடத்தில் விவாகமாமே.

(இ-ள்.) சொல்ல இவனுக்கு வயது மொத்தம் அறுபத்தெட்டாகும். இவனுக்கு பதிமூன்று வயதுக்குள் விவாகமானது முடியும். பிள்ளைகள் நான்குண்டாகும்: அதில் ஆண் இரண்டு பெண் இரண்டாகும். இவனுடைய மைந்தர்கள் யோகசாலிக ளாவர். உத்தமர்க ளாகிய இவர்கட்கு நல்ல இடத்தில் விவாகமாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னை எனின், இவனுக்கு வயது 68 - என்க. 13-க்குள் விவாகம் நடக்கும். இவனுக்கு உத்தம யிடத்தில் மனைவி கிடைப்பாள். இதுவன்றி இவனுக்குப் பிறக்கும் குழவிகள் நால்வருள் ஆண் 2. பெண் 2 என்பது கருத்தாகும். 91

ஆகவே இவன்வயது பதினாறுக்குள்
அன்பான பிதாவுந்தான் இறப்பான்பாரு
தாகவே இவன்வய திருபத்தாறில்
தனைப்பெற்ற தாயாருஞ் சாவாள்பாரு
யாகவே பனிமொழியா ளிவன்றேவியாகும்
பைங்கொடியாள் பத்மினிப்பெண் ணாகும்பாரு
ஆகவே ஆச்சரிய முள்ளமைந்தன்
அதிகார முடையபிர பல்லியத்தோரே.

(இ-ள்.) ஆகவே இவன் வயது பதினாறுக்குள் தகப்பன் மரணமாவான். வயது இருபத்தாறில் தாயார் மரணமாகுவாள்; இவன்தேவி பனிமொழி யுடையவளாகும். பத்மினி ஜாதியாகும். இவன் ஆச்சரிய முள்ளவனாகும்; அதிகாரமும் பிரபலமுடையவனாக வாழ்குவான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில் 16-க்குள் பிதாவும், 26-ல் மாதாவும் மரணமாவர். இவன் மனைவி மகா உத்தமி. இந்த ஜாதகன் எவரும் ஆச்சர்யப்படத்தகுந்த நிலையில் மிக்க மேன்மையுடன் வாழ்வன் என்பது கருத்தாகும். 92

சதுர்பந்த ரேகையின் பலன்

தேறவே சதுர்ப்பந்த ரேகையொன்று
தோன்றுதலைச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
ஆறவே மால்விரலிற் கீழேயப்பா
அன்பான ருத்திரவரை கீழ்நிற்கும்
சாரவே சதுர்ப்பந்த ரேகைதானே
சற்சனனாய் இறுகிறு இரண்டுபுள்ளி
கூறவே திரிகோணத் துடனேமைந்தா
குணமாக இருக்குமது கூறக்கேளே.

(இ-ள்.) தேறும்படியாக சதுர்ப்பந்த ரேகையான தொன்று சொல்லு கிறேன் கேளும்; அது மால் விரலின் கீழே ருத்திர வரைக்குக் கீழே நிற்கும். சதுர்ப்பந்த ரேகையானது இருகீறும் இரண்டு புள்ளியும் திரிகோணமுட னிருக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியில் சதுர்ப்பந்த ரேகை என்பதொன்றுண்டு எனவும், அவை மால்விரலுக்கும், ருத்திர வரைக்கும் கீழே காணப்படுவதெனவும், இவை இரண்டு கீற்று ரேகையும், இரண்டு புள்ளிரேகையுடன் திரிகோண மாய் அமைந்திருக்கும். எனவுங் கூறுவாராயினர். இதன் பலன் பின் வருமாறு. 93

கேளப்பா பாஞ்சால னுலாஞ்சாதி
கேவலமாய்க் கரிமுகவன் வர்ணமாகும்
நாளப்பா விகாரமு மிகுத்தரூபம்
நலமாக விருக்குமடா நாடிக்கேளு

ஆளப்பா இவன்பிறந்த பிறவியோகம்
அன்பாகச் சொல்லுகிறே னுய்ந்துகேளு
வீளப்பா இல்லாமற் றிசையோகத்தில்
விகற்பமாய் வாழ்ந்திருந்த விபரங்கேளே.

(இ-ள்.) கேட்பாயாக, மேற்கூறிய ரேகையுடையோன் பாஞ்சாலன் நான்காஞ் சாதியாகும்; விஞயகனைப்போன்ற நிறமுடையவனும், விகாரரூபனுமானவன். இவன் பிறந்த யோகஞ் சொல்கிறேன் கேளும், இவனுக்குத் திசை யோகமானது இல்லாமல் விகற்பமாகத் தானே வாழ்ந்த விபரங் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னெனின், இவன் பாஞ்சால தேசத்து சூத்திரன் என்றனர். மற்று மிவனது ரூபம் முதலியவற்றைக் கூறுமிடத்து விஞயகரை யொத்த நிறம் என்றதோடு விகார முகமும் கருத்த ரூபமும் என்றனர். மற்று மிவனது யோகம் முதலியனவற்றைக் கூறுவார். 94

கேளடா இவன்பிறவி பத்துப்பேராம்
கேவலமா யாணெட்டுப் பெண்ணிரண்டாம்
வாளடா இவன்றானு நாலாம்பேரும்
வண்மையாய்ப் பிறந்தனடா பூசந்தன்னில்
தாளடா நன்மையுள்ள மைந்தன்றானும்
நலமான போகவான்று னுடிப்பாரு
தாளடா இவன்றனக்குக் குடியூர்மூன்றும்
தாரமிரண் டிவனுக்கு யாகுந்தானே.

(இ-ள்.) கேட்பாயாக, இவனுடன் பிறந்தோர் பத்துப் பெயராகும். அதில் ஆண் எட்டு, பெண் இரண்டாம். இவன் நாலாவதுப் பிள்ளையாகும். பூச நட்சத்திரத்தில் பிறந்தவன்; நலமுடைய மைந்தன் யோகவான்; இவனுக்குக் குடியிருப்பாகிய ஊர் மூன்றாகும்; தாரம் இரண்டுண்டாகும் எ-று.

(வி-ரை.) இவனுடன் பிறந்தவர் மொத்தம் 10-பேர் எனவும், அவர்களுள் ஆண் 8. பெண் 2. எனவும் இந்த ஜாதகன் நான்காம் பிறவி என்பதும் கருத்தாம். இதுவன்றி இவன் பூசத்திற் பிறந்தவனும் யோகவானும் 3-ஊர்களில் வாசம் செய்பவனும் இரண்டு மனைவிகளை யுடையவனும் ஆகும் என்பது கருத்தாகும். 95

ஆகுமப்பா விவாகமது இரண்டதாகும்
அன்பாக முடியுமென் றுய்ந்துசொல்லு
வாகுமப்பா இவனுக்குப் பிள்ளையாரும்
வண்மையாய்ப் பிறக்குமென்றே வசனித்தோனும்

பாகுமப்பா பலபொருள்கள் சேரும்யோகம்
பாங்கான இவன்பெருமை பகரக்கேளு
ஆகுமப்பா இவன்ருனு மேழாங்கெர்ப்பம்
ஆச்சரிய முள்ளமைந்த னறிவுகூறே.

(இ-ள்.) இரண்டு விவாகம் ஆகும்- பிள்ளைகள் ஆறு பிறக்கும். பலவித மான பொருள்கள் சேரும். யோகத்தினுல் இன்னமும் இவனுடைய பெருமையைச் சொல்வேன் கேளும்; இவன் தாயார் குளித்த ஏழாவதுநாள் கருத் தரித்தவனிவனுகும் ஆச்சரிய முள்ளவன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னவெனின், இந்த ஜாதகன் மாதா ஸ்நானம் செய்த 7-ஆம் நாளில் கெர்ப்பம் தரித்தவன் எனவும், 6-புத்திரர்களை யுடையவனுகிச் சகல சம்பத்தும் நிறைந்தவனுய் வாழ்வான் எனவுங் கூற வேண்டும் என்பதாம். இதுவன்றி மேற்கவியில் மனைவியர் இருவர் என்றதையே இங்குக் குறிப்பிட்டுள்ளதையறிக. 96

கூறுகிறே னிவன்மாதா தலைகுளித்து
குறிப்பாகப் புருஷனுடன் குலாவியேதான்
தீறுகிறேன் மாமிசபட் சணங்கள்செய்து
திறமாகத் தென்முகமாய்ப் புணர்ச்சியானுர்
மாறுகிறேன் முதற்சாம நித்திரைசெய்து
மருவியவ ரிருபேரும் லீலையானுர்
சாறுகிறேன் லக்கினத்திற் சுங்கன்புந்தி
சற்சனராய் சனிமூவ ரிருந்திட்டாரே.

(இ-ள்.) மாதா தலையானது குளித்து புருஷனுடன் குலாவி மாமிச பட்சணங்கள் செய்து தென்முகமாகப் படுத்துப் புணர்ச்சியானது செய்ய முதற்சாமம் நித்திரையானதுப் பிரிந்து தெளிந்து மருவி லீலையா னது புரிந்தார். இவன் பிறக்கும்போது இலக்கினத்தில் சுக்கிரன், புதன், சனி இவர்கள் மூவரும் சர்ச்சனராக விருந்தனர் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் கெர்ப்பந்தரித்த காலத்து இலக்ஷணங்களைக் கூறியுள்ளனர். எப்படி எனில், இவன் தாய் ஸ்நானம் செய்த ஏழாம்நா ளிரவு மாமிச பக்ஷணமருந்தி முதற்சாமத்தில் தெற்கு முகமாயிருந்து புணர்ந்ததால் இவன் ஜனன லக்கினத்தில் சுக்கிரன் புதன் சனி ஆகிய மூவர் ஜென்ம லக்கினத்தி லிருந்தனர் என்பது கருத்தாம். 97

இருந்திடவே இவன்பிறந்த மனைதான்மைந்தா
இயல்பாக வடவாக லொற்றைக்கூரை
பொருந்திடவே இவன்பிறக்கும் போதுமைந்தா
போதமுள்ள பிதாவுமவன் வீட்டிலில்லை

அரிந்திடவே யாச்சரிய முள்ளபாலன்
அன்பான கர்க்கடக லக்கினத்தில்வந்தான்
வரிந்திடவே பூரநாள் ரெண்டாம்காலம்
வண்மையுடன் பிறந்தனடா மைந்தன்றுனே.

(இ-ள்.) இருந்திட இவன் பிறந்த மனையானது வடக்கு பார்த்த வாசல் ஒற்றைக் கூரைவீடாகும். இவன் பிறக்கும்போது தகப்பன் வீட்டி லில்லையாம்; இவன் ஆச்சரியமுள்ள பாலனாகும்; கர்க்கடக லக்கினத்திற் ஜெனித்தவன்; பூர நட்சத்திரம் இரண்டாங்காலம் வண்மையாகப் பிறந்தவன் எ-று.

(வி-ரை.) இக்கவியி லிவன் பிறந்த வீட்டின் லக்ஷணத்தையும் நாள் கோள் முதலியனவற்றையுங் கூறியுள்ளனர். அவையாவன, ஒற்றைக் கூறை வீட்டில் தெற்கு வாசலில் கடகலக்கினமும் பூரம் இரண்டாம்பாதம் கூடிய நாளிற் பிறந்தான் என்பதும் கருத்தாகும். 98

தானமெனு மிவனுக்கே வயதுமைந்தா
தன்மையா யெழுபத்தைந் தாகும்பாரு
ஞானமெனு மிவனுக்குக் கெண்டமெட்டு
நலமாகக் கடக்குமென நன்மைகூறு
வானமெனும் வண்மையுள்ள மைந்தனாகும்
வகுத்துரைப்பே னிவனுடைய வளமையெல்லாம்
கானமெனுங் கருணைபெற்ற மைந்தனப்பா
கடாட்சிக்கப் பிறந்தான்காண் உமையாள்றுனே.

(இ-ள்.) இவனுக்கு வயது எழுபத்தைந்தாகும். கெண்டம் எட்டு. அது தவறாமல் நடக்கும். வண்மையுள்ள மைந்தனிவனாகும். இவனுடைய வளமை யாவும் வகுத்துச் சொல்வேன் கேளும். கருணையானது பெற்ற மைந்தனாகும். கடாட்சிக்க உமையவளருளால் பிறந்தவனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது வயதையும் கெண்டாதி கெண்டத்தையும் கூறுவாராயினர். எப்படி எனில் வயது 75-எனவும் கெண்டாதி கெண்டங்கள் எட்டு எனவும், கடவுள் கிருபையால் சகல நன்மையும் உடையவனாகி வாழ்வான் என்பதுங் கருத்தாகும். 99

உமையென்ற இவன்றனு முன்னுடன்னில்
உத்தமனு நந்தியைத்தான் பூசைசெய்து
அமையென்ற வனேகவர முத்திபெற்றான்
அதினாலே நிதிகிடைக்கப் போகம்பெற்றான்
வமையென்ற இவன்வயது முப்பத்தெட்டில்
வாகான நிதிகிடைக்கும் வகையதாக
பமையென்ற இருதாரம் விவாகஞ்செய்வான்
பாலரைப்பெற் றெடுத்திடுவார் பாருபாரே.

(இ-ள்.) இவன் முன்னாளில் நந்திதேவரைப் போற்றிப் பூசையானது செய்து, அநேக வரங்களும் முத்தியாகப் பெற்றான். இவன் வயது முப்பத்தெட்டில் நிதியானது கிடைக்கும்; இரண்டு தாரம் விவாகமானது செய்வான். பாலரைப் பெற்றெடுப்பன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், இவன் முன் சனனத்தில் நந்தியைப் பூசித்து வந்தவன் எனவும், அப்போது அனேக வரங்களைப் பெற்றவனாகி இவன் வயது 38-ல் புதையல் எடுப்பவனாகி இரண்டு மனைவியுடன் புத்திரபாக்கியத்துடன் வாழ்வான் என்பதும் கருத்தாகும். 100

ஆக காண்டம் 5-க்கும் பாடல் 456.

ஆறாவது காண்டம்

சசிவர்னன் சம்புராதி ரேகைகளின் பலன்

பாரப்பா சசிவர்னன் சம்புராதி
பாங்கான கணுவிரலி லிருக்கும்பாரு
காரப்பா இருகூறு மைந்துபுள்ளி
கருணையாற் சதுர்க்கோண மிருக்கும்பாரு
சாரப்பா சற்சனமா யைந்துரேகை
சார்வாக இருக்குமப்பா மைந்தாகேளு
கூறப்பா இவன்கையி லிருக்குமாகில்
கூறுகிறே னிவன்பெருமை சொல்லக்கேளே.

(இ-ள்.) பார்க்க வேண்டுமானால் சசிவர்னன் சம்புராதி இவைகள் கணுவிரலிலிருக்கும். அது இருகூறும் ஐந்து புள்ளியும் சதுர்க் கோணமுமாக விருக்கும்; சர்ச்சனமாகத் தானே ஐந்து ரேகை சார்ந்திருக்கும் அவ்வித ரேகையுள்ளோன் பெருமையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக எ-று.

(வி-ரை.) இங்கு சசிவர்னன் சம்புராதி ரேகை என்பதின் விவாத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, கணுவிரலின்கண் ஐந்து புள்ளிகள் இரண்டு கூறும் ஐந்து ரேகைகள் கூடி சதுர்க்கோணமாயுமிருக்கும் என்பதாம். இதன் பலன்பின் வருமாறு. 1

கேளடா இவன்பிறவி யோகம்வாழ்வு
கேவலமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
நாளடா இவன்பிறந்த மனைதான்மைந்தா
நலமான கீழ்வாசல் மனைதானாகும்

LuraTech
Document Processing Solutions

ஆளுடா ஒத்தநல்ல கூரையாகும்
   அன்பான பாலகனும் கன்னிமூலை
வீளடா இல்லாமல் பிறந்தான் மைந்தன்
   விபரமதைச் சொல்லுகிறேன் வியந்துகேளே.

(இ-ள்.) கேட்க இவன் பிறவியும் யோகமும் வாழ்வும் ஆக யாவும் சொல்கிறேன் கேளும். இவன் பிறந்த மனை கீழ்வாசலுள்ள மனையாகும். ஒத்தைக் கூரையுள்ளதாம். பாலன் பிறந்தது கன்னிமூலையாகும். இவன் பிறந்த விபரம் சொல்கிறேன் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த வீட்டினது இலக்ஷணங்களைக் கூறுவாராயினர். எப்படி எனில், கீழ்வாசலையுடைய கூரைவீட்டில் மேற்கு மூலையிலுள்ள வீட்டில் பிறந்தவன் என்பது கருத்தாகும். மற்றும் இவன் பிறக்குங்காலம் இவன் தாய்க்கு எவ்விதத் துன்பமும் இன்றிப் பிறந்தான் என்பது கருத்தாகும். 2

கேளப்பா இவன்பிறந்தான் மதியின்வாரம்
   கேவலமாய் லக்கினத்தில் வியாழன் மைந்தன்
வாளப்பா இவன்பிறக்கும் போதிற்றனும்
   வண்மையா யந்நேரம் பெண்கள்மூன்றும்
தாளப்பா இவன்பிறக்கும் போதிலன்று
   தன்மையுள்ள பிதாவுந்தான் வீட்டிலில்லை
ஆளப்பா வாச்சரியம் பிறந்தபாலன்
   ஆராலும் இவனைவெல்ல முடியாதன்றே.

(இ-ள்.) இவன் பிறந்தவாரம் திங்களாகும்; இலக்கினத்தில் வியாழன், சனி இவர்கள் இருந்தனர்; இவன் பிறக்கும்போது அருகிலிருந்தவர் பெண்கள் மூன்று பெயராம்; இவன் பிறக்கும்போது தகப்பன் வீட்டி லில்லையாம். ஆச்சரியமாகப் பிறந்த பாலனாகும். இவனைவெல்ல யாராலும் முடியாது எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த வாரம் கிரகம் முதலிய அடையாளங்களைக் கூறுவாராயினர். எப்படியெனில், திங்கட்கிழமையில் பிறந்தவனும் ஜென்ம லக்கினத்தில் குரு சனி என்னு மிருவ ரிருக்கவும், பிரசவ காலத்தில் தாயுடன் மூன்று பெண்களிருக்கவும், அக்காலம் இவன் பிதா வீட்டிலில்லை என்றுங் கூறவேண்டுவதாம். 3

அன்றெனவே இவன்பிறந்தான் சித்திரைமாதம்
   அன்பான பௌரணையு மதியின்வாரம்
நன்றெனவே இவன்பிறவி ஏழுபேராம்
   நலமுள்ள ஆண்நாலு பெண்கள்மூன்று

LuraTech Document Processing Solutions

வின்றெனவே இவன்ருனு நாலாம்பேராம்
விகற்பமுள்ள மைந்தனிவ னேழாங்கெர்ப்பம்
சென்றெனவே இவனுடைய செயல்தான்மைந்தா
செம்மையுள்ள மைந்தனடா திறவான்றனே.

(இ-ள்.) இவன் பிறந்தது சித்திரைமாதமாகும்; பௌர்ணமி திங்கட்கிழமை; இவனுடன் பிறந்தவர்கள் எழுபெயராகும். அதில் ஆண் நாலு பெண் மூன்றும் இவன் நாலாவதுப் பிள்ளையாகும்; இவன் தாயார் குளித்த ஏழாநாளில் தரித்தவனுகும்; இவனுடைய செயலானது மெத்த வுண்டாகும் திறமுடையவன் எ-று.

(வி-ரை.) இக்கவியாலு மிவன் பிறந்த மாதம் திதி பரவி முதலியன வற்றையே கூறுகின்றனர். எப்படியெனில், சித்திரை மாதம் திங்களும் பூரணையுங் கூடிய நாள் என்பதாம். இதுவன்றி இவன் தாய் ஸ்நானம் செய்த ஏழாம்நாள் கெர்ப்பம் தரித்தவன் எனவும் இவனுடன் பிறந்தோ ரெழுவருள் ஆண் 4 எனவும் பெண்கள் 3 எனவுங் கூறவேண்டுவதாகும். 4

தானடா இவனல்ல சாஸ்திரவாதி
தருவான வஷ்டசித்துங் கைக்குள்ளாகும்
வானடா வையகத்தி லிவனைப்போலே
வரிசையுள்ள பாலகன்ருன் யோகமெத்த
தானடா சற்சனனுஞ் சமர்த்தனவன்
தயவுள்ள சிவபத்த னுகும்பாரு
ஊனடா இவன்வயதோ தொண்ணூற்றாறு
உத்தமனுந் தவசியாய்ப் போவானன்றே.

(இ-ள்.) இவன் நல்ல சாஸ்திரவாதியாகுவன்; அஷ்டசித்தும் இவன் கைக்குள்ளாகும்; வையகத்தில் இவனைப்போல் வரிசையுள்ள பாலர்களில்லை; யோக மெத்தவுடையவன். சர்ச்சனனும் சமர்த்தனுமாக விருப்பன்; தயவுடைய சிவபத்தனுகுவன். இவனுக்கு வயது தொண்ணூற்றி யாராகும்; இவன் தவசியாகுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், இந்த ஜாதகன் சகல சாஸ்திரத்தையுங் கற்றவனுகி மிக்க யோகமுடையவனுய் சிவத்தொண்டு செய்பவனுய்த் தன் வயது 96-ல் தபசியாய்ப் போகத்தகுந்தவன் எனவும் மகா சமர்த்துடையவன் எனவுங் கூறவேண்டுவதாகும். 5

அன்றெனவே இவன்வயது பதினேழுக்குள்
அன்பான பிதாவுந்தா னிறப்பானப்பா
இன்றெனவே இவன்வயது முப்பத்தாறில்
இயல்பான மாதாவும் இறப்பதாகும்

UpaTech Document Processing Solutions

குன்றெனவே குவலயத்தி லிவனைப்போலே
குணமுள்ள மைந்தனில்லை கூறினோம்பார்
நன்றெனவே நான்முகனால் விதித்தபடியப்பா
நன்மையுடன் முடியுமென்றே நான்சொன்னேனே.

(இ-ள்.) இவனுக்கு வயது பதினேழுக்குள் தகப்பன் மரணமாகுவன். வயது முப்பத்தாறில் தாயார் மரணமாகுவாள். இவனைப்போல குணமுடையோர்கள் குவலயமீது இல்லையாம். நான்முகனார் விதிப்படி நன்மையாக முடியுமென்று நானுஞ் சொன்னேன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது தாய் தந்தையர்களது கெண்டாதி கெண்டங்களைக் கூறியுள்ளனர். எப்படி எனில், நான்முகன் விதித்தபடி இவன் வயது 17-க்குள் பிதாவும் 36-ல் மாதாவும் மரணமடைவர் ஆயினும் இவனுக்கு எவரையும் இணைசொல்ல முடியாது என்பதாம். 6

கார்மேகவருண விந்தரேகையின் பலன்

சொன்னனப்பா இன்னமொரு ரேகைதானும்
சொல்லுகிறேன் மைந்தனே துரிதமாக
வன்னப்பா சிராக்கினியு முள்ளரேகை
வண்மையாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
அன்னப்பா அயிஸ்வரிய முள்ளரேகை
அன்பான உமையவளு மருளிச்செய்வாள்
கன்னனப்பா கார்மேக வர்னவிந்தம்
காசினியிற் காண்கிறது கனத்ததாமே.

(இ-ள்.) சொன்னபடியே இன்னமொரு ரேகையைச் சொல்வேன் கேட்பாயாக; சிராக்கினியுள்ள ரேகையின் மார்க்கம் சொல்கிறேன்; அது ஐஸ்வரிய முள்ள ரேகை; அதற்கு உமையவளும் அருளிச்செய்வாள் கார்மேக வர்னவிந்தம் காசினியிற் காண்பது கனத்ததாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனின், வர்னவிந்தரேகை யொன்றுளது. அவை மகா அதிசயமானது. இந்த ரேகையுடன் பிறப்பவர்கள் அறிதினும் அரிது. ஆனதால் அப்படிப்பட்ட ரேகையினது விவரத்தினைக் கூறுவேன் கேளுங்கள் என்பது கருத்தாம். 7

கனத்ததொரு வருணவிந்தம் பாஞ்சாலித்தான்
காரணமாய் ஸ்திரீபுருஷ னிரண்டுரேகை
வனத்ததோ ராள்காட்டி விரலிலேதான்
வாகான மகுடத்தி லிரண்டுகிறு
தனித்ததொரு மகுடத்தின் கீழேமைந்தா
தாரணமாய்ச் சக்கரம்போ லிருக்கும்பாரு
பனத்ததொரு வதின்கீழே திரிகோணமப்பா
பாராளக்காட்டும் விரலிற் காணும்பாரே.

(இ-ள்.) வருண விந்தமெனவும், பாஞ்சாலி எனவும் காரணமாகிய ஸ்திரீ புருஷர் ஆகிய இரண்டுரேகை ஆள்காட்டி விரலில் மகுடத்தின்மீது இரண்டு கீறும் மகுடத்தின் கீழே சக்கரம்போல் இருக்கும்; அதின்கீழே திரிகோண மிருக்கும் இவை ஆள்காட்டி விரலிற் காணும் பார் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனின், மேற்படி வர்ன விந்த ரேகை என்பது ஸ்திரீ புருஷாளாகிய இரண்டு ரேகைகளா யமைந்திருக்கும் அவையாவன, ஆள்காட்டி விரலினது உச்சியில் இரண்டு கீற்றும் அதற்குக் கீழ் சக்கரம் போன்று ஒன்றும் அதன் கீழ் திரிகோணம் போன்ற ரேகை யொன்றுமா யிருக்கும் என்பதாம். 8

காணுகின்ற சக்கரமு முகிலுங்கூடி
  காரணமா யிருக்குமது மைந்தாகேளு
தோணுகின்ற மயேந்திரம் ஏறிநிற்கும்
  தோன்றுதலே இதன்பெருமை சொல்லக்கேளு
ஆணுகின்ற யிவன்பிறந்த யோகவாழ்க்கை
  ஆச்சரியம் சொல்லுகிறே னன்பாய்க்கேளு
வாணுகின்ற யிவன்மாதா எவரோவென்னில்
  மங்கையிவள் பெருமைதனை வழுத்தக்கேளே.

(இ-ள்.) சக்கரமும் முகிலுங்கூடி மயேந்திரமேறி நிற்கும்; இதன் பெருமையைச் சொல்லக்கேளும்; அவ்வித ரேகையுள்ளோன் பிறந்த யோகவாழ்க்கையின் பலன் சொல்லுகிறேன்கேள்; இவன் மாதாபிதாவினுடன் இவன் பெருமையும் வழுத்துகிறேன் பாரும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிங்குக்கூறும் ரேகையினது பெருமையினைக் கூறப்பட்டது. எப்படி எனில், அக்கினியும் ஜலமும் கூடியதைப் போன்று ஏறிநிற்கும் இந்த ரேகையினது பெருமையினையும், இவன் தாயினது விருத்தாந்தத்தையுங் கூறுவேன் கேளுங்கள் என்பதாம். 9

கேளடா யிவன்மாதா விவாகமில்லை
  கேவலமாய்த் தாய்தந்தை சுற்றமுற்றும்
வாளடா மனையுமில்லை மனிதரில்லை
  மங்கையவள் வறுமைகொண்டு மறையோன்வீட்டில்
நாளடா வேதியற்குப் பணிவிடைசெய்து
  நலமாகத் தொழில்செய்து நடக்குங்காலம்
ஆளடா வாச்சரிய மிவனைப்பெற்ற
  ஆரணங்கு ருதுவாகி வாழுங்காலே.

(இ-ள்.) கேட்பாயாக. இவனுடைய மாதாவிற்கு விவாகமில்லை; அவள் தாய் தந்தை சுற்ற முதலானதும் அற்று மனையுமில்லாமல் மனிதருமில்லாமல்

மங்கையானவள் வறுமையான துக்கங்கொண்டு ஓர் மறையோன் வீட்டில் பணிவிடைகள்செய்து வருங்காலத்தில் இவளைப்பெற்ற அம்மங்கையானவள் ருதுவாகி வாழுங்காலத்தில் கேளும் எ-று.

(வி·ரை.) இக்கவியின் கருத்தென்னவெனின், இவனது தாய்க்கு தாய் தந்தை சுற்றம் முதலிய மற்றோரின்றி விவாகமில்லாத ஓர் பிராமணனது இல்லத்தில் பணிவிடைசெய்யுங் காலம் ருதுவாகினாள் என்பது கருத்து இதன் பின் வரும் கவியைப் பார்க்கவும். 10

வாழுகின்ற நாளையிலே மறையோன்றானும்
  வண்மையாய் முற்சனனம் நந்தியாகும்
ஆழுகின்ற மறையவனுஞ் சாஸ்திரவாதி
  அன்பான ஸ்திரீயுடனே சேரவேண்டி
நாழுகின்ற லக்கினமு நாளும்பார்த்து
  நல்மான நட்சத்திர வாரம்பார்த்து
தாழுகின்ற தட்சணமே கூடவேண்டி
  தண்மையா யெண்ணியிவன் கூடுங்காலே.

(இ-ள்.) வாழும்நாளில் அம்மறையோனுடைய செய்தியைக்கேளும்; அவன் முன்ஜென்மத்தில் நந்தியாரும்; அம்மறையவன் சாஸ்திரவாதியான தால் ஸ்திரீயுடன் சேரவேண்டி இலக்கினமும் நாளுஞ் சேர்த்து தக்ஷணமே கூடவேண்டி தன் மனையாளை யெண்ணியிருக்குங் காலத்தில் எ-று.

(வி-ரை.) மேற் சொன்னவாறு பணிவிடை செய்திருந்த இவன் தாய் ருதுவாகி யிருக்குங்காலம் மேற்படி பிராமணன் தன் முன் சனனத்தில் நந்தியும் இச்சனனத்தில் சாஸ்திரவாதியுமானதால் இவளைச் சேரவேண்டும் என்னும் கருத்துடையவனாய் நாள் கோள் முதலியன உத்தமமாயுள்ள நேரத்திற் கூடினான் என்பது கருத்தாகும். 11

கூடவப்பா நாள்வரும்போ தவன்பெண்சாதி
  கூர்மையுள்ள மாதவள்தா னில்லாத்திலில்லை
நாடப்பா நாயகியு மில்லாவேளை
  நலமான விந்தநல்ல மங்கையைத்தான்
தாடப்பா பிராமணனு மாதுமாகத்
  தன்மையுட னந்நேரம் கூடினார்பார்
வீடப்பா விமலர்தனை நினைத்துப் பார்ப்பான்
  வெகுலீலை செய்துவிந்தை விட்டிட்டாரே.

(இ-ள்.) கூடும்படியான நாளானது வரும்போது அவன் பெண்சாதி கூர்மையுள்ள மாது அவள் இல்லத்தி லில்லையாம்; நாயகியும் இல்லாத வேளை

Curatech Document Processing Solutions

யானதால் இந்த மங்கையைப் பிராமணன் கூடினன் விமலனை நினைந்து, அவ் வேதியன் வெகுவிதமான லீலைகள் புரிந்து விந்தை விட்டான் எ-று.

(வி-ரை.) மேற்சொன்னவாறு இவன் தாயும் மேற்படி பிராமணனும் லீலை செய்கையில் மேற்படி பிராமணனுடைய மனைவி மேற்படி வீட்டி லில்லை என்பது கருத்து. மற்று மிக்கவியை நோக்குமிடத்து மேற்படி பிராம ணன் உத்தம புத்திரனைப் பெறவேண்டுமென்றே இவ்வாறு செய்திருக்கக் கூடும் எனவும், இவை ஈசனது திருவிளையாடலே எனவும் யூகிக்கப் படுகிறது. 12

விட்டிடவே யிவளுக்குக் கொ்ப்பமாச்சு
  வியாபகப் பதிகளுண்டாய் படைத்தாரீசன்
தொட்டிடவே யிவளுக்குக் கெற்பமுத்தி
  தோன்றுதலே முற்சனனஞ் சொல்லுவேன்கேள்
பட்டிடவே பால்மொழி தங்கையப்பா
  பாங்கான தோழியிவள் மங்கையாகும்
விட்டிடவே முற்சனன சாபத்தாலே
  விண்ணைவிட்டுப் புவியில்வந்தாள் மங்கைதானே.

(இ-ள்.) விட்டிட யிவள் தனக்குக் கொ்ப்பமானது வாச்சு. வியாபகப் பதிகளுண்டாகப் படைத்தனர் ஈஸ்வரன். அதன் பின்பு இவளுக்குக் கொ்ப்ப மானது முத்தியபின் இவளுடைய செனனஞ்சொல்வேன் கேளும்; இவள் பால் மொழிந்த தங்கையாகும். பாங்குள்ள தோழியுமாகும். இவள் முன் செனனத்திற் சாபத்தினுல் விண்ணைவிட்டுப் புவியில் வந்தவளாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னஎனில், இவர்கள் பூர்வஜன்மத் தில், தோழனும் தோழியுமாயிருந்தா ராயினும் அச்செனனத்தில் நேர்ந்த வினைப்பயனுல், ஷைதேவ உலகத்தைவிட்டு இப்பூமியிற் பிறந்தனர் என்பதாம். இப்பாட்டின் கருத்து விளங்காததற்குக் காரணம் கவிக்குற்றமாதலால், இதன் உண்மைக் கவி எவை என்பதைக் கூடிய சீக்கிரம் திருத்துவாம். 13

மங்கையிவ டன்வயிற்றிற் கஞ்சன்பாலன்
  மகத்துவமாய்ப் பிறப்பனடா சிசுபாலன்றானும்
தங்கையிவ ளதிகமடா யோகசாலி
  தாரணியிற் குபேரனைப்போல் வாழ்வாள்மங்கை
அங்கையிவள் மைந்தனைத்தான் பெற்றபோது
  ஆச்சரிய முள்ளவளாம் ஆய்ந்துகேளு
நங்கையிவள் பெற்றெடுத்த மைந்தன்தானும்
  நலமான பிள்ளையென்று நாடிச்சொல்லே.

(இ-ள்.) மங்கையாகிய இவள் வயிற்றில் கஞ்சன் பாலன் மகத்துவமா கிய சிசுபாலன் பிறப்பன். இவள் அதிகமாகிய யோகசாலியாகும் தாரணியில்

குபேரனைப்போல் வாழ்குவள். இவள் மைந்தனைப் பெற்றபோது ஆச்சரிய முள்ளவளாவாள். அதை ஆய்ந்துக்கேளும். இவன் பெற்றெடுத்த மைந்தன் நலமுள்ள பிள்ளையாகு மென்று சொல்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது புத்திரன் யோகத்தையும் உண்டாகும் விவரத்தையுங் கூறுவாராயினர். எப்படிஎனில், இவள் வயிற்றில் கஞ்சனை யொத்தச் சிசு ஒன்றைப் பெறுவாள். அது முதல் இவளது பெருமையினை யும் யோகத்தினையுங் கூற முடியாது என்பதாம். 14

சொல்லுவே னிவன்பிறந்த விடந்தான்மைந்தா
  சொற்பெரிய வாற்றருகின் மங்கைதானும்
நல்லுவே னிவடானுங் கீரைகிள்ளி
  நலமாகக் கொண்டுவந் தருந்தவேண்டி
அல்லுவே னுதித்த னுதையநேரம்
  அழகான மங்கையிவள் வேதனையேபட்டு
உல்லுவே னுத்தமியு மைந்தனைத்தான்
  உத்தமியு மாற்றருகில் பெற்றதன்றே.

(இ-ள்.) சொல்லிய இவன் பிறந்தயிடம் ஆற்றுக்கு அருகே இம்மங்கை யானவள் கீரைக் கிள்ளிக்கொண்டு வருந் தருணந் தன்னில் ஆதித்தன் உதையநேரத்தில் இம்மங்கையானவள் வேதனைப்பட்டு உத்தமியாகிய இவள் மைந்தனை ஆற்றினருகில் பெற்றாள் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மேற்படி கஞ்சன், சிசுபாலன் ஆகிய இவர்களை யொத்த புதல்வனை எங்கனம் பெறுவாள் என்பதைக் கூறுகின்றனர், அவை யாவன, இவள் கீரைக் கிள்ளி வரவேண்டும் என்றும் ஞாயிறு உதைய நேரத்தில் ஆற்றருகில் செல்லும்போது அங்கனம் மேற்படி புத்திரனைப் பெற்றாள் என்பது கருத்தாகும். 15

அன்றெனவே யிவடானுங் கங்கைக்கப்பா
  அன்பான தோழியிவ ளாகுமுன்பு
நன்றெனவே யிவன்றானும் வருணன்சீடன்
  நலமாக வனேகநாள் விடையேசெய்து
குன்றெனவே குவலயத்திற் கஞ்சனுக்குக்
  குணமாகப் பிறந்ததிவன் சிசுபாலன்றான்
சென்றெனவே யிரண்டாவ திந்தஜென்மம்
  செப்புகிறேன் வேதியர்க்கே தரித்தான்பாரே.

(இ-ள்.) இம்மாது கங்கைக்குத் தோழியாகு முன்பும் இவன் வருணனு டைய சீடனாகும். இவன் அனேகநாள் பணிவிடைகள்செய்து குவலயத்தின்

கஞ்சனுக்கு குணமாகத்தானே பிறந்தான் சிசுபாலனுகவும், இரண்டாவது இந்த சென்மம் பணிவிடை செய்யும்படியாக வேதியற்குத் தரித்தான் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனுக்கு ஜெனிப்பவன் கஞ்சன் மகன் சிசுபாலனேயாயினும் இவன் பூர்வ ஜென்மத்தில் கங்கைக்குத் தோழி எனவும் மேற்படி பாலன் வருண சீடன் எனவுங் கூறப்பட்டன. அப்படிப்பட்ட அபூர்வம்வாய்ந்தவனுய் தனக்கிரண்டாவது ஜெனனமாய் மேற்படி பிராமண னுக்கு ஜெனித்து இவ்வுலகிற் ரேன்றினன் என்பது கருத்தாகும். இவன் 16
காலத்தினது விசேஷம் பின் வருமாறு.

பாரப்பா இவன்பிறக்கும் போதுமைந்தா
பக்கமதி லங்நேர மொருவரில்லை
காரப்பா வத்தலத்தி னன்னேரந்தான்
கனமாக வானேரு முனிவோரெல்லாம்
சீரப்பா யிவன்பிறக்கும் போதிலேதான்
சிவசிவா சிவகளேயுந் திரமதாச்சு
ஆரப்பா வாயுதா னுள்ளமைந்தன்
அன்பான விவனதிக யோகவானே.

(இ-ள்.) பார்க்க இவன் பிறக்கும்போது பக்கத்தில் அங்நேரம் ஒருவருமில்லையாம். அத்தலத்தில் அன்னேரம் வானேரும் முனிவர்கள் யாவரும் இவன் பிறக்கும்போது சிவசிவா வென்னும் சிவக்களேயும் திரமதாகவாச்சு இவன் வாழ்வுடைய மைந்தன் இவன் அதிக யோகவானுகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில் மேற்கூறியவண்ணமாய் இவன் தாயானவள் இவனே ஆற்றங்கரைபருகில் பெறும்போது வானவர் முனிவர் ஆகிய பேர்கள் அங்கனம் சிவா சிவா என்று கூறிக் காத்தனர் என்பது கருத்தாம். 17

யோகமப்பா விவன்பிறந்த போதிலேதான்
ஓகோகோ வன்னேர மாதாவுக்கு
வாகமப்பா ஆயாசங் களேயுமாகி
வண்மையுள்ள குழந்தையது அழுகுங்காலே
ஆகமப்பா வாயாசங் களேயுமாகி
அங்நேர் நாகமது குடைபிடிக்க
பாகமப்பா பாம்பதுவுங் குடைபிடித்து
பாலகனைக் காத்ததனற் படாமற்றனே.

(இ-ள்.) யோகமாகத்தானே இவன் பிறந்த வேளையில் அங்நேரம் மாதாவிற்கு ஆயாசமுங் களேயுமாகி குழந்தையானது அழுகும்போது தாயாருக்குக்

LuraTech
Document Processing Solutions

களைதெளியுமட்டும் நாகசர்ப்பமானது மைந்தற்குக் குடையானது பிடித்துக் கொண்டிருக்கும்; பாலகனைக் காப்பாற்றும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இந்த ஜாதகன் பிறந்தபோது நடந்த அதிசயங் களைக் கூறுவாராயினர். எப்படி எனில், இவன் மேற்படி இடத்தில் ஜெனித்தவுடன் இவன் தாய் மூர்ச்சையாய் விழுந்து விட்டதால் இப்பாலன் மீது அருக்கனது அனல்படாவண்ணமாய் நாகம் என்பது தன் படத்தால் குடை பிடித்தது என்பதாம். 18

தானென்ற வன்னேர மாதுதானும்
தயவாக வெழுந்திருந்து பார்க்கும்போது
வானென்ற குழவியைத்தா னரவம்வந்து
வண்மையுடன் குடைபிடித்து நிற்கக்கண்டு
ஊனென்ற மங்கையவ ளலறிவீழ்ந்தாள்
உற்றதொரு குழவிமேற் பாம்புகண்டு
ஆனென்ற மங்கைமுகம் பார்த்துசர்ப்பம்
ஆச்சரியம் சொல்லுகின்ற வறிவுகேளே.

(இ-ள்.) அந்நேரத்தில் அம்மாது எழுந்திருந்து பார்க்கும்போது அரவ மானது வந்து குழந்தைக்குக் குடைபிடித்து நிற்கக்கண்டு, அம்மங்கையான வள் அலறிவீழ்ந்து அழுகும்போது குழந்தையினிடமிருக்கும் பாம்பானதுக் கண்டு அம்மங்கையின் முகத்தைப்பார்த்துச் சொல்லுகின்ற விபரத்தைக் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னெனின், இவனைப் பெற்றவுடன் மூர்ச்சையாய் விழுந்த இவன் தாய் மூர்ச்சைதெளிந் தெழுந்து பார்க்கும் போது தன் குழவியின்மேல் பாம்பு இருப்பதைப் பார்த்து அலரி வீழ்ந்தா ளாயினும் மேற்படி சர்ப்பமானது இவளது விருத்தாந்தத்தை ஆதியோடந்த மாய்க் கூறுகின்றன என்பதாம். 19

கேட்கவே பெண்ணரசே மாதேகேளு
கேவலமாய் முன்பிறப்பின் செய்தியெல்லாம்
வாட்கவே பின்னுடைய ஜனனவாழ்க்கை
வண்மையாய்ப் பிறந்திட்ட வரலாறுசொல்வேன்
ஆட்கவே நீதானுங் கங்கைதோழி
ஆரணங்கே உன்னுடைய வதிசயங்கேள்
தாட்கவே நீசெய்த தவத்தினாலே
தனம்பெற்ற மாதரசே தயவாய்க்கேளே.

(இ-ள்.) கேட்பாய் ஓ பெண்ணரசே முன்பிறப்பின் செய்தியாவும் உன் னுடையஜெனன வாழ்க்கையும் வண்மையாய் பிறந்த வரலாறுஞ்சொல்வேன்,

நீ கங்கையினுடைய தோழியாகும். உன்னுடைய அதிசயத்தைக்கேளும்; நீ செய்தத் தவத்தினல் தனமானதும் பெற்றமாதரசே தயவாகத்தானே கேளும் எ-று.

(வி-ரை.) மேற்சொன்ன பாம்பு இவன் தாய்க்கு சொல்லும் விருத்தாந்தத்தைக் கூறப்பட்டதென்க. அவையாவன, ஓ மாதே பயப்படாதே உனது விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேள். நீ முன் சன்மத்தில் கங்கை தோழியா யிருந்தாய் அச்சனனத்தில் நீ செய்த புண்ணியமே புண்ணியம் ஆனதால் அவ்விவரத்தைக் கூறுகிறேன் கேள் என்பது கருத்தாகும். 20

கேளேநீ பெண்கிளியே யுன்வயிற்றில்
கேவலமாய்ப் பிறந்ததொரு மைந்தன்றனும்
வாளேநீ கஞ்சன்மகன் சிசுபாலன்றன்
வண்மையா யுன்வயிற்றிற் பிறந்தான்பெண்ணே
ஆளேநீ பாலனைத்தான் பெற்றபோதே
ஆரணங்கே வறுமையெல்லா மோடிப்போச்சு
தாளேநீ யொருநாளுந் தாழ்வதில்லை
தரணியாள் ராசனுமா மைந்தன்றனே.

(இ-ள்.) கேட்பாயாக நீ பெண்கிளியாகிய உன் வயிற்றில் பிறந்த மைந்தன் கஞ்சனுடைய மகனுகிய சிசுபாலனும் அவன் வந்து உன்வயிற்றிற் பிறந்தான்; அப்பாலகனை நீ பெற்றபோது உன்னுடைய வறுமை யாவும் ஓடிப்போச்சு; ஒருநாளுந் தாழ்வானது இல்லை தரணியையாளும் அரசன் மைந்தனுகும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மேற்படி சர்ப்பமானது இவன் தாய்க்குக் கூறும் விஷயத்தினை யுரைக்கின்றனர். அவையாவன, ஓ பெண்பாவாய் உன் வயிற்றிற் பிறந்த பாலனே எனின், கஞ்சன் மகன் சிசுபாலனேயாகும். ஆனதால், இவன் பிறந்தவுடனேயே உன் வறுமை யனைத்தும் ஒழிந்தன. மற்றும், இவன் அரசாளவும் மைந்தன் ஆவன் எனக் கூறியதென்பதாம். 21

மைந்தனம்மா வுந்தனிட வாழ்வுதானும்
மகத்துவங்க ளநேகமுண்டு வாழ்வுமெத்த
ஐந்தனம்மா ஆயுசுதா னுள்ளபாலன்
அன்பாகத் தவஞ்செய்து பிறந்தபாலன்
வந்தனம்மா பாலனுக்குச் சூரியகாந்தி
வளமாகப் படாமலேநான் குடைபிடித்தேன்
இந்தனம்மா விந்தநலத் தலத்திலேதான்
இப்பாலன் பிறக்குங்கால் வந்ததென்றே.

(இ-ள்.) மைந்தனாகிய உந்தனுக்கு வாழ்வும் மகத்துவங்களும் மெத்த வுண்டாம். ஆயுசுடைய பாலனாகும்; தவத்தினால் பிறந்தவன். யான்வந்தது யாதுக்கெனில், பாலகனுக்குச் சூரியகாந்தியானது படாமல் நான் குடைபிடித்தேன்; இந்தத் தலத்தில் இப்பாலன் பிறக்கும்போது நான் வந்தேனம்மா எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் மேற்படி சர்ப்பமானது கூறும் மொழியினையே கூறப்பட்டுள்ளன. அவையாவன, இவன் மகாதவத்தையுடையவன், ஆயுளுடையவன், ஆனதால் அவன்மீது இந்த சூரியனது காந்திபடாவண்ணம் யான் குடைபிடித்தேன் இவனும் நல்ல மேன்மையுடன் வாழ்வான் எனக் கூறியதென்பதாம். 22

வந்தனம்மா யிந்தவிடந் தன்னிலேதான்
வண்மையுடன் எவ்வெவர்கள் வந்தாரெல்லாம்
உந்தனிட கிருபையினால் வானோரெல்லாம்
உண்மையுடன் வந்தருகில் னிற்கின்றார்கள்
சிந்தனைக ளில்லையினி யுந்தனுக்கு
சீக்கிரத்தில் யோகமது வருகும்பாரு
அந்திசந்தி சிவனைமற வாமலின்று
அன்பான குழந்தையைநீ வளர்த்துவாயே.

(இ-ள்.) வந்த வயணமிதுவாகும்; அன்றியும் தேவர்களெல்லோரும் உன்னுடைய கிருபையினால் வானோரெல்லாம் உண்மையாகத்தானே வந்து அருகினில் நிற்கின்றார்கள். இனி சிந்தனைகள் உனக்கு யாதொன்றுமில்லை; சீக்கிரத்திற்றானே யோகமானது வருகும்; அந்திசந்தி யெந்தவேளையும் சிவபெருமானை மறவாமல் நின்று அன்பாகத்தானே குழந்தையை வளர்த்துக்கொண்டு வருவாய் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் மேற்படி பாம்பு கூறுவதையே கூறியுள்ளனர். அவையாவன, ஓ பெண்பாவாய் இப்போது இவ்விடத்தில் வானோர் அனைவரும் வந்து நிற்கின்றனர். ஆனதால் உனக்கிதுமுதல் எவ்வித குறைவும் உண்டாகமாட்டாது. நீ காலையும் மாலையும் சிவனை மறவாதிருந்து இக்குழவியைக் காப்பாற்றுவாய் என்பதாம். 28

வாயென்ற வித்தலத்தில் வருணன்வாயு
வளமான வாசவனுங் குபேரன்றானும்
ஆயென்ற சதாசிவனுங் கிருபையோடு
அந்தரத்தி னிற்கின்றா ரம்மாபாரு
பாயென்ற பராபரனு முமையாள்தாயும்
பைங்கிளியு நிற்கிறதைப் பரிவாய்ப்பாரு
சேயென்ற சிறுகுழந்தை பெற்றாய்மாதே
சீர்மையுள்ள கண்ணரசே செயலைக்கேளே.

(இ-ள்.) வாயென்னும்படியான இத்தலத்தில் வருணன் வாயு திருமால் குபேரன் சிவபெருமான் இவர்கள் அந்தாத்தில் நிற்கின்றார்கள் பாரும். பரமனோடு உமையாள் நிற்கின்றதையும் பாரும். சேயென்னும்படியான சிறு குழந்தையைப் பெற்றமாதே செயலைக்கேளும்.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னெனின், இவ்விடத்தில் வருணன் வாயு குபேரன் வாசவன் சதாசிவனாகிய அனைவருமுள்ளனர். இப்படிப்பட்ட பெருமையுடன் இக்குழவியைப் பெற்றனை ஆதலால் உன் பெருமையை இன்னம் கூறுகிறேன் கேட்பாயாக என்பது கருத்தாம். 24

கேட்கவே பைங்கிளியே நீதான்கேளு
கேவலமாய்க் குசபிரமா வம்மிசத்தில்
வாட்கவே நீபிறந்த ஐந்தாமாதம்
வளமான மாதாவு மிறந்துபோனாள்
ஆட்கவே ஏழாந்தன் மாதந்தன்னில்
அன்பான பிதாவுந்தா னிறந்தான்பாரு
நாட்கவே நன்மையுட நீபிறந்து
நலமாக வாழ்வையம்மா நாடிக்கேளே.

(இ-ள்.) கேட்க பைங்கிளியாகிய நீயேகேளும், குசப்பிரமாவின் வமிசத்தில் நீபிறந்த ஐந்தாம் மாதம் வளமாகிய மாதாவும் இறந்தாள். ஏழாம்மாதத்தில் தகப்பனும் இறந்தான். நன்மையாகத்தானே நீபிறந்து நலமாகத்தானே வாழ்குவை நாடிக்கேளும் எ-று.

(வி-ரை.) மேற்படி பாம்பு இவன் தாய்க்குக் கூறும் விஷயத்தையே இங்கு மறுபடியுங் கூறியுள்ளன. எப்படியெனில், ஓ பெண்பாவாய், நீ குசப் பிரமன் வகுப்பில் பிறந்தாயாயினும் நீ ஜெனித்த 5-ஆம் மாதம் மாதாவும், 7-ஆம் மாதம் பிதாவும் இறந்துபோனார் என்று கூறியதென்பதாம். 25

கேளடா யிவள்நல்ல மங்கையப்பா
கேவலமாய் இவள்மைந்தன் ராசயோகம்
ஆளடா வரசதுதான் முப்பத்தாறு
ஆண்டிவளுஞ் செத்தபின்பு தவசுசெய்வான்
நாளடா என்னசொல்வேன் ரேவதிணுண்மைந்தன்
நலமாகப் பிறந்தவன்று நாடிக்கேளு
ஊளடா உட்பொருளு மறிவான்மைந்தன்
உத்தமனு மிவனல்ல மைந்தனுமே.

(இ-ள்.) கேட்க, இவள் நல்ல மங்கையாகும்; இவள்மைந்தன் ராஜயோகன் முப்பத்தாறுவயதில் அரசுபுரிகுவன். அவள் செத்தபின்பு தவசுசெய்வன்.

ரேவதிநாளில் பிறந்தவன் உட்பொருட்கள் யாவும் அறிகுவன்; உத்தமனுகிய மைந்தனுகும் வல்லமையுடையவன் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவனது ஆயுளையும் இந்த ஜாதகனது யோகம் முதலியவற்றையுங் கூறியுள்ளன. அவையாவன, இந்த ஜாதகன் ஜெனித்த 36-ஆம் வயது வரையில் இவனும் தாயும் ராஜயோகத்தை யனுபவிப்பா ராயினும் மேற்படி 36-ஆம் வயதி லிவன் தாய் இறந்த பின்பு இந்த ஜாதகனவன் தபசு செய்யச் சென்று விடுவான் என்பதாம். 26

மைந்தனுப் பிறந்தவுந்தன் மகனுக்குள்ள
மகத்துவத்தைச் சொல்லவுந்தான் முடியாதப்பா
ஐந்தனுக் குழவியைத்தா னம்மாநீயும்
அன்பாகச் சிவபூசை செய்யச்சொல்லு
கந்தனும் இவனையறு முகவனைத்தான்
கருணையுடன் பூசைநீ செய்யவைப்பாய்
மைந்தனுய் வாலைபர மேஸ்வரியை
வண்மையாய் பூசைசெய்ய வறிவைச்சொல்லே.

(இ-ள்.) மைந்தனுகப் பிறந்த உன்னுடைய மகனுக்குள்ள மகத்துவங்களைச்சொல்ல முடியாது. அந்தக் குழவியை நீயும் அன்பாகத்தானே சிவபூசைசெய்யச் சொல்குவாய். கந்தனெனும் அறுமுகக்கடவுளையும் பூசைசெய்யும்படி சொல்வாய். வாலைபரமேஸ்வரியையும் பூசைசெய்யும்படியாகச் சொல்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் மேற்படி பாம்பு இவனது தாய்க் குறைக்கும் விஷயத்தையே கூறப்பட்டுள்ளன. அவையாவன, ஒரு பெண்பாவாய் உன் மைந்தனது பெருமையை எவராலும் சொல்லமுடியாது ஆதலால் உன் மைந்தனைச் சிவபிரானையும் தேவியையும் ஆறுமுகக் கடவுளையும் பூஜைசெய்யும்படிக்குச் சொல்வாயெனக்கூறியதென்பதாம். 27

சொல்லென்று நாகமது சிவபூசைசெய்ய
சொல்லுதையா உபதேசஞ் சொல்லக்கேளு
அல்லென்று சிவதோத்திரம் ஓம்ரீங்கென்று
அப்பலனைச் சொல்லியறி மைந்தனுக்கு
நல்லதென்று குழவிக்கி துபதேசித்து
நாகமது நாகரேஷ்டங் குழவிவாயில்
உல்லென்று உண்மையுடன் வாயிற்றூக்கி
உற்றவாறு வெல்லாஞ் சொல்லிற்றன்றே.

(இ-ள்.) சொல்லுமென்று தானே நாகமானது சிவபூசைசெய்ய உபதேசஞ் சொல்வதைக் கேளு; அதாவது அல்லென்று சொல்லும்படியாகி சிவ

UraTech Document Processing Solutions

தோத்திரம் ஓம் ரீங்யென்றும் அப்பனைச் சொல்லி அம்மைந்தனுக்கும் நன்மை யாகத்தானே அக்குழவிக் குபதேசித்து அந்த நாகமானது நாகரேஷ்டன் குழ வியின் வாயில் உல்லென்று உண்மையுடன் தானே வாயிற்றூக்கி உற்றது யாவும் சொல்லினவாம் அன்றே எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், இந்த ஜாதகனாகிய குழவிக்கு மேற்படி மந்திரத்தை ஜெபித்ததென்பதாம். எப்படியெனில், ஓம் ரீங் எனக்கூறி மற்றுமுள்ள விஷயத்தினையுங் கூறியது என்பது கருத்தாகும். 28

சொல்லிடவே நாகமது எல்லாஞ்சொல்லி
சொற்பெரிய வாழ்வுமுதலெல்லாங்காட்டி
நல்லிடவே நான்முகனு முமையாள்வாக்கியம்
நலம்பெறவே சொல்லியது நாகம்போச்சு
வெல்லிடவே அன்னையவள் விரைந்துதானே
வெள்விடையான் செயலென்னும் விருப்பமுற்று
அல்லிடவே மைந்தனையு மெடுத்துக்கொண்டு
அம்மையவ டன்மனைக்குச் சென்றாளன்றே.

(இ-ள்.) சொல்லும்படியாக நாகமானது யாவுஞ்சொல்லி வாழ்வுமுதலான துங் காட்டி, நான்முகனோடு உமையாளின் வாக்கியங்கள் நலம்பெறும்படியாக நாகமானது சொல்லிச் சென்றதுவாம். அப்போது அக்குழவியின் மாதாவான வள் விரைந்து இதுவெல்லாம் பரமசிவனுடைய செயலென்று அவ்விடம் விட்டு மைந்தனை எடுத்துக்கொண்டு தன் மனைக்குச் சென்றனள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், மேற்சொன்ன விருத் தாந்தமனைத்தையும் மேற்படி பாம்பானது சொல்லியபின்பு பாம்பும் சென்று விட்டன. அதன் பின்பு, இந்த ஜாதகனின் தாயானவள் எல்லாம் நான்முகன் செயல் என நினைத்துத் தன் குழவியை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றாள் என்பதாம். 29

சென்றிடவே களிப்புடனே மனையிற்சென்றாள்
செயலான பத்தினியை புருஷன்கண்டு
நன்றிடவே யவன்மனையி லழைத்துஅப்போ
நலமாக மனைச்சார்பில் மனைகொடுத்து
வின்றிடவே வந்தநல்ல மனையிமேலதான்
விகற்பமில்லா வம்மனையில் வீற்றிருந்தார்
அன்றிடவே வந்தநல்லக் குழந்தைதானும்
அன்பான ரத்னமது வாயிற்கண்டாள்.

Curatech
Document Processing Solutions

(இ-ள்.) அம்மாது களிப்புடன் மனையிற்சென்று இருக்கும்போது, அவளைப் புருஷன்கண்டு, அவனுடைய மனையில் அழைத்துத் தன்னுடைய மனைச் சார்பில் மனையானது கொடுத்து அம்மனையில் விகற்பமில்லாமற்படிக்கு வீற்றிருந்தார். அப்போது அக்குழந்தை வாயில் ரத்தினங்கண்டான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் செல்ல, இவன் தந்தையாகிய பிராமணன் தன் வீட்டிற்குப் பக்கமாய் ஓர் இடம் கொடுத்து அங்ஙனம் வாழ்ந்து வரும்படி சொன்னான். அப்படியிருக்கும் சமயம் இக்குழவியின் வாயில் ரத்தினம் ஒன்றைக் கண்டாள் என்பது கருத்தாம். 30

கண்டவுடன் ரத்னமது எடுத்துமங்கை
  கனத்ததொரு மணியதனை எடுத்துப்போயி
விண்டவுடன் கடவுளர்தங் கடாட்சத்தாலே
  மெல்லியர்க்குக் கிடைத்ததென்று வியந்துதானே
கொண்டவுடன் கோமுட்டி கையிலேதான்
  கொற்றவளுந் தான்கொடுத்துத் தனத்தைவாங்கி
நிண்டவுடன் றனமதுதான் அநேகபாக்கியம்
  நிகழ்ச்சியில்லாக் காட்சிபெற வாழ்ந்தாள்மங்கை.

(இ-ள்.) கண்ட ரத்தினத்தை மங்கையானவள் எடுத்துக்கொண்டேகிச் சென்றவுடன் கடவுளின் கடாட்சத்தால் இந்த மங்கையற்குக் கிடைத்ததென்று சந்தோஷமாகி கோமுட்டியிடங் கொடுத்துத் தனத்தைவாங்கி வேண பாக்கியக் காட்சியானது பெறும்படியாக வாழ்ந்தாள் மங்கையரும் எ-று.

(வி-ரை.) இக்குழவியின் வாயிலிருந்த ரத்தினத்தை இவன் தாய் எடுத்துச் சென்று கோமுட்டி இடங்கொடுத்து அனேக திரவியந்தர அதனை வாங்கி வந்து தன் மனையிற் சுகமாயிருந்தாள் என்பது கருத்தாகும். 31

மங்கையிவ ளிப்படியே சிவபூசைசெய்து
  வளமாக வாழ்ந்திவளு மிருக்கும்போது
அங்கையுடன் ரத்னமதை யரசன்கிட்டே
  அன்புடனே கோமுட்டி யீந்துமிக்க
செங்கையினுல் அநேகமப்பா நிதிகள்வாங்கி
  செப்பமுள்ள இவன்மனைக்குக் கொண்டுசென்றார்
சுங்கமில்லாப் பொருள்போலே மனையில்வைத்தார்
  சுத்தபொரு ளவன்மனையில் இல்லைத்தானே.

(இ-ள்.) மங்கையானவள் சிவபூசை செய்து வளமாகத்தானே வாழ்ந்திருக்கும்போது, அந்த ரத்தினத்தை அரசனிடம் கோமுட்டியானவ னீந்து

மிகவும் அநேக நிதிகள் வாங்கி அவனுடைய மனைக்குக் கொண்டு சென்றான். அப்படிச்சென்று அவன் மனையில் வைத்தப் பொருள் ஒன்றும் அவன்வீட்டிலில்லையாம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், மேற்படி கோமுட்டியானவன், மேற்படி ரத்தினத்தை அரசனிடம் கொடுத்து அளவற்ற திரவியத்தை வாங்கிவந்து விட்டான். ஆயினும், பின்பு மேற்படி பொருளுளானது அரசன் அரண்மனையிலில்லை என்பது கருத்தாகும். 32

இல்லையப்பா மனையில்வைத்த பொருளோயில்லை
இயல்பான மைந்தனிட வீட்டிற்போச்சு
அலலையப்பா வந்ததனம் முழுவதுந்தான்
அன்பான இவன்வீட்டி லில்லாதுகண்டு
தொல்லையென்ன வென்றரசன் பக்கற்சென்று
தோன்றுதலே நீர்கொடுத்த தனமொன்றில்லை
அல்லையிதை நாமறிய வேண்டுமென்ன
அன்பான ராசனவன் மலைத்தான்பாரே.

(இ-ள்.) அப்பொருள் அவன் மனையில் இல்லாமற்றானே இந்த மைந்தனுடைய மனையில் வந்து சேர்ந்தனவாம். வந்த தனமானது கோமுட்டி வீட்டிலில்லாதது கண்டு அரசனுடைய பக்கலில் சென்று சொல்வான். ஓ அரசே நீர்கொடுத்த தனத்தில் ஒன்றுமில்லை எனவே அதைநாமறிய வேண்டுமென்ன அரசனும் மலைத்தான் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், மேற்படி கோமுட்டியானவன் அரசனிடம் ரத்தினத்தைக் கொடுத்துவிட்டு வாங்கிவந்த திரவியம் கோமுட்டியிடம் இல்லை. அரசனிடம் இரத்தினமும் இல்லையாதலால் கோமுட்டியானவன் அரசனிடம் போய் சொல்ல அரசனும் அதிசயப்பட்டான் என்பதாம். 33

பாரென்ற வரசனுந்தா னநேகமெண்ணி
பாங்கான வவன்மனையிற் பார்க்கும்போது
சீரென்ற தனங்காணா தேங்கிமன்னன்
சித்தமது வேறாகிச் செப்புகின்றார்
தாரென்ற மணிவாங்கி நான்கொடுத்த
தனத்தையெல்லா மாருக்கோ ஈந்தாய்பிள்ளாய்
ஊரென்ற உன்மனையில் வைத்தபொருளெல்லாம்
உத்தமனே யாருக்கீந் திட்டாயன்றே.

(இ-ள்.) பார்க்க, அரசனானவன் அனேகமாகத்தானே எண்ணிபாங்காகத் தானே யவன் மனையிற்பார்க்கும்போது தனத்தைக் காணாமல் ஏங்கி, மன்னன்

CuraTech Document Processing Solutions

சித்தமானது வேறாகிச் சொல்லுவான் உன்னிடத்தில் மணியானது வாங்கி நான் கொடுத்தத் தனமெலாம் யாருக்கோ யீந்துவிட்டாய். உன் மனையில் வைத்தப் பொருளெல்லாம் யாருக்குக் கொடுத்தாய் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனின் மேற்படி அரசன் தன்னிடம் விற்ற இரத்தினத்தையும் காணாதவனாகி, ஓ கோமுட்டியே, யான் கொடுத்த திரவிய மனைத்தையும் யாருக்கோ கொடுத்துவிட்டாய், ஆதலால் அதனை யாருக்குக் கொடுத்தாய் சொல்லு என வினவினான் என்பதாம். 34

ஈந்தபொருளொன்றுமுன் மனையிலில்லை
இயல்பாகப் போனதெங்கே சொல்லுவாய்நீ
சாந்தமுள்ள தர்மதேவதையினாலே
தவஞ்செய்த பாக்கியத்தாற் கிடைத்ததன்றோ
ஆய்ந்தபொருள் போனவிடங் காணேனென்று
அன்பான கோமுட்டி சொல்லும்போது
வாய்ந்திடவே உனக்கிந்த ரத்தினங்கள்
வந்தவகை சொல்லுபின்னே வகைசொல்வேனே.

(இ-ள்.) ஈந்த பொருள் ஒன்றும் உன்மனையிலில்லை. அதுபோனவகை சொல்வாய் என்றுகேட்க, கோமுட்டிச் சொல்லலானான்; தர்மதேவதையினாலே தவஞ்செய்த பாக்கியத்தினாற் கிடைத்தது; அந்தப்பொருள் போனவிடங் காணேனென்று அன்பாகத்தானே கோமுட்டி சொல்ல, அரசன் கேட்பான், உனக்கு இந்த ரத்தினம் வந்தவகையைச் சொல்லும். பின்னால் நான் உனக்கு வகையாகச் சொல்வேனென்றார் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், மேற்சொன்னவாறு அரசன் கோமுட்டியை வினவ, கோமுட்டி ஐயனே மேற்படி பொருளை யான் யாருக்குந் தரவில்லை அவை எங்கு போயினவென்பது எனக்குத் தெரியாதெனக் கூற, மேற்படி அரசன் நீ என்னிடம் கொடுத்த இரத்தினத்தை யாரிடம் வாங்கினாய் என வினவினார் என்பதாம். 35

சொல்லுவே னீவிற்ற ரத்தினந்தான்
சொற்பெரிய வன்னியர்கள் ரத்நமாகும்
அல்லுவே னதனாலே வந்தபொருளெல்லாம்
அன்பான உன்மனையி லில்லாமற்போச்சு
நல்லுவே னுள்ளபடி சொல்லுமென்ன
ரத்தினம்வந்த வகையதனை நலமாய்ச்சொன்னான்
வல்லுவே னவ்விடத்தின் மாதைதத்தானும்
வரவழைத்து உனக்குரத்ன மெதுசொல்லென்றான்,

(இ-ள்.) சொல்லுவேன். நீ விற்ற ரத்தினமானது அன்னியர்கள் ரத்தினமாகும். அசலுல்தான் வந்தபொருள் யாவும் உன் மனையிலில்லாமற் போச்சுது. ஆகையால் உள்ளபடி சொல்லுமென்று அரசன் கேட்க, அப்போது கோமுட்டி ரத்தினம் வந்த வரலாற்றைச் சொன்னான். அதை அரசன்கேட்டு அம்மாதை யழைத்து உனக்கு ரத்தினம் எது சொல்லுமென்றார் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், மேற் சொன்னபடி அரசன் வினவ, கோமுட்டியும் உண்மையைச் சொல்ல, அரசனானவன் இந்த ஜாதகனின் தாயை அழைத்து வந்து உனக்கு இந்த ரத்தினம் எவ்வகைக் கிடைத்தது என வினவினன் என்பதாம். 36

சொல்லுகிறேன் குழவியிட வாயிலேதான்
   சோதனையாய் கிடைத்ததென அரசன்கண்டு
நல்லுகிறேன் நான்கொடுத்த பாக்கியமெல்லாம்
   நலமான குழவியிடஞ் சேர்ந்திருக்கும்
வல்லுகிறேன் வண்மையினு லரசன்றானும்
   வாகான வக்குழவிக் கரசுயீந்து
வல்லுகிறேன் வாழ்வெல்லா மவனுக்கீந்து
   வரிசையுடன் பட்டமது சூட்டினாரே.

(இ-ள்.) அம்மாது ரத்தினம் வந்த வகையாவுஞ் சொல்ல, குழவியுடைய வாயில் வந்த ரத்தினமென்று அரசன் கண்டு சொல்வான்: நான் கொடுத்த ரத்தினத்திற் காணப் பாக்கியமெல்லாம் உன்மனையிலில்லாமற் போச்சுது. அது குழவியினிடம் போய் சேர்ந்திருக்கும் என்றுரைத்து, அரசன் அக்குழந்தைக்கு அரசை ஈந்து, அத்துடன் வாழ்வானதெல்லா மீந்து, வரிசையாகத்தானே பட்டஞ் சூட்டினர் எ-று.

(வி-ரை.) மேற்சொன்னவாறு வினவிய அரசனுக்கு இவன் தாயானவள் என் மகன் வாயிலிருந்தது எனக் கூறும்போது, இந்த ஜாதகனது வாயில் மேற்படி இரத்தினம் இருப்பதைக்கண்டு, மேற்படி அரசன் தன் பொருள் அரசு முதலிய அனைத்தையும் இந்த ஜாதகனுக்கு கொடுத்து பட்டாபிஷேகமும் செய்தார் என்பதாம். 37

சூட்டியதோர் பட்டாபி ஷேகஞ்செய்து
   சூழ்ந்திருந்த மந்திரியை யருகிருத்தி
நாட்டியதோர் விவாகமது உடனேசெய்து
   நலமாக நளச்சக்கர வர்த்திபோலே
கூட்டியதோர் குவலயத்தி லிவன்றானப்பா
   குணமுள்ள பாலனிவன் வாழ்ந்தானன்றாய்
பூட்டியதோர் பூட்டெல்லாஞ் செல்வயோகம்
   புகலுகிறே னிவன்வயது முப்பதுக்குள்ளாமே.

(இ-ள்.) குட்டிடப் பட்டாபிஷேகமானது செய்து, மந்திரிமார்களை அமர்த்தி விவாகமானது உடனேசெய்து, நலமாகத்தானே நளச்சக்கரவர்த்தி போல் குவலயத்தில் இவனும் குணமுள்ள பாலகனாக வாழ்ந்திருந்தான். பூட்டாகிய செல்வயோகம் யாவும் சொல்வேன் இவன் வயது முப்பதுக் குள்ளாகவும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனின், இவ்வாறு மேற்படி அரசன் இந்த ஜாதகனுக்குப் பட்டாபிஷேகம் முதலியனவற்றைச் செய்வித்து உடனே விவாகமும் செய்தனன். அதுமுதல் சகல செல்வங்களும் உடையவனாகி வாழ்ந்தான் இவையனைத்து மிவன் வயது 30-க்குள் என்பதாம்.

38

உள்ளென்ற இவனுடைய யோகத்தினாலே
உத்தமனே குபேரனைப்போல் வாழ்ந்தான்மைந்தன்
அள்ளென்ற வயிஸ்பரிய முள்ளபாலன்
அன்பான பிள்ளைகளை நாலுபெற்று
கொள்ளென்ற பிள்ளைகட்குப் பட்டங்கட்டிக்
கொற்றவனுந் தவசுக்குப் போனனப்பா
விள்ளென்ற நானூறு வருஷந்தானும்
விமலர்பதம் பணிந்துமைந்தன் தவம்பூண்டானே.

(இ-ள்.) உள்ளபடி இவனுடைய யோகத்தினால் உத்தமனாகி குபேரனைப் போல் வாழ்குவான். பாலன் ஐஸ்வரிய முள்ளவன்; இவன் பிள்ளைகள் நாலும்பெற்று, அப்பிள்ளைகட்குப் பட்டங்கட்டி, கொற்றவனாகிய யின்னோன் தவசுக்குப் போவான். விள்ளும்படியான நானூறு வருஷம் பரமசிவனை நோக்கித் தவமானதும் புரிகுவான் எ-று.

(வி-ரை) இக்கவியின் கருத்தாவதென்னவெனில் மேற்சொன்னவாறு இந்த ஜாதகன் சகல ஐஸ்வரியங்களையுமுடையவனாகி, நான்கு குழவிகளைப் பெற்று, மேற்படி பிள்ளைகளுக்குத் தன் ராஜ்ரீகத்தைத் தத்தம்செய்து, தான் தபசு செய்யச் சென்று 400-வருஷங்கள்வரையில் சிவபிரானைப் பணிந்து பரமபத மெய்தினன் என்பதாம்.

39

பூண்டிடவே இந்தநல்ல ரேகைமார்க்கம்
புகழாகச் சொல்லிவிட்டேன் மைந்தாகேளு
ஆண்டிடவே இன்னமொரு ரேகைமைந்தா
அன்பாகச் சொல்லுகிறே னறிவாய்க்கேளு
தாண்டிடவே தன்மையினால் ரேகையொன்று
தாழ்வில்லா ரேகையடா தண்மையப்பா
நண்டிடவே இந்தநல்ல ரேகைமார்க்கம்
நலமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளே.

(இ-ள்.) பூண்டிட கூறிய ரேகையின் மார்க்கம் புகழாகத்தானே சொல்லிவிட்டேன் கேளுப்; ஆண்டிடும்படியாக இன்னமொருரேகை சொல்கிறேன் அறிவாகக்கேளும்; தன்மையாகிய ரேகை ஒன்று அது தாழ்வில்லா ரேகையாம்; தன்மையானது அந்த நல்லரேகையின் மார்க்கம் சொல்கிறேன் எ-று.

(வி-ரை.) இதுகாறுங்கூறிவந்ததில் இங்குகூறிய கார்மேக வர்ண விந்த ரேகையினது பலாபலன்கள் அனைத்தையும் கூறினேன். ஆனதால் இன்னமொரு ரேகையுள்ளன. அதனையுங் கூறுகிறேன் கேட்பீர்களாக என்பதாம். பின்வருங் கவியா லின்னமொரு ரேகையின் விவரத்தினைக் கூறுகின்றனர். 40

சகடவிந்த ரேகை சாந்தபாஷ்ப ரேகைகளின் பலன்

கேளப்பா சகடவிந்தஞ் சாந்தபாஷ்பம்
கேவலமா யணிவிரலி லிருக்கும்பாரு
ஆளப்பா ருத்திரவரைக் கீழேநிற்கும்
அன்பாக அதன்விபரம் அறையக்கேளு
வாளப்பா இருபுள்ளி இரண்டுகீறு
வளமாக இதழாறு மிருக்கும்பாராய்
நாளப்பா இவன்பிறந்த நாளுங்கோளும்
நன்றாகச் சொல்லுகிறே னடிக்கேளே.

(இ-ள்.) கேட்பாயாக. சகடவிந்தம் சாந்தபாஷ்பம் என்னும் ரேகையானது அணிவிரலிலிருக்கும். ருத்திரவரையானது கீழே நிற்கும். அதின் விபரத்தைச் சொல்லக்கேளும்; இருபுள்ளியும் இரண்டுகீறும் இதழ் ஆறுமிருக்கும். அவ்வித ரேகையுடையோன் பிறந்த நாளுங் கோளும் நன்றாகத்தானே சொல்லுகிறேன் நாடிக்கேட்பாயாக எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னவெனில், சகடவிந்த ரேகை சாந்தபாஷ்ப ரேகை என இரண்டுண்டு. அவை ருத்திர விரலுக்குக் கீழ்புறமும் அணிவிரலிலும் காணப்படும் அவையாவன, இரண்டு கீற்று ரேகைகளும் இரண்டு புள்ளி ரேகைகளுமாயிருக்கும் என்பது கருத்தாகும். 41

கேளடா இந்தநல்ல ரேகையானல்
கேவலமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
ஆளடா இவன்பிறக்கும் போதுமைந்தா
அன்பான புதுமைமெத்த வாய்மைகேளு
நாளடா நன்மைபெற்ற மைந்தனப்பா
நலமான பிள்ளையிவன் பிறந்தயோகம்
ஆளடா வாச்சரிய மெத்தவுண்டு
அன்பான மகத்துவத்தை யறிவாய்க்கேளே.

Uratech Document Processing Solutions

(இ-ள்.) மேற்கூறிய ரேகையானது உண்டாகில் சொல்லுகிறேன் கேளும்; இவன் பிறக்கும்போது உண்டாகும் புதுமைகளைக் கேளும்; நன்மையானது பெற்ற மைந்தனாகும். இவன் பிறந்த யோகம் ஆச்சரியமானது மெத்த உண்டாம்; அம் மருத்துவத்தைக் கேளும் எ-று.

(வி-ரை.) மேற்படி ரேகையானது மகா அருமையானதும் புதுமையானதும் ஆச்சர்யமானதுமாகும். இவன் பிறந்தகாலத்திலும் அநேக புதுமைகளுண்டாயின ஆனதால், அவ்விவரங்களைக் கூறுவேன் கேட்பீர்களாக என்பது கருத்தாகும். 42

கேட்கவே யிவன்பிறக்கும் போதுமைந்தா
  கீழ்வாசல் வீட்டிலிவன் பிறந்தான்பாரு
தாட்கவே இவன்பிறக்கும் போதுமைந்தா
  தன்மையுள்ள இவன்பிதா இறந்தான்பாரு
மீட்கவே வறுமைவந்து மூடிக்கொண்டு
  மேதினியிற் பறவைபோல் துணைவேறின்றி
தாட்கவே சற்சனனுந் துயரமுற்றான்
  தன்மையில்லா திவன்பிறந்த சார்புதானே.

(இ-ள்.) கேட்க இவன் கீழ்வாசலான வீட்டிற்பிறந்தான்; இவன் பிறக்கும்போது இவன் பிதா மரணமாகினன். அப்போது வறுமையானது வந்து மூடிக்கொண்டு துணையில்லாமல் பறவையைப்போல் துயரமுற்றான். தன்மையில்லாதபடி இவன் பிறந்த சார்பாகும். எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் பிறந்த வீட்டினது லக்ஷணத்தையும் பிதாவின் தன்மையினையுங் கூறியுள்ளனர். அவையாவன, இந்த ஜாதகன் பிறந்த வீடானது கீழ்வாசலுடையதாகும். மற்று மிவன் ஜெனித்தவுடனேயே பிதா இறந்துபோனான். ஆதலால் இவனுக்கு வேறு எவரும் திக்கின்றி பறவைபோன்றலையவேண்டியதாயிற்று என்பது கருத்தாகும். 43

தானென்ற இவன்பிறந்த மூன்றுமாண்டில்
  தயவான மாதாவு மிறந்தாள்பாரு
வானென்ற இவன்பிறந்த மூன்றாண்டுக்குள்
  வளமான மாதாவும் பிதாவும்போனார்
ஊனென்ற இவன்பிறந்த பத்தாண்டுக்குள்
  உண்மையுள்ள இவன்பாட்டன் பாட்டிமாண்டார்
ஈனென்ற இல்லறத்தி லநேகஞ்செல்வம்
  இருந்தழிந்து போனதென்று இயல்பாய்ச்சொல்லே.

(இ-ள்.) இவன் பிறந்த மூன்றாம் வருடத்தில் தாயாரும் பிதாவும் மரணமானார்கள். பத்தாம் வருடத்தில் இவனுடையப் பாட்டியும் பாட்டனும் மரண

மாவர். இல்லறத்தில் அனேகஞ் செல்வம் இருந்து அழிந்து போச்சதென்று இயல்பாகச் சொல்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவன் தாய் முதலியவர்களது மரணகாலத்தினைக் கூறுகின்றனர். அவையாவன, இந்த ஜாதகன் ஜெனித்த மூன்றும் வருஷத்திலேயே தாயும் மரணமானுள். வயது 10-க்குள் பாட்டன் பாட்டியாகியவர் மரண மடைந்தனர். இதன் பயனும் இவனில்லத்திலிருந்த செல்வமனைத்தும் அழிந்துபோயினவாதலால் இந்த ஜாதகன் மகா துயரத்துக்குள்ளாகி யலைந்து திரியலானுன் என்பது கருத்தாகும். 44

சொல்லவே இவன்செல்வ மெல்லாம்போச்சு
சொற்பெரிய விசனமொடு பாடுபட்டான்
அல்லவே யனேகமிவன் பாடுபட்டு
அன்பான பாலகனு மெலிந்தானப்பா
வல்லவே வண்மையினுற் பொருளனேகம்
மைந்தனப்பா தோற்றுவிட்டு வரிசையாக
நல்லவே இவன்வயது பதினெட்டுக்குள்
நன்மைவந்து கிடைத்தமதென நாடிச்சொன்னேன்.

(இ-ள்.) சொல்லும்படியான இவனுடைய செல்வமெல்லாம் போயினவாம். மகா விசனமோடு பாடுபட்டுப் பாலனுமவன் மிகவும் மெலிந்தான். வண்மையினுற் பொருளானது அநேகந் தோர்த்துவிட்டு பின்பு வயது பதினெட்டுக்குள் நன்மையானது வந்ததாம் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னெனின், முன்சொன்ன விதமாக இந்த ஜாதகனது தனமனைத்தும் ஒழிந்தபின்பு, தன்னைக் காப்பாற்றுவாரொருவருமின்றி மகா துயரத்துடனிருந்தானுயினும் இவன் வயது 18-ல் நன்மையும் யோகமும் உண்டாயின என்பதாம். 45

சொன்னனப்பா இவனுக்குத் திசையோகந்தான்
சொல்லுகிறேன் இவனுடைய வரலாறெல்லாம்
வன்னனப்பா இவன்றுனும் வறுமையாகி
வாகான வாற்றருகே விரகெடுக்கில்
அன்னனப்பா வவ்வாற்றின் கரையிலேதான்
அன்பான நிதிருடந்தா னென்றெடுத்தான்
கன்னனப்பா காட்சிபெற்ற மைந்தன்வாழ்வின்
காரணத்தை யென்சொல்வேன் கருதிக்கேளே.

(இ-ள்.) சொன்னேன் இவனுக்குத் திசையும் யோகமும்; இவனுடைய வரலாற்றைச் சொல்கிறேன்; இவன் வருமையால் ஆற்றருகிற் சென்று வி

கெடுக்கில் அவ்வாற்றின் கரையில் நிதி குடமானது ஒன்று கண்டெடுத்து அவன் மனைக்குக் கொண்டு வந்த பின் மைந்தனுடைய வாழ்வை என்சொல் வேன் கேட்பாயாக எ-று.

(வி-ரை.) மேற்சொன்னபடி இவன் வயது 18-ல் எவ்வாறு செல்வம் உண்டாயின வென்பதை இங்குக் கூறுகின்றனர். அவையாவன, மேற்படி வறுமையால் விறகுச்சுமை எடுப்பதின் நிமித்தம் ஆற்றருகிற்செல்லும்போது அங்கனம் நிதிக்குடம் ஒன்றினைக்கண்டெடுத்து அதனால் மிக்க வாழ்வினை யடைந்தான் என்பது கருத்தாகும். 46

கருதியதோர் இவன்றனுந் தனமெடுத்து
 காட்சிபெற வீடுகட்டி விவாகஞ்செய்தான்
உறுதியாம் இவனுக்குத் தாரம்ரெண்டு
 உண்மையாய் முடியுமென்று உருதிசொல்லு
சருதியாய்ச் சர்ச்சனர்க ளனேகம்பேர்கள்
 தகுதியுட னட்புடனே வாழ்பார்பாரு
விருதியதோர் விமலர்பதம் பணிந்துமைந்தன்
 வெகுவாக திசையோக நடக்குமன்றே.

(இ-ள்.) கருதியபடி இவன் தனத்தை யெடுத்து வீடானதுகட்டி விவாக மானது செய்தான். இவனுக்குத் தாரம் இரண்டாகும். சர்ச்சனர்களாகிய அனேகம்பேர்கள் தகுதியாகத்தானே நட்பாவார்கள்; விமலருடைய பாதம் பணிந்தவா வெகுவாக திசையும் யோகமும் நடக்கும் எ-று.

(வி-ரை.) மேற்சொன்னவாறு ஆற்றங் கரையிலெடுத்த நிதிக்குடத்தைக் கொண்டு அனைவரும் ஆச்சர்யம்படத்தக்க அரண்மனைக்கட்டி கலியாணமும் செய்துக்கொண்டனன். மற்று மிவனுக்குக் கலியாணம் இரண்டு எனவும் மகாயோகத்தையடைவான் என்பதும் கருத்தாகும். 47

அன்றெனவே இவனுடைய வயதோமைந்தா
 அன்பான யோகமுள்ள மனிதனுகும்
என்றெனவே இவன்வய தெழுபதாண்டு
 இயல்பான சக்கரத்தி னமைப்புமைந்தா
குன்றெனவே குவலயத்தில் இவனைப்போல
 குணமுள்ள பாலனில்லை கூறக்கேளு
நன்றெனவே இவனுக்குக் கெண்டமேழு
 நல்மாக உண்டப்பா நாடிக்கேளே.

(இ-ள்.) இவனுக்கு வயதுள்ளளவும் யோகமுடையவனுகுவன். வயது எழுபதாகும்; அது சக்கரத்தின் அமைப்பாகும்; பூமியின்மீது குணமுள்ள

இவனைப்போல் பாலர்களில்லையாம். இவனுக்குக் கெண்டமானது ஏழுண்டாம் எ-று.

(வி-ரை.) இக்கவியா விவன் வயது கெண்டம் முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, வயது 70-எனவும் கெண்டாதி கெண்டங்கள் ஏழு என்பதாம். பொதுவாய் மேற்படி 18-வயதுக்குப் பின் மகா யோக முடையவன் என்பது கருத்தாகும். 48

கேளப்பா இவனுக்குக் கெண்டமாறும்
கேவலமாய் நடந்துவிடுங் கெடுதியில்லை
ஆளப்பா நீராலே கெண்டமொன்று
அப்பனே சத்துருவால் வருமோர்கெண்டம்
மாளப்பா வியாதியினால் கெண்டமொன்று
மகத்தான விஷத்தாலே வருமோர்கெண்டம்
விளப்பா கெண்டமொன்று நாற்காலாலே
விகற்பமுள்ள ஸ்திரீயாலே கெண்டமொன்றே.

(இ-ள்.) கேட்க இவனுக்குக் கெண்டமானது ஆறும் கேவலமாக நடக்கும், அதினால் கெடுதியில்லையாம். ஆகினும் சலத்தினால் ஓர் கெண்டமும் சத்துருக்களால் ஓர்கெண்டமும், விஷத்தினால் ஓர்கெண்டமும், நாற்கால் சீவனால் ஓர் கெண்டமும், ஸ்திரீயினால் ஓர் கெண்டமுமாம் எ-று.

(வி-ரை.) கெண்டாதி கெண்டங்களை யிங்கனம் கூறுவாராயினர். எப்படியெனில், ஜலத்தாலும், சத்துருவாலும், வியாதியாலும், விஷத்தாலும் நாற்காலிகளாலும், கொடிய மாதொருத்தியாலும் கெண்டாதி கெண்டம் என்றாலும் அவை யாவும் நீங்கிப்போகும் என்பது கருத்தாகும். 49

கெண்டமடா இவன்வாழ்வுக் குள்ளேயப்பா
கனத்ததொரு கெண்டமெல்லாம் வந்துபோச்சு
பண்டமடா பலபொருள்கள் தேடுவான்பார்
பாக்கியங்கள் மெத்தவுந்தான் வந்துசேரும்
உண்டமடா இவன்வயது முப்பத்தாறில்
வியாப்பதியா யநேகமடா நிலங்கள்கொள்வான்
கெண்டமடா தனஞ்சயன்போற் பத்துப்பிள்ளை
தன்மையுடன் பிறக்குமென்று சார்ந்துசொல்லே.

(இ-ள்.) கெண்டம் யாவும் இவனுடைய வாழ்வக்குள்ளே வந்து போயினவாம். பண்டமாகிய பல பொருள்களுந் தேடுவான்; பாக்கியங்களும் வந்து சேரும். இவன் வயது முப்பத்தாறில் அனேக நிலங்களைக் கொள்வான்; தனஞ்செயன்போல் பத்துப் பிள்ளைகள் இவனுக்குப் பிறக்குமென்று சொல்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னவெனில், இவன் வயது 70-க்குள் மேற்படி கெண்டாதி கெண்டங்க ளனேகம் உண்டாகுமாயினும் அவையாவும் நீங்கித் தன் வயது 36-ல் அனேக பூமிகளை யுடையவனுகி தனஞ்செயனையொத்த வாழ்வுடையவனுகி பத்து பிள்ளைகளைப் பெற்றெடுப்பவனுவான் என்பது கருத்தாகும். 50

சொல்லவே இவனுடைய யோகவாழ்வை
சொல்லிவிட்டேன் ரேகையிட மார்க்கமெல்லாம்
அல்லவே இவனுண்மை வறுமைவாழ்வும்
அன்பாகச் சொல்லிவைத்தேன் மைந்தாகேளு
நல்லவே நன்மையுள்ள பாலகன்றான்
நலம்பெற்று வாழ்ந்திருக்கும் நடத்தைசொன்னேன்
அல்லவே ஆச்சரிய மானதெல்லாம்
ஆனந்த மாகவேநா னறிவித்தேனே.

(இ-ள்.) சொல்லவேண்டிய இவனுடைய யோகமும் வாழ்க்கையும் சொல்லிவிட்டேன். ரேகை மார்க்கமெல்லாம்; இவனது ஆண்மையும் வறுமையும் வாழ்வும் அன்பாகத்தானே சொன்னேன்; நன்மையாகிய இப்பாலன் நலமானது பெற்று வாழ்ந்திருக்கும் நடத்தையைச் சொன்னேன். ஆச்சரிய மானது யாவும் ஆனந்தமாகவே யானறிவித்தேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனின், இதுகாறுங் கூறிய கவியால் இவனுக்குண்டாகும் வறுமை வாழ்வு யோகம் கெண்டம் முதலிய அனைத்தையும் உமாதேவியினது கிருபையால் நீங்க ளறிந்துகொள்ளும் வண்ணமாய்க் கூறிவிட்டேன் என்பது கருத்தாகும். 51

அறிவித்தேன் இன்னமொரு ரேகைமைந்தா
ஆச்சரிய முள்ளதது சொல்லக்கேளு
சறிவித்தேன் சற்சினமாம் ரேகையொன்று
சாற்றுகிறேன் இன்னமொன்று மைந்தாகேளு
பொறிவித்தேன் புலமையுள்ள ரேகையொன்று
பொருந்தவன் புரிவித்தேன் ரேகைமைந்தா
பிறிவித்தேன் இன்னமொரு ரேகைதானும்
பிரிவாகச் சொல்லுகிறேன் இன்னங்கேளே.

(இ-ள்.) அறிவித்தபடி இன்னமும் ஒரு ரேகையைச் சொல்வேன் அதுவோ ஆச்சரியமுள்ளது. சற்சினமாகிய ரேகை ஒன்று சொல்கிறேன் கேளும்; புலமையுள்ள ரேகையானது ஒன்று பொருந்தவே பிரிவித்தேன்; ரேகை பிரிவித்த இன்னமொரு ரேகை பிரிவாகச் சொல்லுகிறேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னவெனின் இதுகாறுங் கூறி வந்ததைப்போலவே இன்னமொரு அபூர்வமான ரேகை யொன்றுள்ளன ஆதலால் அதனையுங் கூறுகிறேன் கேளுங்கள் என்பது கருத்தாகும். 52

திரிகண்ட ரேகையின் பலன்

கேளப்பா திரிகண்ட ரேகையொன்று
　கேவலமா இருக்குமப்பா மைந்தாகேளு
ஆளப்பா ஆள்காட்டி விரலிலேதான்
　அன்பான மால்வரைக்குக் கீழேநிற்கும்
நாளப்பா நன்மையுள்ள ரேகைமைந்தா
　நலமாக இருவரையும் மூன்றுகோணம்
வாளப்பா திரிகோணத் திருக்கும்பாரு
　வண்மையுள்ள ரேகையதன் வகைசொல்வேனே.

(இ-ள்.) கேட்பாயாக திரிகண்ட ரேகையானது ஒன்று இருக்கும். அது ஆள்காட்டி விரலில் அன்பாகிய மால்வரைக்குங்கீழே நிற்கும் நன்மையுள்ள ரேகையாகும். இருவரையும் மூன்றுகோணமும் திரிகோணத்திருக்கும் அவ் விரேகையின் வகையைச் சொல்வேன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் திரிகண்டரேகையினது விவரத்தினைக் கூறுவா ராயினர். அவையாவன, திரிகண்டரேகை யென்பது ஆள்காட்டி விரலி லிருந்து கைமத்திவரையிலிருப்பதாகும். அவை இரண்டு விரலையும் சேர்ந்தாப் போல் முக்கோணவடிவம் கொண்டிருக்கும். ஆதலால் இதனது விருத் தாந்தத்தைக் கூறுவேன் கேட்பீர்களாக என்பது கருத்தாகும். 53

சொல்லுவே னிந்தநல்ல ரேகைதானும்
　சொல்லுவதற் கிதன்பெருமை துலங்கக்கேளு
அல்லுவேன் இவன்பிறந்த யோகவாழ்வு
　அன்பாகச் சொல்லுகிறேன் அறிவாய்க்கேளு
நல்லுவேன் இவன்பிறக்கும் போதுமைந்தா
　நலமான இவன்மாதா வருத்தப்பட்டு
இல்லுவேன் ஆறுநாள் துயரப்பட்டாள்
　இயல்பான மைந்தனிவன் பிறந்திட்டானே.

(இ-ள்.) சொல்லியபடி நன்மையாகிய இந்த ரேகையின் பெருமையைத் துலக்கக் கேளும். அவ்வித ரேகையுடையோன் பிறந்த யோக வாழ்க்கைச் சொல்லுகிறேன் கேளும். இவன் பிறக்கும்போது இவனுடைய தாயார் வருத்தமடைந்துபட்டு ஆறுநாள் வரைக்கும் துயரமாகி இந்த மைந்தன் பிறந்தவ னாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னெனின், இவனைப்பெறும் போது இவன் தாயானவள் ஆறுநாள்வரையில் துயரப்பட்டுப் பெற்றனள் எனவும், மற்றும் இந்த ரேகையினது விவரம் அனைத்தையும் விவரமாய்க் கூறுகின்றனன் கேளுங்கள் என்பது கருத்தாகும். 54

பிறந்திடும்போ திவன்பிதா வீட்டிலில்லை
  பின்னைபதி னெட்டுநாள் கழித்துவந்தான்
அறிந்திடும் பிறந்தவெட்டா நாளிற்பாம்பு
  ஆண்மையுள்ள பாட்டனைத்தான் கடித்துமாண்டான்
பொறிந்திடும்போ திவன்பிறந்த பிள்ளையப்பா
  போதமுள்ள பிதாவுக்கே அலைச்சலாச்சு
சரிந்திடும்போ திவனுக்கு மூத்தபேர்கள்
  சற்சனரா யாணொன்று பெண்ணொன்றுமே.

(இ-ள்.) இவன் பிறக்கும்போது இவன் பிதாவானவன் வீட்டிலில்லையாம். பின்பு பதினெட்டுநாள் கழித்து வந்து சேர்ந்தான். இவன் பிறந்த எட்டாநாளில் பாம்பானது பாட்டனைக் கடிக்கப் பாட்டன் மாண்டான். இவன் பிறந்த பின்பு தகப்பனுக்கு மிகவும் அலைச்சலாயிருக்கும். இவனுக்கு மூத்தோர் ஆண் ஒன்று பெண் ஒன்றும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னெனின், இவன் ஜனித்த காலத்திலிவன் பிதாவானவன் வீட்டிலில்லை எனவும், 8-ம்நாள் இவனது பாட்டனைப் பாம்புகடித்திறந்துபோனதால் மேற்படி பிதா 18-ஆம் நாள் வந்து சேர்ந்தனன் எனவும், இவனுக்கு மூத்தோர் இருவருள் ஆண் 1. பெண்ணொன்றுமாகும் எனவும், இவன் ஜனித்ததன் பிறகு பிதாவுக்கு அலைச்சலே உண்டாயின என்பதுங் கருத்தாகும். 55

ஒன்றானே இவன்பிறவி ஏழுபேராம்
  ஓகோகோ இவன்வாழ்வு உகந்துசொல்வேன்
நன்றான நான்முகனார் வகுத்தபடியே
  நன்மையாய் நானுரைப்பே னன்றாய்க்கேளு
வன்றான வகையுடனே சொல்வேன்மைந்தா
  வண்மையாய் இவன்வீட்டிற் பொருள்கள்பெறுகும்
குன்றாத குவலயத்தி லிவனைப்போல
  குலமான கோத்திரத்தின் பலத்தினாலே.

(இ-ள்.) இவனுடன் பிறந்தோர் ஏழுபெயராகும். இவனுடைய வாழ்வைச் சொல்வேன்; நான்முகனார் வகுத்தபடி நான் நன்மையாக உரைப்பேன்; இவனுடைய வீட்டில் பொருளானது பெறுகும். குன்றாமற் படிக்குக் குவலயத்தின்கண் இவனைப்போல் குல கோத்திரத்தின் பலமுடையோன் எ-று

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னெனின் இந்த ஜாதகனுக்கு உடன் பிறந்த சகோதரங்கள் மொத்தம் ஏழு என்பதாம். மற்று மிவன் பிறந்த சக்கரத்தின் அமைப்பால் நாளுக்கு நாள் செல்வம் அதிகமுண்டாகிச் சுகித்திருப்பன் என்பதாகும். 56

பலனென்ன இந்தநல்ல ரேகைகண்டால்
பக்குவமாய் ஸ்திரீயாகப் பிறப்பதாகும்
நலமென்ன இவன்பிறந்த போதுமைந்தா
நன்மையுள்ள பிதாவுக்குச் சேதமாகும்
குலமென்ன கூட்டுதலைச் சொல்லக்கேளு
குவலயத்திற் சொல்லுகிறேன் குணத்தைமைந்தா
வலமென்ன வண்மையினால் வரலாறெல்லாம்
வண்மையுடன் சொல்லுகிறேன் வரிசைகேளே.

(இ-ள்.) பலனென்னும் இந்த ரேகை கண்டால் ஸ்திரீயாகப் பிறப்பதாகும். இவன் பிறந்தபோது பிதாவிற்குச் சேதமாகும். குலமாகிய கூட்டுதலைச் சொல்வேன் கேளும். குவலயத்தில் குணங்களையும் வன்மையாகத் தானே வரலாறெல்லாம் சொல்லுகிறேன் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிங்குக்கூறும் திரிகண்டரேகையுடன் பிறப்பவர் அனேகமாய் பெண்களே எனவும், இப்படியமைந்து பிறப்பதால் பிறந்தவுடன் இவனது பிதாவுக்கு மகா துன்பம் உண்டாகும் எனவும் கூறவேண்டும் என்பதாம். 57

கேட்கவே திரிகண்ட ரேகைமைந்தா
கேவலங்க ளுள்ளததின் கெடுதிசொல்வேன்
தாட்கவே தாரணியில் மனிதர்காணார்
தயாபரியாள் மனோன்மணித்தாய் தயவாய்ச்சொல்வேன்
வாட்கவே வண்மையுள்ள மைந்தனுக்கு
மகத்தான கண்டமெட்டு யோகம்நாலு
பாட்கவே இவன்வயதோ ரெழுபத்தைந்தில்
பாங்கான சக்கரத்தி னமைப்புகேளே.

(இ-ள்.) கேட்பாயாக திரிகண்ட ரேகையின் கேவலமாகிய கெடுதியும் சொல்வேன்; இதனைத் தாணியிலுள்ள மனிதர்கள் காணார்கள். தயாபரியாகிய மனோன்மணியாள் தயவாகத் தானே சொல்ல இவனுக்குக் கண்டமானது எட்டு, யோகம் நான்காம். பார்க்க இவன் வயது எழுபத்தைந்தில் பாங்காகிய சக்கரத்தின் அமைப்பைக் கேளும் எ-று.

(வி.ரை.) இக்கவியா லிவனுக்குண்டாகும் கண்டாதி கண்டத்தையும் யோகத்தையும் கூறுவாராயினர். அவையாவன, எட்டு கண்டமுண்டாயினும் வயது 75 என்பது கருத்தாகும். 58

அமைப்பான இவனுக்குத் தாரந்தானும்
அன்பான பதினேழில் முடியும்பாரு
இமைப்பான இவன்வயது முப்பதுக்குள்
இயல்பான குழவிகளு மூன்றுண்டாமே
வமைப்பான இவன்வயதோ டிருபத்தெட்டில்
வண்மையுள்ள பூமிகொள்வான் மைந்தன்றானும்
உமைப்பாகன் இவனுடைய வாழ்வனேகம்
உண்மையுடன் வாழ்ந்திருப்பா னுறுதிபாரே.

(இ-ள்.) அமைப்பாகிய இவனுக்குத் தாரம் பதினேழாம் வயதில் வந்து வாய்க்கும். இவன் வயது முப்பதுக்குள் புத்திரர் மூன்றுண்டாகும். வயது இருபத்தெட்டில் பூமியானது கொள்வான். இவனுடைய வாழ்வு அனேகமாகும்; உண்மையாகத் தானே வாழ்ந்திருப்பான். எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது விவாகம் புத்திரர் முதலியனவற்றைக் கூறியுள்ளன. அவையாவன, 17-ல் விவாகமும், 30-க்குள் மூன்று குழவிகளைப் பெற்று, 28-ல் அனேக பூமி முதலியன உடையவனாகி மிக்க மேன்மையுடன் வாழ்ந்திருப்பான் என்பது கருத்தாகும். 59

கபிலேசிந்து ரேகையின் பலன்

பாரப்பா இன்னமொரு ரேகைதானும்
பாங்கான ரேகையதைப் பகரக்கேளு
ஆரப்பா கபிலேசிந்து ரேகையொன்று
அன்பாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
கூரப்பா குணமுள்ள ரேகைதானும்
குணமாகச் சொல்லுகிறேன் கூறக்கேளு
காரப்பா கபிலேசிந்து ரேகைதானும்
கனமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு.

(இ-ள்.) பார்க்க இன்னமொரு ரேகைப் பாங்குள்ளது. அதைப்பகரக் கேளும்; அதாவது கபிலேசிந்துரேகை ஒன்று. அதைச்சொல்லுகிறேன்; குணமுள்ள அந்த ரேகையின் மார்க்கம் சொல்கிறேன் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னெனில் கபிலேசிந்து ரேகையென்ப தொன்றுளது. மேற்படி ரேகையானது எவரும் மதிக்கத் தகுந்த மேன்மைபெற்ற ரேகையாகும். ஆனதால் மேற்படி ரேகையினது பலாபலனையும் விவரத்தையும் கூறுவேன் கேளுங்கள் என்பது கருத்தாம். 60

கேட்கவே மால்விரலின் கீழேநிற்கும்
கேவலமாய் கபிலேசிந்து ரேகைமைந்தா
ஆட்கவே ஆறுபுள்ளி இரண்டுரேகை
அன்பாக விருகோண மாயிருக்கும்

வாட்கவே யிவன்கையி லிருக்குமாகின்
வளமான வாலசன்னி யாசியாவான்
நாட்கவே தயவுள்ள சீஷனப்பா
தன்மையுள்ள மைந்தனிவன் தயவாய்க்கேளே.

(இ-ள்.) கேட்க அது மால்விரலின் கீழாகவிற்கும் கபிலேசிந்து ரேகையானது ஆறுபுள்ளியும் இரண்டுரேகையும் இருகோணமாகவுமிருக்கும். இவ்வித ரேகையுள்ளோன் சன்னியாசியாகுவன், தயவுள்ள சீஷனாக விருப்பன், தன்மையுள்ள மைந்தனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னெனின் மேற்கூறிய கபிலே சிந்து ரேகை என்பது மால் விரலுக்குக் கீழ்ப்பக்கமாய் ஆறு புள்ளிகளும் இரண்டு ரேகைகளு முடையதாகி இருகோணமாய்க் காணப்படும். அப்படிப்பட்ட ரேகையான திருக்குமாயின் அவன் பக்குவமான சீஷனும் வால சன்னியாசியும் ஆவன் என்பதாம். 61

கேளடா இவன்றானு முன்னேமைந்தா
கேவலமா முற்சனனந் தாரோவென்னில்
நாளடா தேவரிலே ஒருவனப்பா
நலமாக மானிடனாய்ப் பிறந்தான்பாரு
ஆளடா வண்மையுள்ள மைந்தனாகும்
அப்பனே இவன்பிறவி யடுத்துசொல்வேன்
வாளடா வண்மைதனை எல்லாமைந்தா
வண்மையாய்ச் சொல்லுகிறேன் வரிசைகேளே.

(இ-ள்.) இவன் முன்ஜென்மத்தில் யாரோவெனில் தேவர்களில் ஒருவனாகும். இப்போது மானிடனாகப் பிறந்தான்; ஆண்மையுள்ளவன்; இவனுடைய பிறவிதனை யெடுத்துக் கூறுவேன் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது முன் ஜனனத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, இந்த ஜாதகன் தன் முன் ஜனனத்தில் தேவர்களி லொருவனாகி யிருந்து இச்சனனத்தில் மானிடனாய்த் தோன்றியவன் என்பது கருத்தாகும். 62

கேளப்பா இவனுடைய யோகமைந்தா
கேட்பதற் கிவன்சன் னியாசியாவான்
தாளப்பா தாரணியில் ரிஷிகள்மெச்சும்
சாதுரிய முள்ளதொரு சதுர்த்தனாகும்
வாளப்பா வண்மையுள்ள மைந்தனப்பா
வரிசைகளைச் சொல்லவுந்தான் முடியாதாகும்
ஊளப்பா உண்மைபெற்ற மைந்தனாகும்
உருதியாய் இவனேமூங் கெற்பமாமே.

(இ-ள்.) கேட்பாயாக இவனுடைய யோகம் சன்னியாசியாகுவன்; தரணியின்மீது ரிஷிகள் மெச்சும்படியாக சாதுரியமுள்ள சதுர்த்தனுகுவன்; வண்மையுள்ள மைந்தனது வரிசையைச் சொல்லமுடியாதாகும், உண்மையானதைப் பெற்றவன். உறுதியுள்ள இவன் ஏழாங்கெர்ப்பமாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் எவ்வித யோகத்தை யடைவான் என்னும் விவரத்தினைக் கூறுவாராயினர். அவையாவன, சன்னியாசியும் ரிஷிகளனைவரும் மெச்சத்தகுந்தவனும், சதுர்த்தனும், சாதுர்யவானும், சாமர்த்தியமும் உடையவனுவன் என்பது கருத்தாகும். மற்றும் விவரம் பின் வருமாறு. 63

கெற்பமடா இவன்றனு மேழாங்கெற்பம்
 கேவலமாய் இவன்பிறந்தான் சதையந்தன்னில்
கெற்பமடா மேன்மையுட னிவன்றனப்பா
 மேன்மையாம் மதிவார மகரமாதம்
விற்பமடா இவன்யோகம் ராசயோகம்
 விவேகமுள்ள சற்குணனும் பெரியோர்மெச்சும்
உற்பமடா உயற்சியுள்ள பாலனப்பா
 உத்தமனும் வெகுநாளாய் வாழுவானே.

(இ-ள்.) ஏழாங்கெர்ப்பமாகிய இவன் பிறந்தது சதைய நட்சத்திரம் திங்கட்கிழமை தைமாதம். இவன்யோகம் இராஜயோகம். விவேகமுள்ள சற்குணனும் பெரியோர்கள் மெச்சும்படி வாழ்வன்; உயற்சியுள்ளவன் உத்தமனுகிய இவன் வெகுநாள் வாழ்குவன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்த நாள் கோள் முதலியவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, இவன் மாதா ஸ்நானம் செய்த ஏழாம் நாள் கெர்ப்பந்தரித்தவன் மற்றும் தைமாதம் திங்கட்கிழமை சதய நக்ஷத்திரத்திற் பிறந்தவன். பெரியோர் மெச்சத்தகுந்த யோகமுடையவன் என்பது கருத்தாகும். 64

வாழுகின்ற இவன்வயது பதினேழுக்குள்
 வண்மையுடன் பிதாவுந்தா .னிறந்தான்பாரு
நாளுகின்ற நாயகனு நன்மைபெற்று
 நலம்பெறவே வாழுவண்டா நன்மையாக
ஆளுகின்ற இவன்தானும் வாலைசன்யாசி
 அன்பான யோகீஸ்பர னுகிப்போவான்
தாழுகின்ற சர்ச்சனர்கள் தயவினுலே
 தங்கைபெற்ற மைந்தனிட சார்புகேளே.

(இ-ள்.) வாழும்படியான இவன் வயதுப் பதினேழுக்குள் தகப்பன் மரணமாகுவன். இவன் நன்மையானது பெற்று வாழுண்டாகி வாழ்குவன். இவன் வாலசன்னியாசியாவன். யோகீஸ்வரனாகுவன். சர்ச்சனர்களின் தயவினால் இப்பாலனுடைய சார்பைக்கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனில், இவன் வயது 17-க்குள் பிதாவானவன் இறந்துபோவான். ஆயினும், இவன் வாலச் சன்னியாசியாகி சர்ச்சனர் தயவுபெற்றவனாகி யோகீஸ்வரனாகி நன்மை பெற்று வாழ்ந்திருப்பான் என்பதாகும். 65

கேளப்பா இவன்றானு முற்பிறப்பில்
கிருபையுள்ள வகஸ்தியர்க்கு சீஷனாகும்
வாளப்பா வண்மையுட னனேககாலம்
வரிசையாய்ப் பணிவிடைகள் செய்துவந்தான்
ஆளப்பா அப்படியே தவங்கள்செய்து
அன்றவனும் வரம்வாங்கி யுலகத்துள்ளே
வீளப்பா விமலர்பதம் பணிந்துநல்ல
விகற்பமற்று வந்திவனும் பிறந்தானன்றே.

(இ-ள்.) கேட்க இவன் முன்பிறப்பில் அகஸ்தியர்க்குச் சீஷனாகும்; வன்மையாகத் தானே அநேககாலம் பணிவிடைகள் செய்துவந்தான். பின்பு அப்படியே தவங்களானது புரிந்து வரமானது வாங்கி உலகத்தின்கண் விமலருடைய பாதம் பணிந்து விகற்பமற்று வந்து பிறந்தான் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவனது முன் ஜென்ம விவரத்தினைக் கூறப் பட்டுள்ளன. எப்படியெனில், இவன் தன் முன் ஜன்மத்தில் அகத்தியர் சீஷன் எனவும், மேற்படி அகத்தியருக்கனேகநாள் பணிவிடைசெய்தும் தவங்களையியற்றியும் வரம்வாங்கியவனானதால் இச்சனனத்தில் இவ்வாறு தோன்றினன் என்பது கருத்தாகும். 66

அன்றெனவே இவன்வய திருபத்தைந்தில்
அன்பாகத் தவசியாய்ப் போவானன்றே
நன்றெனவே இவன்றானும் ரசவாதந்தான்
நலமாகத் தொழின்முறைக ணடத்துவான்பார்
குன்றெனவே குவலயத்தி லிவனைப்போல
குணமுள்ள மைந்தனில்லை கூறக்கேளு
அன்றெனவே இவன்வயது முப்பத்தாறில்
அன்பான மாதாவு மிறப்பாள்பாரே.

(இ-ள்.) இவன் வயது இருபத்தைந்தில் தபசியாகப் போகுவன், இவன் ரசவாதத் தொழில் முறைகள் செய்குவன்; குவலயத்தி லிவனைப்போல் குண

முடைய மைந்தர்க ளில்லையாம். இவன் வயது முப்பத்தாறில் அன்பாகிய மாதாவும் மரணமடைகுவாள் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னவெனின், முன்னங் கூறிய கவியின்படி இவன் 18-ல் சன்னியாசியாயினும், 25-ல் தபசியாகி, ரசவாதத் தொழில்செய்பவனாவான். மற்றுமிவன் மாதாவானவள் இவன் வயது 36-ல் இறந்துபோவாள் என்றது அறியத்தகுந்தது. 67

பார்க்கவே யிவனுடைய யோகவாழ்வு
பாங்கான கெவனசித்தி யாகிப்போவான்
ஏர்க்கவே யஷ்டமாசித்தி யெல்லாம்
எம்பெருமா னருளாலே நடத்துவான்பார்
தார்க்கவே சண்முகன்தன் அன்புகொண்டு
சதாபூசை செய்தனன்பார் தரணிமீதில்
கூர்க்கவே யிவன்பூஜா பலத்தினாலே
குணமுள்ள பாலனென்று கூறுவோமே.

(இ-ள்.) பார்க்க இவனுடைய யோகமும் வாழ்வும் பாங்காகத் தானே கெவனசித்தியாகிப் போகுவன். ஏற்கும்படியாக அஷ்டமாசித்தி யாவும் எம்பெருமானுடைய கிருபையால் நடத்துவான். ஷண்முகக் கடவுளின் அன்பானது கொண்டு சதாகாலமும் பூசையானது செய்குவன்; அப்பூசை பலத்தினால் குணமுள்ளோனாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் இவனது யோகவாழ்வு முதலியனவற்றையே கூறுவாராயினர். அவையாவன, இவன் ஷண்முகப் பெருமானிடம் அன்புடையவனாகி சதா அவரை பூஜைசெய்து அப்பலத்தால் அஷ்டமாசித்தியையும் அறிந்துகொள்வான் என்பதுவேயாகும். 68

கூறுவோ மிவனுடைய யோகவாழ்வும்
குணமாக நடக்குமது கூர்ந்துசொல்வேன்
ஆறுவே னஷ்டமா சித்தியென்றும்
அன்பான பாலனுக்கே யாய்ந்துசொல்வேன்
மீறுவேன் சத்துருவும் பிணிகளில்லை
மேதினியில் வந்ததொரு வினைகள்தீரும்
வேறுவினை யில்லைமைந்தா இவனுக்கப்பால்
வெகுசுருக்காய் சொல்லிவிட்டேன் வெண்மையாமே.

(இ-ள்.) கூறும்படியாகிய இவன் யோகமும் வாழ்வும் குணமாகத் தானே நடக்கும்; அதைக் கூர்ந்து சொல்வேன். அன்றியும் அஷ்டமா சித்தியும் பாலனுக்குண்டாம். சத்துருக்களும் பிணியுமில்லையாம்; பூமியின்மீது

வந்த வினையுந் தீரும்; வேறொரு வினையு மிவனுக்கில்லையாம் என வெகு சுருக்காய் சொன்னேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவ தென்னை எனின், இவன் வாழ்நாளி லிவனுக்குச் சத்துருவு மில்லை, பிணியுமில்லை, இவனுக் கெப்படிப்பட்ட வினைக ளுண்டாயினும் அபபோதைக் கப்போது நீங்கி முன்சொன்ன அஷ்டமா சித்தை யடைந்துச் சுகித்திருப்பான் என்பதாம். 69

பலவிந்த ரேகையின் பலன்

ஆகவே யின்னமொரு ரேகைமைந்தா
அறிந்தமட்டுஞ் செல்லுகிறே னன்பாய்க்கேளு
பாகவே பலவிந்த ரேகையென்னும்
பாங்கான ரேகையொன்று பகரக்கேளு
ஏகவே மால்விரலில் ஏறிநிற்கும்
இறுகீறு மூன்றுபுள்ளி இசைந்துநிற்கும்
ஆகவே வையகத்தி லிந்தரேகை
வரிசையாய்க் கண்டாக்கால் மைந்தாகேளே.

(இ-ள்.) ஆகும்படியாக இன்னமொரு ரேகை சொல்வேன். அறிந்த மட்டுங் கேட்பாயாக, பலவிந்தரேகை என்னும்படியான பாங்குள்ள அதைப் பகர்வேன்; அது மால்விரலிலேறி நிற்கும். அதில் இருகீறும் மூன்று புள்ளியு மாக இசைந்திருக்கும். வையகத்தி லுள்ளோர்க்கு இந்த ரேகை கண்டால் அதின் மார்க்கம் சொல்வேன் கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியால் பலவிந்த ரேகையினது விவரத்தைக் கூறுவாரா யினர். எப்படி எனில், மேற்படி பலவிந்த ரேகை என்பது இரண்டு கீற்று களும் மூன்று புள்ளிகளுமா யமைந்து நிற்கும். ஆனதால் அவ்விருத்தாந்தத் தைக் கூறுகிறேன் கேளுங்கள் என்பது கருத்தாகும். 70

கேட்பதற்குப் பலவிந்த ரேகைமைந்தா
கேவலமா யணிவிரலி லிருக்கும்பாரு
வாட்பதற்கு மால்ரேகை யுடனேசேர்ந்து
வளமாக இருக்குமது வண்மைகேளு
நாட்பதற்கு நாயகியாள் கடாட்சத்தாலே
நானிலத்தில் வந்துதித்தான் நளினமாக
மீட்பதற்கு நலமுள்ள யோகமைந்தா
மேலாகச் சொல்லுகிறேன் விரைந்துகேளே.

(இ-ள்.) கேட்கப் பலவிந்த ரேகையானது அணிவிரலி னிடமாக விருக் கும். அது மால்ரேகை யுடனே சேர்ந்து யிருக்கும். அதின் வளமையைக்

சேனும்; தாயாராகிய உமையவளின் கடாட்சத்தால் அவ்வித ரேகையுள்ளவன் பூமியில் வந்துப் பிறந்தோனாகும். நன்மையாகிய யோகமதனை மேலாகச் சொல்கிறேன் எ-று.

(வி-ரை.) இக் கவியாலும் மேற்படி ரேகையினது தன்மையினையே கூறு வாராயினர். அவையாவன, முன்சொன்ன மால் விரலிலுள்ளதைப் போலவே அணிவிரலிலு மிருக்கும். இவ்வாறு அமைந்து பிறப்பது உமாதேவியினது கடாக்ஷமே யாகும். ஆனதால், அவ்விருத்தாந்தத்தைக் கூறுகிறேன் கேளுங் கள் என்பது கருத்தாகும் 72

கேளடா இவன்பிறக்கும் போதுமைந்தா
கேவலங்க ளிவன்மனையி லாகிப்பேரு
வாளடா வையகத்தி லிவனைப்போல
வரிசைபெற்ற மக்களா இல்லைபாரு
ஆளடா விவன்பிறந்த வீடுதானும்
அன்பான வடவாச லுள்ளவீடு
தாளடா விவன்பிறக்கும் போதுமைந்தா
தயவான பிதாவுமவ னில்லைபாரே.

(இ-ள்.) கேட்க இவன் பிறக்கும்போது இவன் மனையில் கேவலமான பெயராயிற்றும். இந்தப்பூமியில் இவனைப்போல் வரிசை பெற்றவர்களில்லை. இவன் பிறந்தவீடு வடவாசலுள்ள வீடாகும். இவன் பிறக்கும்போது பிதாவும் அங்கில்லையாம் எ-று.

(வி-ரை.) இக்கவிமுதல் இவனது பலாபலன்களைக் கூறியுள்ளனர். அவையாவன, இவன் வடக்கு வாசலுடையவீட்டில் பிதாவானவன் தன் வீட்டிலில்லாத நேரம் பிறந்தவன் எனவும் செழித்த குடும்பத்தில் பிறந்தவன் என்பதுங் கருத்தாகும். 72

பாரடா விவன்பிறந்த நாலாமாதம்
பண்பான தாய்மாம னிறந்தான்பாரு
கூரடா யிவன்பிறந்த மூன்றுமாதம்
குணமுள்ள மனையிலே அனலேசாடும்
வேரடா அனல்விழுந்து எல்லாம்போகும்
விகற்பமுள்ள பிதாவுந்தான் வீட்டிலில்லை
சாரடா சற்சனமாய்ப் பின்னேயப்பா
சத்தியவான் மைந்தனென்று சார்ந்துசொல்லே.

(இ-ள்.) இவன் பிறந்த நாலாமாதம் அம்மான் மரணமாகுவன்; இவன் பிறந்த மூன்றுமாதம் மனையில் அனலானது சாடும்; யாவும் அழிந்துபோகும்,

அப்போது தகப்பனும் வீட்டிவில்லையாம் சர்ச்சனமாகப் பின்பு இவன் சத்திய வானாகுவன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்தவுட னிவன் குடும்பத்தி லேற்படும் சில துன்பங்களைக் கூறுகின்றனர். அவையாவன, இவன் பிறந்த நான்காம் மாதம் அம்மானிறந்துபோனான். மூன்றும்மாதம் வீடானது பற்றியெரிந்து விட்டது. அக்காலம் பிதாவும் வீட்டிவில்லை. இவ்வாறு நடந்தபின்பே யோக முண்டாயின என்பது கருத்தாகும். 73

சொல்லனவே இவன்பிறந்த நாளுங்கோளும்
சொல்லுகிறேன் மைந்தாகேள் சூட்சியாக
வெல்லெனவே விமலிதிரி சூலிநீலி
வேதாந்த ஆதித்தாய் விளம்பினாள்பார்
அல்லெனவே யிவனால்தான் சோதியாகும்
அன்னவனுந் திரிதிகையிற் பிறந்தான்மைந்தா
நல்லெனவே கதிரவன்ற னுதயவாரத்தில்
நலம்பெறவே பிறந்தனடா நாடிச்சொல்லே.

(இ-ள்.) சொல்லும்படியாக இவன் நாளுங்கோளும் சொல்வேன் சூட்சமாகவும் வெல்லும்படியாக விமலி திரிசூலிநீலி, வேதாந்தமாகிய ஆதித்தாயாகிய அம்பாள் விளம்பினாள். இவன் பிறந்தநாள் சோதியாகும்; திதி திருதிகை கதிரவன் உதையகோத்தில் நலம்பெறும்படியாக இவனும் நாடிப்பிறந்தான்.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்த காலத்தைக் கூறுவாராயினர். அவையாவன, ஞாயிற்றுக்கிழமை சூரிய உதய கோத்தில் திருதிகை கூடிய நாளில் பிறந்தான் என்பது கருத்தாகும். மற்று மிதனை உமாதேவியார் எனக்குக் கூறிய தென்பது அறியத்தகுந்தது. 74

சொல்லவே யிவன்றனு மைப்பசியிற் யிறந்தான்
சொற்குறிக ளநேகமுண்டு இன்னங்கேளு
நல்லவே இவன்வயது நாற்பத்தெட்டில்
நலமாகப் பிறந்தானடா நாடிக்கேளு
அல்லவே யிவனுடைய வாயுசுந்தான்
அவ்வளவு யென்றுநீ யாய்ந்துசொல்லு
வலம்பெறவே இவன்வயது பதினேழுக்குள்
வளமாக விவாகமது முடியுமென்றே.

(இ-ள்.) சொல்ல மாதம் ஐப்பசிமாதமாகும்; சொல்லும்படியான குறிகள் இன்னமும் அனேகமாகத்தானே வுண்டாம் இன்னமுஞ்சேளும். இவன் வயது நாற்பத்தெட்டெனப் பிறந்தான்; இவன் ஆயுளும் அவ்வளவே யாகும்; இவன் வயதுப் பதினேழுக்குள் விவாகமானது முடியும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனின், இவன் ஐப்பசியிற் பிறந்தவன் எனவும், இவனுக்கு வயது 48-ஆகும் எனவும் இவன் வயது 17-க்கு முன்பே விவாகம் நடக்கும் எனவுங் கூறவேண்டுவதென்பதாம்.

75

அன்னவே யிவனுக்கோ ராறுபிள்ளை
அன்பாகப் பிறக்குமென் றுய்ந்துசொல்லு
பின்னவே இவனுக்குப் பெண்கள்நாலு
பிரியமுள்ள ஆணிரண்டு பிறக்கும்பாரு
உன்னவே இவனுக்குத் தாரம்ரெண்டு
உண்மையாய் முடியுமென் றுறுதிசொல்லு
கன்னவே யிவனுக்கோ மந்தவாரம்
காட்சியாய் நடக்குமென்றே கருதிசொல்லே.

(இ-ள்.) இவனுக்குப் பிள்ளைகள் ஆறு பிறக்கும்; அதில் பெண்கள்நாலு; ஆண்கள் இரண்டாம். அது உண்மையாகத்தானே முடியும் இவனுக்குச் சனிக்கிழமை காட்சியால் நடக்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியா லிவனது மனைவி மக்கள் முதலியோரது விருத்தாந்தத்தைக் கூறுவாராயினர். அவையாவன இவனுக்குப் பிறப்பவர் மொத்தம் 6-ல் பெண் 4, ஆண் 2 எனவும், மனைவி இரண்டு என்பதே இதன் முக்கிய கருத்தாகும்.

76

சொல்லவே இவனுடைய யோகவாழ்வு
சொல்வதற்கு சகலமுநான் சுருக்கிச்சொல்வேன்
அல்லவே ஆஸ்தியுள்ள பாலகன்றான்
அன்பான ரேகையுடன் அறிவுசொன்னேன்
வெல்லவே யிவன்பிறந்த நாளுங்கோளும்
மேலான யோகமுதல் வாழ்வுசொன்னேன்
நல்லவே நன்மையுட னெல்லாஞ்சொன்னேன்
நன்மைபெற்ற மைந்தனென்று நாடிச்சொல்லே.

(இ-ள்.) சொல்லும்படியான இவனுடைய யோகமும் வாழ்வும் சொல்லுவதற்குச் சகலமும் சுருக்கிச்சொல்வேன்; ஆஸ்தியுள்ளப் பாலனாகும்; அன்பாக ரேகையைக் கண்டுசொன்னேன் இவன் பிறந்த நாளுங்கோளும் மேலாகிய வாழ்வும் சொன்னேன்; நன்மையோடு யாவுஞ் சொன்னேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்ன வெனில் பொதுவாய் இந்த ஜாதகனைக் குறித்துக் கூறுகையில் மிக்க யோகமுடையவன் என்பதேயாகும். மற்றுமொரு ரேகையினது விருத்தாந்தங்களைக் கூறுவேன் கேளெனக் கூறி பின்வருங் கவியாற் சொல்லுகின்றனர்.

77

நாகவிந்த ரேகையின் பலன்

சொல்லவே யின்னமொரு ரேகைமைந்தா
    சொல்லுகிறே னிதன்விபரந் துலங்கக்கேளு
நல்லுவே னாகவிந்த ரேகையொன்று
    நலமாகச் சொல்லுகிறேன் நாடிக்கேளு
அல்லுவே னாகவிந்த ரேகையொன்று
    அன்பாகச் சொல்லுகிறே னாய்ந்துகேளு
வல்லுவே னாகவிந்தம் வரலாறுதானும்
    வண்மையாய்ச் சொல்லுகிறேன் மார்க்கங்கேளே.

(இ-ள்.) சொல்வேன் இன்னமொரு ரேகையைக்கேளும்; அதன் விபரம் நாகவிந்தரேகை ஒன்று சொல்கிறேன் கேளும். அதின் வரலாறெல்லாம் வண்மையாகத்தானே; அதின் மார்க்கங்கேளும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்ன வெனில், நாகவிந்த ரேகை என்றொன்றுள்ளது. அவை மகா மகத்துவம் பொருந்தியதாகும். ஆதலால் அதன் விவரத்தினைக் கூறுவேன் கேளுங்கள் என்பது கருத்தாகும். 78

கேளப்பா மால்விரலின் கீழேமைந்தா
    கேவலமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
ஆளப்பா ரெண்டுபுள்ளி மூன்றுவட்டம்
    அன்பான இதழாறு மிருக்கும்பாரு
வாளப்பா வண்மையுள்ள பாலன்றானும்
    வரிசையாய் நாகவிந்த ரேகைகண்டால்
வீளப்பா ஒன்றுமில்லை தனவானப்பா
    விபரமாய்ச் சொல்லுகிறேன் விபரங்கேளே.

(இ-ள்.) கேட்பாய். மால்விரலின் கீழே இரண்டு புள்ளியும்மூன்று வட்டமும் இதழ் ஆறுமிருக்கும்; வரிசையாகிய இந்த நாகவிந்தரேகை யுள்ளோன் துன்பமில்லாத் தனவானாகும்; இன்னமும் விபரமாகச் சொல்கிறேன் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மேற்படி ரேகையானது எவ்வாறு இருக்கும் என்பதைக் கூறுவாராயினர். அவையாவன, மால்விரலுக்குக் கீழ் மூன்று வட்ட ரேகைகளும் இரண்டு புள்ளி ரேகைகளுமா யமைந்திருக்கும். ஆனதால் அதன் பலாபலன்களைக் கூறுகிறேன் என்பது கருத்தாகும். 79

கேளடா விவன்பிறந்த மனைதானப்பா
    கேவலங்க ளுள்ளதொரு விருமனைக்குள்
நாளடா விருமனைக்குள் தென்பால் வீட்டில்
    நலமான இருவாசல் வீட்டிலேதான்

LuraTech Document Processing Solutions

ஆளடா வாச்சரிய முள்ளவீட்டில்
அன்பான பாலகனும் பிறப்பதாகும்
மீளடா இவன்பிறந்த வாரநாளும்
மிருவாகச் சொல்லுகிறேன் வியந்துகேளே.

(இ-ள்.) இவன் பிறந்தமனை இருமனைக்குள் தென்பால் வீட்டில் இவன் பிறப்பாகும். ஆச்சரியமுள்ள வீட்டில் பிறந்தோனுகும்; இவன் பிறந்தவாரமும் நாளும் அறியச் சொல்கிறேன் வியந்து கேட்பாய் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்த வீட்டினது லக்ஷணங்களைக் கூறுவாராயினர். அவையாவன, இருமனையும் பழையதுமாகிய வீட்டில் தெற்குவாயில் இரண்டுடைய இல்லத்தில் இவன் ஜனித்தான் என்பது கருத்தாகும். 80

கேளடா யிவன்பிறந்த நாள் தான்மைந்தா
கேள்வியுள்ள உத்திரத்தின் காலுங்கூடி
நாளடா நன்மையுள்ள நாளிலேதான்
நலமான பாலகன்று னுடிக்கேளு
வாளடா வண்மைபெற்ற மைந்தனப்பா
வரிசையுள்ள வெள்ளியடா வுதையந்தன்னில்
நாளடா மார்கழியா மாதந்தன்னில்
நன்மையாய்ப் பிறந்தனடா லக்கினத்தில்.

(இ-ள்.) இவன் பிறந்தநாள் உத்திரநட்சத்திரம் நாலாம்பாதம். வெள்ளிக்கிழமை உதையகாலம் மார்கழிமாதம் இன்பமாகத்தானே இலக்கினத்திற் பிறந்தான் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இவன் பிறந்த நாள் கோள் முதலியனவற்றைக் கூறுவாராயினர். அவையாவன, மார்கழிமாதம் வெள்ளிக்கிழமை உதயநேரத்தில் உத்தமலக்கினத்தில் உத்திரம் ஒன்றும் பாதத்தில் பிறந்தவன் என்பதாம். 81

லக்கினமே இவன்பிறந்த நாளுங்கோளும்
நஞ்சகமா யோகத்திற் பிறந்தபாலன்
சிக்கெனவே யோகம்வந்து பலிக்குமன்றோ
சிவாசிவா யிவன்யோகம் செப்பப்போமே
வக்கிரங்க ளிவன்பிறந்த வருஷத்துள்ளே
வளமான மாதாவும் இறப்பாள்பாரு
அக்கினங்க ளிவன்பிறந்த வருஷம்ரெண்டில்
அன்பான பிதாவைத்தான் கொல்வானன்றே.

(இ-ள்.) இலக்கினமும் இவன் பிறந்த நாளுங்கோளுங்கூடி யோகத்திற் பிறந்த பாலனுகும்; இவனுடைய யோகத்தை சொல்லப்போகாதாம். இவன் பிறந்த வருஷத்திலேயே தாயார் மரணமாவாள். இவன்பிறந்த வருஷம் ரெண்டில் தகப்பனும் மரணமடைகுவன். எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவது இவன் ஜெனித்த வாரத்தின் விசேஷத்தால் மிக்க மேலான யோகத்துடன் பிறந்தவன் என்றாலும் இவன் பிறந்த ஒருவருஷத்தில் மாதாவும், இரண்டு வருஷத்தில் பிதாவும் இறந்து போவார் என்பதாம். 82

அன்றெனவே இவன்றானு மேகாதேசி
அன்பான மார்கழியில் பிறந்தபாலன்
குன்றெனவே யிவன்வயது மூன்றறைக்குள்
குலமான இவனிளைய பிதாவுமாள்வான்
நின்றெனவே திசையோக முள்ளமைந்தன்
நிச்சயமாய் யிவன்யோகம் நிகழ்த்துவேன்கேள்
சென்றெனவே செம்மையுள்ள மைந்தனப்பா
சோதிசொல்வாள் இன்னமுந்தான் ஆதித்தாயே.

(இ-ள்.) இவன் ஏகாதசித் திதி ஐப்பசி மாதத்திற் பிறந்த பாலனுகும். இவன் வயது மூன்றறைக்குள் இவன் இளையபிதாவும் மரணமாவான் திசை யோகமுடைய இப்பாலன் பலன்களை நிகழ்த்துவேன் என் செம்மையுள்ள ஆதித்தாயின் வாழ்க்கை என் சொல்வேன் இன்னமும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனின், இந்த ஜாதகன் மேற்படி மார்கழி மாதத்தில் ஏகாதசி கூடியநாளிற் பிறந்தவன். இவன் வயது 15-க்குள் இளைய பிதாவும் மரணமடைவானுயினும், நல்ல யோகமும் வாழ்வும் உடையவனுகி யிருப்பான் என்பது கருத்தாகும். 83

ஆக காண்டம் 6-க்கும் பாடல் 539.

ஏழாவது காண்டம்

இதுவரையிற் கூறிவந்த ஆறுகாண்டங்களாலும் அந்தந்த ரேகையினது பலாபலன்களைக் கூறிவந்துள்ளன. இனி இப்படிப்பட்ட ரேகையிற் பிறந்தவர்களுக்கு இன்ன பலன் என்பதைக் கூறியுள்ளார். இந்த சாஸ்திர மானது எவர்களால் உரைக்கப்பட்டதெனில், ஸ்ரீ சத்திதேவியால் பிரமன் விஷ்ணு முதலியவர்களுக்கும், ஏனைய ரிஷிகள் முனிவர்கள் முதலியவர்க

ளுக்குங் கூறப்பட்டனவாகும். ஆனதால் மேற்கண்ட அனைவரும் தேவியார் கூறப்பட்ட அதிசயங்களைக் கேட்டு ஆனந்தபரவசர்களாகி கீழ்க்கண்டவாறு தோத்திரம் செய்வாராயினர். இதனையே இக்காண்டத்தின் இடையிடையே காணலாம்.

இதுவன்றி இதுகாறுங் கூறிவந்த ரேகையின் விவரத்தால்: எந்தெந்த ரேகைகள் எங்செங்குள்ளன என்பதையும், அவை எவ்வாறு அமைந்திருக்கும் என்பதையும் மிகத் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளனவாயினும், இதனை இலேசா யறிவது மிகக் கடினம் எனினும் மிக்க சூக்ஷமஞான முடையவர்களேயறிவர். இதனைத் தெளிவாய் விளக்குவோமெனினும் இப்புத்தகம் இடந்தராதாதலால் ஆங்காங்கு காட்டிய படத்தின் ஆதாரத்தால் தெரிந்துகொள்ளுக. ஏனைய விஷயங்களை குருமூலமாயறிவது நலம்.

ஆதியெனும் பராபரையின் பொருளேயம்மா
அம்பிகையின் வாழ்கௌரி யாதியந்தம்
சோதியெனும் மனோன்மணியே உமையே தாயே
சொற்பெரிய உத்தமியே துலங்குமாயிமொளியே
நீதியெனும் பாஞ்சுடரே நிர்மலத்தாய்
நீணிலத்தி லுன்னையல்லாற் றெய்வமுண்டோ
வாதியெனும் வாலைபர மேஸ்வரியே தாயே
வர்ணவிழிக் கண்ணரசே வஞ்சியாளே.

(இ-ள்.) ஆதியாகிய பராபரையின் பொருளே அம்மையே அம்பிகையே கௌரியான ஆதியாகிய சோதியே மனோன்மணியே உமையே தாயே சொற் பெரிதாகித் துலங்குமொளியே நீதியாகிய பாஞ்சுடரே நிர்மலத் தாயே இந்த உலகத்தில் உன்னை யல்லாமல் தெய்வமுண்டோ வாதியாகிய வாலை பரமேஸ் வரியே வர்ணவிழியுடையக் கண்ணரசே வஞ்சியாளே எ-று.

(வி-ரை.) இச்செய்யுளின் முக்கிய கருத்தென்னவெனின், இதுவரை யில் கூறிவந்த ரேகை விவரத்தையும் பலனையுங் கேட்டுவந்த தேவர் முனிவர் முதலாயுள்ளவரும் பிரமன் விண்டு முதலியோரும் மேற்படி தேவியை நோக்கி ஓ உலகமாதா உம்மைப்போன்று இவ்வுலக அதிசயத்தையும் ரகசி யத்தையு முரைப்பவர் வேறொருவருளரோ? என தேவியினது திருநாமங்க ளைச் சொல்லி உமையல்லால் எமக்கு வேறெவரும் கெதியில்லை எனத் துதித்தார் என்பதாம். 1

வஞ்சியெனுங் கொஞ்சுகிளி வாலைநாயகியே
வாசமுள்ள கந்தம்முன் மலர்ப்பாதந்தான்
அஞ்சினே னுன்பாதத் தருளினாலே
ஆரணங்கே பார்வதியே யபிராமியாளே

நெஞ்சிலே உன்பாதந் துதிப்பென் றுயே
நேரிழையே சோதியம்மா நேமியாளே
பஞ்சைகள்போல் ரிஷிகள் உனை வணக்கஞ் செய்தார்
பத்தினியே உத்தமியே லோகத்தாயே.

(இ-ள்.) வஞ்சியெனும் கொஞ்சு கிளியான வாலைநாயகியே, வாசமுள்ள கந்தம் மணக்கும் உன் மலர்ப்பாதத்திற்கு அஞ்சினேன்; உன் அருளினுல் ஆதிபார்வதியே அபிராமித்தாயே நெஞ்சினில் உன்னுடைய பாதத்தைத் துதிப்பேன் றுயே; சோதியாகிய நேமியாளே, பஞ்சைகள்போல் ரிஷிகள் உன்னை வணக்கஞ் செய்தார்கள். ஓ பத்தினியே உத்தமி லோக மாதாவே எ-று.

(வி-ரை.) இச்செய்யுளின் கருத்தாவ தென்னையெனின், பெண்ணுருவாகிக் கொஞ்சுங் கிளியினது குரலினை யொத்தவளாய் வாலைப்பருவமும் கந்தமுதலிய வாசனை நிறைந்துள்ள பாதங்களும் அமைந்த மாதாவே உன்னை தேவர்கள் முதலிய அனைவரும் அடிவணங்கித் துதிக்கின்றனர். ஆனதால் யானு முன்னைத் தோத்தரிக்கிறேன். ஆனதால், இவ்வுலக அதிசய மனைத்தையும் யானறியும் வண்ண முறைப்பாயாக. என விண்டு வானவர் தோத்தரிக்கின்றனர். 2

லோகமெல்லா முன்படைப்பு ஜீவாத்மாவை
நோக்கியே யவர்களைநீ காக்குந்தெய்வம்
ஆகமுதற் புராணபல வேதமெல்லாம்
ஆண்டருளு முத்தமியே யம்பிகையேநீ
வாகவுரி வர்னமொழிக் கண்ணரசேயுந்தன்
மலர்ப்பாதஞ் சரணமென்று வணங்கும்பேர்க்கு
சாகமுதல் தாழ்பவரை வறுமைநீக்கி
சந்தான மீன்றருளுந்தாயே தாயே.

(இ-ள்.) இந்த லோக மாதியந்தமும் உன்படைப்பாகும். ஜீவாத்மாவை நோக்கி யவர்களைக் காக்குந் தெய்வம் நீயே, ஆகம முதலாகிய புராணமும் பலவேதமும் ஆண்டருளும்படியான உத்தமி அம்பிகை நீ உன்மலர்ப்பாதம் சரணமென்று வணங்குவோர்க்கு சாக முதலாகத் தாழ்பவர்களுக்கு வறுமையை நீக்கி சந்தான மீந்தருளும்படியானத் தாயே எ-று.

(வி-ரை.) சகலசீவன்களுக்கும் ஆதார பூதமாகியும், மேற்படி ஜீவன்கள் உயிற் பெற்றுய்யும் மார்க்கமனைத்தினுக்கும் காரண வஸ்துவாயும் வேதாகம புராண இதிகாச மனைத்தினுக்கும் காரணவஸ்துவாகியும் உம்மை அஞ்சலி செய்வோரின் துன்பமனைத்தையும் ஒழித்து ஆட்கொள்ளுபவனும் நீயே யாகலின் உம்மைத் துதிக்கிறேன் என்பது கருத்தாம். 3

Uratech Document Processing Solutions

தாயேநா னுன்பாத மனுதினந்தான்
தப்பாமற் பூசிக்கத் தயவுசெய்வாய்
ஆயென்ற மந்திரத்தை இடைவிடாமல்
அரகரா தோத்திரங்கள் செய்வேனப்பா
வாயென்ற வையகமும் முனையேபோற்றும்
வாக்கருளு முத்தமியே வாலைசோதி
நாயேனு னுனதுதிருப் பாதம்போற்றி
நாயகியே காத்தருளி நலஞ்செய்வாயே.

(இ-ள்.) தாயே நான் உன்பாதம் அனுதினமும் தப்பாமற்படிக்குப் பூசைசெய்ய தயவுசெய்வாய். ஆ என்னும்படியாகிய மந்திரத்தை இடைவிடாமல் தோத்திரங்கள் செய்வேன் அம்மா. இந்த வையகம் உனையே போற்றும் வாக்கருளும் உத்தமியாகிய வாலைசோதியே நான் உனதுதிருப்பாதம் போற்றி நின்றேன் நாயகியே காத்தருள்வாய் எ-று.

(வி-ரை.) இச்செய்யுளால் மேற்படி தேவியை விண்டுவானவர் ஓ பரமேஸ்வரி, உனது பிரபாவத்தை என்னுலுரைக்கமுடியவில்லை. ஆனதால் உன்னுடைய திருநாமத்தையே யான் இடைவிடாது துதிக்கின்றேன் உன்னை யன்றி எனக்கு வேறு எவரும் துணையில்லை யாதலால், என்னை யாட்கொள்வாயாக என்பது கருத்தாகும். 4

செய்யவே எந்தனிட தாயே நீயும்
செப்பரிய மனோன்மணியே செல்வயோகி
ஐயமில்லா தெந்தனைநீ யாள்வாய்தாயே
ஆச்சரிய முள்ளவளே ஆரணங்கே
மெய்யவே வேதாந்த சுரூபியம்மா
மேன்மையுள்ள கண்மணியே விமலரூபி
தையவே கார்குழலே தாயேயம்மா
தயவுவைத் தருள்புரியுந் தங்கையாரே.

(இ-ள்.) செய்யும்படியானத் தாயே நீயும் செப்பரிதாகிய மனோன்மணியே செல்வயோகியே ஐயமில்லாமல் என்னை நீ யாள்வாய்த் தாயே. ஆச்சரியமுள்ளவளே. ஓ ஆரணங்கே வேதாந்தச் சொரூபியே மேன்மையுள்ள கண்மணி விமலரூபி தாயே தயவுவைத்து அருள்புரிவாய்த் தங்கையே எ-று.

(வி-ரை.) இச்செய்யுளின் கருத்தென்னெனின் ஓ மஹாதேவியே, எனக்குத் தாயாகி விளங்குபவள் நீயேயாதலால் இன்னும் என் மனத்திலுள்ள ஐயமனைத்தையும் நீக்குவது உன் பாரமேயாகும் என விண்டுவானவர் தேவியை ஸ்தோத்திரம் செயவாராயினர். 5

தங்கையே யென்பிறவி உமையே தாயே
 தாழ்வில்லாப் பெண்ணரசே சர்வசாட்சி
பங்கையம்போல் முகம்படைத்த பார்வதித்தாய்
 பத்தினியே பரமனிட பாகம்பெற்ருய்
எங்கணுமாய் நிறைந்ததொரு ஏகரூபி
 ஏகாந்த கண்மணியே எம்பிராட்டி
மங்கையெனும் மனோன்மணியே வாலைஅம்மா
 மகத்தான மூலமுதற் பொருளானுளே.

(இ-ள்.) தங்கையாகிய என் பிறவியே, உமையே தாயே தாழ்வில்லாதப் பெண்ணரசே சர்வசாட்சியே தாமரை மலரைப்போல் முகம்படைத்தப் பார்வதித் தாயே, பத்தினியே நீ பரமனுடைய பாகம்பெற்ருய். எங்கும் நிறைந்த ஏகரூபி ஏகாந்தக் கண்மணியே எம்பிராட்டியே, மங்கை என்னும் மனோன் மணியே வாலை யம்மாளே மூலமுதற் பொருளே எ-று.

(வி-ரை.) இச்செய்யுளின் கருத்தென்னெனின், ஓ எனது தங்கையாகிய மகாபரமேஸ்வரி, பெண்களுக்கரசாயும், பரமசிவனுக்கிடபாகத்தி லிருக்கத் தகுந்த வரம்பெற்றவளாயும், சகல பொருளுக்கும் ஆதாரப் பொருளாய் விளங்குபவள் நீயே யாதலால், நீயே யெனது ஐயத்தை நீக்கத் தகுந்தவள் என்பதாம். 6

பொருளென்ற பூரணமாம் சோதித்தாயே
 போதமுள்ள சீவர்கட்குச் சீவனுனாய்
அருளென்ற அனுக்கிரகம் ஆதிசத்தி
 ஆதியந்தம் உடல்உயிரும் அனைத்துமானுய்
வருளென்ற வகுப்புநீ யோகமும்நீ
 வாகான நலமும்நீ தீமையும்நீயே
சருளென்ற சாஸ்வதிநீ தீமையும்நீ
 சற்குணிநீ உலகமெல்லாம் படைத்தாய்நீயே.

(இ-ள்.) பொருளென்னும்படியாயும் நின்ற பூரணமாகிய சோதித்தாயே ஜீவர்கட்குள் ஜீவனுனாய். அருளென அனுக்கிரகமாகிய ஆதிசத்தியே, ஆதியந்தமும் உடலுயிரும் அனைத்தும் நீயானாய்; வகுப்பும்நீ ஏகமும்நீ நலமும்நீ தீமையும் நீ சாஸ்வதியும் நிர்க்குணிநீ [உலகெலாம் படைத்த தாய் நீயே எ-று.

(வி-ரை.) சாஸ்வதியாகியும் சத்திதேவியாகியும் உடல் உயிர் ஆகிய ஆதியந்தங்களுக்கும் மூலப்பொருளாயும், நன்மைதீமை என்னு மனைத்திற்கும் நீயே காரணப்பொருளாய் விளங்குபவளாயுமிருப்பவள் நீயே யாதலால் என் மனக்குறை யனைத்தையும் அகலும்வண்ணம் அருள்செய்யக் கடவை என வேண்டினர் என்பதாம். 7

நீயெனவே அண்டமும்நீ பிண்டமும்நீ
நீணிலத்தில் தேவர்முதல் முனிவரும்நீ
ஆமெனவே அம்மையும்நீ அப்பனும்நீ
ஆனதொரு சுவாதிஷ்டான மூலமும்நீ
தாயெனவே தங்கையும்நீ தாரமும்நீ
தற்பரமே மெய்ப்பொருளே தயவுசெய்வாய்
காயெனவே கனியெனவே மூலமும்நீ
காரணியும் பூரணியும் நீதானுமே.

(இ.ள்.) அண்டம்நீ பிண்டம்நீ தேவர் முதலாகிய முனிவரும் நீ அம்மையும் அப்பனும்நீ சுவாதிஷ்டான மூலமும்நீ தாயும்நீ தங்கையும்நீ தாரமும்நீ தர்ப்பரமாகிய மெய்ப்பொருளே தயவுசெய்குவாய்; காயும்நீ; கனியும்நீ மூலமும்நீ காரணியும் பூரணியு மானவள் நீயே எ-று.

(வி-ரை.) இச்செய்யுளால் இந்நூலுக்காசியாகிய ஸ்ரீசத்திதேவியைத் துதிப்பாராயினர். எப்படியெனில், அண்டபிண்டாண்டத்திலும் நிறைந் திருப்பது சத்திமயமேயாதலாலும், அகண்டாகாரண வஸ்துவாய் விளங்குவ தும் மேற்படி சத்திமயமேயாதலாலும், தேவர்கள் முனிவர்கள் முதலான பேரும் மேற்படி சத்திதேவியின் ஆதாரத்தையே பெரிதும் விரும்புவார்க ளாதலாலும், உலகமனைத்திற்கும் தாய்க்குத் தாயாகியும், தந்தைக்குத் தந்தை யாகியும் விளங்கும் வஸ்துவும் நீயேயாகி இருக்கின்றனை. இதுவன்றி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களும் நீயேயாகி இருக்கின்றனை. இதுவன்றித் தாய்க்குத் தாயாகியும், தந்தைக்குத் தந்தையாகியும், தாரமாகியு மிருக்கின்ற வஸ்துவும் நீயேயாதலால் காய் கனி முதலிய சகல வஸ்துவுக்கும் நீயே காரண வஸ்துவாகியு மிருக்கின்றனையாதலால் எங்களை ஆட்கொள்ள வேண்டுவதும் நீயேயாகும். ஆனதால் நீயே எங்களை யாட்கொள்ளக்கடவாய் என வணங்கிக் கேட்டனர் என்பதாம். 8

ஆமெனவே ஐயும்கிலியும் சவ்வும்ஆனுய்
அடிமுடியும் நடுவும்என அமர்ந்தசோதி
ஊமெனவே மஹேஸ்வரியும் ஸ்ரீயும்ரீயும்
உத்தமியே அங்கென்றும் உங்மங்கென்றும்
வாயெனவே வவ்வென்றும் சிவ்வென்றும்தான்
வண்மையுள்ள யவ்வென்றும் அவ்வும்யென்றே
நாமெனவே நவ்வென்றும் வவ்தானென்றும்
நமநம சிவசிவ ராராயென்னே.

(இ-ள்.) ஆமென்னும்படியாக ஐயும் கிலியும் சவ்வும் ஆனுய் அடிமுடியும் நடுவுமாக அமர்ந்தசோதி மயேஸ்வரியாயும் ஸ்ரீயும் ரீயும் அங் உங் கங் என்றும்

வவ் சிவ் என்றும் யவ் என்றும் யவ்வும் நவ்வென்றும் மவ் என்றும் நம நம சிவ சிவ ரா ரா என்னே எ-று.

(வி-ரை.) இச்செய்யுளால் ஸ்ரீமகா பரமேஸ்வரியினது மூலமந்திரங்களைக் கூறுவாராயினர். அவையாவன, ஐயும், கிலியும், சவ்வும், ஸ்ரீரீயும், ரீயும், அங், உங், மங்; வவ், மவ் சிவ் டவ், யவ், நவ், மவ், நம, நம, சிவ, சிவ, ரா, ரா என்பதாம். 9

ரா ரா ரா நமசிவரங் கங்கென்று
நல்லரீங் ஸ்ரீங்ரக்ஷி ரக்ஷியென்று
பாராரரரா நாதாபின் குரங்கிசாய
பாராபரியே என்பிறவியுன் பாதம்போற்றி
சீராரும் ஸ்ரீம்ஓம் பகவதாநீ
சிவசத்தி உடலுயிரும் ஆனதாயே
தாராரும் ரங்லிங்சிங் வங்கென்று
தாருலகிற் செய்பூசை கொள்ளுந்தாயே.

(இ-ள்.) ரா ரா ரா நமசி வாங் அங் என்றும் ரீங் ஸ்ரீங் ரக்ஷி என்றும் பரா ரா ரா நாத பிந்து ரங் கிசாய பராபரியே என் பிறவி உன்பாதம் போற்றி ஸ்ரீம் ஓம் பகவதா நீ சிவசத்தியாகி உடலும் உயிருமானத்தாயே ரங் லிங் சிங் வங் என்றும் தாருலகின்கண் செய்யும் பூசையைக் கேளுந்தாயே எ-று.

(வி-ரை.) தேவியைத் துதிசெய்பவர் மேற்படி மந்திரத்தை இடைவிடாது பூசித்து வருவார்களேயாமாயின் தான் கோரிய பொருளை யடைந்து சுகித்திருப்பது நிச்சயம். 10

தாயென்றும் தங்கையென்றும் என்பிறவிநீயே
தார்குழலே சோடசத்தைச் சாற்றுவேன்யான்
ஆய்யென்றும் அம்பிகையே போற்றிசெய்ய
அகத்தினுள்ளே அகமாகும் ஆச்சரிப்பாய்
போய்யென்னும் கொற்றவர்கள் கோகிலாளே
கொம்பனையே என்பிறவி கோவிந்தன்நான்
லாய்யென்னும் லகிரிசிவ சோதிமாதா
ரட்சிக்க அருள்புரிவாய் மாதாநீயே.

(இ-ள்.) தாயென்றும் தங்கையென்றும் யென்பிறவியும் நீயே யென்றும் சோடசத்தைச் சாற்றுவேன்யான் உன்னை அம்பிகையென்று போற்றி செய்ய அகத்தினுள் அகமாக உன்னை ஆச்சரிப்பாக விளங்கும் கோகிலாளே கொம்பனையே என் பிறவியே கோவிந்தனென்கிய நான் தொழுகிறேன் சிவசோதி மாதாவே ரட்சிக்க அருள்புரிகுவாய் நீயே எ-று.

LuraTech Document Processing Solutions

(வி-ரை.) இச்செய்யுளாலும் இந்நூலாசிரியையான ஸ்ரீசத்திதேவியை உபாசிக்கவேண்டிய விதியினைக் கூறியுள்ளனர். இவை ஷை தேவியை விண்டுவாகிய மகாவிஷ்ணு ஸ்தோத்திரம் செய்ததாகும். 11

மாதாவே மனோன்மணியே மலர்ப்பாதத்தை
 மகத்துவமாய்த் தோத்திரங்கள் வழுத்துவேன்யான்
ஆதாவே ஆங்ரீங்ஸ்ரீங் என்று தானே
 அருள்புரிவாய் திருப்பாதம் ஆரணங்கே
சாதாவே சற்குணமாம் சவுபாக்கியத்தின்
 சண்முகனைப் பெற்றெடுத்த தாயும்நீயே
போதாவின் பூரணியே மெஞ்ஞானத்தி
 போற்றிசெய்வேன் காத்தருளும் புண்யத்தாயே.

(இ-ள்.) ஓ மாதாவாகிய மனோன்மணியே, உன் மலர்பாதத்தை மகத்துவமாகக் கொண்டு தோத்திரங்கள் செய்வேன்; ஆங் ரீங் ஸ்ரீங் என்றும் துதிப்பேன் அருள்புரிகுவாய்; உன் திருப்பாதத்தை ஆரணங்கே சர்க்குணமும்நீ சவுபாக்கியமும் நீ சண்முகனைப் பெற்றெடுத்த தாயும் நீயே; போத பூரணியே மெஞ்ஞானசத்தியே போற்றிசெய்வேன் காத்தருளும் எ-று.

(வி-ரை.) இதுவரையில் கூறிவந்த ரேகையினது பலாபலன்களைக் கேட்டிருந்த விஷ்ணுவானவர், தமது தங்கையாகிய ஸ்ரீசத்திதேவியின் திருவாக்கைக் கேட்டு ஆனந்தபரவசமுடையவராகி, ஓ எனது உடன் பிறந்தவளும், சிவசொரூபியுமாகி விளங்குபவளான அம்பிகையே யான் உம்மை வணங்கினேன் ஆனதால் எம்மை யாட்கொள்வதுன் கடமையேயாகும் என்பதாம். 12

தாயென்றும் உந்தனைத்தான் சோடசத்தின்
 தாற்பரியம் உள்ளதாய் தயவாய்எண்ணி
வாயென்றும் ஓம்நம்ஸ்ரீம் பகவதியாயென்றும்
 மாதாவே பராசத்தி வாவாவென்றும்
ஆஎன்றும் அனுதினமும் துதிப்பேன்தாயே
 அற்புதமே மெய்ப்பொருளே ஆரணங்கே
சாயென்றும் சற்குணிநின் செயலேயெல்லாம்
 சரஸ்வதிநீ சௌபாக்கிய புண்ணியதாயே.

(இ-ள்.) தாயென்று உன்னை சோடசத்தின் தாற்பரியமுள்ளதாய் தயவாகவும் எண்ணி ஓம் நம் ஸ்ரீம் பகவதி என்றும் மாதாவே பராசத்தியேவாவா என்றும் அனுதினமுந் துதிப்பேன் ; தாயே அற்புதமே மெய்ப்பொருளே ஆரணங்கே சர்க்குணி நின்செயலே யல்லால் சரஸ்வதிநீ சௌபாக்கியவதிநீ புண்ணியவதியும் நீயே எ-று.

turaTech Document Processing Solutions

(வி-ரை.) ஓ உலக மாதாவே, மெய்ஞ்ஞானக்கடலி லாழ்ந்திருப்பவளே உத்தமமான சுப்பிரமண்யக் கடவுளைப் பெற்றெடுத்த மஹாதேவி, யான் உனது சோடச நாமமான ஆங், ரீங் ஸ்ரீங் என்று துதித்தேன் ஆனதால் எம்மை யாட்கொள்ள வேண்டுவதுன் கடமையேயாகும் என்பதாம். 13

புண்ணியமுநீ பாவமுநீ போதமுநீ
புவனமெங்கும் படைப்புநீ அருளும்நீயே
அன்னியம்நீ உறவும்நீ ஆதரவும்நீயே
ஆனந்த மதியமிர்தம் அம்பிகைநீ
வன்னியும்நீ வாயும்நீ அப்புவும்நீ
வாகான பிருதிவியுடன் ஆகாசம்நீயே
உண்ணியதோ ருலகமெல்லாம் படைத்ததாயும்
உத்தமிநீ பத்தினிநீ சோதிநீயே.

(இ-ள்.) புண்ணியமும்நீ பாவமும்நீ போதமும்நீ புவனம் படைத்தவளும்நீ அருளும்நீ அந்நியம்நீ உறவும்நீ ஆதரவும்நீ அனந்தமதி யமிர்தான அம்பிகைநீ வன்னியும்நீ வாயும்நீ அப்பும்நீ பிரிதிவுநீ ஆகாசம்நீ உலகமாதியந்தமும் படைத்த தாயும்நீ உத்தமிநீ பத்தினிநீ சோதியே எ-று.

(வி-ரை.) பெண்களுக்கெல்லாம் தலைமைபூண்ட என் தங்கையே யான் உனது சோடசநாமங்களைத் துதித்தனன். என் எனில், இவ்வுலகில் எவரும் காணமுடியாத உண்மைப்பொருள் நீயேயாகும். இவ்வுலகில் நடக்கும் பிரபாவங்கள் அனைத்தினுக்கும் காரணமாய் விளங்குபவள் நீயேயல்லது வேறொருவருளரோ? நீதான் ரக்ஷிக்கவேண்டும் என்பதாம். 14

சோதிநீ ஆதியும்நீ அந்தமும்நீ
சொற்பெரிய கங்கையொடு திங்கள்நீயே
நீதியும் நிறைந்தவொரு சோதியும்நீ
நிற்குணியும் சற்குணியும் நீயேயம்மா
வாதியும்நீ வையமெங்கும் வளர்ந்தசோதி
வாலைபர மேஸ்வரிநீ வைரவிநீ
சாதிநீ சனனம்நீ சந்தானமும்நீ
சரஸ்வதிநீ சாமளா தேவிநீயே.

(இ-ள்.) சோதிநீ ஆதியும்நீ அந்தமும்நீ கங்கைநீ திங்கள்நீ நிதிநீ நிறைந்த சோதிநீ நிற்குணி சற்குணியும் ஆனவள்நீ வாதியும்நீ வைய மெங்கும் வளர்ந்த சோதிநீ வாலைபரமேஸ்வரிநீ வைரவிநீ சாதிநீ சநநம்நீ சந்தானமும்நீ சரஸ்வதியும்நீ சாமளாதேவியும் நீயே எ-று.

(வி-ரை.) இவ்வுலகிலுள்ள புண்ணிய பாவம் என்னும் இருவித செயலுக்கும், நீயே காரணமாய் விளங்குபவள் என்னும் கருத்தால் "புண்ணியமுநீ

பாவமுநீ" என்றனர். அண்டாண்ட சராசரம் அனைத்தையு முண்டாக்கிய வளும் நீயேயாகும் என்னும் கருத்தாம், "புவனமெங்கும் படைப்புநீ" என்றனர். பந்து ஜனங்களும் அன்னிய ஜனங்களும் நீயேயாகும் என்று கருத்தமைத்து "அன்னியம் நீ உறவும் நீ" என்றனர். சகல சீவன்களுக்கும் ஆதாரபூதமாய் விளங்குபவள் நீயேயாம் என்னும் கருத்தால் "ஆதாரவும் நீயே" என்றனர். உத்தமியும் பத்தினியும் சகல இடங்களிலும் தேஜோன்மயானந்தமாய் விளங்கும் பரஞ்சோதியும் நீயேயாகும் என்னும் கருத்தமைத்து, "உத்தமிநீ, பத்மினிநீ, சோதிநீயே" எனச் சொல்லித் துதித்தனர் என்பதாம். 15

சாமள ரூபியாம்பாள் ஆஆ என்றும்
சண்முகி ஹரி ஓம் அம் உம் என்றேதான்
வாமளர வாராகிஅம்மாள் வாலைஞானி
வானவிழி உமையாளே சோடசத்தை
பூமளியே ஓம் ரீம் ஸ்ரீம் ஔவும் நவ்வும்
பும்பும்பும் அதிஷ்டாநி புவனேசுவரிபாள்
தாமளியே திரைபுரையே மாயாரூபி
வன்மையுள்ள வங் சிங் அங் உங் மங் ஆனுய்.

(இ-ள்.) சாமளரூபியென்றும் அம்பாளென்றும் ஆஆயென்றும் சண்முகியென்றும் அரிஓம் அம் உம் என்றும் வாராகியம்மாள் வாலைஞானி என்றும் வானவிழியுடைய சோடசத்தை ஓம்ரீம் ஸ்ரீம் ஔவும் நவ்வும் பும்பும் அதிஷ்டாநி புவனே அம்மாவென்றும் திரிபுரி மாயாரூபி யென்றும் வங் சிங் அங் உங் மங் ஆனுய் எ-று.

(வி-ரை.) ஆதியந்த மனைத்தினுக்கும் ஆதாரப் பொருளாகியும், கங்கா தேவியாகியும் சந்திரனுகியும் நீதியை யுடையவ ளாகியும் பரஞ்சோதியும் உலகமெங்கணும் வியாபித்திருப்பவனும் சகலவருணுசிரமங்களுக்கும் ஜனனத்திற் கேதுவானவனும், புத்திரபாக்கியத்தை அளிக்க வல்லவனும் ஸ்யாமளா தேவி சரஸ்வதி என்னும் தேவியும் நீயேயன்றோ என்பதாம். 16

தாமெனவும் அஞ்சலித்தேன் தாயேகேளு
தாசானு தாசன்அம்மாய் தயவுகூர்வாய்
ஆமெனவும் அங்கிசாயநமா என்றேதான்
அன்பாக அங்சங்ரீங் உங்பங்என்றே
வாமெனவும் வாலையம்மாள் வாராகித்தாயே
வங்சங்ரீங் மங்கென்று வசனித்தோர்க்கு
ஊமெனவும் உண்மையுள்ள தெய்வம்தெய்வம்
உத்தமியே பத்தினியே உமையேதாயே.

(இ-ள்.) தாமெனவும் உன்னை அஞ்சலித்தேன் தாயேகேளும் தாசானு தாசனுகிய எனக்குத் தயவுகூர்வாய்; அங்கிசர்யகம என்று அன்பாக அங்சங்ரீங் உங்பங் என்றும் வாலையம்மாள் வாராகித்தாயே யென்றும் வங்-சிங்-ரீங்-மங் என்றும் வசனிப்போற்கு உண்மையுள்ள தெய்வம் உத்தமியே பத்தினியே உமையே தாயே எ-று.

(வி-ரை.) இச் செய்யுளாலும் மேற்படி தேவியினது ஸ்தோத்திரத்தையே கூறுவாராயினர். அவையாவன, சாமளரூபி சண்முகி எனவும் அம் உம் வாமன் வாகி எனவும், வாமன வாகி வர்ணவிழியாளே, பூமளியே ஓம் ரீம் ஸ்ரீம் அவ்வும் ஙவ்வும் பும் பும் அதிஷ்டானு புவனீ எனவும் அங் சிங் அங் உங் மங் எனத் துதித்தனர் என்பதாம். 17

தாயிபரி பூரணியே மீனுட்சி அம்பாள்
தங்கையம்மா என்பிறவி சௌந்தரவல்லி
ஆயிபல புவனமுந்தான் படைத்தமாரி
அபிராமி வல்லியே அற்புதத்தாய்
மாயிவளர் வான்மொழியே அழகுநாச்சி
வாகான வைஷ்ணவியே மாலிரூலி
தீயினெழும் பரஞ்சோதி திருக்கண்ரூபி
திருவான கிருபைமிகு ஞானிநீயே.

(இ-ள்.) தாயே பரிபூரணியே மீனுட்சியே அம்மாளே தங்கையாகிய என் பிறவியே சௌந்தரவல்லியே ஆயி பலபுவனங்களையும் படைத்தமாரி அபிராமி வல்லியே அற்புதத்தாயே மாயிவளர்வான் மொழியே அழகுநாச்சி வைஷ்ணவியே மாலிரூலி பரஞ்சோதி திருக்கண்ரூபி திருவாகித்தானே ஞானமிருக்கும் ஞானியே எ-று.

(வி-ரை.) ஆம் அங்கிசாயநமஹ அங் சங் ரீங் உங் பங் வங் இங் ரீங் என உனது சோடச நாமங்களைச் சொல்லித் துதித்தனன். ஆதலால் என்னை யாட்கொள்ள வேண்டுவதுன் கடமையாகும் என்பது கருத்தாகும். 18

ஞானியெனுங் கமனசித்தி ஞானரூபி
நாதாந்த மவுனகுரு பூசையானுய்
வானிலுள்ள தேவர்களும் ரிஷிகள்போற்றும்
வண்மையுள்ள பெண்ணரசே மலர்ப்பாதந்தான்
தானவரை வதைத்தமரர் சிறைதவிர்க்கும்
தயவுவைத் தருள்புரிவாய் தங்கையம்மா
பானமெனும் அமிர்தமதைக் கொண்டதாயே
பராபரியுன் பாதமலர் பூசைகொள்வேன்,

UpaTech Document Processing Solutions

(இ-ள்.) ஓ ஞானியெனும் கமனசித்தியே ஞானரூபியே நாதாந்தமவுன குரு பூசையானவளே வானிலுள்ள தேவர்களும் ரிஷிகளும் போற்றும் வண்மையுள்ள பெண்ணரசே உன் மலர்ப்பாதம் வானவரை வதைத்தும் அமரர்களுடைய தகர்த்த தாயே தயவுவைத்து அருள்புரிவாய். தங்கையே அம்மா அமிர்தத்தைக் கொண்ட தயாபரியே உன் பாதமலர் பூசை கொள்வேன் எ-று. 19

கொள்ளவே திவ்வியசத்திப் பூசைதன்னை
கொற்றவனைப் பெற்றெடுத்த தாயேநீயும்
அள்ளவே ஐஸ்வரியம் பெற்றமாதா
ஆரணங்கே பார்வதியே பூசைகொள்வாய்
வள்ளலே வாலைசிறு பெண்ணும்ரூபி
மாதாவே எந்தனைநீ காக்குமம்மா
உள்ளபடி நீயருள்வாய் தெய்வம்தெய்வம்
உத்தமியே பெற்றெடுத்த உமையேதாயே.

(இ-ள்.) திவ்விய சத்தி பூஜையைக் கொள்ள கொற்றவனைப்பெற்ற தாயே நீயும் ஐஸ்வரியம் பெற்றமாதா ஆரணங்கே பார்வதியே என் பூசையைக் கொள்வாய். வாலை சிறு பெண்ணாகிய ரூபியே மாதாவே எந்தனை நீ காருமம்மா. உள்ளபடியருளிய தெய்வம் நீயே; உத்தமியாகிய என்னைப்பெற்றெடுத்த உமையே தாயே எ-று. 20

தாயேநீ பூரணியே சோதிமாதா
தங்கையம்மா என்குருவே தார்குழலேதாயே
மாயேநீ வண்மைபெற்று வான்பொருளேநீ
மதுரமொழி பச்சைவர்ணன் அம்பிகைநீ
ஆயேநீ அம்பிகைப்பெண் அமுர்தவல்லி
ஆனந்த ரூபவல்லி ஆதிசத்தி
தீயேநீ திரிபுவனத் தாயும்நீயே
தீதில்லாக் குலமகளே திருவேநீயே.

(இ-ள்.) தாயாகிய பூரணியே சோதி மாதாவே தங்கையே என் குருவே தாயே மாயையானதுபெற்ற வான்பொருளும் நீயே; மதுரமொழியும் பச்சை நிறமுள்ள அம்பிகைப் பெண்ணெனும் அமிர்தவல்லியே ஆனந்த ரூபவல்லியாகிய ஆதிசத்தியே திரிபுவனத்தாயும் நீயே தீதில்லாத குலமகளாகிய திருவே எ-று. 21

திருவைசெக ரூபிஅம்மாள் திருநீற்றுளே
திருக்கரத்தைப் பெற்றதொரு தேவிநீயே
மருவையெனும் மகிடசங் காரிதேவி
மகத்துவங்கள் பெற்றதொரு சோதிநீயே

கருவையெனுங் காரணியே காளிரூபி
கங்காளி சாமுண்டி கனகவல்லி
தருவையெனும் உண்மையுள்ள உமையேதாயே
உலகமெலாம் படைத்ததொரு உமையென்றேனே.

(இ-ள்.) திருவையென்னுஞ் சொரூபியே அம்மாளாகிய திருநீற்றுளாகிய திருக்காத்தைப்பெற்ற தேவி நீயே மகிடசங்காரியாகிய தேவியே மகத்துவம் பெற்ற சோதி காரணியே காளியே ரூபியே கங்காளி சாமுண்டி கனகவல்லி நீயே தருவே உண்மையுள்ள உமையே தாயே உலகமெல்லாம் படைத்த உமையே எ-று. 22

என்றென்றும் அருள்புரிவாய் கோரிநீலி
ஏற்றியே போற்றிசெய்ய மலர்ப்பாதத்தை
நன்றென்று நாரணனுர் அர்ச்சிக்கும்போது
நன்மையுள்ள உமையவளும் மனமகிழ்ந்து
என்றுநாம் இருபேரும் ஒருருவம்போல
இருப்பது அறியாயோ தமையாநீயும்
குன்றெடுத்த கோபாலா என்றுதானே
குணமுள்ள உமையவளும் கூறுவாளே.

(இ-ள்.) என்றும் அருள்பரிவாய் அகோரி நீலியென்று ஏற்றிப்போற்றி செய்ய இவ்விதமாக நாரணர் அர்ச்சிக்கும்போது உமையவளும் மனமகிட்சியாகி சொல்வாள் நாம் இருபேரும் ஒருருவாகத்தானே இருப்பது அறியாயோ தமைஞரே நீரும் என்று உமையவள் கூறுவாள் எ-று. 23

கூறுவாள் உமையவளும் லோகமெல்லாம்
குணமாகப் படைத்தவளும் சொல்வாளப்பா
சாருவாள் எந்தமையா இருபேருந்தான்
சராசரமாய் ஒருயிராய் உடல்வேருக
பேருவோ மென்றுஅம்மன் மனமகிழ்ந்து
பெருகிமனப் பூர்வத்தோ ருருவமானுள்
காருவோம் கருணையினல் அக்கினிபோலும்
கலந்துமனம் நிறைந்தபடி நின்றிட்டாளே.

(இ-ள்.) கூறுவாள் உலகமெல்லாம் படைத்த உமையவளே கேளும், என் தமையனுர் நாங்களிருபேரும் சராசரத்திற்கும் ஒருயிராய் உடல் வேருக இருப்போம் என்று மனமகிழ்ந்து பெருகி பூர்வத்துருவமாகிக் கருணையினல் அக்கினிப்போலும் கலந்து மனம் நிறைந்தபடியாகி நின்றுவிட்டாள் எ-று. 24

நின்றிடவே தேவரெல்லாம் புளகமாகி
நிகரில்லாக் களபமுதல் நீர்கள் தூக்தார்
நன்றிடவே நலமுள்ள வாசகங்கை
நன்மையுடன் கொண்டுவந்து சொரிந்தாரப்போ

மன்றிடவே நவகோடி சித்தர்போற்ற
வணங்கிடவே இந்திரன்முதல் ஈசனுந்தான்
என்றிடவே மகாகோடி தேவரெல்லாம்
எம்பிரான் அடிபரவி வணங்கினாரே.

(இ-ள்.) அம்மன் இப்படி கிற்க தேவர்களெல்லாம் புளகாங்கிதமாகி களபமொடு புஷ்பமாரிப் பொழிந்தனர்; வாசகங்களைக் கொண்டுவந்து சொரிந்தார்கள்; அப்போது நவகோடி சித்தர்களும் போற்ற அஷ்டதிக்குப் பாலர்களுடன் இந்திரன் முதலானோர்களும் போற்ற மகாகோடித் தேவர்களெல்லாம் எம்பிரான் அடியைப் பணிந்து வணங்கினார்கள் எ-று. 25

வணங்கிடவே தேவரெல்லாம் துதித்தார்களப்போ
வண்மையுள்ள நவகோடி சித்தர்போற்ற
இணங்கிடவே எண்டிசையின் மனுக்கள்போற்ற
இயல்பான ரிஷிகளெல்லாம் இசைந்துபோற்ற
அணங்கிடவே அண்டரண்ட புவனமெல்லாம்
அரியவுமை மலர்ப்பாதம் தொழுதாரப்பா
தணங்கிடவே தாய்பதத்தைத் தேவரெல்லாம்
தன்மையுடன் அடிவணங்கித் துதிசெய்தாரே.

(இ-ள்.) வணங்கிட தேவர்களெல்லாம் துதித்தார்கள். அப்போது நவகோடி சித்தர்களும் போற்ற எண்டிசையிலுள்ள மனுக்கள் போற்ற ரிஷிகள் யாவரும் இசையாகப் போற்ற அண்டரண்ட புவனங்களெல்லாம் அறியும்படியாய் உமையவளின் மலர்ப்பாதத்தைத் தொழுதார்கள். தாய் தந்தை முதலாகிய தேவர்களெல்லாம் தன்மையாகத் தானே அடிவணங்கித் தொழுதார்கள் எ-று. 26

செய்திடவே உமையவள்தான் திருப்பாதத்தை
செயலாக வணங்கியவர் நிற்கும்போது
ஐதிடவே ஆயிழையைப் போற்றிசெய்ய
அருள்பெருகும் உமைதாங்கி அடிவணங்கி
பைதிடவே பராபரனார் கிருபையாலே
பத்தினியைத் தேவரெல்லாம் பணிந்தபோது
மெய்திடவே மேன்மைபெற்ற உமையாள்தானும்
மெய்ப்பொருளும் மனமகிழ்ந்து இருந்தாள்பாரே.

(இ-ள்.) தொழுது உமையவளின் திருப்பாதத்தைச் செயலாக வணங்கியும் அவர்கள் நின்றும் போற்றி செய்தும் பாயசிவனுடைய கிருபையால் பணிந்து துதிசெய்தபோது உமையவள் தானும் மனமகிழ்ந்தாள் எ-று. 27

பார்க்கவே சப்தரிஷி ஏழுபேர்கள்
பாங்கான உமையவளைப் பணியவேண்டி
ஏர்க்கவே உமையவளைத் தொழுதுபோற்றி
எம்பிரான் பராபரியே ஈஸ்வரியேதாயே
கார்க்கவே கடாக்ஷம்வைத் தருள்வாயம்மா
காரணியே பூரணியே கவுரிமாரி
மார்க்கமாய் எந்தனை ஆளும்தாயே
மனமகிழ வரமருள்வாய் மாதாநீயே.

(இ-ள்.) பார்க்க சப்தரிஷிகள் ஏழுபேர்களும் உமையவளைப் பணிந்து வேண்டுதல் செய்ய உமையவளைத் தொழுதுபோற்றி சொல்வர்; எம்பிரானுடைய சகோதரியே ஈஸ்பரி ஓ தாயே எங்களைக் கார்க்கக் கடாட்சம் வைத்து அருள்வாய்த் தாயே, காரணி பூரணி கௌமாரியே எந்தனை நீயாளுந் தாயே மனமகிழ வரம் அருள்வாய் தாயே நீயே எ-று. 28

மாதாவைப் போற்றிசெய்து ரிஷிகள் தானும்
மகத்துவமாய் உமைபாதம் வணங்கிப்போற்ற
சீதாவே சிற்பரமே சிறுபெண்ணுத்தாள்
சீக்கிரத்தில் எங்களைத்தான் கார்க்குந்தாயே
போதாவே புண்ணியங்கள் அருளுந்தாயே
பொற்பதமே மெய்ப்பொருளே போதமாதா
ஆதாவே அண்டரண்ட புவனமெல்லாம்
ஆளுகின்ற அம்பிகையே அருள்செய்தாயே.

(இ-ள்.) மாதாவாகிய உமையவளைப் போற்றிசெய்து ரிஷிகள் யாவரும் மகத்துவமாக வணங்கிப் போற்றி, சிற்பரியே சீக்கிரத்தில் எங்களைக் காக்குந் தாயே போதியே புண்ணியமருளுந் தாயே பொறபதமே மெய்ப்பொருளாகிய மாதாவே அண்டாண்டபுவனமெல்லாம் ஆளும்படியாகிய அம்பிகையே அருள் செய்வாய் எ-று. 29

செய்யவே என்னுடைய தாயேகேளாய்
செப்பரிய புவனமுதல் வானமெல்லாம்
ஐயவே ஆண்டருளும் அம்பிகையேநீ
ஆனந்த பூரணத்தில் அமர்ந்தசோதி
பையவே பராபரியே பரஞ்சோதித்தாய்
பத்தினியே உத்தமியே பகர்வாய்தாயே
மெய்யவே மெய்யருக்குள் இருந்தசோதி
மேன்மைபெற்ற பெண்ணரசே சரணந்தாயே.

(இ-ள்.) செய்யும்படியான என்னுடைய தாயே கேளும்; சொல்லுதற்கரிய புவன முதல் வானமெல்லாம் ஆண்டருளும் படியான அம்பிகை நீ;

ஆனந்தமாகிய பூரணத்தில் அமர்ந்தசோதியும் நீ; பராபரியாகிய பரஞ்சோதித் தாயே பத்தினியே உத்தமியே பகர்வாய்; மெய்யருக்குள் இருக்குஞ் சோதியே மேன்மைப் பொருந்திய தாயே சரணம் எ-று. 30

சரணமென்று பணிந்துநின்ற ரிஷிகள்தன்னை
  சதாநேரம் உங்களிடம் இருப்பேனப்பா
சரணமென்ற தன்மையினால் காத்தேனப்பா
  தற்காக்க என்பிறவி மாயனுண்டு
கரணமென்ற சித்தியுடன் முத்திஈவார்
  கைலாச மூர்த்திவந்து கருணைசெய்வார்
வரணமென்ற வாழ்வெல்லாம் மேன்மையாக
  வகுத்துநா னீந்திட்டேன் வரிசையாக.

(இ-ள்.) சரணமென்றதாகப் பணிந்து நின்ற ரிஷிகளைப் பார்த்து உமையவள் சொல்வாள். சதாநேரமும் உங்களிடமிருப்பேன், சரணமென்று அடைந்தத் தன்மையினால் காத்தேன், உங்களைக் காக்க என் பிறவியாகிய மாயவன் உண்டு. அவர் கருணையோடு சித்தியு முத்தியு மீவார். கைலாச மூர்த்தியும் வந்து கருணையானது செய்வார்; வாழ்வெல்லாம் மேன்மையாக வும் வகுத்து வரிசையாக ஈந்தேன் எ-று. 31

வரிசையுடன் சப்தரிஷி ஏழுபேரை
  வாகான உமையவள்தான் சந்தோஷித்து
புரிசையுடன் பூமகளும் மனதிரங்கிப்
  புத்தியுள்ள மகாரிஷிகள் கேளுங்களென்று
உரிசையுடன் உண்மையுள்ள தாயாள்தானும்
  உத்தமியும் மனதிரங்கத் தேவரெல்லாம்
பரிசையுடன் ரிஷிகளெல்லாம் வரங்கள்வாங்கிப்
  பாக்கியமாய் விடைகள்பெற்று பதிசென்றாரே.

(இ-ள்.) வரிசையாக சப்தரிஷிகள் ஏழுபேரையும் பார்த்து உமையவள் சந்தோஷித்து, பூமகள் மனதிரங்கி ஓ புத்தியுள்ள முனிவர்களே கேளுங்கள்; என அவரவர்களுக்கேற்ற வரங்களை யீய தேவர் முதலாகிய ரிஷிகளெல்லாம் அம்பிகையுடன் வரங்கள் வாங்கிப் பாக்கியமாகத்தானே விடைகள்பெற்று அவரவர்கள் பதிக்குச் சென்றனர். எ-று. 32

சென்றதொரு ரிஷிகளுடன் அம்மன்தானும்
  சேதிசொல்வாள் வசிட்டரே விஸ்வாமித்திரா
கண்டதொரு காசிபரே காகமூர்த்தி
  காரணமாய் உள்ளவொரு கவுதமனே

LuraTech Document Processing Solutions

விண்டதொரு துருவாச ரிஷியேஐயா
   விமலர்பதங் கண்டுணர்ந்த அகஸ்தியரேகேள்
வன்றதொரு புலஸ்தியமா முனியேநீகேள்
   மகத்தான வான்மீகா கேள்என்றாளே.

(இ-ள்.) சென்ற ரிஷிகளைப் பார்த்து அம்மன் சொல்வாள் ஓ வசிஷ்டரே, விஸ்வாமித்திரரே, காசிபரே, காக்கையரே, கௌதமரே, துருவாசரே, அகஸ்தியரே, புலத்தியரே, வான்மீகரே நீங்கள் யாவர்களும் கேளுங்கள் எ-று. 33

கேளெனவே உமையவளும் ரிஷிகளோடே
   கேவலமாய்ச் சொல்லுகிறேன் ரிஷிகாள்கேளீர்
நாளெனவே நன்மையுடன் ரிஷிகள் தானும்
   நலம்பெறவே உமைபாதம் வணங்கிக்கேட்க
தாளெனவே தண்மையுடன் ரிஷிகள்போற்ற
   தாழ்வில்லா உமைசொல்லக் கேட்பாரன்றோ
தோளெனவே மனோன்மணியாள் மனதிரங்கித்
   தோகைமயில் வாகனனைப் பெற்றமாதா.

(இ-ள்.) கேளென்ன உமையவள் ரிஷிகளோடே சொல்ல, அப்போது ரிஷிகள் உமையவளை வணங்கிப் போற்றிநிற்க உமையவள் சொல்லக்கேட்பார். மனோன்மணியாள் மனமானதிரங்கி மயில்வாகனமீதேறும் முருகக் கடவுளைப் பெற்ற தாயாரும் எ-று. 34

பெற்றதொரு உமையவள்தான் சொல்வாளப்பா
   பேறுபெற்ற ரிஷிகளே சொல்லக்கேளீர்
அத்தனருள் இடப்பாகம் ஆனதாலும்
   ஆத்தாளும் சொல்லுவாள் அன்புகூர்ந்து
முத்திபெற்ற கர்த்தரது நல்லோ ரல்லாம்
   முயற்சியுடன் சொல்லுகின்ற மொழிகேட்பீர்கள்
கர்த்தாவே என்தாயே நீதான்சொல்லும்
   காரணத்தைக் கேட்கிறோம் கருணையாளே.

(இ-ள்.) உமையவள் சொல்வாள், பெருமையாகிய ரிஷிகளே சொல்லக் கேளீர்; அத்தனுடைய இடப்பாகம் பெற்றதாலும் அம்பிகையாள் சொல்வாள் அன்பானதுகூர்ந்து முத்தியானது பெற்று கர்த்தருக்கு நல்லவராகிய எல்லாம் யான் சொல்லும் மொழியைக் கேட்பீர்கள் என, அப்போது ரிஷிகள் சொல்வார், என் தாயே நீர் சொல்லும் காரணமாகியதைக் கேட்கின்றோம் கருணையாளே எ-று. 35

ஆளென்ற உமையவள்தான் சொல்லும்வாக்கு
ஆச்சரியம் ரிஷிகளெல்லாம் வணங்கிக்கேட்க
வாளென்ற வையகமும் லோகமெல்லாம்
வண்மையுடன் பிழைக்கவென்று வகுத்தேன் நூலை
வேளென்ற வேளைப்போல் முனிவர்சித்தர்
வேதமுதல் சாஸ்திரங்கள் வகுத்தார்கோடி
தூளென்ற தூள்போலே விண்ணுமண்ணும்
துலவில்லா நூல்கள்சித்தர் தொகுத்திட்டாரே.

(இ-ள்.) அப்போது உமையவள் சொல்லும்படியான வாக்கை ஆச்சரியமாகத்தானே ரிஷிகள் யாவரும் வணங்கிக்கேட்க சொல்வாள்; வையகமுதலான லோகமாதியந்தமும் பிழைக்கும்படியாக வகுத்தேன் இந்நூலை; அன்றியும் முனிவர்களும் சித்தர்களும் வேதமுதலிய சாஸ்திரங்களை வகுத்தனர்கள் கோடி. தூள்போல விண்ணும் மண்ணும் துலவில்லாமற்படிக்கு நூல்கள் சித்தர்கள் தொடுத்து வைத்தனர் எ-று. 36

சித்தரென்ற ரிஷிகள்முதல் வானோரெல்லாம்
செகத்திலே அனந்தமது உண்டுசெய்தார்
பத்தரென்ற பத்தர்கள்தான் படித்தநூலை
பார்தனிலே பொய்யென்று சொன்னபேர்க்கு
முத்திமுதல் தலைமுறைகள் உள்ளமட்டும்
முப்பிறப்பும் ஏழுவரை மைந்தாகேளு
அத்தனருள் மாலகிரி அறியவேதான்
அவருடைய அந்தரங்க அன்பினாலே.

(இ-ள்.) சித்தர் முதலாகிய வானோர்கள் யாவரும் செகத்தின் மீது அநந்தம் உண்டுசெய்தார்கள். பக்தர்கள் படிக்கும்படியாகிய நூலை பாரின்மீது பொய்யென்று சொன்ன பெயர்களுக்கு அவர்கள் தலைமுறை யுள்ளமட்டும் முப்பிறப்பும் பரமசிவனறியும்படிச் சொல்லுகின்றேன். அவர்களுடைய அந்தரங்கங்களைக் கேளும் எ-று. 37

நாலென்ற நான்முகனும் ரிஷிகளெல்லாம்
நடுநடுங்கி பயந்தவரும் நடனம்பாட
தாலென்ற எந்நூல்தான் உலகத்துள்ளே
தாரணியிற் காணரிது தன்மைசொன்னேன்
வாலென்ற வையகத்தில் பிரமகீதை
வகுத்தேன்நான் ஆயிரந்தான் பனிரண்டுகாண்டம்
ஊலென்ற உட்பொருள்தான் இந்தநூல்தானும்
உத்தமர்கட் கிந்நூல்தான் எய்தும்பாரே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) அப்போது நான்முகனுகிய பிரமனும் ரிஷிகள் யாவரும் நடுநடுங் கிப் பயந்து நடனமாடி ஸ்தோத்திரம் பண்ண உமையவள் சொல்வாள், ரிஷி களே என்னுடைய நூல் உலகத்தினுள்ளே காணுதற்கரிதாகிய தன்மையைச் சொன்னேன்; அன்றியும் வையகத்தின்மீது பிரமகீதை வகுத்து ஆயிரம் பாடல் பனிரெண்டு காண்டமாகவும் உட்பொருளாகிய இந்நூல் உத்தமர்க்கு உண்மையாகும் எ-று. 38

பாரப்பா இந்நூலை வெளியில்மைந்தா
பாவிகட்குக் கொடுக்கவுந்தான் ஆகாதப்பா
காரப்பா இந்நூலின் அமைப்புமைந்தா
காட்சியாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
சேரப்பா இந்நூலைப் பூசித்தோர்க்குச்
சேரவே வைகுண்டம் தீர்க்கமாகும்
ஆரப்பா என்நூலைப் படித்தோர்க்கெல்லாம்
ஆயுளுள் வரைக்கும் ஆதரிப்பேன்தானே.

(இ-ள்.) பார்க்க இந்நூல் வெளிவந்தபோதிலும் பாவிகளுக்குக் கொடுக் கப்போகாது. இந்நூலின் அமைப்பைக் காட்சியாகச் சொல்லுகின்றேன் இந் நூலைப் பூசித்தோர்க்குச் சேரும்படியாக வைகுண்டதீர்க்கமாகும். என்னு டைய நூலைப் படித்தபேர்கள் யாவருக்கும் அவர்கள் ஆயுசு உள்ளவரைக்கும் ஆதரிப்பேன் எ-று. 39

ஆதாரம் என்பதற்கு இதுவேமூலம்
அண்டமுதல் பிண்டம்வரை வேறேவுண்டோ
பேதாரம் இந்நூலைத் தினங்கள்தோறும்
பேணியே புட்பமிட்டுப் பூசிப்பாயேல்
சீதாரம் சிற்பரத்தில் அவர்களைத்தான்
சிவசிவா சிவன்பதவி எய்தும்பாராய்
வாதாரம் வாலையிட பூஜைமைந்தா
வண்மையாய் சிவபூஜை கோடியாச்சே.

(இ-ள்.) ஆதாரமென்பதற்கு இதுவே மூலமாகும். அண்டமுதல் மூவ ருக்கும் வேரேயில்லை; இந்நூலை தினந்தோறும் பேணி புஷ்பஞ்சாற்றி பூசித்து வருவாராகில் சிற்பரத்தில் அவர்களைச் சிவ சிவா வென்ற சிவன்பதவி கிடைக்கும். ஆதாரமாகிய வாலையிடப் பூசை வண்மையாகச் செய்ய சிவன் பூசை கோடியாகும் எ-று. 40

ஆச்சென்ற அஞ்செழுத்து சோடசத்துள்
அமைத்துலகைப் படைத்துவிட்டேன் அறிவினாலே
பேச்சென்ற பேச்செல்லாம் ஒன்றுமில்லை
பேசாது வேதமுதல் புராணமெல்லாம்

வாச்சென்ற என்நூலிற் சகலபுத்தி
வண்மையால் சொல்லினேன் வரிசையாக
மாச்சென்ற மாச்சலது இல்லைமைந்தா
மகத்தான பெரியோர்க்கு வசனித்தேனே.

(இ-ள்.) ஆச்சென்னும்படியான ஐந்தெழுத்தாகிய சோடசத்துள் உலகத்தைப் படைத்தேன். அறிவினுல் பேச்சென்பது வொன்றுமில்லை. வேதமுதலாகிய புராணம் யாவும் பார்ப்பதற்கு மேலாகிய இந்நூல் பத்தி விளங்கத்தானே வண்மையாய்ச் சொல்லினேன். மாச்சென்றும் மறப்பானது ஒன்றுமில்லை. மகத்தாகிய பெரியோர்க்கு வசனித்தேன் எ-று. 41

வசனித்தேன் கேசகியின் நூலிலேதான்
வண்மையுள்ள சகலமுறை எல்லாஞ்சொன்னேன்
நிசனித்தேன் லோகமதில் மனிதர்க்காக
நிகழுகின்ற பலன்களெல்லாம் நிஜமாய்ச்சொன்னேன்
பசனித்தேன் பராபரத்தின் கிருபையாலே
பார்தனிலே நடப்பதெல்லாம் பகர்ந்தேன்சூக்ஷம்
இசனித்தேன் இன்பதுன்ப யோகவாழ்க்கை
இயல்பாக நடப்பதெல்லாஞ் சொல்லினேனே.

(இ-ள்.) வசனித்தேன் கேசகியென்னும் நூலில் வண்மையாகிய சகலமான முறைகள் யாவுஞ்சொன்னேன். மனிதர்களுக்காக வேண்டுமென்றும் பலன்கள்யாவும் நிஜமாகத்தானே சொன்னேன்; பராபரத்தினுடைய கிருபையால் உலகில் நடப்பதுயாவும் பகர்ந்தேன் சூட்சமாகவும்; இன்பதுன்பம் யோக வாழ்க்கை நடப்பது யாவுஞ் சொன்னேன் எ-று. 42

சொன்னேனப்பா பிறவிமுதல் மரணமட்டும்
சொல்லுதற்குச் சகலவகை துணிந்துசொன்னேன்
அன்னெனப்பா ஆயுசுடன் கண்டம்யோகம்
ஆதியந்த முதற்சனனம் அறிவுசொன்னேன்
மன்னெனப்பா என்குருவாம் கைலைமூர்த்தி
மனமகிழ்ந்து உபதேசம் செய்தமார்க்கம்
கன்னெனப்பா கருணைபெறும் தேவதேவன்
கடாட்சிக்க வீந்திட்டேன் கருதுவாயே.

(இ-ள்.) சொன்னேன் பிறவி முதலாக மரணமட்டும்; இன்னமும் சகலமும் துணிந்துச் சொல்லச் சொன்னேன்; மன்னனாகிய என் குருகைலைநாதர் மகிழ்வாகத் தானே உபதேசஞ் செய்த மார்க்கம்போல் கருணை பெருகும்படியான பிரமதேவன் கடாட்சிக்கும்படியாக ஈந்திட்டேன் எ-று. 43

turatech Document Processing Solutions

வாரியென்ற வையந்தான் போற்றிசெய்ய
வண்மையாய் ரேகையின் சாஸ்திரத்தைத்தானே
தாயென்ற தாய்போலாம் பிறவிநூலைத்
தாரணியிற் பலவுயிர்கள் பிழைக்கவேண்டி
ஆயென்ற கையெழுத்தே தலையெழுத்தாம்
ஆச்சரியம் நாள்கோளும் தள்ளிப்போடு
மேயென்ன தலையெழுத்து பொய்யேபொய்யே
பேருலகில் இச்சூக்ஷம் பெருமைகேளே.

(இ-ள்.) வாரி சூழும்படியான இந்த வையகம் போற்றி செய்ய வன்மையாகத் தானே ரேகையின் சாஸ்திரத்தைத் தாயைப் போலும் பிறவியைப் போலும் இந்நூலை தாரணியிலுள்ளப் பல உயிர்களும் பிழைக்கவேண்டியும் கையெழுத்தே தலை எழுத்தாகவுங் கொண்டு நாளுங்கோளுந் தள்ளிப் போட வேண்டும். தலை எழுத்தென்பது பொய்யாகும். உலகில் பெருமையாகிய இச் சூட்சங்களே எ-று. 44

கேளப்பா லோகமதில் பிறந்தபேர்கள்
கேவலமாய் நாட்பலன்கள் இல்லைமைந்தா
நாளப்பா நாளில்லை கோளுமில்லை
நட்சத்திரம் கோசரங்கள் ஓரையில்லை
வாளப்பா பிறவிக்கு வயதும்யோகம்
வண்மையுள்ள கண்டமுதல் வசனித்தேன்யான்
வேளப்பா நாள்பலன்கள் ராசிபலன்கள்
விகற்பங்கள் பிறந்தபிள்ளைக் கில்லையன்றே.

(இ-ள்.) கேட்க உலகத்தின் கண் பிறந்தபேர்களுக்கு நாட்கள் பலன்களில்லை. நட்சத்திரம் கோச்சாரம் ஓரையில்லை. அவைகளில்லாமலே பிறவிக்கு வயது யோகம் கெண்டம் யாவும் வசனித்தேன். யான் நாட்பலன் இராசி பலன்கள் விகற்பங்கள் பிறந்திடும் பிள்ளைகட்கு இல்லையாம் எ-று. 45

அன்றெனவே அவன் அவள்தான் கருவில்மைந்தா
அமைத்தபடி அவன்கரத்தில் காணுமன்றே
நன்றெனவே நான்முகனும் கையிலேதான்
நலமாகக் கரங்களால் எழுதிப்போட்டான்
குன்றெனவே குணங்கள்தன்னைக் கையின்ரேகை
குறிப்பறிய ஈஸ்வரனார் கொடுத்தாரென்றே
வென்றெனவே விகற்பங்கள் இல்லாமல்தான்
வியந்திட்ட கேசரியின் விதியிதாமே.

(இ-ள்.) அவள் அவன் கருவில் அமைத்தபடி அவன் கரத்தில் காணும்; நான்முகன் கரங்களில் கரங்களில் எழுதிப் போட்டான்; குணங்கள தரும்படியான கையின் ரேகையின் குறிப்பையறிய ஈஸ்பரனுக்குக் கொடுத்தார். அதில் விகற்பங்கள் இல்லாமல் சொன்ன கேசரி ஈதாகும் எ-று. 46

ஆமென்ற என்னுடைய கேசரியின்மைந்தா
அண்டரண்ட புவனமெல்லா மெய்க்கத்தானே
வாமென்ற வாலையிடப் பாடலைத்தான்
வகையாகச் சொன்னமொழி வன்மையாகத்
தேமென்ற அமிர்தம்போற் பாடினேன்பார்
தென்பலிற் கும்பமுனி நீரும்கேளீர்
ஆமென்ற ஆணவங்கள் அகற்றிமைந்தா
அரகரா கேசரியின் அறிவைப்பாரே.

(இ-ள்.) என்னுடையக் கேசரியின் மைந்தா அண்டரண்ட புவனமெல்லாம் மெய்க்கும்படியாகவும், வாலையினுடையப் பாடலை வன்மையாகச்சொன்ன மொழியைத் தேனைப்போலும் அமிர்தம்போலும் பாடினேன். கும்பமுனியே நீருங்கேளீர் ஆணவங்களை அகற்றி கேசரியின் அறிவைப்பாரும் எ-று 47

பார்க்கவே என்பாடல் வெளியிலேதான்
பரவாமல் சபித்தேன்பார் பாரிலுள்ளோர்
ஏர்க்கவே எந்நூலைப் பழித்தபேர்க்கு
என்னசொல்வேன் மீளாத நரகமெய்தும்
மார்க்கமாய் சாஸ்திரத்தை மதியாமல்தான்
மகத்தான உதாசினங்கள் சொல்லுவார்கள்
தீர்க்கமாய் எரிவாயின் நரகம்தன்னில்
தீராத சாபமது சபித்தேன்பாரே.

(இ-ள்.) பார்க்க என்னுடையபாடல் பரவாமல்படிக்கு சபித்தேன்; உலகிலுள்ளோர் எந்நூலைப் பழித்த பேர்கட்கு மீளாத நரகமானது வந்து வாய்க்கும். மார்க்கமாகிய இந்த சாஸ்திரத்தை மதியாமல் உதாசினங்கள் சொல்வோர்கள் எரியும்படியான நரகத்தில் விழுவார்களென்றும் தீராதச் சாபமானது மூன்றும்படியாக சபித்தேன் எ-று. 48

பாரப்பா என்னுடைய பிரமகீதை
பாருலகில் தினந்தோறும் பூசித்தோர்க்கு
காரப்பா இருதயத்தில் இருந்துநானும்
கடாட்சிப்பேன் சாயுச்யக் கருணையாலே
வாரப்பா மானிலத்தில் வறுமைநீக்கி
மகத்தான பாக்கியங்கள் வழங்குவேன்யான்
சாரப்பா சர்ஜ்ஜனரோ டிருந்துவாழ
சண்முகனார் தற்காப்பார் சொல்லினேனே.

(இ-ள்.) பார்க்க என்னுடைய பிரமகீதையை உலகின்மீது தினந்தோறும் பூசித்தபேர்கட்கு இருதயத்தில் இருந்து யானும் கடாட்சிப்பேன். கருணையினால் மாநிலத்தில் வறுமையை நீக்கி மகத்தாகிய பாக்கியந் தருவேன்; சர்ஜ்ஜனர்களோடு மிருந்து வாழ சண்முகருங் காப்பார் எ-று. 49

சொன்னேனையா மஹாரிஷிகள் இன்னம்தாயே
சொல்லுமம்மா பார்வதியே துலங்கத்தானும்
வன்னமுள்ள தேன்மொழியே எந்தன்மாதா
வகுத்ததொரு கீதையின் வரலாரெல்லாம்
பொன்னையா சரீரமுள்ள மனோன்மணித்தாய்
பொற்புடைய அற்புதமே வாலைதேவி
அன்னபுரி பூரணியே லோக மாதா
அடியேனை அடைக்கலம்நீ காத்தருள்செய்வாய்.

(இ-ள்.) சொன்னேன் மகரிஷிகளே என. இன்னமுந் தாயே சொல்லுமம்மா பார்வதியே துலங்கத்தானும் வகுத்த கீதையாகவும். அதின் வரலாரெல்லாம் பொன்னைப்போன்ற சரீரமுடைய மனோன்மணித்தாய் அற்புதமாகிய வாலைதேவியே அன்னையே பரிபூரணியே லோகமாதாவே அடியேங்களை அடைக்கலம் காத்தருள் செய்வாய் எ-று. 50

அடைக்கலமாம் என்னுலைக் குகையில்வைத்து
அட்சதையும் கெந்தபுஷ்பம் அனைத்துஞ்சாற்றி
முடக்கமொன்று இல்லாமல் மனதொன்றாகி
முயற்சியாய்ப் பூசித்து வந்தாரானால்
இடுக்கங்கள் இல்லாமல் தோற்றினானும்
இன்பங்கள் இனிதளித்துத் துன்பம்தீர்த்து
ஒடுக்கங்கள் வந்திட்ட ஞானமீது
ஓகோகோ சாயுச்யம் ஈகுவேனே.

(இ-ள்.) அடைக்கலமாக என்னுலைக் குகையில் வைத்து அட்சதையோடு கெந்த புஷ்பம் யாவும் சாற்றி, முடக்கமில்லாமல் மனையொன்றில் நிருத்தி முயர்ச்சியாகத்தானே பூசித்துவருவாராகில் அவர்கட்கு இடுக்கமானது இல்லாமல் தோற்றி யான் இன்பமானது அளித்து துன்பங்கள் யாவுந்தீர்த்து ஒடுக்கமுடைய சாயுச்ய ஞானம் தருவேன் எ-று. 51

ஈந்திட்டேன் என்னுடைய நூல்தான்மைந்தா
இகத்திலே எல்லோர்க்குங் கிடையாதப்பா
ஆய்ந்திட்டேன் இந்நூலா யிரத்திலொருவன்
ஆனக்கால் அவனுக்கே காணுமப்பா

வாய்ந்திட்ட கோடியிலே ஒருவனுனல்
வண்மையுடன் அவனுக்கே வருகுமப்பா
தோய்ந்திட்ட தொல்லுலகில் எல்லார்க்குந்தான்
தோற்ருது என்னூல்தான் துலக்கம்கேளே.

(இ-ள்.) ஈந்த என்னுடைய நூல் உலகத்தில் எல்லோருக்குங் கிடைக்க மாட்டாது. ஆயிரத்தில் ஒருவனுக்குக் கிடைக்கும்; அப்படிக் கிடைத்தோனுக்கு யானும் கோடியில் ஒருவனுக்குச் சித்தியாகும்; உலகத்தில் எல்லார்க்கும் என்னூல் தோற்ருது எ-று. 52

கேளப்பா என்னூல்தான் படித்தமைந்தர்
கேவலமாய்த் தினந்தோறும் பூசித்தோரும்
நாளப்பா இனிஜெனனம் இல்லையில்லை
நன்மையுள்ள பரகதியை நாடுவான்பார்
வாளப்பா வண்மையுள்ள மைந்தரெல்லாம்
வரிசைபெற்ற என்நூலில் வண்மையாக
விளப்பா இல்லாமல் என்னூல்தானும்
விவரமாய்ச் சொல்லிவிட்டேன் வியந்துகேளே.

(இ-ள்.) கேட்பீராக என்னூலைப் படித்த மைந்தர்களும் தினந்தோறும் பூசித்தோர்களும் நரசென்ம மெடுப்பதில்லை. நன்மையாகியப் பாரகதியை நாடுவார்கள். வண்மையுடைய மைந்தா யாவருக்கும் வரிசைபெற்ற என்னூலில் வன்மையை யறிவீர் வியர்த்தமாகப் போகாததுமாகச் சொன்னேன் எ-று. 53

கேளடா உலகிலுள்ளோர் எல்லோர்க்கும்தான்
கேவலமாய்த் தினந்தோறும் மைந்தாகேளு
நாளடா காலையிலே கால்முகங்கள்
நலமாகச் சுத்திசெய்து விபூதிசாத்தி
வாளடா சிவபூசை செய்துநீயும்
வண்மையுள்ள என்னூலை எடுத்துபாரு
தாளடா தாழ்வில்லா தவரை நாளும்
தற்காக்க யென்றுவரம் சார்ந்திட்டேனே.

(இ-ள்.) உலகிலுள்ள எல்லார்க்கும் தினந்தோறும் கேளும்; காலையில் எழுந்து கை கால் முகம் இவைகளைச் சுத்திசெய்து விபூதிசாத்தி, சிவபூசை செய்து, வண்மையாகிய என்னூலை எடுத்துப் பார்ப்போர்க்குத் தாழ்வில்லாமற் படிக்கு அவரை நாளும் தற்காக்கும்படியாக வரந்தந்தேன் எ-று. 54

Luratech Document Processing Solutions

சிவபூசை மந்திரம்

சார்ந்திடவே சிவபூசை செய்யென்றாலே
சாந்தமாய் சிவமந்திரம் சாற்றுவேன்யான்
ஆர்ந்திட்ட ஓம்ஆம்ஊம் ஸ்ரீயும்ரீயும்
அங்ரீங்ஸ்ரீங் சிவாயநம வென்றிட்டேதான்
வார்ந்திட்ட சிவனுடைய மந்திரத்தை
வளமாக ஜெபஞ்செய்து பூசித்தாயானால்
தீர்ந்திட்ட சிவபூசை பெரிதாம்மைந்தா
செல்லலாம் சிவபதியிற் செல்லலாமே.

(இ-ள்.) சிவபூசையானது செய்யவேணுமெனில் அதற்குச் சிவமந்திரம் யான் செய்வேன் கேளும். ஓம் ஆம் ஊம் ஸ்ரீயும் அங் ரீங் ஸ்ரீங் சிவாயநமா என்று சிவனுடைய் மந்திரத்தை செபஞ்செய்துப் பூசித்து வருவாயானால் அச் சிவபூசை பெரிதாகையால் சிவபதியில் சேரலாம் எ-று. 55

சத்தி பூஜை

செல்லவே என்னுடைய செபந்தான்மைந்தா
செப்புகிறேன் ஓங் ரீங் ஸ்ரீங் சிவசத்திரூபி
மல்லவே வாலைபர மேஸ்வரியேதாயே
வாவாவா என்றுநிதம் மனத்திருத்தி
வல்லவே சோடசோப சாரத்தோடு
வீழ்ந்திறைஞ்சித் திருவடியைப் பூசித்தோர்கள்
வல்லவே வாலையிட அருளெவர்க்கும்
வன்மையாய் யீந்திட்டேன் வரிசையாயே.

(இ-ள்.) செல்வதற்கு இன்னமும் என்னுடைய செபத்தைச் சொல் கிறேன் கேளும். ஓம் ஸ்ரீங் ரீங் சிவசத்தி ரூபி வாலை பரமேஸ்வரி தாயே, வாவாவா என்று மனதில் இருத்தி சோடச உபசாரத்தோடுவீழ்ந்து இறைஞ்சி பூசித்தோர்க்கு வாலையினுடைய அருளானது எவர்க்கும் ஈவேன் எ-று.

(வி-ரை.) இச்செய்யுளால் சத்திதேவியை ஆராதிக்க வேண்டிய மந்தி ரத்தையும் விதியையுங் கூறியுள்ளன. இம்மந்திரத்தில் மூல அக்ஷரத்தை மாத்திரமே குறிக்கப்பட்டுள்ளதாலும் அவளது திருநாமத்தையும் ஆராதனை முதலியவற்றையுங் கூறப்படாமையால் இங்கு வேறு நூற்களிலிருந்து தேவியின் மகாமந்திரத்தை வரைப்பட்டுள்ளன. 56

மஹாமந்திரம்

அரி ஓம் பீஜா அரும்வேரே பகவதி
தேவதேவி சரணம் சரணம்
ஆக்ஷி எனக்கு ஆதரவிருந்து
அன்னமாக் கிரகத்தலங்கோலமாக்கி
ருவில்பட கொர்ஜித்து வாட்டுவாய்
நடுநடுங்காதவர்க்கு நாராசமேத்துவாய்
பக்கமுன்னிலைகளைப் பாச்சியே விடுகுவாய்
வல்லாண்மை பேய்களை வாரிசேர்த்தரைகுவாய்
கொடுமை கிரகங்களை கொந்தி தூளாக்குவாய்
அகத்திய மூடரை ஆணுவமடக்குவாய்
காட்டிக்கொடுக்காதே கனகோபம்பண்ணாதே
உடல்தேகத்தினி லுள்ளத்த நோய்கள்
குதிரைவலி வாதமும் பித்தஜுர தோஷமும்
தலைநோவு மண்டை நோவுகள்
இடுப்பு மாருளைப்புகள் காது வினைவீக்கமும்
பக்கச் சிலந்தியும் பல்குத்ரி வாதமும்
உருண்டை கண்மாந்தையு மோடுங் காப்பானுகள்
தந்தவாதங்களும் தரையிடுங் கவாலும்
இன்ன முண்டானவினை அத்யாதி தீவினை
உமையவளே வேதமொழி அன்பத்தோ ரக்ஷரம் ஒளிவாசுவான வடிவே
உந்தனை துதித்திட வெண்ணி ரிரைத்திட
மனமது காந்துரீ உதவியாயிருந்து நீ
தாயேநீ பொய்யாதே தடிக ளுரையாதே
ஓடிப் பிழையாகிலும் கொண்டுப் பிரட்டாதே
ஏழை எந்தன்மேல் எதிரிட்டுக் கொள்ளாதே
சூது மனதாகவே சோதனைப் பாராதே
எளித்த சொற்களுக்கு ஏற்பட்டு நிற்காதே
நாலுபேர் முன்னில் நகைத்திட வையாதே
மானிட ரிகழ்ச்சிக்க மர்மமா யிராதே
நிஜதெய்வ மென்று நின்னை நிந்தைக்குள்வாராதே
பூலோக சத்தியே புவர்லோக சத்தியே
சத்தியலோக சத்தியே அதல விதல
சுதல நிதல தராதல மஹாதல பாதாள
பூலோக புவர்லோக சுவர்லோக மகாலோக
ஜனலோக தபலோக சத்தியலோக
புவனேஸ்வரி இஷ்டவீ லா லா லா லா
வீ வீ வீ வீ ருத்ரவேத சாமவேத பிரயாதக்ஷணி

Uratech Document Processing Solutions

க்ஷாம் க்ஷாம் மாறு மாறு ஜோரு ஜோரு
இந்திரன் பந்து அக்கினி பந்து
எமன் பந்து நிருதிபந்து
வருண பந்து வாயுபந்து
குபேரபந்து ஈசான்ய பந்து
சண்டு சண்டுமா ஆவேச ஆவேச
சீக்கிரம் சீக்கிரம் பேக்கியாவ் பேக்கியாவ்
கிராம் கிரும் அரும்வேரோ பகவதி
தாசன்குமாரன் பூதண்டகன் சொன்னான்
பின்னையாரெனக்கு உன்னை வேறெனக்கு
நிலையாக இதுமந்திரம் தவாரம லுனதுமொழி
நிலைநிற்க வேண்டு மம்மா
உள்ளமதி லுனதுதிரு தாளினை நம்பினேன்
இன்னமும் சாக்ஷியாய் முப்பத்து முக்கோடி
தேவர்கள் சாக்ஷியாய் அரி அயன் பிரம்மா
அவர்கள் சாக்ஷியாய் மிகவும் நம்பினேன்
ஓமம்மா மகாதேவி
சச்சிதானந்தி சாம்பவி
திரிசூலி நீலகண்டாயி
திரிநேத்திரி டம்பா வைரவி
ராஜராஜேஸ்வரி மகா பரமேஸ்வரி
அடியேனுக்கு வந்த ஆபத்துகளைத்
தீரும் அம்மணி மனோன்மணி

என தினமும் காலை மாலையில் பால்பழம் முதலிய தூபதீபங்களால் நைவேதித்து வர மேற்படி தேவியானவள் சகல வார்த்தையுங் கொடுத்தாட் கொள்வாள் என்பதாம்.

அகஸ்தியர் பூசை மந்திரம்

ஆகவே கும்பமுனி பூசைமார்க்கம்
அற்புதமாய் சொல்லுகிறேன் மைந்தாகேளு
வாகவே தன்மையுள்ள மந்திரத்தை
வரிசையாய்ப் பூசைசெபம் செய்யவென்றால்
ஆகவே ஓங் ரீங் ஸ்ரீங் அங் சங் வங் சிங்
வாவாவா சிவயநம கும்பமூர்த்தி
தாகவே தாழ்வில்லாப் பூசைசெய்தால்
தாரணியிலே பிறப்பரிது முத்திதானே.

LuraTech Document Processing Solutions

(இ-ள்.) கும்பமுனியுடைய பூசையின் மார்க்கம் அற்புதமாகத் தானே சொல்லுகிறேன் கேளும்; இந்த மந்திரத்தை வரிசையாகப் பூசை செய்து வருவாய்; ஓங் ரீங் ஸ்ரீங் அங் சங் வங் சிங் வாவாவா சிவாம கும்பமூர்த்தி எனப் பூசையானது செய்ய முத்தியுண்டாம் எ-று. 57

விஷ்ணு பூசை மந்திரம்

சொன்னேனப்பா வைகுந்தம் கோவிந்தனப்பால்
  சொற்பெரிய என்தமையன் பூசைகேளு
மன்னனப்பா வென்பிறவி அதிகசித்து
  வாகாக ஆலிலைமேல் துயின்றமாயன்
அன்னனப்பா ஆயுசுக்கு வல்லவன்தான்
  ஆனந்த அமிர்தமது கொண்டமாயன்
நிர்ணயமாய் உலகமெல்லாம் படைத்தமாயன்
  நீணிலத்தில் ஆத்மாவைக் காப்போன்தானே.

(இ-ள்.) சொன்னேன் வைகுந்தப் பதியாகிய கோவிந்தன் சொற் பெரிய என் தமையன் பூசையைக் கேளும்; என் பிறவி அதிக சித்துடைய வன்; ஆலிலையிற் றுயில்வோன், மாயன் ஆயுசுக்கும் வல்லவன், அமிர்தங் கொண்ட மாயன், உலகைப்படைத்த மாயன், உலகிலுள்ள ஆத்மாவைக் காப்பவன் எ-று. 58

காப்பதென்ன என்தமையன் உலகமெல்லாம்
  காசினியோர் காணரிதாம் காட்சியாகும்
ஏர்ப்பதென்ன என்தமையன் சித்தேயாகும்
  என்னசொல்வேன் என்பிறவி மாயன்தானும்
பார்ப்பதென்ன பலவுயிரைக் காக்குஞ்சுவாமி
  பராபரத்தின் அருளாலே பயின்றேனப்பா
தார்ப்பதென்ன சற்குருவாம் ஆதிமூலம்
  சராசரமும் பலபத்திர ராமன்தானே.

(இ-ள்.) என் தமையன் உலக மாதியந்தமும் உள்ளோர்க்குக் காணுதற்கு அரிதாகியக் காட்சியாகும்; என் தமையனுடைய சித்தே சித்தாகும்; என் னென்று சொல்வேன் அவருடைய மாயம்; பல உயிரையுங் காக்குஞ் சுவாமி யாகிய பராபரத்தின் அருளினால் பயின்றேன். சற்குருவாகிய ஆதிமூலம் சராசரமும் படைத்த பலபத்திர ராமனாகும் எ-று. 59

ஆமெனவே அண்டரண்ட புவனமெல்லாம்
  ஆதியாம் படைத்ததொரு பிறவியப்பா
பாமெனவே பலவுயிரைக் காக்குந்தெய்வம்
  பசுநிறத்தோன் என்தமையன் பலத்தைச்சொல்வேன்

விஷ்ணு பூஜா யந்திரம்.



LuraTech
Document Processing Solutions

நாமெனவே நான்முகனைப் படைத்தமாயன்
நானறியேன் அவருடைய மகிமைதன்னை
தாமெனவே முனிவர்முதல் யாருங்காணார்
தாரணியில் மானிடரோ காண்பாரன்றே.

(இ-ள்.) அண்டரண்ட புவனங்கள் எல்லாம் ஆதியாகத்தானே படைத்த என்பிறவியாகும்; பலவுயிர்களையுங் காக்குந்தெய்வம் பசுப்போன்ற நிறமுடைய என்னுடைய தமையன் பலத்தைச் சொல்வேன்; நான்முகனாகிய பிரமாவைப் படைத்த மாயனை நான் அறியேன் அவருடைய மாய்கையை; முனிவர்கள் முதல் யாருங்காணார்கள் தரணியிலுள்ள மானிடர்கள் காண்பரோ எ-று. 60

காணாத பொருளையெல்லாம் கண்டமூர்த்தி
காரணமாய் மூலமுதற் பொருளானமையன்
பேணாத மூவருக்கும் பொருளாமூர்த்தி
பேருலகில் உயிரையெல்லாம் அமைத்தமூர்த்தி
காணாத நலந்தீங்கும் அறிந்தமூர்த்தி
நாதாந்தம் விளங்குகின்ற ஞானமூர்த்தி
ஆணாக ஆண்பெண்ணும் ஆனமூர்த்தி
ஆயிரமாம் பேர்கொண்ட மூர்த்திதானே.

(இ-ள்.) காணுதற்கரிதாகிய பொருளையெல்லாங் கண்ட மூர்த்தியாகும். மூலமுதலாகிய பொருளாம், பேணாதாகிய மூவர்க்கும் பொருளாகியமூர்த்தி உலகிலுள்ள உயிரை எல்லாம் அமைத்த மூர்த்தி, காணுதற்கரிதாகிய நன்மையும் தீமையும் அறிந்த மூர்த்தி, நாதாந்தம் விளங்கிய ஞானமூர்த்தி, ஆணும் பெண்ணுமானமூர்த்தி, ஆயிரம் பெயரையுடைய மூர்த்தி எ-று. 61

கொண்டதொரு பொருளாம்யென் தமையன்தானும்
கோவிந்த நாமமதை தரித்தமாயன்
அண்டமுதல் பதினாலு லோகமெல்லாம்
அவர்படைப்பே ஆகுமப்பா அறிந்துசொன்னேன்
எண்டதொரு அடிமுடியும் ஆதியந்தம்
இகத்திலே இவர்மகிமை யாரேயாகும்
நண்டதொரு நான்முகனே முதலாயுள்ள
நன்மைமுதல் அவர்மகிமை நடத்தியாமே.

(இ-ள்.) கொண்டப்பொருளாகும். கோவிந்தனெனும் நாமத்தைத் தரித்தவராகும். அண்ட முதலாகிய பதினாலுலோகம் யாவும் அவருடைய படைப்பாகும். அறிந்து சொன்னேன். அடியும் முடியும் ஆதியந்தமும் இகத்திலும் இவருடைய மகிமையாகும் நான்முகன் முதலாயுள்ள யாவரும் அவர் மகிமைக்குள் நடத்தியதாகும் எ-று. 62

turatech Document Processing Solutions

விஷ்ணு மந்திரம்

தாமப்பா என் தமையன் மந்திரத்தைத்
தாரணியில் ரிஷிகள் முதல் வானோர்தாமும்
நேமப்பா கொலைகளவு புலையும்நீங்கி
நினைவதனில் கொண்டுநிதம் நேசித்தேதான்
ஆமப்பா அரிராம செயமென்றேதான்
அன்பாகத் தினந்தோறும் சேவித்தோர்க்கு
காமப்பா காட்சியுண்டாம் கருணையுண்டாம்
கயிலாச பதிதனிலே இருப்பார்தாமே.

(இ-ள்.) என்னுடைய தமயன் மந்திரத்தை ரிஷிகள் முதலாகிய வானோர்களும் நேமமாகத்தானே கொலை களவு புலை இவைகளை நீக்கி நினைவில்கொண்டு நாளும் நேசித்து அரிராமஜெயமென்றும் அன்பாகத்தானே தினந்தோறும் சேவிப்போர்களுக்குக் காட்சியும் கருணையுமுண்டாம் கயிலாசபதியிலிருப்பர் 63

ஆமென்ற அஞ்செழுத்தின் மூலமாச்சு
அம்பரத்தின் ஓரெழுத்தின் பொருளதாச்சு
வாமென்ற வாலையிட உயிர்தானச்சு
வண்மையாய்ச் சொல்லிவிட்டேன் வரிசையாக
தாமென்ற தாரணியில் மனிதர்காணார்
சாற்றரிய தேவர்களும் ரிஷிகள்காணார்
ஊமென்ற உட்பொருளே சொன்னேன்மைந்தா
உற்றதொரு சேதிதனை உரைத்திட்டாயே.

(இ-ள்.) ஐந்தெழுத்தின் மூலமாகியும் ஓரெழுத்தின் பொருளாகியும் வாலையினுடைய உயிராகிய வண்மையாகத்தானே சொல்லிவிட்டேன். தாரணியிலுள்ள மனிதர்கள் காணார்; உட்பொருள் யாவுஞ் சொன்னேன்; உற்ற சேதிகள் யாவு முறைத்தேன் எ-று. 64

விஷ்ணு ஸ்தோத்திரம்

அரிஓம் நமோ நாரண பரவாசுதேவ
மூலாதாரப் பரப்பிரம்ம திரிகோண
அகார உகார ஓங்கார ஸ்ரீங்கார
வீர சூர புஜபல பராக்கிரமா
கெம்பீரா துஷ்ட சம்மார ஸ்ரீவர்த்தன
தயான ரக்ஷக சதுர்வேத புராண
சம்மஸ்தப் பஹா ரவ
முரகரி அநந்த நந்த வைகுந்த

UniTech
Document Processing Solutions

முகுந்த சுந்தர பத்மநாப
தாமோதர மச்ச கூர்ம வராக
நரசிம்ம பவுத்த கலிக்ய
நெடி விக்ரமவதார சங்குசக்ர
கண்டா வன கோதண்ட கடக
தண்டாயுதா சொர்ன பீதாம்பரா
கடக கங்கணபதி ஞேக்ஷ வல்லதா
லேபிதா நானுக ஜவிதர்புஷ்ப வில்வமாலிகா
கற்பூர தீப நிரஞ்சன
சோட சோபசார அஷ்டச வாத்தியா
பாத கன்னிகா நாட்டியா
சப்தாளி ரஞ்சன வாலோகிதா
அமப் பசும்பாவதம்ப ஏகரம்ப
ஜகதிம்ப கும்ப மதம்ப குஜம்ப கெம்பீரா
மனோஹரா புங்க புங்க
நடாங்க தபளிங்க தங்கதுங்க
தேவேஸ்வரா
சிரனே பாதபங்கய நமஸ்தே நமஸ்து

எனத் தோத்தரிக்க ஷ விஷ்ணுவால் துதிப்போரது வல்வினையாவு மொழிந்து சுகம்பெறுவர்.

சுப்பிரமணியர் மந்திரம்

உரைத்திட்டேன் என்தமயன் வரலாறெல்லாம்
உண்மையாய்ச் சகலசித்து எல்லாஞ்சொன்னேன்
நிறைந்திட்டேன் என்குழவி குமரனையா
நீணிலத்தில் உயிர்களெல்லாந் தழைக்கவேண்டி
வரைந்திட்டேன் என்மகனும் கந்தன் தன்னை
வாகான அறுமுகனைப் போற்றி செய்ய
அரைந்திட்டேன் ஆதியந்தம் உயிர்படைத்த
அறுமுகனார் மந்திரத்தை அருள்செய்வேனே.

(இ-ள்.) உரைத்தேன் என்னுடைய தமையன் வரலாறு யாவும் உண்மையாகத்தானே சகல சித்துகளும் சொன்னேன். என்னுடைய குமாரனாகிய சுப்பிரமணியன் உலகத்திலுள்ள உயிர்கள்யாவுந் தழைக்கவேண்டிய என் மகனாகிய கந்தனை ஆறுமுகனை போற்றிசெய்ய அழைத்தேன் ஆதியந்தமாக உயிர்களைப் படைத்த அறுமுகனுடைய மந்திரத்தை அருளாகச்சொல்வேன் எ-று.

(வி-ரை.) இவ்விரண்டு செய்யுட்களாலும் ஸ்ரீமகா விஷ்ணுவைத் தோத்திரம் செய்யும் விதத்தைக் கூறினார் அவையாவன எவரொருவர் பூரணபக்தி

ஸ்ரீ சுப்பிரமணியர் பூஜா யந்திரம்.



LuraTech Document Processing Solutions

யுடன் தினந்தவராது அரிராம என்னும் மந்திரத்தை ஜெபித்து வருகின்றனரோ அவர்களுக்கு எவ்வித குறைவுமின்றி சுகம் பெருவர் என்பதாம் இங்கு மேற்படி விஷ்ணுவினது ஸ்தோத்திரத்தைக் கூறப்பட்டுள்ளன. 65

செய்யவே என்குமரன் அறுமுகத்தான்
  செயல்பெருகி அவருடைய பெருமைகேளு
ஐயமில்லா அறுமுகனர் மந்திரத்தை
  அரகரா சொல்லுகிறேன் அருமையாக
பையவே ஓம் ஸ்ரீம் கிலியும் சரவணபவா என்றே
  பாக்கியமாய் மைந்தனைப் பூசித்தாயானல்
மெய்யவே என்பிள்ளை உனக்குமைந்தா
  மேன்மையாம் பரகதியை அளிப்பார்பாரே.

(இ-ள்.) செய்யும்படியாகிய என்குமாரன் அறுமுகவன்றன் செயலானது பெருக அவருடைய மந்திரத்தை கேளும்; ஐயமில்லாமற்படி அறுமுகனுடைய மந்திரத்தை அருமையாகச் சொல்கிறேன் ஓம்-ஸ்ரீம்-கிலியும்-சரவணபவா என்றும் பாக்கியமாகத்தானே பூசித்துவரில் என் பிள்ளையும் உந்தனுக்கு மேன்மையாகியப் பரகதியை யளிப்பான் எ-று. 66

பாரப்பா தினந்தோறும் செபித்தபேர்க்கு
  பதவியடா சாயுச்யம் ஈவார்கந்தன்
காரப்பா காட்சிபெறும் மகிமையீவார்
  கருணைபெற கமனசித்தும் கடாட்சிப்பார்பார்
சேரப்பா செல்வமது அநேகமீந்து
  செம்மையுடன் வறுமையெல்லாம் நீக்குவார்பார்
கூரப்பா குணமுள்ள மைந்தனுக்கும்
  கூர்மையடா என்பிள்ளை குணம்சொன்னேனே.

(இ-ள்.) பார்க்க தினந்தோறும் தவராமல் துதித்தப் பேர்களுக்கு சாயுச்சியப்பதவி ஈவான், கந்தனும் காட்சியாகிய மகிமையுங் கொடுப்பார்; செல்வமானது அனேகமீந்து வருமைகளை நீக்கிவைப்பார்; குணமுள்ள மைந்தனுகிய கூர்மையுள்ள என் பிள்ளையின் குணம் சொன்னேன் எ-று. 67

சொன்னேனையா என்பிள்ளையை பூசிப்போர்க்கு
  சொற்பெரிய பதவியடா அறுமுகத்தான்
அன்னேனையா ஐஸ்வரியம் உள்ளபாலன்
  ஆனந்த அமிர்தமதைக் கொண்டநாதன்
வன்னேனையா வாலைக்கு வாலைரூபன்
  வன்மையுள்ள என்பிள்ளை வயதேயாகும்
இன்னேனையா என்பிள்ளை கரிமுகத்தாள்
  இகத்திலே வினைமுதலாந் தெய்வமாமே.

(இ-ள்.) சொன்னபடியே என் பிள்ளையைப் பூசிப்போர்க்குசொற்பெரிய பதவியானதும் கொடுப்பார்; ஐஸ்வரியமுள்ளப் பெலநைகும்; ஆனந்தமாகிய அமிர்தத்தையுண்ட நாதன் வாலைக்குவாலை ரூபன் வண்மையுள்ள என்பிள்ளை யோகத்துடையவன் அன்றியும் கரிமுகவன் இகத்தில் வினைமுதலாகியத் தெய்வமாம் எ-று. 68

தியானமந்திரம்

ஓம் நமோவென் றுரைப்பவர்க்கே
ஓரைந்து முகமுள்ள ஓராறு முகமெனு
முதிக்கின்ற குழந்தை வடிவே
நேயமா யுனைத் துதிப்பவர் நெஞ்சினில்
என்னேரமு மகலா திருப்பாய்
அத்தனே சித்தனே சத்ருஷிப் புத்ரனே
நிர்க்குண மான குமரா
சுவாமியாய் நின்றிடும் சத்திவேலாயுதா
முத்தி வேலாயுதா சச்சிதானந்த குருவே
மாயன்மால் மருகனே வாழ்பழனி முருகனே
மலர்ப்பாதம் போற்றி போற்றி
வள்ளிதெய் வானையுடன் மகிழ்சுப்ரமண்யனே
உன்மனதி லெனையாள நினையே
ஓாருமுகமும் ஈாறு கைவேலும்
ஓங்காரமான விழியும்
ஒருகோடி சூர்யப் பிரகாசமும்
தேகமு முதிக்கின்ற குழந்தை வடிவே
தீராதவினை பில்லி வைப்புச் சிரங்கு
செவ்வாப்பு விப்புருதி
பிறவாத தோஷ குணமும்
குன்மம் வலிப்பு நோயினுங் காமாலை
பரங்கி குட்டம் மரணம் சேய்
சளை பெரு வியாதியும்
கொடிய மந்தாரை காசமும்
வாராது தீவினை பறக்குமே
உன்பேர் சொல்லி வாழ்த்தி வெண்ணீர்தரித்தால்
வள்ளி தெய்வானையுடன் மகிழ் சுப்ரமண்யனே
உன்மனதி லெனையாள நினையே,
ஜெகத்தினில் மெய்கொண்ட தெய்வமுனி தெய்வமே
சிவ சுப்ரமண்ய தேவா
சிரிப்புப் பிசாசு பிரமராக்ஷதமுனி
சினத்த காட்டேரி இருளன்

UdaTech Document Processing Solutions

பக்கத் திருக்கும் காளி பகவதி
துற்கி சாமுண்டி பத்ரகாளி
வீரபத்திரன் முதலாய்
துஷ்டப் பிசாசுகள் பகைத்த பகையாளிமுதல்
உன்பேர் சொல்லி வாழ்த்தி வெண்ணீர்தரித்தால்
அலரியே அலரி ஐந்தெழுத்தால் கதரி
அபயமென்றோடவே ஆக்கினை செலுத்துமுருகா
மருத்துவ முனக்கிது ஜெகத்தினில் வகுத்திடு
வளர்பழனி வாழ் கடம்பா
வள்ளிதெய்வ யானையுடன் மகிழ்சுப்ரமண்யனே
உன்மனதி லெனையாள கினையே.

என காலை மாலை தினந்தோறும் கர்ப்பூர முதலிய தூப தீப நைவேத்தியத்துடன் தொழுதுவர ஷை சுப்ரமண்யக் கடவுள் கடாக்ஷித்து அநுக்கிரகம் செய்வார்.

விக்நேஸ்வரர் மந்திரம்

இல்லையப்பா என்பிள்ளை கரிமுகத்தான்
இகத்திலே யிவனில்லாக் கார்யமில்லை
நல்லையப்பா நான்முகனும் முதலாயுள்ள
நல்லதொரு மூவர்கட்கும் முதலாய்நின்றோன்
னல்லையப்பா ஆதிமூலப் பொருள்தானாகும்
அரகரா என்மகன்தான் அறிவதாமே
வல்லமைகள் மெத்தவுண்டாம் பூசித்தோர்க்கு
வன்மையடா சாயுச்சிய பதவியாமே.

(இ-ள்.) என் பிள்ளைக் கரிமுகவன்; இகத்தில் அவனல்லாது காரியம் ஒன்றுமில்லை நான்முகன் முதலாகவுள்ள மூவர்கட்கும் முதலாகத்தானே நின்றோன் ஆதிமூலப்பொருளாகும்; அரகராவென்னும் அறிவுடையோன் அவனைப்பூசிப்போர்க்கு வல்லமையுண்டாம் சாயுச்சியமுண்டாம் எ-று.

(வி-ரை.) இங்கு கூறிய 66-ஆம் செய்யுள் முதல் 69-ஆம் செய்யுள் வரையில் ஸ்ரீ சிவசுப்ரமண்ணியக் கடவுளின் பூஜாமந்திரத்தை அவ்வாறு பூஜை செய்வதால் அவரடையும் பலனையும் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளன வாதலால் இங்கு மேற்படி சுப்ரமண்யக் கடவுளினது தியானமந்திரத்தை வேறு நூற்களிலிருந்தெடுத் தெழுதப்பட்டுள்ளன.

69 ஆகுமப்பா அவனுடைய கேசரியைத்தான்
அறிவதனை சொல்லவென்றால் முடியாதப்பா
வாகுமப்பா வஜ்ஜிரமணி பொருளுடையோன்தான்
வளமையாம் என்னூலை அறிந்தபேர்க்கு

தாகுமப்பா தன்பதியில் உள்ளமைந்தன்
தரணியிலே இவன்போலும் பெருமைபெற்றோர்
ஏகுமப்பா என்குருவாம் முனிதானுகும்
என்னசொல்வேன் யோகத்தின் இயல்புதானே.

(இ-ள்.) ஆகும்படியாகிய அவனுடைய கேசரியை அறியச்சொல்ல முடியாது, வச்சிரமணியானப் பொருளுடையோன், வளமையாகத்தானே என்னூலை யறிந்தப்பேர்க்கு தன் பதியில் வாழும்படியான தரணியில் இவன் போலும் பெருமைப் பெற்றவரில்லை, என்னுடைய குருமுனியாகும் என்சொல்வேன் யோகத்தினுடைய இயல்புகளை எ-று. 70

தானென்ற என்னூலை எவரானாலும்
தாரணியில் கேட்டபேர் பிரமைகொள்வார்
வானென்ற வையகத்தி லிந்தநூலை
வளமையாய் காணரிது வரிசைசொல்வேன்
பாரென்ற பலபொருளை அறிந்தபேர்க்கு
பக்குவமா யெந்நூல்தான் தோயும்பாரு
ஊனென்ற உட்பொருளை அறிந்தாரானல்
உண்மையுடன் காணுமடா உறுதிதானே.

(இ-ள்.) தானெனும்படியாகிய என்னூலை எவராகினும் பூமியின்மீதுக் கேட்ட பெயர்களெல்லாம் பிரமைக்கொள்வார். இந்த வையகத்தில் இந்நூலைக்காணவரிதாகும். பலபொருளையும் அறிந்தபேர்க்கு பக்குவமாகத் தானே எந்நூல் விளங்கும் உட்பொருளையறிந்தாராகில் உண்மையாகத்தானே காணும் உறுதியாகும் எ-று. 71

உறுதியாய் என்னூல்கோடியில் ஒருத்தர்
உத்தமர்க்கு கிடைக்குமென்று உறுதிசொன்னேன்
பருதியாய்ப் பாலகர்க்குக் கிடைக்கும் அப்பா
பாங்காக என்னூல்தான் வதனமப்பா
இருதயத்தில் எந்நூலை வைத்துநீயும்
இன்மையுடன் பூசித்தால் முத்தியுண்டாம்
சுறுதியாய் சூட்சமதைச் சொன்னேன்மைந்தா
சுகமாக எந்நூலைப் பதனம்பாரே.

(இ-ள்.) உறுதியாகத்தானே எந்நூலை கோடியில் ஒருத்தர் உத்தமராக விளங்கில் அவர்க்குச் சூரியப்பிரகாசம்போல் துலங்கக்கிடைக்கும் எந்நூல் வதனமாகும். இருதயத்தில் எந்நூலை நினைவாக வைத்து இனிமையாகத்தானே பூசித்துவா முக்தியுண்டாம். சுருதியாகவும் சூட்சமாகச்சொன்னேன் சுகமாகத்தானே என்னூலைப்பாரும் எ-று. 72

LuraTech Document Processing Solutions

பாரடா என்நூலை வெளியிலேநீ
பாங்காக பிரபஞ்ச வளவில்போட்டால்
காரடா அவர்தலையும் வெடித்துப்போக
தாணியிலே சபித்திட்டேன் தாழ்வில்லாமல்
பேரடா பாவிகட்கு யீயலாகாது
பேரின்ப முள்ளவர்கட் கீயலாகும்
கூரடா குணமுள்ள பிள்ளைகட்குக்
கொடுக்கவுந்தான் வேணுமப்பா சொல்லுவேனே.

(இ-ள்.) பார்க்க என்னுடைய நூலை வெளியில் நீ பாங்சாகத்தானே பிரபஞ்சத்திற் போடுவாயாகில் அவர்கள் தலையும்வெடித்துப்போகும்படி தாணியில் செபித்துவிட்டேன். தாழ்வானது இல்லாமல் அன்றியும் பாவிகட்கு ஈயலாகும் குணமுடையப் பிள்ளைகட்குங் கொடுக்கவேண்டும் எ-று. 73

சொன்னெனப்பா ரிஷிகளே தேவர்கேளீர்
சொல்லுதற்கு இன்னமும் தானதிகமுண்டு
அன்னனப்பா அகஸ்தியரே வதிஷ்டர்காள்நீர்
அரனார்தான் எந்தனுக்கு உபதேசித்தார்
வன்னனப்பா அவர்தவசில் கண்டசேதி
வாகாக எந்தனுடன் சொன்னார்பாரு
முன்னனப்பா பிரம்மலிபி அமைப்புமைந்தா
முதன்மையுள்ள பிரம்மாவின் அமைப்புதானே.

(இ-ள்.) சொன்னேன் ரிஷிகளே தேவர்களே கேளீர் சொல்லவென்றால் இன்னமும் அதிகமுண்டு அகஸ்தியரே வதிஷ்டரேகேளீர் அரனார் எந்தனுக்கு உபதேசித்தனர் அவர் தவசில் கண்டசெய்தியை என்னுடன் சொன்னார். பிரம்மலிபியும் அமைப்பும் முதன்மையானது பிரம்மாவின் அமைப்பு எ-று. 74

தானென்ற தத்துவத்தின் ஆத்துமபோதம்
தயவான தவசுகளில் முத்திமெத்த
கானென்ற சரிகையுண்டு கிரிகையுண்டு
தனமான யோகமுண்டு ஞானமுண்டு
ஊனென்ற சப்தரிஷி என்றபேர்கள்
உமைபெற்றூர் நூலினிடப் பெருமைதானே,
வானென்ற வையகம்தான் பிழைக்கவேண்டி
வண்மையாய்ச் சாஸ்திரத்தை வகுத்திட்டேனே.

(இ-ள்.) தத்துவமாகிய ஆத்மா போதமுடன் தவம் புரிந்து முத்தியானது பெற்ற சரியைகிரியை யோகம்ஞானம் என உண்டு சப்தரிஷிகளென்

னும் பெயர்கள் உமையானதுப்பெற்றார். நூலினுடைய பெருமையில் இந்த வையகத்திலுள்ளோர்கள் பிழைக்கவேண்டியும் வண்மையாகத்தானே இச் சாத்திரத்தை வகுத்திட்டேன் எ-று. 75

இட்டதொரு இந்நூலைக் கையில்வைத்து
இன்பமுடன் சோடசமும் ஆச்சுதப்பா
தொட்டதொரு கெந்தமுடன் தூபதீபம்
சொர்னம்போல் சிவபூசை செய்துநீயும்
கிட்டதொரு வேதாந்த கடாட்சத்தாலே
கிருபையுற்று பூசைசெய்து வணங்குவோர்க்கு
இட்டதொரு கட்டளைகள் தவாமல்தான்
இயல்பான சாயுச்யம் ஆகும்பாரே.

(இ-ள்.) இட்ட என்னுடைய நூலை கையில் வைத்து சோடசமோடு அர்ச்சித்து கெந்தமோடு தூபதீபம் கொடுத்து சிவபூசை செய்துவரில் வேதாந்தக் கடாட்சத்தினால் கிருபையுற்றுப் பூசையானது செய்து வணங்குவோர்க்கு இட்டக் கட்டளைத் தவறாமல் சாயுச்சிய பதவிகிடைக்கும் எ-று. 76

பாரப்பா பரமபதம் அடையும்பேர்க்கு
பாங்காக எந்நூல்தான் கிட்டும்பாரு
காரப்பா அவர்வயற்றில் நானேசென்று
கருணையாய்ப் பிறந்திடுவேன் கருதிச்சொல்லு
சேரப்பா செம்மையுள்ள தேவனுக்கு
செயலான எந்நூல்தான் தெரியும்பாரு
ஆரப்பா என்னைப்போல் உலகத்துள்ளே
அருள்செய்யார் பிரம்மனே அறிந்துசொல்லே.

(இ-ள்.) பார்க்க பரமபதத்தை அடைகின்றபேர்க்கு பாங்காகிய என்னூல் கிட்டும், அவர்களுடைய வயிற்றில் நானேசென்று கருணையாகத்தானே பிறப்பேன். பிரம்மதேவனுக்கு என்னூல்தான் பிரியம்; யாரும் என்னைப் போல் உலகத்துள் அருள்செய்யார்; ஓ பிரம்மனே அறிந்துச் சொல்வாய் எ-று.

சொல்லியதோர் சாஸ்திரங்கள் அனந்தங்கோடி
சொற்பெரிய வேதமுதல் அநேகம்உண்டாம்
அல்லியதோர் அந்தநல்ல நூல்கள்தானும்
அடிவணங்கித் தெண்டனிட்டு போற்றிசெய்யும்
வல்லியதோர் நூல்கலெல்லாம் வணங்கிநிற்கும்
வாகான குருநூலாய்த் தொழுதுபோற்றும்
மல்லியதோர் மனமகிழ மகத்துவத்தால்
மனோன்மணியாள் கட்டளைகள் மறவாதன்றே.

UpraTech
Document Processing Solutions

(இ-ள்.) சொல்லும்படியான சாஸ்திரங்களோ அனந்தங் கோடியுண்டு; வேத முதலானதும் அநேகமுண்டு; அந்த நூல்கள் யாவும் அடிவணங்கியும் தெண்டனிட்டு போற்றிசெய்யும். இன்னுமுள்ள நூல்கள் யாவும் வணங்கி நிற்கும். இந்நூலைக் குருநூலாகத் தொழுதுப் போற்றும் மனமகிழும்படியானத் தத்துவத்தினால் மனோன்மணியாள் கட்டளையானது மறவாதாம் எ-று.

(வி-ரை.) இக்கவியால் இந்நூலினது மகத்துவத்தைக் கூறியுள்ளன. அவையாவன, இவ்வுலகிலுள்ள சாஸ்திரங்கள் அனேகம் ஆயினும் எந்நூலுக்கும் பணிந்திருக்கும் ஆனதால் இதனைக் கைவிடாதீர்கள் என்பது கருத்தாகும். 78

மறவாத பேர்களுக்கு என்நூல்வேண்டும்
மகத்துவமால் இருக்கவென்றால் எந்நூல்வேண்டும்
இறவாமல் இருக்கவென்றால் என்நூல்வேண்டும்
இகத்திலே இருப்பவர்க்கு என்நூல்வேண்டும்
துறவாமல் இருக்கின்ற பேர்கட்கப்பா
துன்பங்கள் அகற்றிவிடும் என்நூல்மைந்தா
தறவான சற்சனராம் பெரியோரெல்லாம்
சற்குருபோல் நினைப்பவர்கட் கீவார்தானே.

(இ-ள்.) மறவாத பேர்கள் தமக்கு என்நூல் வேண்டும்; மகத்துவமாகத் தானே இருக்கும். இறவாமலிருக்க வென்றாலும் என்நூல் வேண்டும்; இகத்திலிருப்பவருக்கும் என்நூல் வேண்டும். துறவாக இருக்கின்றவர்கட்கும் துன்பமானதை அகற்றும் என்நூல் சர்ச்சனராகிய பெரியோர்களெல்லோரும் சற்குருவால் நினைப்போர்க்கு ஈவார் எ-று.

(வி-ரை.) இக்கவியால் மிக்க கவனமுடையவற்கே இந்நூல் உதவும் எனவும் மரணமடையாதிருக்கவேண்டும் என்பவர்க்கும் சர்ஜனர் முதலிய பெரியோர்க்கு என்நூல் மிக்க உதவியாயிருக்கும் என்பது கருத்தாகும். 79

ஈவதுதான் யார்க்கென்றால் சிவயோகிக்கு
இகத்திலே பாவிகளுக் கீயலாகா
நோய்வருகும் பாவிகளுக் கீந்தாயானால்
நூதனமா யவர்கட்கு நுண்மைதோன்றா
ஆய்வரும்பார் என்நூலைப் பூசித்தோர்க்கு
அரகரா அதிகமுடன் பாக்கியமீவேன்
தீய்வரும்பார் பொல்லாத பாவியுண்டு
திருவருளால் அறிந்துநீ தூரத்தள்ளே.

(இ-ள்.) ஈவது யார்க்கெனில் சிவயோகிக்குமாம். இகத்திலுள்ளப் பாவிகளுக்கு ஈயலாகாது; நோயானது வரும்; பாவிகளுக்கு ஈந்தாயாகில் அவர்களுக்கு உண்மையானது விளங்காது; என்நூலைப் பூசித்தோர்க்கு அரகர்வென அதிகமாகியப் பாக்கியங்களீவேன்; தீயானதுப் பற்றும்; பகரும் பாவிகட்கெல்லாம் அதை அறிந்து அவர்களைத் தூரத்தள்ளுவாய் எ-று.

(வி-ரை.) இந்த நூலை எப்படிப்பட்டவர்க்குக் கொடுக்கலாம் என்பதை விளக்கியுள்ளனர். அவையாவன, சிவயோகிக்கே என்பதாம். மற்றுமுள்ள பாவிகளுக்கு கொடுக்க அவர்களிதன் பெருமையை அறியமாட்டார் ஆனதால் பாவிகளிடம் இதனைத் தராதே என்பதுவேயாகும். 80

தள்ளுவதிங் காரையென்றால் குணமில்லாரை
சற்குருவை அறியாத சமையத்தோரை
கள்ளுடனே அபினிகளைக் கொண்டபேரை
கஞ்சாவும் இறையும்மீன் கொண்டபேரை
உள்ளுணர்ந்து பாராத உலுத்தர்தம்மை
உத்தமரைத் தூஷணமாய் உரைப்போர்தம்மை
நல்லுணர்வு சற்றுமில்லா மூடர்தம்மை
நலமாகக் கண்டறிந்து நயந்துதள்ளே.

(இ-ள்.) தள்ளுவது யாரை எனில் குணமில்லாரையும் சற்குருவை அறியாதோரையும் கள்ளு, அபினி, கஞ்சா, இறைச்சி, மச்சம் இவைகளை உண்போரையும், உள்ளுணர்ந்து பாராத உத்தமர் தங்களையும் உத்தமர்களைத் தூஷணமாகச் சொல்லுவோர்களையும் நல்லறிவில்லா மூடர்களையும் கண்டறிந்து தள்ளவேண்டும் எ-று.

(வி-ரை.) இக்கவியாலும் எப்படிப்பட்டவர்க்கு இந்த நூலைக் கொடுக்கப்படாதென்பதைக் கூறியுள்ளனர். அவையாவன, குணமில்லாத உலுத்தர் கஞ்சா அபினி யுண்போர் முதலிய கொடியவர்களுக்கு காட்டாதே அப்படிப் பட்டவர் உம்மிடம் வந்தாலும் சேர்க்காதே என்பதாம். 81

அறிந்துநான் சொன்னதொரு ரேகைசாஸ்திரம்
அன்பான நூலதனைப் படித்துநீயும்
தெரிந்துநான் சொன்னதொரு ரேகைதன்னை
திருவுளத்தின் அருளாலே தெரிந்துகொண்டு
வருந்திநின்றால் வகுத்தப்படி எல்லாம் தோயும்
வண்மையுள்ள லோகத்தில் மாய்கைநீங்கும்
பிரிந்துநான் பிரியாத விடையிருந்து
பிரபலங்கள் ஆக்கிவைப்பேன் பிரியமாயே.

(இ-ள்.) யான் சொல்லிய ரேகை சாஸ்திரமாகிய அன்பான இந்நூலைப் படித்து நான் சொன்ன ரேகைகளை திருவுளத்தின் அருளால் தெரிந்து கொண்டு வகுத்தபடியாக வகுத்து நிற்பாராகில் யாவுந்தோற்றும் உலகமாய்கை நீங்கும்; நானும் பிரியாமற்படிக்கு இருந்து பிரபலமாகத் தானே ஆக்கிவைப் பேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனில், யான் இது காறுங் கூறிய முறைப்படி அந்தந்த ரேகையினது மர்மங்களையறிந்து இவ் வுலகோர்க்குரைக்க உமாதேவியும் கடாக்ஷம் வைத்து அருள்செய்வாள் 82
என்பதாகும்.

LuraTech Document Processing Solutions

ஆகவே அவருடைய வமிசந்தோறும்
அந்தரத்தில் நிற்கின்ற பேர்களுக்கும்
வாகவே வாலையிட மோட்சமீந்து
வண்மையாம் வைகுண்டம் ஈவேன்பாராய்
தாகவே தாழ்வில்லாப் பதவியீந்து
சாயுச்சியம் ஈந்திடுவேன் தாழ்வில்லாமல்
பாகவே பலபொருளும் அருளும்ஈசன்
பாலகர்க்கு மோட்சமதைப் பாலிப்பாரே.

(இ-ள்.) ஆகவும் அவர்களுடைய வம்சந்தோறும் அந்தரமாக நின்கின்றப் பெயர்களுக்கும் வாலையினுடைய மோட்சமானது ஈ யாகத் தானே வைகுண்டப் பதவி ஈவேன். தாழ்வில்லாமற்படி பதவி ஈவேன். அன்றியும் பல பொருள்களையும் அருளி ஈசன் பா மோட்சம் பாலிப்பார் எ-று.

(வி-ரை.) மேற்சொன்னபடி உண்மையும் சத்தியமும் வைத நூலைக் கையாண்டவர்கள் எவர்களோ அவர்களுக்கு உமாதேவிய க்ஷத்தால் ஒவ்வோர் வமிசத்திலும் மோக்ஷமளித்து சகல சாம்ராஜ்ய கொடுப்பார் என்பதாம்.

மோட்சமென்று முன்சொன்னேன் சொன்னேன்மைந்
முதல்நமசி வாயவென்று மொழிந்தேயானும்
வாச்சுதடா வாலையிடக் கிருபைதானும்
வண்மையால் அவரிடத்திற் குடியிருப்பேன்
ஆச்சுதடா ஆயுசுதான் வளரவேண்டும்
அண்டரண்ட புவனமெல்லாம் மெய்க்கவேண்டி
பாச்சுதடா பலபொருளை அனுபவிக்கப்
பத்தனைத்தான் காத்திடுவேன் பகர்ந்திட்டேனே.

(இ-ள்.) மோட்சமென்றுஞ் சொன்னேன். முதலாகிய நமசிவாய மென்றும் மொழிந்தேன். வாலையினுடைய கிருபையானது பெருகி அவர்களிடத்தில் குடியாக விருப்பாள். ஆயுசானது வளரவேண்டியும் அண்டரண்ட புவனமெல்லாம் மெய்க்கவேண்டியும் பலபொருளையும் அனுபவிக்க பத்தனை யான் காத்திடுவேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனின், இந்நூலைக் கையாண்டு பழகி நமசிவய என்று எவரொருவர் பஜித்தார்களோ அவர்களுக்குச் சகல சுகத்தையுங் கொடுத்து உமாதேவியானவள் கடாக்ஷிப்பாள் என்பது கருத்தாகும்.

LuraTech Document Processing Solutions

பகருமேவன் கேசரியின் வரலாறெல்லாம்
  பக்குவமாய் உள்ளபடி பகர்ந்தேன்மைந்தா
நிகருமேவன் நீணிலத்தில் மனிதர்க்கெல்லாம்
  நிகழ்த்தினேன் சாஸ்திரத்தின் நேர்மைதானே
அகருமேவன் ஆதியந்தம் பொருள்களெல்லாம்
  அமைத்தபடி முடித்துவிட்டேன் அவனிக்காக
உகருமேவன் இன்னம்ஒரு விதிதான்மைந்தா
  உண்மையாய்ச் சொல்லுகிறேன் உகந்துகேளே.

(இ-ள்.) பகரும்படியான கேசரியின் வரலாறெல்லாம் பக்குவமாகத் தானே உள்ளப்படியாகப் பகர்ந்தேன். உலகத்திலுள்ள மனிதர்கள் யாவர்களுக்கும் நிகழ்த்தினேன். சாஸ்திரத்தினுடைய நேர்மைகளையும் ஆதியந்தமாகியப் பொருள்களை யெல்லாம் அமைத்தபடியாக முடித்தேன். அவனியோர்களுக்காகவும் சொல்வேன். இன்னம் ஒருவிதியை உண்மையாகத் தானே சொல்கிறேன் உகந்துகேளும் எ-று. 85

கேளப்பா இன்னம்ஒரு சேதிமைந்தா
  கேவலமாய்ச் சொல்லுகிறேன் ரிஷிகாள்கேளீர்
நாளப்பா கேசரிமுற் சனனம்நாலாம்
  நன்மையுடன் கொடுத்திருந்த பேர்க்குக்கிட்டும்
வாளப்பா வண்மையுள்ள மைந்தர்காக்கும்
  வளமான நூல்விதியும் வண்மையாகும்
ஆளப்பா ஐஸ்வரியம் உள்ளபேர்க்கு
  அன்பான எந்நூல்தான் கிட்டும்பாரே.

(இ-ள்.) கேளுங்கள் ரிஷிகளே சொல்கிறேன் கேசரியினுடைய முற்சனனம் நான்காகும் பதவிகொடுத்திருந்தப் பெயர்களுக்குக் கிட்டும் வண்மையுடைய மைந்தர்கட்கும் கிட்டும் நூலின் விதியும் வண்மையாகும். ஐஸ்வரியமுள்ள பேர்களுக்கு எந்நூல் கிட்டும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் முக்கிய கருத்தென்னவெனில் முன்சனனத்தில் சாயுச்யப்பதவியை எவரொருவர் அடைந்தார்களோ அவர்களுக்கு இந்த நூல் கிடைக்கும் எனெனின் இவை அவ்வளவு மகுத்துவம் பொருந்தியதென்க. 86

பார்க்கவே ரேகைகளைப் படித்துநல்ல
  பாங்கான வரைகளெல்லாம் குறிப்புகண்டு
கார்க்கவே பலவகைகள் சொல்லக்கேட்டு
  கருவியாய்ப் பலன்களெல்லாம் சொல்லக்கேட்டு
மார்க்கமாய் அனுபவங்கள் வந்ததாய்ந்து
  மகத்தான வாழ்வுமுதல் வரமறிந்து
ஊர்க்கவே சகலதுறை எல்லாம்கண்டு
  உற்பனமாய் வெளிஏறி உறுதிசொல்லே.

(இ-ள்.) பார்க்க ரேகைகளைப் படித்தும் வரைகளின் குறிப்பை கண்டும் பலவகையும் அறிந்து பார்த்துங் கருணையாகத் தானே பலன்கள் யாவும் சொல்லக் கேட்டும் அதிலநுபவமாக வந்ததை ஆய்ந்தும் வாழ்வு முதலாக வரவையும் அறிந்தும் சகல துரையுங் கண்டும் வெளியேறி உறுதியாகச் சொல்வாய் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னெனின் இதுவரையில் கூறி வந்த ரேகைப்பலன்கள் எல்லாவற்றையும் சரிவரக் கற்றுணர்ந்து அவை அனுபவத்திற் சம்மதிக்கப்பட்டு வருகின்றனவா என்பதை நன்கு ஆராய்ந்து அதன்பின்பு பிறருக்குச் சொல்லவேண்டுவது அவசியம் என்பதாம். 87

உறுதியாய் இந்தநல்ல சாஸ்திரந்தான்
உத்தமமாய்ப் பனிரெண்டா யிரமுஞ்சொன்னேன்
திருகியாய்ச் சாஸ்திரத்தை அதன்பின்மைந்தா
தேறுகின்ற ஆயிரத்திருநூறும் சொன்னேன்
பருதியாய்ச் சாஸ்திரத்தை அதன்பின்மைந்தா
பண்பாகச் சொல்லிவிட்டேன் மைந்தாகேளு
நிருதியாய்ச் சாஸ்திரத்தின் நிலமையெல்லாம்
நிகழ்த்தினேன் உள்ளமட்டும் நீதிதானே.

(இ-ள்.) உறுதியாக இந்த சாஸ்திரம் பனிரெண்டாயிரமும் சொன்னேன் அதன் பின்பு ஆயிரத்தி ஒருநூறும் சொன்னேன்; அதன் பின்பு சாஸ்திரங்களைப் பண்பாகத் தானே சொன்னேன்; சாஸ்திரத்தின் நிலமைகள் யாவும் நிகழ்த்தினேன் நீதியாகும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தாவதென்னெனின், பன்னிரண்டாயிரம் கவியையுடைய இந்த சாஸ்திரத்தைச் சுருக்கி ஆயிரத்தி இருநூறாகச் சொல்லினேன் அதன் பின்பு அதனையும் சுருக்கி ஆறு நூறு கவிகளாய்ச் சொல்லியுள்ளேன் என்பது கருத்தாகும். 88

நீதியென்ன சாஸ்திரத்தைப் படித்தாலுந்தான்
நிகழ்ச்சியில்லை பெருமையில்லை நீதியில்லை
சோதியென்ன யென்நூலைப் படித்தாலுந்தான்
சொல்லவென்றால் அளவற்ற பாடல்மைந்தா
ஆதியென்ன கிரகங்கள் தன்னைக்கண்டறிந்தால்
அன்பாக என்னுதவி வேண்டுமப்பா
மீதியென்ன என்னுடைய தியானம்வேண்டும்
மேலாகப் படித்ததெல்லாம் விளம்பும்பாரே.

(இ-ள்.) நீதியோடு சாஸ்திரத்தைப் படித்தாலும் நிகழ்ச்சியும் பெருமையும் நீதியும் இல்லை. சோதியாகிய என்நூலைப் படித்தால் சொல்லுதற்கு அளவற்ற பாடலாகும். ஆதியாகத் தானே கரங்களைக் கண்டறிந்தால் என்னுடைய உதவியானது வேண்டும். என்னுடைய தியானமும் வேண்டும். அப்போது மேலாகப் படித்தது யாவும் விளங்கும் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில் இதைப் படிப்பதாலும் பிறருக்குச் சொல்வதாலும் பயனில்லை. இதனை சொல்ல வேண்டுவோர் கடவுள் பக்தி யுடையவராய் இதிலுள்ள ரோகை மார்க்கங்களைச் சிறிது சிறிதா யாராய்ந்து அதன்படியுரைப்பதே நீதிமார்க்கம் என்பனவாம். 89

பாரப்பா தியானமுற்ற வேளைதன்னில்
  படித்ததெல்லாம் இருதயத்தில் தோணவைப்பேன்
காரப்பா கருணையுடன் மனதில்நாவில்
  கருணையே இருந்துநான் சாஸ்திரம்சொல்லி
கூரப்பா குணம்குறிகள் வாழ்வுயோகம்
  குணமாக நடக்கும்வகை நாளும்கோளும்
வீரப்பா வாராமல் மரணமாதி
  விவரமதைச் சொல்லிநான் மெலிவுகேளே.

(இ-ள்.) தியானமானது வைப்பாராகில் படித்தது யாவும் இருதயத்தில் தோணும்படியாக வைப்பேன். கருணையாகத்தானே நாவிலிருந்து சாஸ்திரங்களைச் சொல்லிவைப்பேன். குணக்குறியும் வாழ்வு யோகமும் நடக்கும் வகையும் நாளுங்கோளும் மரணமாதியும் விபரமாகச்சொல்லி மெலிவு தீர்ப்பேன் எ-று.

(வி-ரை.) இக்கவியின் கருத்தென்னவெனில், ஸ்ரீஉமாதேவியை தியானம் செய்து இந்த நூலை வாசிப்பார்களேயாமாயின் படித்தவனைத்தும் மனதில் தங்கும் அதனால் மிக்க பெருமையும் புகழும் அடைவாய் என்பது கருத்தாகும். 90

கேளப்பா இப்படிநீ மூலம்கேளு
  கேவலமாய் அணுவளவு சூட்சம்உண்டு
ஆளப்பா அந்தநல்ல சூட்சம்கேட்டால்
  அரகரா நூலெல்லாம் நிமைக்குள்சித்தி
நாளப்பா இப்படிநீ ஆசானிடத்தில்
  நலமுள்ள சத்தியிட குடிசையில்தான்
வாளப்பா கேட்டாக்கால் வருகும்பாரு
  வகைதெரியாப் பாவிகட்கும் வருகும்பாரே.

(இ-ள்.) மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைய விரும்புவதற்கு சூக்ஷம் உண்டு. அந்த வழியே கண்டுபிடித்தால் அரகரா ஒரு நிமைக்குள் எல்லா காரியமு மவனுக்கு சித்தியாகும். நீ ஒரு ஆசானிடமாக அடுத்து தெரிந்து கொள்ளவேண்டும். மேலும் சத்தியை பூசைசெய்து வரவேண்டியது இந்த வகை தெரியாத மானிடர்க்கு தெரியாது. தெரியவேண்டுமாகில் அகஸ்தியர் பஞ்சபட்சி மூலமும் உரையுமாக அச்சிட்டிருக்கிறது அதை வாங்கிப் பார்த்தால் கண்ணாடியைப்போல் தோற்றும் எ-று.

(வி-ரை.) இந்நூலை வாசிக்கவேண்டிய விதி முதலியனவற்றைக் கூறியுள்ளனர். எப்படியெனில், சத்திதேவியினது ஆலயத்தி லிருந்துகொண்டு அனைத்தையும் ஆசான் மூலமாயறிந்து சூக்ஷங்கண்டு பிறருக்குரைப்பது [illegible]லம் என்பதாம். 91

LuraTech
Document Processing Solutions

வருவதுதான் குருமூல்யம் வருகவேண்டும்
வாகான் ஆசான் சொல்கேட்கவேண்டும்
உருவதுதான் எனைப்பெற்ற பெரியோரெல்லாம்
உத்தமர்க்குத் தொண்டுசெய்து வந்ததப்பா
பருவதுதான் பாலகர்க்குப் பலநாள் தானும்
பாங்காகச் சொல்லியதை அறிவதுண்டோ
அருவதுதான் ஆத்மாவின்பொருள் அறிந்தோர்
அல்லாத பேர்களுக்கும் அறியப்போமோ.

(இ-ள்.) உனக்கு வரவேண்டுமானால் குரு மூல்யமாய் வரவேண்டும் நீயும் ஆசான் சொல் தள்ளாமல் இருக்கவேண்டும். தவிர பெரியோராகிய மகான்களுக்கும் யோகிகளுக்கும் தொண்டுபுரிந்தாயாகில் ஆத்மா ஒடுங்கும் வழி சொல்வார். போகர் பஞ்சபட்சி மூலமும் உரையும் பார்த்தால் யோக சாதனங்களுக்கு வழி தோற்றும் எ-று.

(வி-ரை.) இந்நூலினது ரகஸ்யத்தையே குருவினது உபதேசத்தாலேயே அறிந்துகொள்ளமுடியும். இவ்வாறே பெரியோரும் அறிந்துக்கொண்டனர் மற்றும் ஆத்மஞானம் உடையவர்களே இந்நூலினது ரகஸ்யமனைத்தையும் அறிவார் என்பதாம். 92

போமென்று சொன்னதொரு உமைபாதத்தில்
போதமுள்ள மகாரிஷிகள் ஆனோரெல்லாம்
வாமென்று வாலையைத்தான் தோத்திரம்செய்து
வணங்கினர் ஆதியந்தம் அண்டபிண்டம்
ஊமென்ற உத்தமியே பராசத்தித்தாயே
உமையவளே சரணம்என்று வணங்கினர்கள்
ஆமென்ற அரகரா ஏழுகாண்டம்
அன்பாக இரேகையதால் அறைந்தேன்முற்றே.

(இ-ள்.) உமையவள் பாதாரவிந்தத்தை மகாரிஷிகள் ஆனவர்கள் வாலையை பூசைசெய்து பதவி யடைந்தார்கள். சத்தியானவளை தொழாமல் அநேகம்பெயர் கெட்டார்கள். ஆனதால் சத்தியானவளை பூசை செய்து இரேகைசாஸ்திரம் ஏழுகாண்டமும் மூலமும் உறையுமாக இயற்றினேன் தவிர ரோமரிஷியார் அருளிச்செய்த விநாடி பஞ்சபட்சி மூலமும் உரையுமாக இயற்றியிருக்கும் அதை வாங்கிப் பார்த்தால் சுலபமாகத்தோற்றும் எ-று.

(வி-ரை.) இவ்வாறு கூறிய உமாதேவியாரது திருவடித்தாமரையில் முனிவர்கள் தேவர்கள் ரிஷிகள் முதலாயினோர் அடிவணங்கி தெண்டனிட்டுக் கொண்டனர் என்பதாம். 93

ஆக காண்டம் 7-க்கு கவி 632

இரேகை சாஸ்திரம் மூலமும் உரையும்

முற்றிற்று.